2024 மே 10

NAOSL

වාර්තාවේ අංකය : එස්පීආර්/2024/03
அறிக்கை இல. : எஸ்பீஆர்/2024/03
Report No : SPR/2024/03

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் மருந்து தேவைப்பாடு, பெறுகைகள், வழங்கல், பகிர்ந்தளித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE



உள்ளடக்கம்

தொடர் இலக்கம்	விபரம்	பக்கம்
	நிறைவேற்றுப் பொழிப்பு	**1-3**
1.	அறிக்கையினை வழங்கும் பின்னணியும் தன்மையும்	4
2.	அறிக்கையினைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட நடைமுறைகள்	5-6
3.	நோக்கெல்லை	6-7
4.	நோக்கெல்லையின் மட்டுப்பாடுகள்	7-8
5.	தெரிவு அடிப்படையில் தீர்மானித்தல்	8-9
6.	நடைமுறைகள்	
6.1	2022 ஆம் ஆண்டில் பற்றாக்குறையாகக் காணப்பட்ட மருந்துகள் தொடர்பான தகவல்கள் மற்றும் வெளிநாட்டு நாணய பற்றாக்குறை தொடர்பான தகவல்கள்	9
6.2	2022 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட பற்றாக்குறையான மருந்துகளை வழங்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை.	9-14
6.3	இலங்கையில் மருந்துகளை ஒழுங்குபடுத்துதல் தொடர்பாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பணிப்பொறுப்புக்கள்.	15-16
6.4	மருந்துகளை ஒழுங்குபடுத்துதல் செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட அதிகாரசபையின் பிரதான பிரிவு, குழு மற்றும் அவற்றின் பிரதான செயற்பாடுகள்	16-18
6.5	கொவிட் தொற்று நோய் மற்றும் அந்நிய செலாவணி சிக்கல் காணப்பட்ட காலத்தில் அவசர கொள்வனவுகள் நடைமுறைகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட அமைச்சரவை அங்கீகாரங்கள்	18-23
6.6	அவசர கொள்வனவு நடைமுறைகளுக்காக சுகாதார அமைச்சின் தலையீடு	23-31
6.7	அவசர கொள்வனவு நடைமுறைகளுக்காக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் தலையீடு	31-33
7.	அவதானிப்புக்கள்	
7.1	இந்திய கடன் திட்டத்தை பயன்படுத்துதல்	33-34
7.2	மருந்துகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்	34-35
7.3	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவு நடைமுறைகள்	35-43
7.4	கோரப்படாத பிரேரணைகளினூடாக சுகாதார அமைச்சருக்கு கிடைத்துள்ள வேண்டுகோள்கள் சம்பந்தமாக சுகாதார அமைச்சின் தலையீடும் உள்ளக நடைமுறையும்	43-48

7.5	அவசர கொள்வனவு நடைமுறைகள் சம்பந்தமாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் தலையீடு	48-51
7.6	மருந்துகளைப் பதிவுசெய்யும் அரசாங்கத்தின் மருந்து தேவைப்பாட்டினை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாமை	51-52
7.7	தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற மருந்துகளை பதிவுசெய்தல் நடைமுறை	53-64
7.8	மருந்துகளின் விலையை ஒழுங்குபடுத்துதல் நடைமுறை	64-68
7.9	மருந்துகளின் தரத்தைப் பரீட்சிக்கும் நடைமுறை	68-78
7.10	மருந்துக் களஞ்சியம் மற்றும் மருந்துகளை போக்குவரத்து செய்வதனை ஒழுங்குபடுத்துதல்	78-79
7.11	தேசிய ஔடதங்களை ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபை பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தை வழங்குதல்	79-93
7.12	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரதான கட்டளைகள் சம்பந்தமான அவதானிப்புக்கள்	93-97
7. 13	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளின் தரம்	97-100
7.14	Bupivacaine மருந்து தரமற்றதாக இருந்தமை	100-102
7.15	Prednisolone Acetate Eye Drop தரமற்றதாக இருந்தமை.	102-103
7.16	Human Immunoglobulin மற்றும் Rituximab என்ற போலியான மருந்தை கொள்வனவு செய்தல்	103-117
7.17	Trastuzumab 440mg என்ற மருந்து மோசடியான முறைமையில் மருந்து வழங்கல் பிரிவிற்கு வழங்குதல்	117-127
7.18	Ceftriaxone மருந்து தொடர்பான பரீட்சிப்பு	127-128
8.	பரிந்துரைகள	128-132
	தொகுதி I	133-247
	இணைப்புக்கள்	249-881

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் மருந்து தேவைப்பாடுகள், பெறுகைகள், வழங்கல், பகிர்ந்தளித்தல், ஒழுங்குபடுத்துதல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிகை

நிறைவேற்று பொழிப்பு

2020-2021 காலப்பகுதியில் கொவிட் தொற்றுநோய் மற்றும் 2022-2023 காலப்பகுதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இலங்கையின் பல்வேறு துறைகளை மோசமாக பாதித்துள்ளது. இதன்படி, இந்த பிரச்சினைக்குரிய நிலைமை சுகாதாரத் துறையில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியதாக கணக்காய்வு மற்றும் நாட்டில் நடைபெற்ற சமூக உரையாடல்கள் மூலம் அங்கீகரிக்கப்பட்டது. நாட்டில் மருந்து தட்டுப்பாடு நிலவுகிறது என்ற உண்மை சுகாதார அமைச்சரால் அவ்வப்போது வெளிப்படுத்தப்பட்டு வந்ததோடு, தரமற்ற மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்குவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் குறித்தும் ஊடகங்கள் மற்றும் சமூகப் பேச்சுக்கள் மூலம் அவ்வப்போது பேசப்பட்டு வந்தது. அதற்கிணங்க, இந்நிலைமை மற்றும் இவ்வாறானதொரு நிலை தொடர்பிலான மேலதிக ஆய்வுகளின் பின்னர், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 13 ஆவது பிரிவினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

தற்போதுள்ள மருந்துகளின் கையிருப்பு போதுமானதாக இல்லை என்று கூறி அவசரமாக மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக 2022 செப்டம்பர் மற்றும் அக்டோபரில் சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த அமைச்சரவை குறிப்பாணைக்கான ஒப்புதலின் அடிப்படையில் ஆர்வத்தை வெளிப்படுத்தும் (Express of Interest - EOI) மற்றும் கோரப்படாத முன்மொழிவுகளின் (Unsolicited Proposals) கீழ் உள்ள வழங்குனர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இந்த நேரத்தில், இந்திய கடன் திட்டத்தின் கீழ், சுகாதாரத் துறைக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டதுடன் நிதி அமைச்சு இந்த அவசர கொள்முதல்களுக்கு பின்பற்ற வேண்டிய தளர்வான நிபந்தனைகளுடன் கூடிய கொள்முதல் வழிகாட்டுதல்களையும் அறிமுகப்படுத்தியது.

மேற்கூறிய எந்தவொரு முறையின் கீழும் வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்ட போதிலும், மருந்து வழங்குனர்களை மதிப்பிடுவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்படாது மதிப்பீட்டுக் குழுவொன்றே நியமிக்கப்பட்டிருந்தமை காரணமாக கொள்வனவு செய்ய வேண்டிய மருந்துகளின் தரத்தை உயர் தொழில்நுட்ப அடிப்படையில் மதிப்பிடாமல் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின்படி, அனைத்து மருந்துகளும் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பதுடன் ஒருசில மிக முக்கியமான குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் மட்டுமே, பதிவு விலக்கு (Waiver Of Registration - WOR) வழங்க அதிகாரசபைக்கு முடியும். மேலும், 2018 ஜனவரி 05 தேதியிட்ட அதிவிசேட வர்த்தமானி இல. 2052/33 இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவுகளின்படி, இந்தச் சான்றிதழ்களுக்கு அதிகாரசபை கட்டணம் அறவிடுவதுடன் அதுவரை இந்தச் சான்றிதழ்களை வழங்குவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையைத் தவிர்த்து கட்டணம் அறவிடப்பட்டு வழங்கப்படும் இந்தச் சான்றிதழ்கள் விரைவான பொறிமுறையின் கீழ் வழங்கப்பட்டு அதுவரை பின்பற்றிய ஒரு தொழில்நுட்பக் குழு மூலம் செய்யப்படும் மதிப்பீட்டிலிருந்து விலகி, நிறைவேற்று அதிகாரியே ஒப்புதல் அளிக்கும் முறையைக் கடைப்பிடித்திருந்தமையால் அதிகாரசபையின் அடிப்படை நோக்கங்களில் இருந்து விலகிச் செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், மருந்துகளின் தரம் குறித்த அதிகாரசபைக்குள்ள பொறுப்பும் வேறு தரப்பினருக்கு மாற்றப்பட்டிருந்தது.

இவ்வாறு அவசர கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது விருப்பங்களை கோருவதன் கீழ் 285 மருந்து விடயங்களையும் தேவையற்ற முன்மொழிவின் கீழ் 38 மருந்து விடயங்களையும் கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அந்த அளவை தீர்மானிக்கும் போது அந்த தீர்மானம் எடுக்கப்பட்ட சந்தர்ப்பம் வரையிலும் சாதாரண வழிமுறையின் கீழ் கட்டளையிட்டு பெற்றுக்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த மருந்துகள் தொடர்பாக கவனம் செலுத்தாமையின் காரணமாக தொழிற்படு மூலதன தேவை தொடர்பாக கவனத்திற் கொண்டு சிறந்த தீர்மானத்தை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் சில மருந்துகள் அந்தக் காலப் பகுதியின் போது தேவையான அளவினை விட அதிகமாகக் கிடைத்திருந்ததுடன் சில மருந்துகள் அவசரக் கொள்வனவாக கருதி சாதாரண முறைமையில் கொள்வனவு செய்யப்பட்ட விலையினை விட தெளிவாகத் தென்படக்கூடிய ஆகக்கூடிய பெறுமதியை செலவிட்டு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் சாதாரண முறையின் கீழ் கட்டளையிடப்பட்ட இருப்புக்கள் கிடைக்கும் வரை அந்த அவசர கொள்வனவுகள் கிடைத்திருக்கவில்லை.

மேலும் இவ்வாறு அவசரக் கொள்வனவுகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சில மருந்துகள் தொடர்பாக சில சர்ச்சைக்குரிய நிலைமைகள் ஏற்பட்டிருந்ததுடன் அதனிடையே *Human Immunoglobulin IV 5-6g)SR (00603205*-மருந்துகள் போலியான மருந்தாக இருந்தமை ஔடங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் ஆவணங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. மேலும் குறித்துரைத்த நியமம் இன்றி இந்த மருந்துகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வழங்குகின்ற மருந்தின் வழங்குநரான Isolez Biotech Pharma AG Ltd கம்பனி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களால் அது இறக்குமதி செய்யப்படாதிருந்ததாக ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளரினதும், இலங்கை சுங்கத்திலிருந்தும் கிடைத்த தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. வழங்குனர் கம்பனியால் குறிப்பிடப்பட்ட இந்திய உற்பத்திக் கம்பனியும் இந்த மருந்துகள் தமது உற்பத்தி கம்பனியால் வழங்கப்படாதிருந்ததாக தெளிவுபடுத்தி இருந்ததுடன் சகல விடயங்களையும் கவனத்திற் கொள்ளும் போது இந்த மருந்துகள் **(மருந்தாக வழங்கப்பட்டுள்ள உற்பத்தி)** இந்தக் கம்பனி தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி சட்ட விரோதமாக இலங்கையில் உற்பத்தி செய்யப்படாதிருந்ததா என கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

மருந்துகள் போன்ற மனிதர்களின் உயிர்களுடன் தொடர்புடைய விடயங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் போதும் / வழங்கும் போதும் உரிய தரப்பினர் இந்த மருந்தின் தரத் தன்மை தொடர்பாக தமது பொறுப்புக்களை சரியான பிரகாரம் நிறைவேற்றாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறான நிலைமையில் தரப் பரிசோதனைக்குரிய நிறுவனத்தினால் உரிய பிரகாரம் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமையின் காரணமாக ஏற்பட்டிருந்த நிலைமையாக இது காணப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும் மருந்து வழங்குநர்களினால் பதிவு செய்வதற்காக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மருந்துகளின் கோவை, கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்ட காலப் பகுதியான 300 நாட்களுக்குள் உரிய பிரகாரம் மதிப்பீடு செய்து பூர்த்தி செய்யப்படாமல் மிகநீண்ட காலம் கைவசம் வைத்திருந்ததன் காரணமாக மருந்துகளை வழங்குவதற்கு முறையான வழங்குநர்கள் பற்றாக்குறை ஏற்பட்டமையால் பதிவு செய்யாத வழங்குநர்களுக்கு பதிவிலிருந்து விடுவிக்கும் கடிதத்தின் அடிப்படையில் கட்டளை வழங்குவதற்கான நிலைமை ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் சில மருந்துகளின் மதிப்பீட்டுக் காலம் அசாதாரணமாக குறைக்கப்பட்டு மிகவும் விரைவாக

அதாவது இரண்டு தினங்களுக்கு குறைவான காலப் பகுதியில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக அந்த மதிப்பீடுகள் சரியான பிரகாரமும் பக்கச் சார்பின்றி இருந்தமையும் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

பொருளாதார நெருக்கடிகள் காணப்படும் சந்தர்ப்பங்களின் போது சலுகை நிபந்தனையின் கீழ் இந்திய கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை உச்ச அளவில் பயன்படுத்தாமல் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்காக கைவசமிருந்த மட்டுப்படுத்திய உள்நாட்டு பணத்தை பயன்படுத்தியதன் காரணமாக நாட்டில் ஏற்படக்கூடிய தொழில்படு மூலதனப் பிரச்சினை, அந்நியச் செலாவணி பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் சுகாதாரத் துறையில் சிறந்த முகாமைத்துவம் இல்லாமை, ஒன்றுக்கொன்று தொடர்புடைய பணிகள் மேற்கொள்கின்ற நிறுவனங்களுக்கிடையே சிறந்த பிணைப்பொன்று காணப்படாமை, சரியான மற்றும் தர்க்க ரீதியான தீர்மானங்களை எடுப்பதற்கு தேவையான தகவல்கள் அமைச்சரவைக்கு வழங்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படாமை போன்றவற்றின் காரணமாக 2022 - 2023 ஆண்டுகளின் போது சுகாதாரத் துறையில் நெருக்கடியான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் இந்த நிலையை தவிர்ப்பதற்கு / எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமை ஏற்படால் தடுக்கும் நோக்கில் கீழே குறிப்பிடப்படுகின்ற பரிந்துரைகளை உள்ளடக்கிய சில பரிந்துரைகள் வழங்கப்படுவதுடன் அதனுடன் தொடர்புடைய விரிவான தகவல்கள் மற்றும் எழுத்து மூல உறுதிப்படுத்தல்களுக்காக தொகுதி I இலுள்ள பின்னிணைப்புகளை பார்வையிடுதல் வேண்டும்.

i. தரமற்ற மருந்துகளை வரவழைத்து நோயாளர்களை ஆபத்துக்கு உட்படுத்திய ஆட்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுத்தல்

ii. பதிவுசெய்வதிலிருந்து விலக்களிப்பதற்கான சான்றிதழ் வழங்குவதை இயன்றளவு குறைத்தல்.

iii. தேசிய ஔடதங்கள் தரப்பாதுகாப்பு ஆய்வுகூடத்தை சர்வதேச தரத்திலமைந்த ஆய்வுகூடமாக மாற்றியமைத்தல்

iv. தரமற்ற மருத்துவ வழங்கல்களை மேற்கொண்ட கம்பனிகள்/ நிறுவனங்களை கறுப்புப் பட்டியலில் உள்ளடக்குவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல்.

v. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் மருந்துகளின் பதிவுசெய்தல் நடவடிக்கைகள் மற்றும் ஆய்ந்தறிதல்களுக்காக வழிமுறையொன்றை தயாரித்தல்.

vi. மருந்து வழங்கல்கள் வலைப்பின்னலுடன் சம்பந்தப்படுகின்ற நிறுவனங்களுக்கிடையே சிறந்த பிணைப்பொன்றை ஏற்படுத்துதல்.

01 அறிக்கையினை வழங்கும் பின்னணி மற்றும் தன்மை

அறிக்கையின் பின்புலமும் தன்மையும்

2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று நோய் மற்றும் 2021 இன் இறுதி காலாண்டுடன் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் இலங்கையில் பல்வேறு துறைகளுக்கு பாதகமான வகையில் தாக்கம் ஏற்பட்டிருந்தது. வெளிநாட்டு ஒதக்க அளவு விரைவாக குறைந்ததுடன் நாட்டில் ஏற்பட்ட அந்நியச் செலாவணி பற்றாக்குறை டொலருடன் ஒப்பிடும் போது ரூபாவின் பெறுமதி குநைந்ததன் காரணமாக சுகாதாரத் துறையிலும் அது தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமைக்கான விடயங்கள் தெளிவாகும். மேலும் இந்த நிலைமையில் நாட்டில் மருந்து பற்றாக்குறை ஏற்பட்டமைக்கும், நோயாளர்களுக்காக விநியோகிக்கப்பட்ட மருந்துகள் குறித்துரைத்த நிமயமின்றி இருந்தமையும் மருந்துகளின் விலைகள் விரைவாக அதிகரித்துச் சென்றமை போன்ற விடயங்கள் தொடர்பாக சமூகத்தில் கவனத்திற் கொள்ளக்கூடிய பிரகாரம் கலந்துரையாடலுக்கு உட்படிருந்தது.

இவ்வாறான நிலைமையில் 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 13 ஆவது பிரிவின் கீழ் எனக்கு கிடைக்கப்பெற்ற அதிகாரத்தின் அடிப்படையில் இந்த விடயங்கள் தொடர்பாக ஆழமாகப் பரீட்சித்து இந்த அறிக்கை விநியோகிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட தொகுதி I இன் வரைவிற்கும், வழங்குனர் இருவரினால் மோசடியாக தரம் குறைந்த மருந்துகளை வழங்குவதற்குரிய வரைவு கணக்காய்வு அறிக்கை தொடர்பாக இந்த அறிக்கைத் திகதி வரையிலும் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமையால் அந்த அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதி இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை பயன்படுத்தும் போது மருந்துகளின் பெறுகைகள், அவசர கொள்வனவு நடைமுறைகளுக்கான அமைச்சரவை அங்கீகாரங்கள், மருத்துவப் பெறுகை நடைமுறைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், அவசர கொள்வனவுகளுக்காக சுகாதார அமைச்சின் மற்றும் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் தொடர்பாக புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்வதற்காக 6 ஆம் பந்திக்கும் 7.5 இலிருந்து 7.11 வரையான பந்திகளை தொடர்புபடுத்துதல் வேண்டும். 7 ஆம் பந்தியின் மூலம் இந்த அறிக்கைக்குரிய அனைத்து அவதானிப்புக்களும் காட்டப்படுவதுடன் 05 மருந்துகளுக்குரிய அவதானிப்புக்கள் மாத்திரம் 7.14 இலிருந்து 7.18 வரையான பந்திகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஏனைய 73 மருந்துகள் தொடர்பான அவதானிப்புக்களுக்காக அலகு I இனை தொடர்புபடுத்துதல் வேண்டும். பந்தி இலக்கம் 8 இன் மூலம் இந்த அறிக்கையின் சிபாரிசுகள் காட்டப்பட்டுள்ளன.

02 அறிக்கையை தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட நடைமுறைகள்

2.1 ஆவணங்கள், ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பரீட்சித்தல்

(i) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்களை ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை

(ii) 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டம்

(iii) 2020 இலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையான பிரச்சினையான காலத்தில் தொடர்ச்சியாக மருத்துவ வழங்கல் சேவையை பேணுவது தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனம், தீர்மானம் மற்றும் நிதி அமைச்சின் அவதானிப்புக்கள்

(iv) நிதி அமைச்சு சுற்றறிக்கை மற்றும் அவசர பெறுகை வழிகாட்டிக் கோவை

(v) மருத்துவ வழங்கல்கள் பணிப்பாளரினால் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட தரம் குறைந்த மருத்துவ வழங்கல்கள் தொடர்பான சுற்றறிக்கை

(vi) 2007 மருந்துதகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பான பெறுகை வழிகாட்டிக் கோவை

(vii) 2022 மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பான பெறுகை வழிகாட்டிக் கோவை (இவ்வழிகாட்டிக் கோவையானது 2007 மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பான பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு பதிலாக 2023 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்டது)

(viii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

(ix) 2008 ஆம் ஆண்டின் போது திருத்தத்திற்கு உட்பட்ட 1987 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த மருந்துகள் முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டியுடன் மருந்துகள், மருத்துவ கையேடு (Manual on Managment of Drugs)

(x) தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் பணிப்பாளர் சபை அறிக்கை பிரிவினை விடுவிக்கும் உப குழு அறிக்கை, பாதுகாப்பு மற்றும் ஆபத்து தொடர்பான குழு அறிக்கை, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் விலைக்குழு அறிக்கை, மருந்துகள் டொஸியர் கோவை, பதிவு செய்வதிலிருந்து விடுவிக்கும் சான்றிதழ் (WOR) தேசிய மருந்துகளின் தரத்தை பாதுகாக்கும் ஆய்வுகூடத்திலுள்ள கோவைகள்

(xi) இந்திய கடன் திட்டத்தின் கோவைகள், இந்திய கடன்திட்ட மருந்துகள் உபகுழு கூட்ட அறிக்கை, அவசர கொள்வனவுகளுக்குரிய கோவைகள், அவசர கொள்வனவு விலைக்குழு அறிக்கை, அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் கோவை, பணிப்பாளர் சபை அறிக்கை, வோப் பிரிவின் (Wharf Division) விடுவிப்பு கோவைகள்

(xii) விருப்புக்களை கோரும் நடைமுறையின் கிழ் மேற்கொண்ட பெறுகைகளுக்குரிய கோவை

(xiii) சுங்க திணைக்களம், இறக்குமதி ஏற்றுமதி கட்டப்பாட்டுத் திணைக்களத்தின் மூலம் சுங்க விடுவிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்தில் கணனி முறைமையின் மூலம் கம்பனியை தோற்றுவிப்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களும்

(xiv) மருந்துக் கட்டளைகள் தொடர்பாக மருத்துவ வழங்கல் பிரிவின் கோவைகள் மற்றும் கொடுப்பனவு வவுச்சர்கள்

(xv) மருத்துவ வழங்கல்கள் தொடர்பான நடைமுறையை நிருவகிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த PRONTO மற்றும் தூய்மையான கணனி முறைமையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள்

2.2 ஏனைய நடைமுறைகள்

(i) மேற்கூறிய நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்க வைத்தியசாலைகளின் மூலம் பல்வேறு முறைமைகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை பகுப்பாய்விற்கு உட்படுத்துதல்

(ii) சுகாதார அமைச்சு, உற்பத்தி செய்தல், வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவு, மருத்துவ வழங்கல்கள் பிரிவு, தேசிய மருந்துகளை ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை, அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், அரசாங்க மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் முதலிய நிறுவனங்களின் உயர் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடல், இந்திய கடன் திட்டத்தினை அமுல்ப்படுத்துகின்ற திறைசேரி உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியினை அமுல்ப்படுத்துகின்ற சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் (Health Sector Enhancement Project- HSEP) உத்தியோகத்தர்கள் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்

(iii) தேசிய மருந்துகளின் தரத்தினைப் பாதுகாக்கும் ஆய்வுகூட வளவினை பௌதீகரீதியாக பரீட்சித்தல்

03. நோக்கெல்லை

அரசாங்க வைத்தியசாலைகளின் மருத்துவ வழங்கல் தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக இந்திய கடன் திட்ட வசதிகளை உள்ளடக்கி இலங்கைக்கு கிடைத்த கடன் உதவிகளின் செயல்முன்னேற்றம் மற்றும் அதனூடாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை நடைமுறைகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட மருந்துகளின் அவசர கொள்வனவுகளின் கணக்காய்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

கணக்காய்வின் குறிக்கோள்

வெளிநாட்டு நாணய பற்றாக்குறை மற்றும் ஏனைய விடயங்களின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் உருவாகிய சிக்கலான நிலைமையில் மருந்து தேவைப்பாட்டினைப் பூரணப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல் அதன் போது மேற்கொள்ளப்பட்ட அவசர கொள்வனவுகள் வினைத்திறனானதா என்பதனையும் தரமான மருந்துகளை நோயாளிகளுக்கு வழங்கும் நடைமுறையின் ஒழுங்குபடுத்தலினையும் பரீட்சித்தல் இந்த விசேட கணக்காய்வின் குறிக்கோளாகும்.

04 நோக்கெல்லையின் மட்டுப்பாடுகள்

இந்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களின் மூலம் சிபாரிசுகளுக்கு வரும் போது எனது நோக்கெல்லை கீழே காட்டப்பட்டுள்ள மட்டுப்படுத்தல்களுக்கு உட்பட்டிருந்தது என வலியுறுத்தப்பட்டது.

(i) அவசரக் கொள்வனவுகளின் பெறுகைகள் தொடர்பான தொடக்க கோவைகள் கணக்காய்வு செய்யப்பட்டு வந்திருந்த அதேவேளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டது.

(ii) சுகாதார அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், மருந்து உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்துதல்கள் பிரிவின் மேலதிக செயலாளர், மருத்துவ வழங்கல்கள் பிரதிப் பணிப்பாளர், மருத்துவ வழங்கல்கள் உதவிப் பணிப்பாளர் (மருந்துகள்), மருத்துவ வழங்கல்கள் கணக்காளர் (வழங்கல்கள்) ஆகிய உத்தியோகத்தர்கள் நீதிமன்ற நடைமுறைகளின் காரணமாக சிறைவைக்கப்படுதல் மற்றும் மருத்துவ உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழங்குபடுத்துதல் பிரிவின் பெறுகைப் பிரிவின் பிரதான மருத்துவ உத்தியோகத்தர் வெளிநாடு சென்று மீண்டும் வருகை தராமையின் காரணமாக பெறுகைகள் தொடர்பாக சில விளக்கமளித்தல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(iii) மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்தும் போது உரிய அதிகாரத்தரப்பால் அதற்காக வழங்கப்பட்ட தரச் சான்றிதழ்களின் அடிப்படையில் நம்பிக்கை வைத்தல் மற்றும் சுதந்திரமான தரப்பரிசோதனை மேற்கொள்ளப்படாமை/ செய்யப்படாமை

(iv) மருந்துகளின் தொழிழ்நுட்ப ரீதியான விடயங்கள் சம்பந்தமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் தீர்மானத்தின் மீது நம்பிக்கை வைத்தல்/ பரிந்துரைகளுக்கு சுயாதீன உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்படாமை

(v) புதிய தகவல் பரிமாற்ற கணனிமுறைமையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் சரியான தன்மை தொடர்பாக பிரச்சினை உருவாகியுள்ளமை/ சரியான தன்மை தொடர்பாக உறுதிப்படுதத்தாமை.

(vi) இந்த அறிக்கையின் வரைவிற்கு பதிலளிக்கும் போது அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுதத் கீழே ாண்பிக்கின்ற முறையின் காரணமாக வரைவ கணகக்ாய்வு அறிக்கை தொடர்பாக குறித்துரைதத் உறுதிப்படுத்தல் கிடைக்காத சந்தர்ப்பம் காணப்பட்டதுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையால் பாதகமான நிலைமையினை தவிர்ப்பதற்காக வெளிப்படையான நடவடிக்கை எடுக்கப்டடிருந்ததா என எதிர்காலத்தில் மேலும் கவனம் செலுத்த வேண்டிய விடயமாக அவதானிக்கப்பட்டது.

(vii) 2023 திசெம்பர் 29 ஆந் திகதி வழங்கப்பட்ட அந்த அறிக்கையின் வரைபு அறிக்கைக்காக சுகாதார அமைச்சு செயலாளரினால் "பெற்றுக்கொள்ளக்கூடியதான தகவல்களின் பிரகாரம் முடியுமான அளவில் முழுமையாக பதில் வழங்குவதற்கு நமடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் இந்த அறிக்கையின் விடயங்களுக்குரிய சில அடிப்படையான உத்தியோகத்தர்கள் சிறையில் வைக்கப்பட்டிருத்தல் மற்றும் சில எழுத்துமூல தகவல்கள் இல்லாததனால் வழங்கப்படுகின்ற பதில்கள் முழுமையற்றுக் காணப்படலாம்" என கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தமை

(viii) மேலே பந்தியில் அந்த வரைபு அறிக்கையில் 75 மருந்துகளின் மாதிரிகளைப் பரீட்சிப்பதன மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களுக்காக பொதுவான பொழிப்பாக்கப்பட்ட பதில் காட்டப்பட்டுள்ளது எனவும் உரிய கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பதிலின் மூலம் முழுமையான பதிலைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் சுகாதார அமைச்சு செயலாளரினால் காட்டப்பட்டிருந்தும் பல கணக்காய்வு ஐய வினாக்கள் வழங்கப்பட்டு 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் பதில் வழங்கப்படவில்லை.

(ix) ஒரு வழங்குனரினால் மோசடியாக தரம் குறைந்த மருந்துகளை வழங்கியமை தொடர்பான வரைவு கணக்காய்வு அவதானிப்புக்கள் சம்பந்தமாக நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெறுவதனாலும் சிலர் நீதிமன்றத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதனாலும் அந்நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் முழுமையான பதிலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரியப்படுத்தியிருந்தமையும் இன்னுமொரு கம்பனி சம்பந்தமாக உள்ளக கணக்காய்வு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை வழங்கப்படும் என தெரியப்படுத்துதல்

05. தெரிவு அடிப்படையினைத் தீர்மானித்தல்

மருந்துகளுக்கான மதிப்பீட்டினைத் தயாரிப்பதிலிருந்து மருந்துகளுக்காக கட்டளையிட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்குதலும் அந்த மருந்துகளை பகிர்ந்தளிப்பதும் சம்பந்தமான நடைமுறைகளைப் பரீட்சிப்பதற்காக 78 மருந்து வகைகளைக் கொண்ட ஒரு மாதிரி தெரிவு செய்யப்பட்டதுடன் அந்த மாதிரியை தெரிவு செய்யும் போது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தட்டுப்பாடாக இருத்தல், மருந்துகளை அவசரமாக கொள்வனவு செய்தல், பதிவு செய்வதிலிருந்த விடுவிக்கும் கடிதத்தின் அடிப்படையில் மருந்துகளை இறக்குமதி செய்தல், இந்திய கடன் திட்டத்தின் கீழ் மருந்துகளை இறக்குமதி செய்தல்,

மருந்துகள் தரம் அற்றதாக இருத்தல், நோயாளிகளுக்கு பாரதூரமான பாதிப்பான எதிர்விளைவுகள் ஏற்படுதல் ஆகிய ஆபத்தான 06 துறைகளில் ஒன்று அல்லது சிலவற்றினை உள்ளடக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டன. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் மூலம் தொடர்ச்சியாக கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படுகின்ற மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சைப் பொருட்களும் இந்த மாதிரியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

06 நடைமுறைகள்

6.1 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட பற்றாக்குறையான மருந்துகள் வழங்கல்கள் தொடர்பான தகவல்கள் வெளிநாட்டு நாணய பற்றாக்குறை தொடர்பான தகவல்கள்

மீளாய்வாண்டில் காணப்பட்ட மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளரால் மருத்துவ வழங்கல்களின் நிகழ்கால நிலைமையை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் 2022 மே 13 ஆந் திகதியில் உள்ளவாறு 311 மருந்து விடயங்களின் இருப்பு **(பின்னிணைப்பு 01)** பூச்சியம் என (Out of stock) இனங்காணப்பட்டிருந்ததுடன் வெளிநாட்டு நாணய பற்றாக்குறையின் காரணமாக வங்கியில் காத்திருக்கும் மட்டத்தில் காணப்பட்ட வெளிநாட்டு நாணய கடிதங்களுக்காகவும் வங்கிக்கு சமர்ப்பிக்க உள்ள வெளிநாட்டு நாணயக் கடிதங்களுக்காகவும் அ.ஐ.கு டொலர் 13.2 மில்லியன் தேவைப்பாடு காணப்பட்டது என அரசாங்க உற்பத்தி, வழங்கல், மற்றும் ஒழுங்குபடுத்துதல் இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் சுகாதார அமைச்சின் செயலாளரால் திறைசேரி செயலாளருக்கு 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி தெரிவிக்கப்பட்டது. **(பின்னிணைப்பு 02)** அவ்வாறே அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் கணக்காய்விற்கு வழங்கிய தகவல்களின் பிரகாரம் 2022 ஏப்ரல் 20 ஆந் திகதி அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் உள்நாட்டு சந்தைகளிலிருந்து கட்டளையிடப்பட்ட மருந்து வழங்கல்களுக்காகவும், உள்நாட்டு வழங்குனர்களுக்காக மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கியில் காத்திருத்தல் மட்டத்தில் காணப்பட்ட நாணயக் கடிதங்களுக்காகவும் அத்திகதியில் கொடுப்பனவு செய்யவிருந்த முழுப்பணம் ரூபா 4,278.82 மில்லியன் **(பின்னிணைப்பு 03)** ஆகும். மேலும் 2022 மே 25 ஆந் திகதி வரை அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் மரத்துவ வழங்கல் பிரிவின் கட்டளைகளுக்காக நாணயக் கடித்ததை வழங்குவதற்கு வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு மற்றும் இறக்குமதி உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 7,135 மில்லியனும் மருத்துவ வழங்கல்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி மேலதிகப்பற்று வசதிகளை தீர்த்துவைப்பதற்காக ரூபா 15,988 மில்லியனுமாக மொத்தம் ரூபா 23,123 மில்லியன் **(பின்னிணைப்பு - 04)** பணத் தேவைப்பாடு காணப்பட்டது என கூட்டுத்தாபனத்தினால் கணக்காய்விற்கு தகவல் சமர்ப்பிக்கப்பட்டது.

6.2 2022 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டிருந்த தட்டுப்பாடான மருந்துகளை வழங்குவதற்காக முன்னாள் காணப்பட்ட மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் இராஜாங்க அமைச்சினால் எடுக்கப்பட்ட நடைமுறைகள்

6.2.1 சுகாதார அமைச்சு, மருந்து உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்துதல் இராஜாங்க அமைச்சு, மருத்துவ வழங்கல்கள் பிரிவு, இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், இலங்கை அரசாங்க மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் என்பவற்றினால் மருந்து

வழங்குனர்களுக்குச் செலுத்துவதற்கும் 2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் வெளிநாட்டு தட்டுப்பாட்டின் காரணமாக வழங்க முடியாதிருந்த மருத்துவ வழங்கல் விடயங்களை முன்னுரிமை அடிப்படையில் கொள்வனவு செய்வதற்காகவும் கீழே விபரங்கள் குறிப்பிட்ட உதவி முறைமைகளைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. திறைசேரியின் தகவல்களின் பிரகாரம் நாட்டிற்குள் மருத்துவ வழங்கல்களின் அவசர வசதிகளை வழங்குவதற்கு பின்வருமாறு வெளிநாட்டு கடன் உதவித் திட்டங்களின் மூலம் மருத்துவ வழங்கல்களைக் கொள்வனவு செய்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

அட்டவணை இலக்கம் - 01 வெளிநாட்டு கடன் உதவித் திட்டம்

பங்களிப்பினை வழங்குகின்ற முகவர் நிறுவனங்கள்/ நாடுகள்	**நிதி ஏற்பாடு (அமெரிக்க குடியரசு டொலர் மில்லியன்)**
இந்திய கடன் திட்டம் (ICL)	360.0*
ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி (ADB- HSEP/ AIIB	166.0
உலக வங்கி (WB)	48.0
சீன நன்கொடை	22-25
ஏனைய முகவர் நிறுவனங்கள் (WHO, UNFPA)	2.0

* மேலே இந்திய கடன் திட்டத்தின் கீழ் இரண்டு சந்தர்ப்பங்களின் போது முறையே ஐ.கு டொலர் 200 மில்லியன், ஐ.கு டொலர் 35 மில்லியன் வீதம் வழங்கப்பட்டிருந்தது.

6.2.2 இந்திய கடன் திட்டத்தினூடாக வழங்கப்பட்ட அமெரிக்க குடியரசு டொலர் 200 மில்லியன் கடன் உதவிப் பணமானது மருந்து உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவின் கீழ் தோற்றுவிக்கப்பட்டிருந்த இந்திய கடன் திட்ட மருந்துகள் உப குழுவினால் மருத்துவ வழங்கல் பிரிவினூடாக அரசாங்க வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படுகின்ற மருத்துவ வழங்கல்களை கொள்வனவு செய்வதற்கும் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினூடாக (SPC) செயற்படுத்தப்படுகின்ற ஒசுசலகளில் மருந்துகளை தாராளப்படுத்தும் குறிக்கோளில் கொள்வனவு செய்தல்களை மேற்கொள்வதற்கும் இலங்கை மருந்துகள் உற்பத்திக்கூட்டுத்தாபனத்தின் (SPMC) மருந்துகள் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் சந்தையில் மருந்துகளை தாராளப்படுத்தும் குறிக்கோளிலும் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கும் தனியார் துறையினருக்குமாக மருந்துகளை இறக்குமதி செய்வதற்கும் 2022 ஏப்ரல் 06 ஆந் திகதி வரையில் அட்டவணை இலக்கம் 02 காண்பிக்கின்ற முறையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இந்திய கடன் திட்ட மருந்து உபகுழு ஸ்தாபிக்கப்பட்டு அதன் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பட்டியல் நிதி அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இந்திய கடன் திட்ட இணைத்தல் பிரிவு ஊடாக இந்திய தூதுவர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதுடன் உரிய அங்கீகாரம் கிடைத்த பின்னர் இறக்குமதியாளரால் நாணயக் கடிதம் திறப்பதற்கு தேவையான பணம் இலங்கை ரூபாயில் திறைசேரிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட வேண்டும்.

அட்டவணை இலக்கம் 02: ஏப்ரல் 06 இல் கடன் உதவி ஒதுக்கப்பட்ட பிரிவு மற்றும் ஆகக்கூடிய கடன் எல்லை.

கடன் உதவி ஒதுக்கீடு செய்யப்பட்ட பிரிவு	கடன் வழங்கும் உச்ச எல்லை (அ.கு.டொலர்)
அரசாங்க மருத்துவ கூட்டுத்தாபத்திற்கு	126
ஒசுசல்களுக்கு	-
அரசாங்க மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு	04
உள்நாட்டு உற்பத்திகளுக்கு	25
வழங்குனர்களுக்கு	45
	.....
	200

6.2.3 2022 ஆகஸ்ட் 29 ஆந் திகதி இந்திய கடன் உதவி உபகுழுவின் கூட்ட அறிக்கையின் பிரகாரம் அத்திகதியில் இந்த இந்திய கடன் திட்டத்தினைப் பயன்படுத்தி இந்திய கடன் திட்ட உப குழுவினால் மேலுள்ளவாறு கடன் உதவியை பயன்படுத்தி ஐ.கு டொலர் 109 மில்லியன் பெறுமதியான 1,372 விடயங்களுக்காக இன்வொயிஸ்கள் அங்கீகரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ஐ.கு டொலர் 68 மில்லியன் பெறுமதியான 584 இன்வொயிஸ்களுக்காக அத்திகதியில் உள்ளவாறு நிதி அமைச்சின் இந்திய கடன் திட்ட ஒருங்கிணைப்பு பிரிவின் (Indian Credit Line Facility Cordination Unit - ICFCU) மற்றும் இந்திய தூதுவராயலயத்தின் அங்கீகாரம் கிடைத்திருந்தது என தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க அப்பெறுமதி தொடக்க சந்தர்ப்பத்தில் சுகாதாரத்திற்காக ஒதுக்கப்பட்ட ஐ.கு டொலர் 200 மில்லியன் கடன் பணத்தில் 34 சதவீத அளவாகும். விபரம் கீழே தரப்படுகின்றது.

அட்டவணை இலக்கம் 03- 2022 ஆகஸ்ட் 29 ஆந் திகதியில் உள்ளவாறு இந்திய கடன் உதவி உபகுழு அங்கீகரித்த கடன் உதவி

கடன் உதவி ஒதுக்கீடு செய்யப்பட்ட பிரிவு	கடன் வழங்கும் உச்ச எல்லை (ஐ.கு.டொலர்)	அங்கிகரித்த கடன் உதவியின் அளவு (ஐ.கு.டொலர்)
அரசாங்க மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம்		24,044,243
அரசாங்க மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினூடாக இறக்குமதி செய்து வழங்குவதற்கு	114,990,000	242,288
ஒசுசல்களுக்கு		13,028,077
அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு	4,000,000	3,765,680
உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு	25,000,000	13,244,885
தனியார் துறையிலுள்ள வழங்குனர்களுக்கு	55,010,000	55,005,841

அரசாங்க பல்வேறு கூட்டுத்தாபனங்களுக்கு	1,000,000	-
	---	---
	200,000,000	109,331,014
	=========	=========

அட்டவணை இலக்கம் 04: 2022.10.21 இல் இந்திய கடன் உதவி பயன்பாட்டின் செலயல் முன்னேற்றம்

	2022.08.29 ஆந் திகதியில் உள்ளவாறாறு இந்திய கடன் திட்ட மருந்து உப குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட பணம்	2022.08ஆந் தகிதியில் உள்ளவாறு மருந்து உபகுழு அங்கீகரித்த இன்வொயிஸ்களின் எண்ணிக்கை		2022.08.26 ஆந் திகதியில் உள்ளவாறு இந்திய தூதுவராலயத்தினால் அங்கீகரித்த இன்வொயிஸ்களின் பெறுமதி	2022.08.26 ஆந் திகதியில் உள்ளவாறு இந்திய தூதுவராலயத்தினால் அங்கீகரித்த இன்வொயிஸ்களின் எண்ணிக்கை		2022.08.26 ஆந் திகதி இறக்குமதியாளர்களால் திறைசேரியிலுள்ள கணக்கிற்கு வைப்புச் செய்த பணம்	2022.08.26 ஆந் திகதியில் உள்ளவாறு இறக்குமதியாளர்களால் திறைசேரி கணக்கிற்கு பணம் வைப்புச் செய்த இன்வொயிஸ்களின் எண்ணிக்கை		2022.10.21 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைத்த கட்டளைகளின் பெறுமதி	2022.08.29 ஆந் திகதியில் உள்ளவாறாறு இந்திய கடன் திட்ட மருந்து உப குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட பணம்
	----------	----------		----------	----------		----------	----------		----------	----------
	(ஐ.அ.டொலர்)			**(ஐ.அ.டொலர்)**			**(ஐ.அ.டொலர்)**			**(ஐ.அ.டொலர்)**	
SPC (DHS)	24,044,243	398		9,899,985	113		53,244	04		4,654,693	50
Import & supply (SPC)	242,288	08		171,438	06		0	0			
Osusala	13,028,077	322		3,344,524	109		108,087	07		870,144	47
SPMC	3,765,680	22		1,555,120	08		373,500	01		1,781,780	05
Local Manufactures	13,244,885	236		5,644,303	92		608,631	12		-	-
Private sector suppliers	55,005,841	386		47,595,611	256		15,843,765	77		-	-
	----------	------		----------	-------		----------	------		----------	-------
	109,331,014	1,372		68,210,981	584		16,987,227	101		7,306,617	102
	==========	====		==========	====		=========	====		=========	====

6.2.4 2023 மே 19 ஆந் திகதிய இந்திய கடன் உதவி உபகுழு கூட்ட அறிக்கையின் பிரகாரம் மேலே 2022 ஆகஸ்ட் 29 ஆந் திகதியில் ஒன்பது மாதங்களின் பின்னர் அதாவது 2023 மே 19 ஆந் திகதியில் உள்ளவாறு இந்திய கடன் உதவி உபகுழு அங்கீகரித்த பெறுமதிகள் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றன.

அட்டவணை இலக்கம் 05: 2023 மே 20 ஆந் திகதியில் அங்கீகரித்த கடன் உதவி

கடன் உதவி ஒதுக்கிய துறை	**கடன் வழங்கும் உச்ச எல்லை**	**அங்கீகரித்த கடன் உதவியின் அளவு ஐ.கு.டொலர்**
அரசாங்க மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்தினூடாக மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருநதுகளை கொள்வனவு செய்வதற்கு (SPC -DHS)		72,346,466
அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினூடாக இறக்குமதி செய்து வழங்குவதற்கு	116,954,957	280,038
மருத்துவ வழங்கல் பிரிவினூடாக இறக்குமதி செய்து வழங்குவதற்கு		2,105,155
மருத்துவ வழங்கல் பிரிவிற்கு		4,490,377
ஒசுசலகளுக்கு		37,802,989
அரசாங்க மருந்து உற்பத்திக் கூட்டுத்தபனத்திற்கு தேவையான மூலப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு	3,908,580	3,908,580
உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு	12,773,403	12,773,403
தனியார் துறை வழங்குனர்களுக்கு	73,817,032	69,878,047
2022.11.29 ஆந் திகதி மேலதிக ஏற்பாடாக ஐ.கு. டொலர் 35 மில்லியன் கிடைத்தல்	27,546,028	-
	235,000,000	203,585,055

6.2.5 எனினும் 2022 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரை அவசர கொள்வனவுகளின் கீழ் விருப்பத்தைக் கோருதல் (EOI) மற்றும் கோரப்படாத முன்மொழிவுகளின் (Unsolicited Proposal) ஊடாக ரூபா 29,575 மில்லியன் பெறுமதியான மருத்துவ வழங்கல்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

6.3 இலங்கையில் மருந்துகளை ஒழுங்குபடுத்துதல் சம்பந்தமாக தேசிய ஔடதங்களை ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் கடமைகள்

தேசிய மருந்துக் கொள்கைகளுக்கு இணங்கும் வகையில் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மட்டுப்பாடான உற்பத்திப் பொருட்களை பதிவுசெய்தல், அனுமதிப் பத்திரங்களை உள்ளடக்கி தொடர்புபட்ட ஏனைய அனைத்து விடயங்கள் மற்றும் சிகிச்சைகளை நடாத்துகின்ற முறைமைகளை ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்துதலும் சம்பந்தமாக பெர்றுப்புக்கூற வேண்டிய ஒரு அரசாங்க நிறுவனமாக 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்களை ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 1 ஆம் பிரிவின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 05)** 2015 யூன் 25 ஆந் திகதிய 1920/28 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் **(பின்னிணைப்பு -06)** மூலம் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை அதிகாரச் சட்டம் அத்திகதியிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்டது. தரமானது என சான்றுபடுத்திய மருந்துகள் மற்றும் சுகாதார உற்பத்திப் பொருட்களுக்கான அணுகுதல்களை மேம்படுத்துதல் அதிகார சபையின் தூரநோக்காக இருந்ததுடன் மருந்துகள் மற்றும் சுகாதார பாதுகாப்பு உற்பத்திப் பொருட்களின் தரம், பாதுகாப்பு மற்றும் ஒப்புக்கொள்ளும் தன்மையை சான்றுபடுத்துவதற்கான ஒழுங்குபடுத்துதலினை மேற்பார்வை செய்தல் மற்றும் செயற்திறனான அடிப்படைத் தீர்மானத்தினை நோயாளிகளின் நலனுக்காக வழங்குதல் அதிகார சபையின் செயற்பணியாகும். அதிகார சபையினை தோற்றுவிக்கும் குறிக்கோளுக்கு மத்தியில் இலங்கையில் மருந்துகளை ஒழங்குபடுத்துவது தொடர்பாக நேரடியாக ஒருங்கிணைப்புச் செய்கின்ற குறிக்கோளும் பிரதான செயற்பாடுகளும் கீழே தரப்படுகின்றன. **(பின்னிணைப்பு - 07)**

(i) தெளிவான பாதுகாப்பான மற்றும் வசரியான தரத்தினைக் கொண்ட மருந்துகள் நியாயமான விலைக்கு பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துதல்.

(ii) மருந்துகைப் பதிவுசெய்தல், அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், பிரிவினை அல்லது அனுமதிப்பத்திரத்தினை இரத்துச் செய்தல், உற்பத்தி செய்தல், விலைகளை நிர்ணயித்தல், இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்துதல், போக்குவரத்து செய்தல், பகிர்ந்தளித்தல், விற்பனை செய்தல், பிரசித்தப்படுத்துதல், மற்றும் அப்புறப்படுத்துதலுடன் சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களுக்காகவும் மத்தியப்படுத்தப்பட்ட ஒழுங்குபடுத்துனராக செயற்படல்

(iii) மருந்துகளைப் பதிவுசெய்தல், அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், மற்றும் இறக்குமதி செய்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் வெளிப்படைத்தன்மையுடன் நிலைபேறாக மற்றும் நியாயமான முறையில் இடம்பெறுகின்றது என்பதனை உறுதிப்படுத்துதல்

(iv) அத்தியவசியமான மருந்துகள் நியாயமான விலையில் காணப்படுவதனை உறுதிப்படுத்தும் குறிக்கோளில் இலங்கையில் சரியான தரத்தைக் கொண்ட மருந்துகளை உற்பத்தி செய்வதனை ஊக்குவித்தல்

(v) சுகாதார விருந்தோம்பல் தொழிலாளர்கள் மற்றும் பாவனையாளர்களால் மருந்துகளை பாதுகாப்பாகவும் பகுப்பாய்வு ரீதியாகவும் பயன்படுத்துவதனை மேம்படுத்துதல்

(vi) மருந்துகள் சம்பந்தமான உரிய சட்டங்களுக்கு பொருத்தமான திருத்தங்களை சிபாரிசு செய்தல்

(vii) மருந்துகள் தொடர்பாக பொதுமக்கள், சுகாதார விருந்தோம்பல், தொழிலாளர்கள் மற்றும் அது தொடர்பாக அக்கறை காட்டும் அனைத்து நபர்களுக்கும் தெரியப்படுத்துதல்

(viii) மருந்துகளை மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதலினை ஒழுங்குபடுத்துதல்

(ix) நாட்டில் மருந்துகள் காணப்படுவதனை ஒழுங்குபடுத்துதல்

(x) மருந்துகளின் தரம், பாதுகாப்பானவை பற்றியும் பாதகமான பக்கவிளைவுகள் தொடர்பாகவும் விற்பனைக்குப் பின்னைய ஆய்வுகளை நடாத்துதல்

(xi) இலங்கையில் வைத்திய பரிசோதனைகளை நடாத்துவது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்துதல்

6.4 மருந்துகளை ஒழுங்குபடுத்துதல் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட அதிகார சபையின் பிரதான பிரிவு, குழு மற்றும் அவற்றின் பிரதான செயற்பாடுகள்

(i) மருந்துகளை ஒழுங்குபடுத்துதல் பிரிவு (Medicines Regulatory Division - MRD)

மருந்துகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்குமாக அதிகார சபையுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அதிகார சபைக்கு உதவியளித்தல்

(ii) தேசிய மருந்துகளின் தரத்தை உத்தரவாதப்படுத்தும் ஆய்வுகூடம் (National Medicines Quality Assurance Laboratory – NMQAL)

பதிவுசெய்வதற்கான வேண்டுதல்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட மருந்துகளை நாட்டிற்குள் கொண்டு வரும்போது ஒன்றுசேர்க்கப்பட்ட மருந்துகள் பயன்படுத்துபவர்களால் ஒரு

முறைப்பாடாக சமர்ப்பிக்கப்பட்ட மருந்துகள், அதிகார சபையினால், விற்பனைக்குப் பின்னைய ஆய்வினைச் செய்யும் போது சேகரிக்கப்பட்ட மருந்துகள் மற்றும் ஏனைய ஏதாவது காரணத்தின் அடிப்படையில் அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்படுகின்ற மருந்துகளின் தரம் தொடர்பாக பரீட்சிப்புக்களை நடாத்துதல்

(iii) மருந்துகளின் மதிப்பீட்டுக் குழு (Medicines Evaluation Committee – MEC)

பதிவு செய்தலுக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற மருந்துகளுக்குரிய பிரதிபலன்கள், ஆபத்துக்கள் அந்த மருந்துகளின் தரம் விளைதிறன், பாதுகாப்பான தன்மை அத்தியவசியமானவை, விலை மற்றும் பொருளாதார பகுப்பாய்வு தொடர்பாக உறுதியாகக் காட்டி தொழில்நுட்ப மதிப்பீட்டினை மேற்கொள்ளல் மற்றும் அவை தொடர்பாக ஒரு அறிக்கையினை அதிகார சபைக்குச் சமர்ப்பித்தல்

(iv) மருந்துகளை மதிப்பீடு செய்யும் உபகுழு (Medicines Evaluation Subcommittee – MESC)

தரமானவை, பாதுகாப்பானவை, செயற்தினுள்ளவை, விலை என்பவற்றை கவனத்தில் கொண்டு மருந்துகளை ஒழுங்குபடுத்தும் பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளை அங்கீகரித்தல் அல்லது தேவையான சந்தர்ப்பங்களில் மாற்றம் செய்வதன் மூலம் சிபாரிசுகளை சமர்ப்பித்தலும் அச்சிபாரிசுகளை மருந்து மதிப்பீட்டுக் குழுவிற்கு அறிக்கையிடுதல்.

(v) பதிவு செய்வதிலிருந்து விடுவிக்கும் உப குழு (Waiver of Registration Subcommittee – WORSC)

2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகளை ஒழுங்குபடுத்தும் அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 109 ஆம் பிரிவின் **(பின்னிணைப்பு 08)** பிரகாரம் அதிகாரசபைக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தின் அடிப்படையில் கிடைக்கின்ற பதிவு செய்தல்களிலிருந்து விடுவிக்கும் விண்ணப்பங்கள் அவசர சந்தர்ப்பங்கள் மற்றும் ஏனைய விசேட சந்தர்ப்பத்திற்குரிய விடயங்களை கவனித்தப் பார்த்து தேவைக்கேற்றவாறு சிபாரிசு செய்தல், அங்கீகரித்தல் அனுமதிகளை வழங்குதல் மற்றும் அவை தொடர்பாக மருந்துகள் மதிப்பீட்டுக் குழுவிற்கு அறிக்கையிடுதல்

(vi) விலை நிர்ணயிக்கும் குழு (Pricing Committee – PC)

குறித்த ஒரு மருந்தின் விலையைத் திர்மானிக்கும் போது தாக்கமளிக்கின்ற உரிய தகவல்கள் மற்றும் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக அதிகார சபைக்கு உதவியளித்தல், ஒரு மருந்தின் அறிமுகப்படுத்தும் விலை, உச்சஅளவு சில்லறை விலை, விலை திருத்தங்கள் என்பன தொடர்பான முறைமையை அதிகார சபைக்கு சிபாரிசு செய்தல், குறித்த ஒரு மருந்தின் விலையைக் குறைத்தல் அல்லது

அதிகரிப்பதற்கு அல்லது காணப்படுகின்ற விலையை பேணிச் செல்வதற்கு அதிகார சபைக்கு சிபாரிசு செய்தல் மற்றும் குறித்த ஒரு மருந்தின் உற்பத்தி விலை அதிகரிப்பதனை கண்காணித்தல்.

(vii) பாதுகாப்பு மற்றும் ஆபத்தினை மதிப்பீடு செய்யும் உபகுழு (Safety and Risk Evaluation Subcommittee –SAFRESC)

மருந்துகளின் கபாதுகாப்பு தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளை செயற்திறனாக்குவதற்கு காரணமாக இருக்கின்ற மதிப்பீடு ஆபத்து மதிப்பீடு ஆபத்து முகாமைத்துவம், சம்பவ புலனாய்வு, தேவையான சந்தர்ப்பங்களில் சிக்கலான நிலைமையை தொடர்பாடல் செய்தல், மற்றும் முகாமைத்துவம் செய்வதற்காக தொழில்நுட்ப ரீதியான உதவியை வழங்குதல்

(viii) மருந்துகளை மீளக் கோருதல் முகாமைத்துவ குழு (Recall Management Committee)

மருந்துகள் சம்பந்தமான சிக்கல்கள் உருவாகின்ற சந்தர்ப்பங்களின் போது அந்த மருந்துகளை மீளக்கோருவது தொடர்பாக அதிகார சபைக்கு சிபாரிசுகளை வழங்குதல்

6.5 கொவிட் தொற்று நோய் மற்றும் வெளிநாட்டு நாணய சிக்கல் காணப்படுகின்ற காலத்தில் அவசர கொள்வனவு நடைமுறைக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அமைச்சரவை அங்கீகாரங்கள் மற்றும் பெறுகை வழிகாட்டிக் கோவைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்

6.5.1 கொவிட் தொற்றுநோய் காலத்தின் போது அத்தியவசியமான பொருட்களை பெறுகை செய்வது தொடர்பாக அப்போதைய சனாதிபதியினால் 2020 ஏப்ரல் 01 ஆந் திகதி சமர்ப்பித்த 20/0694/201/016 ஆம் இலக்க அமைச்சரவை குறிப்புக்களின் 16(1) ஆம் பந்தியின் **(பின்னிணைப்பு 09)** பிரகாரம் அத்திகதியிலேயே நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது கொரோனா தோற்றுநோய் தொடர்பாக அவசர பெறுகைகளை வசதியாக மேற்கொள்வதற்காக தேசிய பெறுகை ஆணைக்குழுவினை விசாரித்து பெறுகை கையேட்டிற்குரிய பிற்சேர்க்கை 35 இலுள்ள ஏற்பாடுகள் மேலும் தள்ளுபடி செய்யப்பட்டு மிகவும் இலகுவான பெறுகை வழிகாட்டியினை வழங்குமாறு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2020 ஏப்ரல் 09 ஆந் திகதி அரச நிதி பணிபப்ாளர் நாயகத்திற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 10)** அந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் திறைசேரி செயலாளரினால் 2020 ஏப்ரல் 09 ஆந் திகதிய PED/PMD/149/000/2020-02 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிததத்தின் **(பின்னிணைப்பு - 11)** மூலம் கொவிட் சம்பந்தமாக அவசர பெறுகை மேற்கொள்ளும் போது 2006 இன் பெறுகை

கைநூலின் பிற்சேர்க்கை 35 இலுள்ள ஏற்பாட்டினை மேலும் தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் திறைசேரி செயலாளரின் 2020 எப்ரல் 09 ஆந் திகதிய கடிதத்திற்குப் பதிலாக மீண்டும் 2020 ஒக்தோபர் 12 ஆந் திகதி வழங்கப்பட்ட PED/PMD/149/000/2020-02 ஆம் இலக்க கடித்தின் மூலம் **(பின்னிணைப்பு - 12)** கொவிட் 19 உடன் தொடர்புபட்ட அவசர கொள்வனவுகளுக்காக 2006 பெறுகை கையேட்டின் 35 ஆம் பிற்சேர்கையின் கீழ் மேலும் சலுகை வழங்கும் ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இதன் கீழ் திருத்தப்பட்ட பெறுகை வழிகாட்டிக் கோவை தற்காலிக காலப்பகுதிக்குரியவை எனவும் பெறுகை வழிகாட்டிக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளின் மூலம் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்பு வாய்ந்ததாக பெறுகை செய்யும் நிறுவனத்தின் பணத்திற்கு உச்ச அளவு பெறுமதியினை வழங்குகின்றது என்பதற்கு உரிய பெறுகைக்குழு மற்றும் பெறுகை செய்யும் நிறுவனம் சான்றுபடுத்த வேண்டும் எனவும் காணப்படுகின்ற பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் கொவிட் 19 அவசர நிலைமைக்கு நேரடியாக உரிய அவசர கொள்வனவுகளுக்காக மாத்திரம் கருத்தில் கொள்வதற்கும் மேலும் அக்கடித்தின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

6.5.2 அவ்வாறே கொவிட் 19 அவசர நிலைமைக்கு நேரடியாக தொடர்புபடுகின்ற திருத்தம் செய்யப்பட்ட பெறுகை வழிகாட்டியின் மூலம் பெறுகைக் குழுக்களின் அதிகார எல்லைகளை அதிகரித்தல், கேள்வி கோருதல், மீளக் கட்டளையிடல், கேள்விப் பாதுகாப்பினை 0 சதவீதம் வரை குறைத்தல், அவசர கொள்வனவுகளுக்காக பிரதான பெறுகைத் திட்டங்கள் மற்றும் பெறுகை மேன்முறையீட்டு நடைமுறைகளை தற்காலிகமாக கைவிடுதல் முதலிய நிவாரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் போது அவசர பெறுகைக்குழ மற்றும் பெறுகை செய்யும் நிறுவனம் மதிப்பீட்டு நடைமுறை செய்யும் நிறுவனம் மதிப்பீட்டு நடைமுறையின் போது உச்ச அளவு கவனத்துடன் செயற்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

6.5.3 கொவிட் 19 தொற்று நொயின் மூன்றாம் கட்டத்தின் போது PCR இயலளவினை அதிகரித்தல் என்ற தலைப்பில் 2021 மே 01 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 21/0791/309/040 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு **(பின்னிணைப்பு - 13)** 2021 மே 03 ஆந் திகதிய அமைச்சரவை கூட்டத்தின் போது **(பின்னிணைப்பு - 14)** அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவற்றிற்கு மத்தியில் 2020 ஏப்ரல் 01 ஆந் திகதிய மற்றும் 2021 மே 03 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு திறைசேரி செயலாளரின் PED/PMD/COVID 19/Guide/21 ஆம் இலக்க 2021 மே 13 ஆந் திகதிய கடித்தின் மூலம் **(பின்னிணைப்பு - 15)** "கொவிட் 19 அவசர பெறுகை நடைமுறை" (COVID 19 Emergency Procument Process - CEPP) என்பதற்காக புதிய வழிகாட்டி வழங்கப்பட்டிருந்தது.

6.5.4 மேலே 6.5.3 ஆம் பந்தியில் குறிப்பிட்ட வழிகாட்டிக்கு மேல் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக நிதி அமைச்சரினால் 21/0883/304/076 ஆம் இலக்க கொவிட் 19 அவசர பெறுகை நடைமுறையினை அறிமுகப்படுத்துதல் என்ற தலைப்பில் ஒரு அமைச்சரவை விஞ்ஞாபனம் 2021 மே 17 ஆந் திகதி வழிகாட்டி பின்னிணைப்பு 01 ஆகக்

காட்டி **(பின்னிணைப்பு - 16)** சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த விஞ்ஞாபனத்தின் மூலம் நாட்டில் காணப்பட்ட அவசர நிலைமையினைக் கருத்தில் கொண்டு விஞ்ஞாபனத்தின் பின்னிணைப்பு 01 இல் குறிப்பிட்டவாறு கொவிட் 19 அவசர பெறுகை குழுவினால் எடுக்கப்படுகின்ற தீர்மானம் உரிய அதிகாரிகளால் ஒவ்வொரு மாதமும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் பெறுகை செய்யும் நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வினால் இந்த நடைமுறையின் வினைத்திறன் நியாயமானது என உறுதிப்படுத்த வேண்டும் எனவும் காட்டி உரிய வழிகாட்டி அமைச்சரவையின் மேல் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அத்திகதியில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது இந்த வழிகாட்டியை வழங்குவதற்கான மேல் அங்கீகாரத்தினை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. (**பின்னிணைப்பு -17)**

6.5.5 அந்த வழிகாட்டியின் மூலம் கொவிட் தொற்றுநோயை முன்னிட்டு காணப்படுகின்ற பெறுகை நடைமுறையின் குறைபாடுகளுக்காக தெளிவுபடுத்துவதற்கும் 2006 அரசாங்க பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட போட்டி கேள்வி நடைமுறையை பின்பற்றாது நடவடிக்கை எடுப்பதற்கும் கொவிட் 19 அவசர பெறுகைக்குழுவினை (COVID 19 Emergency Procument Committee - CEPC) தோற்றுவிப்பது எனவும் அக்குழு அமைச்சரவை பெறுகைக் குழுவிற்குப் (SCAPC, CAPC, CANPC) பதிலாக செயற்படுவதாகவும் இதனுடன் தொடர்புபட்ட அவசர கொள்வனவு செய்தல் பெறுகையின் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படாததனால் தொழில்நுட்ப நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் காட்டப்பட்டிருந்தது.

6.5.6 அவ்வாறே இக்குழுவின் மூலம் ஒப்படைக்கப்படுகின்ற பெறுகைகள் தொடர்பாக உரிய அமைச்சரவை/ இராஜாங்க அமைச்சருக்கு தெரியப்படுத்த வேண்டியதுடன் சுகாதார அமைச்சரினால் அப்பெறுகையில் கொள்வனவு செய்த விடயங்கள் தொடர்பாக கொள்வனவு செய்யும் தேவைப்பாட்டினை நியாயப்படுத்தி கொள்வனவு செய்த விடயங்கள், வழங்குனர் மற்றும் பெறுமதிகளை உள்ளடக்கும் வகையில் மாதாந்தம் ஒரு அறிக்கையினை அமைச்சரவையின் மேல் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் பெறுகை செய்யும் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வாளரினால் பெறுகை நடைமுறை அவதானிக்கப்பட வேண்டியதுடன் பெறுகை நடைமுறையின் இறுதியின் போது நியாயமான மற்றும் வினைத்திறனான ஒரு நடைமுறையினை சான்றுபடுத்துவதற்கு அறிக்கையிட வேண்டும் எனவும் அந்த வழிகாட்டியில் காட்டப்பட்டிருந்தது.

6.5.7 இதற்கு மத்தியில் சிக்கலான நிலைமையில் அவசரமாக அத்தியவசியமான மருந்துகளை, மருத்துவ உபகரணங்களை மற்றும் துணைக்கருவிகளை கொள்வனவு செய்தல் என்ற தலைப்பில் சுகாதார அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022 மே 30 அந் திகதிய 22/0734/540/001 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் **(பின்னிணைப்பு - 18)** மூலம் சிக்கலான நிலைமையில் மருந்துகள், உபகரணங்களை அவசரமாக கொள்வனவு செய்யும் நடைமுறையினை செயற்படுத்துதலினை பலப்படுத்துவதற்காக 2021 மே 13 ஆந் திகதிய பெறுகை வழிகாட்டியின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட கொவிட் 19 அவசர பெறுகை குழுவினை மேலும் செயற்படுத்தி அதன் நோக்கெல்லையை விரிவுபடுத்துவதற்கு

அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் 2022 யூன் 01 ஆந் திகதி சமர்ப்பித்த அவதானிப்புக்களின் **(பின்னிணைப்பு - 19)** மூலம் விஞ்ஞாபனத்திலுள்ள பிரேரணைகளுக்காக அங்கீகாரத்தினை வழங்கி கொவிட் சம்பந்தமான அவசர பெறுகை நடைமுறையின் வழிகாட்டிகளுக்குச் சமமான ஏற்பாடுகளை உள்ளடக்கி 2022 யூன் மாத்திலிருந்து 2022 திசெம்பர் மாதம் வரையான காலத்திற்காக சுகாதாரப் பிரிவு அவசர பெறுகை நடைமுறைகளுக்கான புதிய வழிகாட்டி சமர்ப்பிக்கப்பட்டது. 2022 யூன் மாதம் 06 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் அவதானிப்புக்களுக்கு பின்னிணைப்பு **A** ஆக இணைக்கப்பட்டிருந்த சுகாதாரப் பிரிவின் அவசர பெறுகை நடைமுறைகளுக்கான வழிகாட்டியை துரிதமாக வழங்குவதற்கு திறைசேரியின் செயலாளருக்கு அதிகாரத்தினை ஒப்படைப்பதற்கும் மேற்கூறிய வழிகாட்டியை பின்பற்றி எதிர்காலத்தில் அவசர அத்தியவசியமான மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் துணைக்கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சு செயலாளருக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 20)**

6.5.8 பொருளாதாரம் சிக்கலான நிலைமையில் காணப்படுகின்ற பெறுகை நடைமுறைகளினை அமுல்ப்படுத்தும் போது உருவாகின்ற சிக்கல்களின் காரணமாக அவசர தேவைப்பாடான அத்தியவசியமான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களில் காணப்பட்ட தட்டுப்பாட்டிற்கு பரிகாரம் காண்பதற்கு நிதி அமைச்சு செயலாரின் 2022 யூன் 16 அந் திகதி வழங்கப்பட்ட PFD/PMD/Health/HSEPP/01/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் **(பின்னிணைப்பு - 21)** பிரகாரம் சுகாதாரத் துறை ஒரு அவசர பெறுகை நடைமுறைக்கான (Health Sector Emergency Procument Process- HSEPP) வழிகாட்டியை தயாரித்து சமர்ப்பித்திருந்ததுடன் அதன் மூலம் அரசாங்கத்தின் சுகாதாரத் துறையிலுள்ள பெறுகை நிறுவனங்களுக்காக 2022 யூன் மாத்திலிருந்து 2022 திசெம்பர் 31 வரையான காலத்தின் போது அரசாங்க வழிகாட்டியின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட போட்டி கேள்வி கோரல் நடைமுறையினைப் பின்பற்றாது பெறுகை நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

6.5.9 அதன் போது அத்திவசியமான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதுதற்கு "சுகாதாரத்துறை அவசர பெறுகைக்குழு" (Health Sector Emergency Procument Committee - HSEPC) நியமிக்கப்பட்டிருந்ததுடன் அது 2006 பெறுகை சுற்றறிக்கையில் குறிப்பிட்ட அமைச்சரவை பெறுகைக் குழுவிற்கு (SCAPC/ CAPC/ CANPC) பதிலாக செயற்படுத்துவதற்கும் அதனுடன் தொடர்புபட்ட அவசர கொள்வனவு செய்தல் பெறுகைகளின் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படாததினால் தொழில்நுட்ப நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் காட்டப்பட்டிருந்தது. இக்குழுவின் மூலம் ஒப்படைக்கப்பட்ட பெறுகைகள் தொடர்பாக சுகாதார அமைச்சருக்கு தெரியப்படுத்தப்பட வேண்டியதுடன் சுகாதார அமைச்சரினால் அப்பெறுகைகளில் கொள்வனவு செய்த விடயங்கள் தொடர்பாக கொள்வனவு செய்யும் தேவைப்பாட்டினை நியாயப்படுத்தி

கொள்வனவு செய்த விடயங்கள் வழங்குனர் மற்றும் பெறுமதியை உள்ளடக்கும் வகையில் மாதாந்தம் ஒரு அறிக்கை அமைச்சரவையின் மேல் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறே முன்னர் குறிப்பிட்ட கொவிட் அவசர பெறுகை நடைமுறையின் போது அதேபோல பெறுகை செய்யும் நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வாளரினால் பெறுகை நடைமுறையின் இறுதியின் போது நியாயமான மற்றும் வினைத்திறனான ஒரு நடைமுறையினைச் சான்றுபடுத்துவதற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

6.5.10 அதற்கிணங்க அப்புதிய வழிகாட்டிக் கோவையின் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம் சுகாதாரத்துறை அவசர பெறுகைக் குழுவின் உள்ளடக்கம் பின்வருமாறாகும்.

செயலாளர், சுகாதார அமைச்சு	தலைவர்
பணிப்பாளர் நாயகம் அல்லது சமமான பதவி, நிதி அமைச்சு	அங்கத்தவர்
பெறுகை நிறுவனத்தின் பிரதானி அல்லது அவரால் பெயர் குறிப்பிட்டவர்	அங்கத்தவர்

6.5.11 மேலும் புதிய வழிகாட்டியின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் அவசர நிலைமையினை அடிப்படையாகக் கொண்டு நேரடி ஒப்பந்த முறைமை, தனியான மூலம் (single source selection) அல்லது சந்தை விலை ஒப்பீட்டு முறைமைகளில் ஒன்று பின்பற்ற வேண்டியிருந்ததுடன் சுகாதாரத்துறை அவசர பெறுகை குழுவினால் தேவையான நியமங்கள் மற்றும் தரங்கள் தொடர்பாக திருப்திகொள்ளப்படுமாகவிருந்தால் உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்தல் மேம்படுத்தப்பட்டிருந்தது.

6.5.12 அவ்வாறே பொருளாதார சிக்கலான நிலைமையில் அவசர அத்திவசியமான மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் துணைக்கருவிகளை கொள்வனவு செய்வதற்காக சுகாதார அமைச்சினால் 2023 சனவரி 31 ஆந் திகதி சமர்ப்பித்த 23/0302/640/005 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் **(பின்னிணைப்பு - 22)** மூலம் அவசர பெறுகை நடைமுறையை 2023 யூன் 30 ஆந் திகதி வரை மீண்டும் நீடிக்குமாறு வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தது இது சம்பந்தமாக 2023 பெப்ரவரி 06 ஆந் திகதி நிதி அமைச்சரின் அவதானிப்புக்களுக்கு இணங்க விலை முரண்கள் கோரப்படாத முன்மொழிவு (Unsolicited Proposal) இனை அமுல்ப்படுத்துவது சம்பந்தமாக சுகாதார அமைச்சினால் நிதி அமைச்சிற்கு மேற்கொள்ளப்பட்ட பல வேண்டுதல்களை கவனித்துப் பார்த்த போது நிறுவனங்களுக்கிடையே காணப்பட்ட பலவீனமான ஒருங்கிணைப்பு மற்றும் பலவீனமான பெறுகைத்திட்டத்தின் காரணமாக பெறுகைத்திட்டம் மற்றும் பெறுகை நடைமுறையில் தாமதம் ஏற்பட்டுள்ளது என நிதி அமைச்சர் அவதானித்துள்ளார் என தெரிவிக்கப்பட்டது. மேலும் அமைச்சரவையினால் 2011 சனவரி 12 ஆந் திகதி வழங்கிய அங்கீகாரத்தின் பிரகாரம் மருந்துக்கான பெறுகைத் திட்ட குழு உடனடியாக அமுலுக்குவரும் வகையில் நியமிக்கப்படுவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மருந்து சம்பந்தமாக தொடர்ச்சியான வழங்கலினை கவனித்துப்பார்த்து மேற்கூறிய விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட முன்மொழிவுகள் சம்பந்தமாக எதிர்ப்பு இல்லை எனவும் நிதி அமைச்சர் தெரிவித்திருந்ததுடன் **(பின்னிணைப்பு 23)** 2023 பெப்ரவரி 13 ஆந் திகதி கூடிய

அமைச்சரவை கூட்டத்தின் போது நிதி அமைச்சரின் அவதானிப்புக்களுக்கு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி அதற்காக அங்கீகாரம் கிடைத்திருந்தது. **(பின்னிணைப்பு 24)**

6.5.13 நன்கு பழக்கப்பட்ட பெறுகை நடைமுறையினை அதன் உச்ச அளவு மட்டத்தில் ஸ்தாபிக்கப்படும் வரை சிக்கலான நிலைமையில் பொருள் தட்டுப்பாட்டினை தவிர்த்துக்கொள்வதனை முன்னிட்டு சுகாதாரத் துறையின் அவசர பெறுகை நடைமுறைகளுக்கான வழிகாட்டியை அமுல்ப்படுத்துவதற்கான காலப்பகுதியை 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிப்பதற்கான அங்கீகாரத்தினை வேண்டி சுகாதார அமைச்சினால் மீண்டும் 2023 யூன் 19 ஆந் திகதி 23/1223/640/022 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் **(பின்னிணைப்பு 25)** சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக 2023 யூன் 28 ஆந் திகதி நிதி அமைச்சினால் மருந்துகள் மற்றும் ஏனைய மருத்துவ வழங்கல்களைக் கொள்வனவு செய்வதற்கு அவசர பெறுகைக் ஏற்பாட்டினைப் பயன்படுத்துவதன் மூலம் பெறுகைக் கிரயம் அதிகரித்தல் மாத்திரமல்லாது ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகைகளை நன்றாகப் பாவிப்பதிலிருந்து விலகிச் செல்வதற்கு வழிவகுத்துள்ளது எனவும் அவசர பெறுகை வழிகாட்டியின் செல்லுபடியாகும் காலத்தை நீடிக்கும் போது அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தேசிய பெறுகை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பெறுகை கால அட்டவணை, கேள்வி பாதுகாப்பு பிணை, செயலாற்றல் பிணை முதலிய பெறுகை நிபந்தனைகளை பொருத்தமான வகையில் மாற்றம் செய்தல் செய்வதாகவும் அவதானிக்கப்பட்டது. **(பின்னிணைப்பு 26)**

6.5.14 அது சம்பந்தமாக 2023 யூலை 04 ஆந் திகதி கூடிய அமைச்சரவை கூட்டத்தின் போது நிதி பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் அவதானிப்புக்கள் மற்றும் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பாக அக்கூட்டத்தின் போது சுகாதார அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விடயங்களை தெளிவுபடுத்துவதுடன் கவனித்துப் பார்த்து விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட முன்மொழிவுகளுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு 27)** அதன் போது அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிட்ட 05 விடயங்கள் தொடர்பாக ஆய்வு செய்து சிபாரிசுகளுடனான ஒரு அறிக்கையை அமைச்சரவைக்கு ஒரு மாத காலத்திற்குள் சமர்ப்பிப்பதற்கு துறையிலுள்ள நிபுணர்களை உள்ளடக்கிய ஒரு குழுவினை நியமிப்பதற்கு சனாதிபதியின் செயலாளருக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

6.6 அவசர கொள்வனவு நடைமுறைகளுக்காக சுகாதார அமைச்சின் தலையீடு

6.6.1 இந்திய கடன் உதவி உப குழுவின் தலைவரினால் 2022 செப்தெம்பர் 01 ஆந் திகதி இந்திய கடன் உதவியின் கீழ் இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்த்திருக்கும் அனைத்து பொருட்களையும் பெற்றுக்கொள்ளும் திகதியை திருத்தம் செய்வதற்கு 2023 சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் செயற்படுத்த வேண்டியிருத்தலும் இந்திய கடன் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளக்கூடிய புதிய கட்டளைகளை அரசாங்க மருந்தாக்கல்

கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பிக்குமாறும் மருத்துவ வழங்கல் பிரிவின் பிரதிப் பணிப்பாளருக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு 28)

6.6.2 2022 செப்தெம்பர் 22 ஆந் திகதி மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவின் மேலதிக செயலாளரினால் மருத்துவ வழங்கல் பிரிவின் பிரதிப் பணிப்பாளருக்கு அனுப்பிய கடித்தின் மூலம் (பின்னிணைப்பு 29) இந்திய கடன் திட்டத்தின் கீழ் தனியார் வழங்குனர்களிடமிருந்து ஒரு மாத்திற்கு குறைந்த இருப்பு மட்டமுள்ள மருந்துகளைப் பெறுகை செய்வதற்கு சுகாதார அமைச்சருடன் நடைபெற்ற கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க மூன்று மாதங்களுக்குப் போதியளவான இருப்புக்களை அவசர கொள்வனவுகளாக பெறுவதற்கு அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு கட்டளைகளைச் சமர்ப்பிப்பதற்கும் அரசாங்க மருந்துக் கூட்டுத்தாபனத்தின் பெறுகை நடைமுறை இரண்டு மாதங்கள் வரை தாமதமடைவதனால் அச்சந்தர்ப்பம் வரை கிடைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டளைகள் தொடர்பாக கவனம் செலுத்தாது கட்டளைகளின் அளவினை தீர்மானிப்பதற்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

6.6.3 மேலே 6.6.2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட கடிதத்திலேயே 2022 செப்தெம்பர் 23 ஆந் தகிதி மருத்துவ வழங்கல்கள் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒரு குறிப்பினை ஈடுபடுத்தி அரசாங்க மருத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு கட்டளைகளைச் சமர்ப்பிப்பதற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. மேலேயுள்ள பந்தியில் குறிப்பிட்ட மேலதிக செயலாளரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க அதற்கு 03 நாட்களின் பின்னர் அதாவது 2022 செப்தெம்பர் 26 அந் திகதி 2022/SPC/V/P/09/2022 ஆம் இலக்க மருத்துவ வழங்கல்கள் பிரதிப் பணிப்பாளரினால் ஒரு மாத்தினைவிட குறைந்த இருப்பு மட்டம் காணப்படுகின்ற மருந்து விடயங்களுக்காக இந்திய கடன் திட்டத்தின் கீழ் 03 மாத காலத்திற்காக கிடைக்க வேண்டிய இருப்பு தொடர்பாக கவனிக்காது (Pending order) அரசாங்க மருந்தாக்கல் கூட்:டுத்தாபனத்திற்கு ரூபா 4,150.11 மில்லியன் பெறுமதியான 182 மருந்து விடயங்களுக்காக கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. **(பின்னிணைப்பு 30)**

6.6.4 இலங்கையில் தொடர்ச்சியாக மருத்துவ வழங்கல் சேவையை பேணுகின்ற குறிக்கோளில் அப்போது இருந்த சுகாதார அமைச்சரினால் 2022 செப்தெம்பர் 26 ஆந் திகதி சமர்ப்பித்த 22/1523/610/018 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் **(பின்னிணைப்பு 31)** மூலம் அரசாங்கத்தின் சுகாதார நிறுவனங்களில் காணப்பட்ட தீவிர மருத்துவ வழங்கல் பற்றாக்குறையினை தவிர்த்துக் கொள்வதற்கும் தொடர்ச்சியான மருத்துவ வழங்கல் சேவையை பேணுவதற்கும் இந்திய கடன் திட்டம் ஆண்டின் இறுதியில் இரத்துச் செய்யப்படும் எனவும் அதற்கு முன்னர் அதனை பயன்படுத்த வேண்டும் எனவும் அதிலுள்ள மிகுதி நிதியை பயன்படுத்தி அவசர பெறுகைகளாக மருந்துகளை ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் அங்கீகாரத்தின் கீழ் மருத்துவ வழங்கல்களை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறையிலுள்ள இறக்குமதி முகவர்களுக்கு அனுமதியை வழங்குவதற்கும் அவர்களிடமிருந்து 03 மாதங்களுக்குப் போதுமான மருத்துவ வழங்கல் இருப்பினை கொள்வனவு செய்வதற்கும் அதற்காக அமைச்சில் விலைக்குழு பயன்படுத்துகின்ற விலையைத் தீர்மானிக்கும் நடைமுறையினைப் பயன்படுத்துவதற்கான தீர்வுகள் முன்மொழியப்பட்டன. இதற்கு

மேலதிகமாக சுகாதார அமைச்சரினால் விஞ்ஞாபனத்தின் 3.3 ஆம் பந்தியின் கீழ் ஔடதங்களை ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையில் பதிவுசெய்யாத மருந்துகளின் சச்சரவுத்தன்மையை முன்னிட்டு இறக்குமதி தாமதமடைவதனை குறைப்பதற்காக இறக்குமதி செய்வதற்கு முன்னர் முறைப்படியாக பதிவு செய்தலினை விடுவிக்கும் நடைமுறைக்கு உட்பட்டிருக்க வேண்டும் என்பது ஒரு உத்தேச தீர்வாக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(i) மருத்துவ வழங்கல் பிரிவின் அவசர தேவைப்பாட்டின் அடிப்படையில் இந்திய கடன் திட்டத்தின் (Indian Credit Line - ICL) கீழ் மிகுதி நிதியை பயன்படுத்தி அவசர பெறுகைகளாக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அங்கிகாரத்தின் கீழ் மருத்துவ வழங்கல்களை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறையிலுள்ள இறக்குமதி முகவர்களுக்கு அனுமதி வழங்குதல்

(ii) சுகாதார அமைச்சின் விலைக் குழுவினால் திர்மானிக்கப்பட்டுள்ள காணப்படுகின்ற கொள்வனவு செய்தல் பொறிமுறைக்கு உட்பட்டு இந்திய கடன் திட்டத்தினைப் பயன்படுத்தி மருத்துவ வழங்கல்களை இறக்குமதி செய்கின்ற தனியார் இறக்குமதி முகவர்களிடமிருந்து 03 மாதங்களுக்குப் போதுமான மருத்துவ வழறங்கல் இருப்பினை கொள்வனவு செய்வதற்கு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அங்கீகாரம் வழங்குதல்

இது தொடர்பாக கவனித்துப் பார்த்து அமைச்சரவை அந்த 02 முன்மொழிவுகளுக்காக 2022 ஒக்தோபர் 03 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தினை வழங்கியிருந்தது. **(பின்னிணைப்பு-32)**

6.6.5 இந்திய கடன் திட்டத்தின் கீழ் 03 மாதங்களுக்காக முக்கயமான மற்றும் அத்தியவசியமான மருந்துகளை இறக்குமதி செய்து வழங்குவது தொடர்பாக 2022 செப்தெம்பர் 22 ஆந் திகதி சுகாதார அமைச்சருக்கும் மருந்து வழங்குனர்களுக்குமிடையே நடைபெற்ற கூட்டங்களின் திர்மானத்திற்கு இணங்க மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் பிரிவின் மருத்துவ உத்தியோகத்தர் (பெறுகை) மற்றும் அப்பிரிவின் மேலதிக செயலாளரினால் மேற்கூறப்பட்ட இணைப்பு 33 இன் பிரகாரம் பெயரிடப்பட்டிருந்தது. ஒருங்கிணைந்து 2022 செப்தெம்பர் 27 ஆந் திகதி சமர்ப்பித்த உள்ளகக் குறிப்பின் மூலம் முக்கியத்துவமான மற்றும் அத்தியவசியமான மருந்துகளை இறக்குமதி செய்து வழங்குவதற்கு அழைப்பதற்காக தயாரித்த விருப்புக்களைக் கோரும் ஆவணத்திற்கான அங்கீகாரத்திற்காக சுகாதார அமைச்சின் செயலாளரிடம் வேண்டப்பட்டிருந்தது. மேலும் இந்த விருப்பினை கோரும் ஆவணத்தை இணைய தளத்தில் வெளியிடுவதற்காகவும் அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்தது. மேலும் 04 முன்னுரிமை ஆவணங்களின் கீழ் 285 மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக விருப்புக்களை கோரும் ஆவணத்தை தயாரித்து அங்கீகாரத்திற்காக சுகாதார அமைச்சின் செயலாளருக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு 33)** சுகாதார அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த ஆவணம் அத்திகதியிலேயே அரசாங்க இலத்திரனியல் பெறுகை இணையத் தளத்தில்

(PROMISE.lk) வெளியிடப்பட்டிருந்தது. அத்திகதியிலேயே விருப்புக்கள் கோரல்களை திறக்கும் 06 குழுக்களையும் 02 மேலதிக குழுக்களையும் நியமிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2022 செப்தெம்பர் 28 அந் திகதி உரிய நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன. 2022 செப்தெம்பர் 30 ஆந் திகதி சுகாதார அமைச்சு செயலாளரினால் விருப்புக்களை கோருவது தொடர்பாக மேலதிக செயலாளரின் தலைமையில் ஐந்து நபர்களை உள்ளடக்கிய மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு 34)**

அட்டவணை இலக்கம் - 06: மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவர்கள்

	பெயர்	பதவி
1.	திரு.யூ.எஸ்..கே தெனாவத்த	மேலதிக செயலாளர், (நிருவாகம்) சுகாதார அமைச்சு
2.	திரு.வைத்தியர் ஏ.ரீ.சுதர்ஸன்	பிரதிப் பணிப்பாளர், மருத்துவ வழங்கல் பிரிவு
3.	திரு. வைத்தியர் ஜயனாத் புத்பிடிய	மருத்துவ உத்தியோகத்தர், (பெறுகை) சுகாதார அமைச்சு
4.	திருமதி.டீ.எச.ஆர்.என்.பிரேமதுங்க**	உள்ளக கணக்காய்வாளர், சுகாதார அமைச்சு **
5.	திரு.பி.டி.கொலமன்	உதவிப் பணிப்பாளர், (மருந்துகள்) மருத்துவ வழங்கல் பிரிவு

** இக்குழுவிற்கு நியமிக்குகையில் திரு.பிரேமதுங்க சுகாதார அமைச்சின் உள்ளக கணக்காய்வாளர் அல்ல.

6.6.6 இந்த விருப்புக்களை கோரும் நடைமுறையில் செயற்திட்ட முகாமையாளராக சுகாதார அமைச்சு செயலாளர் பெயரிடப்பட்டிருந்ததுடன் இரண்டாவது ஒருங்கிணைப்பு உத்தியோகத்தராக இதனுடன் தொடர்புபட்ட சுகாதார அமைச்சு மேலதிக செயலாளர் மேற்கூறப்பட்ட இணைப்பு 33 இன் பிரகாரம் பெயரிடப்பட்டிருந்தது. இந்த விருப்புக்களை கோருதல் 2022 ஒக்தோபர் 03 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முடிவடையும் எனவும் குறும் பட்டியலிடுதல் Intended completion date of short listing process) 02 நாட்களுக்குள் மேற்கொள்ளப்படும் எனவும் மதிப்பீட்டு நடவடிக்கை 2022 ஒக்தோபர் 07 ஆந் திகதி பூர்த்திசெய்யப்படும் எனவும் (Intended completion date of evaluation of invitee's responses) விருப்பு கோரல் ஆவணத்தில் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே விருப்புக்களைக் கோரும் ஆவணத்தில் அதிகாரக் கட்டளை வேண்டுதல்களின் (Mandatory Requirement) கீழ் இலங்கைக்கு மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக வழங்குனருக்கு தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் இருக்க வேண்டியதுடன் விலைக் காரணியை கவனித்து அதிகாரசபையில் பதிவு செய்தல் இல்லாது ஆகக் குறைந்த விலையைச் சமர்ப்பித்த கேள்விதாரருக்கு பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் அவ்வாறான கேள்விதாரருக்கு பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் சான்றிதழ் (WOR) வழங்குவதனை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

6.6.7 அதிகார சபையில் பதிவுசெய்யாத வழங்குனர்களுக்கு (Expression of Interest - EOI) ஆவணத்துடன் பதிவுசெய்வதிலிருந்து விடுவிப்பதற்கு பின்வரும் ஆவணங்கள் தேவையானவை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

i. விண்ணப்பதாரரின் வேண்டுதல் கடிதம்

ii. பூரணப்படுத்தப்பட்ட WOR விண்ணப்ப பத்திரம்

iii. உரிய உற்பத்தியின் பகுப்பாய்வு சான்றிதழ் (COA)

iv. மருந்து உற்பத்தி சான்றிதழ் (COPP)

v. வியாபார இன்வொயிசினை உள்ளடக்கிய ஆவணம்

6.6.8 இதற்கு மத்தியில் இந்தியாவின் The Savorite pharmaceuticals (pvt) Ltd எனும் பெயருள்ள ஒரு தனியார் கம்பனியால் சுகாதார அமைச்சருக்கு 2022 ஒக்தோபர் 21 ஆந் திகதியும் **(பின்னிணைப்பு -35)** மருத்துவ வழங்கல் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு 2022 ஒக்தோபர் 28 ஆந் திகதியும் **(பின்னிணைப்பு -36)** அத்தியவசியமான மருந்துகளை வழங்குவதற்குரிய கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் உரிய கம்பனியிடம் காணப்பட்ட 38 மருந்து விடயங்களின் மேலதிக இருப்பினை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது.

6.6.9 இது சம்பந்தமாக அப்போதிருந்த சுகாதார அமைச்சரினால் 2022 ஒக்தோபர் 25 ஆந் திகதி மீண்டும் 22/1523/610/024 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பித்து **(பின்னிணைப்பு -37)** அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் மருத்துவ வழங்கல்களை இறக்குமதி செய்வதற்காக குறிப்படத்தக்க அளவு காலம் எடுக்கின்றது எனவும் மருத்துவ வழங்கல்கள் பிரிவில் தற்பொழுது காணப்படுகின்ற இருப்பு ஆபத்து மட்டத்தில் காணப்படுகின்றது எனவும் 151 மருந்துகளின் இருப்பு பூச்சிய மட்டத்தில் காணப்படுகின்றது எனவும் அடுத்துவரும் 03 வார காலத்திற்குள் சத்திரசிகிச்சை செயற்பாடுகள் முழுமையாக மேற்கொதை எதிர்பார்ப்பதற்கும் எனவும் இந்திய கடன் திட்டம் மற்றும் ஏனைய நிதி முறைமைகளை பாவித்து 45 நாட்களுக்குள் இலங்கைக்கு 03 மாத காலத்திற்குப் போதுமான மருத்துவ வழங்கல் இரப்பினை வழங்குவதற்கு இந்தியாவின் குஜராத்திலுள்ள The Savorite pharmaceuticals (pvt) Ltd நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது எனவும் காட்டப்பட்டிருந்தது. அந்த விஞ்ஞாபனத்தில் பின்வரும் விடயங்களுக்காக அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்தது.

(i) மருத்துவ வழங்கல் பிரிவின் அவசர நிலைமை மற்றும் அத்தியவசியத்தின் அடிப்படையில் இந்திய கடன் திட்டத்தில் மிகுதியாகக் காணப்படும் நிதியையும் இலங்கை அரசாங்கத்தின் நிதியையும் உள்ளடக்கி ஏடீனைய நிதிமுறைமைகளைப் பயன்படுத்தி 03 மாத காலத்திற்குப் போதுமாமன அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரித்த மருத்துவ வழங்கல்களை

இறக்குமதி செய்வதற்காக The Savorite Pharmaceuticals (pvt) Ltd மற்றும் ஏனைய தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களுக்கு அனுமதியை வழங்குவதற்கும்

(ii) இந்திய கடன் திட்டத்தினையும் ஏனைய நிதி முறைமைகளையும் பாவித்து இணங்கிக் கொண்ட கொடுப்பனவுத் திட்டத்தின் பிரகாரம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக The Savorite Pharmaceuticals நிறுவனம் மற்றும் ஏனைய தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களுடன் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கும்.

6.6.10 அதற்கிணங்க அத்திகதியிலேயே நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட இந்த முன்மொழிவுகளுக்காக கொள்கை ரீதியான அங்கீகாரத்தினை வழங்குவதற்கும் இது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் அவதானிப்பு அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான அமைச்சரவை உப குழுவிற்கு சமர்ப்பிக்குமாறும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு -38)** இதற்கு மத்தியில் மருத்துவ வழங்கல்கள் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் 2022 நவம்பரட 01 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உரிய அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு "V" குறியீட்டின் கீழ் சமர்ப்பித்த கட்டளைகள் மருத்துவ வழங்கல்கள் பிரிவின் உள்நாட்டு கட்டளைகளின் கீழ் "V" குறியீட்டின் மூலம் சமர்ப்பிப்பதற்கும் மருத்துவ வழங்கல்கள் பிரிவின் பணிப்பாளருக்கும் அனைத்து உதவிப் பணிப்பாளர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு -39)**

6.6.11 அதற்கிணங்க 2022 ஒக்தோபர் 25 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க 2022 நவம்பர் 02 ஆந் திகதி நிதி அமைச்சினால் பின்வரும் பின்வரும் அவதானிப்புக்களுக்கு உட்பட்டு உரிய முன்மொழிவுகளுக்காக மறுப்பு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு -40)**

(i) உத்தேச வழங்குனர் கோரப்படாத அடிப்படையின் (Unsolicited) கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ளதனால் மருத்துவ வழங்கல்களின் விலை மற்றும் தரம் தொடர்பாக மிளாய்வு செய்வதற்கும் சந்தை விலை உள்ளபடியான மற்றும் நியாயமான விலை மற்றும் மருந்துகளின் தரம் தொடர்பாக மீளாய்வு செய்வதற்கும் சந்தை விலை மற்றும் மருந்துகளின் தரம் தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு அமைச்சரவை இணக்கப்பாட்டு குழு (Cabinet Appointed Negotiation committee – CANC) அல்லது சுகாதாரத்துறை அவசர பெறுகைக் குழுவின் (Health Sector Emergency Procument Committee - HSEPC) மூலம் மேற்கொள்வதற்கும்

(ii) அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்காக இந்திய கடன் திட்டத்தின் கீழ் தனியார் துறையின் மருந்து வழங்குனர்களினால் மருந்துகளை இறக்குமதி செய்கின்ற நடைமுறைகளானது சுகாதார அமைச்சினால் உத்தேச வழங்குனர்களுக்காகவும் பின்பற்ற வேண்டும் எனவும்

(iii) சுகாதார அமைச்சும் உத்தேச வழங்குனரும் மருந்துகளின் விலை மற்றும் தரம் தொடர்பாக இறக்குமதி செய்வதற்கு முன்னர் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் எனவும்

(iv) இந்திய கடன் திட்டத்தினூடாக கோரப்படாத அடிப்படையின் (Unsolicited) கீழ் ஏனைய தனிப்பட்ட வழங்கனர் மருந்துகளை வழங்குவதற்கு முன்வருவார்களாயின் சுகாதார அமைச்சினால் மேற்கூறிய 03 விடயங்களும் பின்பற்றப்பட வேண்டியதுடன் இந்திய கடன் திட்டத்தின் கீழ் அல்லாது வேறு நிதிகளைப் பயன்படுத்துவதாயின் சுகாதார அமைச்சினால் உரிய பெறுகை வழிகாட்டிகளைப் பின்பற்ற வேண்டும் எனவும்

(v) பெறுகை நடைமுறைகளுக்கு எடுக்கின்ற காத்திருக்கும் காலத்தை (Lead time) குறைப்பதற்கு அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் ஒரு பொறிமுறையினை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவும்

(vi) பெறுகை நடைமுறைகளின் தேவையற்ற தாமதங்களைக் குறைப்பதற்கு சுகாதார அமைச்சினால் நிறுவனங்களுக்கிடையே முறையான கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு பொறிமுறையினை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவும்

(vii) எதிர்காலத்தில் மருத்துவ வழங்கல்களின் பற்றாக்குறையினை தவிர்த்துக் கொள்வதற்காக சுகாதார அமைச்சினால் காத்திருக்கும் காலம் மற்றும் பாதுகாப்பு இருப்பினை பேணி உரிய பெறுகைத் திட்டங்களின் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் எனவும் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

6.6.12 அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக அமைச்சரவை உபகுழு கூடி சிபாரிசுகளை சமர்ப்பித்திருந்ததுடன் இது தொடர்பாக 2022 நவம்பர் 14 ஆந் திகதி கூடிய அமைச்சரவையினால் நிதி அமைச்சரின் அவதானிப்புக்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தலுக்கு உட்பட்டு அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் முன்மொழிவுகளுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு 41)**

6.6.13 மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் இராஜாங்க அமைச்சினை 2020 ஆம் ஆண்டில் தோற்றுவிப்பதற்கு முன்னர் மருத்துவ வழங்கல் பெறுகை நடவடிக்கையானது சுகாதார அமைச்சின் பெறுகைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் அமைச்சு தோற்றுவிக்கப்பட்டதன் பின்னர் உரிய பெறுகை நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டன. எனினும் 2022 ஏப்ரல் 28 ஆந் திகதி மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் இராஜாங்க அமைச்சு

இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் மேற்கூறியவாறு சுகாதார அமைச்சினுள் ஒரு மேலதிக செயலாளரின் கீழ் ஒரு பெறுகைப் பிரிவு காணப்பட்டிருந்தும் ஒரு எழுத்து மூல ஒப்படைப்பின்றி 2022 நவம்பர் 19 அந் திகதி வரை 6 ½ மாத காலத்தின் போது இன்னுமொரு மேலதிக செயலாளரின் கீழ் மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்ததல் பிரிவு தேற்றுவிக்கப்பட்டு மருத்துவ வழங்கல்கள் சம்பந்தமான பெறுகைகளை அதனுாடாக மேற்கொள்வதற்கு முன்னாள் சுகாதார அமைச்சு செயலாளரினால் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் சுகாதார அமைச்சு செயலாளரினால் 2022 நவம்பர் 20 ஆந் திகதி ஒரு கடிதத்தின் **(பின்னிணைப்பு 42)** மூலம் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவின் மேலதிக செயலாளருக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேலதிக செயலாளரினால் 2022 நவம்பர் 21 ஆந் திகதி அவரின் கீழ் இருந்த ஒரு மருத்துவ உத்தியோகத்தர் அப்பெறுகைப் பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டு சுகாதாரத்துறை அவசர பெறுகை நடைமுறை தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனத்தையும் குறிப்புக்களையும் தயாரித்தல் மற்றும் ஏனைய பெறுகை நடைமுறைகளின் நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு செயற்பாடு ஒப்படைக்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 43)** எனினும் சச்சரவுத் தன்மையான மருத்துவ வழங்கல்களின் அதிக அளவான அவசரக் கொள்வனவுகள் அப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் அதிகாரத்தை ஒப்படைப்பதற்கு முன்னர் இருந்த மேலதிக செயலாளரினால் மேற்கூறியவாறு கோரப்படாத முன்மொழிவுகளினுாடாக (Unsolicited Proposal) கொள்வனவு செய்தலினை மேற்கொள்வதற்கும் விருப்புக் கோரலின் (Expression of Interest - EOI) அவசர கொள்வனவுகளை மேற்கொள்ளும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

6.6.14 மருத்துவ வழங்கல் பிரிவினால் கொள்வனவு செய்து அரசாங்க வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கின்ற மருத்துவ வழங்கல்களுக்குரிய பெறுகைகளின் பெறுகை முகவர்களாக செயற்படுகின்ற அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் சுகாதார அமைச்சு பெறுகைப் பிரிவினுாடாக உரிய அமைச்சு மட்டத்தில் பெறுகைகளை மேற்கொண்டிருந்தும் சச்சரவுத் தன்மையான அனைத்து அவசர கொள்வனவுகளின் பெறுகைகளானது கோரப்படாத நடைமுறைகள் (Unsolicited) மற்றும் விருப்பினைக் கோரும் நடைமுறையினைப் (EOI) பின்பற்றி மருந்து உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவினுாடாக பெறுகை மேற்கொள்ளப்பட்டது.

6.6.15 2022 திசெம்பர் 01 ஆந் திகதி சுகாதார அமைச்சின் சௌலாயர், மேலதிக செயலாளர் மற்றும் சுகாதார சேரவகள் பணிப்பாளர் நாயகத்துடன் நடாத்திய கூட்டத்தின் போது சுகாதார அமைச்சினால் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு இணங்க இந்தியாவின் Kausikh Therapeutics (P) Ltd எனும் பெயருள்ள கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட 28 மருந்து விடயங்கள் தொடர்பாக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு வழங்கல்கள் பிரதிப் பணிப்பாளரினால் திகதியில்லாத ஒரு குறிப்பு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு 44)** உரிய கம்பனியால் அரசாங்க மருந்தாக்கல்

கூட்டுத்தாபனத்திற்கு 2022 நவம்பர் 30 ஆந் திகதி 28 மருந்து விடயங்கள் தொடர்பாக விலைகூறல்/ இன்வொயிஸ் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு 45)**

6.6.16 இலங்கையில் தொடர்ச்சியாக மருத்துவ வழங்கல் சேவையைப் பேணுதல் என்ற தலைப்பில் சுகாதார அமைச்சினால் 2022 திசெம்பர் 05 ஆந் திகதி மீண்டும் அமைச்சரவைக்கு 22/1993/610/024-1 ஆம் இலக்க அமைச்சரவை குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் **(பின்னிணைப்பு 46**) அதன் மூலம் அரசாங்கத்தின் சுகாதார நிறுவனங்களில் தீவிர மருத்துவ வழங்கல் பற்றாக்குறை உருவாகுவதனை தவிர்ப்பதற்காக மருத்துவ வழங்கல் பிரிவில் அவசர நிலைமை மற்றும் தேவைப்பாட்டின் அடிப்படையில் இந்திய கடன் திட்டத்தில் மிகுதியாகக் காணப்பட்ட நிதிகளையும் ஏனைய நிதி முறைமைகளையும் பயன்படுத்தி 03 மாத காலத்திற்குப் போதுமான அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்ததாபனத்தின் அங்கீகரித்த மருத்துவ வழங்கல் இருப்பினை இறக்குமதி செய்வதற்காக Kausikh Therapeutics (P) Ltd கம்பனிக்கு அனுமதியை வழங்குவதற்கு அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்தது. மேலும் இந்திய கடன் திட்டத்திற்கு மற்றும் ஏனைய நிதி முறைமைகளைப் பயன்படுத்தி இணங்கிக் கொள்ளப்பட்ட கொடுப்பனவுத் திட்டத்திற்கு இணங்க கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக அதேபோல தரம் பற்றியும் விலை தொடர்பாகவும் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்கும் வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தது. அத்திகதியிலேயே கூடிய அமைச்சரவையினால் 2022 ஒக்தோபர் 25 ஆந் திகதிய அமைச்டசரவை விஞ:ஞாபனம் தொடர்பாக நிதி அமைச்சரினால் 2022 நவம்பர் 02 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்களுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு உட்பட்டு இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு 47)**

6.7 அவசர கொள்வனவு நடைமுறைகளுக்காக தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலையீடு

அவசர கொள்வனவு நடைமுறைகளுக்காக வசதிகளை வழங்கி தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையினால் பதிவு செய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதங்களை வழங்குவது சம்பந்தமாக எடுக்கப்பட்ட பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள் பின்வருமாறாகும்.

அட்டவணை இலக்கம் - 07: பதிவு செய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதங்களை வழங்குவது சம்பந்தமாக எடுக்கப்பட்ட பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள்

பணிப்பாளர் சபைக் கூட்ட அறிக்கைத் திகதி	பணிப்பாளர் சபைப் பத்திரத்தில் இலக்கம்	பணிப்பாளர் சபைத் தீர்மானம்
2022 செப்தெம்பர் 16 - ICL/ ADB/ WB/ AIIB கடன் திட்டத்தின்கீழ் மருந்துகளைப் பெறுகை செய்வதற்காக விசேடமாக துரிதமான ஒரு பொறிமுறையினை அங்கீகரித்தல்	84.5.2 (பின்னிணைப்பு 48)	இத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த மருந்துகள் சம்பந்தமாக ஒழங்குபடுத்தல் அதிகார சபையினால் உத்தரவாதத்தினை பெறுப்பேற்காமை மற்றும் பொறுப்பேற்ற மற்றும் அன்பளிப்புச் செய்த நிறுவனத்தினால் அப்பொறுப்பினை வகித்தல்
2022 ஒக்தோபர் 21	84.5.2 (பின்னிணைப்பு 49)	இத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த மருந்துகள் சம்பந்தமாக ஒழங்குபடுத்துதல் அதிகார சபையினால் உத்தரவாத்தினை பெறுப்பேற்காமை மற்றும் பொறுப்பேற்ற மற்றும் அன்பளிப்புச் செய்த நிறுவனத்தினால் அப்பொறுப்பினை வகித்தல்
2022 நவம்பர் 18	84.5.2 (பின்னிணைப்பு 50)	இத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த மருந்துகள் சம்பந்தமாக ஒழங்குபடுத்துதல் அதிகார சபையினால் உத்தரவாத்தினை பொறுப்பேற்காமை மற்றும் பொறுப்பேற்ற மற்றும் அன்பளிப்புச் செய்த நிறுவனத்தினால் அப்பொறுப்பினை வகித்தல் JICA மற்றும் செயலாளரினால் அங்கீகரித்த ஏனைய எந்த ஒரு நிறுவனம்

2022 நவம்பர் 29	87.4.9 (பின்னிணைப்பு 51)	உற்பத்திப் பொருட்களின் பாதுகாப்பு, விளைத்திறன் மற்றும் தரம் தொடர்பான உத்தரவாத்தினை NMRA இனால் பொறுப்பேற்காமை
2022 நவம்பர் 29	87.5 (பின்னிணைப்பு 52)	உற்பத்திப் பொருட்களின் பாதுகாப்பு, விளைத்திறன் மற்றும் தரம் தொடர்பான உத்தரவாத்தினை NMRA இனால் பொறுப்பேற்காமை

07. அவதானிப்புக்கள்

7.1 இந்திய கடன் திட்டத்தினை பயன்படுத்துதல்

7.1.1 மேலே 6.2.3 மற்றும் 6.2.4 ஆம் பந்திகளில் முறையே 2022 ஆகஸ்ட் 29 மற்றும் 2023 மே 19 ஆந் திகதிகளில் இந்திய கடன் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தும் செயல்முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளதுடன் 2023 செப்தெம்பர் அளவில் மேலே அட்டவணை 01 இல் காட்டப்படுகின்ற மருந்துகளுக்காகப் பெற்ற ஐ.கு டொலர் 360 மில்லியனில் ஐ.கு டொலர் 160 மில்லியனை திறைசேரிக்கு திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் இந்திய கடன் திட்ட உப குழு கூட்ட அறிக்கையின் பிரகாரம் 2024 சனவரி 29 ஆந் திகதியளவில் ஐ.கு டொலர் 197 மில்லியன் பெறுமதியான 2,565 இன்வொயிஸ்களுக்காக இந்திய கடன் திட்ட உபகுழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் ஐ.கு டொலர் 130 மில்லியக் பெறுமதியான 1,816 இன்வொயிஸ்களுக்கு அதாவது குழு அங்கீகரித்த பெறுமதியில் 66 சதவீதம் மாத்திரம் உரிய இறக்குமதியாளர்களால் திறைசேரி கணக்கில் ரூபா பெறுமதியில் பணம் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. மேலும் அப்பெறுமதியானது மருந்துக்காக அங்கீகரித்த மேற்கூறிய அட்டவணை இலக்கம் 01 இல் காட்டப்படுகின்ற ஐ.கு.டொலர் 360 மில்லியன் பெறுமதியில் 36 சதவீதம் மாத்திரமாக இருந்தது. அவ்வாறு இருந்தும் உள்நாட்டு நிதியும் பயன்படுத்தப்பட்டு அவசர கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.1.2 சுகாதார அமைச்சனால் 2024 பெப்ரவரி 26 ஆந் திகதி கணக்காய்விற்கச் சமர்ப்பித்த இந்த அறிக்கையின் வரைபு அறிக்கைக்குச் சமர்ப்பித்த பதிலின் பிரகாரம் இதன்போது இறக்குமதியாளர்களால் பொதுத்திறைசேரியில் இந்திய கடன் திட்டம் சம்பந்தமாக பிரிவிற்கு உரிய கோவையை ஒப்படைக்கும் போது எற்படக்கூடிய தாமதங்கள் சில சந்தர்ப்பங்களின் போது இந்திய தூதவராலயத்தினால் உரிய இன்வொயிசுக்காக அங்கீகாரத்தினை வழங்குவதற்கு மிகவும் நீண்டகாலம் எடுத்தல், இறக்குமதியாளர்களால் நாணய கடிதத்தை திறக்கும் போது இடம்பெறுகின்ற தாமதங்கள் மற்றும் சில உற்பத்தியாளர்கள் நாணயக் கடிதம் கிடைக்கும் வரை உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்காமை போன்ற

காரணங்களின் அடிப்படையில் கடன் நிதியை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது என தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

7.2 மருந்துகளுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள்

7.2.1 மருத்துவ வழங்கல் பிரிவினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மருந்து வழங்கல் பிரிவினால் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், அரசாங்க மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் என்பவைகளை உள்ளடக்கிய ஏனைய வழங்குனர்களுக்கு மருத்துவ வழங்கல்களை வழங்கவதற்காக ரூபா 79,652.98 மில்லியன் செலுத்த வேண்டியிருந்ததுடன் அவற்றில் ரூபா 54,364.84 மில்லியன் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கும் ரூபா 13,543.31 மில்லியன் அரசாங்க மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கும் செலுத்த வேண்டியவைகளாகும். எனினும் அந்த இரண்டு கூட்டுத்தாபனங்களின் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி முறையே ரூபா 38,853.76 மில்லியன் மற்றும் 2,368.68 மில்லியன்களாக இருந்ததனால் செலுத்த வேண்டிய பணம் சம்பந்தமாக ரூபா 26,685.72 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

7.2.2. மருத்துவ வழங்கல்கள் தொடர்பாக அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் மருத்துவ வழங்கல்கள் பிரிவிற்கு அனுப்பப்படுகின்ற வரவு அறிவித்தல் பத்திரத்தினை தீர்த்துவைத்தல் தகவல் பரிமாற்ற கணனி முறைமையின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அக்கணனி முறைமையினை அமுல்ப்படுத்தும் சிக்கலின் காரணமாக 2023 ஆகஸ்ட் மாத்திலிருந்து நவம்பர் மாதம் வரையான காலத்தில் கிடைத்த ரூபா 20,202.74 மில்லியன் தொகையான வரவு அறிவித்தல் பத்திரங்களின் கொடுப்பனவு நடவடிக்கை 2023 நவம்பர் 29 ஆந் திகதி வரையும் தடைப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக மருத்துவ வழங்கல்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக 2023 ஆகஸ்ட் மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரையான காலத்தில் அரசாங்க மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் உள்நாட்டு வழங்குனர்களுக்குச் செலுத்த வேண்டிய முறையே ரூபா 5,678.91 மில்லியன் மற்றும் ரூபா 2,297.39 மில்லியனுக்குரிய வவுச்சர்களைத் தயாரிக்கும் போது தகவல் பரிமாற்ற கணனி முறைமையிலுள்ள பெறுமதிகள் சரியானதாக இல்லாமை, தாமதக் கட்டணம் பதியப்படாமை, பணம் பெறுபவரின் பெயர் குறிப்பிடப்படாமை முதலிய குறைபாடுகளின் காரணமாக அக்கொடுப்பனவுகளும் கணக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 29 ஆந் திகதி வரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

7.2.3 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் மருத்துவ வழங்கல் பிரிவின் கட்டளைகளுக்காக நாணயக் கடிதம் வழங்குவதற்கு ரூபா 606.09 மில்லியனும் வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக (செலுத்த வேண்டிய வங்கிப் பட்டியல்கள்) ரூபா 14,120 மில்லியனும் மருத்துவ வழங்கல்களுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிகப் பற்று வசதிகளைத் தீர்த்துவைப்பதற்காக ரூபா 18,616.64 மில்லியனும் ஆக மொத்தமாக ரூபா 33,342.78 மில்லியன் பணத் தேவைப்பாடு காணப்பட்டது. அது 2023 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் 19 மாதங்களுக்கு முன்னர் அதாவது 2022 மே

25 ஆந் திகதியில் காணப்பட்ட பெறுமதியான ரூபா 23,123 மில்லினை விட ரூபா 10,220 மில்லியன் அதிகரிப்பாகும்.

7.2.4 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 2011 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது திறக்கப்பட்ட 11 கப்பல் முறிகள் தொடர்பாக ரூபா 145 இலங்கை வங்கியினால் வழங்கப்பட்டுள்ள நாணயக்கடித வரம்புகளால் பயன்படுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2024 பெப்ரவரி 22 ஆந் திகதி வரையும் மேற்கூறிய கப்பல் பிணைமுறிகளை விடுவித்துக் கொள்வதற்கு முடியாதிருந்தமையின் மூலம் இப்பெறுமதிகளில் நாணயக் கடிதங்களைத் திறப்பதற்கு அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு முடியாது காணப்பட்டது.

7.3 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட அவசர கொள்வனவு நடைமுறை

இலங்கையில் தொடர்ச்சியாக மருத்துவ வழங்கல் சேவையை பேணுவதற்கு சுகாதார அமைச்சின் தலையீடு, நிதி அமைச்சின் தலையீடு மற்றும் தேசிய மருந்துகளை ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் தலையீடு தொடர்பாக அவதானிக்கப்பட்டு அதன் போது சுகாதார அமைச்சு, மருந்துகளை உற்பத்தி செய்தல், வழங்குதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவு, மருத்துவ வழங்கல் பிரிவு, அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், தேசிய மருந்துகளை ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபை என்பவை செயற்பட்ட முறைமைகளும் அதன் போது அவசர கொள்வனவுகள் மேற்கொண்ட முறைமைகள் தொடர்பாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை வழிகாட்டிகளை மீறியதன் காரணமாக உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளும் பாரிய அளவில் மீறப்படுதல், அமைச்சரவைத் தீர்மானத்திற்குப் புறம்பாக செயற்படுதல் மற்றும் பலவீனமான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் மூலம் மோசடிகள் இடம்பெறுவதற்கு சுற்றாடலினை தயார்படுத்துவது சம்பந்தமாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

7.3.1 மேலே 6.5.8 ஆம் பந்தியில் காட்டப்படுகின்ற நிதி அமைச்சு செயலாளரின் 2022 யூன் 16 ஆந் திகதி வழங்கப்பட்ட PFD/PMD/Health/HSEPP/01/2022 ஆம் இலக்க சுற்றறிக்கை கடித்தின் பிரகாரம் சுகாதாரத்துறை அவசர பெறுகை நடைமுறையின் கீழ் மேற்கொண்ட பெறுகைகளில் கொள்வனவு செய்த விடயங்கள் தொடர்பாக கொள்வனவு செய்யும் தேவைப்பாட்டினை நியாயப்படுத்தி மாதாந்த அறிக்கை சுகாதார அமைச்சினால் அமைச்சரவையின் மேல் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 யூன் மாதத்திலிருந்து 2023 நவம்பர் மாதம் வரை இடம்பெற்ற ரூபா 21,999 பில்லியன் மற்றும் ஐக்கிய குடியரசு டொலர் 20 மில்லியன் பெறுமதியான சுகாதாரத் துறையின் 663 அவசர பெறுகைகள் சம்பந்தமாக அவ்வாறு மாதாந்தம் எடுக்கவேண்டிய அமைச்சரவை மேல் அங்கீகாரம் 2024 மார்ச் 31 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

7.3.2 பெறுகை நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வாளரினால் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினூடாக அமுல்ப்படுத்தப்பட்ட அவசர பெறுகைகளை அவதானிப்புச் செய்வதற்கு பங்குபற்றியிருந்தும் மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவின் மூலம் மேற்கொண்ட ஏனைய அவசர பெறுகைகள் அவதானிக்கப்பட்டன என்பது

கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. அவ்வாறே அவதானிப்பாளராக பங்குபற்றிய பெறுகைகளில் வினைத்திறனான நடைமுறை மேற்கொள்ளப்பட்டது. என உறுதிப்படுத்துவதற்கு எந்த ஆவணமும் உள்ளகக் கணக்காய்வினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அதற்கிணங்க பெறுகை நடைமுறையின் இறுதியில் நியாயமான மற்றும் வினைத்திறனான ஒரு நடைமுறை சான்றுபடுத்தப்படவில்லை. எவ்வாறாயினும் வழங்கப்பட்ட தொலைபேசி அழைப்புக்கு இணங்க பெறுகைக்குழுவில் பங்குபற்றப்பட்டது எனவும் பெறுகைக்குழுவின் அவதானிப்பாளராக பங்குபற்ற வேண்டும் எனவும், அவ்வாறு பங்குபற்றியதன் பின்னர் அது சம்பந்தமாக ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என எழுத்துமூலம் தெரியப்படுத்தப்படவில்லை எனவும் அவ்வாறான ஒரு அறிக்கை வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து வழங்கிய அவதானிப்புக்களை உள்ளடக்கிய அறிக்கை வழங்கப்படவில்லை எனவும் காட்டி 2024 ஏப்ரல் 01 ஆந் திகதி சுகாதார அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரினால் கணக்காய்விற்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டது.

7.3.3 மேலே பந்தி இலக்கம் 6.6.2 இல் காட்டப்படுகின்றவாறு 2022 செப்தெம்பர் 22 ஆந் திகதி மருந்து உற்பத்தி வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவின் மேலதிக செயலாளரினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் பந்தி இலக்கம் 6.6.3 இல் காட்டப்பட்டவாறு மருத்துவ வழங்கல் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் ஆளணியினருக்கு ஒரு குறிப்பினை ஈடுபடுத்தி 2022 செப்தெம்பர் 23 ஆந் திகதி அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு கட்டளைகள் சமர்ப்பிப்பதற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அதற்கு 03 நாட்களின் பின்னர் அதாவது 2022 செப்தெம்பர் 26 ஆந் திகதி மருத்துவ வழங்கல் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 4,150.11 மில்லியன் பெறுமதியான 182 மருந்து விடயங்களுக்காக இந்திய கடன் திட்டத்தின் கீழ் 03 மாத காலத்திற்காக கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன எனவும் அவதானிக்கப்பட்டது. எனினும் மேலே 6.6.4 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் இது சம்பந்தமாகச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைப்பதற்கு 07 நாட்களுக்கு முன்னர் அவசர பெறுகைகளுக்காக கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதன் போது கிடைக்க வேண்டிய இருப்பு (pending orders) தொடர்பாக கவனத்தில் கொள்ளாது கட்டளைகளின் அளவினைத் தெரியப்படுத்துவதற்குத் தீர்மானித்ததனால் அண்மித்த திகதிகளில் இருப்பினைப் பெற்றுக் கொள்வதன் மூலமும் அதிக விலைக்கு அவசர கொள்வனவுகளை மேற்கொள்வதன் மூலமும் அரசாங்கத்திற்கு ஏற்படும் நட்டம் சம்பந்தமான ஆபத்துக்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாதுள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது.

7.3.4 182 மருந்து விடயங்களுக்காக அரசாங்க மருந்துாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 4,150.11 மில்லியன் பெறுமதியான கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டு மேலே பந்தி இலக்கம் 6.6.4 இல் குறிப்பிட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டு ஒரு நாளுக்கப் பின்னர் அதாவது 2022 செப்தெம்பர் 27 ஆந் திகதி மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவின் மேலதிக செயலாரினால் சுகாதார அமைச்சு செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட 6.6.5 ஆம் பந்தியில் காட்டப்படுகின்ற உள்ளக குறிப்புக்களின் மூலம்

"2022 செப்தெம்பர் 22 ஆந் திகதி இந்திய கடன் திட்டத்தினைப் பயன்படுத்தி 03 மாதங்களுக்காக முக்கயத்துவமான மற்றும் அத்தியவசியாமான மருந்துகளை இறக்குமதி செய்து வழங்குவது தொடர்பாக சுகாதார அமைச்சருக்கும் மருந்து வழங்குனர்களுக்கும் இடையே நடைபெற்ற கூட்டங்களின் தீர்மானத்திற்கு இணங்க" எனக் குறிப்பிட்டு 2022 ஒக்தோபர் 03 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரம் கிடைப்பதற்கு 06 நாட்களுக்கு முன்னர் இந்திய கடன் திட்டத்தினூடாக முக்கியத்துவமான மற்றும் அத்தியவசியமான மருந்துகளை இறக்குமதி செய்து வழங்குவது தொடர்பாக 285 மருந்து விடயங்களை கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்துடன் விருப்புக்களைக் கோரும் ஆவணம் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அவ்வாறு விருப்பினைக் கோரும் விடயங்களுக்குள் Everolimus, Gentamicin Sulphate inj., Cefuroxime inj. முதலிய அத்தியவசிய மருந்துப் பட்டிலில் உள்ளடக்கப்படாத மருந்து விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

7.3.5 மேலும் அத்திகதியிலேயே விருப்பினைக் கோருதல் இணைய தளத்தில் வெளியிடப்பட்டிருந்தது எனவும் மேலதிக செயலாளரினால் கேள்வி திறக்கும் குழுவும் சுகாதார அமைச்சு செயலாளரினால் மதிப்பீட்டுக் குழுவினையும் நியமித்தல் மேலே 6.6.4 ஆம் பந்தியில் காட்டப்படுகின்ற 2022 ஒக்தோபர் 03 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த அமைச்சரவை தீர்மானம் தொடர்பாக 2022 ஒக்தோபர் 03 ஆந் திகதி சுகாதார அமைச்சிற்கு அறிவிபப்தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இப்பந்தியில் மேலுள்ள சுகாதார அமைச்சருக்கும் மருந்து வழங்குனர்களுக்குமிடையே ஒரு கூட்டம் நடைபெற்றது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் அவ்வாறான ஒரு கூட்டத்தினை நடாத்துவது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

7.3.6 மேலே 6.6.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள 285 மருந்து விடயங்களை மதிப்பீடு செய்வதற்காக சுகாதார அமைச்சு செயலாளரினால் ஐந்து நபர்களை உள்ளடக்கிய மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் பெறுகைப் பிரிவின் தலைவராக செயற்பட்ட மருத்துவரும் அந்த மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவராக நியமக்கப்பட்டிருந்தார் எனவும் சில புற்று நோய் போன்ற விசேட மருந்துகளை மதிப்பீடு செய்வதற்காக தொழில்நுட்ப அறிவினைக் கொண்ட எந்த நிபுணத்துவ மருத்துவர் அல்லது அது சம்பந்தமான தொழில்நுட்ப அறிவினைக் கொண்ட நிபுணர் நியமிக்கப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. அவசர கொள்வனவுகள் பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படாதிருந்தும் அவசர கொள்வனவுக் குழுவினால் தொழில்நுட்ப நிபணர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

7.3.7 2022 ஒக்தோபர் 06, 07, 10, 11, 12 மற்றும் 13 ஆந் தகிதிகளின் போது கூடிய இந்த EOI மதிப்பீட்டுக் குழுவினால் உரிய மதிப்பீடுகளை மேற்கொள்ளும் போது மருந்தின் விலை மற்றும் இருப்புக்களை வழங்கும் கால அட்டவணை தொடர்பாக கவனித்துப் பாத்திருந்தும்

மருந்துகளின் தரம் தொடர்பாக கவனித்தப் பார்க்கவில்லை எனவும் 2023 நவம்பர் 13 ஆந் திகதிய மதிப்பீட்டுக்குழு அங்கத்தவர்களின் வெளிப்படுத்தல்களுக்கு இணங்க அவதானிக்கப்பட்டது. மேலும் விருப்புக்களைக் கோரும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக மதிப்பீடு செய்யமுடியாது மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவின் மேலதிக செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் அதன் போது மருந்து இறக்குமதி கால அட்டவணை (Delivery Schedule) மற்றும் உண்மையான குறைந்த விலைக்கு இணங்க பொருத்தமான விருப்பம் தெரிவிப்பவர்களை துரிதமாக தெரிவுசெய்து தருமாறு உரிய மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார் என 2024 மே 02 ஆந் திகதி EOI மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் கணக்காய்விற்குத் தெரிவித்திருந்தார். அதற்கிணங்க விருப்பினைக் கோரும் போது மதிப்பீட்டு வரையறைகளைக் குறிப்பிட்டு தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையில் பதிவுசெய்த சான்றிதழ் இல்லாத வழங்குனர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கனள் இல்லாமை சம்பந்தமாக பெறுகையின் பிரதான மீறல் (major deviation) தொடர்பாக குழு கவனம் செலுத்தியிருக்கவில்லை. அதற்கிணங்க மதிப்பீட்டுக் குழு சுயாதீனமாக தமது மதிப்பீட்டு நடைமுறையினை மேற்கொண்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மேலே 6.6.7 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு விருப்பினைக் கோரும் போது தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுசெய்த சான்றிதழ் மற்றும் வியாபாரத்தைப் பதிவுசெய்தல், தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையில் பதிவுசெய்யாத வழங்குனர்களினால் அது தொடர்பான விண்ணப்பபத்திரங்களை உள்ளடக்கிய 08 ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தெரியப்படுத்தியிருந்தும் விருப்புக் கோரல்களை திறக்கும் குழுவினாலும் அது தொடர்பாக பரீட்சித்துப் பார்த்திருக்கவில்லை.

7.3.8 மேலே பந்தி 7.7 இல் காண்பிக்கின்ற பிரகாரம் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் மருந்துகளை பதிவுசெய்யும் நடைமுறையில் காணப்பட்ட பின்னடைவு மற்றும் அதிகார சபையினால் மருந்துகளைப் பதிவுசெய்யும் போது அரசாங்கத்தின் மருந்து தேவைப்பாடு பற்றி கவனம் செலுத்தாமை என்பவைகளை உள்ளடக்கிய விடயங்களின் காரணமாக நாட்டில் மருந்து வழங்கல் தேவைப்பாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில் மருந்துகளுக்காக போதியளவிலான செல்லுபடியான பதிவுசெய்த வழங்குனர்கள் இருக்கவில்லை. விருப்புக்களை கோரும் நடைமுறையின் போது பதிவுசெய்வதிலிருந்து விடுவிப்பதின் கீழ் பெறுகைக்காக முன்வருவதற்கு சந்தர்ப்பம் வழங்கியிருத்தல் மற்றும் பதிவுசெய்வதிலிருந்து விடுவிப்பதன் கீழ் பெறுகைக்காக முன்வருதல் குறைவதற்கு இணங்க பொருத்தமான மட்டுப்படுத்தல் நிபந்தனைகளை கேள்வி ஆவணங்களில் உள்ளடக்காதிருந்ததனால் பல வழங்குனர்கள் செல்லுபடியான பதிவுசெய்தல் சான்றிதழ்கள் இல்லாது கேள்விக்கு முன்வந்திருந்தனர். இவ்வாறு நிபந்தனைகளை தள்ளுபடி செய்வதனூடாக தரம்வாய்ந்த மருந்துகள் வழங்கப்படுகின்றது என்பது உறுதிப்படுத்துகின்ற நடைமுறைக்கு அப்பாற்பட்டிருந்தது.

7.3.9 2007 மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பான பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் மருந்துகளின் பெறுகையின் போது தரமான மருந்துகளா என்பதனை சான்றுபடுத்துகின்ற தேசிய ஔடதங்கள் அதிகார சபையில் பதிவுசெய்யும் சான்றிதழில் கண்டிப்பான தேவைப்பாட்டினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாதிருத்தலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படாமையும், தொழில்நுட்ப நிபுணர்களின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படாமையும் நியமிக்கப்பட்ட மதிப்பீட்டுக் குழுவினால் மருந்துகளின் தரங்கள் தொடர்பாக ஆவணங்களைப் பரீட்சிக்காமையும் ஆகிய விடயங்களின் காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளின் தரம் தொடர்பாக கூடுதலான ஆபத்து காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

7.3.10 அவசர கொள்வனவு நடைமுறை சம்பந்தமாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் தலையீட்டின் கீழ் இந்த அறிக்கையின் பந்தி இலக்கம் 6.7 கீழுள்ள அவதானிப்புக்கள் 7.5 மற்றும் 7.11.7 என்பவற்றின் கீழ் அவதானிக்கப்பட்ட விடயங்களின் பிரகாரம் ஔடதங்கள் அதிகார சபையினால் பதிவு செய்வதிலிருந்து விடுவிக்கும் சான்றிதழ் வழங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட காணப்படும் நடைமுறைக்குப் புறம்பாக நடவடிக்கை எடுத்து அச்சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக மற்றும் அதிகார சபை பதிவு செய்வதிலிருந்து விடுவிக்கும் சான்றிதழ் வழங்கியிருந்தும் அந்த மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் தெளிவான தன்மை என்பன பற்றிய உத்தரவாத்திற்கு அப்பாற்பட்டிருத்தலும், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 3(அ) உபபிரிவில் காட்டப்பட்டுள்ள குறிக்கோள்களுக்குப் புறம்பாக மருந்துகளின் தரம் பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் பற்றிய பொறுப்பினை ஏனைய தரப்பினர்களுக்கு ஒப்படைத்தலும் **(பின்னிணைப்பு 53)** அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட தரப்பினர்கள் அது சம்பந்தப்பட்ட பொறுப்பினை மறுத்தமையும் **(பின்னிணைப்பு 54)** காரணமாக உயர்ந்த நியம தரத்தைக் கொண்ட மருந்துகளை நோயாளிகளுக்கு வழங்கும் அடிப்படைக் குறிக்கோள் நிறைவேற்றப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.3.11 அதற்கிணங்க வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்களுடன் பெறுகை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பணத்திற்கு உச்ச அளவு பெறுமதி வழங்கப்படுகின்றது என்பதற்கு உரிய பெறுகைக் குழு மற்றும் பெறுகை மேற்கொள்ளும் நிறுவனம் சான்றுபடுத்தியுள்ளது எனவும் பெறுகைக் குழுவும் பெறுகை மேற்கொள்ளும் நிறுவனமும் மதிப்பீட்டு நடைமுறையின் போது போதியளவு கவனத்துடன் செயற்பட்டது எனவும் கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

7.3.12 அவ்வாறே EOI மதிப்பீட்டுக் குழுவினால் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையில் பதிவுசெய்யாத அனைத்து மறுதலிப்புச் செய்யும் வழங்குனர்களும் WOR சான்றிதழ் பெற்றுக்கொள்வதோடு கேள்வியினை வழங்குவதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது எனவும் (Recommended to award with WOR), **(பின்னிணைப்பு -55)** உரிய மதிப்பீட்டு அறிக்கையை அவதானித்து 2022 ஒக்தோபர் 13 மற்றும் 18 ஆகிய

திகதிகளின் போது கூடியிருந்த சுகாதாரத் துறை அவசர பெறுகைக் குழுவினால் உரிய மதிப்பீட்டு அறிக்கையினை அவதானித்து ஐக்கிய குடியரசு டொலர் 19.8 மில்லியன் பெறுமதியான 170 மருந்து விடயங்களுக்காக கனிசமான அளவில் மறுதலிப்புச் செய்த கேள்விதாரர்களுக்கு வழங்குவதற்கும் தீமானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கோவிக் குழுவினால் பதிலளிதத் கேள்விதாரராக தெரிவு செய்து இந்தக் கேள்வி கையளிக்கப்பட்ட போதும் பெறுகைக் குழுவினால் மருந்துகளின் தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7.3.13 திறைசேறி செயலாளர் அங்கத்துவம் வகிக்கின்ற மேலே 6.5.10 ஆம் பந்தியில் காட்டப்படுகின்ற இந்த சுகாதாரத்துறை அவசர பெறுகைக் குழுவின் மூலம் 2022 ஒக்தோபர் 13 மற்றும் 18 ஆந் திகதிகளில் கூடி இந்த மருந்து விடயங்களை இந்திய கடன் திட்டம் அல்லது நேரடி கொள்வனவு செய்தலின் கீழ் கொள்வனவு செய்வதற்கும் திர்மானிக்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு -56)** அதற்கிணங்க இந்திய கடன் திட்டத்தில் மிகுதியாக உள்ள நிதியைப் பயன்படுத்தி அவசர பெறுகையாக மருத்துவ வழங்கல்களை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறையின் இறக்குமதி முகவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்கி 2022 ஒக்தோபர் 03 ஆந் திகதி வழங்கிய அமைச்சரவை தீர்மானத்தினைப் புறக்கணித்து சுகாதார துறை அவசர பெறுகைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க 2023 திசெம்பர் 31 ஆந் திகதி விருப்புக் கோரல் நடைமுறையின் கீழ் கொள்வனவு செய்த மருந்துகளுக்காக உள்நாட்டு நிதியின் மூலம் ரூபா 2,909.45 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளதுடன் ரூபா 1,267.60 மில்லியன் செலுத்த வேண்டியுள்ளது என அவதானிக்கப்பட்டது.

7.3.14 இந்திய கடன் திட்டத்தின் கீழ் விருப்புக் கோரல் முறைமையினூடாக அமுல்ப்படுத்தப்பட்ட பெறுகைகளுக்காக இந்திய உற்பத்தியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் சுகாதார அமைச்சு செயலாளரினால் இக்கட்டளைகளை இந்திய கடன் திட்டத்தின் கீழ் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட வேண்டுமெனத் தெரிவித்து **(பின்னிணைப்பு -57)** 21 வழங்குனர்களுக்கு 2022 ஒக்தோபர் 20 ஆந் திகதியிலிருந்து கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் இது தொடர்பான கொள்வனவு கட்டளைகள் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென சுகாதார அமைச்சு செயலாளரினால் மருந்துவ வழங்கல்கள் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு விலாசமிடப்பட்ட மருந்து உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவின் கோவை இலக்கம் PSRP/08/EOI/General/2022 இன் மூலம் 2022 ஒக்தோபர் 28 ஆந் திகதிய கடித்தினூடாக **(பின்னிணைப்பு -58)** அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க

- இந்திய கடன் திட்டம் அல்லது இருதரப்பினர்களுக்கும் இலகுவான வேறு எந்தவொரு நடைமுறையின் மூலம் ஒவ்வொரு விடயத்தினையும் கொள்வனவு செய்வதற்கும்

- எந்தவொரு வழங்குனரும் பதிவுசெய்தல் சான்றிதழினை சமரப்பிக்கவில்லையாயின் உரிய உத்தவாதம் தொடர்பாக தெளிவான வரம்பினை உள்ளடக்குவதற்கும்.
- செயலாற்றல் பிணை, தாமத்திற்கான தண்டப் பணத்தை விடுவிப்பது தொடர்பாக உரிய நிபந்தனையை உள்ளடக்குவதற்கும்.
- வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது 45 நாட்களுக்குள் வழங்குனர்களுக்கு கொடுப்பனவினை மேற்கொள்ள வேண்டும் எனவும்
- கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது அமைச்சு தரப்பினர்களால் இடம்பெறும் தாமத்திற்காக மாதாந்தம் 03 சதவீதம் படியாக ஒரு மாதாந்த கட்டணத்தை வழங்குனர்களுக்குச் செலுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் காட்டப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மருந்து உற்பத்தி வழங்கல் மற்றும் ஒழங்குபடுத்தல் பிரிவின் கீழ் இந்திய கடன் உதவி உபகுழு தோற்றுவிக்கப்பட்டிருந்த போதிலும் மேலே குறிப்பிட்ட இந்திய கடன் திட்டத்தின் கீழ் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட வேண்டியதான ஐ.கு.டொலர் 19.1 மில்லியன் தொகையான 158 கட்டளைகள் இந்திய கடன் உதவி உபகுழுவின் சிபாரிசுக்காகச் சமர்ப்பிப்பதற்கு அப்பிரிவின் கீழேயே தோற்றுவிக்கப்பட்ட பெறுகை அலகினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததனால் இந்திய கடன் திட்டத்தின் கீழ் இக்கட்டளைகளை அமுல்ப்படுத்துதலானது தவிர்ப்பதற்கு இடமளிப்பதாக அவதானிக்கப்பட்டது.

(ii) இப்பெறுகைகளை இந்திய கடன் திட்டத்தின் மிகுதி நிதியை மாத்திரம் பயன்படுத்தி மேற்கொள்வதற்கு கேள்விகள் கோரப்பட்டிருந்தும் அந்த நிபந்தனைகளுக்கு முரணாக செயலாளரினால் இந்திய கடன் திட்டம் அல்லது இருதரப்பிரனர்களுக்கும் இலகுவான எந்தவொரு நடைமுறையின் மூலமும் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) அதன் மூலம் இந்திய வழங்கனர்களைத் தெரிவு செய்து உள்நாட்டு நிதியின் மூலம் கொடுப்பனவு செய்வதற்கும், இந்தியர்கள் அல்லாத வழங்குனர்களுக்கு/ உற்பத்தியாளர்களுக்கு இப்பெறுகைகளுக்காக நியாயமாக முன்வரும் வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையும், அதன் மூலம் அதிக விலைக்கு மருந்துகளை கொள்வனவு செய்வதற்கும், ஏனைய தரமான மருந்துகளை போட்டி விலைக்குப் பெற்றுக்கொள்வதற்கு காணப்பட்ட வாய்ப்பினை இழப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iv) கொடுப்பனவுளை மேற்கொள்ளும் போது இடம்பெற்ற தாமதங்களுக்காக மாதாந்தம் 03 சதவீத படியாக மாதாந்த கட்டணத்தை வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு போன்ற நிபந்தனைகளை உள்ளடக்குவதனூடாக

தீவிர பொருளாதார சிக்கலிற்கு முகங்கொடுத்துள்ள அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படும் வகையில் சுகாதார அமைச்சு செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.

(v) EOI இன் கீழ் கொள்வனவு கட்டளைகளை வழங்கும் போது அப்போது பணிப்பாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட மருத்துவ வழங்கல் பிரிவின் பிரதிப் பணிப்பாளரினால் முறையாக நியமிக்கப்படாது மருத்துவ வழங்கல் பணிப்பாளராக உத்தியோகபூர்வ முத்திரை ஈடுபடுத்தப்பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது.

7.3.15 2022 ஒக்தோபர் 25 ஆந் திகதி சசமர்ப்பிக்கப்பட்ட மேலே 6.6.9 ஆம் பந்தியில் குறிப்பிட்ட இந்திய கடன் திட்டத்தில் மிகுதியாகக் காணப்பட்ட நிதி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதியை உள்ளடக்கி ஏனைய நிதியை பயன்படுத்தி மருத்துவ வழங்கல்களை இறக்குமதி செய்வதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அங்கீகாரம் கிடைப்பதற்கு முன்னர் அமெரிக்க டொலர் மூலம் இக்கொடுப்பனவு கட்டளைகளை வழங்குவதற்கும் இந்திய கடன் திட்டம் அல்லது ஏனைய மூலங்களின் மூலம் கொடுப்பனவு செய்வதற்கும் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் நிதி ஏற்பாட்டினை மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மாற்றம் செய்வதற்கு உட்பட்டு கொள்வனவு கட்டளைகளை வழங்குவதற்கும், கொள்வனவு செய்யும் உடன்படிக்கை மற்றும் செயலாற்றல் பிணையைப் பெற்றுக்கொள்ளாது கொள்வனவு கட்டளைகளை வழங்குவதற்கு மருத்துவ வழங்கல்கள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவின் மேலதிக செயலாளரினால் 2022 நவம்பர் 02 ஆந் திகதி சிபாரிசு செய்யப்பட்டிருந்ததுடன் சுகாதார அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது **(பின்னிணைப்பு -59)**

7.3.16 இதற்கு மத்தியில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2022 யூலை மாதத்திலிருந்து 2023 செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதியின் போது சுகாதாரத்துறை அவசர பெறுகை குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அரசாங்க மருந்தாக்கல் கூடுத்தாபனத்தினூடாக ரூபா 12,200 மில்லியன் பெறுமதியான 280 மருந்து விடயங்களுக்காக அவசர கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அந்த அனைத்து கட்டனைளகளும் மேலே 7.3.14 ஆம் பந்தியில் குறிப்பிட்ட 21 கம்பனிகளில் 18 கம்பனிகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 280 கட்டளைகளில் 103 கட்டளைகளுக்காக பதிவுசெய்தலினை விடுவிப்பதன் (WOR) கீழ் பெறுகை வழங்கப்பட்டிருந்தது.

7.3.17 மேலே பந்தி இலக்கம் 6.6.8, 6.6.9 மற்றும் 6.6.10 இன் பிரகாரம் 2022 ஒக்தோபர் 25 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை தீர்மானத்திற்கு 2022 நவம்பர் 02 ஆந் திகதி நிதி அமைச்சரினால் வழங்கிய அவதானிப்புக்களுக்கு உட்பட்டு உரிய கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு 2022 நவம்பர் 14 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் நிதி அமைச்சரின் அவதானிப்புக்களுக்கு இணங்க ICL இல்லாது ஏனைய நிதியை

பயன்படுத்துவதாகயிருந்தால் உரிய பெறுகை வழிகாட்டியினை சுகாதார அமைச்சு பின்பற்ற வேண்டுமென காட்டப்பட்டிருந்தும் விருப்புக் கோரிக்கையின் நடைமுறையானது அதன் மூலம் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

7.3.18 அவசர கொள்வனவு கட்டளைகளின் கீழ் வழங்கிய 158 கட்டளைகளில் முழுமையாக இருப்பு வழங்கப்படாத 140 இருப்பு விடயங்களுக்காக கட்டளைகள் மற்றும் ஒரு பகுதி வழங்கப்படாத 12 கட்டளைகள் மருத்துவ வழங்கல்கள் பணிப்பாளரின் DDG/MSD/EM.PU/Gen/2022 ஆம் இலக்க 2023 நவம்பர் 06 ஆந் திகதிய கடித்தின் மூலம் இரத்துச் செய்யப்பட்டது எனவும் அவதானிக்கப்பட்டது. **(பின்னிணைப்பு 60)** அதற்கிணங்க மிகவும் அவசர கொள்வனவுகளாக குறிப்பிட்டு பல அவசர பெறுகை வழிகாட்டி சந்தர்ப்பங்களின் போது நீடிக்கப்படும், மருந்துகள் சம்பந்தமாக பதிவுசெய்யப்படாத கம்பனிகளுக்கு 7.3.14 ஆம் பந்தியில் குறிப்பிட்ட தள்ளுபடி செய்தலும் வழங்குவதற்கு முயற்சி எடுத்து இந்த நடைமுறை மேற்கொள்ளப்பட்டிருந்தும் இறுதியில் அவ்வாறான 140 கட்டளைகளை இரத்துச் செய்வதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த நடைமுறையானது வினைத்திறனற்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.4 கோரப்படாத முன்மொழிவுகளினூடாத (Unsolicited Proposals) சுகாதார அமைச்சருக்கு கிடைத்திருந்த வேண்டுதல்கள் சம்பந்தமாக சுகாதார அமைச்சின் தலையீடும் தொடர்புபட்ட உள்ளக நடைமுறையும்

7.4.1 2022 ஒக்தோபர் 17 ஆந் திகதி அப்போதிருந்த சுகாதார அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போது வழங்கிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் எனக் குறிப்பிட்டு மேலே 6.6.8 ஆம் பந்தியில் குறிப்பிட்ட இந்தியக் கம்பனியால் சமர்ப்பித்த மருந்து விடயங்களின் பட்டியல் சம்பந்தமாக தயாரிக்கப்பட்ட விஞ்ஞாபனமானது மருத்துவ வழங்கல் பிரிவில் பதில் கடமை பணிப்பாளராகச் செயற்பட்ட பிரதிப் பணிப்பாளரினால் 2022 ஒக்தோபர் 19 ஆந் திகதி சுகாதார அமைச்சு செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் **(பின்னிணைப்பு - 61)** கோரப்படாத முன்மொழிவு பெறுகை நடைமுறையின் (Unsolicited Procument Procedure) கீழ் அதனை அமுல்ப்படுத்துவதற்கு ஒக்தோபர் 20 ஆந் திகதி சுகாதார அமைச்சு செயலாளரினால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 62)** அத்திகதி இக்கம்பனிக்கும் சுகாதார அமைச்சுக்குமிடையே ஒரு கூட்டம் நடைபெற்றது எனவும் கம்பனியின் மேலதிக இருப்பு காணப்படுகின்றது எனவும் 38 மருந்து விடயங்களை 45 நாட்களுக்கும் 65 நாட்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் வழங்கலாம் எனவும் மேலே 6.6.8 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறு கம்பனியால் சுகாதார அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்ட 2022 ஒக்தொபர் 21 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க உரிய கம்பனியின் எழுத்துமூல அறிவிப்பிற்கு 04 நாட்களுக்கு முன்னர் சுகாதார அமைச்சரினால் உரிய கட்டளையை வழங்குவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.

7.4.2 2022 ஒக்தோபர் 21 ஆந் திகதி கம்பனியால் சுகாதார அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தின் திகதியிலிருந்து 04 நாட்களின் பின்னர் மேலே பந்தி இலக்கம் 6.6.7 மற்றும் 6.6.8 இன் குறிப்பிட்டவாறு சுகாதார அமைச்சினால் 2022 ஒக்தோபர் 25 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் மருத்துவ வழங்கல் பிரிவிற்குள் தற்பொழுது காணப்படுகின்ற இருப்புக்களானது ஆபத்து மட்டத்தில் காணப்படுகின்றது எனவும் 151 மருந்து களின் இருப்பு பூச்சிய மட்டத்தில் காணப்படுகின்றது எனவும் அடுத்துவரும் 03 வார காலத்தில் சத்திரசிகிச்சை நிலையங்களின் செயற்பாடு முழுமையாக செயற்பாடற்றுவிடும் எனவும் தெரிவித்து இந்திய கடன் திட்டம் மற்றும் ஏனைய நிதி முறைமைகளைப் பயன்படுத்தி 45 நாட்களுக்குள் இலங்கைக்கு 03 மாத காலத்திற்குப் போதுமான மருத்துவ வழங்கல் இருப்புக்களை வழங்குவதற்காக இந்தியாவின் குஜராத்திலுள்ள The Savorite pharmaceuticals (pvt) Ltd நிறுவனம் இணக்கப்பாட்டினை வெளியிட்டிருந்தது எனவும் அதற்காக அனுமதியை வழங்குமாறு அமைச்சரவையிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பின்னிணைப்பு I இன் மூலம் 03 மாதங்களுக்கு குறைந்த இருப்பு மட்டம் காணப்படுகின்ற 02 மருந்துப்பட்டியல்கள் (முக்கியமானது மற்றும் அத்தியவசியமானது) அதாவது 325 மருந்துகளின் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அப்பட்டியல் MSMIS முறைமையின் மூலம் 2022 ஒக்தோபர் 24 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. எனினும் இந்த மருந்து பட்டியல்களின் இருப்பு மட்டத்தை தீர்மானிக்கும் போது அத்திகதியில் கிடைக்க வேண்டிய இருப்பு தொடர்பாக அவ்வாறே (Pending orders) கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

7.4.3 இந்த குறிப்புக்கள் தொடர்பாக கவனத்தில் கொண்டு அந்த முன்மொழிவிற்காக கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்குவதற்கும் அந்த தீர்மானத்திற்கு வருவதற்கு முன் அந்த முன்மொழிவிற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சரின் அவதானிப்பினை கவனத்தில் கொள்வதற்கும் 2022 ஒக்டோபர் 26 ஆந் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2022 நவம்பர் 02 ஆந் திகதிய காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சரின் அவதானிப்பின் பிரகாரம் அமைச்சரவை நியமித்த கலந்துரையாடல் குழு (Cabinet Appointed Negotiate Committee - CANC) அல்லது சுகாதார பிரிவின் அவசர பெறுகை குழுவின் மூலம் (Health Sector Emergency Procument Committee) விலை மற்றும் தரத்தன்மை தொடர்பாக மீளாய்வு செய்து இணக்கப்பாட்டுக்கு வருவதற்கும், இந்திய கடன் திட்டத்தின் போது அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தில் இடம் பெறுகின்ற முறைமையை பின்பற்றுவதற்கும் பரிந்துரை செய்யப்பட்டிருந்ததுடன் மேற்குறிப்பிட்ட அவதானிப்புக்களின் கீழ் உரிய கம்பனியில் இருந்து மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு 2022 நவம்பர் 14 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது.

7.4.4 கோரப்படாத முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் அதாவது 2022 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை சுகாதார அமைச்சு செயலாளரினால் இந்த கம்பனிக்கு 38 மருந்துகள் தொடர்பாக ஐக்கிய குடியரசு டொலர் 4.49 மில்லியன் பெறுமதியான கட்டளைகளை வழங்கும்

கடிதம் வழங்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 63)** சுகாதாரத்துறை அவசர பெறுகைக் குழு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் சுகாதார அமைச்சு செயலாளரினால் இக்கம்பனிக்கு உரிய கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது எனவும் அதற்கு அடுத்த நாள் அதாவது நவம்பர் 01 அந் திகதி சுகாதாரத்துறை அவசர பெறுகைக்குழு கூடி இந்திய கடன் திட்டம் அல்லது நேரடி கொள்வனவுகளின் கீழ் இக்கொள்வனவை மேற்கொள்வதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க 2022 நவம்பர் 14 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானம் கிடைப்பதற்கு 09 நாட்களுக்கு முன்னர் அதாவது 2022 நவம்பர் 05 ஆந் திகதியளவில் ஐக்கிய குடியரசு டொலர் 4.49 மில்லியன் பெறுமதியான (அண்ணளவாக ரூபா 1.7 பில்லியன்) 38 கொள்வனவு கட்டளைகள் (Purchase Order) உரிய கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது எனவும் கம்பனியால் அத்திகதியிலேயே அக்கட்டளைகள் பொறுப்பேற்கப்பட்டிருந்தது எனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றன.

அட்டவணை இலக்கம் - 08 தேவையற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட காலஅட்டவணை

	எடுத்த நடவடிக்கைகள்	**கால அட்டவணை**
1	The Savorite pharmaceuticals (pvt) Ltd கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட மருந்து விடயங்களின் பட்டியல் சம்பந்தமான ஒரு விஞ்ஞாபனத்தை தயாரிக்குமாறு அப்போதிருந்த சுகாதார அமைச்சின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போது அறிவுறுத்தல் வழங்குதல்	2022.10.17
2	மருத்துவ வழங்கல் பதில் பணிப்பாளராக செயற்பட்ட பிரதிப் பணிப்பாளரால் மேற்கூறிய விஞ்ஞாபனத்தை சுகாதார அமைச்சு செயலாளருக்குச் சமர்ப்பித்தல்	2022.10.19
3	பிரதிப் பணிப்பாளரால் சமர்ப்பிக்கப்பட்ட விஞ்ஞாபனத்தை கோரப்படாத முன்மொழிவு பெறுகை நடைமுறையின் மூலம் அமுல்ப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு செயலாளரினால் தெரியப்படுத்துதல்	2022.10.20
4	38 மருத்துவ விடயங்களை 45 நாட்களுக்கும் 65 நாட்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் வழங்கலாம் என Savorite கம்பனியால் சுகாதார அமைச்சிற்கு ஒரு கடித்தின் மூலம் தெரியப்படுத்துதல்	2022.10.21
5	அமைச்ரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பித்தல்	2022.10.25
6	முதலாவது அமைச்சரவை தீர்மானம் (கொள்கை ரீதியான அங்கீகாரம்)	2022.10.26

7	செயலாளரினால் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது என MSD இற்கு தெரியப்படுத்துதல்	2020.10.28
8	சுகாதார அமைச்சு செயலாளரினால் Savorite கம்பனிக்கு38 மருந்து விடயங்கள் தொடர்பாக அமெரிக்க டொலர் 4,490,377.5 பெறுமதியான கட்டளைகளை வழங்கும் கடித்ததை வழங்குதல்	2022.10.31
9	சுகாதாரத்துறை அவசர பெறுகைக்குழு கூட்டங்கள்	2022.11.01
10	வழங்குனர்களுக்கு 38 கொள்வனவு கட்டளைகளை வழங்குதல்	2022.11.05
11	அமைச்சரவையின் இறுதித் தீர்மானத்தை வழங்குதல்	2022.11.14

7.4.5 மேற்கூறிய கோரப்படாத முன்மொழிவுகளின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மருந்து விலைகள் 6.6.11 (i) மற்றும் (iii) ஆம் பந்திகளின் காட்டப்பட்ட நிதி அமைச்சின் அவதானிப்புக்களின் பிரகாரம் விலைக் குழுவினால் முன்னைய SPC விலைகள் மற்றும் நாணயமாற்று விகித மாற்றங்களை செம்மையாக்கி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது என அல்லது மருந்துகளின் தரம் சம்பந்தமாக உரிய ஆய்வுகூட அறிக்கை பயன்படுத்தப்பட்டுள்ளது என கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

7.4.6 மருந்துகளை பதிவு செய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தை வழங்குவது சம்பந்தமாக 2018 சனவரி 05 ஆந் திகதிய 2052/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு கட்டண பணிப்புரையின் பிரகாரம் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையினால் கட்டணம் அறவிடப்படும். மேலே கூறிய கம்பனியால் கோரப்படாத முன்மொழிவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு மருந்துக்குமாக ஒளடதங்களை ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையில் பதிவுசெய்தல் வழங்கப்பட்டிருக்காததுடன் இக்கம்பனிக்கு விசேடத்துவமான வகையில் பணம் அறவிடப்படாது WOR சான்றிதழுக்காக வழங்குவதற்கு சுகாதார அமைச்சு செயலாளரினால் 2022 திசெம்பர் 08 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது விடயங்கள் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் சுகாதார அமைச்சரால் அந்த சந்தர்ப்பத்தில் மாத்திரம் அவ்வாறு மேற்கொள்வதற்கும் அது பொதுவாக பயன்படுத்தாது இருப்பதற்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேசிய ஒளடதங்கள் அதிகார சபையினால் விசேட நடைமுறையின் கீழ் மருந்தின் தரம் தொடர்பாக (Special Pathway) ஊடாக மதிப்பீடு செய்யாது 38 WOR சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது.

7.4.7 மருத்துவ வழங்கல்களில் தற்பொழுது காணப்படகின்ற இருப்பு ஆபத்து மட்டத்தில் காணப்படுவதனால் அடுத்து வரும் 03 வார காலப்பகுதியில் நாட்டில் தீவிர மருத்துவ வழங்கல் தட்டுப்பாடு உருவாகும் பாரிய ஆபத்து காணப்படுகின்றது எனவும் அடுத்துவரும் 03 வார காலப்பகுதிக்குள் சத்திர சிகிச்சை செயற்பாடு முழுமையாக செயற்பாடற்று இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது என தெரிவித்து அரசாங்கத்தின் சுகாதார

நிறுவனங்களில் தீவிர மருத்துவ வழங்கல் தட்டுப்பாட்டினைத் தவிர்ப்பதற்காக மருத்துவ வழங்கல் பிரிவில் அவசர நிலைமையின் அடிப்படையில் Savorite கம்பனியிடமிருந்து மருந்துகள் இறக்குமதி செய்யப்படுகின்றது என 2022 ஒக்தோபர் 25 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் அமைச்சரவைக்கு விளக்கமளித்திருந்தும் இக்கம்பனிக்கு கட்டளைகள் சமர்ப்பித்த 38 மருந்துகளில் 10 மருந்துகளும் Promto முறைமையின் பிரகாரம் அத்தியவசிய மருந்துப் பட்டியலில் உள்ளடக்கப்படாத தொகுதியின் மருந்தாக இருந்ததுடன் அதற்காக செலவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணம் அண்ணளவாக ரூபா 280 மில்லியன் எனவும் அவதானிக்கப்பட்டது.

7.4.8 அவ்வாறு அத்தியவசிய மருந்துப்பட்டியல்களுக்கு உள்ளடக்கப்படாத மருந்துகளை அதிக விலைக்கு தரத்தினை பரீட்சிகாகது அவசர கொள்வனவுகளின் கீழ் ஒரே கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யும் அத்தியாவசியம் என்ன என்பது கணக்காய்வில் சில்லகலுடையதாக இருந்ததுடன் மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவின் மேலதிக செயலாளரின் தலைமைத்துவத்தில் 2022 திசெம்பர் 08 ஆந் திகதி நடைபெற்ற மருந்து முகாமைத்துவ கூட்டத்தின் போது இக்கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள கட்டளைகள் அனைத்தும் இன்னும் 03 மாதங்களுக்காக 100 சதவீதத்தால் அதிகரித்து கட்டளைகளை சமர்ப்பிப்பதற்குத் தீர்மானித்து அவற்றில் 33 விடயங்களுக்காக கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்பட்டது.

7.4.9 மேலே பந்திகள் இலக்கம் 6.6.11 மற்றும் 6.6.15 இன் பிரகாரம் Savorite கம்பனிக்கு மேலதிகமாக இந்தியாவிலுள்ள Kausikh Therapeutics (P) Ltd எனும் பெயருள்ள ஒரு கம்பனியினாலும் ஐ.அ.டொலர் 537,955.12 பெறுமதியான 28 மருந்து விடயங்கள் சம்பந்தமாக கோரப்படாத முன்மொழிவு (Unsolicited Proposal) சுகாதார அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது எனவும் மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவின் கோவையினூடாக சுகாதார அமைச்சு செயலாளரினால் உரிய கம்பனியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு விலாசமிடப்பட்ட 2022 திசெம்பர் 20 ஆந் திகதிய கடித்தின் **(பின்னிணைப்பு -64)** மூலம் கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளில் குறிப்பிட்ட 13விடயங்களை இறக்குமதி செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலையினை விட அதிக விலையுள்ள 15 விடயங்களின் விலை தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு வருவதற்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 65)** அவ்வாறே இந்திய கடன் திட்டத்தின் மிகுதி நிதியை இத்தேவைப்பாட்டிற்குப் பயன்படுத்துவதற்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அதுவரை 2022 நவம்பர் 14 ஆந் திகதிய அமைச்சரவை திர்மானத்தின் பிரகாரம் மதிப்பீட்டுக் குழு அல்லது விலைக்குழு நியமிக்கப்பட்டிருக்காததுடன் அதற்கு 14 நாட்களுக்குப் பின்னர் அதாவது 2023 சனவரி 03 ஆந் திகதி மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழங்குபடுத்துதல் பிரிவின் மேலதிக செயலாளரினால் இந்த கோரப்படாத முன்மொழிவை மதிப்பீடு செய்வதற்கு ஐந்து நபர்களை உள்ளடக்கிய ஒரு விலைக் குழுவினை நியமிப்பதற்கு வேண்டி சுகாதாரத்துறை அவசர பெறுகை குழுவின் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

7.4.10 2022 திசெம்பர் 19 அந் திகதி மருந்து உற்பத்தி, வழங்கல், ஒழுங்குபடுத்துதல் பிரிவின் மேலதிக செயலாளரின் தலைமைத்துவத்தில் நடைபெற்ற மருந்து முகாமைத்துவ கூட்டத்தின் போது இக்கம்பனியின் 28 மருந்து விடயங்களுக்கு 06 மாதங்களுக்கான இருப்பை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் சுகாதார அமைச்சரும் தேசிய ஔடதங்கள் அதிகாரசகைபயின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரும் 2022 திவெசம்பர் 21 ஆந் திகதிக்கும் 24 ஆந் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவிலுள்ள இக்கம்பனியை அவதானிப்பதற்காக பங்குபற்றியிருந்தனர். எனினும் இந்த வழங்குனர் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மூலம் முன்னர் கறுப்பு பட்டியலிடப்பட்ட ஒரு கம்பனி என்ற விடயம் வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் இந்த மருந்துகளை கொள்வனவு செய்வது சம்பந்தமான நடைமுறை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

7.4.11 தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையினால் மதிப்பீடு செய்யப்படாத மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் தெளிவான தன்மை சம்பந்தமாக மருத்துவ வழங்கல் பணிப்பாளருக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருந்த மேலே குறிப்பிட்ட கோரப்படாத முன்மொழிவுகளினூடாக கட்டளைகள் வழங்கிய 38 மருந்து விடயங்கள் தொடர்பாக ஒரு சிவில் அமைப்பு மற்றும் சிவில் அமைப்பின் செயற்பாட்டாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட SC/FR/65/2023 மற்றும் SC/FR/82/2023 .ஆம் இலக்க அடிப்படை உரிமை வழக்குகளின் காரணமாக மருந்தை கொண்டுவருதல் உச்ச நீதிமன்றத்தினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

7.5 அவசர கொள்வனவு நடைமுறைகள் சம்பந்தமாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் தலையீடு

7.5.1 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 58, 82 மற்றும் 101 ஆம் பிரிவுகளின் மூலம் **(பின்னிணைப்பு -66)** அனைத்து மருந்துகளையும் இறக்குமதி செய்தல், உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தலின் போது தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையில் பதிவுசெய்தலினைப் பெற்றுக்கொள்ளுதல் கண்டிப்பானதுடன் மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் தெளிவான தன்மை தொடர்பாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை பொறுப்பாக இருத்தல் வேண்டும். எனினும் அது தொடர்பாக கருத்தில் கொள்ளாது அதிகார சபையில் பதிவு செய்யாத விடயங்களை பதிவினை விடுவிக்கும் நடைமுறைகளுக்கு உட்படுத்துவதற்கும் அமைச்சரவைக்கு பிரேரிக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. அவ்வாறே தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 109 ஆம் பிரிவிற்கு முரணாக ஏனைய விடயங்களுக்காக பதிவினை விடுவிக்கும் நடைமுறையினை பயன்படுத்துவதன் மூலம் ஏற்படுகின்ற சிக்கல்கள் தொடர்பாக பல ஆண்டுகளாக கணக்காய்வினால் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

7.5.2 அவ்வாறே நிதி, பொருளாதார, ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு செயலாளரினால் 2023 சனவரி 13 ஆந் திகதிய 1/2023 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்ட புதிய மருந்துகள் மற்றும் மருந்து உபகரணங்கள்

தொடர்பான பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.6 ஆம் இலக்க பந்தியின் கீழும் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் 2023 ஆம் ஆண்டின் கேள்வி ஆவணங்களின் பொது நிபந்தனையின் கீழும், சச்சரவுத் தன்மையான விருப்புக்களைக் கோரும் போது பின்பற்றப்பட்ட தேவைப்பாட்டின் கீழும் மருந்துகளை பதிவு செய்யாத வழங்குனர்களுக்கு பதிவினை விடுவிக்கும் சான்றிதழினைப் பெற்று மருந்துகளை வழங்குவதற்கு சந்தர்ப்பங்களை வழங்கி உரிய நிபந்தனை தள்ளுபடி செய்யப்பட்டது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் அது சம்பந்தமாக அதிகார சபை நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

7.5.3 மேலே 6.6.4 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறு சுகாதார அமைச்சரினால் 2022 செப்தெம்பர் 26 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிக்கும் போது மருந்து ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையில் பதிவுசெய்யாத பொருட்களை இறக்குமதி செய்வது தாமதிப்பதனைக் குறைப்பதற்கு இறக்குமதி செய்சவதற்கு முன்னர் முறைப்படியாக இறக்குமதி செய்வதிலிருந்து விடுவிக்கும் நடைமுறைக்கு உட்பட்டிருக்கவேண்டும் என உத்தேசிக்கப்பட்டிருந்தும் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை பதிவினை விடுவிக்கும் சான்றிதழானது (WOR) முறையான குழு அங்கீகாரத்திற்கு உட்பட்டு வழங்கும் நடைமுறைக்கு புறம்பாக விரைவான ஒரு பொறிமுறையினூடாக (Fast Track) ஒரு விசேட நடைமுறைக்கு (Special Pathway) எனக் குறிப்பிட்டு உரிய குழுவிற்கு சமர்ப்பிக்காது WOR சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

7.5.4 கீழே அவதானிப்பு இலக்கம் 7.11.7 இல் குறிப்பிட்டவாறு பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதம் வழங்கும் நடைமுறை சம்மந்தமாக 2022 செப்தெம்பர் 16 ஆந் திகதிய பணிப்பாளர் சபைத் திர்மானத்தின் பிரகாரம் உபகுழு அங்கிகாரத்திற்காக அனுப்பிவைக்காது Special Pathway முறைமை ஆக அறிமுகப்படுத்தப்படுகின்ற விரைவான ஒரு பொறிமுறையினூடாக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவு செய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தினை வழங்கும் நடைமுறை பின்பற்றப்பட்டிருந்தது. அதன் போது பதிவு செய்வதிலிருந்து விடுவிப்பதற்கான அங்கீகாரத்தீனை வழங்கும் போது உப குழுவினால் கவனித்துப் பார்க்கப்படுகின்ற விலை நியாயத்தன்மை மருந்துகள் பற்றிய உரிய கல்லூரியின் அபிப்பிராயம் மருந்தின் அத்தியவசியம் தற்பொழுத காணப்படுகின்ற அதற்குச் சமமான பதிவுசெய்த மருந்துகளின் எண்ணிக்கை, மருந்தின் பதிவுசெய்த தரம், வழங்குனரின் மற்றும் உற்பத்தியாளரின் பதிவு செய்த தரம், தரம் தொடர்பாக முன்னர் சிக்கல் காணப்படல் (தரம் குறைந்திருத்தல்) போன்ற காரணிகள் தொடர்பாக கவனம் செலுத்தாதும் மருந்துகளின் தரம் பாதுகாப்பு மற்றும் தெளிவான தன்மையை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களை மதிப்பீடு செய்யாதும் கொள்வனவு கட்டளைகள், பொருட்களை அனுப்புவதற்கான கோரிக்கைகள், வியாபார இன்வொயிஸ்கள் போன்ற கட்டளைகளை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்கள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டு உரிய அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த வகையில் 2018 மார்ச் 14 ஆந் திகதி என்னால் வழங்கப்பட்ட மருந்து வழங்கல் நடைமுறை தொடர்பான விசேட கணக்காய்வின் போதும் அதிகார சபையினால் மற்றும் அதிகாரசபை தோற்றுவிப்பதற்கு முன்பிலிருந்து

மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பினை தெரிவிக்காமை (No objection Letter.NOL) வழங்கும் நடைமுறையை சுதந்திரமாக்கும் பக்கசார்பற்ற ஒரு குழுவினூடாக மேற்கொள்ள வேண்டுமென வழங்கிய சிபாரிசு கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

7.5.5 மேலே குறிப்பிட்டவாறு பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் உப குழுவிற்கு அப்பால் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கிகாரத்தின் அடிப்படையில் பதிவு செய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தமை தொடர்பாக கீழே பந்தி இலக்கம் 7-11.7 இன் அவதானிப்புக்களில் தரப்படுகின்றது.

7.5.6 அவ்வாறே மேலே பந்தி இலக்கம் 6.6.4 இன் பிரகாரம் முறைப்படியாக பதிலவ செய்வதிலிருந்து விடுவிக்கும் நடைமுறைக்கு உட்பட்டிருக்கவேண்டும் என அமைச்சரவைக்கு யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கு இணங்க இந்திய கடன் திட்டம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள், JICA முதலிய பல்வேறு முன்மொழிவுகளினூடாக இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த மருந்துகளுக்காக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபைக்கு ஒரு பொறுப்பு இல்லை எனவும் உற்பத்தியின் பாதுகாப்பு, பயனுறுதி என்பன தொடர்பான பொறுப்பு வகிக்க முடியாது எனவும் தெரிவித்து 2015 இன் 05 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் 03 (அ) ஆம் பிரிவின் பிரகாரம் மருந்துகளின் தரம் சம்பந்தமாக அதிகார சபை தமது பொறுப்பினை மீறியிருந்தது.

7.5.7 2022 திசெம்பர் மாத்தின் போது தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையினால் கோரப்படாத பிரேரணைகளினூடாக சமர்ப்பித்த 38 மருந்துவிடயங்களை இறக்குமதி செய்வதற்காக Savorite கம்பனிக்கு பதிவு செய்தலினை விடுவிக்கும் 38 சான்றிதழ்கள் (WOR) வழங்கப்பட்டிருந்த போதிலும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையினால் உரிய மருந்துகளின் மதிப்பீடு மேற்கொள்ளப்பட வில்லை எனவும் அதன் காரணமாக உரிய மருந்துகளின் தரம், பாதுகாப்பான தன்மை மற்றும் பயனுறுதி (quality, safety, efficacy) என்பன தொடர்பாக அதிகார சபை பொறுப்புக்கூறுவதில்லை எனவும் பொறுப்பினை மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரினால் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் நிபந்தனையைச் சமர்ப்பித்து அதன் பொறுப்பு அதிகார சபையினால் கைவிடப்பட்டிருந்தது. எனினும் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரினால் " உரிய மருந்துகளின் தரம் பாதுகாப்பு, பயனுறுதி என்பன சம்பந்தமான சட்ட கட்டமைப்பு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபைக்கு உரியது என்பதனால் பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதத்தினை வழங்குவது தொடர்பான முழுமையான பொறுப்பு அதிகார சபைக்கு உரியது எனவும் அது தொடர்பான பொறுப்பினை தமக்கு வகிக்க முடியாது எனவும் அந்த நிபந்தனை அதிகார சபையினால் தமது இணக்கப்பாடின்றி உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டது.

7.5.8 கீழே அவதானிப்பு இலக்கம் 7.11.6.4 இல் குறிப்பிட்டவாறு 2022 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட அவசர கொள்வனவுகள் மற்றும் இந்திய கடன் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் தொடர்பாக அதிகார சபையினால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் சான்றிதழில் மருத்துவ வழங்கல்கள் பிரிவின் பணிப்பாளரின் பிரதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்படவில்லை. உரிய பிரதி முறைப்படியாக மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருக்குமாயின் அச்சான்றிதழ் உண்மையானதா என்பதனை இருப்பு கட்டுப்பாட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தக் கூடியதாக இருந்திருக்கும் எனவும் தற்பொழுது பாரதூரமான சிக்கலினை உருவாக்கிய Human Immunoglobulin மற்றும் Rituximab போன்ற போலியான மருந்துகளை வழங்கும் மோசடியைக் குறைப்பதில் உள்ளகக் கட்டுப்பாடு வெற்றிபெற்றிருக்கும் எனவும் அவதானிக்கப்பட்டது. இப்பிரச்சினை இடம்பெற்றதன் பின்னர் 2023 ஒக்தோபர் 16 ஆந் திகதி பதிவு செய்வதிலிருந்து விடுவிக்கும் 105 கடிதங்கள் மருத்துவ வழங்கல்கள் பிரிவின் பணிப்பாளரின் பிரதியானது தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையினால் மருத்துவ வழங்கல்கள் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. எனினும் கணக்காய்வுத் திகதியான 2023 திசெம்பர் 31 வரை தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையினால் வழங்கப்பட்ட ஏனைய WOR சான்றிதழ்களுக்குரிய பிரதிகள் மருத்துவ வழங்கல்கள் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை எனவும் அதன் காரணமாக மோசடிகசள் இடம்பெறுவதற்கு உள்ள வாய்ப்பு இன்னும் காணப்படுகின்றது எனவும் மேலும் அவதானிக்கப்பட்டது.

7.6 மருந்துகளைப் பதிவுசெய்யும் போது அரசாங்கத்தின் மருந்து தேவைப்பாட்டினை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாமை

7.6.1 2007 மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பான பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் **(பின்னிணைப்பு 67)** அரசாங்கத்தின் வைத்தியசாலைகளுக்காக மருந்துகளை பெறுகை செய்யும் போது தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் கீழ் பதிவுசெய்தலினை வழங்குதல் பிரதான வரையறையாக கருதப்படுவதுடன் ஒரு மருந்தின் இனத்திற்குரிய பெயரின் (Generic Name) கீழ் சில மருந்துகள் பதிவுசெய்யப்பட்டிருந்தமையின் மூலம் போட்டி கேள்வி முறைமையினூடாக பொருத்தமான மருந்துகளை நியாயமான விலைக்கு வழங்கும் சந்தர்ப்பம் பெறுகை செய்யும் நிறுவனத்திற்கு கிடைக்கின்றது. மேலும் இறுதியாக 2020 - 2021 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மருந்துப் பட்டோலை மீளாய்வுக் குழுவினால் அரசாங்க வைத்தியசாலைகளில் பயன்படுத்த வேண்டிய 1,743 மருந்துகளின் பட்டியல் இனங்காணப்பட்டிருந்ததுடன் **(பின்னிணைப்பு - 68)** அவற்றில் பதிவுசெய்யும் முன்னுரிமை வழங்க வேண்டிய 36 மருந்துகள், பதிவுசெய்தல் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய 58 மருந்துகள் அரிதான நோய்களுக்கான மருந்து தொகுதிகளின் (Orphan Category) கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய 64 மருந்துகள் மற்றும் பதிவுசெய்தலுக்காக உள்ளடக்கப்பட வேண்டிய புதிய 154 மருந்துகள் என்பனவாக 312 மருந்துகளின் பட்டியல் மருத்துவ வழங்கல்

பிரிவினால் 2022 நவம்பர் 24 ஆந் திகதிய MSD/QA - 02/FRC/NMRA -01 ஆம் இலக்க கடித்தின் மூலம் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபைக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. **(பின்னணைப்பு - 69)**

7.6.2 அவ்வாறே மருத்துவ வழங்கல்களுக்கான கிரயத்தை குறைக்கும் குறிக்கோள் வைத்தியசாலைகளுக்காக கொள்வனவு செய்து பயன்படுத்த வேண்டியதான 850 மருந்துகளின் முன்னிரிமைப் பட்டியல் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் 2023 ஏப்ரல் 04 ஆந் திகதி வழங்கப்பட்ட 01-14/2023 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 70)** அந்த முன்னிரிமைப் பட்டியலில் 33 மருந்துகளையும் உள்ளடக்கும் வகையில் அரிதான நோய்களுக்கான 96 மருந்துகளும் இதுவரை பதிவு செய்யப்படாத 135 மருந்துகளின் திருத்திய பட்டியல்களானது பதிவுசெய்த முன்னுரிமையை முன்னிட்டு மருத்துவ வழங்கல் பிரிவினால் 2023 ஏப்ரல் 11 ஆந் திகதி அதிகார சபைக்கு இரண்டு சந்தர்ப்பங்களின் போது MSD/FR/QA/SEO/2023-01 மற்றும் 02 ஆம் இலக்க கடித்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 71)** எனினும் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபையினால் மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாதிருந்ததுடன் 2020 ஒக்தோபர் 14 ஆந் திகதி அதிகாரசபை உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்ட 95 மருந்துகளின் பதிவு செய்த முன்னுரிமைப் பட்டியல் அரசாங்கத்தின் மருந்து தேவைப்பாடு தொடர்பாக காலரீதியாக மீளாய்வு செய்து நாளதுவரையாக்கப்பட்டிருக்காமையால் மேற்கூறிய மருந்துகளின் பதிவுசெய்தலினை ஊக்கப்படுத்துவதற்காக போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. **(பின்னிணைப்பு - 72)**

7.6.3 அரசாங்க வைத்தியசாலைகளுக்கு அத்தியவசியமான மருந்துகளுக்காக பதிவுசெய்யப்பட்டிருக்காமை அல்லது பதிவு செய்தல் குறைவடைவதன் மூலம் பட்டோலை மீளாய்வுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட சில மருந்துகளை சுகாதார முறைமைக்குள் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்ததுடன் அந்த மருந்துகளை பெறுகை செய்யும் போது பல்வேறு சிக்கல் உருவாகியுள்ளது என மேலே 7.6.2 ஆம் பந்தியில் காட்டப்படுகின்ற 2023 ஏப்ரல் 11 ஆந் திகதிய கடித்தின் மூலம் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது. பதிவுசெய்யப்படாததனால் மருந்தின் தரம், வினைத்திறன் மற்றும் பாதுகாப்பு பற்றி உறுதிப்படுத்தல் இல்லாமை மற்றும் தொடர்ச்சியாக வழங்குவதற்கு முடியாமை போன்ற வழங்கல் தொடர்பான சிக்கல்கள் ஏற்படுவதுடன் இவ்வாறான காரணங்களின் அடிப்படையில் நோயாளிகளுக்கு இந்த மருந்துகளை வெளியில் கொள்வனவு செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள் உருவாகுவதனால் இலவச சுகாதாரத்தின் பிரதிபலன்கள் பொதுமக்களுக்கு கிடைக்காமை சம்பந்தமாக கணக்காய்விற்கு நிர்ணயிக்கப்பட்ட தேவைப்பாடு கிடைக்கவில்லை. அதற்கிணங்க அதிகாரசபையின் மருந்து தேவைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தி அம்மருந்துகளின் பதிவினை மேம்படுத்துவதற்காக ஒரு வேலைத்திட்டத்தினை அதிகாரசபை தயாரிக்க வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. .

7.7 தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற மருந்துகளைப் பதிவுசெய்யும் நடைமுறை

7.7.1 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை அதிகாரச சட்டத்தின் 58(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 73**) எந்தவொரு நபரினாலும் குறித்த ஒரு மருத்தினை அதிகார சபையில் பதிவுசெய்யாமலும் உற்பத்தி செய்தல் அல்லது இறக்குமதி செய்தல் செய்யாதிருக்கவேண்டியதுடன் அதிகாரச் சட்டத்தின் 64 ஆம் பிரிவின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 74)** அந்த அனுமதிப்பத்திரத்தினை புதுப்பத்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதற்கிணங்க மருந்துகளைப் பதிவுசெய்தல் மற்றும் பதிவுசெய்தலினைப் புதுப்பிப்பதற்காக அதிகார சபைக்கு பல மருந்துக் கோவைகள் (Dossier) குறிப்பிடத்தக்க அளவில் வருடாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்றன. 2019 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 2145/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மருந்துகளைப் பதிவுசெய்தல் மற்றும் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்ற பணிப்புரையின் XXIII ஆம் பட்டோலையின் மூலம் வெளியிடப்பட்ட சிறந்த ஒழுங்குபடுத்துதல் நடைமுறையின் பிரகாரம் பதிவுசெய்தல் டொஸியரின் மதிப்பீட்டு செயன்முறை காலஎல்லை வேலை செய்கின்ற 300 நாட்களாக **(பின்னிணைப்பு 75**) நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் மருந்தின் டொஜியர் கோவையினை மதிப்பீடு செய்வதனைப் போல உள்நாட:டு மருந்துகளின் தரத்தை பாதுகாக்கின்ற ஆய்வுகூடத்திடமிருந்து மருந்தின் தரத்தினை பரீட்சித்துக் கொள்வதற்காக இந்த செயன்முறை கால எல்லை வழங்கப்பட்டிருந்தது.

7.7.2 எனினும் அதிகார சபையினால் பதிவுசெய்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து மருந்துகளின் தரத்தினை பரீட்சித்தல் மேற்கொள்ளப்படாததுடன் ஆவணங்களைப் பரீட்சிப்பதன் மூலம் மாத்திரம் மருந்துகளின் மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. நிலைமை அவ்வாறு இருந்தும் அதிகார சபையின் மருந்துகளைப் பதிவுசெய்யும் நடைமுறை மற்றும் பதிவுசெய்தலினை புதுப்பிக்கும் நடைமுறையானது பின்னடைவிற்கு (Backlog) உள்ளாகியிருந்ததுடன் 2023 யூன் 30 ஆந் திகதி வரை அதிகார சபையிடம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பதிவுசெய்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 1,169 புதிய மருந்துக் கோவைகள் மற்றும் பதிவினைப் புதுப்பிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 396 மருந்துக் கோவைகள் என்பனவாக 1,565 காத்திருக்கும் கோவைகள் (Pending Dossiers) காணப்பட்டது என பின்வரும் 09 ஆம் இலக்க அட்டவணையில் தரப்பட்டுள்ளது. **(பின்னிணைப்பு 76)**

அட்டவணை இலக்கம் .09: 2023 யூன் 30 இல் உள்ளவாறு காத்திருக்கும் கோவைகள் (2022- 2023 இற்குரிய)

	2022	2023.06.30 ஆந் திகதி வரை	மொத்தம்
பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டவை	693	476	1,169
பதிவினைப் புதுப்பிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டவை	189	207	396
			1,565

7.7.3 மேலும் மேலே 7.7.1 ஆம் பந்தியில் குறிப்பிட்ட மருந்துகளைப் பதிவுசெய்யும் மற்றும் அனுமதிப் பத்திரங்களை வழங்கும் பணிப்புரையில் குறிப்பிட்ட இலக்கிடப்பட்ட காலத்தினுள் பதிவினை வழங்குவதற்கு முடியாமையின் காரணமாக 2023 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு 2018-2021 காலப்பகுதியில் பதிவுசெய்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 98 மருந்துக் கோவைகள் மற்றும் பதிவினைப் புதுப்பிபட்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 219 மருந்துக் கோவைகள் என்பனவாக 317 மருந்துக் கோவைகள் பதிவுசெய்தல் நடவடிக்கை முடிவுறுத்தப்படாது 1 ½ ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் முழுவதுமாக அதிகார சபையில் காணப்பட்டது என கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டது.

அட்டவணை இலக்கம்- 10: 2023 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு காத்திருக்கும் கோவைகள் (2018 - 2021 இற்குரிய)

ஆண்டு	பதழிவு செய்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டவை	பதிவினைப் புதுப்பிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டவை	மொத்தம்
2018	11	14	25
2019	13	12	25
2020	34	82	116
2021	40	111	151
மொத்தம்	98	219	317

அதற்கிணங்க 2023 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகார சபையிடம் காணப்பட்ட பதிவுசெய்தலினைப் பூரணப்படுத்தாத மொத்த காத்திருக்கும் கோவைகளின் எண்ணிக்கை 1,882 ஆகும்.

7.7.4 மேலே 7.7.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு டொஸியரினை மதிப்பீடு செய்வதற்கு 300 நாட்களாக நிர்ணயிக்கப்பட்டிருந்தும் 2020 ஆம் ஆண்டின் போது மேலே பந்தி இலக்கம் 7.3.16 இல் குறிப்பிட்ட ஒரே விலாசத்தில் அமைந்துள்ள ஒரே பெயர்களைக் கொண்ட இரண்டு பணிப்பாளர்களை உள்ளடக்கிய 02 கம்பனிகளும் அதனுடன் தொடர்புபட்ட இன்னுமொரு கம்பனியின் மருந்தினை பதிவுசெய்தல் சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கு ஒளடதங்கள் அதிகாரச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 93 டொஸியர்களில் (Dossiers) 41 டொஸியர்கள் ஒரு மருந்துக் கலவையாளரினால் இரண்டு நாட்கள் அல்லது அதற்கு குறைந்த காலத்தின் போது மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதில் 17 டொஸியர்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கையானது ஒளடதங்களை ஒழுங்குபடுத்தும் அதிகார சபையில் அப்போது இருந்த பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் ஒப்படைப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது என டொஸியரினை ஒப்படைக்கும் ஆவணங்களின் பிரகாரம் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டது. அந்த டொஸியர்கள் முறைப்படியான மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படவில்லை என சுயாதீன விசேட நிபணரின் பரீட்சிப்பு அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது **(பின்னிணைப்பு -77)**

7.7.5 சுகாதார அமைச்சினால் அதிகார சபைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த மேலே 7.7.4 ஆம் பந்தியில் குறிப்பிட்ட மருந்துக் கலவையாளரினால் 2019 ஆம் ஆண்டின் போது மேற்கூறிய கம்பனிகளைத் தவிர்த்து ஏனைய கம்பனிகள் ஒரு டொஸியரினை மதிப்பீடு செய்வதற்காக 281 நாட்களுக்கும் 427 நாட்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்தது என வெளிப்படுத்தப்பட்டது. மேலும் மேலே 7.7.1 ஆம் பந்தியில் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் **(பின்னிணைப்பு 78)** ஒரு மருந்தின் தற்காலிக பதிவு செயதலுக்கான கால எல்லை முடிவடைந்ததன் பின்னர் ஒரு மருந்திற்காக அதிகார சபையினால் நிர்ணயிக்ககூடிய ஒரு கால எல்லைக்காக முழுமையான பதிவுசெய்தல் வழங்கக்கூடியதாக இருந்தும் அதற்கு முரணாக 35 சந்தர்ப்பங்களின் போது உரிய 03 கம்பனிகளுக்கு தற்காலிக சான்றிதழ் வழங்கி 03 மாதங்கள் செல்கையில் 05 ஆண்டுகளுக்கான முழுமையான சான்றிதழினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

7.7.6 அதற்கிணங்க முழுமையான பதிவுசெய்தலினை வழங்கும் மதிப்பீட்டு நடவடிக்கை, பரீட்சித்தல் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரினால் அங்கீகரித்தல் 01 நாளுக்கும் 02 நாட்களுக்கும் உள்ளே மேற்கொள்ளப்படுவதன் மூலம் கம்பனிகளுக்கு சாதகமான நிலைமை ஏற்படவில்லை எனக் கூறுவதற்கான ஒரு சான்றிதழ் கணக்காய்விற்கு கிடைக்கவில்லை. இந்த பிரச்சினையான செயற்பாடு தொடர்பாக கணக்காய்வினால் சுகாதார அமைச்சு செயலாளருக்கு வெளிப்படுத்தி 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் எந்த புலனாய்வு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அவ்வாறான செயற்பாடு மீண்டும் இடம்பெறாத ஒரு நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

7.7.7 மேலே 7.7.2 ஆம் பந்தியில் காட்டப்படுகின்ற மருந்துகளைப் பதிவுசெய்தல் மற்றும் பதிவினைப் புதுப்பிக்கும் நடைமுறையில் காணப்பட்ட பின்னடைவிற்கான பரிகாரமாக அதிகாரசபையினால் காணப்படும் பதிவினை நீடிக்கும் (Extension of Certificates) மற்றும் இருப்புக்களை விடுவிக்கும் அங்கீகாரதினை (Approval for Consignment Clearance) வழங்கும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருந்தது. எனினும் தேசிய ஔடதங்களை ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை அதிகாரச்சட்டம் மற்றும் 2019 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 2145/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மருந்துகளைப் பதிவுசெய்யும் மற்றும் அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் பணிப்புரையின் மூலம் பதிவுசெய்தலினை நீடித்தல் மற்றும் இருப்புக்களை விடுவிக்கும் அங்கிகாரத்தினை வழங்குவதற்காக அதிகார சபைக்கு சட்டரீதியான ஏற்பாடு வழங்கப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க இவ்வாறான நடைமுறையினை அமுல்ப்படுத்துவதன் மூலம் மருந்துகளைப் பதிவுசெய்தல் மற்றும் அனுமதிப் பத்திரத்தினைப் புதுப்பித்தல் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள ஒழுங்குபடுத்துதல் ஏற்பாடுகளை அமுல்ப்படுத்துவதன் மூலம் எதிர்பார்த்தவாறு மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் விளைதிறன் என்பன தொடர்பாக காலத்துக்கு காலம் மேற்கொள்ளப்பட வேண்டிய மீளாய்வுகள் நிறைவேற்றப்படவில்லை எனவும் மேலும் அவதானிக்கப்பட்டது.

7.7.7.1 2019 யூன் 30 ஆந் திகதியின் பின்னர் காலாவதியாவதற்கு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து மருந்துகளின் பதிவுசெய்தல் சான்றிதழ்களின் 2021 யூன் 30 **(பின்னிணைப்பு 79)** செல்லுபடியாகும் காலத்தை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிப்பதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்து இருந்ததுடன் **(பின்னிணைப்பு -80)** இதன் பின்னர் பூரணப்படுதாத கோவைகளை மதிப்பீடு செய்யாது 2022 ஆம் ஆண்டில் 618 மருந்துகள் 2023 ஆம் ஆண்டின் தொடக்க அரை ஆண்டில் 249 மருந்துகளின் காணப்பட்ட பதிவினை 05 ஆண்டுகளால் நீடிப்புச் செய்வதற்கும் **(பின்னிணைப்பு 81)** கணக்காய்வு செய்த காலப்பகுதியில் 124 தற்காலிக பதிவுசெய்தல் சான்றிதழ்களின் செல்லுபடியாகும் காலத்தை ஒரு ஆண்டினால் நீடிப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது**. (பின்னிணைப்பு 82)** அதற்கிணங்க சில மருந்துகளுக்காகக் காணப்பட்ட பதிவுசெய்தலானது பல சந்தர்ப்பங்களில் குறிப்பிடத்தக்க அளவு எண்ணிக்கையான ஆண்டு நீடிக்கப்பட்டிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. 2022 சனவரி முதல் 2023 யூன் வரையான காலப்பகுதியில் காலம் நீடிக்கப்பட்ட தற்காலிக பதிவுசெய்தல் சான்றிதழ் 124 இல் 70 சான்றிதழ்களின் செல்லுபடியாகும் காலம் இரண்டு சந்தர்ப்பங்களின் போது 2 ஆண்டுகளுக்கும் 4 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தால் நீடிக்கப்பட்டிருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது. **(பின்னிணைப்பு 83**)

7.7.7.2 மேலே 7.7.1 ஆம் பந்தியில் காட்டப்படுகின்ற அதிகாரச் சட்டத்தின் 64 ஆம் பிரிவின் மூலம் விதிக்கப்படுகின்ற பதிவுசெய்தலினை புதுப்பிப்பதற்காக அதிகார சபைக்கு வேண்டுகோள் சமர்ப்பிக்கையில் அது தொடர்பான அப்பிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்வதற்காக மருத்துவ மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பிவைத்தல், தேவையான சந்தர்ப்பங்களின் போது மாதிரிகள், ஆவணங்கள், அல்லது ஏனைய சான்றுகளைப்

பெற்றுக்கொள்ளல், தேசிய மருந்துகளின் தரத்தை பாதுகாப்பு செய்யும் ஆய்வுகூடங்களிலிருந்து மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் உரிய விடயங்களை கருத்தில் கொண்டு பதிவினைப் புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மேலே 7.7.7.1 பந்தியின் பிரகாரம் பதிவுசெய்தல் சான்றிதழ்களின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதன் மூலம் ஒழுங்குபடுத்ததல் ஏற்பாடு மீறப்படுகின்றது எனவும் அதன் மூலம் மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் விளைதிறன் என்பன தொடர்பாக நியாயமான உறுதிப்படுத்துதல் கிடைக்கவிலலை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.7.7.3 சில மருந்துகளின் பதிவுசெய்தல் தயாரிக்கப்பட்டுக் காணப்படல், காணப்படுகின்ற பதிவுசெய்தல்கள் காலங்கடந்திருத்தல், பதிவுசெய்தல் சான்றிதழில் மிகுதி செல்லுபடியாகும் காலம் குறுகியிருத்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை மாத்திரம் இறக்குமதி செய்யப்படுகின்ற ஒவ்வொரு மருந்து இருப்பினையும் சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்காக இருப்பு விடுவிப்பு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகார சபையின் பணிப்பாளர்சபை 2022 சனவரி 21 அந் திகதி அங்கிகாரத்தினை வழங்கியிருந்தது. **(பின்னிணைப்பு - 84)** பின்னர் அதிகார சபையின் பிரதான நிறைவேற்று உத்தியொகத்தரினால் அதிகாரச் சட்டத்தின் 14(எ) பிரிவின் மூலம் **(பின்னிணைப்பு - 85)** மருந்து தேவைப்படுகின்ற மூலப்பொருட்கள் முதலியவற்றை சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்காக அங்கீகாரத்தினை வழங்குவதற்காக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பிழையாக விளங்கி மருந்து இருப்பினை விடுவிக்கும் குறிக்கோளில் வழங்குவதற்காக 2022 மே 20 ஆந் திகதி பணிப்பாளர் சபைப் பத்திரம் **(பின்னிணைப்பு - 86)** சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்நடைமுறையை அமுல்ப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரினால் 2022 சனவரியிலிருந்து 2023 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை இருப்புக்களை விடுவிக்கும் 3,202 அங்கீகாரங்கள் **(பின்னிணைப்பு - 87)** வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் **பின்னிணைப்பு 88** இல் தரப்படுகின்றன.

7.7.7.4 செல்லுபடியான பதிவுசான்றிதழின் மூலம் உரிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக ஒரு ஆண்டிற்கும் ஐந்து ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்கு செல்லுபடித்தன்மை வழங்கப்படுவதுடன் மேலே குறிப்பிட்ட அதிகார சபையின் செயற்திறனின்மையின் அடிப்படையில் பதிவுசெய்தலினை புதுப்பிக்காமையின் காரணமாக மருந்து இறக்குமதியாளர்களுக்கு அந்த அனுமதி இல்லாமல் போவதனால் ஒரே மருந்திற்காக இருப்புக்களை விடுவிக்கும் பல அங்கீகாரங்களை வழங்கவேண்டி ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்ட பதிவுசெய்தல் சான்றிதழின் பின்பக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ள பொருளை விடுவிப்புச் செய்யும் அங்கீகார முறைமையின் பிரகாரம் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதற்கான சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.

அட்டவணை இலக்கம் - 11: ஒரே மருந்திற்காக இருப்பு விடுவிக்கும் அங்கீகாரம் பல எண்ணிக்கையில் வழங்குதல்

மருந்தின் பெயர்	இறக்கமதியாளரின் பெயர்	காணப்பட்ட பதிவு செய்தல் சான்றிதழின் இலக்கம்	இருப்புக்களை விடுவித்தல் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை
Globetasol Propionate Ointment USP 1.05%	Ceyoka (Pvt) Ltd	M-008786-PR	6
Travoprost Ophthalmic Solution USP 0.004%	Heamas Pharmaceuticals (Pvt) Ltd	M-006590-PR	6
Azithromycin Capsules USP 250mg	Heamas Pharmaceuticals (Pvt) Ltd	M-005121-PR	4
Miconazole Nitrate Cream IP 2%	Associates (Pvt) Ltd.	M-008019-PR	8
Finasteride Tablets 5mg	Emerchemie NB (Ceylon) Ltd.	M-002418-FR	6
Montelukast Tablets 10mg	Morison Son & Jones	FR-067003	10

7.7.7.5 2022 சனவரியிலிருந்து 2023 ஒக்தோபர் மாதம் வரையான காலத்தில் இருப்புக்களை விடுவிக்கும் அங்கீகாரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் தரம் தொடர்பாக சிக்கல்கள் உருவாகியிருப்பதன் அடிப்படையில் மருந்துகளை பயன்படுத்துவதிலிருந்து நீக்குதல், பயன்பாட்டினை தற்காலிகமாக கைவிடுதல் மற்றும் பயன்பாட்டினை தொடர்ச்சியாக பேணாமை மேற்கொண்ட சந்தர்ப்பங்கள் அதிகார சபையால் கணக்காய்விற்கு வழங்கிய தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டன. இது தொடர்பான விபரம் கீழே தரப்படுவதுடன் விபரமான தகவல் **பின்னிணைப்பு 89** இல் தரப்படுகின்றது.

ஆண்டு	மருந்துகளை பயன்படுத்து வதிலிருந்து நிக்குதல்	பயன்பாட்டினை தற்காலிகமாக கைவிடுதல்	பயன்பாட்டினை தொடர்ச்சியாக பேணிச் செல்லாமை	சிக்கல்கள் ஏற்பட்டுள்ள முழுச் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை
2022	14	6	1	21
2023.10.31 ஆந் திகதி வரை	14	7	1	22
மொத்தம்	28	13	2	43

7.7.7.6 அதிகாரச் சட்டத்தின் 43(2)(அ) மற்றும்(ஆ) உபபிரிவுகளின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 90)** பதிவுசெய்வதற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற மருந்துகளின் தொழில்நுட்ப மதிப்பீட்டினை மேற்கொண்டு மருந்துகள் தொடர்பான பிரதி பலன்கள் ஆபத்துக்கள், தரம், வினைத்திறன், பாதுகாப்பான தன்மை, தேவைப்பாடு, விலை பொருளாதார பகுப்பாய்வ என்பன பற்றி உள்ளடக்கப்பட்ட ஒரு அறிக்கையினை அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கும் கடமை, அதிகாரச் சட்டத்தின் 59(4)(அ) உபபிரிவின் பிரகாரம் **(பின்னிணைப்பு 91)** நியாயமான விலைக்கு பிரசைகளின் சுகாதார பாதுகாப்பு தேவைப்பாடுகள் தொடர்பான விளைதிறன் பாதுகாப்புடன் மற்றும் சரியான தரத்திலான மருந்துகள் வழங்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக உள்ள தேவைப்பாட்டினை கவனத்திற்கு எடுத்து மருந்துகளை மதிப்பீடு செய்யும் பொறுப்பும் அதிகாரச் சட்டத்தின் 64(3) ஆம் உபபிரிவின் பிரகாரம் பதிவுசெய்தலினைப் புதுப்பிப்பதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற வேண்டுதல்கள் சம்பந்தமான ஒரு அப்பிப்பராயத்தினை வெளியிடும் கடமையும் மருந்துகளை மதிப்பீடு செய்யும் குழுவிற்குரிதாகும். அதற்கிணங்க மருந்துகளை பதிவுசெய்யும் மற்றும் பதிவுசெய்தலினை புதுப்பிக்கும் நடைமுறையில் காணப்பட்ட தாமத்தின் அடிப்படையில் மருந்துகளின் இறக்குமதிக்காக வழங்கப்படுகின்ற அனைத்து இருப்புக்கை ளவிடுவிக்கும் அங்கீகாரத்திற்காக மருந்துகளை மதிப்பீடு செய்யும் குழுவின் அங்கீகாரம் அல்லது மேல் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளல் குழுவின் அபிப்பிராயத்தினை விசாரித்தல் அல்லது குழுவிற்கு அறிக்கையிடுதல் மேற்கொள்ள வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க மருந்துகளை பதிவுசெய்தல் சம்பந்தமாக அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் மூலம் மருந்துகளை மதிப்பீடு செய்யும் குழுவிற்கு ஒப்படைத்துள்ள அதிகாரத்தினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது இருப்புக்களை விடுவிக்கும் அங்கீகாரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.7.7.7 அதிகாரசபையின் மூலம் வழங்கப்படுகின்ற இருப்புக்களை விடுவிக்கும் அங்கீகாரம் தொடர்பாக முறையான மற்றும் விபரமான தரவுத் தொகுதி பேணப்பட்டிருக்காததுடன் அதன் காரணமாக உரிய இருப்புக்களை துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்காக சுங்க தரவுகளுக்கான சுயமாக செயற்படும் முறைமையினூடாக (ASYCUDA) அனுமதியை வழங்கும் போது அதனை இலகுவாக அதிகாரசபையினால் வழங்கும் அனுமதியா என்பதனை குறுக்கு பரீட்சிப்பு செய்வதற்கான ஒரு முறைமை வழங்கப்படவில்லை. அதற்கிணங்க இறக்குமதியாளர்களால் ASYCUDA முறைமைக்கு தரவு ஏற்றம் செய்யப்பட்டிருக்கும் காணப்படுகின்ற பதிவுசெய்தல் சான்றிதழ் மற்றும் அதன் பின்பக்கத்தில் வைக்கப்பட்டுள்ள அங்கீகார முத்திரை ASYCUDA முறைமைக்கு நுழைவதற்கு தகமையுள்ள அதிகாரசபையின் உத்தியோகத்தரின் தனிப்பட்ட அவதானிப்பு மற்றும் தீர்ப்பின் அடிப்படையில் சரியானது எனக் கருதி விடுவிப்பு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

7.7.7.8 மேலும் ASYCUDA முறைமையினூடாக விடுவிப்பு அனுமதியை வழங்கிய மருந்து இருப்புக்கள் தொடர்பான ஒரு அறிக்கை அல்லது தரவுத் தொகுதியை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அதிகார சபையினால் இருப்புக்களை விடுவிக்கும் அங்கீகாரத்தினை வழங்குவது சம்பந்தமாக முறையான மற்றும் வெளிப்படைத்தன்மையான ஒரு நடைமுறை மற்றும் வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க உள்நாட்டிற்கு மருந்துகளை இறக்குமதி செய்யும் போது இவ்வாறான ஒழுக்காற்று நடைமுறையை பின்பற்றுவதன் மூலம் முறையற்றதும் ஒழுக்கற்றதுமான செயற்பாடு உருவாகும் ஆபத்து காணப்படுகின்றது எனவும் அதன் மூலம் ஒட்டுமொத்த சுகாதார முறைமையும் அதிக ஆபத்திற்கு உள்ளாகலாம் எனவும் அவதானிக்கப்பட்டது.

7.7.7.9 மேலும் மருந்துகளை ஒழுங்குபடுத்துதல் பிரிவிலுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக பதிவுசெய்தலினை நீடிப்புச் செய்தல் மற்றும் இருப்புக்களை விடுவிக்கும் அங்கீகாரத்தினை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் காரணமாக அதிகாரசபையின் பிரதான கடமையான மருந்துகளை மதிப்பீடு செய்தல் மற்றும் பதிவுசெய்தல் நடவடிக்கையானது மேலும் பின்னடைவிற்கு உள்ளாகின்றது எனவும் அதிகார சபையினைத் தோற்றுவிக்குனும் குறிக்கோள்களுக்கு மதியில் அதிகாரச் சட்டத்தின் 3(இ) பிரிவின் மூலம் எதிர்பார்த்த மருந்துகளைப் பதிவுசெய்தல், அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் இறக்குமதி செய்வதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் வெளிப்படைத்தன்மையுடன் நிலைபேறாக மற்றும் நியாயமான முறைமையில் மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும் குறிக்கோள் நிறைவேற்றப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

7.7.8 அதிகாரச் சட்டத்தின் 14(ஒ) உபபிரிவின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 92)** அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் அளவு தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அதன் காரணமாக அதிகாரச் சட்டத்தின் 3(ஐ) உபபிரிவின் மூலம் காட்டப்படுகின்றவாறு நாட்டில் மருந்துகள் காணப்படுவதனை ஒழுங்குபடுத்துதல் போன்ற குறிக்கோளினை

நிறைவேற்றுவதற்கு உதவியாக இருக்கின்ற இறக்குமதி செய்த மருந்துகள் தொடர்பான தரவுத் தொகுதியானது அதிகார சபையிடம் காணப்படவில்லை.

7.7.9 அதிகாரச் சட்டத்தின் 59(4)(ஆ) உபபிரிவின் பிரகாரம் குறித்த ஒரு மருந்தினைப் பெற்றுக்கொள்ளும் போது அதன் தரத்தினைப் பரீட்சிப்பதற்காக அந்த மருந்தின் மாதிரியானது தேசிய மருந்துகளின் தரத்தினைப் பாதுகாக்கும் ஆய்வுகூடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் பதிவுசெய்வதற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து மருந்துகளின் தரத்தினைப் பரீட்சித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 2019 ஒக்தோபர் 15 ஆந் திதகி பதிவுசெய்த மாதிரிகளை ஆய்வுகூடத்திற்குச் சமர்ப்பித்தல் தொடர்பான வழிகாட்டியின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 93)** Meropenam For injection, Erythromycin, Thyroxin ஆகிய மருந்துகள் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விடயங்களின் அடிப்படையில் சில மருந்துகள் மாத்திரம் தரப் பரிசோதனைக்காக தேசிய மருந்துகளின் தரத்தை பாதகாக்கும் ஆய்வுகூடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் மேலும் அவதானிக்கப்பட்டன.

7.7.9.1 2022 ஆம் ஆண்டில் இருந்து 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை பதிவுசெய்வதற்குச் சமர்ப்பித்த 1,730 மருந்துகளில் 1646 மருந்துகள் அதாவது 95 சதவீதமான மாதிரி பரீட்சிப்பிற்காக தேசிய மருந்துகளின் தரத்தைப் பாதுகாக்கும் ஆய்வுகூடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என அதிகார சபையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

7.7.9.2 2022 சனவரியிலிருந்து 2023 செப்தெம்பர் வரையான காலப்பகுதியில் தேசிய மருந்துகளின் தரத்தை பாதுகாக்கும் ஆய்வுகூடங்களினால் பதிவுசெய்த சந்தர்ாப்பத்திலேயே சமர்ப்பித்த 76 மருந்து மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 16 மாதிரிகள் அல்லது 21 சதவீதம் தரமற்றதாக இருந்தது என ஆய்வுகூடத்தினால் பணிப்பாளர் சபைக்கு வழங்கிய தகவல்களின் பிரகாரம் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க பதிவுசெய்தலுக்காக அதிகார சபைக்கு சமர்ப்பித்த ஐந்து மருந்துகளில் ஒரு மருந்தின் தரம் தொடர்பாக ஆபத்து காணப்படலாம் என சாதாரணமாக முன்னைய முடிவுக்கு வரக்கூடியதாக இருந்ததுடன் மேலே குறிப்பிட்ட தரம் குறைந்த 16 மருந்து மாதிரிகளுக்கு மத்தியில் 12 மாதிரிகளுமே இறக்குமதி செய்யப்பட்ட மருந்தாக இருந்ததனால் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படுகின்ற மருந்துகளுக்கு நேரொத்ததாக இறக்குமதி செய்த மருந்துகளின் தரம் சம்பந்தமாக அதிக ஆபத்து காணப்படலாம் எனவும் அவதானிக்கப்பட்டது. **(பின்னிணைப்பு - 94)** எனவே தரம், பாதுகாப்பு, விளைத்திறன் என்பவற்றை உறுதிப்படுத்திய மருந்துகளை பொதுமக்களுக்கு வழங்குகின்ற குறிக்கோளை அடைந்து கொள்ளும் போது பதிவுசெய்யப்படுகின்ற மருந்துகளின் தரத்தை பரீட்சித்து உறுதிப்படுத்துதல் மிகவும் முக்கியமான காரணி என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.7.9.3 மாதிரிகளைப் பரீட்சிகாகது மருந்துகளைப் பதிவுசெய்ததன் காரணமாக தரம், பாதுகாப்பு மற்றும் வினைதிறன் தொடர்பான உறுதிப்படுத்தல் இல்லாது மருந்துகளை நாட்டிற்கு இறக்கமதி செய்யும் ஆபத்து காணப்படுகின்றது என மற்றும் தரம் தொடர்பாக சிக்கல்

உள்ளது என வெளிப்படுத்திய சந்தர்ப்பம் வரை அந்த மருந்துகளில் குறிப்பிடத்தக்க அளவானவை நோயாளிகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இவ்வாறு சிக்கல்கள் உருவாகும் அடிப்படையில் மருந்துகளை பயன்படுத்துவதிலிருந்து நீக்குதல், பயன்படுத்துவதனை தற்காலிகமாக கைவிடுதல், பயன்படுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளாதிருத்தல், மற்றும் இறக்குமதியாளர்களால் சுயமாகவே நீக்கிகொள்ளுதல் மேற்கொண்ட சந்தர்ப்பங்கள் பல ஆண்டுகளாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக பொழிப்பாக்கப்பட விபரம் கீழே தரப்படுகின்றது.

ஆண்டு	**மருந்துகளை பயன்படுத்துவதிலிருந்து நீக்குதல்**	**பயன்படுத்துவதனை தற்காலிகமாக கைவிடுதல்**	**பயன்படுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளாமை**	**இறக்குமதியாளர்களால் சுயமாக நிக்கிகொள்ளுதல்**	**சிக்கல் ஏற்பட்டுள்ள முழுச் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை**
2015	19	12	1	-	32
2016	15	13	2	-	30
2017	37	20	5	1	63
2018	31	24	2	-	57
2019	38	27	-	-	65
2020	24	28	-	3	55
2021	38	15	2	1	56
2022	23	17	4	-	44
2023.10.31 ஆந் திகதி வரை	23	17	1	5	46
மொத்தம்	248	173	17	10	448

7.7.10 உள்நாட்டு மருந்துகள் சம்பந்தமான அனைத்து விடயங்களுக்குமாக மத்திய வழிகாட்டுனராகச் செயற்படுகின்ற தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகாரச பையினால் மருந்துகளைப் பதிவுசெய்தல் மற்றும் பதிவினை நிராகரித்தல் ஆகிய சந்தர்ப்பங்களின் போது நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் அதன் காரணமாக அதிகார சபையினை ஸ்தாபிக்கும் குறிக்கோள்களுக்கு மத்தியில் அதிகாரச் சட்டத்தின் 3(எ) பிரிவின் மூலம் காட்டப்படுகின்றவாறு மருந்துகள் தொடர்பாக பொது மக்கள் சுகாதார உபசரிப்பு தொழில்வல்லுனர்கள் மற்றும் அது தொடர்பாக அக்கறைகாட்டுகின்ற அனைவர்களுக்கும் தெரியப்படுத்துதல் ஆகிய குறிக்கோள் போதியளவில் அடைந்துகொள்ளப்படவில்லை என மற்றும் உரிய தரப்பினர்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலம் ஒட்டுமொத்த

சுகாதாரத்துறைக்கும் கிடைக்கின்ற பிரதிபலன்கள் இழக்கப்படுகின்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றன.

7.7.10.1 அதிகாரச் சட்டத்தின் 60(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 95**) அதிகார சபையினால் மருந்துகளை பதிவுசெய்கின்ற சந்தர்ப்பத்தில் வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற பணிப்புரையின் மூலம் அந்த பதிவுசெய்தல் தொடர்பாக பொது மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய போதிலும் அதிகார சபையினால் இந்த பணிப்புரைத் தேவைப்பாடு முறைப்படியாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 2019 ஒக்தோபர் 09 ஆந் திகதிய 2144/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் அதுவரை அதிகார சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்த 7,378 மருந்துகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த போதிலும் **(பின்னிணைப்பு - 96)** அதன் பின்னர் அண்மைக்காலமாக கடந்த 04 ஆண்டுகள் கால பகுதியில் பதிவுசெய்த மருந்துகள் தொடர்பான விபரத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7.7.10.2 அதிகாரச் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 97)** அதிகார சபையினால் மருந்துகளைப் பதிவுசெய்தல், நிராகரிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அந்த நிராகரித்தல் தொடர்பான பணிப்புரையை வர்த்தமானியில் வெளியிடுவதன் மூலம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினை ஸ்தாபித்து கடந்துள்ள 08 ஆண்டுகளில் இந்த பணிப்புரைத் தேவைப்பாட்டினை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7.7.11 மருந்து மதிப்பீட்டுக் குழுவின் உள்ளடக்கம் அதன் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் கூட்டங்களுக்காக அங்கத்தவர்களின் பங்குபற்றல் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

7.7.11.1 தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 44(i)(ஆ)(ii) ஆம் உப பிரிவின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 98)** கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பீடாதிபதி அவர்களால் பெயரிடப்படுகின்ற 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருந்தியல் தொடர்பான ஒரு பேராசிரியர் மருத்துவ மதிப்பீட்டுக் குழுவினை பிரதிநிதித்துவம் செய்ய வேண்டிய போதிலும் 2023 ஆகஸ்ட் மாதத்திலிருந்து அந்த பணிப்புரைத் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

7.7.11.2 2022 சனவரி மாத்திலிருந்து 2023 ஆகஸ்ட் மாதம் வரை நடைபெற்ற 20 மருந்து மதிப்பீட்டுக் குழு கூட்டங்களுக்காக நியமிக்கப்பட்ட குழு அங்கத்தவர்களின் பங்குபற்றல் சில சந்தர்ப்பங்களில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் அவற்றில் 09 குழுக் கூட்டங்களுக்காக அங்கத்தவர்களின் பங்குபற்றல் 60 சதவீத்தினை விட குறைந்த சதவீத்தில் காணப்பட்டது. இது தொடர்பான விபரம் **பின்னிணைப்பு 99** இல் தரப்படுகின்றது.

7.7.11.3 அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் மூலம் **(பின்னிணைப்பு - 100)** உறுதியாக காட்டப்பட்டுள்ளவாறு காட்டப்பட்டுள்ளவாறு மதிப்பீட்டுக்குழு சுகாதாரத்துறையின் பல்வேறு பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நிபுணர்கள் மற்றும் அறிஞர்களை அங்கத்தவர்களாக கொண்டிருக்க வேண்டியதுடன் மேலுள்ளவாறு குழுவின் உள்ளடக்கம் பூரணமற்றுக் காணப்படல் மற்றும் அங்கத்தவர்களின் பங்குபற்றல் குறைந்த மட்டத்தில் காணப்படல், அக்குழுவினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களின் பிரயோசனத்தன்மை தொடர்பாக நிரூபிக்கப்படாத வகையில் தாக்கம் ஏற்படலாம் என்பது கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது.

7.8 மருந்துகளின் விலைகளை ஒழுங்குபடுத்தும் நடைமுறை

அரசாங்கத்தின் தேவைப்பாட்டிற்காக மருந்துகளை பெறுகை செய்யும் போதும் பொதுமக்களினால் பயன்படுத்துவதற்காக மருந்துகளைக் கொள்வனவு செய்யும் போதும் கவனித்தப்பார்க்கப்படுகின்ற மிகவும் உணர்வுத்தன்மையானதும் தீர்மானமிக்கதுமான காரணியாக மருந்துகளின் விலையை ஒழுங்குபடுத்துவதற்காக தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 118 ஆம் பிரிவின் மூலம் **(பின்னிணைப்பு - 101)** ஒழுங்குபடுத்துதல் அதிகார சபைக்கு உரிய அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

7.8.1 அதிகார சபையினால் 2016 ஆம் ஆண்டின் போது முதல் தடவையாக 48 மருந்து வகைகளையும் பின்னர் இன்னும் 12 மருந்து வகைகளையும் உள்ளடக்கி பட்டியல்படுத்தப்பட்ட 60 மருந்து வகைகளுக்காக உச்ச அளவு சில்லறை விலை வர்த்தமானியின் மூலம் நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிலிருந்து சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டுக் காணப்பட்டது. **(பின்னிணைப்பு - 102)** எனினும் இந்த 60 மருந்துகளுக்கு மேலதிகமாக அண்மைக் காலத்தில் 04 ஆண்டுகள் காலத்தினுள் உள்நாட்டில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்ற மற்றும் நோயாளிகளுக்கு அதிகளவில் செலவு செய்ய வேண்டி ஏற்படுகின்ற மருந்து வகைகளையும் இனங்கண்டு வியாபாரம் பெயரிற்கு இணங்க மாற்றம் ஏற்படாத உச்ச அளவு சில்லறை விலையினை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7.8.2 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய மருந்து 2086/37 ஆம் இலக்க கேள்வி விலையை நிர்ணயிக்கும் பணிப்புரையின் மூலம் **(பின்னிணைப்பு - 103)** 10 மருந்துகளுக்காக உச்ச அளவு பெறுகை விலையினை நிர்ணயித்து வர்த்தமானியில் வெளியடப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது அவற்றில் ஒரு மருந்திற்காக ஏனைய ஒரு மருந்தினை பதிலீடாக்குவதன் மூலம் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 104)** எனினும் அதன் பின்னர் உச்ச அளவு பெறுகை விலை சம்பந்தமாக அதிகார சபையினால் எந்த மீளாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் நிகழ்காலத்தில் அரசாங்கத்தின் மருந்து

தேவைப்பாடுகளையும் கவனத்திற்கு எடுத்து புதிய விடயங்களை உள்ளடக்கும் வகையில் பெறுகை விலையை நிர்ணயிக்கும் பணிப்புரையை திருத்தம் செய்யும் தேவைப்பாடு தொடர்பாக அதிகார சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

7.8.3 உருவாகியுள்ள பொருளாதார சிக்கலில் அண்மைக் காலமாக இடம்பெற்றுள்ள நாணய மாற்று விகிதம் அதிகரித்துச் செல்வதன் காரணமாக 2022 ஆம் ஆண்டின் போது பட்டோலைப்படுத்தப்பட்ட மருந்துகளின் உச்ச அளவு சில்லறை விலை இரண்டு சந்தர்ப்பங்களின் போது அதிகரிக்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 105)** மற்றும் அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏனைய மருந்துக்களின் விலையும் நிர்ணயிக்கப்பட்ட சதவீதத்தினால் அதிகரிக்கச் செய்வதற்கு அனுமதி வழங்கி அதிகார சபையினால் இலங்கை மருந்துக் கைத்தொழில் சபைக்கு (Sri Lanka Chamber of Pharmaceutical Industry) தெரியப்படுத்தப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 106)** எனினும் 2023 யூன் 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட அண்மைய விலைத் திருத்தத்தின் மூலம் **(பின்னிணைப்பு - 107)** பட்டியல் படுத்தப்பட்ட 60 மருந்துகளின் உச்ச அளவு சில்லறை விலை 16 சதவீத்தினால் **(பின்னிணைப்பு - 108)** குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் ஏனைய மருந்துகளின் விலையைக் குறைக்குமாறு இலங்கை மருந்துக் கைத்தொழில் சபைக்கு தெரியப்படுத்துவதற்கு அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் மூலம் அதிகார சபையின் விலை ஒழுங்குபடுத்துதலின் வெளிப்படைத்தன்மை தொடர்பாக சிக்கல் உருவாகியிருந்ததுடன் அதிகார சபையினால் அதிகாரச் சட்டத்தின் 3(அ) பிரிவின் மூலம் எதிர்பார்த்தவாறு பொதுமக்களுக்கு நியாயாமான விலைக்கு மருந்துகளை வழங்கும் குறிக்கோளுக்குப் புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் இது பொதுமக்களுக்கு கிடைக்க கூடியதாக இருந்த விலை பிரதிபலன்கள்மருந்துக் கம்பனியால் வைத்துக்கொள்ளச் செய்வதற்கு சந்தர்ப்பத்தினை வழங்குதல் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.8.4 அதிகாரச்சட்டத்தின் 14 (கீ) மற்றும் 118(2)(அ) உப பரிவின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 109)** ஒரு மருந்தின் விலையை நிர்ணயிக்கும் கடமை அதிகார சபைக்கு உரிதாக இருந்த போதிலும் அக்கடமை முறைப்படியாக நிறைவேற்றப்படாமையின் காரணமாக உச்ச அளவு சில்லறை விலை நிர்ணயிக்கப்படாத 765 மருந்துகள் சந்தையில் காணப்படுகின்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. விலையை ஒழுங்குபடுத்துதல் சம்பந்தமாக அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தினை நிரூபிக்ககூடிய வகையில் பயன்படுத்தாமையின் காரணமாக இந்த மருந்துகளுக்காக உரிய கம்பனியால் வேண்டிக்கொள்ளப்பட்டிருந்த விலைகள் அதிகார சபையினால் வழங்கக் கூடிய உச்ச அளவு சில்லறை விலைகள் சம்பந்தமாக இன்றுவரை கலந்துரையாடல் மட்டத்தில் காணப்பட்டது. எனவே இந்த மருந்துகள் இன்றுவரை சந்தையில் உயர்ந்த விலைக்கு விற்பனை செய்யும் ஆபத்துக் காணப்படுவதுடன் இந் நிலைமையானது நியாயமான விலைக்கு பொதுமக்களுக்கு மருந்துகள் வழங்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும் குறிக்கோளினை நிறைவேற்றும் போது தடை ஏற்படும் வகையிலான ஒரு காரணி என மேலும் அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றன.

அட்டவணை இலக்கம் - 12: உச்ச அளவு சில்லறை விலை நிர்ணயிக்கப்படாத மருந்துகளின் எண்ணிக்கை

விபரம்	மருந்துகளின் எண்ணிக்கை
பதிவுசெய்த சந்தர்ப்பத்தின் போது உச்ச அளவு சில்லறை விலை நிர்ணயிக்கப்படாதவை	319
வருடாந்த இறக்குமதி அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் போது உச்ச அளவு சில்லறை விலை நிர்ணயிக்கப்படாதவை	446
	765

7.8.5 அதிகாரச் சட்டத்தின் 118(2)(அ) உபபிரிவின் பிரகாரம் அதிகார சபையினால் விலை நிர்ணயிக்கும் குழுவின் சிபாரிசினை விசாரித்து மருந்துகளின் விலையை நிர்ணயித்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இதற்காக 2021 ஆம் ஆண்டின் போது நியமிக்கப்பட்ட விலை நிர்ணயிக்கும் குழுவின் பதவிக் காலம் 2023 மே 14 ஆந் திகதியுடன் முடிவடைந்து இருந்ததனால் 2023 மே 19 ஆந் திகதிய பணிப்பாளர் சபை அங்கிகாரத்தின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 110)** 2023 யூன் 14 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் புதிய விலை நிர்ணயிக்கும் குழு நியமிக்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 111)** எனினும் இந்த விலை நிர்ணயிக்கும் குழுவின் சிபாரிசினை விசாரணை செய்யாது 2023 யூன் 16 ஆந் திகதி அதிகார சபையினால் 159 மருந்துகளுக்கு உச்ச அளவு சில்லறை விலையை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 112)** அதற்கிணங்க செல்லுபடியாகும் ஒரு விலைக் குழு காணப்பட்டிருந்தும் அதன் சிபாரிசினைப் பெற்றுக்கொள்ளாது மருந்துகளின் உச்ச அளவு சில்லறை விலையை நிர்ணயிப்பதன் மூலம் அதிகார சபையினால் விலையை நிர்ணயிக்கும் குழுவின் அதிகாரத்தினை கவனத்தில் கொள்ளாது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் இதன் மூலம் அதிகார சபையின் மருந்துகளுக்கு விலையிடும் நடைமுறையின் வெளிப்படைத்தன்மை தொடர்பாக ஆபத்து காணப்படலாம் எனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.8.6 பட்டியல்படுத்தப்பட்ட 60 மருந்து வகைகளைத் தவிர்த:து மிகுதியான மருந்துகளின் அறிமுகப்படுத்தப்பட்ட உச்ச அளவு சில்லறை விலை மருந்தின் பதிவுசெய்த சான்றிதழில் குறிப்பிடப்படுவதுடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் வருடாந்த இறக்குமதி அனுமதிப்பத்திரத்திலும் திருத்தம் செய்யப்படும். எனினும் இந்த உச்ச சில்லறை விலையினை பொது மக்களுக்கு தெரியப்படுத்தும் நடைமுறை அதிகார சபையினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. உச்ச சில்லறை விலை என்பது எப்போதும் பாவனையாளர்களுக்குரிய ஒரு காரணி என்பதனால் அது தொடர்பாக தெரியப்படுத்த வேண்டிய பிரதான தரப்பினர் பொதுமக்கள் என்பதுடன் இந்த விலையினை தொடர்பாடல் செய்வது வினைத்திறனாக நிறைவேற்றப்படாமையால் அதிகார சபையினால் விசேட முயற்சி எடுத்து மேற்கொள்ளப்படுகின்ற உச்ச சில்லறை விலையின் உண்மையான பிரதிபலன் பொதுமக்களுக்கு கிடைக்காமல் போகலாம் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

அதிகாரசபையின் உத்தியொகபூர்வ இணையத்தளத்தினை இச்செயற்பாட்டிற்காக வினைத்திறனாக ஈடுபடுத்தலாம் எனவும் அதன் மூலம் ஒரு மருந்தின் உற்பத்தியாளர், உள்நாட்டு முகவர், வியாபாரப் பெயர் போன்ற ஏனைய ஒவ்வொரு தகவலும் உள்ளடக்கப்பட்டிருந்தும் உச்ச சில்லறை விலையினை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் மூலம் அதிகாரசபை இந்த விலையை தொடர்பாடல் செய்வது தொடர்பாக எந்த கவனமும் செலுத்தியிருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது.

7.8.7 அதிகார சபையினால் மருந்துகளின் உச்ச சில்லறை விலையினை நிர்ணயிப்பதற்காக பொருத்தமான விலைச் சூத்திரத்தினை அறிமுகப்படுத்த வேண்டுமென இலங்கை மருந்துக்கைத்தொழில் சபையினால் 2021 ஒக்தோபர் 05 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் ஒரு பிரேரணை கோவை செய்யப்பட்டிருந்தது. 2023 செப்தெம்பர் 14 ஆந் திகதி வரை இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் அத்திகதி வரை நடைமுறைச் சாத்தியமான மற்றும் பொருத்தமான விலைச்சூத்திரத்தினை தயாரித்து அங்கீகரிக்கச் செய்வதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்ததுடன் இதன் காரணமாக 2023 திசெம்பர் 14 ஆந் திகதி நீதிமன்றத்தினால் விலை நிர்ணயிக்கும் நடவடிக்கைகளிலிருந்து தற்காலிகமாக தவிர்ந்து இருக்குமாறு ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபைக்கு உப கட்டளை வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க அதிகார சபையினால் மருந்துகளுக்காக நிர்ணயிக்கப்படுகின்ற உச்ச சில்லறை விலையின் நியாயத்தன்மை மற்றும் சரியான தன்மையானது சவால்களுக்கு உள்ளாகும் ஆபத்திற்கு முகங்கொடுத்துள்ளது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.8.8 2019 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 2146/3 ஆம் இலக்க விலை நிர்ணயிக்கும் **(பின்னிணைப்பு - 113)** பணிப்புரையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகபூர்வ அதிகாரத்தினால் நியமிக்கப்படுகின்ற பாவனையாளர் செயற்பாட்டு அதிகார சபையின் ஒரு முகவரினை விலைக் குழுவிற்கு நியமிக்க வேண்டும் எனவும் 2023 யூன் 14 ஆந் திகதி நியமிக்கப்பட்ட புதிய விலைக் குழுவிற்கு அந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 2023 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 10 விலைக் குழுக் கூட்டங்களுக்காக அந்த முகவர்களின் பங்குபற்றல் கிடைத்திருக்கவில்லை. அதன் காரணமாக 470 மருந்துகளின் விலை சம்பந்தமாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கு அந்த பிரதிநிதித்துவம் கிடைத்திருக்காததுடன் இலங்கையில் வியாபாரம் மற்றும் விலை ஒழுங்குபடுத்தலின் மூலம் பாவனையாளர்களுக்கு மிகவும் சிறந்த பாதுகாப்பினை வழங்கும் குறிக்கோளுடன் அமுல்ப்படுத்துகின்ற பாவனையாளர் செயற்பாட்டு அதிகார சபையின் பிரதிநிதித்துவம் இல்லாது மருந்துகளின் விலை தொடர்பாக தீர்மானம் எடுத்தல், மருந்துப் பாவனையாளர்கள் சம்பந்தமாக நிரூபிக்கும் விடயம் இல்லாது எனினும் அதிகார சபையினால் இந்த பிரதிநிதித்துவத்தின் தேவைப்பாட்டினை முன்னிலைப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றன.

அட்டவணை இலகக்ம் - 13 : பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பிரதிநிதியின் பங்குபற்றல் இன்றி விலை நிர்ணயிக்கப்பட்ட மருந்துகளின் எண்ணிக்கை

கூட்டத் திகதி	**பதிவுசெய்த சந்தர்ப்பத்தின் போது விலை நிர்ணயிக்கப்பட்ட மருந்துகள்**	**வருடாந்த இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் போது விலை நிர்ணயிக்கப்பட்ட மருந்துகள்**	**மொத்தம்**
2023.08.09	121	11	132
2023.08.21	56	127	183
2023.09.21	70	85	155
மொத்தம்	247	223	470

7.8.9 மேலுள்ள பணிப்புரையின் 9(ஈ) பந்தியின் பிரகாரம் விலை நிர்ணயிக்கும் குழுவினால் இலங்கையில் ஏதாவது ஒரு மருந்தின் உற்பத்தி அல்லது மருந்து உற்பத்தி தொகுதியினை பயன்படுத்துதல் தொடர்பாக தரவுகளைச் சேகரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே உச்ச சில்லறை விலை நிர்ணயிக்கக்கூடிய பட்டியல்படுத்தப்பட்ட மருந்துகளுக்கு மத்தியில் உள்ளடக்கப்பட வேண்டிய புதிய மருந்து வகையை இனங்காணக்கூடிய நடைமுறைச்சாத்தியமான ஒரு அடிப்படையினை வழங்குகின்ற முறையான ஒரு தரவு முறைமை அதிகார சபையிடம் இருக்கவில்லை.

7.8.10 மேலுள்ள பணிப்புரையின் 10 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு மருந்து உற்பத்தியை பதிவுசெய்த சான்றிதழினை வைத்திருத்தல் அல்லது உள்நாட்ட உற்பத்தியாளரினால் குறித்த பதிவுசெய்யப்பட்ட மருந்து உற்பத்தி செய்யப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட அல்லது சந்தைக்கு வழங்கப்பட்ட அளவு தொடர்பான அறிக்கை ஒவ்வொரு ஆறு மாத்திற்கு ஒரு தடவை அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எனினும் இந்த ஒழுங்கபடுத்துதல் தேவைப்பாடு கணக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 30 ஆந் திகதி வரை நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் அதிகார சபையினால் இந்த அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு உரிய தகவல்களின் வாயிலாக முறையான ஒரு தரவு முறைமையினை ஸ்தாபிப்பதற்கும் பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் பொருத்தமான ஒரு பொறிமுறையினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7.9 மருந்துகளின் தரத்தினை பரீட்சிக்கும் நடைமுறை

தேசிய ஔடதங்களை ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 39 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 114)** மருந்துகளைப் பதிவுசெய்வதற்காகச் சமர்ப்பிக்கும் போது, நாட்டிற்குள் கொண்டுவரும் போது பயன்படுத்துபவர்களால் முறைப்பாடாகச் சமர்ப்பிக்கும் போது, விற்பனைக்குப் பிந்திய மீளாய்வினை நடாத்தும் போது மற்றும் ஏனைய சந்தர்ப்பத்திற்கேற்ற விடயங்களின் அடிப்படையில் அதிகார சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற மருந்துகளின் தரம் தொடர்பாக பரீட்சிப்புக்களை நடாத்துதல் தேசிய

மருந்துகளின் தரத்தை பாதுகாக்கும் ஆய்வுகூடத்தின் பிரதான கடமையாகும். ஒரு மருந்தின் தரம் தொடர்பான சிக்கல்கள் உருவாகும் சந்தர்ப்பத்தில் அந்த மருந்தின் பயன்பாடு தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு அதிகார சபையினால் இந்த ஆராய்ச்சி அறிக்கை பயன்படுத்தப்படுவதுடன் அத்தீர்மானம் உள்நாட்டு சுகாதார முறைமையில் ஒரு தீர்மானமிக்க காரணியாகும். அதற்கிணங்க மருந்துகளை ஒழுங்குபடுத்துவதற்காக அதிகார சபைக்கு உதவியளிக்கின்ற அதன் ஒரு பிரதான பிரிவான தேசிய மருந்துகளின் தரத்தை பாதுகாக்கும் ஆய்வுகூடத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

7.9.1 இந்த ஆய்வுகூடத்தின் நியமதரம் சம்பந்தமாக இணக்கப்பாட்டு மதிப்பீட்டு சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை ஒப்புதல் அறிவித்தல் சபைக்கு (Sri Lanka Accreditation Board) 2020 ஆம் ஆண்டின் போது விண்ணப்ப பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்புதல் அளித்தல் சபையினால் 2021 நவம்பர் 26 ஆந் திகதி முன்னைய இணக்கப்பாட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் போது ISO 17025/2017 ஆம் இலக்க சர்வதேச நியமங்கள் **(பின்னிணைப்பு - 115)** வரையின் கீழ் இனங்காணப்பட்ட பிரதான பற்றாக்குறையை பூரணப்படுத்திக்கொள்வதற்காக அதிகார சபைக்கு 02 மாத காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையினால் உரிய வரையறைகளை பூரணப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. ஒப்புதல் அளித்தல் சபையினால் முன்னைய இணக்கப்பாட்டு மதிப்பீட்டிற்காக மேலதிக சந்தர்ப்பத்தை அதிகாரசபைக்கு வழங்குவதற்காக 2022 ஒக்தோபர் 17 அந் திகதி விருப்பு வெளிப்படுத்தப்பட்டிருந்தும் ஆய்வுகூடத்தில் காணப்பட்ட ஆளணியினர் தட்டுப்பாட்டின் காரணமாக உரிய மதிப்பீட்டினை பிற்போடுமாறு 2023 யூன் 30 ஆந் திகதி அதிகார சபையினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. எனினும் ஒப்புதல் அளித்தல் நடைமுறைக்கு இணங்க மேலும் பிற்பொடுவதற்கு முடியாதிருந்ததனால் ஒப்புதல் அளித்தல் தேவைப்பாட்டினை பூரணப்படுத்தி மீண்டும் விண்ணபிக்குமாறு குறிப்பிட்டு 2023 செப்தெம்பர் 26 ஆந் திகதி ஒப்புதல் அளித்தல் சபையினால் அந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டிருந்தது.

7.9.1.1 அதற்கிணங்க வேண்டிக்கொள்ளப்பட்டு 04 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திரந்தும் இணக்கப்பாட்டு மதிப்பீட்டு சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் ஆய்வுகூடத்தில் நியமங்களை அதிகரிப்பதற்கு அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் ஆராய்ச்சி ஆய்வுகூடத்தில் காணப்பட வேண்டிய சர்வதேச நியமங்கள் மட்டத்தினை அடைந்துகொள்வதற்கு ஆய்வுகூடத்திற்கு முடியாதிருந்தது. எனவே ஒப்புதல் அளித்தலின் மூலம் வழங்கப்படுகின்ற பிழையான பரீட்சிப்பு பெறுபேறுகள் கிடைக்கும் ஆபத்து குறைவடைதல், கிரயம் குறைவடையும் மற்றும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்வதற்கு உள்ளாகுதல் போன்ற பிரதிபலன்கள் தேசிய மருந்துகளின் தரத்தை பாதுகாக்கும் ஆய்வுகூடத்தினால் இழக்கப்படாம் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.9.1.2 2021 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட முன்னைய இணக்கப்பாட்டு மதிப்பீட்டின் போது ஒப்புதல் அளித்தல் சபையினால் இனங்காணப்பட்ட சில குறைபாடுகள் கணக்காய்வுத் திகதி வரை பூரணப்படுத்தப்பட்டிருக்காததுடன் அதற்கிணங்க ஆய்வுகூடத்தினால் தமது ஆராய்ச்சி

நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுக்குப் புறம்பாக பேணி வருகின்றது என அவதானிக்கப்பட்டது. சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) ஒப்புதல் அளித்தல் விடயப் பரப்பானது புதிய பிரித்தானிய மருந்துக்கலவை நியமத்துடன் (British Pharmacopoeia-BP) நாளதுவரையாக்கப்பட்டிருக்காமை

(ii) ஆளணியினரின் நிபுணத்துவத்தினை உறுதிப்படுத்தாமை மற்றும் உரிய அனைத்து தனித்தன்மையான வரையறைகளையும் உள்ளடக்கும் வகையில் சிறக்குமியல்பு பரீட்சிப்புக்கள் (Proficiency Testing-PT) மற்றும் ஆய்வுகூடங்களுக்கிடையிலான ஒப்பீடுகளுக்காக (Inter Laboratory Comparison–ILC) பங்கு பற்றியிருக்காமை.

(iii) அத்தியாவசியமான பிரதான உபகரணங்கள் செயற்பாடற்ற நிலையிலும் பராமரிப்பு மட்டத்திலும் காணப்படல்

(iv) மத்திய வாயு சீராக்கி முறைமை செயற்பாடற்று காணப்படுவதன் காரணமாக ஆய்வுகூடத்தினுள் பொருத்தமான சுற்றாடல் நிலைமை காணப்படாமை

7.9.2 தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபை மற்றும் தேசிய மருந்துகளின் தரத்தை பாதுகாக்கும் ஆய்வுகூடத்திற்காக 23 மாடிகளைக் கொண்ட ஒரு புதிய கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவுகள் அரசாங்கத்தின் கொள்கைரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டாதிருந்ததுடன் பின்னர் கமத்தொழில் அமைச்சிற்குச் சொந்தமான நாரஹேன்பிட பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு காணியை இதற்காக பெற்றுக்கொள்வதற்கு கலந்துரையாடப்பட்டிருந்தது. எனினும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்துவது சம்பந்தமான சிக்கலின் காரணமாக அந்த முன்மொழிவும் பயன்னற்றதாக இருந்தது. எனவே காணப்படுகின்ற ஆய்வுகூடத்தை தேவைக்கேற்ற வகையில் மேம்படுத்தி பராமரிப்பதற்கு பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தும் போதியளவு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக கணக்காய்வுத் திகதி வரையும் வினைத்திறனாக ஆராய்ச்சி சேவையை பேணுவதற்கு தடை ஏற்படும் வகையில் பின்வரும் பற்றாக்குறைகள் மற்றும் குறைபாடுகள் காணப்பட்டன.

7.9.2.1 மருந்து பகுப்பாய்விற்காக பயன்படுத்தப்படுகின்ற சிக்கலான பல உபகரணங்கள் மிகவும் பழைமையானதுடன் சில உபகரணங்கள் செயற்பாடற்றும் திருத்தம் செய்ய முடியாத மட்டத்திலும் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக ஆய்வுகூடத்தின் பிரதான பிரிவுகளில் பகுப்பாய்வு நடவடிக்கைகளை மெதுவாக பேணிச் செல்வதற்கு அத்தியவசியமான 18 உபகரணங்கள் தட்டுப்பாடாகக் காணப்பட்டன. இது தொடர்பான விபரம் அட்டவணை இலக்கம் 14 இல் தரப்படுகின்றன.

அட்டவணை இலக்கம் - 14: ஆராய்ச்சிக்கூடங்களுக்குத் தேவையான உபகரண விடயங்கள்

பிரிவு	தட்டுப்பாடான விடயங்களின் எண்ணிக்கை	தட்டுபாடான விடயங்களுக்கான சில உதாரணங்கள்
உயிரியல் பிரிவு	4	Dry Block heater, Vacuum Pump, Hot Plate with Magnetic Stirrer, PH meter with printer, UV- Visible Spectrophotometer, Atomic Absorption Spectrophotometer, Digital Polari meter, Water bath single raw, Centrifuge, Top Pan Balance, Heating Mantle, Stop watch
இரசாயனவியல் பிரிவு	8	
நுண் உயிரியல் பிரிவு	6	
	18	

7.9.2.2 பயன்படுத்த முடியாத மட்டத்தில் காணப்பட்ட 29 உபகரண விடயங்களை திருத்தம் செய்யும் நடவடிக்கை முடிவடைந்திருக்காததுடன் சில விடயங்கள் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தப்படாது காணப்பட்டன. **(பின்னிணைப்பு - 116)** பயன்படுத்தப்பட்டு வருகின்ற 16 இயந்திரங்களின் வருடாந்த முறைமைப்படுத்தல் நடவடிக்கையை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பூரணப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. **(பின்னிணைப்பு - 117)**

7.9.3 மருந்துகளை ஒழுங்குபடுத்துதல் தொடர்பாக உதவியாக இருக்கின்ற முக்கியத்துவமான ஆராய்ச்சி அறிக்கையினை வழங்குகின்ற தேசிய மட்டத்திலான ஆய்வு கூடத்தின் நியமதிற்கு இணக்கமற்ற வகையில் மற்றும் பரீட்சிப்பு பெறுபேறுகள் தொடர்பாக பாதகமான தாக்கம் ஏற்படக்கூடிய வகையிலான சுற்றாடல் தேசிய மருந்துகளை பாதுகாக்கும் ஆய்வுகூடத்தில் உருவாகியுள்ளது என ஆய்வு கூட சுற்றாடல் சம்பந்தமாக மேற்கொண்ட பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறான சில விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) மத்திய வாயு சீராக்கி முறைமை செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் சில பிரிவுகளில் பொருத்தப்பட்டுள்ள வாயு சீராக்கி இயந்திரங்களம் ஆய்வுகூடங்களுக்குள் வெப்பத்தை கட்டுபடுத்த முடியாதிருந்ததுடன் அதன் மூலம் சிக்கலான பகுப்பாய்வினை மேற்கொள்ளும் இயந்திரங்கள் காணப்படுவதற்கும் தடை ஏற்பட்டிருத்தல்

(ii) திடீர் மின்சார துண்டிப்புக்கள் இடம்பெறுதல் மற்றும் சில பிரிவுகளுக்கு மின்சாரத்தினை வழங்குதல் தடைப்பட்டிருந்ததன் காரணமாக ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகு தடை ஏற்படுதலும் இயந்திரங்கள் பலவீனமடைதலும்

(iii) இரசாயனப் பொருள் களஞ:சியங்களில் வெப்பம் அதிகரித்துச் செல்வதன் காரணமாக திண்மமாகக் காணப்பட வேண்டிய இரசாயனப் பொருட்கள் திரவமாகி அழிவடைதல் மற்றும் இரசாயன வலிமை குன்றியிருத்தல்

(iv) சில மின்சார பல்புகள் செயற்படாது காணப்பட்டதன் காரணமாக போதியளவு வெளிச்ச நிலைமை இல்லாதிருத்தல் சுத்தமான காற்றோட்டம் மற்றும் போதியளவான வாயு சுழற்சி இல்லாமையின் காரணமாக பரீட்சிப்பிற்காகவும் ஆளணியினருக்கும் சாதகமான சுற்றாடல் இல்லாதிருத்தல்

(v) ஆய்வுகூடத்தினுள் மழைநீர் கசிவதன் மூலம் அதன் உட்கூரைகள், சுவர்கள் மற்றும் சில பொருத்திகள் உடைந்திருத்தலும், நீர் வடிகாட்டி (water distiller), நீர்க்குழாய், மற்றும் கழிவு நிர் குழாய்களில் நீர் கசிவதன் காரணமாக அசுத்தமான சுற்றாடல் உருவாகியிருந்த்தல்

அதற்கிணங்க அதிகாரசபையிடம் போதியளவு நிதி வலிமை காணப்பட்டிருந்தும் பல ஆண்டுகளாக காணப்படுகின்ற இக்குறைபாடுகளை நிறைவேற்றுவதற்கு வெற்றிகரமாக முயற்சி எடுக்கப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.9.4 சுகாதார அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டிடிருந்த தேசிய மருந்துகளின் தரத்தைப் பாதுகாக்கும் ஆய்வுகூடம் 2015 ஆம் ஆண்டின் போது மரந்துகளை ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் மூலம் தேசிய ஒளடதங்களை ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் கீழ் நியமிப்பதற்கு முன்னராக 70 நபர்களைக் கொண்ட ஆளணியை உள்ளடகியிருந்ததுடன் அவர்களில் 42 நபர்கள் பரீட்சிப்பு நடவடிக்கைகளுக்காக நேரடியாக சம்பந்தப்படுகின்ற மற்றும் அதுசார்ந்த தீர்மானம் எடுகின்ற ஆளணியினரை உள்ளடக்கும் உத்தியோகத்தர்களாகும். ஆய்வுகூடத்தின் தற்போதைய ஆளணியினர் சம்பந்தமான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

7.9.4.1 அதிகார சபைக்கு கீழ் கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பத்தில் சில உத்தியோகத்தர்கள் ஆய்வுகூடத்திலிருந்து நீங்குதல் மற்றும் பின்னைய காலத்தில் உத்தியோகத்தர்கள் ஆய்வு பெற்றுச் செல்வதன் மூலம் உருவாகின்ற வெற்றிடங்கள் காலலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக ஆய்வுகூடத்தில் ஆளணியினர் வேகமாக குறைவடைந்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 22 உத்தியோகத்தர் வரை குறைவடைந்திருந்தனர். அது ஆய்வுகூடத்தினை அதிகாரசபைக்கு ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தின் போது சேவையில் ஈடுபட்டிருந்த ஆளணியினர்களுடன் ஒப்பிடும் போது 52 சதவீதம் மாத்திரமாகும்.

7.9.4.2 2023 ஆகஸ்ட் 22 ஆந் திகதி தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட புதிய ஆளணியினருள் **(பின்னிணைப்பு - 118)** ஆய்வுகூடத்திற்காக நேரடியாக இணைத்துக்கொள்ளக்கூடிய 54 உத்தியோகத்தர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தனர். எனினும் உரிய ஆட்சேர்ப்புக்களை தொடர்ச்சியாக தாமதித்ததன் காரணமாக கணக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 30 அந் திகதி வரை ஆய்வுகூடத்தின் ஆளணியினர் 11 நபர்கள் வரை குறைவடைந்திருந்தனர். அது அங்கீகரித்த ஆளணியினர்களுடன் ஒப்பிடும் போது 20 சதவீதம் அளவிலானதாகும். இது தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

அட்டவணை இலக்கம் - 15: ஆராய்ச்சிக்கூட பதவியணியினர் விபரம்

பதவி	2015.06.30 ஆந் திகதியில் உள்ளவாறான ஆளணியினர்	2022.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான ஆளணியினர்	2023.08.22 ஆந் திகதியில் உள்ளவாறான ஆளணியினர்	2023.11.30 ஆந் திகதியில் உள்ளவாறான ஆளணியினர்
பணிப்பாளர்	1	1	1	1
பிரதிப் பணிப்பாளர்	1	1	-	-
பகுதித் தலைவர்	5	-	-	-
மருந்துப் பகுப்பாய்வாளர்	8	6	20	5
உதவி மருந்துப் பகுப்பாய்வாளர்	-	-	25	-
மருந்துக் கலவையாளர்	27	14	-	5
ஆய்வுகூட உதவியாளர்	-	-	08	-
மொத்தம்	**42**	**22**	**54**	**11**

7.9.4.3 பொருத்தமான பயிற்சி வாய்ப்புக்கள் வழங்காமையின் மூலம் ஆய்வுகூட உத்தியோகத்தர்களின் அறிவினை நாளதுவரையாக்குதல் மற்றும் தொழில்நுட்ப அறிவினை பரிமாற்றம் செய்தல் தொடர்பாக அதிகார சபை போதிய கவனம் செலுத்தியிருக்கவில்லை.

7.9.5 உலக சுகாதார அமைப்பினால் 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட அளவீடுகளைக் குறித்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு (Benchmarking) இணங்க தேசிய மருந்துகளின் தரத்தை பாதகாக்கும் ஆய்வுகூடம் சம்பந்தமாக அமுல்ப்படுத்தப்பட வேண்டிய 15 பிரதான சிபாரிசுகளும் முன்மொழியப்பட்டு இருந்தன. இந்த அனைத்து முன்மொழிவுகளும் ஆய்வுகூடத்தின் நடவடிக்கைகளை மிகவும் முறைப்படியாக வினைத்திறனாக மற்றும் வெளிப்படைத்தன்மையாக மேற்கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குகின்றன. எனினும் அந்த சிபாரிசுகளைச் சமர்ப்பித்து 04 ஆண்டுகள் கடந்திரந்தும் அதிகார சபையினால் அவற்றினை அமுல்ப்படுத்துவதன் மூலம் ஆய்வுகூடத்தின் நடவடிக்கைகளை மிகவும் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க கணக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அந்த சிபாரிசுகளுக்கு மத்தியில் 03 சிபாரிசுகள் அரைவாசியாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் 10 சிபாரிசுகள் முழுமையாக

அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. **(பின்னிணைப்பு - 119)** அதற்கான உதாரணங்களில் சில கீழே தரப்படுகின்றன.

(i) பரீட்சிப்புக்களின் தரம் தொடர்பாக நேரடியாக தாக்கம் ஏற்படுத்தக்கூடிய அனைத்து சுற்றாடல் நிலைமைகளையும் ஆய்வுகூடத்தினால் கட்டுப்படுத்தக்கூடியதாக இருத்தல் மற்றும் அதற்காக ஒரு நடைமுறை இருத்தல் வேண்டும்.

(ii) ஆய்வுகூட களஞ்சிய முறைமையை மேம்படுத்துதல் வேண்டும்

(iii) நிர்ணயிக்கப்பட்ட மாதிரிகளை களஞ்சிய முகாமைத்துவ நடைமுறைகளை திருத்தம் செய்தல், பரீட்சிப்பு வரையறைகள் மற்றும் மாதிரிகளை நிறுத்திவைக்கும் நடைமுறைகளை அமுல்ப்படுத்துதல் வேண்டும்.

(iv) ஆய்வுகூட அறிக்கையிடுதலுக்கான செயற்பாட்டு நடைமுறைகளை திருத்தம் செய்தல் வேண்டும். .

(v) தொடக்க மற்றும் இரண்டாம் புலனாய்வு நியமங்களுக்கான போக்கு பகுப்பாய்வு நடைமுறைகளை உள்ளடக்கி செயற்பாட்டு நடைமுறைகளை திருத்தம் செய்தல் வேண்டும்.

(vi) இரசாயன பொருட்களை பாதுகாப்பாக நகர்த்துதல், போக்குவரத்து செய்தல், களஞ:சியப்படுத்துதல், ஆபத்தான பொருட்களை அப்புறப்படுத:துவதனை ஒழங்குபடுத்துவதற்காக செயற்பாட்டு நடைமுறைகளைத் திருத்தம் செய்தல் வேண்டும்.

(vii) ஆய்வுகூட ஆளணியினருக்காக காப்புரிமை நிகழ்ச்சித் திட்டங்களை ஸ்தாபித்தல், அமுல்ப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் .

(viii) கட்டுப்படுத்தப்பட்ட நிலைமையின் கீழ் ஆய்வுகூடத்திடம் தனியான நிறையிடும் அறை இருத்தல் வேண்டும்.

(ix) வெளி ஆய்வுகூடங்கள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகளுக்காக விபரக் குறிப்புக்கள் அல்லது வரையறைகள் தொடர்பாக தெளிவான தகவல்களை வழங்குவதற்கு செயற்பாட்டு நடைமுறையினை திருத்தம் செய்தல் வேண்டும்.

7.9.6 ஆய்வுகூடத்தினால் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்கள் மருந்துகளின் தரப்பரிசோதனை அறிக்கைகளை வழங்குவதற்கு முடியாதிருந்ததுடன் பரீட்சிப்பு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாது காத்திருக்கும் மாதிரிகளில் குறிப்பிடத்தக்க அளவானவை தொடர்ச்சியாக காணப்பட்டிருந்தன. மேலும் மருந்துகளின் தரம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட வேண்டிய சில அத்தியவசியமான பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கு போதியளவு வசதிகள் ஆய்வுகூடத்தில் காணப்படாததுடன் ஆய்வுகூட நடவடிக்கைகளின் சாதகமான போக்கு கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. விபரம் கீழே தரப்படுகின்றது.

7.9.6.1 சில காலப்பகுதியின் போது ஆராய்ச்சிகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை, பரீட்சிப்புக்களை மேற்கொண்ட மற்றும் காத்திருக்கும் மாதிரிகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை மீளாய்வு செய்த போது அக்காலப்பகுதியல் பரீட்சிப்பதற்காக காணப்பட்ட மாதிரரிகள் சம்பந்தமாக மருந்துகளின் தரப் பரீட்சிப்பு அறிக்கை வழங்கும் செயல்முன்னேற்றம் 69 சதவீத்திலிருந்து 32 சதவீதம் வரை பின்னடைவினைக் காட்டியதுடன் விபரமான தகவல்கள் அட்டவணை 16 இல் காண்பிக்கப்படுவதுடன் போதியளவு நடவடிக்கை எடுக்காமையால் இந்நிலைமையானது மருந்துகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான தீர்மானங்களின் தாமதத்திற்கு நேரடியாக தாக்கமளிக்கலாம் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

அட்டவணை இலக்கம் - 16: தெரிவுப் பரிசோதனையின் செயல்முன்னேற்றம்

	காலப்பகுதியின் ஆரம்பத்தில் காணப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை	**பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை**	**காலப்பகுதியின் போது பரீட்சிப்பதற்கு காணப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை**	**பரீட்சிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை**	**காலப்பகுதியின் போது பரீட்சிப்பதற்கு காணப்பட்ட மாதிரிகளை பரீட்சிக்கும் சதவீதம்**
2022 ஆண்டு	212	*309*	521	362	**69***%*
2023 தொடக்க அரையாண்டு	159	199	358	165	**46***%*
2023 யூலையிலிருந்து ஒக்தோபர் வரை	193	231	424	134	**32***%*

7.9.6.2 2021 ஏப்ரல் 01 ஆந் திகதி மருந்து உற்பத்திகளின் கட்டுப்பாட்டு தொடர்பான செயற்பாட்டு நடைமுறைகளின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 120)** தேசிய மருந்துகளின் தரத்தை பாதுகாக்கும் ஆய்வுகூடத்திற்கு மாதிரிகளை சமர்ப்பித்த திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் உரிய பரீட்சிப்பு அறிக்கை வழங்கப்பட வேண்டிய போதிலும் 2022 சனவரி மாத்திலிருந்து 2023 ஒக்தோபர் மாதம் வரையான காலப்பகுதியில் வழங்கிய மருந்துகளின் 586 பரீட்சிப்பு அறிக்கைகளுக்கு மத்தியில் 220 அறிக்கைகள் அதாவது 38 சதவீதமானவற்றை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வழங்குவதற்கு ஆய்வு

கூடத்தினால் முடியாதிருந்தது. மேலும் அவற்றில் 47 அறிக்கைகளை வழங்குவதற்கு ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

அட்டவணை இலக்கம் - 17: 90 நாட்களுக்கள் வழங்குவதற்கு முடியாதிருந்த பரீட்சிப்பு அறிக்கைகள் தொடர்பான விபரம்

ஆண்டு	**வழங்கிய முழு பரீட்சிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை**	**90 நாட்களுக்கள் வழங்குவதற்கு முடியாதிருந்தது. பரீட்சிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை**	**சதவீதம்**
2022	311	123	40%
2023.10.31 *ஆந்* திகதி வரை	275	97	35%
மொத்தம்	**586**	**220**	**38**

7.9.6.3 அதிகாரச் சட்டத்தின் 127(3) ஆம் உபபிரிவு **(பின்னிணைப்பு - 121)** மற்றும் மருந்து உற்பத்திகளின் தட்டுப்பாடு தொடர்பான செயற்பாட்டு நடைமுறைகளினட பிரகாரம் நீதிமன்றத்தினால் ஆய்வுகூடத்திற்கச் சமர்ப்பிக்கப்பட்ட மருந்து மாதிரிகளைப் பரீட்சித்து 28 நாட்களுக்குள் உரிய அறிக்கை நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 சனவரி மாத்திலிருந்து 2023 ஒக்தோபர் மாத்ம் வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட அவ்வாறான 102 பரீட்சிப்பு அறிக்கைகளை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. மேலும் அவற்றில் 26 அறிக்கைகளை வழங்குவதற்காக ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது. எனவே அதிகாரச் சட்டத்தின் 39(1)(ஆ) உபபிரிவின் பிரகாரம் ஆய்வுகூடத்திற்கு ஒப்படைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விடயங்களின் பிரகாரம் அங்கீகரித்த மேலதிக ஒரு ஆய்வுகூடமாக நடைமுறைப்படுத்தும் கடமையானது வினைதிறனாக நிறைவேற்றப்படவில்லை எனவும் மருந்துகள் சம்பந்தமான சில நீதிமன்ற ரீதியான நடவடிக்கைகள் தாமதமடைந்தமை தொடர்பாக இந்நிலைமை தாக்கமளித்துள்ளது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பான பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

அட்டவணை இலக்கம் - 18 : 28 நாட்களுக்கள் வழங்குவதற்கு முடியாதிருந்த பரீட்சிப்பு அறிக்கைகள் தொடர்பான விபரம்

ஆண்டு	வழங்கிய முழு பரீட்சிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை	28 நாட்களுக்கள் வழங்குவதற்கு முடியாதிருந்த பரீட்சிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை	சதவீதம்
2022	46	46	100%
2023.10.31 *ஆந் திகதி வரை*	56	56	100%
மொத்தம்	**102**	**102**	**100%**

7.9.6.4 கணக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 30 அந் திகதி வரை ஆய்வுகூடத்திடம் நவீன இயந்திரங்கள், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப முறைமை, மற்றும் தகமைபெற்ற தொழில்நுட்ப ஆளணியினர் இல்லாமையின் காரணமாக மருந்துகளின் உயிரியல் விஞ்ஞான மற்றும் நுண்பாக உயிரியல்,விஞ்ஞான பரீட்சிப்புக்களை நடாத்துதல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

7.9.6.5 மேலுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் மாதிரிகளைப் பரீட்சித்து அறிக்கைகளை வழங்குவதற்கு முடியாதிருந்தமை, பரீட்சிப்பு முடிவடையாது காத்திருக்கும் மாதிரிகள் அதிக அளவில் காணப்படுதல் மற்றும் சில அத்தியவசிய பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கு போதிளவு வசதிகள் இல்லாமை போன்ற பற்றாக்குறைகளின் காணரமாக மருந்துகள் தொடர்பாக தீர்மானம் எடுத்தல், ஒழுங்குபடுத்துதல் குறிக்கோள்களை நிறைவேற்றுவது போல வெளிநாட்டு நாணய தேவைப்பாட்டினை நிறைவேற்றுதல் ஆகிய விடயங்களின் போதும் ஆய்வுகூடத்திடமிருந்து போதியளவு உதவி கிடைக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

7.9.7 தேசிய ஒளடதங்களை ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 39(1)(இ) பிரிவின் பிரகாரம் மருந்துகளின் தரத்தை பரீட்சிப்பதற்காக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஆய்வுகூடங்களின் சேவை அத்தியவசியமானது என அதிகார சபையினால் கருதுகின்ற சந்தர்ப்பங்களின் போது அந்த ஆய்வுகூடங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்யும் கடமை தேசிய மருந்துகளின் தரத்தை பாதுகாக்கும் ஆய்வுகூடங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆய்வுகூடங்களிடம் தேவையான வசதிகள் இல்லாமையின் காரணமாக பதிவுசெய்வதற்காக முன்வைக்கப்படுகின்ற அனைத்து மருந்துகளின் தரத்தைப் பரீட்சிப்பதற்காக ஆய்வுகூடத்திற்கு மருந்துகளைச் சமர்ப்பிக்காத நிலைமை தற்பொழுது உருவாகியுள்ளதுடன் பகுப்பாய்வு நடவடிக்கைகள் முடிவடையாது காத்திருக்கும் மாதிரிகள் அதிகளவாகவும் கணக்காய்வுத்

திகதியான 2023 நவம்பர் 30 ஆந் திகதி வரை ஆய்வுகூடத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. நிலைமை இவ்வாறு இருந்த போதிலும் இலங்கையில் மருந்து துறையின் அபிவிருத்திக்காக ஒப்புக்கொள்ளப்பட்ட மூன்றாந் தரப்பு ஆய்வுகூடமான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் மருந்து ஆய்வுகூடம் அல்லது அதிகார சபையினால் பரீட்சிப்பு வசதிகள் வழங்கக் கூடியது என இனங்காணப்பட்டுள்ள ஏனைய நாட்டு வெளிநாட்டு ஆய்வுகூடங்களின் சேவையை மருந்துகளின் தரத்தைப் பரீட்சிப்பதற்காக போதிய அளவில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7.9.8 அதிகாரச் சட்டத்தின் 9 (1)(ஈ) பிரிவின் பிரகாரம் மருந்துகளின் தரத்தை சான்றுபடுத்துவது சம்பந்தமாக பரீட்சிப்பு செயற்திட்டங்கள் பேணப்பட வேண்டிய போதிலும் தேசிய மருந்துகளின் தரத்தை பாதுகாக்கும் ஆய்வுகூடத்தினால் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7.10 மருந்து களஞ்சியம் மற்றும் மருந்துகளை எடுத்துச் செல்வதனை ஒழுங்குபடுத்துதல்

அரசாங்கத்தின் மருந்துக் களஞ்சியத்தில் நிர்ணயிக்கப்பட்ட வெப்பம் பேணப்படாமை, குளிரூட்டிகளை தொடர்சியாக பேணாமை, களஞ்சியப்படுத்துதல் குறைபாடுகள் என்பவற்றின் காரணமாக மருந்து அழிவடைதல், பாதுகாப்பற்ற இடங்களில் மருந்துகளை களஞ்சியப்படுத்துதல் மற்றும் காலாவதியான மருந்துகள் சம்பந்தமாக முறைப்படியாக நடவடிக்கை எடுக்காமை போன்ற பலவீனங்கள் சம்பந்தமாக கணக்காய்வினால் பல ஆண்டுகளாக சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் இது சம்பந்தமாக தேசிய ஔடதங்களை ஒழுங்குபடுத:துதல் அதிகார சபையின் கடமைகளை விசாரித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

7.10.1 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்களை ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபை அதிகார சட்டத்தின் 14(உ) உபபிரிவின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 122)** மருந்துகளை களஞ்சியப்படுத்துதல், பகிர்ந்தளித்தல் மற்றும் போக்குவரத்து செய்வதற்காக அனுமதிகளை வழங்கும் கடமை தேசிய ஔடதங்களை ஒழங்குபடுத்துதல் அதிகார சபைக்குரியதாக இருந்த போதிலும் மருத்துவ வழங்கல் பிரிவு, பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் அரசாங்கத்தின் வைத்தியசாலைகளில் பேணப்படுகின்ற மருந்துக் களஞ்சியம் மற்றும் மருந்துகளை போக்குவரத்து செய்யும் வாகனங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை அதிகார சபையினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

7.10.2 2021 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய சிறந்த பகிர்ந்தளித்தல் நடைமுறை தொடர்பான வழிகாட்டியின் (Guideline on Good Distribution Practices - GDP) மூலம் **(பின்னிணைப்பு - 123)** களஞ்சிய சுற்றுப்புறத்தின் நிலைமை, மருந்துகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் களஞ்சியப்படுத்தல் முறைமை, நிர்ணயிக்கப்பட்ட களஞ்சியத்தின் தரம், பாதுகாப்பு, ஒழுங்குவிதிகள் வெப்பகட்டுப்பாடு, சுத்தம் பொறுப்புக்கூறவேண்டிய உத்தியோகத்தர்கள், இருப்புக்கட்டுப்பாடு, காலாவதியான இருப்புக்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல், உபகரணங்கள் பகிர்ந்தளித்தல், வாகனங்கள், வாகன ஆவணங்களைப் பேணுதல் போன்ற வரையறைகளினூடாக மருந்துகளை களஞ்சியப்படுத்துதலும் போக்குவரத்து

செய்வதற்குமாக விரிவான வழிகாட்டிகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறே அதிகாரச் சட்டத்தின் 49(3) ஆம் உப பிரிவின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 124)** எந்தவொரு நபரினாலும் சிறந்த பகிர்ந்தளித்தல் நடைமுறைக்கு இணக்கமற்ற வகையில் எந்தவொரு மருந்தினையும் பகிர்ந்தளிக்காதிருத்தல் வேண்டும் எனினும் மருத்துவ வழங்கல் பிரிவினை உள்ளடக்கி அரசாங்கத்தின் மருந்துக் களஞ்சியம் மற்றும் போக்குவரத்து வாகனங்கள் சிறந்த பகிர்ந்தளித்தல் நடைமுறைக்கு இணங்க பேணப்பட்டு வருகின்றதா என்பதனை பரீட்சிக்கும் நடைமுறை அதிகார சபையினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

7.10.3 அதற்கிணங்க இந்த மருந்துக் களஞ்சியம் மற்றும் போக்குவரத்து வாகனங்களை கண்காணித்தல், அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கு உட்படுத்துவதன் மூலம் சுதந்திர சுகாதார முறைமைக்கு விடுவிக்கப்படுகின்ற மருந்துகளின் தரம், விளைதிறன், பாதுகாப்பு என்பவற்றை தொடர்ச்சியாக உறுதிப்படுத்தும் தேவைப்பாடு தொடர்பாக அதிகாரசபை கவனம் செலுத்தியிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.11 தேசிய ஒடளதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை, பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தினை வழங்குதல்

2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகளை ஒழுங்குபடுத:ததல் அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 109 ஆம் பிரிவின் பிரகாரம் உயிரைக் காத்தல், பரவுகின்ற நோய் அல்லது தொற்றுநோய் பரவுவதனைத் தவிர்த்தல், தேசிய அவசரத் தேவைப்பாடு மற்றும் தேசிய பாதுகாப்பு போன்ற காரணங்களின் அடிப்படையில் குறித்த ஒரு மருந்தின் நிர்ணயிக்கப்பட்ட அளவினை இறக்குமதி செய்வதற்கும் வழங்குவதற்கும் அதிகார சபையினால் அனுமதி வழங்கப்படலாம். எவ்வாறாயினும் அதிகார சபையினால் அந்த ஒழுங்குவிதிகளைப் பின்பற்றாது மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதம் (Waiver of Registration) வழங்கப்பட்டிருந்தது என பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

7.11.1 அதிகாரச் சட்டத்தில் குறிப்பிட்ட காரணங்களின் கீழ் கொண்டுவரப்படாத முன்னைய பதிவுசெய்தல் காலாவதியாகியிருத்தல் பதிவுசெய்த வழங்குனர்கள் இல்லாதிருத்தல், பதிவுசெய்தல் நடைமுறையின் தாமதம் போன்ற காரணங்களின் அடிப்படையில் அரசாங்க மருந்துக் கூட்டுத்தாபனம், மருத்துவ வழங்கல்கள் பிரிவு மற்றும் தனியார் நிறுவனங்களுக்காக பல ஆண்டுகளாக பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு வருடாந்தம் வழங்கப்பட்ட பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதத்தின் எண்ணிக்கை தொடர்பான விரம் கீழே தரப்படுகின்றது.

அட்டவணை இலக்கம் - 19 : வருடாந்தம் விநியோகிக்கப்பட்ட பதிவிலிருந்து விடுவித்தல் கடிதத்தின் எண்ணிக்கை

வழங்கிய நிறுவனம்	2018	2019	2020	2021	2022	2023 யூன் வரை	மொத்தம்
அன்பளிப்பு மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள்	03	36	43	24	326	145	**577**
மருத்துவ வழங்கல் பிரிவு	02	09	-	13	57	03	**84**
அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்	136	157	139	52	252	88	**824**
தனியார் துறை	-	15	18	37	21	25	**116**
மொத்தம்	**141**	**217**	**200**	**126**	**656**	**261**	**1,601**

.

7.11.2 2019 ஒக்தோபர் 15 ஆந் திகதிய மருந்துகளை பதிவு செய்யும் வழிகாட்டியின் பிரகாரம் **(பின்னிணைப்பு - 125)** குறித்த ஒரு மருந்தினை பதிவுசெய்யும் போது அந்த மருந்தின் உற்பத்தியாளர் மற்றும் உள்நாட்டு முகவர் தொடர்பான தகவல்கள், நிருவாக மற்றும் சிபாரிசு செய்யும் தகவல்கள், மருந்துக்குரிய கோவைகளின் ஒட்டுமொத்த பொழிப்பாக்கிய தகவல், மருந்தின் தரவுச் சான்றிதழ் தொடர்பான ஆவணம், சிகிச்சையற்ற ஆய்வு அறிக்கை, சிகிச்சை ரீதியான ஆய்வு அறிக்கை என்பவைகளை உள்ளடக்கிய விரிவான ஆவணங்களைப் பரீட்சித்தல் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அதற்கு நேரொத்த மருந்துகளை மதிப்பீடு செய்யும் குழுவின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட பதிவு செய்வதிலிருந்து விடுவிக்கும் உப குழுவின் மூலம் மேலே 7.5.4 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான ஆவணங்கள் மாத்திரம் மதிப்பீட்டின் மூலம் மற்றும் மாதிரிகள் பரீட்சிக்கப்படாது மருந்துகளைப் பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதம் வழங்கியதன் காரணமாக தரம் தொடர்பாக உறுதிப்படுத்தபடாத மருந்துகள் நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்படுகின்றது என பல ஆண்டுகளாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.11.3 பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் அங்கீகாரத்தின் கீழ் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் தரம் தொடர்பாக சிக்கல்கள் உருவாகும் அடிப்படையில் மருந்துகளை பயன்படுத்துவதிலிருந்து நீக்குதல், பயன்படுத்துவதனை தற்காலிகமாக கைவிடுதல் மற்றும் இறக்குமதியாளர்களால் சுயமாகவே நீக்கிகொள்ளுதல் மேற்கொண்ட சந்தர்ப்பங்கள் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டுவரை 26 சந்தர்ப்பங்களின் போது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

அட்டவணை இலக்கம் - 20 பதிவிலிருந்து விடுவித்தல் அங்கீகாரத்தின் கீழ் நாட்டிற்குள் அறக்குமதிசெய்யப்பட்ட மருந்துகளின் தரத்தனமை தொடர்பாக பிரச்சினைகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள்

ஆண்டு	மருந்துகளை பயன்படுத்துவதிலிருந்து நீக்குதல்	பயன்படுத்துவதனை தற்காலிகமாக கைவிடுதல்	இறக்குமதியாளர்களால் சுயமாகவே நீக்கிகொள்ளுதல்	சிக்கல் உருவாகியுள்ள மொத்த சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை
2019	1	-	-	1
2020	-	1	-	1
2021	8	1	-	9
2022	5	-	-	5
2023.10.31 ஆந் திகதி வரை	3	6	1	10
மொத்தம்	**17**	**8**	**1**	**26**

அதற்கிணங்க தரம் தொடர்பான உறுதிப்படுத்தல் இல்லாது மருந்துகள் உள்நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்படுகின்றது எனவும் அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளை வைத்தியசாலைகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு முன்னர் தரம் தொடர்பான பரீட்சிப்பு மேற்கொள்ளப்படவில்லை எனவும், அவ்வாறான மருந்துகளை பயன்படுத்துவதனால் நோயாளிகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களை அளவீடு செய்ய முடியாது எனவும் அதன் மூலம் நாட்டிற்கு சுகாதாரத் துறையின் நன்மதிப்பு தொடர்பாக பாதகமான தாக்கம் ஏற்பட்டுள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பான சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) 2020 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட இருதய, ஈரல், சிறுநீரக நோய்கள் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய் நிலைமைகளின் போது பயன்படுத்தப்படுகின்ற Furosemide syrup 6000 போத்தல்கள் இருப்பு தரமற்றவை என அறிக்கையிடப்படுகின்ற சந்தர்ப்பம் வரை அந்த மருந்து இருப்பில் 98 சதவீதம் அளவானவை ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையினை உள்ளடக்கிய அரசாங்க வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தமை

(ii) 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தின் கீழ் மருத்துவ வழங்கல் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்ட Bupivacaine மருந்தினை பயன்படுத்தியதன் பின்னர் பேராதனை போதனா வைத்தியசாலை இரண்டு பெண்கள்

மரணமடைந்திருந்ததுடன் அந்த மருந்தினை பயன்படுத்தியதன் மூலம் நோயாளிகளுக்கு பாரிய அளவில் பாதக எதிர்விளைவு (Adverse Drug Reaction – ADR) ஏற்பட்டிருந்ததனால் 2023 யூலை 20 ஆந் தகிதி நடைபெற்ற பாதுகாப்பு மற்றும் ஆபத்துக்களை மதிப்பீடு செய்யும் உபகுழுவினால் (Safety and Risk Evaluation Subcommittee – SAFRESC) அந்த மருந்தினை முழுமையாக பயன்படுத்துவதிலிருந்து நிக்குவதற்காக சிபாரிசு செய்திருத்தல்.

7.11.4 மருந்துகள் சம்பந்தமாக மத்திய வழிகாட்டியாக செயற்படுகின்ற ஒரேயொரு அரசாங்க நிறுவனமாக தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 58(1) மற்றும் 109(1) ஆம் உபபிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் மீது தீவிரமாக தோற்றுவிக்கப்பட்டு பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தினை அதிகாரபைக்கு அனுப்பிவைப்பதனை முடியுமான அளவு குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அதிகார சபைக்குரியதாக இருந்த போதிலும் அப்பொறுப்பினை சிறப்பான வகையில் நிறைவேற்றாதிருந்த சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

7.11.4.1 அதிகார சபையினால் ஒரே விண்ணப்பதாரருக்கு பல சந்தர்ப்பஙடகளில் அதேபோல ஒரே மருந்துக்காக பல சந்தர்ப்பங்களில் மீண்டும் மிண்டும் பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதம் வழங்கப்பட்டிருந்தது இதன் மூலம் உள்நாட்டு முகவர்கள் மருந்தினை பதிவுசெய்தல் தொடர்பாக காணப்படுகின்ற அக்கறை நலிவடைகின்ற அதேவேளை தொடச்சியாக பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தினை அடிப்படையாகக் கொண்டு நாட்டிற்கு மருந்து களை இறக்குமதி செய்வதற்கு ஊக்கமளித்தல் ஏற்படுவதுடன் அது சுகாதார முறைமை தொடர்பாக சாதகமான தன்மை அல்ல எனவும் அவதானிக்கப்பட்டது.

7.11.4.2 அதற்கிணங்க 2022 சனவரியிலிருந்து 2023 யூன் வரை பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதம் வழங்கப்பட்டிருந்த 30 மருந்து இறக்குமதியாளர்களை உள்ளடக்கிய ஒரு மாதிரியினை பரீட்சித்த போது கணக்காய்வு காலப்பகுதியில் அந்த 30 மருந்து இறக்குமதியாளர்களுக்கு முழுமையாக பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் 305* கடிதங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த ஒவ்வொரு நிறுவனத்திற்கும் 02 இற்கும் 54 இற்கும் இடைப்பட்ட அளவான கடிதங்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. விபரம் கீழே தரப்படுகின்றது.

அட்டவணை – 21 : விநியோகிக்கப்பட்ட பதிவிலிருந்து விடுவித்தல் தொடர்பான விபரம்

	இறக்குமதியாளரின் பெயர்	வழங்கப்பட்டிருந்த பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதங்களின் எண்ணிக்கை
1.	Yaden International	54
2.	Pharma Associate	28
3.	Slim Pharmaceuticals Ltd *	26*
4.	Pharmatec (Pvt) Ltd	23
5.	ABC Parma Services Pvt Ltd	20
6.	Mansel (Ceylon) Pvt Ltd	14
7.	Sunshine Healthcare	14
8.	Tabrane Pharmaceuticals	13
9.	A Baur & Co. Ltd	12
10.	Siba Healthcare (Pvt) Ltd	11
11.	Breath Free Lanka (Pvt) Ltd	10
12.	Ravilux Co.Ltd	10
13.	Cloud Healthcare (Pvt) Ltd	7
14.	Kamazu (Pvt) Ltd	6
15.	George Steuart Health Ltd	5
16.	Markss HLC (Pvt) Ltd	5
17.	Softcare International	5
18.	Emar Pharma (Pvt) Ltd	4
19.	Junaht International (Pvt) Ltd	4
20.	Niix Holdings (Pvt) Ltd	4
21.	Novachem Lanka (Pvt) Ltd	4
22.	TMI Solutions (Pvt) Ltd	4
23.	Care Ring Pharma (Pvt) Ltd	3
24.	Imperial Life Sciences (Pvt) Ltd	3
25.	Lanka Therapeutics Pvt Ltd	3
26.	PTC Medical Pvt Ltd	3
27.	SSK Pharma (Pvt) Ltd	3

* ஏற்பட்டிருந்த தட்டெழுத்து வழுக்கள் திருத்தப்பட்டு சரியான இறக்குமதியாளர்களின் பெயர் மற்றும் சரியான தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

28.	Unicura International Pvt Ltd-Dehiwala	3
29.	Ceyoka (Pvt) Ltd	2
30.	P.T.C Medical Colombo 13	2
	மொத்தம்	**305***

7.11.4.3 மேலும் ஒரே இறக்குமதியாளருக்கு ஒரே மருந்தினை இறக்குமதி செய்வதற்காக பல சந்தர்ப்பங்களின் போது பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதம் வழங்கப்பட்டிருந்ததுடன் மேற்கூறிய மாதிரிக்குரிய 17 இறக்குமதியாளர்களுக்கு 29 மருந்துகளுக்காக பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் 02 இற்கும் 04 இற்கும் இடைப்பட்ட அளவான கடிதங்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இது தொடர்பான பொழிப்பாக்கிய தகவல் கீழே தரப்படுகின்றன.

அட்டவணை – 22 : ஒரே இறக்குமதியாளருக்கு பதிவிலிருந்து விடுவித்தல் கடிதம் தொடர்பான விபரம்

	நிறுவனத்தின் பெயர்	**மருந்தின் பெயர்**	**கோவைகளின் எண்ணிக்கை**
1.	A Baur & Co. Ltd	Capecitabine Tablets 500mg	3
		Clobazam Tablets IP 10mg	4
2.	ABC Parma Services Pvt Ltd	Desferrioxamine Mesilate for Injection BP 500mg	2
3.	Breath Free Lanka (Pvt) Ltd	Warfarin Sodium Tablets IP 5mg (WARF-5)	2
4.	Emar Pharma (Pvt) Ltd	Dried Aluminium HYdroxide Gel 240mg + Magnesium Hydroxide 100mg + Light Magnesium Carbonate 60mg + Activated Dimethicone 25mg Tablets (DIOVOL)	2
5.	Kamazu (Pvt) Ltd	Amoxicillin Capsules BP 250 mg	2
		Erythromycin Stearate Tablets BP 500mg	2

6.	Lanka Therapeutics Pvt Ltd	Ruxolitinib Tablets 5mg	2
7.	Mansel (Ceylon) Pvt Ltd	Fusidic Acid 2% w/w and Hydrocortisone Acetate 1% w/w Cream (DISUF-H-Cream)	2
8.	Niix Holdings (Pvt) Ltd	Atracurium Besilate 10mg/ ml Solution for Injection/ Infusion (25mg in 2.5 ml)	2
9.	Pharma Associate	Pazopanib Tablets 200mg	2
10.	Pharmatec (Pvt) Ltd	Metoprolol Tartrate Injection 1mg/ml, 5ml	2
11.	Ravilux Co.Ltd	Etoposide Capsules 100mg	2
12.	Siba Healthcare (Pvt) Ltd	Captopril Tablets BP 25mg	2
		Gabapentin Capsules USP 100mg (RAVASTAL-100)	4
		Olanzapine Tablets USP 5mg	2
13.	Slim Pharmaceuticals Ltd *	Cefotaxime for Injection USP 1g	2
14.	Sunshine Healthcare	Linezolid IV Injection 200mg/100ml (Lizolid IV)	2
		Pantoprazole for IV Injection 40mg	3
15.	Tabrane Pharmaceuticals	Cyclosparin Capsules USP 50mg	2
		Olaparib Capsules 50mg	2
		Sofosbuvir INN 400mg & Ledpasvir INN 90 mg Tablets (HopSo-LP)	2
16.	TMI Solutions (Pvt) Ltd	Enoxaparin Injection 40mg in 0.4ml	2
17.	Yaden International	Chlorambucil Tablets 2mg	2
		Ergometrine Injection BP 500mcg/ml	3
		Fludrocortisone Acetate Tablets USP 100mcg	2
		Morphine Tablets 10mg	2

* ஏற்பட்டிருந்த தட்டெழுத்து வழுக்கள் திருத்தப்பட்டு சரியான இறக்குமதியாளர்களின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது.

Sodium Fusidate for Infusion BP 50mg	2
Tetracosactide Injection BP 250mcg/1ml	2
மொத்தம்	**65**

7.11.5 அதிகாரச் சட்டத்தின் 58(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் அதிகார சபையின் கீழ் பதிவுசெய்த மருந்துகள் மாத்திரம் நாட்டிற்கு இறக்குமதி செய்ய வேண்டியதுடன் அதற்கிணங்க அதிகாரசபையினால் பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதம் வழங்கப்படாமை அல்லது முடியுமான அளவு குறைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பல்வேறு வியாபாரப் பெயர்களின் கீழ் பதிவுசெய்த சில மருந்துகள் காணப்படுகின்ற மருந்துகளுக்காகவும் பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதம் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அதற்கிணங்க தெரிவுசெய்யப்பட்ட 07 மருந்துகளின் மாதிரிகளுக்காக பின்வருமாறு பதிவுசெய்த 02 இற்கும் 57 இற்கும் இடைப்பட்ட அளவான மருந்துகள் காணப்பட்ட சந்தர்ப்பங்களின் போது கூட ஏனைய இறக்குமதியாளர்களுக்கு பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அட்டவணை – 23 : பல்வேறு வியாபாரப் பெயர்களின் கீழ் பதிவுகள் காணப்படுகின்ற மருந்துகளுக்காக பதிவிலிருந்து விடுவித்தல் கடிதம் விநியோகித்தல்

	மருந்தின் பெயர்	காணப்படுகின்ற பதிவுசெய்த மருந்தின் எண்ணிக்கை	பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதம் வழங்கப்பட்டிருந்த நிறுவனத்தின் பெயர்
1.	Aciclovir 200mg bp tablets	19	Savorite pharmaceuticals pvt ltd
2.	Acitretin capsules bp 10mg	3	Centurion healthcare pvt ltd, india
3.	Amikacin sulphate injection bp 500mg/2ml	5	Nandani medical laboratories (pvt) ltd, india
4.	Amoxicillin capsules b.p 250mg	57	Micro labs ltd, india
5.	Atropine eye drops 1% w/v	3	DCI pharmaceuticals (pvt) ltd, india
6.	Azathioprine 50mg bp tablets	8	Siba holdings Yaden international pvt ltd
7.	Betamethasone 0.1%	2	Pharmatec pvt ltd

7.11.6 அதிகாரச் சட்டத்தின் 109 (3) ஆம் உபபிரிவின் பிரகாரம் பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பொறுப்புக்களுக்கு இறக்குமதியாளர் கட்டுப்பட்டிரக்க வேண்டிய போதிலும் அதிகாரச் சட்டத்தின் 3(அ) உபபிரிவின் பிரகாரம் வினைதிறனான பாதுகாப்பான மற்றும் சரியான தரத்தைக் கொண்ட மருந்துகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும் அடிப்படைப் பொறுப்பு அதிகார சபையிடம் உள்ளது என அவதானிக்கப்பட்டது. எனினும் பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தினை வழங்கும் போது அதிகார சபையினால் மருந்தின் தரம், பாதுகாப்பு, வினைதிறன் என்பன தொடர்பான பொறுப்பு அரசாங்க மருந்துக் கூட்டுத்தாபனத்திற்காக அது தொடர்பான பெறுகை மற்றும் மதிப்பீட:டுக் குழுவிற்கு அல்லது மருத்துவ வழங்கல் பிரிவிற்காக வழங்கும் போது அதன் பணிப்பாளரிடம் ஒப்படைத்து அதிகார சபை தமது தொடக்க ஒழங்குபடுத்துதல் பொறுப்பிலிருந்து அப்பாற்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்களும் மேலும் அவதானிக்கப்பட்டது.

7.11.6.1 மேலே கூறப்பட்டவாறு மருத்துவ வழங்கல் பிரிவிற்கும் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பெறுகை மற்றும் மதிப்பீட்டுக் குழுவிற்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அவர்களால் அப்பொறுப்பினை பொறுப்பேற்றல் நிராகரிக்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 126)** எவ்வாறாயினும் விருப்பினை கோருவதன் மூலம் கீழ் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகளின் போது சுகாதாரத்துறை அவசர பெறுகைக்குழு தமது தீர்மானத்தினை வழங்கும் போது பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கு உட்பட்டிருக்கவில்லை.

7.11.6.2 அதற்கிணங்க பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தின் கீழ் நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்துகளின் தரம், பாதுகாப்பு, வினைதிறன் என்பன தொடர்பான பொறுப்பு உரிய எந்த தரப்பினர்களாலும் பொறுப்பேற்கப்படாத சுற்றாடல் உருவாகியிருந்ததுடன் அதன் மூலம் அதிகாரச் சட்டத்தின் 3(அ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையினை ஸ்தாபிக்கும் தொடக்க குறிக்கோளான வினைதிறன் பாதுகாப்பு மற்றும் சரியான தரத்தைக் கொண்ட மருந்துகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும் குறிக்கோள் அதிகார சபையினால் வெற்றிகரமாக அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை.

7.11.6.3 அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற மருந்துகளை பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதங்களின் மூலம் பிரதியை நேரடியாக நேரடியாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு நாயகதத்திற்கு அனுப்பிவைப்பதற்குப் பதிலாக உரிய மருந்துகளின் இறக்கமதியாளர்களிடமே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்காக வழங்கப்படுகின்ற பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதங்களின் பிரதியை மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளருக்கு முறைப்படியாக அனுப்பிவைக்கப்பட்டிருக்காததுடன் 2022 பெப்ரவரி 02 ஆந் திகதியிலிருந்து வழங்கப்பட்ட பதிவு செய்வதிலிருந்து விடுவிக்கும் 105 கடிதங்களின் பிரதிகள் 2023 ஒக்தோபர் 16 ஆந் திகதி ஒரே தடவையில் பொறுப்பேற்கப்பட்டிருந்தது.

7.11.6.4 அந்த சில பிரதிகளில் வழங்கப்படுகின்ற திகதியிடப்பட்டிருக்காமை, உற்பத்தியாளரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்காமை, பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கப்படுகின்ற மருந்தின் பெயர் உறுதியாக குறிப்பிடப்பட்டிருக்காமை, பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரினால் பெயருடனும் பெயர் இல்லாமலுமாக இரண்டு உத்தியோகபூர்வ முத்திரைகள் பயன்படுத்தப்பட்டிருந்தமை போன்ற பாரதூரமான குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

7.11.6.5 பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தினை வழங்குவது சம்பந்தமாக தீவிர உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை அமுல்ப்படுத்தவேண்டியிருந்த போதிலும் அதிகார சபையினால் வேண்டுமென்றோ அல்லது கவனயீனமாகவோ செய்யப்படுகின்ற மேலே குறிப்பிட்ட குறைபாடுகளின் காரணமாக மோசடியான நடவடிக்கைகளுக்கு அனுப்பிவைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதிகாரச்சட்டத்தின் 3(இ) உபபிரிவின் பிரகாரம் மருந்து இறக்குமதிகளுக்குரிய அனைத்து நடவடிக்கைகளும் வெளிப்படைத்தன்மையுடன், நிலைபேறாக மற்றும் நியாயமான முறையில் மேற்கொள்ளப்பட்டது என்பதனை உறுதிப்படுத்தும் குறிக்கோளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது என அவதானிக்கப்பட்டது.

7.11.7 பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தை வழங்கும் நடைமுறை சம்பந்தமாக அதிகார சபையினால் 2019 ஒக்தொபர் 15 ஆந் திகதி ஒரு வழிகாட்டி **(பின்னிணைப்பு - 127)** தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு இணங்க மருந்துகளை பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் அங்கீகாரமானது அது தொடர்பான குழுவின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சுகாதார அமைச்சின் வேண்டுகோளினை அடிப்படையாகக் கொண்டு 2022 செப்தெம்ர் 16 அந் தகிதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் உபகுழுவின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்படாது Special Pathway முறைமையினாடாக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதம் வழங்கும் ஒரு முறைமை பின்பற்றப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 128)**

7.11.7.1 அந்த பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் துரித பொறிமுறையில் நிபந்தனை, அமுல்படுத்த வேண்டிய தரப்பினர், அறவிட வேண்டிய கட்டணம் அத்தியவசிய ஆவணங்கள் (விண்ணப்பம் மற்றும் கொள்வனவுக் கட்டளை / பொருள் அனுப்பல் கோரிக்கை / பட்டியல்) மற்றும் கீழே காண்பிக்கப்படுகின்ற நடைமுறைகள் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்ததுடன் மருந்தின் தரத்தன்மை, பாதுகாப்பு மற்றும் விளைவுகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் அல்லது பணிகள் எதுவும் அந்த விதிகளின் மூலம் மேவுகை செய்யப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் தரத்தன்மையை உறுதிப்படுத்தக்கூடிய வேறொரு திட்டமுறைமையொன்று முன்மொழியப்பட்டிருந்தமையும் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

- பதிவிலிருந்து விடுவிக்கும் கோரிக்கை விண்ணப்பம் அதிகார சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளல்.
- பெறப்பட்ட விண்ணப்பம் உரிய மருந்தாளர்களுக்கு கையளித்தல்.

- மருந்தாளர்களினால் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்காக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளல்.
- முகாமைத்துவ உதவியாளரால் கொடுப்பனவு அட்டவணை விண்ணப்பத்துடன் விநியோகித்தல்.
- கொடுப்பனவு செய்த பின்னர் முகாமைத்துவ உதவியாளரால் பதிவிலிருந்து விடுவித்தல் கடிதம் வரைதல்.
- முகாமைத்துவ உதவியாளரால் உரிய தரவை ஸ்தாபித்தல் மற்றும் ஆவணங்களைப் பேணிச் செல்லல்.
- மருந்தாளர்களினால் பதிவிலிருந்து விடுவிக்கும் கடிதத்தை பரீட்சித்தல்.
- இறுதி வரைவு கடிதம் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் கையளித்தல்.
- உரிய பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு கடிதத்தின் பிரதியை அனுப்புதல்.

7.11.7.2 சமர்ப்பிக்கப்பட்ட பணிப்பாளர் சபை பத்திரத்தில் இந்த துரித பொறிமுறை அமுல்படுத்தக் கூடியதால் ஏற்படக்கூடிய ஆபத்தினை தவிர்த்தல் அதன் தாக்கங்கள் மற்றும் இடர் முகாமைத்துவ உபாய வழிகளைக் காண்பித்து இடர் பகுப்பாய்வை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன் பிரகாரம் இவ்வாறான திட்ட முறையை அமுல்படுத்துவதன் மூலம் இந்த நாட்டில் சுகாதார முறைமை தொடர்பில் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

7.11.7.3 அதிகார சபையின் பணிப்பாளர் சபையினாலும் இவ்வாறான திட்ட முறைமையொன்றை அமுல்படுத்துவதன் மூலம் தேசிய ஔடதங்கள் அதிகார சபை ஸ்தாபித்ததன் அடிப்படை நோக்கமான பக்கச்சார்பின்றி பாதுகாப்பான மற்றும் சரியான நிலைமையில் உடைய மருந்துகளை பொது மக்களுக்கு வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கத்தை இலக்காகக் கொண்டு ஆபத்துக்கள் தொடர்பாக சரியான கவனம் செலுத்தாமல் மேற்கூறப்பட்ட பணிப்பாளர் சபை பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் உத்தேச துரித பொறிமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

7.11.7.4 காணப்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையில் வெளிநாட்டுக் கடன் உத்தேச திட்டத்தை பயன்படுத்தி பதிவிலிருந்து விடுவிக்கும் கடிதம் மருந்து பெறுகைகளின் போது மருந்துகளின் தரத்தன்மையை உறுதிப்படுத்துகின்ற வகையில் துரித பொறிமுறையைத் தயாரிப்பதற்காக மருந்து மதிப்பிடல் குழுவின் அல்லது பதவியிலிருந்து விடுவிக்கும் உப குழுவின் ஆலோசனை பெறப்படாதிருந்ததுடன் இந்த திட்ட முறைமையை அமுல்படுத்துவதற்குமுன் அந்த குழுவிலிருந்து கருத்துக்களை விசாரித்தலேனும் மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

7.11.7.5 மருந்தின் பதவியிலிருந்து விடுவிக்கும் கடிதம் விநியோகித்தல் தொடர்பான வழிகாட்டியின் பிரகாரம் பதவியிலிருந்து விடுவிக்கும் உப குழு இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை கூட வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையினால் அதற்கு முன்னிருந்து அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கணக்காய்வுக் காலப் பகுதியில் 2022

சனவரி முதல் 2023 யூன் வரை 36 உப குழுக் கூட்டங்கள் நடாத்த வேண்டியிருந்த போதும் 15 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. மேலும் பணிப்பாளர் சபையினால் இந்த துரித பொறிமுறை அமுல்படுத்தப்பட்ட 2022 செப்டெம்பர் மாத்தில் உரிய குழு கூடுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.11.7.6 பதிவிலிருந்து விடுவிப்பதற்கான அங்கீகாரம் கையளிக்கும் போது உப குழுவினால் மருந்துகளின் விலையின் நியாயத்தன்மை, மருந்துகள் தொடர்பான உரிய நிறுவனத்தின் அபிப்பிராயம், நிறுவனத்தின் தேவை, தற்போது காணப்படுகின்ற மற்றும் அதற்கு சமமான பதிவு மருந்துகளின் எண்ணிக்கை, மருந்தின் பதிவு நிலைமை, வழங்குநரினதும் உற்பத்தியாளரினதும் பதிவினது நிலைமை, தரத்தன்மை தொடர்பாக முன்னர் பிரச்சினைகள் காணப்பட்டமை. (தரம் குறைவடைந்தமை) போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்ட போதும் இந்த திட்ட முறைமையின் கீழ் அந்த விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் பதிவிலிருந்து விடுவிக்கும் கடிதம் விநியோகிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்கூறப்பட்ட பிரகாரம் விநியோகிக்கப்பட்ட பதிவிலிருந்து விடுவிக்கும் அங்கீகாரங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரம் அட்டவணை இலக்கம் 24 இல் காண்பிக்கப்படுகின்றது.

அட்டவணை இலக்கம் 24: Special Pathway திட்டத்தின் ஊடாக விநியோகிக்கப்பட்ட பதிவிலிருந்து விடுவிக்கும் கடிதங்கள் தொடர்பான விபரம்.

விபரம்	2022	2023 யூன் வரை	மொத்தம்
வழங்கப்பட்டிரந்த முழு பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதங்களின் எண்ணிக்கை	656	261	917
Special Pathway முறைமையின் கீழ் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு	57	03	60
Special Pathway முறைமையின் கீழ் அரசாங்க மருத்துவ கூட்டுத்தாபனத்திற்கு	176	51	227
Special Pathway முறைமையின் கீழ் வழங்கப்பட்ட மொத்த எண்ணிக்கை	233	54	287
Special Pathway முறைமையின் கீழ் வழங்கப்பட்ட முழுக் கடிதங்களின் எண்ணிக்கையானத வழங்கப்பட்டிரந்த முழு பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதங்களின் எண்ணிக்கையின் சதவீதமாக	36%	21%	31%

7.11.7.7 2023 சனவரி 24 மற்றும் 27 ஆகிய இரு திகதிகளில் நடைபெற்ற அவசர மருந்து மதிப்பீட்டுக் குழுவிற்கு பங்குபற்றிய குழு அங்கத்தவர்களால் பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் உபகுழுவிற்குப் புறம்பாக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதங்களை வழங்குவது தொடர்பாக விசாரிக்கப்பட்டிருந்ததுடன் நாட்டில் மருந்துகளின் தட்டுப்பாட்டினை தவிர்ப்பதற்கான அவசர கூட்டங்களுக்குப் பங்குபற்றுவதற்கு அந்த உபகுழுவின் அங்கத்தர்கள் விருப்பத்தில் இருந்தார்கள் எனவும், தரத்தைப் பாதுகாத்தல் மற்றும் விளைத்திறன் போன்ற வரையறைகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து மருந்துகளை கொள்வனவு செய்யும் முக்கியத்துவம், பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதங்களின் கீழ் கொண்டு வரப்படுகின்ற மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் வினைதிறன் தொடர்பாக அதிகாரசபை உத்தரவாத்தினை பொறுப்பேற்பத்தில்லை என்பதற்கான வெளிப்படுத்தல் பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தினுள் உள்ளடக்கப்படாதிருத்தல் வேண்டும் எனவும் கருத்துலைரகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும் உரிய மருந்து இலங்கையில் பதிவுசெய்யப்படாதிருந்த போதிலும் பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் சான்றிதழினை வேண்டியிருக்கும் உற்பத்தியார் அல்லது உள்நாட்டு முகவர் அதிகார சபையில் பதிவுசெய்திருக்க வேண்டிய கோட்பாட்டினை கவனித்துப் பார்க்கும் தேவைப்பாடானது மருந்து மதிப்பீட்டுக் குழுவின் செயலாளரினால் வலியுறுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் சான்றிதழினை வழங்குவதற்கு அங்கீகரிக்கும் போது அறிஞர்கள் குழு கவனித்துப் பார்க்கின்ற மேற்கூறிய விடயங்கள் மற்றும் கீழே பந்தி இலக்கம் 7.11.9 இன் கீழ் காட்டப்படுகின்ற விடயங்களை கவனித்துப் பார்க்காது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரினால் Special Pathway முறைமையினூடாக பதிவுசெய்வதிலிருந்து விடுவிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

7.11.7.8 மேலும் Special Pathway முறைமையினாடாக 2022 ஆம் ஆண்டில் மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் 233 அங்கீகாரங்களின் அனுமதி 2023 சனவரி 24 மற்றும் 27 ஆகிய இரு நாட்கள் விசேடமாகக் கூடிய மருந்து மதிப்பீட:டக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் போது அத்தியவசியமான மருந்து இல்லாமை, மருந்தின் மாத்திரை பொருந்தியிருக்காமை, அதிகவிலை சமர்பபிக்கப்பட்டிருந்தமை, பதிவுசெய்த பல மருந்துகள் காணப்படுவதன் காரணமாக அவ்வாறான வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு முடியுமாக இருத்தல் அந்த மருந்தினை உள்நாட்டில் உற்பத்தி செய்தலும் மற்றும் உற்பத்தியாளர் அல்லது உள்நாட்டு முகவர் பதிவுசெய்திருக்காமை போன்ற காரணங்களின் அடிப்படையில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கும் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கும் முறையே 31 மருந்து வகைகள் மற்றும் 58 மருந்து வகைகளுக்காக வழங்கப்பட்ட பதிவு செய்வதிலிருந்து விடுவிக்கும் 89 கடிதங்களுக்காக குழுவின் நிலைத்திருக்கும் தன்மை கிடைத்திருக்கவில்லை. **(பின்னிணைப்பு - 129)** இதற்கு மேலதிகமாக உற்பத்தியாளர் பதிவுசெய்திருக்க வேண்டியிருத்தல் மற்றும் சமர்ப்பித்துள்ள விலையானது உச்ச அளவு சில்லறை வஜிலையினை விட குறைவாக இருக்க

வேண்டியிருத்தல் போன்ற நிபந்தனைகின் அடிப்படையில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கும் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தானத்திற்கும் முறையே 13 மருந்து வகைகள் மற்றும் 12 மருந்து வகைகளுக்காக வழங்கப்பட்ட பதிவு செய்வதிலிருந்து விடுவிக்கும் 25 கடிதங்களுக்காக குழுவின் நிபந்தனையுடனான அனுமதி கிடைத்திருந்தது. இது தொடர்பான மேலதிக விபரம் பின்வருமாறாகும். **(பின்னிணைப்பு - 130)**

7.11.7.9 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத:துதல் அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 58(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் எந்தவொரு நபரினாலும் குறித்த ஒரு மருந்தினை அதிகார சபையில் பதிவுசெய்யாது மற்றும் அதிகார சபையிடமிருந்து அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளாது இறக்குமதி செய்யாதிருக்க வேண்டும் என்பதனால் பதிவுசெய்வதிலிருந்து விடுவிப்பதற்காக அங்கீகாரத்தினை வழங்கும் போது பதிவுசெய்த மருந்துகள் காணப்படுகின்றனவா என்பதனை மருந்து மதிப்பீட்டுக் குழுவினால் தொடக்கத்தில் கவனித்துப் பார்க்கப்படுகின்றது. எனினும் Special Pathway முறைமையினூடாக வழங்கிய மருந்துகளை பதிவுசெய்வதிலிருந்து 166 விடுவித்தல்களுக்காக 01 இற்கும் 21 இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையான பதிவுசெய்த மருந்துகள் காணப்பட்டதுடன் அக்காரணத்தின் அடிப்படையில் பதிவுசெய்வதிலிருந்து 26 விடுவித்தல்களுக்காக மருந்து மதிப்பீட்டுக்குழுவின் அனுமதி கிடைத்திருக்கவில்லை. **(பின்னிணைப்பு - 131)**

7.11.7.10 தொற்று நோயாளர்களுக்கு அதிக அளவில் பயன்படுத்துகின்ற Meropenem Injection USP 500mg என்ற கிருமி தடுப்பு மருந்தின் 400,000 அலகுகளை Special Pathway முறைமையினூடாக பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்கு முன்னர் தரமற்றது என அறிவிக்கப்பட்டிருந்ததன் காரணமாக அதற்காக மருந்து மதிப்பீட்டுக் குழுவின் அனுமதி கிடைத்திருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக மேற்கூறியவாறு அனுமதி வழங்கப்பட்டிருந்த இன்னும் 15 மருந்துகள் உரிய உற்பத்தியாளரின் மருந்துகள் தரமற்றிருந்தமை தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. **(பின்னிணைப்பு - 132)**

7.11.7.11 காது தொற்றுநோய், இரத்தம் வழியும் நிலைமை, உணவு ஜீரணிக்கும் முறைமையில் பிரச்சினை முதலிய நோய்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற ලබන Ofloxacin vialEye/Ear Drops 5ml, Cinnarizine Tablets BP 25mg, Rifaximin Tablets 550mg, மற்றும் Mosapride Citrate Tablets 5mg, போன்ற Special Pathway முறைமையினூடாக பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த 29 மருந்துகள் அத்தியவசியமான மருந்துப் பட்டியலில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக மருந்து மதிபீட்டுக்குழுவின் அனுமதி கிடைத்திருக்கவில்லை. **(பின்னிணைப்பு - 133)**

7.11.7.12 அதற்கிணங்க மருந்துகளை பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் உபகுழுவிற்குப் புறம்பாக Special Pathway முறைமையினூடாக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரினால் மருந்துகளை பதிவு செய்வதிலிருந்து அனுமதியை வழங்குவதன் மூலம் தரம், பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் விலை நியாயத்தன்மை என்பன தொடர்பாக உறுதிப்படுத்தல்

இல்லாது மருந்துகளை நாட்டிற்குள் இறக்குமதி செய்தல் முற்றும் நோயாளிகளுக்காக பயன்படுத்தும் ஆபத்து காணப்படுகின்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.11.8 அதிகாரச் சட்டத்தின் 109 (4) ஆம் பிரிவின் பிரகாரம் பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் தொடர்பாக இறக்குமதியாளரால் அதிகார சபைக்கு நிர்ணயிக்கப்பட்ட முறைமையில் நடைமுறைப்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் அதிகார சபையினால் இந்த அறிக்கையை பெற்றுக்கொள்ளல் மற்றும் அதனூடாக ஒரு தரவுத் தொகுதியை பேணிச் செல்வதற்காக ஒரு நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே அதிகார சபையினால் வழங்கப்பட்ட பதிவு செய்வதிலிருந்து விடுவிக்கும் கடித்தின் கீழ் மருந்துகளை இறக்குமதி செய்தல்/ இறக்குமதி செய்யவில்லை என்பது பற்றியும் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் இணக்கப்பாடு பற்றியும் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7.12 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பிரதான கட்டளைகள் சம்பந்தமான அவதானிப்புக்கள்

7.12.1 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மருந்து தட்டுப்பாட்டின் காணரமாக அவசர கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கு அமைச்சு தரப்பினர்களால் அமைச்சரவைக்கு விளக்கமளிக்கப்பட்டிரந்தும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை வழிகாட்டிக் கோவைகளுக்குப் புறம்பாக விருப்புக்களை கோரல் மற்றும் கோரல் முறைமைக்கு கொள்வனவு செய்வதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டளைகளுக்குரிய மருந்துகளின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பித்த பிரதான கட்டளைகளின் செயல்முன்னேற்றம் மற்றும் 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்காக 78 மருந்து விடயங்களுக்காக அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பித்த ஏனைய பிரதான கட்டளைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

7.12.1.1 மருத்துவ வழங்கல் பிரிவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தவாறு ஏதாவதொரு ஆண்டிற்காக தேவைப்பாடுகின்ற மருந்துகள் கட்டளையிடப்பட்டு நிறுவனத்திற்கு கிடைப்பதற்காக 11 மாதங்கள் காத்திருக்கும் காலத்தில் இருக்க வேண்டி ஏற்பட்டுள்ளதனால் கட்டளைகளை ஆகக் குறைந்தது முன்னைய ஆண்டின் சனவரி மாத்தில் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் 04 மருந்துகள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டில் சாதாரண வருடாந்த கட்டளையும் 04 மருந்துகள் தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் சாதாரண வருடாந்த கட்டளையும், 07 மருந்துகள் தொடர்பாக 2024 ஆம் ஆண்டில் சாதாரண வருடாந்த கட்டளையும் மருத்துவ வழங்கல் பிரிவினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. **(பின்னிணைப்பு - 134)**

7.12.1.2 05 மருந்துகள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டில் சாதாரண வருடாந்த கட்டளையானத மருத்துவ வழங்கல் பிரிவினால் தயாரிக்கப்பட்டு அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு அண்ணளவாக ஒரு மாதம் தாமதிக்கப்பட்டிருந்தது எனவும் மருத்துவ வழங்கல் பிரிவினால் 12 மருந்துகள் தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் சாதாரண வருடாந்த கட்டளை தயாரிக்கப்பட்டு அரசாங்க மருந்தாக்கல் கூட:டுத்தாபனத்திற்குச் சமர்ப்பித்தல் 07 மாதங்களிலிருந்து 11 மாதங்கள் வரையான வீச்சில் பரந்திருக்கும் வகையில் தாமதிக்கப்பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது. **(பின்னிணைப்பு - 135)**

7.12.1.3 2023 யூன் மாதம் வரை சுகாதார அமைச்சில் மருந்துகளை மதிப்பீடு செய்தல், கட்டளையிடுதல், வழங்குதல் மற்றும் பகிர்ந்தளித்தலுக்காக MSMIS கணனி முறைமை பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் மருத்துவ வழங்கல் பிரிவினால் MSMIS கணனி முறைமையினூடாக அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட 06 மருந்துகள் தொடர்பாக 06 கட்டளைகள் வழக்கம் போல எழுத்துமூலம் கூட்டுத்தாபனத்திற்கு தொடர்பாடல் செய்யும் வரை பார்த்துக்கொண்டு இருப்பதனால் கட்டளைகள் சமர்ப்பித்து 01 மாதத்திலிருந்து 10 மாதங்கள் வரையான காலம் பரந்திருக்கும் வகையில் தாமதித்து பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 136)**

7.12.1.4 2022 ஆம் அண்டிற்காக சாதாரண வருடாந்த கட்டளையை தயாரித்து அமுல்ப்படுத்தாமை, சாதாரண கட்டளைகள் தொடர்பாக பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பழித்தல் 10 மாதங்களால் தாமதித்தமை, வழகுனர்னரைத் தெரிவுசெய்ததன் பின்னர் பொருட்களை அனுப்புவதற்கான ரோகரிக்கைகளை வழங்கவதற்காக மூன்று மாதங்களுக்கு அண்மித்த காலம் தாமதித்தல், பெறுகை நடவடிக்கைகளுக்காக 21 மாத காலம் கடந்திரந்ததனால் கேள்விதாரரினால் வழங்கலினை பொறுப்பேற்றல் நிராகரிக்கப்படுதல், மருத்துவ வழங்கல் பிரிவிற்கும் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்குமிடையெ காணப்பட்ட பலவீனமான தொடர்பாடல் இணைப்பினால் முன்வந்த ஒரேயொரு கேள்விதாரர் சம்பந்தமாக மருத்துவ வழங்கல் பிரிவின் அப்பிப்பிராயத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக 11 மாத காலம் கடந்திருந்தமை, கட்டளைகளை இரத்துச் செய்தலும் கட்டளைகளை தற்காலிகமாக கைவிடுதலும், NMRA சான்றிதழினைப் பெற்றிருந்த ஒரேயொரு வழங்குனரின் அச்சான்றிதழ் காலாவதியாகியிருந்தமை மருத்துவ வழங்கல் பிரிவின் பொருள் விபரக்குறிப்பினை நிறைவேற்றிய ஒரு வழங்குனர் தேசிய ஒளடதங்களை ஒழங்குபடுத்துதல் அதிகார சபையினால் பதிவு செய்திருக்காமை, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இச்சபையின் பெறுகை நடவடிக்கைகளுக்காக தேவையற்ற வகையில் நீண்ட காலம் எடுத்து கட்டளைகளை இரத்துச் செய்தல் முதலிய காரணங்கள் மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் 18 மருந்துகள் 04 மாதங்களிலிருந்து 35 ½ மாதங்கள் வரையான காலவீச்சில் பரந்திருக்கும் வகையில் நிலுவையாகக் காணப்பட்டது.**(பின்னிணைப்பு - 137)**

7.12.1.5 06 மருந்து விடயங்களுக்காக 2019 இலிருந்து 2023 வரை மதிப்பீடு செய்யப்பட்ட அளவிற்கம் உள்ளபடியான அளவிற்குமிடையே முரண்கள் காணப்பட்டதுடன் இந்த மதிப்பீடு செய்த தரவுகளை மருந்து தேவைப்பாட்டிற்கு இணங்க சரியா முன்அறிந்து கொள்வதற்கு மருத்துவ வழங்கல் பிரிவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. **(பின்னிணைப்பு - 138)**

7.12.2 பெறுகை வழிகாட்டிக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல்

7.12.2.1 அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.10 (ஆ) வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தத்தின் செயலாற்றல் வெற்றியளிக்காதிருக்கையில் அதிலிருந்து பெறுகை செய்யும் நிறுவனத்தை பாதகாப்பதற்காக செயலாற்றல் பிணை முறியைச் சமர்பிக்குமாறும் விலைமனுக்கோரல் ஆவணத்தின் இரண்டாவது பகுதியின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் செயலாற்றல் பிணை முறைமையினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் சுகாதார அமைச்சு செயலாளரின் SH/PSRP/01/SPC/2021 ஆம் இலக்க 2023 சனவரி 10 ஆந் திகதிய கடித்தின் சிபாரிசின் அடிப்படையில் செயலாற்றல் பிணைமுறியினைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக வழங்குனருக்குச் செலுத்த வேண்டிய பணத்தில் 10 சதவித பணமும் வழங்கலினைப் பூரணப்படுத்தி 30 நாட்கள் வரை நிறுத்திவைத்துக்கொள்ளுமாறு தெரிவித்ததன் காணரமாக ரூபா 1,800 மில்லியன் மற்றும் ஐக்கிய குடியரசு டொலர் 4.43 மில்லியன் பெறுமதியான கேள்விகளுக்காக ரூபா 180 மில்லியன் மற்றும் ஐ.கு.டொலர் 0.44 மில்லியன் பெறுமதியான செயலாற்றல் பிணை முறியினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. **(பின்னிணைப்பு 139)**

7.12.2.2 கொள்வனவு கட்டளையிலுள்ள வழங்கல் நிபந்தனையின் பிரகாரம் மருந்து வழங்கல் தாமதித்தமையின் அடிப்படையில் தண்டப் பணத்தை வழங்குனர்களிடமிருந்து அறவிட வேண்டிய போதிலும் சுகாதார அமைச்சு செயலாளரின் SH/Misc/03/2022 ஆம் இலக்க 2022 நவம்பர் 23 ஆந் திகதி கடித்தின் பிரகாரம் வழங்கல் தாமதித்தமையின் அடிப்படையில் விதிக்கப்பட்ட தண்டப் பணம் விடுவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு சலுகை வழங்கியதன் காரணமாக வழங்கனரினால் மருந்துகளை வழங்குதல் தாமதித்தமை சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாதிருந்தது. இருப்பு தட்டுப்பாட்டின் அடிப்டையில் அதிக விலைக்கு அவசர கொள்வனவுகளுக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தும் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் வழங்கப்படாமையால் அரசாங்கத்திற்கு ரூபா 143.443 மில்லியன் மற்றும் ஐக்கிய குடியரசு டொலர் 0.064 மில்லியனான தண்டப் பணம் இழக்கப்பட்டிருந்தது. **(பின்னிணைப்பு - 140)**

7.12.2.3 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.10(ஆ) பிரிவின் பிரகாரம் வழங்குனர் 10 சதவீத செயலாற்றல் பிணைமுறியினை வழங்க வேண்டியிருந்ததுடன் கேள்வி மனுவினை அறிக்கையில் கேள்விமனு சம்பந்தமான நிபந்தனை இலக்கம் 05 இன் பிரகாரம் வழங்கலினை தெரியப்படுத்தி 03 நாட்களுக்குள் இருப்பினை பொறுப்பேற்கும் திகதியிலிருந்து 03 மாதங்களுக்கு செல்லுபடியாகும் வகையில் செயலாற்றல் பிணைமுறி

வழங்கப்பட வேண்டிய போதிலும் 02 கட்டளைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 31.66 மில்லியன் பெறுமதியான செயலாற்றல் பிணைமுறி செல்லுபடியற்றதாக இருந்தது. **(பின்னிணைப்பு - 141)**

7.12.2.4 மருத்துவ வழங்கல் பிரிவினால் கட்டளைகளை மேற்கொள்ளும் போது ஒரே மருந்திற்காக ஒரே தடவையில் கட்டளைகளைச் சமர்ப்பிக்காது சில கட்டளைகள் வழங்கியதன் காரணமாக பெறுகை நடவடிக்கைகள் சிக்கலானதாக இருந்ததுடன் அதிக எண்ணிக்கையான அலகுகளை ஒரே தடவையில் பெறுகை செய்வதன் மூலம் அலகு எண்ணிக்கையை குறைக்கச் செய்யும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. **(பின்னிணைப்பு - 142)**

7.12.2.5 மருத்துவ வழங்கல் பிரிவின் கட்டளைகள் V குறியீட்டின் கீழ் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினூடாக கொள்வனவு செய்வதற்காக மருத்துவ வழங்கல் பிரிவினால MSMIS முறைமையின் மூலம் கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தும் அக்கட்டளைகள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வில்லை என 2023 ஒக்தோபர் 30 ஆந் திகதி பிரதி பொது முகாமைளார் (இறக்குமதி மற்றும் பெறுகைகள்) மருந்துகள் இனால் எழுத்துமூலம் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமல்ப்படுத்தப்படாத கட்டளைகளை தகவல் தொடர்பாடல் முறைமையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7.12.2.6 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.5.1 (ஊ) வழிகாட்டியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை மற்றும் சிபாரிசுகளை மீளாய்வுசெய்தல் பெறுகைக்குவிழுவின் பொறுப்பும் கடமையுமாக இருந்ததுடன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கொவையின் 8.1.1. ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக் குழுவினால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையினை கவனமாக பார்த்ததன் பின்னர் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிடமிருந்து தேவையான விளக்கமளித்தல்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.1.1.(அ) வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பெறுகைக்குரிய கேள்விகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் முறைப்படியாகத் தயாரிக்கப்பட்ட சிபாரிசுகளை உள்ளடக்கிய அறிக்கை பெறுகைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த போதிலும் அது தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடம் விசாரணை செய்வதற்கு பெறுகைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2022 மற்றும் 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை தொழில்நுட்ப மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு படியாக ரூபா 1.83 மில்லியன் செலுத்தியிருந்தது.

7.12.2.7 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்காக 73 மருந்து விடயங்களுக்கு அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரதான கட்டளைகள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுப் பரீட்சிப்பின் போது மருந்துகளுக்கான மதிப்பீட்டினைத் தயாரிப்பதிலிருந்து மருந்துகளுக்கு கட்டளையிட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்குதலும் அந்த மருந்துகளைப் பகிர்ந்தளித்தலும் சம்பந்தமான நடைமுறைகள் தொடர்பாக பரீட்சிக்கப்பட்ட பொருண்மையான மற்றும் முக்கியமான விடயங்கள் இந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்படுகின்ற தொகுதி I இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் வரைபு 2023 திசெம்பர் 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கி பதிலைப் பெற்றுக் கொள்வதற்கு 1 ½ மாத காலமும் கணக்காய்வு ஐயவினாவிற்கு பதில் வழங்குவதற்கு 02 மாத்திற்கு மேற்பட்ட காலமும் வழங்கப்பட்டிருந்தும் அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அந்த விடயங்கள் சம்பந்தமாக கணக்காய்விற்கு முழுமையற்றதாக பதில் வழங்கப்பட்டிருந்தது.

7.13 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளின் தரம்தொடர்பான பரீட்சிப்பு

7.13.1 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் அண்டுகளின் போது தரமில்லாத மருந்துகளை வழங்குவது சம்பந்தமாக வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் கிருமித் தடுப்பு மருந்து, ஒவ்வாமை, ஆஸ்துமா, புற்றுநோய், இருதயநோய், கண்நோய் மற்றும் சிறுநீரக நோய் என்பவற்றிற்காக பயன்படுத்துகின்ற மருந்துகளை உள்ளடக்கி சில மருந்துகளில் கண்ணாடித் துண்டுகள் காணப்படல், பார்க்ககூடிய துகள்கள் காணப்படல், இறந்த கரப்பொத்தான் இருத்தல், வில்லைகள் உடைந்திருத்தல், நிறம் மாற்றமடைந்திருத்தல், பிரித்தானிய மருந்துக் கலவை மாதிரிக் குறிப்புக்களுக்கு இணங்கியிருக்காமை, பாதகமான பக்க விளைவுகளால் மரணம் சம்பவித்தல் நுண்கிருமித் தொற்று (Microbial Contamination) முதலிய விடயங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக பயன்படுத்துவதிலிருந்து நீக்கப்பட்டது அல்லது பயன்படுத்துவது கைவிடப்பட்டது.

(i) இதற்கு மத்தியில் 2022 ஆம் ஆண்டின் போது அரசாங்க வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட மருத்துவ வழங்கல்களில் ரூபா 349.03 மில்லியன் பெறமதியான மருந்துகள், சத்திரசிகிச்சை மற்றும் ஆய்வுகூட பொருட்கள், தரமற்றதாக இருத்தலின் அடிப்படையில் பயன்படுத்துவதிலிருந்து நீக்கப்பட்டதுடன் (Withdraw) இன்னும் ரூபா 31.75 மில்லியன் பெறுமதியான மருந்துகள் தரம் அற்று இருந்ததன் அடிப்படையில் தற்காலிகமாக பயன்படுத்துவது கைவிடப்பட்டிருந்தது. ((withhold) அவற்றிற்கு மத்தியில் பார்க்ககூடிய துகள்கள் காணப்படல் வில்லையின் மேற்பரப்பில் ஊசி வடிவிலான படிகம் காணப்படல், வில்லைகள் உடைந்திருத்தல், நிறம் மாற்றமடைந்திருத்தல் , பிரித்தானிய மருந்துக்கலவை விபரக் குறிப்பிற்கு இணங்கியிருக்காமை (does not confirm to BP specification), நோயாளிகள் மரணமடைதல், அறிக்கையிடப்பட்டிருந்தல் முதலிய விடயங்கள் இனங்காணப்பட்டிரந்ததுடன் அதன் காரணமாக பயன்படுத்துவதிலிருந்து நிக்கப்பட்டு

அல்லது பயன்படுத்துவது கைவிடப்பட்டிருந்தது. அவ்வாறு தரம்அற்ற பயன்படுத்துவதிலிருந்து நீக்கப்பட்ட மருத்துவ வழங்கல்களுக்கு மத்தியில் நீரிழிவு, புற்றுநோய், தொற்றுநோய், சிறுநீரகநோய் என்பவற்றிற்காகப் பயன்படுத்துகின்ற மற்றும் வலி நிவாரணியாகப் பயன்படுத்துகின்ற மருந்துகள் இருந்தன என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ii) இந்த நிலைமை கணக்காய்வினால் பல ஆண்டுகளாக வெளிப்படுத்தப்பட்டிருந்தும் இதுவரை இந்நிலைமையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுகப்பட்டிருக்காததுடன் 2023 ஆம் ஆண்டு தொடர்பாக ரூபா 2,482.12 மில்லியன் பெறுமதியான மருந்துகள், சத்திரசிகிச்சை மற்றும் ஆய்வுகூட பொருட்கள் தரமற்றவையாகி பயன்படுத்துவதிலிருந்து நீக்கப்பட்டதுடன் மேலும் ரூபா 10.72 மில்லியன் பெறுமதியான மருத்துவ வழங்கல்கள் தரமற்றதாக இருந்ததன் அடிப்படையில் தற்காலிகமாக பயன்படுத்துவது கைவிடப்பட்டிருந்தது. அவற்றிற்கு மத்தியில் கண்நோய், புற்றுநோய், மயக்குவதற்கும் தொற்றுநோய் எதிர்ப்புக்குமாக பயன்படுத்துகின்ற மருந்துகளை உள்ளடக்கிய மருத்துவ வழங்கல்கள் தரமற்றவைகளாக பயன்படுத்துவதிலிருந்து நீக்கப்படுவதும் மருந்து பயன்படுத்தியதன் பின்னர் நோயாளிகளுக்கு பாதகமான எதிர்விளைவுகள் ஏற்படல், நோயாளிகள் மரணமடைதல், கண்பார்வையை இழத்தல், முதலிய சிக்கல்கள் உருவாகியிருந்தது என அவதானிக்கப்பட்டது. இதன் காணரமாக தரமற்ற மருந்துகளை நோயாளிகளுக்கு வழங்குவதனை தவிர்க்கும் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) 02 மருந்து வகைகள் தொடர்பான 04 தொகுதிகளின் மருந்து விடயங்கள் தொடர்பான குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்ட மருந்து விடயத்தினை மாத்திரம் தொடர்ச்சியாக பேணாதிருப்பதற்கு (Discontinue) 2022 ஆம் ஆண்டின் போது 04 சுற்றறிக்கைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் ரூபா 2.05 மில்லியன் பெறுமதியான குறைபாடுகளுடனான மருந்து இருப்புக்கள் மாத்திரம் நீக்கப்பட்டிருந்தன. மருத்துவ வழங்கல் பொருட்கள் தரமற்றதாக மாறுகின்ற சந்தர்ப்பத்தில் வைத்தியசாலையில் காணப்பட்ட மிகுதி இருப்புக்கள் தொடர்பான தகவல்கள் மருத்துவ வழைங்கல் பிரிவினால் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளாததனால் குறைபாடுகள் சுட்டிக்காட்டிய இருப்புக்கள் வைத்தியசாலைகளினால் சரியாக கணிக்கப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதா என்பது கணக்காய்வின் போது சிக்கலுடையதாகும்.

7.13.2 மருத்துவ வழங்கல் பிரிவினால் வைத்தியசாலைகளுக்கு மருந்துகளை வழங்குவதற்கு முன்னர் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற தேசிய மருந்துகளின் தரத்தை உத்தவாதம் செய்யும் ஆய்வுகூடத்தின் (National Medicines Quality Assurance Laboratory -NMQAL) மூலம் தரத்தைப் பரீட்சிக்கும் இயலுமை இல்லாததன் காரணமாக மருந்துகள் தரமற்றவை என அறிக்கையிடப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அந்த மருந்துகளில் அதிக அளவானவை

நோயாளிகளால் பயன்படுத்தி முடிவடைந்துள்ளது என பல ஆண்டுகளாகவே அவதானிக்கப்பட்டது. எனினும் 2023 ஆம் ஆண்டின் போதும் குறிப்பிடத்தக்க அளவில் அந்த நிலைமையிலிருந்து விடுவிப்பதற்காக மருந்துகளை வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்கு முன்னர் தரத்தை பரீட்சிக்கும் ஒரு நடைமுறை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) மருந்துகளின் தரத்தைப் பரீட்சிப்பதற்கு பதிலாக GMP சான்றிதழ்களை வைத்திருக்கும் வழங்குனர்களிடமிருந்து மருந்துகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன என கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருந்தும் பெறுகைச் சந்தர்ப்பத்தின் போது தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் பதிவுசெய்தல் சான்றிதழ் இல்லாத வழங்குனர்களுக்கு பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் கடிதம் (Wavier of Registration - WOR) வழங்கி வழங்குனர்களின் தகமைகள் மற்றும் மருந்துகளின் தரம் தொடர்பாக பரீட்சிக்கப்பட்டாது மருந்துகளை வழங்குவதற்கு வசதிகள் வழங்கியுள்ளதனால் மருந்துகளின் தரம் தொடர்பாக அதன் போதும் ஒரு ஆபத்து ஏற்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.

(ii) 2023 ஆம் ஆண்டு வரை அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஆய்வுகூட வசதிகளைப் பயன்படுத்தி மருந்துகளின் சிறிய அளவானவற்றை பரீட்சிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தும் காணப்படுகின்ற சட்ட நிலைமையில் அந்த பரீட்சிப்பு பெறுபேறுகளின் மூலம் தரமற்றது என வெளிப்படுத்தப்பட்டிருப்பதனால் மீண்டும் தேசிய மருந்துகளின் தரத்தை உத்தரவாதப்படுத்தும் ஆய்வுகூடத்திற்கு அந்த மாதிரிகளை அனுப்பி பரீட்சித்தல் வேண்டும்.

(iii) இலங்கையில் மருந்து துறையின் அபிவிருத்திக்காக சயாதீனமான ஒப்பதல் அளிக்கப்பட்ட மூன்றாந்தரப்பினரின் ஒரு ஆய்வுகூடமாக ரூபா 99 மில்லியன் செலவில் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினுள் (ITI) நிர்மாணிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வந்திருந்த மருந்து ஆய்வுகூடத்தினை இதற்காக பயன்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு அல்லது தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை 2023 ஆம் அண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

7.13.3 மருத்துவ வழங்கல் பிரிவினால் வழங்கப்பட்டிரந்த மருத்துவ வழங்கல்கள் தரமற்றதாகியதன் பின்னர் உரிய வழங்குனரிடமிருந்து முறைப்படியாக பணம் அறவிடப்பட்டிருக்காததுடன் முறைப்படியாக பணம் அறவிடப்பட வேண்டிய பணத்தை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக அந்த வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய வரவுத்தாள் பெறுமதிகள் காணப்படுமாகவிருந்தால் மாத்தரம் அறவிட வேண்டிய பெறுமதியை கழித்துக் கொள்வதற்கும் சில வழங்கனர்களிடமிருந்து தவணை ரீதியாக அவர்களுக்கு எதிர்வரும் காலங்களில் செலுத்துவதற்கு உள்ள விலைப்பட்டியல்களிலிருந்து அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க தரமற்ற மருந்து வழங்கல்களுக்காக இலங்கை அரசாங்க மருந்தாக்கல்

கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 1,046.77 மில்லியன் தொகையையும் இலங்கை அரசாங்க மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 160.59 மில்லியன் தொகையும் உள்நாட்டு வழங்குனர்களிடமிருந்து ரூபா 84.87 மில்லியன் தொகையும் வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து ரூபா 370.76 மில்லியன் தொகையுமாகஆக ரூபா 1663 மில்லியன் 2023 திசெம்பர் 31 அந் திகதி வரை மருத்துவ வழங்கல் பிரிவினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் வழங்குனர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,406.48 மில்லியன் இதுவரை அறவிடப்பட்டிருக்காததுடன் அவற்றில் ரூபா 685.68 மில்லியன் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் ரூபா 165.80 மில்லியன் சுகாதார அமைச்சு செயலாளரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் செயற்படுத்துவது கைவிடப்பட்டுள்ளது.

7.13.4 வைத்தியசாலைகளுக்கு மருந்துகளை வழங்கியதன் பின்னர் தரமற்றதாக உள்ளமை அறிவிக்கப்படுதல் தொடர்பாகவும் தரமற்ற மருந்துகள் தொடர்பாகவும் சுற்றறிக்கைகள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பம் அளவில் அவை 100 சதவிதமும் நோயாளிகளுக்கு வழங்கி அல்லது பயன்படுத்தி முடிவடைந்திருந்தமை தொடர்பாகவும் பயன்படுத்துவதனை கைவிடுவதற்கு (withhold) பணிப்புரை விடுத்த மருந்து விடய்ங்களை மேலும் பரீட்சிப்புக்களை மேற்கொண்டு பயன்படுத்துவதிலிருந்து நீக்குவதற்கு (withdraw) அல்லது மீண்டும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு (Revoke) பணிப்புரை வழங்குவதற்கு முன்னர் அந்த மருந்து விடயங்கள் சுயமாக காலாவதியாவதற்கு உட்பட்டமை தொடர்பாகவும் பரீட்சிப்பு நடவடிக்கைகள் தாமதமடைந்ததன் காரணமாக காலாவதியான விடயங்களுக்காக வழங்குனர்களிடமிருந்து உரிய நட்டத்தினை அறவீடு செய்யும் இயலுமை இழக்கப்படுதல் தொடர்பாகவும் தொடச்சியாக கணக்காய்வு அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்காக வைத்தியசாலைகளுக்கு மருத்துவ வழங்கல்களை வழங்குவதற்கு முன்னர் தரத்தைப் பரீட்சிக்கும் ஒரு நடைமுறை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

7.14 மயக்குவதற்காக பயன்படுத்தப்படுகின்ற Bupivacaine 0.5% + Glucose 8% inj.4 ml Amp. மருந்து தரமற்றிருந்தமை தொடர்பான பரீட்சிப்பு (SR- 01502003)

7.14.1 இருப்பு தட்டுப்பாடாகியதன் அடிப்படையில் சத்திரசிகிச்சைகளின் போது மயக்குவதற்காக பயன்படுத்தப்படுகின்ற Bupivacaine 0.5% + Glucose 8% inj.4ml .Amp மருந்தில் 68,750 தடுப்பூசி மருந்து இருப்பு மருத்துவ வழங்கல் பிரிவின் 2022/MSD/V/R/P/00076 (ICL/EOI/PI/134/2022) ஆம் இலக்க கட்டளையின் மூலம் Slim Pharmculicals (Pvt).Ltd கம்பனியிடமிருந்து ரூபா 40,738,819 பெறுமதிக்கு அவசர கொள்வனவு செய்தல்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலே 6.6.5 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விருப்பினை கோருவதன் கீழ் (EOI) தேசிய ஒளடதங்களை ஒழங்குபடுத்துதல் அதிகார சபையில் பதிவுசெய்த ஒரு வழங்குனர் இல்லாத ஒரு கம்பனிக்கு பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் ஒரு

சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கு உட்பட்டு இக்கட்டளை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2023 பெப்ரவரி 13 அந் திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அந்த இருப்பு கிடைத்திருந்தது.

7.14.2 தொகுதி இலக்கம் 03 இனை உள்ளடக்கிய இந்த தடுப்பூசி மருந்துகள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்த திகதியிலிருந்து தேசிய வைத்தியசாலைகள் மற்றும், போதனா வைத்தியசாலைகள், தளவைத்தியசாலைகள் ஏனைய சுகாதார நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த மருந்தினை பயன்படுத்தியதன் பின்னர் ஒரு கற்பினிப் பெண் மரணமடைந்துள்ளார் எனவும் மற்றுமொரு பெண்ணுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்து இருந்ததுடன் (Neurological Adverse reaction) 2023 ஏப்ரல் 04 ஆந் திகதி பேராதனை போதனா வைத்தியசாலையின் விசேட வைத்தியரினால் வைத்தியசாலையின் பணிப்பாளருக்கும் ஏப்ரல் 06 ஆந் திகதி அப்பணிப்பாளரினால் தேசிய மருந்துகளின் தரத்தினை பாதுகாக்கும் ஆய்வுகூடத்திற்கு (NMQAL) முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. உரிய முறைப்பாட்டினைப் பரீட்சித்த போது மருந்தினைப் பயன்படுத்தியதனால் உருவாகிய பாரதூரமான பாதக பக்க விளைவின் காரணமாக உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மருந்தினைப் பயன்படுத்துவது கைவிடப்பட்டிருந்தது.

7.14.3 தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் பாதுகாப்பு மற்றும் ஆபத்து மதிப்பீட்டு உபகுழுவின் (Safety & Risk Evaluation Subcommittee- SAFRSC) 2023 ஏப்ரல் 10 ஆந் திகதிய கூட்ட அறிக்கையின் பிரகாரம் இந்த 68,750 தடுப்பூசி இருப்பு தரமற்றது என அடையாளம் காண்கையில் 34,705 அலகுகள் அல்லது மொத்த இருப்பில் 50 சதவீதமும் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் 2023 யூலை 27 ஆந் திகதி மருத்துவ வழங்கல் பிரிவினால் இந்த உற்பத்தப் பொருள் முழுவதும் பயன்படுத்துவதிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. மேலும் மருத்துவ வழங்கல் பிரிவினால் வைத்தியசாலைகளுக்கு இந்த மருந்துகளை வழங்குவதற்கு முன்னர் தேசிய மருந்துகளின் தரத்தைப் பாதுகாக்கும் ஆய்வுகூடத்தின் மூலம் மருந்துகளின் தரம் தொடர்பாக பரீட்சிப்பதற்கு போதியளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

7.14.4 மேலே 7.14.1 ஆம் பந்தியில் குறிப்பிட்ட கம்பனியிடமிருந்து ரூபா 85,496 அறவிட்டு மேலே 7.11.7 ஆம் பந்தியில் குறிப்பிட்ட பிரகாரம் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையினால் மருந்துகள் தொடர்பாக மதிப்பீடு செய்யாது துரித பொறிமுறைமையினூடாக விசேட நடைமுறையின் கீழ் 2022 திசெம்பர் 30 ஆந் திகதி பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் சான்றிதழ் (WOR) வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒளடதங்களை ஒழுங்குபடுத்தும் அதிகார சபையினால் வழங்குனர்களிடமிருந்து மேலுள்ளவாறு பணத்தை அறவிட்டு பதிவுசெய்வதிலிருந்து விடுவிக்கும் சான்றிதழினை வழங்கி மேலே.... ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறு தமது பொறுப்பினை ஏனைய தரப்பினர்களுக்கு ஒப்படைப்பதன் மூலம் அதிகாரசபை பிரதான குறிக்கோளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்திருந்தது.

7.14.5 இந்த மருந்து தரம் அற்றதாக இருந்தமை சம்பந்தமாக மற்றும் மருந்தினை பயன்படத்தியதனால் உரிய நோயளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் சம்பந்தமாக மருத்துவ வழங்கல் பணிப்பாளர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளாரா என்பது மேலே.... ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு கணக்காய்வினால் விளக்கம் கோரப்பட்டது. அதன் போது உரிய மருந்துகளின் தரம் சம்பந்தமாக மருத்துவ வழங்கல் பணிப்பாளருக்கு பொறுப்பு வகிக்க முடியாது எனவும் அவரின் இணக்கப்பாடின்றி அந்த நிபந்தனை உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் விருப்புக்களைக் கோரி வழங்குனர்களை மதிப்பீடு செய்யும் போது நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளாத மதிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் பதிவு செய்யாத வழங்குனர்களுக்கு இந்த மருந்துகளை வழங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு மேலே 7.3.6 ஆம் பந்தியில் குறிப்பிட்ட மதிப்பீட:டுக் குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

அதற்கிணங்க மருத்துவ வழங்கல் பிரிவினால் வழங்கப்பட்ட 7.14.2. மேலுள்ள பந்தியில் குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தரமற்றது என இனங்காணப்பட்ட இந்த மருந்துகள் சம்பந்தமாக பொறுப்பேற்பதற்கு பொறுப்பினை முறைப்படியாக நிறைவேற்றுவதற்கேனும் இந்த நிறுவனம் தவறியிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.15 கண் நோய்க்காக பயன்படுத்துகின்ற Prednisolone Acetate Eye Drop 1%,5ml dropper Bot. மருந்து தரமற்றிருத்தல் தொடர்பாக பரீட்சித்தல் (SR- 00901001)

7.15.1 கண் நோயாளர்களக்கு மேற்கொள்ளப்படுகின்ற கெடரக் சத்திரசிகிச்சையின் (Cataract Surgery) பின்னர் பயன்படுத்துகின்ற Prednisolone Acetate Eye Drop மருந்தின் 500,000 போத்தல்களை மருத்துவ வழங்கல் பிரிவில் 2021/SPC/N/R/P/00043 ஆம் இலக்க கட்டளையின் மூலம் கட்டளையிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 3,631,093 பெறுமதியான 50,000 போத்தல்கள் 2023 மார்ச்ச 03 ஆந் திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்தது. தொகுதி இலக்கம் 02 இனை உள்ளடக்கிய இந்த 50,000 மருந்து அலகுகளின் இருப்பு 2023 மார்ச் 09 ஆந் திகதியிலிருந்து இல்ங்கை தேசிய கண் வைத்தியசாலை, ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலைகளை உள்ளடக்கிய வைத்தியசாலைகள் மற்றும் 58 சுகாதார நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

7.15.2 இந்த மருந்து சம்பந்தமாக 2023 ஏப்ரல் 18 ஆந் திகதி தேசிய கண் வைத்தியசாலையின் மற்றும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரினால் இந்த மருந்தினை பயன்படுத்தியதன் பின்னர் உரிய நோயாளிகளுக்கு கண்தொற்றுநோய் (patient got Endophthalmitis) ஏற்பட்டுள்ளது என தேசிய மருந்துகளின் தரத்தைப் பாதுகாக்கும் ஆய்வுகூடத்திற்கு (NMQAL) மேற்கொள்ளப்பட்ட முறைபாடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த முறைப்பாட்டினை பரீட்சித்ததன் பின்னர் நோயாளிகளுக்கு ஏற்பட்ட பாரிய அளவிலான

பாதகமான எதிர்விளைவுகளின் காரணமாக"Sample does not conform to specifications for the sterility test" எனக் குறிப்பிட்டு இந்த மருந்து தரமற்றது என அறிக்கையிடப்பட்டதுடன் மருந்து இருப்பினை பகிர்ந்தளித்தல் ஆரம்பிக்கப்பட்டு 46 நாட்களின் பின்னர் அதாவது 2023 ஏப்ரல் 25 ஆந் திகதி மருத்துவ வழங்கல் பணிப்பாளரால் அவை பாவிப்பதிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த மருந்தினை பயன்படுத்துவதிலிருந்து நீக்குகையில் 21,150 அலகுகள் அல்லது கிடைத்த முழு இருப்பில் 43 சதவீதமும் நோயாளிகளுக்கு பயன்படத்தப்பட்டது என மருத்துவ வழங்கல் பிரதிப் பணிப்பாளரினால் 2024 ஏப்ரல் 29 ஆந் திகதிய MSD/FIN/MSB/75/2023 ஆம் இலக்க கடித்தின் மூலம் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த மருந்தினை பயன்படுத்தியதனால் தேசிய கண் வைத்தியசாலையின் இரண்டு நோயாளர்கள் முழுமையாக கண்பார்வையை இழந்திருந்தனர் எனவும் நுவரொலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் 16 நோயாளர்கள் ஒவ்வாமைக்கு உள்ளாகியிருந்தார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

7.15.3 மருத்துவ வழங்கல் பிரிவு அல்லது/ மற்றும் தேசிய மருந்துகளின் தரத்தை பாதுகாக்கும் ஆய்வுகூடத்தின் வைத்தியசாலைகளுக்கு இந்த மருத்தினை வழங்குவதற்கு முன்னர் மூலம் மருந்துகளின் தரம் தொடர்பாக பரீட்சிப்பதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7.16 அங்கீகரீக்கப்பட்ட பெறுகை விதிமுறைகளுக்கு மாற்றமாக அவசர மருந்துக் பெறுகை செயற்பாட்டில் முறையற்ற தன்மை காரணமாக Human Immunoglobulin IV 5-6g (SR-00603205) மற்றும் Rituximab inj. 500mg in 50ml vial(SR-01205702) போலி மருந்துகளை பெறுகை செய்தமை.

மேலே குறிப்பிட்ட Human Immunoglobulin IV 5-6g)SR-00603205 (மற்றும் Rituximab inj. 500mg in 50ml vial)SR-01205702) இரண்டு மருந்துகள் தொடர்பாக மேலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது மற்றும் கண்டுபிடிப்புகள் கீழே 7.16.1 - 7.16.12 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

7.16.1 **Human Immunoglobulin IV 5-6g மருந்து (SR-00603205)**

7.16.1.1 2022 ஆம் ஆண்டில் கையிருப்புப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, மேலே உள்ள இலக்கம் 6.6.5 இல் குறிப்பிட்டுள்ளபடி அவசரகால கொள்முதலின் கீழ் இந்த மருந்தை கொள்வனவு செய்வதற்காக விநியோகஸ்தர்களிடமிருந்து ஏலம் கோரப்பட்டிருந்தது. அந்தவகையில் ஒரு தடுப்பூசி 130 அமெரிக்க டொலர்கள் வீதம் 2,925,000 அமெரிக்க டொலர் பெறுமதியான 22,500 தடுப்பூசிகளை வழங்குவதற்கான கொள்வனவுக் கட்டளையை தேர்ந்தெடுக்கப்பட்ட ஏலதாரரான Isolez Biotech Pharma AG Ltd நிறுவனத்துக்கு சுகாதாரச் செயலாளர் வழங்கியிருந்தார். அதன் பின்னர் 2023 ஜனவரி 04 ம் திகதியன்று 2022/MSD/V/R/P/00038 (ICL/EOI/P1/174/2022) ஆம் இலக்க மேற்கண்ட பெறுமதி அடிப்படையிலான கொள்வனவு ஆணை குறித்த வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்தது.

7.16.1.2 வழங்குனரால் 2023 மே முதல் செப்டம்பர் வரையிலான காலப்பகுதியில் 22,500 தடுப்பூசிகளில் ரூபா 168.86 மில்லியன் பெறுமதியான 3,985 தடுப்பூசிகளை மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விநியோகம் செய்திருந்ததுடன் அப் பிரிவால் பெறப்பட்ட ரூபா 36.38 மில்லியன் வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்த அனைத்து தடுப்பூசி குப்பிகளும் 2023 மே 30 ஆந் திகதி முதல் தேசிய வைத்தியசாலைகள், போதனா வைத்தியசாலைகள், மாகாண வைத்தியசாலைகள் மற்றும் பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அம்மருந்துகள் நோயாளர்கள்ால் பயன்படுத்தப்பட்ட பின்னர் கொழும்பு, கண்டி தேசிய வைத்தியசாலைகள் மற்றும் மாத்தளை மற்றும் மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்கு கடுமையான பாதகமான பக்கவிளைவுகள் (Serious of Adverse reaction) ஏற்பட்டதாக 2023 செப்டெம்பர் மாதம் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

7.16.1.3 அதன் போது இந்த மருந்தைப் பயன்படுத்தும் நோயாளிகளுக்கு கடுமையான பாதகமான பக்கவிளைவுகள் (Serious of Adverse reaction) ஏற்பட்டுள்ளதையும், இந்த மருந்துக்கான சபையின் பதிவுச் சான்றிதழிலோ அல்லது பதிவில் இருந்து விலக்களிக்கப்பட்டமைக்கான சான்றிதழோ (WOR) அதிகாரசபையால் வழங்கப்படவில்லை என்பதை அதிகாரசபை கண்டறிந்திருந்தது. பின்னர், பாதுகாப்பு நடவடிக்கையாக இந்த வழங்குனர் வழங்கிய முழு இருப்பின் பயன்பாடும் பயன்பாட்டுக்கு தகுதியற்றது எனும் அடிப்படையில் 2023 ஒக்டோபர் 03 அன்று மருந்து வழங்கள் பணிப்பாளரினால் இடை நிறுத்தப்பட்டிருந்தது. 2023 ஒக்டோபர் 09 ஆந் திகதிய MSD/QP/2023/56 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் போலி மருந்து மற்றும் தீவிரமான பாதகமான எதிர்விளைவுகள் காரணமாக இந்த மருந்தின் முழு இருப்பையும் திரும்பப் பெற்று உடனடியாக இந்த மருந்தைப் பயன்படுத்துவதிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டது. அதன் பின்னர் 2023 ஒக்டோபர் 18 ஆம் திகதிய MSD/Q/Special/2023/4 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் குறித்த வழங்குனரால் விநியோகிக்கப்பட்ட அனைத்து தயாரிப்புகளும் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டன.

7.16.1.4 மேலே 7.16.1.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள பிரகாரம் 2022 செப்டம்பர் அளவில் இந்த மருந்துக்கான அவசர கொள்வனவுகளின் கீழ் விருப்பங்கள் அழைக்கப்பட்ட போது, இந்த மருந்துக்கான 2022 ஆம் ஆண்டிற்கான பொதுவான ஆண்டு கட்டளையின் கொள்வனவு நடவடிக்கைகள் 19 மாதங்கள் வரை தாமதமாகியிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டிற்கான, சமர்ப்பிக்கப்பட்ட அவசர கொள்வனவு கட்டளையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், இந்த விருப்பத்திற்கு அழைக்கப்பட்ட போது, 2021 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட சமர்ப்பிக்கப்பட்ட பொது வருடாந்த கட்டளை கிடைப்பதற்கு இருந்த தடுப்பூசிகள் 06 மாதங்களுக்கு போதுமான 47,202 தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதை கருத்திற் கொள்ளாமல் 03 மாதங்களுக்குத் தேவையான மேலே 7.16.1.1 இல் குறிப்பிடப்பட்ட 22,500 தடுப்பூசிகள் வாங்குவதற்கான அபிலாசைகள் அழைக்கப்பட்டிருந்தன.

7.16.1.5 மேலே உள்ள 6.6.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவசர கொள்வனவின் கீழ் கோரிக்கைகளை அழைக்கும் போது அவசரகால பெறுகைச் செயன்முறையில் அவதானிப்பு இலக்கம் 7.3 இன் பிரகாரம், இந்த மருந்தை பெறுகை செய்யும் போது, அவசர பெறுகைக்கான செயன்முறையின் கீழ் மாதாந்த அறிக்கையை சுகாதார அமைச்சரால் அமைச்சரவையின் மேவுகை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்காமை மற்றும் உள்ளக கணக்காய்வாளரால் பெறுகை செயற்பாட்டின் இறுதியில் நியாயமான மற்றும் பொருத்தமான பெறுகைச் செயன்முறையை உறுதி செய்யாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், பெறப்பட வேண்டிய இருப்பை பொருட்படுத்தாமல் கட்டளை தொகையை அறிவிக்க தீர்மானம் எடுத்தமையால் மற்றொரு முன்னுரிமைக்கு உகந்ததாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பைத் தவறவிடவில்லை என்பதை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தவில்லை. மேலும், கேள்வி கோரல் நடைமுறை மூலம் மருந்துகளை கொள்வனவு செய்வதற்கும் சுகாதாரத் துறையால் அவசர கொள்வனவு குழுவால் தொழில்நுட்ப நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமையால் பதிவிலிருந்து விலக்கலித்தலின் கீழ் பெறுகைக்காக சமர்ப்பித்தல் குறைந்த பொருத்தமான மட்டுப்படுத்தல் நிபந்தனை கேள்வி ஆவணங்களில் உள்ளகடகப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

7.16.1.6 இந்த மருந்து ஒரு இந்திய மருந்து (Indian origin), உற்பத்தியாளர் இந்தியாவின் Livealth Bio Pharma Pvt Ltd என்றும், 1 முதல் 5 வரையான வேலைநாட்களுக்குள் முழுத் தொகையினையும்இறக்குமதி செய்து வழங்கலாம் என்றும் தொடர்புடைய ஏல ஆவணங்களின் விலைப் பட்டியலில் இந்த வழங்குநர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அதே ஆவணத்தில் மூலப்பொருள் இந்தியாவின் Livealth Bio Pharma Pvt Ltd நிறுவனத்தின் என பட்டியலிடப்பட்டுள்ளதோடு, தயாரிப்புச் சூத்திரம் (Product formulated) ஒப்பந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் (Contact Manufacturing & Market) Isolez Biotech Pharma AG Ltd என பட்டியலிடப்பட்டுள்ளது. ஆனால் மதிப்பீட்டுக் குழுவின் கவனம் இதில் செலுத்தப்படவில்லை.

7.16.1.7 இது தொடர்பாக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தொடர்ந்து நடத்திய பரிசோதனையில், இது ஒரு போலியான மருந்து (Falsified Medicine) என்பதும், மருந்துப் பொதியில் குறிப்பிட்டுள்ள நிறுவனம் இந்த மருந்தை தயாரிக்கவோ விநியோகிக்கவோ இல்லை என்பதும் 2023 அக்டோபர் 04 ஆந் திகதி Livealth Bio Pharma என்ற இந்திய உற்பத்தி கம்பனி மின்னஞ்சல் மூலம் மேற்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தலின் பிரகாரம் கண்டறியப்பட்டது. இந்த மருந்தின் உள்நாட்டு முகவராக Isolez Biotech Pharma AG Ltd கம்பனியால் மோசடியாக மருந்துகள பொதிகளிலும் பதிவிலிருந்து விலக்களிக்கும் சான்றிதழ் உட்பட ஆவணங்களில் மருந்து உற்பத்தி செயற்படுவதாக போலியாக குறிப்பிட்டு இந்தியாவில் உள்ள Livealth Bio Pharma என்ற நிறுவனத்தின் பெயரை பயன்படுத்தியுள்ளதாகவும் அதன் மூலம் இந்த மருந்து இறக்குமதி செய்யப்பட்ட என்பதை நிரூபிக்க முயற்சி எடுக்கப்பட்டிருந்தது.

7.16.1.8 ஏல ஆவணங்களுடன் தொடர்புடைய மருந்து இருப்பின் உற்பத்தியாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ள Livealth நிறுவனத்தின் தரக்கட்டுப்பாட்டுத் துறையிலிருந்து மருந்தின் பகுப்பாய்வுச் சான்றிதழ் (Certificate of Analysis –COA) என்ற ஒரு சான்றிதழை வழங்குனர் சமர்ப்பித்திருந்தாலும், இந்தியாவின் குறித்த மருந்து உற்பத்தியாளரால் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு சமர்பிக்கப்பட்ட எழுதப்பட்ட உறுதிப்பாட்டின்படி குறித்த பகுப்பாய்வு சான்றிதழ் போலியான சான்றிதழ் என உறுதி செய்யப்பட்டது.

7.16.1.9 இந்த மருந்து தொடர்பாக மருந்து ஆராய்ச்சி நிறுவனத்தால் சுகாதார செயலாளருக்கு 2023 நவம்பர் 14 ஆந் திகதி சமர்ப்பித்த அறிக்கையின் மூலம் மருந்தில் அடங்கியுள்ள IgG (Immunoglobulin) மட்டத்தில் ஆன 5,000mg/dL இனை விட குறைந்த மட்டத்தில் காணப்படுவதாகவும் அதன் காரணமாக உரிய நோயாளர்கள் தொற்றுக்கு உட்படும் ஆபத்து காணப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே தேசிய மருந்து தரப் பாதுகாப்பு ஆராய்ச்சிக் கூடத்தால் 2023 நவம்பர் 23 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட தரம் தொடர்பான 03 சான்றிதழின் பிரகாரம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பெறப்பட்ட மூன்று மாதிரிகளின் Sterility பரிசோதனையின் போது உரிய மாதிரிகளுக்கு இணங்காதிருந்தமையும் Bacterial endotoxins பரிசோதனையின் போது மூன்று மாதிரிகளும் மாதிரிகளுக்கு இணங்காதிருந்தமையும் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

7.16.1.10 இவ்வாறான மருந்தொன்று வழங்குனரால் 2023 சனவரி 01 ஆந் திகதி முதல் இறக்குமதி செய்யப்படவில்லையென இலங்கை சுங்கத்தால் 2023 ஒக்டோபர் 17 ஆம் திகதி மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கும் 2023 நவம்பர் 08 ஆம் திகதி இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகம் சமர்ப்பித்த 2022 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழ் அடிப்படையில் இறக்குமதி செய்த மருந்து அட்டவணை பிரகாரம் இந்த வழங்குனரின் மருந்து அப்பட்டியலில் இல்லை என்பதால் வழங்குனரால் மருந்து இறக்குமதி செய்து வழங்குவதாக பொய்யாகக் குறிப்பிட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

7.16.1.11 மேலே 7.3.7 பந்தியின் படி, கேள்விகளுக்கான அழைப்பின் மதிப்பீட்டுக் குழுவால் விலை மற்றும் இருப்பு விநியோக அட்டவணையில் மாத்திமே கவனம் செலுத்தியதாகவும் மற்றும் WOR ஐப் பெறுவதற்குத் தேவையான பிற ஆவணங்களுக்கு கவனம் செலுத்தவில்லை . போன்ற காரணங்கள் தொடர்பான கவனத்தை செலுத்துதல் போன்ற காரணத்தின் அடிப்படையில் மதிப்பீட்டுக் குழு சுயாதீன மற்றும் ஆகக்கூடிய செயற்படவில்லையென்பது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், மேலே 7.16.1.6 பந்தியின் பிரகாரம் ஏல ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முரண்பாடான உண்மைகள் குறித்து மதிப்பீட்டுக் குழுவால் மேலதிகமாக சரிபார்க்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், சுகாதாரத் பிரிவால் அவசர பெறுகை குழுவும் மருந்துகளின் தரத்தை சரிபார்ப்பதில் கவனம் செலுத்தவில்லை. அதன்படி, பெறுகை குழுவும், பெறுகைக் நிறவனமும் மதிப்பீட்டுச்

செயல்பாட்டில் உரிய கவனத்துடன் செயல்படவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.16.1.12 இந்த வழங்கல் கம்பனி பல ஆண்டுகளாக இரசாயனம் தொடர்பான பொருட்களை மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கியிருந்த போதிலும், அது ஒரு போதும் மருந்துகளை வழங்கியிருந்ததாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தாமையாலும் ,தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் அதற்காகப் பதிவு செய்யப்படாததாலும், நரம்பியல் நோயாளிகள் மற்றும் புற்றுநோயாளிகளுக்குப் பயன்படுத்தப்படும் அத்தகைய மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான இயலுமை மற்றும் குறித்த வழங்குனர் சம்பந்தப்பட்ட இந்திய உற்பத்தியாளரின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டுப் பிரதிநிதியா என்பது பற்றித் தேடி அறியாமல் மதிப்பீட்டுக் குழு இந்த பரிந்துரையை மேற்கொண்டிருந்தது.

7.16.1.13 மேற்கூறியவாறு EOI மதிப்பீட்டுக் குழு, WOR சான்றிதழுடன், சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு கொள்வனவை வழங்க பரிந்துரைத்த. சுகாதாரச் செயலாளர் மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல்ப் பிரிவின் கோப்பு இலக்கம், PSRP/08/EOI/ACC/2022 மூலம் இந்தக் கொள்வனவை வழங்கி 2023 ஜனவரி 04 அன்று அனுப்பிய கடிதத்தின் நிபந்தனை இலக்கம் 07 இன் கீழ், ‘‘பதிவு செய்யப்படாத வழங்குனர் ஒருவருக்கு ஒரு பொருள் வழங்கப்பட்டால், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் வழங்கப்பட்ட WOR சான்றிதழை மருந்து இருப்பு வழங்கலின் போது சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் வழங்கப்பட்ட பொருட்களுக்கு பணம் செலுத்தப்படமாட்டாது.” எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. . இதனிடையே மருந்து வழங்கள் பிரிவும் WOR சான்றிதழைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் 2023 ஜனவரி 13 ஆந் திகதி ஐ.அ.டொ 2,925,000 பெறுமதியான இந்த பெறுகைக் கட்டளை வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்தது.

7.16.1.14 வழங்குனரால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு இந்த மருந்துப் பொருட்களை விநியோகம் செய்யும் போது வழங்கிய WOR சான்றிதழில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் இலக்கமாக NMRA/ FA/WOR/MED/ICL/1/MSD096/23 குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இந்த காலகட்டத்தில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் வழங்கப்பட்ட ஏனைய WOR சான்றிதழ் இலங்கங்களுடன் ஒப்பிடும்போது இந்த இலக்கம் வேறுபட்டதாகக் காணப்பட்டது. மேலும், 2023 ஜனவரி 20, திகதிய தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பணிப்பாளர் சபை அறிக்கை இலக்கம் 88.5.1 இன் படி, இந்திய கடன் திட்டத்தின் மூலம் இறக்குமதி செய்யப்படுகின்ற மற்றும் எதிர்காலத்தில் வழங்கப்படும் அனைத்து WOR சான்றிதழ்களின் செல்லுபடியாகும் காலத்தை 12 வாரங்களில் இருந்து 06 மாதங்களுக்கு நீடிக்க அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2023 பெப்ரவரி முதல் அதிகாரசபையால் வழங்கப்பட்ட WOR சான்றிதழ்களில் அந்த நிபந்தனை திருத்தம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் சர்ச்சைக்குரிய WOR சான்றிதழ் 2023 பெப்ரவரி 17 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் இந் நிபந்தனை திருத்தப்பட்டிருக்கவில்லை.

7.16.1.15 மேற்படி 7.11.6.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் பதிவிலிருந்து விலக்களிக்கும் சான்றிதழ் வழங்கப்படும் சந்தர்ப்பத்திலேயே மருத்துவ வழங்கல் பிரிவின் பிரதிகள் அச்சந்தர்ப்பத்திலேயே அல்லது குறைந்தது பொருட்களை பெறும் போது மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்புவதற்கு மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் நடவடிக்கை எடுத்திருந்தால் அல்லது மருத்துவ வழங்கல் பிரிவு குறித்த சான்றிதழின் பிரதியை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த மருந்துக்காக விலக்களிக்கும் சான்றிதழ் வழங்கப்படவில்லை என்பதை பொருட்கள் கிடைக்கும் சந்தர்ப்பத்திலேயே இனங்காண்பதற்கு இயலுமை கிடைப்பதால் அச்சந்தர்ப்பத்தில் இந்த வழங்குனர் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்க வாய்ப்பு இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந்த மருந்தைப் பயன்படுத்திய பிறகு நோயாளிகளுக்கு ஏற்படும் ஆபத்தான சூழ்நிலைகளைத் தவிர்க்க கூடியதாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.16.1.16 அதன் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் ஊடாக கொள்வனவு செய்த கட்டளைகளில், கூட்டுத்தானத்தின் வார்ப் பிரிவு)Wharf Section) மூலம் விடுவிக்கப்பட்டு, இருப்பு மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கப்பட்ட போதும்,இந்த அவசர பெறுகைகளில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் அல்லது மருத்துவ வழங்கல் பிரிவு, இந்த விடுவிப்பு செயற்பாடுகளுக்காக பங்கேற்காத காரணத்தால், வழங்குனர் உண்மையில் மருந்துகளை இறக்குமதி செய்தாரா என்பதை சரிபார்க்க, தொடர்புடைய கப்பல் பத்திரம், சுங்கப் பதிவேடு அல்லது பொதிசெய் பட்டியல் ஆகியவற்றைச் சரிபார்க்கும் நடைமுறையொன்று காணப்படவில்லை. அதன் பிரகாரம், இந்த உள்ளகக் கட்டுப்பாட்டின் பலவீனம் காரணமாக, இந்த மருந்துகள் போலி மருந்தாக மருந்து வழங்கல வலையமைப்பிற்குள் வருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

7.16.1.17 2022 செப்டம்பர் 16, அன்று நடைபெற்ற தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பணிப்பாளர் சபை முடிவுகள் இலக்கம் 84.6.1 இன் படி, இதற்கு முன்னரும் இருப்பினை விடுவிப்பு அனுமதிக்கான (Consignment Clarence) பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் இறக்குமதி அனுமதிப்பத்திரங்களில் போலி முத்திரைகள் மற்றும் கையொப்பங்களைப் பயன்படுத்தப்படுவது குறித்து குற்றப் புலனாய்வுத் துறைக்கு புகார் அளிக்கப்பட்டதோடு, ஆவணங்களின் பாதுகாப்பு பற்றி கருத்திற் கொண்டு QR குறியீடுகளைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும், தவறுகளைக் கண்டறிவதற்கான(fool proof) பொறிமுறையொன்றை செயற்படுத்துவது பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அது தொடர்பில் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால், WOR சான்றிதழ் மோசடியாக சமர்பிக்கப்படுவதைத் தடுத்திருக்க முடியும் என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.16.1.18 இந்த மருந்துக்கான WOR சான்றிதழைப் பெறுவதற்கு உரிய வழங்குனரால் 2023 ஜனவரி 16 மற்றும் பெப்ரவரி 28 ஆகிய தினங்களில் 02 கோரிக்கைகளை மருத்துவ வழங்கல் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மற்றும் வழங்கல் பிரிவின் கணக்காளர் தொடர்பு கொண்டு 2 வேண்டுகோள்கள் சமர்ப்பித்திருந்த போதிலும், இந்த WOR சான்றிதழ் வழங்குதல் மருத்துவ பிரிவின் செயற்பாடு அல்லாததால் அப்பிரிவு இவ்வேண்டுகோள்களை நிறைவேற்றவில்லை. எவ்வாறாயினும், வழங்குனர் 2023 மே 27 ஆம் திகதி முதலாவது தொகுதி மருந்துகளை மருத்துவ விநியோகப் பிரிவிடம் ஒப்படைக்கின்ற போது தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் 2023 பெப்ரவரி 17 ஆம் திகதியிடப்பட்டு வழங்கப்பட்ட WOR சான்றிதழொன்றை சமர்பித்திருந்தார். இந்த WOR சான்றிதழ் சட்டப்பூர்வமாகவும் முறையாகவும் வழங்கப்பட்டிருந்தால், வழங்குனரின் இரண்டாவது கோரிக்கையை சமர்ப்பித்திருக்க வேண்டிய அவசியமில்லை என்பது அவதானிக்கப்பட்டது

7.16.1.19 இந்த போலி மருந்துகளை மருத்துவ வழங்கல் பிரிவற்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இரு நபர்கள் அதன் பணிப்பாளர்களாக செயற்பட்டிருந்ததாகவும் அதில் பணிப்பாளர்களில் ஒருவரான ஹெவெகேவின் சுதத் ஜானக பெர்னாந்து என்பவரால் 2023 பெப்ரவரி 27 ஆம் திகதி அதாவது போலி WOR சான்றிதழ் திகதியான 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி 17 ஆம் திகதிக்குப் பின்னர், மற்றும் சுகாதார செயலாளரின் பரிந்துரையுடன், தேசிய இரத்த வடிகட்டல் சேவைகள் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் மூலம் Isolez Biotech Pharma AG Ltd கம்பனியால் வெளிநாட்டு ஆதரவு அடிப்படையில் மனித பிளாஸ்மாவின் உடலியல் செயல்பாடுகளில் கண்டறியப்படாத பாத்திரங்கள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக நாவல் பிளாஸ்மா புரதங்களை பூல் செய்யப்பட்ட பிளாஸ்மாவிலிருந்து பிரித்தல் செயல்முறை மூலம் தனிமைப்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை குறிப்பிட்டு (Research & development of undiscovered roles of Physiological functions of Human Plasma & isolate new plasma proteins by pooled plasma by fraction process conducted by Isolez Biotech Pharma with overseas collaboration) 1,000 லிட்டர் மானிட இரத்த பிளாஸ்மாவை (Human Blood Plasma) கொள்வனவு கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்நிலைமையை பரீட்சிப்பதற்காக 2023 பெப்ரவரி 28 ஆந் திகதி தேசிய இரத்த வடிகட்டல் சேவை பணிப்பாளரால் 5 அங்கத்தவர்களுடன் கூடிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் மீண்டும் 2023 மார்ச் 16 ஆந் திகதி சுகாதார செயலாளரின் பரிந்துரையுடன் ஏப்ரல் 26 ஆந் திகதிகளில் மீண்டும் இரத்த மாற்றல் சேவையின் பணிப்பாளரிடம் அது தொடர்பான கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன.

7.161.20 மேற்படி 7.16.1.18 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் இது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழு 2023 மே 03 ஆந் திகதிய அறிக்கையின் மூலம் 2015 ஆம் ஆண்டு அமைச்சரவை தீர்மானத்தன் பிரகாரம், தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர் மூலம் மேலதிகமான மனித பிளாஸ்மா ஏற்றுமதி செய்யப்படும் என்றும் இந்த நோக்கத்திற்காக ஒரு பெரிய அளவிலான பிளாஸ்மா தொகையை வழங்க முடியாது என்றும், தேசிய முக்கியத்துவம் கருதி, ஒரு லிட்டர்

பிளாஸ்மாவிற்கான கட்டணமாக 44.60 டொலர் வீதம் 09 மாதங்களுக்கு வாரத்திற்கு 40 லிட்டர் பிளாஸ்மா பாக்கெட்டுகளை வழங்க பரிந்துரைக்கப்பட்டது.

7.16.1.21 முறையாக அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சியா அல்லது நெறிமுறைகளின்படி ஆராய்ச்சி நடத்தப்பட்டதா (Ethical Review) என்பதை உறுதிப்படுத்தாமல், ஆய்வுசுட பரிசோதனைகள் மூலம் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்படாத பிளாஸ்மாக்களை வெளி தரப்புக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் தேசிய இரத்த மாற்று சேவை நியமித்த குழுவினாலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டிய் நெறிமுறைகளின்படி ஆராய்ச்சி நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தாமலும் இரத்த பிளாஸ்மாவை வழங்கவும் பரிந்துரைக்கவும் நடவடிக்கை எடுத்திருந்தது. மேலும், இந்த குழு ஆய்வு தொடர்பான அளவினை ஆராய்வதற்கு பரிந்துரைத்த போதிலும், அத்தகைய பரிசோதனை எதனையும் மேற்கொள்ளாமல் இரத்த பிளாஸ்மா வழங்கப்பட்டிருந்தது.

7.16.1.22 இணையத்தில் இருந்து பெறப்பட்ட தகவலின் படி, இந்த மருந்தின் உற்பத்திக்கு இரத்த பிளாஸ்மா பயன்படுத்தப்படுகிறமையால் குறித்த வழங்குனருக்கு கட்டளையை வழங்கிய நாள் முதல் குறித்த கட்டளைக்கான முதல் தொகுதி மருந்துகளை மருத்துவ வழங்கல் வழங்கிய 2023 மே 26 வரையான காலப்பகுதியில் வழங்குனரால் 21.73 லிட்டர் இரத்த பிளாஸ்மா மற்றும் 06 இரத்த பொதிகள் பெற்றுகொண்டதாலும் அதன் பின்னர் 149.15 லீட்டர் பிளாஸ்மா பெறப்பட்டுள்ளதாலும் அவற்றைப் பயள்படுத்தியே மேற்குறித்த மருந்து மருந்துகள் வழங்குனரின் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டதா என்பது கணக்காய்வின் போது சிக்கலான வியமாக இருந்தது அதன் பிரகாரம் வழங்குனரால் இம்மருந்தினை அவரின் தொழிற்சாலை வளவில் மேற்கொண்டிருந்தால் அவர் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் 113(1) ஆம் உப பிரிவினை மீறி சட்ட விரோத செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

7.16.1.23 அவ்வாறு பிளாஸ்மா மற்றும் இரத்தம் பயன்படுத்தப்பட்டால், அது தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 49 (1) மற்றும் (2) இன் படி சுகாதாரமற்ற சூழ்நிலையில் தயாரிக்கப்படும் எந்த மருந்தையோ, அறிமுகமற்ற பொருட்கள் பூரணமாக அல்லது பகுதியளவில் உள்ளடக்கியுள்ள எந்த மருந்தையோ, கலப்படம் செய்யப்பட்ட எந்த மருந்தையோ இறக்குமதி செய்யவோ அல்லது விற்கவோ கூடாது. மேலும் ˙ நல்ல உற்பத்தி நடைமுறைகளுக்கு (GMP) மாற்றமாக எந்த ஒரு நபரும் எந்த மருந்தையும் தயாரிக்கக் கூடாது எனும் நிபந்தனைக்கும் மாற்றமாக செயற்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

7.16.1.24 அதன் பிரகாரம் 2023 நவம்பர் 20 ஆம் திகதி உரிய விநியோகத்தருக்கு இரத்த பிளாஸ்மா 170.88 லீடர் ரூபா 2,460,174 அறவிடப்பட்டு விநியோகிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டதோடு விநியோகத்தர் மூலம் முதல் வேண்டுகோள் விடுக்கப்பட்ட தினத்துக்கு மறுநாள் அதாவது மார்ச் மாதம் 10 ஆம் திகதி இரத்த பிளாஸ்மாவிகு

மேலதிகமாக ரூபா 12,000 இற்கு 06 குருதி பைகளை உரிய அனுமதியின்றி சிகிச்சையளிக்காத மேற்படி வழங்கல் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது.

7.16.1.25 வழங்கனர் கம்பனியின் கடித தலைப்புக்களில் தமது கம்பனி "கிருமிகளற்ற மருந்துகள், பரிசோதனை ,இரசாயன பொருள் உற்பத்தி மற்றும் விநியோகத்தர் (Developer, Manufacturer & Supplier of Sterile Pharmaceuticals & Research Chemicals)" என குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் கம்பனியின் அகவிதியின் பிரகாரம் இக்கம்பனி மருந்துகளை உற்பத்தி செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே 2017 ஆம் ஆண்டு முதல் 2021 வரையான காலப்பகுதியில் இந்நிறுவனம் பால் உற்பத்தியுடன் இணைந்த Vacuum Mixer for Milk Manufacturing 200L, Milk Packing Machine> Milk Storage Unit, Milk Storage Tank, Milk Sterilization Tank 200 L. Milk Making Machinery, Centrifuge for food juice industry (Machine for food juice) போன்ற பொருட்களை இறக்குமதி செய்துள்ளதாக இலங்கை சுங்கத்தினூடாக பெறப்பட்ட தகவல்கள் உறுதிப்படுத்துவதோடு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை 2023 ஒக்தோபர் 17 பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் 2023.ஏப்ரல் .28 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட GMP பரிசோதனையின் போது நிறுவன வளாகத்தினுள் காணப்படுகின்ற உபகரணங்கள் மருந்து உற்பத்திக்காக பொருத்தமற்றது குறிப்பிடப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.16.1.26 இலங்கை சுங்கத்தினால் முன்வைக்கப்பட்ட வியாபார பதிவுச் சான்றிதழ் படி ஹேவகே சுதத் ஜானக பிரனாந்து என்பவரின் வதிவிட முகவரியில் Ospelts Life science Production GMBH எனும் அமைந்துள்ளதோடு அந்த நிறுவனத்தினூடாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களில் பால் உற்பத்திக்கான உபகரணங்களும் இருப்பதாகவும் இந்த நிறுவனங்கள் ஒன்றோடொன்று தொடர்புபட்ட. நிறுவனங்கள் என கணக்காய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

7.16.1.27 2013 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை 05 சந்தர்ப்பங்களில் வேலைத்தளம் தொடர்பாக GMP பரிசோதனைகள் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால மேற்கொள்ளப்பட்டதோடு வெவ்வேறு காரணங்களின் பேரில் அந்த கம்பனி மருந்துகளை தயாரிப்பதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. அதே போன்று 2023 ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியும் வேலைத்தளம் தொடர்பாக GMP பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது சிறந்த தரத்தில் உற்பத்திகள் தயாரிக்கப்படுவதாக அங்கீகரிக்க முடியாதென்றும், தடுப்பூசிகள் தயாரிக்க (Sterile injections) அனுமதியை வழங்க முடியாது என்றும் வழங்குனருக்கு 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்தும் விநியோக நிறுவனம் தமது ஆவணங்கள் மற்றும் பிரசுரங்களில் WHO/ FDA/

CANADIAN GMP சான்றிதழ் மூலம் மனித பாவனைக்கு சாதாரண உட்செலுத்தக்கூடிய முடிக்கப்பட்ட மருந்துகளை உற்பத்தி செய்தல் (manufacturing of generics injectable finished pharmaceuticals formulations for human use – WHO/ FDA/ CANADIAN GMP) நுண்ணுயிர ் எதிர்ப்பு, அன்டிபயடிக். உயிர் இரசாயனவியல் நொதியங்கள், ஹோர்மோன்கள், எதிர்வினை மற்றும் உயிரியல் தொழிநுட்ப அன்டிபயடிக்ஸ் (Antibiotics, Antibodies, Bio chemicals anzymes, Hormones, Biotechs) போன்ற மருந்துகளை தயாரிப்பதாகவும் கிருமிகளற்ற மருந்து தயாரிப்பு ஆலையாகவும் (GMP Sterile Pharmaceutical Production Plant) புற்று நோயாளிகள் பயன்படுத்தும் Carfilzomib, Ponatinib, Trastuzumab மற்றும் Rituximab போன்ற புற்றுநோய் மருந்து தயாரித்தல் போன்ற மோசடிகள் இடம்பெறுவதாக சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

7.16.1.28 நிலைமை இவ்வாறு இருக்கும்போது தேசிய தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு பொருந்தமான நிபந்தனையின்படி ஆரம்ப கட்டமாக Salbutamol, Lidocaine, Tramadol மருந்துகளை பரிசோதனை செய்வதற்கு GMP சான்றிதழை விநியோகிக்க மற்றும் உற்பத்தி செய்வதற்கான ஒப்புதலை Isolez Biotech Pharma AG Limited எனும் பெயரில் வழங்குவதற்கும் அனுமதி வழங்க முன்னால் சுகாதார செயலாளர் மூலம் 2023 ஜுன் மாதம் 05 ஆம் திகதிய SH/Misc/03/Medi.Equip எனும் கடிதத்தினூடாக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

7.16.2 Rituximab inj.500mg மருந்து

7.16.2.1 மருத்துவ வழங்கல் பிரிவின் மூலம் 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு முன்வைக்கப்பட்டிருந்த Rituximab inj.500mg மருந்தின் 11,600 அலகுகள் பிரதான கொள்வனவு வேண்டுகோள் கட்டளையொன்று ஐ.அ.டொ 59.95 வீதம் பெற்றுக்கொள்வதற்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் வழங்குனருக்கு கட்டளையிட்டிருந்தது இந்த கட்டளைக்கு அமைய 3,500 அலகுகளின் ஆரம்ப இருப்பு 2022 ஒக்டோபர் 14 ஆம் திகதி மருத்துவ வழங்கல் பிரிவுக்கு கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அவை 04 மாதங்களுக்கு போதுமானதாக இருந்தன. இக்கட்டளையின் இரண்டாவது இருப்பான 5,076 அலகுகள் முதலாவது இருப்பு கிடைத்து 02 மாதங்களுக்கு பின்னர் அதாவது 2022 திசெம்பர் 15 ஆந் திகதியும் மூன்றாவது இருப்பு முதலாவது இருப்பு கிடைத்து மூன்ற முாதங்களுக்கு அண்மித்த காலப்பகுதியிலும் அதாவது 2023 சனவரி 09 ஆந் திகதி கிடைத்திருந்தது. அந்த இருப்பு கிடைத்தவுடன் அம்மருந்து 2023 இன் முதல் 10 மாத காலப்பகுதிக்கு போதுமானதாக இருந்தது. அதன் பிரகாரம் மேற்படி 6.6.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் மருந்துகள் உற்பத்தி மற்றும் விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் பிரிவின் மேலதிக செயலாளரினால் வழங்கப்பட்டிருந்த பெறவேண்டிய இருப்பு தொடர்பாக கருத்திற் கொள்ளாத ஆலோசணையின் பேரில் நடவடிக்கை எடுத்தமையால் அந்த இருப்பு பெறுவனவு தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு முயற்சியொன்று எடுக்காமல் 2022 நவம்பர் 10 ஆம் திகதி இந்த

மருந்தின் ஒரு ஊசியின் விலை அ.டொலர் 152 என்ற உயர்ந்த விலையில் 2,250 மருந்து குப்பிகள் அவசர கொள்வனவை 7.16.1 ஆம் பந்தியில் குறிப்பிட்ட Human Immunoglobulin IV 5-6g மருந்தை வழங்கிய Isolez Biotech Pharma AG Ltd கம்பனியிடமிருந்து அவசர கொள்வனவாக செய்ய நடவடிக்கை எடுத்திருந்தது. அந்த இருப்பு அவசர கொள்வனவின் கீழ் 07 நாட்களுக்குள் கிடைக்க வேண்டியிருந்த போதிலும் 05 மாதங்களை கடந்தும் வழங்கியிருந்தது.அதன் பிரகாரம் இம்மருந்து சாதாரண கட்டளை விலையை விட 254 மடங்கு விலை அதிகமாக அவசர கட்டளை இட வேண்டிய தேவை அச்சமயம் இருக்கவில்லை என்பது கணக்காய்வில் தெரிய வந்ததோடு இந்த சிக்கனற்ற கொடுக்கல் வாங்கலினால் அரசுக்கு ஏற்பட்ட நட்டம் ஏறத்தாழ ரூபா 65,350,342 (ஐ.அ.டொலர்.92.05*2200* 322.7) ஆக இருப்பதோடு தரம், பாதுகாப்பு மற்றும் அறிவுபூர்வமாக நிச்சயிக்கபடாத மருந்துகளை நாட்டிற்குள் கொண்டு வருவதற்கு மறைகரமாக செயற்பட்டுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.16.2.2 வழங்குனரால் Rituximab மருந்து (ஊசி) வகைகளை வழங்கும் போதும் மோசடியாக றுழுசு சான்றிதல் மற்றும் இந்திய தயாரிப்பாளரின் பெயரை உள்ளடக்கிய ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதாகவும் மேற்குறிப்பிட்ட 7.16.1.6 இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அவசர கொள்வனவின் போதும் விருப்பம் கோரும் போதும் இந்த மருந்து வகை இந்திய தயாரிப்பிலான மருந்து வகை என்றும் (Indian origin) இந்தியாவின் Livealth Bio pharma தயாரிப்பு என்றும் வேலை நாட்கள் 1 தொடக்கம் 5 நாட்களுக்கிடையில் நூற்றுக்கு நூறு விகிதம் இறக்குமதி செய்து வழங்க முடியுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் விலை மனுக்கோரலில் கீழ் உள்ள பகுதியில் மூலப் பொருட்கள் இந்திய Livealth Bio Pharma Pvt Ltd இனதும் தயாரிப்பு மூலகம் (Product formulated), கூலி அடிப்படையிலான தயாரிப்பு மற்றும் விநியோகித்தல் (Contact Manufacturing & Market) Isolez Biotech Pharma AG Ltd என்றும் குறிப்பிடப்பட்டிருந்தமை தொடர்பாக EOI மதிப்பீட்டுக் குழு மூலம் கவனத்திற்கு கொண்டு வரவில்லை என்பதும் கணக்காய்வின் போது புலனாகியுள்ளது. மதிப்பீட்டுக் குழு எந்தவொரு தொழிநுட்ப நிபுணத்துவம் வாய்ந்த ஒருவரையோ விஷேட மருத்துவ நிபுணரொருவரையோ அதற்காக நியமிக்கவில்லை. என்பதும் இந்த செயற்பாட்டுக்கு பொறுப்பாக செயற்பட்ட மேலதிக செயலாளரின் அறிவுறுத்தலுக்கமைய விலை மற்றும் பொருள் வழங்கும் கால அட்டவணை மாத்திரம் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளமை கணக்காய்வில் மேலும் தெரிய வந்துள்ளது.

7.16.2.3 Human Immunoglobulin மருந்துகளை கொள்வனவு செய்வது பற்றி மேற்கூறிய அவதானிப்பு இலக்கம் 7.16.1.5 முதல் 7.16.1.8 வரை மற்றும் 7.16.1.10 முதல் 7.16.1.15 வரையான பந்திகளில் குறிப்பிட்டவாறான விடயங்கள் இந்த மருந்துகளின் விடயத்திலும் அவதானிக்கப்பட்டுள்ளது.

7.16.3 இது போன்றே Irinotecan hydrochloride trihydrate என்ற மருந்தின் விலைமனு கோரல் ஆவணங்களிலும் குறிப்பிட்ட இலக்கம் 7.16.1.6 ஏற்ப இந்திய தயாரிப்பு எனவும் அந்த தயாரிப்பாளரின் பெயர் மருந்து பகுப்பாய்வுச் சான்றிதழில் போலியாக குறிப்பிடப்பட்டுள்ளதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இந்த முறையற்ற நடவடிக்கை ஊடாக சென்று Irinotecan hydrochloride trihydrate என்ற புற்று நோய்க்கான கொள்வனவுக் கட்டளை பிறப்பித்திருந்தாலும் விநியோகத்தர் மூலம் அதற்கான இருப்பினை பெற்றுக் கொடுக்காததோடு புற்றுநோய், கண் நோய் மற்றும் ஹீமோபீலியா நோயாளிகளுக்காக பயன்படுத்துகின்ற இன்னும் 03 மருந்து வகைகள் பதிவு செய்யாமல் விடுவித்தலின் கீழ் கொள்வனவு செய்வதற்கு EOI மதிப்பீட்டுக் குழு மூலம் பரிந்துரை வழங்கியிருப்பது அவதானிக்கப்பட்டது. இந்த 03 மருந்து வகைகளை அவசர கொள்வனவின் கீழ் விலைமனு கோரலின் போது விநியோக நிறுவனத்தினால் மேற்குறிப்பிட்டவாறே இது இந்திய தயாரிப்பு என்றும்(Indian origin)> ,e;jpa Livealth Bio pharmaceuticals என்றும் 1 முதல் 5 நாட்களுக்குள் இறக்குமதி செய்து வழங்க முடியும் என்று குறிப்பிட்டிருந்த போதிலும் கேள்வியின் வேண்டுதல் ஆவணங்களின் கீழ் மூலப்பொருட்கள் இந்தியாவின் Livealth Bio Pharma Pvt Ltd நிறுவனத்தினது என்றும், உற்பத்தி மூலங்கள் மற்றும் ஒப்பந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றை மேற்கொள்வது (Contact Manufacturing & Market) Isolez Biotech Pharma AG Ltd) எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையும் ஒப்பந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் (Contact Manufacturing & Market) Isolez Biotech Pharma AG Ltd என குறிப்பிட்டிருந்தமையும் அது தொடர்பில் EOI மதிப்பீட்டுக்குழு எவ்வித கவனத்தையும் செலுத்தவில்லை என்பதும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.16.4 இந்த 03 உருப்படிகளுக்கான பெறுகை கட்டளைகள் இதுவரை கிடைக்கப்பெறாவிடினும் Docetaxel மற்றும் Fluorescein sodium ஆகிய இரண்டிற்கும் குறிப்பிட்ட நிறுவனம் மூலம் முன்வைக்கப்பட்ட ஆவணங்களில் இந்திய தயாரிப்பு என குறிப்பிட்டு மருந்தின் பகுப்பாய்வு சான்றிதழ் (COA) முன்வைக்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. கணக்காய்வின் மூலம் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு மேற்கொண்ட அறிவித்தலுக்கமைய மேற்கொண்ட பரிசோதனையில் எவ்விடத்திலும் குறித்த இந்திய நிறுவனம் இலங்கைக்கு மருந்துகளை வழங்கியிருக்கவில்லை எனவும் Isolez Biotech Pharma நிறுவனத்துடன் அவ்வாறான கொடுக்கல் வாங்கல் எதுவும் இடம்பெறவில்லை என குறித்த நிறுவனம் உறுதிப்படுத்தியதோடு மோசடியாக தமது நிறுவனத்தின் பெயரை பயன்படுத்தியுள்ளமையால் அவ்வாறான சகல உற்பத்திப் பொருட்களின் பதிவை இரத்துச் செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

7.16.5 அதன் பிரகாரம் விநியோகத்தர் மூலம் இரு தடவைகளில் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு முன்வைத்த WOR சான்றிதழ் 02 போலியாக தயாரிக்கப்பட்டதா அல்லது மருந்துகள் அதிகார சபையினால் மோசடியாக வழங்கப்பட்டதா என்பதும் கேள்வி ஆவணங்களில் இறக்குமதி செய்து வழங்குவதாக கூறி உள்நாட்டில் உற்பத்தி செய்தமை மற்றும் விற்பனை

தொடர்பாக போன்ற போலியாக இந்தியாவின் உற்பத்தி பெயர் பயன்படுத்தப்பட்டு 05 போலி பகுப்பாய்வு சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் தொடர்பில் வழங்குனர் தொடர்பாக சட்டவிரோத நடைமுறைகள் இனங் காணப்பட்டமையினால் இந்த குற்றச்சாட்டுடை நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்ற செயற்பாட்டினை மேற்கொண்ட சட்ட நடவடிக்கை மேற்கொள்வது மிகவும் பொருத்ததமானது என்ற விடயம் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.16.6 தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 124 மற்றும் 125 பிரிவுகளின் படி, ஒரு மாகாண / பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர், சுகாதார மருத்துவ உத்தியோகத்தர், பிராந்திய மருந்தாளர் அல்லது உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர் ஆகியோர் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக நியமிக்கப்படலாம். எந்த ஒரு தயாரிப்பு தயாரிக்கப்படுகிறதோ, அங்கு நுழைந்து ஆய்வுகளை மேற்கொள்ளும் அதிகாரம் அந்த அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மேற்படி வழங்குனரின் உற்பத்தி நிறுவனம் GMP தரச் சோதனையில் தோல்வியடைந்ததையடுத்து, சட்டவிரோத போதைப்பொருள் உற்பத்தி அபாயம் காணப்பட்டதையடுத்து, தொடர் பொறிமுறைமை ஆரம்பிக்கப்படவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதிகாரசபையின் திடீர்ச் சோதனைத் பிரிவின் மருந்து பரிசோதகர்களுக்கு அவ்வாறான தொழிற்சாலைகளை தொடர்ச்சியாகச் சோதித்து பின்தொடருமாறு அறிவிக்கப்படாததாலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் மாகாண அல்லது பிராந்திய ஆதரவுடன் அத்தகைய பொறிமுறையை நடைமுறைப்படுத்தாத காரணத்தினால இத்தகை முறையற்ற கம்பனிகளுக்கு இது போன்ற போலி மருந்துகளை தயாரிக்ககூடிய வகையில் சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

7.16.7 2023 நவம்பர் 13, இல் உள்ளவாறு வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட மனித இம்யூனோகுளோபுலின் 3,985 Human Immunoglobulin குப்பிகளில் இருந்து, கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 1,732 குப்பிகள் வைத்தியசாலைகளில் எஞ்சியுள்ளதாகவும், 2,253 குப்பிகள் (57 சதவீதம்) வழங்கப்பட்டுள்ளன. அதில் 28 வைத்தியசாலைகளில் இருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, நோயாளிகளுக்கு. இந்த மருந்து 87 நோயாளிகளுக்கு வழங்கப்பட்டது, மேலும் 09 நோயாளிகளுக்கு பாதுகாப்பற்ற நிலைமைகள் (Anaphylaxis Reaction) மற்றும் கடுமையான பாதகமான எதிர்வினைகள் (Adverse Drug Reaction - ADR) இருப்பது அவதானிக்கப்பட்டது. மேலும், 104 குப்பிகள் Rituximab ஊசிகள் நோயாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஒரு சில வைத்தியசாலைகள் மாத்திரமே அது தொடர்பான தகவல்களை வழங்கியிருந்ததோடு, அந்தத் தகவலின் பிரகாரம், நோயாளிகளுக்கு கடுமையான பாதகமான எதிர்வினைகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

7.16.8 இரத்த பிளாஸ்மாவைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மருந்தொன்றான Human Immunoglobulin என்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையான தரக் கட்டுப்பாடுகளின் கீழ் உற்பத்தி செய்யப்படுவதில்லை, HIV/AIDS, Hepatitis ஹெபடைட்டிஸ் B மற்றும் ஹெபடைட்டிஸ் C

ஆகிய நோய்த் தொற்றுகளை நோயாளிகள் எதிர்கொள்ள நேரிடும் என நிபுணர்கள் கருத்து தெரிவிப்பதால், எனவே தொடர்புடைய அனைத்து நோயாளிகளும் பரிந்துரைக்கப்படுகிறார்கள். அந்த அனைத்து நோயாளர்களுக்காக விசேட சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டு பரிசோதிக்கும் செயற்பாடொன்றினூடாக அந்நோயாளிகளின் சிகிச்சை நிலைமையை தொடர்ந்து கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7.16.9 2015 முதல் மருத்துவ வழங்கல் துறைக்கு மருத்துவப் பொருட்களை வழங்கிய பழைய வழங்னுரன இந்த கம்பனி 2017 ஒக்டோபர் 02 ஆந் திகதி முதல் ஒரு கம்பனியொன்றாக மாற்றப்பட்டிருந்த போதும், மருந்துகள் வழங்கல் பிரிவின் மருந்துகள் முகாமைத்துவத்திற்குப் பயன்படுத்தப்படும் PRONTO கணினி அமைப்பில் தகவல் திருத்தம் செய்யப்படாததால் மருத்துவ வழங்கல் பிரிவு, இதுவரை Isolez Biotech Pharma AG அமைப்பில் PRONTO என்ற பெயர் உள்ளிடப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிந்தது. இந்த அவசர பெறுகை கட்டளைகளில், வழங்குனர் கம்பனிகளால் ஏல ஆவணங்களில் தெளிவாக Isolez Biotech Pharma AG Ltd கம்பனிக்கு பணம் செலுத்துவதற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் கவனக் குறைவாக நடவடிக்கை எடுத்தமை காரணமாக இந்த கம்பனி தொடர்பான அனைத்துப் பணம் செலுத்துதல்களும் Isolez Biotech Pharma AG என்ற பெயரிலான கணக்கில் செலுத்தப்பட்டன. நிதிப் பிரமாணம் 257 மற்றும் 260 இன் அடிப்படையில், பணம் செலுத்துவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட வவுச்சர்கள் முறையாக சான்றளிக்கப்பட்டிருப்பதாகதிருப்தியடைய வேண்டியதுடன் அங்கீகரிக்கப்படாத நபர்களுக்கு பணம் செலுத்தப்படாமல் இருக்க அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உரிய நபருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளாமைக்காக அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் உள்ளக கட்டுப்பாடு செயற்பாடுகள் மிகவும் பலவீனமான நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

7.16.10 வழங்குனர் கம்பனிக்கு கொடுப்பனவு செய்யும் போது சுகாதார அமைச்சின் செயலாளரினால் வழங்குனருக்கு 03 சந்தர்ப்பங்களில் முன்னுரிமை அளித்து பணம் செலுத்துவதற்கான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும் வழங்குனர் இரத்த பிளாஸ்மாவைப் பெறும்போது GMP நிராகரிக்கப்பட்ட போதும், பணம் செலுத்துவதற்கான கோரிக்கைகளை வைக்கும் போதும் வழங்குனருக்கு ஆதரவாக பரிந்துரைகளை வழங்கி நடவடிக்கை எடுத்த காபரணத்தினால் சுகாதார செயலாளரால் ஒரு அசாதாரண தலையீடு மேற்கொள்ளப்பட்டுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.16.11 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் VII ஆம் பிரிவின் 38(1) (ஆ) மற்றும் (இ) உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் கணக்காய்வு நிறுவனத்தின் நிதி திட்டமிடல், நிதி முகாமைத்துவம் செயற்திறனாக செயற்படுவதாக என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச்

செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டியிருந்த போதும், அதற்கு புறம்பாக நடவடிக்கை எடுத்தமை காரணமாக மேற்குறித்த சிக்கல்கள் உருவாகியுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7.16.12 வைத்தியசாலைகளுக்கு மருந்துகளை விநியோகிப்பதற்கு முன்னர் அவற்றின் நிலைமையை பரிசோதிக்கும் பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்துமாறு 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முகாமைத்துவத்திடம் கணக்காய்வு தெரிவித்த போதிலும், போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் நோயாளர்களுக்கு தரத்தில் சித்தியடையாத மருந்துகளை வழங்குவதை இதுவரை.குறைக்க முடியவில்லை.

7.17 PharmAce என்ற கம்பனியால் 2022 ஆம் ஆண்டில் Trastuzumab 440mg என்ற மருந்து கவனிக்கப்பட்ட உண்மைகள் மற்றும் அதற்கு முன் Ipratropium Pressurized Inhalation, (அழுத்தப்பட்ட உள்ளிழுத்தல்) Cefotaxime injection USP 1g, Ceftriaxone Sodium for Injection BP 500mg மற்றும் Furosemide Injection BP 20 mg/2 ml ஆகிய மருந்துகள் மோசடியான முறையில் மருத்துவத் வழங்கல் பிரிவிற்கு வழங்கியமை தொடர்பான அவதானிக்கப்பட்ட விடயங்கள்

7.17.1 Trastuzumab 440mg என்ற குழு 500 அலகு தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்காக 2022 ஜூலை 15, ஆந் திகதி அமைச்சின் அவசர பெறுகை குழுவால் திறந்த ஏலங்களை அழைத்திருந்ததுடன் 2022 ஆகஸ்ட் 16, ஆந் திகதி கூடிய அமைச்சின் அவசர பெறுகை குழுவால் குறைந்த விலையை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு 500 அலகு தடுப்பூசிகளை கொள்வனவு ரூபா 26,225,000 இறகான கட்டளையை வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

7.17.1.1 தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரரால் கேள்விதாரருடன் சமர்ப்பித்த தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் அந்த நிறுவனத்தின் சார்பில் வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லாமல் இருந்ததுடன், அந்த பதிவுச் சான்றிதழ் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆதிகாரசபையால் வேறு கம்பனிக்கு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழாகும். இந்தச் சான்றிதழும் 29 மாதங்களுக்கு முன்பு 2020 பெப்ரவரி 17 ஆந் திகதி காலாவதியான சான்றிதழாகும். தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு 2022 ஜூலை 29 ஆந் திகதி தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தால் மாத்திரமே இந்த கம்பனிக்கு கட்டளையை வழங்க பரிந்துரைத்திருந்த போதிலும், அதைப் பொருட்படுத்தாமல், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆதிகாரசபை யின் பதிவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளாத இந்த பெறுகைக்குரிய கேள்விதாரருக்கு வழங்குவதற்கு 2022 ஆகஸ்ட் 16 ஆந் திகதி அமைச்சின் அவசர பெறுகை குழு தீர்மானித்திருந்தது.

7.17.1.2 மருந்துகள் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் 2021 ஏப்ரல் 24 ஆந் திகதிய கடிதத்தில் அரசல மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் இந்த கம்பனிகள் மற்றும் அவற்றின் உப கம்பனிகளிடமிருந்து மேற்கொள்ளப்படும் அனைத்து கொள்வனவுகளையும் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த பெறுகை தொடர்பாக, இந்த மருந்தின் ரஷ்ய உற்பத்தி நிறுவனம், 2022 ஜுலை 20 ஆந் திகதி சுகாதார பிரிவின் அவசர பெறுகை குழுவின் தலைவருக்கு தனது நிறுவனத்தின் இலங்கை உத்தியோகபூர்வ பிரதிநிதியாக ஒரு தனியார் நிறுவனத்தை நியமித்து, அந்த நிறுவனத்தின் சார்பில் இலங்கையில் விற்பனை மற்றும் கேள்விகளில் பங்கேற்பதற்காக இன்னுமொரு நிறவனத்திற்கு அதிகாரத்தை வழங்கியுள்ளது என்றும தெரிவிக்கப்பட்டிருந்தது. உற்பத்தியாளர் தனது இலங்கைப் பிரதிநிதியாக நியமித்த நிறுவனம், இதற்கு முன்னர் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆதிகாரசபை யால் இதற்கு முன்னர் தற்காலிகமாகத் தடைசெய்யப்பட்ட ஒரு கம்பனியின் புதிய பதிவு செய்யப்பட்ட பெயராகும். எனினும் இந்த பெறுகையில் மேற்படி விடயங்கள் தொடர்பாக கருத்தில் கொள்ளாமல் பெறுகை குழுவின் தீர்மானங்கள் வழங்கப்பட்டிருந்தன.

7.17.1.3 கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் உற்பத்தியின் ஆயுட்காலம் 02 ஆண்டுகளாக இருக்க வேண்டும் என்றாலும், இந்த கேள்விதாரர் வழங்கிய இருப்புக்களின் ஆயுட்காலம் 07 மாதங்களாக இருந்ததுடன் இதன் பிரகாரம் மருந்து கட்டளை வழங்கப்பட்ட நாளிலிருந்து மருந்துகளை பயன்படுத்த 7 மாதங்கள் மட்டுமே எஞ்சியிருந்தது. . அதன்படி, சர்ச்சைக்குரிய உள்ளூர் முகவர் நிறுவனத்தினால் மீதமுள்ள இருப்பை மருத்துவ வழங்கல் பிரிவிடம் சமர்ப்பிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பெறுகை குழு நடவடிக்கை எடுக்கவில்லை.

7.17.1.4 கொள்வனவிற்கான பெறுகை குழு தீர்மானம் 2022 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் 2022 ஆகஸ்ட் 25 ஆந் திகதி பெறுகை கட்டளையை வழங்கியது. ஆனால் இந்த பெறுகை கட்டளையை வழங்கப்படுவதற்கு முன்பு, அதாவது 2022 ஆகஸ்ட் 17 இற்குள் தொடர்புடைய மருந்து இருப்பு மருத்துவ வழங்கல் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

7.17.1.5 இதற்கு முன்னதாகவும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு இந்த மருந்தை வாங்கும் போது, 2016 ஆம் ஆண்டு தேசிய மருந்து ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையிடம் இருந்து பதிவுச் சான்றிதழை வழங்குவதற்காக மருந்து மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையைப் பெறுவதற்கு முன், தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலர் பதிவுச் சான்றிதழை வழங்கியதால். அதற்குரிய வழக்கு நடவடிக்கையொன்றுக்காக அதிகாரசபையால் இந்த மருந்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்திற்கு பொய்யான தகவல்கள் வழங்கியரைம தொடர்பான வழக்கிற்கு சமர்ப்பிப்பதற்காக தயார் செய்யப்பட்ட அனைத்து கோப்புகளையும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு வழங்குவதற்கும் அது தொடர்பான முன்னேற்றத்தை செயற்குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு

பொது நிறுவனங்களுக்கான குழுவால் (COPE) சுகாதார செயலாளருக்கு 2017 ஜூலை 07 ஆம் திகதி கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் 05 ஆண்டுகள் கடந்தும் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7.17.2 மருத்துவ வழங்கல் பிரிவினால் 2016 ஏப்ரல் 1, ஆந் திகதி சமர்ப்பித்த பெறுகை கட்டளையின் படி, மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 58,988,800 ஆன கொள்வனவு கட்டனைளயின பிரகாரம் Ipratropium Pressurized Inhalation BP 20 Mcg/Puff ஆன பெறுகைக் கட்டளையின்படி, 130,000 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

7.17.2.1 இந்த பெறுகை தொடர்பாக, மூன்று சந்தர்ப்பங்களில் கேள்வி கோரல் அழைக்கப்பட்டு, முதற்கட்டமாக, வழங்குனருக்கு இதரவாணை வழங்கப்பட்டு, நாணயக கடிதங்கள் திறக்கப்பட்டதாக, மருத்துவ வழங்கல் பிரிவு பணிப்பாளரின் அறிவிப்பின் படி, பெறுகை மேல்முறையீட்டின் பிரகாரம் 2017 ஜனவரி 03, ஆந் திகதி வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட முதல் இருப்பு 09 மாதங்களுக்கும், 2017 மே 02 ஆந் திகதி வழங்கப்பட வேண்டும் என்க் குறிப்பிடப்பட்ட இரண்டாவது இருப்பு 13 மாதங்கள் தாமதமாக வழங்குமாறு அறிவிக்கப்பட்டது. ஆனால் 2017 வழங்குளர் ஜனவரி 20, ஆந் திகதி தொடர்புடைய விநியோகத்தை தாமதப்படுத்த முடியாது என்று தெரிவித்திருந்தார். வழங்குனர் வழங்க ஒப்புக்கொண்ட திகதிக்குப் பிறகு உற்பத்தி செயல்பாட்டில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மருந்துகளை வழங்க முடியவில்லை என 2017 ஏப்ரல் 03 ஆந் திகதி தெரிவிக்கப்பட்டது மருத்துவ வழங்கல் பிரிவினால் மருந்து விநியோகத்தின் நிபந்தனைகளின் படி இந்த பெறுகை அவசர விடயம் எனக் குறிப்பிட்டு மட்டுப்படுத்தப்பட்ட கேள்வி கோரல் மேற்கொண்டு விரைவாக பெறுகை செயற்பாட்டை முடிவுறுத்துமாக. என்று தெரிவிக்கப்பட்ட போதும் பின்னர் இந்த மருந்து வழங்கப்பட்ட , மற்றும் குறைந்த விலைக்கு அழைக்கப்பட்டு விரைவில் பெறுகை செய்யப்பட 09 மாதங்கள் தாமதமாக வழங்குமாறு அறிவிக்கப்பட்டிருந்ததன் மூலம் இந்த விநியோகம் உண்ரமயாகவே அவசர தேவையொன்றல்ல என அவதானிக்கப்பட்டது.

7.17.2.2 இந்தக் பெறுகை தொடர்பாக, மூன்றாவது கேள்வி அழைப்பின் போது, கேள்வியைச் சமர்ப்பித்த வழங்குனர்களின் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பதிவுச் சான்றிதழ் காலாவதியாகி இருந்த போதிலும், 2017 செப்டம்பர் 29 ஆந் திகதி, பதிவை புதுப்பிப்பதற்கான நிபந்தனைகளுக்கு உட்பட்டு சான்றிதழ் புதுப்பித்தல் மற்றும் பதிவுச் சான்றிதழைப் பெறுதல் என்பன பொது ஒப்பந்த 1987 இன் 03 ஆம் இலக்க உடன்படிக்கைச் சட்டத்தின் கீழ் பெறுகை குழுவால் அலகொனறு ரூபா 705.40 என 130,000 அலகுகளுக்கு ரூபா 91,702,000 தொகைக்கு கட்டளை வழங்கப்பட்டது, ஆனால் இலங்கை சுங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட விலைப் பட்டியல்களின் படி, வழங்குனர் 130,000 அலகுகளை ஒரு அலகு ரூபா. 14.13 இல் ரூபா 1,836,900 தொகைக்கு தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆதிகாரசபை யில் பதிவு செய்யப்படாத கம்பனியொன்றால் இந்நாட்டிற்கு கொண்டு வரப்பட்டு 4892 வீதம் அதிக விலையில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டது. வழங்குனரால்

தயாரிக்கப்பட்ட மருந்துகள், கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படாத கம்பனியொன்றின் மூலமேயாகும். இறக்குமதி டெண்டர் ஆவணங்களில் குறிப்பிடப்படாத உற்பத்தி நிறுவனத்தால் செய்யப்பட்டன. மேலும், பதிவு செய்யப்படாத கம்பனியொன்றின் மருந்துகளை சுங்கத்திலிருந்து விடுவிக்கும் போது பரிந்துரைக்கப்பட்ட விதிகள் மற்றும் நடைமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

7.17.2.3 2017 அக்டோபர் 20 ,இன் பெறுகை கட்டளை வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்த போதும் மருந்துகளின் பொதி, லேபிள் மற்றும் அரசாங்க இலட்சிணையை பொறிப்பதற்காக அங்கீகாரத்திற்காக மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதும் அத்தகவல்கள் மருத்துவ வழங்கல் பிரிவன் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே கட்டளைக்கான முதல் தொகுதி (65000 யூனிட்கள்) இறக்குமதி செய்யப்பட்ட நாளிலிருந்து மருத்துவப் பொருட்கள் பிரிவுக்கு வழங்க ஒரு மாதத்திற்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்தது.

7.17.2.4 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 106(1) வது பிரிவிற்கு முரணாக வழங்குநரால் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட இந்த மருந்து, கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படாத உற்பத்தியாளர் அல்லாத உற்பத்தியாளரால் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு பின்னர் மருந்து பொதிகளில் ஏல ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தியாளரின் விவரங்களை சட்டவிரோதமாக அச்சிடப்பட்டிருந்தது.

7.17.2.5 வழங்குனரால் இறக்குமதி செய்யப்பட்ட மருந்தை பதிவு செய்வதற்காக தேசிய மருந்து ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோவையில் சேர்க்கப்பட்டுள்ள மருந்தின் மாதிரி பொதி மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்ட மருந்தின் பொதியில் உள்ள நோயாளிக்கான அறிவுறுத்தல் துண்டுப்பிரசுரத்தில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட மருந்துகளின் லேபளில் உள்ள தகவல்களுக்கு இடையே வழங்குனரால் கேள்வி ஆவணங்களுடன் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு உற்பத்தி கம்பனியின் கடித தலைப்புகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட உள்நாட்டு முகவர் தொடர்பான கூற்று, இணக்க கடிதங்கள் மற்றும் அந்தந்த மருந்தின் பகுப்பாய்வு சான்றிதழ்களுக்கு இடையேயும் சமர்பிக்கப்பட்ட கடித தலைப்புகளிலும் இணக்கமின்மைகள் காணப்பட்டன. ,

7.17.2.6 வழங்குனரால் இறக்குமதி செய்து வழங்குனர் மருந்தை மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்குவதற்கு முன், அம் மருந்தின் மாதிரியை (Sample) மருத்துவ வழங்கல் பிரிவினால் அங்கீகரிக்கப்பட்டதாக வழங்குனரின் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் பொதியிடலில் வேறுபாடு அச்சந்தர்ப்பத்தில் இனங் காணப்படாதிருந்தமையால் உள்ளவாறாக இம்மருந்தின் மாதிரி உண்மையில் மருத்துவ வழங்கல் பிரிவால் முறையாக ஆய்விற்கு உடப்டுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

7.17.2.7 இந்த பெறுகை ஒரு அவசரத் தேவையாகக் கருதி, கேள்விகளைச் சமர்ப்பிக்க 09 நாட்கள் குறுகிய கால அவகாசம் வழங்கப்பட்ட போதும், ஒப்பந்தத்தின் படி, வழங்குனர் இருப்புக்களை வழங்க ஒப்புக்கொண்ட திகதிகளை விட 5 முதல் 8 மாதங்கள் கால தாமதத்துடன் இருப்புக்களை வழங்கியுள்ளார். ஆனால் இந்த தாமதங்களுக்கு, ஒப்பந்தத்தின் 10 வது பிரிவின் படி தாமதமான கட்டணங்களை அறவிடுவதற்கு எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. மேலும், ஒரு அவசரத் தேவை என அடையாளம் காணும் வகையில் குறிப்பிட்டு இந்த வழங்குனர் பயனடையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்ற சந்தேகத்தை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாது.

7.17.3 மருத்துவ வழங்கல் பிரிவினால் 2016 பெப்ரவரி 16 ஆம் திகதி வழங்கப்பட்ட 1,000,000 Cefotaxime injection USP 1g குப்பிகளை ரூபா 43,070,000 மதிப்பீட்டில் கொள்வனவு செய்வது தொடர்பான கட்டளையின் படி, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் 2016 மார்ச் 15 ஆம் திகதி சர்வதேச போட்டி கேள்விகளை அழைத்திருந்தது. 2016 ஜூலை 25 திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம், அமெரிக்காவில் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழுடன் குறைந்த விலைக்கு கேள்வியை பெற்றுக்கொள்வதற்கு ஒரு குப்பி 0.252 ஐ.அ டொலரில் 1,000,000 குப்பிகள் ஐ.அ.டொலர் 252,000 இற்கான கட்டளையை வழங்க பெறுகை குழுவால் 2016 செப்டம்பர் 06 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. குப்பிகளுக்கு வழங்கப்படும். இது தொடர்பாக நடத்தப்பட்டகணக்காய்வு தெரிவு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

7.17.3.1 2017 மார்ச் 14 திகதிய மருத்துவ வழங்கல் பிரிவின் கடிதத்தின் படி, மருந்துக்கான தேவை 59 சதவீதம் குறைந்ததால், கட்டளை இரத்து செய்யப்பட்டுள்ளது. ஆனால் சுமார் ஓராண்டுக்குப் பிறகு அதாவது 2018 ஏப்ரல் 19 ஆம் திகதி இந்த மருந்தின் இருப்பு பூஜ்ஜியமாகி விட்டதால், மருந்து இருப்பு தேவை என்ற மறு அறிவிப்பின் அடிப்படையில், 2016 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருக்கு செல்லுபடிக் காலம் 1 ½ ஆண்டுகள் கடந்த பின்னர் 2018 மே 23 ஆம் திகதி வழங்கல் கடிதம் வழங்கப்பட்டது. மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பதிவுச் சான்றிதழ் காலாவதியாகியிருந்தத.. மறுபதிவுச் சான்றிதழைப் பெறுவதற்குத் தேவையான மாதிரிகள் மற்றும் மேலதிக தகவல்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், காலாவதியான பதிவுச் சான்றிதழின் பின்புறம் 2019 ஆகஸ்ட் 1 ஆந் திகதி 1,000,000 தடுப்பூசி அலகுகளுக்கு சான்றிதழ் செல்லுபடியாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, எனவே ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தால் 729,600 அலகுகளை விடுவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிந்தது. எஞ்சிய 770,400 தடுப்பூசி அலகுகளை விடுவித்துக் கொள்வதற்கு 2020 ஜனவரி 07 மற்றும் 2020 மார்ச் 17 ஆகிய திகதிகளில் எதிர்ப்பு தெரிவிக்காத கடிதங்களை வழங்கிய போதிலும், அதற்கான பதிவு சான்றிதழை வழங்க அதிகாரசபை தவறி இருந்தது.

7.17.3.2 மருத்துவ வழங்கல் பிரிவினால் மருந்தின் தேவை மற்றும் பெறப்பட வேண்டிய கட்டளைகளின் துல்லியமான எதிர்வுகூறலை மேற்கொள்வதற்கும் பெறுவதற்குள்ள கட்டளைகள் தொடர்பாக கவனிக்காமலும், மொத்த பெறுகை தொடர்பாக உரிய மருந்துகளை வழங்குவதற்கான காலத்தை மருத்துவ வழங்கல் பிரிவு 05 சந்தர்ப்பங்களில் அவ்வப் போது திருத்தியிருந்ததுடன் 2019 29 ஜனவரி ஆந் திகதி கட்டளைகளின் அளவு 50 சதவீதம் அதிகரித்திருந்து. கட்டளையுடன் தொடர்புடைய தடுப்பூசி குப்பிகளின் முதல் தொகுதி 2019 பெப்ரவரி 14, ஆந் திகதி 364,800 குப்பிகளையும், இரண்டாவது தொகுதி 2019 ஒக்டோபர் 07 இல் 364,800 அலகுகளையும், மூன்றாவது தொகுதி 270,400 அலகுகள் 2020 ஜனவரி 07 மற்றும் 500,000 அலகுகள் 2020 ஏப்ரல் 22 ஆந் திகதி கிடைத்திருந்தன. இவ்வாறு இருப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு இருக்கையில் பிரதான கட்டளை தாமதித்ததன் பேரில் மேலும் 250,000 குப்பிகள் 04 நாட்களுக்குள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு தேவைப்படுகின்றன எனக் குறிப்பிட்டு உள்ளூர் கொள்வனவிற்காக 2019 மே 30 திகதிய கட்டளை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு உள்ளூர் பெறுகை செய்வதற்காக 2019 ஜூன் 03 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது மருத்துவ வழங்கல் பிரிவினால் அவ்வப்போது வழங்கல் தொடர்பான அட்டவணை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வழக்கத்திற்கு மாறான திருத்தங்கள் காரணமாக பெறுகை நடவடிக்கைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்ய முடியவில்லை.

7.17.3.3 மருத்துவ வழங்கல் பிரிவின் தேவைக்காக 250,000 தடுப்பூசி குப்பிகளை உள்ளூரில் பெறுகை செய்ய ஒரு அலகு ரூபா 70.70 என்ற மிகக்குறைந்த விலையை சமர்ப்பித்த கேள்விதாரரின் நீண்ட கால தாமதத்தைக் காரணம் காட்டி கட்டளையை இரத்து செய்து மீண்டும் கேள்வி கோருவதற்கு பெறுகை குழு தீர்மானம் செய்தது. அதன்படி, ஒரு நாளுக்கும் குறைவான கேள்வியை சமர்பிப்பதற்காக வழங்கப்பட்ட விலை கோரலின் படி, தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவு செய்த கேள்விதாரர் சமர்ப்பித்த ஒரு அலகு விலை ரூபா 540 பிரகாரம் பெறுகை பெறுமதி துறைசார் பெறுகை குழுவின் எல்லையை மீறுவதால் கேள்விதாரர்களுடன் கலந்துரையாடி (65,000 தடுப்பூசிகள் இலவச விநியோகத்தில்) மற்றும் ஒரு தடுப்பூசியின் பயனுள்ள விலை ரூபா 399.60 ஆக மொத்த மதிப்பு ரூபா 99,900,000 என ஒப்புக் கொள்ளப்பட்டது. ஒரு தடுப்பூசி குப்பியின் மதிப்பிடப்பட்ட விலை ரூபா 45.71 ஆகவும் முதலில் தெரிவு செய்யப்பட்ட வழங்குனரின் அலகு விலை ரூபா 70.70 ஆக இருந்தமையால் தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனர் விலை முறையே 774 சதவீதம் மற்றும் 465 சதவீதம் அதிகரித்திருந்தது. இரண்டாவது முறையாக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் முதலாவது முறையாக அலகொன்றின் விலை ரூபா 255 இற்கு சமர்ப்பித்திருந்ததுடன் 2 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் இரண்டாவது கேள்வி கோரலில் ரூபா 540 இற்கு சமர்ப்ப்பித்தமை தொடர்பில் பெறுகை குழு கவனம் செலுத்தாமல் கட்டளையை வழங்கியிருந்தது.. கேள்விக்கான முதல் அழைப்பில், குறைந்தபட்ச அலகு விலையான ரூபா 70.70 வழங்கிய தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் 45 நாட்களுக்குள் முழு இருப்பையும் வழங்க இணங்கியிருந்தார், ஆனால் அதனை மறுத்து மீண்டும் கேள்வி கோரப்பட்டிருந்த போதும் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் 30 இற்குள் மருந்துகளை வழங்கத் தவறிவிட்டார். 2019 டிசம்பர் 27 ஆந் திகதி கேள்வி

ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளர் அல்லாத வேறொரு உற்பத்தி கம்பனியின் முகவரியொன்று குறிப்பிடப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 27 ஆம் திகதி தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை மேற்கொண்ட விசாரணையின் படி, இந்த தடுப்பூசிகள் தங்கள் கம்பனியால் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது.

7.17.3.4 2019 திசெம்பர் 27 ஆந் திகதி தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவு செய்யப்படாத ஒரு நிறுவனத்திலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு விமானம் மூலம் அனுப்பப்பட்ட 20,000 தடுப்பூசிகளை மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்க வழங்குனர் திட்டமிட்டிருந்தார். மேலும், இந்த மருந்துகளின் பொதிகள் மற்றும் பிரதான கொள்கலனில் உற்பத்தியாளரின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அந்தத் தகவல் இல்லாமல் மாதிரிகள் மருத்துவ வழங்கல் பிரிவால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. தடுப்பூசிகள் கையிருப்பு இல்லாததால் இந்த குறைபாடுள்ள மருந்துகளை ஏற்றுக்கொள்வதற்கும் பொதியிடலுக்கான வழிமுறைகளை வழங்குவதற்கும் 2020 ஜனவரி 02 ஆந் திகதி தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு மருத்துவ வழங்கல் பிரிவு பணிப்பாளர் கடிதம் ஒன்றை சமர்ப்பித்திருந்தார். அவ்வாறே இந்த மருந்து தொடர்பாக தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பதிவு சான்றிதழுடன் வழங்கப்பட்ட கோவையின் பிரகாரம், மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கப்படவிருந்த பதிவு செய்யப்பட்ட மருந்தினையும் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் உணவு மற்றும் மருந்து பரிசோதகர் மூலம் பதிவு செய்யப்பட்ட மருந்தின் கைப்பற்றப்பட்ட மருந்து பொதிகளுக்கும் இடையே தெளிவான வேறுபாடுகள் காணப்பட்டன.

7.17.4 ரூபா 1,488,240 கிரயமான 79,500 அலகுகள் Ceftriaxone Sodium for Injection BP 500mg தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ் இல்லாத வழங்குனர் ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் வழங்குனர் சமர்ப்பித்த பெறுகை ஆவணங்களின் பிரகாரம் மற்றும் இறக்குமதி செய்யும் போது சுங்கத் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் இந்தத் தடுப்பூசி உற்பத்தி என்ற வகையில் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவு செய்யப்படாத ஒரு கம்பனியிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு கப்பல் ஏற்றுவதற்கு முன்னர் மருந்துகளின் மாதிரிகள் இந்தியாவில் உள்ள Bee Pharma ஆய்வுகூடத்தில் பரிசோதிக்கப்பட்டமைக்கான தகவல்கள் மற்றும் மருந்து பதிவு தொடர்பான தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் பராமரிக்கப்படும் ஆவணத்துடன் கூடிய கோப்பு கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. வழங்குனரால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கிய இருப்பு தொடர்பாக தேசிய மருந்துப் பாதுகாப்பு ஆய்வுகூடத்தினால் நடத்தப்பட்ட தரச் சோதனையின் போது, USP லேபிள் தேவை மற்றும் தற்போது ஆவணங்களில் காணப்படும் குணாதிசயங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் காரணமாக பயன்பாட்டிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்ட இருப்புகளுக்கான கிரயத்தை மீண்டும் செலுத்துமாறு கூட்டுத்தாபனத்தினால் வழங்குனருக்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதும் அதை ஏற்காத வழங்குனர் வழங்குனரை கறுப்புப் பட்டியலில் சேரப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் வழங்குனர்களின் இடைநிறுத்தப்பட்ட கொடுப்பனவுகளின்

மூலம் தரமற்ற மருந்துகளை வழங்கியதால் ஏற்பட்ட ரூபா 1,860,300 தொகையை கழித்துக்கொண்டு ரூபா 273,598,324 தொகை 2022 ஆகஸ்ட் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் இந்த வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டது.

7.17.5 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மருத்துவ வழங்கல பிரிவிற்காக ரூபா 35,761,504 கிரயமான 5,845,000 அலகுகள் Furosemide Injection BP 20 mg/2 ml மாத்திரைகள் வாங்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

7.17.5.1 2017 மார்ச் 7 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த 99,000 தடுப்பூசிகளின் இருப்புக்களில் காணப்பட்ட குறைபாடுகள காரணமாக ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் அதற்காக உற்பத்தி நிலைமை அறிக்கையை (Product Stability Report) சமர்ப்பிக்குமாறு வழங்குனருக்கு செய்யப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் வழிங்குனரால் Accelerate Stability Report சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் குறிப்பிடப்பட்ட வகைக்குரிய மருந்து தேவையின் தரம் மற்றும் விதந்துரைகளுக்கு இணங்கியதென உற்பத்திக் கம்பனியால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறு வழங்கப்பட்ட அறிவித்தல் கடிதத்தின் தலைப்பு உற்பத்திக் கம்பனி பயன்படுத்தப்படுகின்ற கடிதத் தலைப்பிலிருந்து வேறுபடுவதாகவும் இது போலியாக தயாரிக்கப்பட்ட கடித தலைப்பாகவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் கட்டளையிடப்பட்ட அலகுகளின் மொத்த அளவிற்குரிய உற்பத்திக் கம்பனியால் அவ்வப்போது வழங்கப்பட்ட தடுப்பூசி பகுப்பாய்வு சான்றிதழ்களின தரக் கட்டுப்பாட்டு முகாமையாளர்களின் கையொப்பம் படிவம் ஒவ்வொன்றிலும் வேறுபட்ட போதும் அவ்வேறுபாடு தொடர்பாக பெறுகை நிறுவனம் எந்தவொரு கவனமொன்றை செலுத்தியிருக்கவில்லை.

7.17.5.2 இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம், மேற்படி வழங்கல் தொடர்பாக, வழங்குனர் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட மருந்து உற்பத்தியாளர்கள் அல்லாத வேறு இரண்டு இறக்குமதி நிறுவனங்களிடமிருந்து 3,898,900 டோஸ் தடுப்பூசிகளை இறக்குமதி செய்துள்ளதுடன். அந்த இரண்டு கம்பனிகளும் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் அல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

7.17.5.3 வழங்குனரால் வழங்கப்பட்ட இந்தத் தடுப்பூசிகள் தொடர்பாக 2 அரசு வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவப் வழங்கல் பிரிவு அளித்த முறைப்பாடுகள் தொடர்பாக, தேசிய மருந்துகள் தரப் பாதுகாப்பு ஆய்வுகூடத்தின் (NMQAL) சோதனை அறிக்கையின்படி, பிரிட்டிஷ் மருந்தக விவரக் குறிப்புகளுக்கு இணங்கவில்லையெனவும் பரிசோதனைக்கு வழங்கப்பட்ட தடுப்பூசிகளின் மாதிரிகள் மற்றும் பதிவிற்காக தேசிய மருந்துகள் தரப் பாதுகாப்பு ஆய்வுகூடத்தீற்கு (NMQAL) வழங்கப்பட்டது கோவைகளில் கொடுக்கப்பட்ட தடுப்பூசி மாதிரிகளிலும் உள்ள தயாரிப்புகளின் மாதிரிப் பொதிகளில் வித்தியாசமான முரண்பாடு காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. . இந்த பரிசோதனை முடிவுகளின்

அடிப்படையில், அனைத்து அரசு வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு தனியார் வியாபார நிலையங்களிலிருந்தும் இந்த தடுப்பூசியை உடனடியாக பயன்பாட்டிலிருந்து நீக்குமாறு கம்பனிக்கும் அறிவிக்கப்பட்டது, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்ட நேரத்தில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான இருப்புக்கள் காலாவதியாகி இருந்தது.

7.17.5.4 இந்த தரவாணைள் தொடர்பான இருப்புக்களின் உற்பத்தியாளர் என்ற ரீதியில் பெறுகை ஆவணங்களிலும் சுங்க விடுவிப்பு ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்ட உற்பத்திக் கம்பனியிடமிருந்து உரிய காலத்தில் இந்த வழங்குனருக்கு எந்தப் பொருளும் கிடைக்கவில்லையெனவும் இந்த பெறுகை பற்றி எந்த அறிவும் இல்லை எனவும் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் சார்பில் நடத்தப்பட்ட தடயவியல் கணக்காய்வின் போது எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்பட்ட போதும் தொடர்புடைய பெறுகை கோப்பில் உள்ள கடிதங்கள் மற்றும் விடுவிப்பு சான்றிதழ்கள் உற்பத்தி நிறுவனத்தின் கடித தலைப்புகளில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அந்த கடித தலைப்புக்கள் 2015 ஜூன் 10 ஆம் திகதி உற்பத்திக் கம்பனியால் வழங்குனருக்கு தமது இலங்கை முகவராக நியமிக்கப்பட்டதாக அறிவித்து ஒப்பனை சாதனங்கள் மற்றும் மருந்துகள Cosmetic Devices and Drug) அதிகாரசபைக்கு அனுப்பப்பட்ட கடித தலைப்புகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது,

7.17.5.5 கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருந்து பெறப்பட்ட பொதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம், மருந்துகளை பதிவு செய்வதற்காக தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த மாதிரி பொதியிடல் மற்றும் மருத்துவ விநியோக பிரிவினால் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட இந்த மருந்தின் கையிருப்பில் எஞ்சியிருந்த பொதிகளில் பல்வேறு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

7.17.5.6 மேற்குறிப்பிட்ட விடயங்கள் காரணமாக, வழங்குனர் கம்பனி கறுப்புப் பட்டியலில் உள்ளடக்குவதற்காக சட்டத் பிரிவிற்கு பரிந்துரைக்கப்பட்ட போதும் தரமற்ற மருந்துகளுக்கு அறவிட வேண்டிய கட்டணங்களை அறவிட்டதால் ,இந்த வழங்குனரை கறுப்புப்பட்டியலில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்ற அடிப்படையில் தடுப்புப்பட்டியல் செயல்முறை நிறுத்தப்பட்டிருந்தது.

7.17.5.7 மேலே உள்ள பத்திகள் 7.17.1 முதல் 7.17.5 வரை குறிப்பிடப்பட்டுள்ள முறையற்ற செயற்பாடுகளால், அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கும், அரசு மருந்துக் கூட்டுத்தாபனத்தின் ஒசுசலகளுக்கும் (மருந்தகங்கள்) வழங்கப்படுட்ட மருந்துவப் பொருட்களுக்கு உள்ளூர் முகவர் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய பட்டியல்கள் இரண்டு வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக இது இடைநிறுத்தப்பட்டிருந்த போதும் முறையான விசாரணை அல்லது முறையான அங்கீகாரம் இல்லாமல் பணம் செலுத்தப்பட்டமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

7.17.5.8 கொடுப்பனவு இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 248,354,974 தொகை 2022 ஆகஸ்ட் மற்றும் நவம்பர் மாதங்களில், தேசிய மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் பரிந்துரையின் பேரில் பரிந்துரைக்கப்பட்ட பெறுகை குழுக்களின் அங்கீகாரம் அல்லது வேறு எந்த முறையான அங்கீகாரத்தையும் பெறாமல் வழங்குனருக்கு செலுத்தப்பட்டது.

7.17.6 இதற்கு மேலதிகமாக இந்த உள்நாட்டு முகவரின் தரவாணை இலக்கம் LP/MSD/CPU-DHS/RQ/341/2018 இன் கீழ் தவிர, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்டக மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்ட 1,792 Bevacizumab ஊசிகளுக்கு வழங்குனர் வழங்கிய கேள்வி விலை (Quoted Price) மற்றும் வழங்கப்பட்ட விலை (Awarded Price) என்பவற்றிற்கு இடையே வேறுபாட்டிற்காக கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்த ரூபா 25,243,400 இற்குரிய கேள்வி வழங்கப்பட்ட விலை மற்றும் ரூபா 25,243,400 இற்கு சம்பந்தப்பட்ட கேள்வி குழுவின் அங்கீகாரம் இல்லாமல் மற்றும் பணம் செலுத்துவதற்கு போதுமான காரணங்களை முன்வைக்காமல் வழங்கப்பட்டிருந்த சுகாதார அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில், 2022 திசெம்பர் 08 ஆந் திகதி தேசிய மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் குறித்த கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

7.17.6.1 2020 ஏப்ரல் 20 திகதிய 758 ஆம் இலக்க பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம், வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகளை ஒழுங்குபடுத்துவதற்காக நிறுவப்பட்ட குழு (Streamline Committee) வழங்குனர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளுக்குள் மட்டுமே பணம் செலுத்தப்பட வேண்டும். ஆனால் தேசிய மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் கடைசியாக 2022 ஜூன் 08 ஆந் திகதி நடாத்தப்பட்ட அக்குழுவின் 65 வது தீர்மானத்திற்கு புறம்பாக சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் பரிந்துரைகளின் பேரில், இந்த கம்பனிக்கு ரூபா 248,354,974 பணம் செலுத்தப்பட்டிருந்தது. வழங்குனர்களுக்கு பணம் செலுத்துவதற்கான ஒரு குறிப்பிட்ட கொள்கை மற்றும் வெளிப்படையான முறையான அமைப்பை நிறுவும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட மேற்படி குழு, 2022 அக்டோபர் 03 திகதிய பணிப்பாளர் சபை கூட்டத்தின் 782 ஆம் இலக்கத்தின் மூலம் அந்த செயற்பாடு இரத்து செய்யப்பட்டதுடன், அந்தக் குழுவை ஒழிப்பதற்கு நியாயமான காரணங்கள் எதுவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

7.17.6.2 இந்த கம்பனி அதன் வர்த்தகப் பெயரை பின்னர் மாற்றியதுடன் அதன் நிலுவையில் உள்ள பட்டியல்களைத் தீர்க்க அந்தப் புதிய வர்த்தக பெயரில் விண்ணப்பித்திருந்தது. எனினும், உரிய மருத்துவப் பொருட்களுக்கான வழங்குனர் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம் முதல் நிறுவனத்தின் பெயரில் செய்யப்பட்டதால், அந்த பெயரில் உள்ள கணக்குகள் மூலம் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் நாணயக கடிதங்களை விடுவித்தது. மேலும், நிறுவனத்தின் பெயர் மாற்றத்தை தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை ஏற்கவில்லை. இதனால், பணம் செலுத்துமாறு கோரிக்கை வைத்த நிறுவனமும், பணம் செலுத்திய நிறுவனமும் ஒன்றுக்கொன்று வேறுபட்டன.

7.17.6.3 இவ்வழங்குனரால் அரசின் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மீறப்பட்டு மருந்து பதிவில் மேற்கொள்ளப்பட்டிருந்த மோசடி நடத்தை குறித்து அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் அறிவுறுத்தப்பட்டு மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் அமைச்சு செயலாளரால் 2021 ஏப்ரல் 24 ஆந் திகதி அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அனுப்பிய SM/PSRP/01/SPC/2021 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், இந்த முதலாவது கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளிடமிருந்து செய்யப்படும் அனைத்து கொள்வனவுகளை மறு அறிவித்தல் வழங்கும் வரை தற்காலிகமாக நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதும் சுகாதார அமைச்சின் அவசர பெறுகை குழுவின் 2022 ஆகஸ்ட் 16 திகதிய தீர்மானத்தின் பிரகாரம் இந்த முதல் கம்பனி புதிய கம்பனியின் பெயரின் கீழ் தனது முகவராக பெயரிடப்பட்ட கம்பனியொன்றதாக சமர்ப்பித்த கேள்வியொன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு அக்கம்பனிக்கு ரூபா 52,450,000 ஆன 1000 அலகுகள் Trustuzumab 400mg ஊசிகளை வழங்கும்பெறுகை அளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஆகஸ்ட் 29 மற்றும் 2022 செப்தம்பர் 12 ஆந் திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

7.17.6.4 2015 ஜனவரி 15 முதல் 2018 திசெம்பர் 31 வரை அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாக கருதப்படும் ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின்படி, புற்றுநோய் மருந்தான ”Trastazumab” இறக்குமதியின் போது மேற்கொள்ளப்பட்ட மோசடி ”ஹர்டிகாட்” என்ற வர்த்தக பெயர் இலங்கைக்கு தனியார் கம்பனியொன்றின் ஊடாக இறக்குமதி செய்த போது மேற்கொள்ளப்பட்ட ஊழல் மற்றும் முறைகேடுகளுடன் தொடர்புடைய பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் தொடர்பில் பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்த போதும் அப்பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக அப்பரிந்துரைகள் எவற்றையும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7.18 இரண்டு நோயாளிகளின் உயிர் இழப்பு காரணமாக சர்ச்சைக்குரிய தன்மையுடைய Ceftriaxone for inj.1g vial Ceftriaxonė தொடர்பான சோதனை (SR- 00101704)

இந்த ஆண்டிபயாடிக் மருந்தான இம்மருந்து 2021/SPCN/R/P/00030 ஆம் இலக்க கட்டளையின் கீழ் ரூபா 75,959,792 பெறுமதியான 2,100,000 தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2023 மார்ச் மாதத்தில் கிடைத்த இருப்பில் 700,000 இருப்பு விநியோகத்தின் பின்னர், பேராதெனிய மற்றும் கேகாலை போதனா வைத்தியசாலைகளில் 02 மரணங்கள் பதிவாகியிருந்ததன. அத்துடன், கொழும்பு, கண்டி தேசிய வைத்தியசாலை, கம்பஹா, கம்புறுப்பிட்டி, நீர்கொழும்பு, கரவனெல்ல போன்ற வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு மருந்தைப் பயன்படுத்தியதன் பின்னர் ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், வைத்தியசாலைகளில் எடுக்கப்பட்ட மாதிரிகளை பரிசோதித்த போது, ஆய்வுகூட பரிசோதனையில் மருந்தின் நிலையில் எவ்வித பிரச்சினையும் இல்லை என தெரியவந்த போதிலும், பேராதனை வைத்தியசாலையில் உயிரிழந்த நோயாளிக்கு பயன்படுத்தப்பட்ட தொகுதியின் மாதிரிகளை ஆய்வுகூடத்திற்கு அனுப்ப

பேராதனை போதனா வைத்தியசாலை நடவடிக்கை எடுக்கவில்லை. கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் தொடர்புடைய மாதிரிகள் ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதும், கணக்காய்வு ிகததி வரை தொடர்புடைய அறிக்கைகள் வெளியிடப்படவில்லை.

8. பரிந்துரைகள்

8.1 பொதுமக்களுக்கு உண்மையான, பாதுகாப்பான மற்றும் தரமான மருந்துகளை வழங்குவதற்கான முதன்மை நோக்கத்தை அடைய நிறுவப்பட்ட தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் முன்னர் விலக்களித்தல் சான்றிதழ்களை (WOR) வழங்குகையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் அந்த குறைந்தபட்ச முறைமையிலிருந்து விலகி, விசேட வழிமுறையின் (Special Pathway) கீழ் பதிவு செய்வதிலிருந்து விலக்களிப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, தரத்தை சரிபார்க்க குறைந்தபட்ச வழிமுறையேனும் ஒன்று இன்றி மருந்துகளை இலங்கைக்கு இறக்குமதி செய்ததன் காரணமாக நோயுற்றவர்களை ஆபத்தில் ஆழ்த்தியமையால் மேற்குறிப்பிட்ட விசேட வழிமுறைக்கு ஒப்புதல் அளித்த அதிகாரசபையின் முன்னைநாள் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் உள்ளிட்ட ஆளுகைச் சபை தொடர்பில் விசாரணை மேற்கொண்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. (தொடர்பு: 7.11.7)

8.2 அதிகாரசபைச் சட்டத்தின்படி, அவசரகாலச் சூழ்நிலைகளில் மருந்துகளுக்குப் பதிவில் இருந்து விலக்கு அளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், தற்போதுள்ள சட்டங்களின்படி, மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்திய பின்னர், பதிவிலிருந்து விலக்குச் சான்றிதழ்களை வழங்குவதற்கும், ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையான முறைகளுக்கு மாறாக பதிவிலிருந்து விலக்கு சான்றிதழ்களை வழங்குகையில் ஏற்படத்தக்க சாத்தியமான முறைகேடுகள தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது. (தொடர்பு: 7.11.1 முதல் 7.11.6)

8.3 தேசிய மருந்துகள் தரப் பாதுகாப்பு ஆய்வகத்திலுள்ள குறைபாடுகள் மற்றும் நலிவுகளை இல்லாதொழித்து அதனை அங்கீகாரம் பெற்ற சர்வதேச நியமத்திலமைந்த ஆய்வகமாக மேம்படுத்துவதற்கும் மருந்து பதிவு, இறக்குமதி மற்றும் களஞ்சியப்படுத்தல் போன்ற வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மாதிரிகளை பரிசோதித்து நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்துச் செயற்படுவதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது. (தொடர்பு: 7.9.1 முதல் 7.9.8 வரை)

8.4 Human Immunoglobulin மற்றும் Rituximab உள்ளிட்ட 05 மருந்துகளை கொள்முதல் செய்யும் போதும் மருந்து இருப்பை வழங்கும் போதும் வழங்குநர் செய்த மோசடி நடவடிக்கைகள் மற்றும் நோயாளிகளின் உயிருக்கு கடுமையான ஆபத்தை ஏற்படுத்தியமை குறித்து முறையான விசாரணை மேற்கொண்ட பின்னர், வழங்குநர் மீது சட்டத்தை அமுலாக்கும்

முகவர் நிறுவனங்கள் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பரிந்துரைக்கப்படுகிறது. (தொடர்பு: 7.16)

8.5 Human Immunoglobuliṅ உள்ளிட்ட மருந்துகளை ஆர்வவெளிப்படுத்தல் கோரிக்கைகள் மற்றும் இறக்குமதி அடிப்படையில் கொள்முதல் செய்கையில் அமைச்சரவை தீர்மானத்தை மீறிச் செயற்படுதல், தொழில்நுட்ப மதிப்பீடுகளை முறையாக மேற்கொள்ளாமை, வழங்குனருக்கு நன்மை பயக்கும் விதத்தில் பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் 02 போலி மருந்துகளுக்கு பணம் செலுத்துகையில் முன்னுரிமை அளித்துச் செயற்படுதல் சம்பந்தமாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு, பொறுப்பானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்படுகின்றது. (தொடர்பு: 7.3, 7.4, 7.16)

8.6 தரத்தில் குறைபாடுள்ள ஔடதங்களை வழங்கிய நிறுவனங்கள்/கம்பனிகளை கறுப்புப்பட்டியலில் சேர்க்கையில் அந்த நிறுவனங்கள் வேறு பெயர்களில் மருந்துகளை மீண்டும் வழங்குவதைத் தடுப்பதற்காக, தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு போன்ற ஆளடையாள ஆவணங்களைப் பயன்படுத்தி, அந்த நிறுவனங்களின் உரிமையாளர்களை கறுப்புப்பட்டியலில் சேர்க்க நிதி அமைச்சின் செயலாளர், கம்பனிகளின் பதிவாளர் மற்றும் கொள்முதல் ஆணைக்குழு என்பன உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பரிந்துரைக்கப்படுகின்றது. (தொடர்பு: 7.16, 7.18 தொகுதி I)

8.7 தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் மருந்துகளை பதிவு செய்யும் போது அரசாங்கத்தின் மருந்துத் தேவைகள் குறித்து கவனம் செலுத்தி, பதிவு செயல்முறையை வினைத்திறனாகச் செய்யாமை மற்றும் காத்திருப்புக் கோவைகளை அதிகளவு எண்ணிக்கையில் வைத்திருந்தமை போன்றன காரணமாக ஏற்பட்டிருந்த சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக, பதிவு நடவடிக்கைகளை விரைவாகவும் முறையாகவும் மேற்கொள்ள முறையான வேலைத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென்றும் அந்த வேலைத்திட்டமானது உரியவாறு செயல்படுத்தப்படுகிறதா என்பதைத் தொடர்ந்தேற்சியாக ஆய்ந்தறிவதற்கு வழிமுறையொன்றை உருவாக்க வேண்டுமென்றும் பரிந்துரைக்கப்படுகிறது. (தொடர்பு: 7.6.1, 7.6.2, 7.6.3, 7.7.1 முதல் 7.7.11 வரை)

8.8 அரச மருந்துக் களஞ்சியங்கள் மற்றும் மருந்துப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்ற வழிமுறையொன்றை ஏற்படுத்துவதன் மூலம் மருந்துகளின் இறக்குமதி / உற்பத்தி செய்த சந்தர்ப்பம் முதல் நோயாளிகள் பயன்படுத்தும் சந்தர்ப்பம் வரை மருந்துகளின் தரத்தை தொடர்ந்து பராமரிப்பதற்கான வழிமுறைகளை உருவாக்கி செயல்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. (தொடர்பு: 7.10.1, 7.10.2, 7.10.3)

8.9 மருந்துகளின் விலை நிர்ணயம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் முறைகளில் உள்ள குறைபாடுகளை சரிசெய்வதன் மூலம், பொதுமக்களுக்கு நியாயமான விலையில் மருந்துகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய பரிந்துரைக்கப்படுகிறது. (தொடர்பு: 7.8.1 முதல் 7.8.10 வரை)

8.10 மருந்துகளை இறக்குமதி செய்யும் போது, அதற்குத் தேவையான பதிவுகள் மற்றும் பதிவிலிருந்து விலக்களிப்புச் சான்றிதழ்கள் உள்ளிட்ட, மருந்து அனுமதி தொடர்பான அனைத்து ஆவணங்களையும் இணையவழி (ஆன்லைன் முறை) மூலம் பரிசோதனைக்கு உட்படுத்தக்கூடிய விதத்தில் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களான மருத்துவ வழங்கல் பிரிவு, அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம், இலங்கை சுங்கம் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் ஆகியவற்றை தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையுடன் இணைக்கும் விதத்திலமைந்த கணினிமயமாக்கப்பட்ட ஆன்லைன் முறைமையொன்றை நிறுவ பரிந்துரைக்கப்படுகிறது. (தொடர்பு: 7.7.7.7, 7.7.7.8, 7.11.6.3)

8.11 மருத்துவப் பொருட்களைப் பெறுவதற்கு எடுக்கின்ற நேரத்தை (Lead-time) குறைப்பதற்காக விஞ்ஞான ரீதியான முறையின் ஊடாக மீளக் கட்டளையிடும் மட்டத்தை நிர்ணயித்து சரியான இருப்பு முகாமைத்துவ முறையை அறிமுகப்படுத்துவதற்கும், அரசாங்க மருத்துவமனைகளுக்கு தேவையான மருந்துகளின் அளவைத் துல்லியமாகக் கணித்து, மீளக் கட்டளையிடும் அளவை சரியாக நிர்ணயம் செய்து, வருடாந்தக் கட்டளைகளை தாமதமின்றி சரியான நேரத்தில் அனுப்பிவைப்பதற்கு ஏற்ற விதத்தில் துல்லியமான தகவலை வழங்கும் நம்பகரமான புதுப்பித்த தரவு முறைமையொன்றை பராமரிப்பதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது. (தொடர்பு: தொகுதி I)

8.12 வழங்குனர்களுக்கு அனுப்பப்படும் கட்டளைகள் உரிய தேதிகளில் பெறப்படுதலை உறுதிசெய்வதற்கும் அவ்வாறு பெறப்படாத பட்சத்தில் தாமதக் கட்டணம் அறவிடப்படுவதை உறுதிசெய்வதற்கும் மருந்து இருப்பு கிடைக்கவேண்டிய திகதிகள் மற்றும் அளவில் மாற்றங்கள் செய்யப்படின் அது ஒரு சரியான மதிப்பீட்டின் அடிப்படையில் செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் ஏற்றதோர் பொறிமுறையை அமைக்க பரிந்துரைக்கப்படுகிறது. (தொடர்பு: தொகுதி I)

8.13 வழங்குனர்களுக்கு வழங்கப்படுகின்ற கட்டளைகள் தொடர்பில் தொடர்ச்சியாக ஆய்ந்தறிந்து கிடைப்பதற்கு குறைவான சாத்தியமுள்ள அல்லது கிடைப்பதற்குச் சாத்தியமற்ற கட்டளைகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. (தொடர்பு: தொகுதி I)

8.14 பற்றாக்குறையான மருந்துகளை கண்டறிந்து முடிவெடுப்பதற்காக அறிவிக்கையில் எந்தவொறு நாளிலும் தகவல் முறைமைகளால் சுட்டிக் காட்டப்படும் மீதமுள்ள இருப்பு மட்டுமல்லாது, வழங்குனர்களிடமிருந்து பெற வேண்டிய கட்டளைகளின் அளவு, அவற்றின் கிடைப்பதற்கான சாத்தியம், மருந்துகளின் மாதாந்த பயன்பாடு மற்றும் பிற காரணிகளைக் கருத்திற்கொண்டு பற்றாக்குறையாக உள்ள மருந்துகள் குறித்து தீர்மானம் எடுக்க வேண்டுமென்பதுடன் பற்றாக்குறையான மருந்துகள் தொடர்பில் அவசர கொள்முதலை மேற்கொள்வதற்கு முன்னர் வழங்குனர்களிடமிருந்து பெற வேண்டிய கட்டளைகளின் அளவுகளைப் பெறுவதற்கு இயன்றளவு முயற்சிப்பதற்கும் முடிக்கப்படாத சாதாரண வருடாந்த கட்டளைகளை முடிக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது,(தொடர்பு: தொகுதி I)

8.15 மேற்கூறியவாறு நடவடிக்கைகளை எடுத்த பின்னரும் அவசரக் கொள்முதல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதிகாரிகளின் அலட்சியம் அல்லது திறமையின்மையே அவசரக் கொள்முதல் செய்யக் காரணம் என்றால், அந்த அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அவசரகால கொள்முதல் காரணமாக அரசுக்கு ஏற்படும் நட்டத்தை பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. (தொடர்பு: தொகுதி I)

8.16 சுகாதார அமைச்சு, மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம் போன்ற ஒன்றோடொன்று தொடர்புடைய பணிகளைச் செய்யும் நிறுவனங்களுக்கிடையில் நல்ல தகவல் தொடர்பு இல்லாமை காரணமாக பல்வேறு பிரச்சனைகள் எழுந்துள்ளதால், முறையான இந்த நிறுவனங்களுக்கு இடையே நல்ல ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கான வழிமுறை ஒன்றை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க பரிந்துரைக்கப்படுகிறது. (தொடர்பு: தொகுதி I)

8.17 தொகுதி I இல் விரிவாகக் காட்டப்பட்டுள்ளபடி, முழுத் தகவலையும் கலந்தாலோசிக்காமல் 11 மருந்துகள் தொடர்பாக, அவசர கொள்முதலை நாடியமையால் அரசுக்கு ரூபா 709,149,099 மேலதிக செலவு செய்ய வேண்டியிருந்தமையால் முறையான விசாரணை நடத்தி, இதற்கு காரணமானவர்களைக் கண்டறிந்து, மேலதிக செலவினங்களை அறவிடுவதற்கும் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கும் பரிந்துரைக்கப்படுகின்றது. (தொடர்பு: தொகுதி I)

8.18 தொகுதி I இல் விரிவாகக் காட்டப்பட்டுள்ளபடி, மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம், 04 மருந்துகள் தொடர்பாக கொள்முதல் நடவடிக்கைகள் முடிக்கப்பட்ட கட்டளைகளை இரத்து செய்து, உள்நாட்டு மருந்து உற்பத்தியாளர்களிடம் இருந்து அவற்றைக் கொள்வனவு செய்ய முனைந்திருந்தமையால் அரசுக்கு ரூபா 1,67,717,935 மேலதிகத் தொகை செலவாகியிருப்பதை அவதானிக்க முடிந்தமையால் மேலதிக விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதற்கும், அதற்கு காரணமான தரப்பினருக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரைக்கப்படுகிறது. (தொடர்பு: தொகுதி I)

8.19 தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களின் தற்போதைய உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை மதிப்பாய்வு செய்து தற்போதுள்ள குறைபாடுகள் மற்றும் நலிவுகளைக் கண்டறிவற்கும் அவற்றை சரிசெய்வதன் மூலம் வலுவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை நிறுவுவதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது. (தொடர்பு: 7.6 முதல் 7.11 வரை)

8.20 2018 மார்ச் 14 அன்று என்னால் வழங்கப்பட்ட மருத்துவ விநியோக செயல்முறை தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இல. 8.1 முதல் 8.47 வரையான பரிந்துரைகளை (இணைப்பு 143) உடனடியாக செயல்படுத்துவதற்கும் அந்தப் பரிந்துரைகள் வழங்கப்பட்டு 06 ஆண்டுகளுக்கும் மேலான காலம் கடந்திருந்த போதிலும் அந்த பரிந்துரைகளை செயல்படுத்த போதுமான நடவடிக்கைகள் எடுக்காத அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது. **(இணைப்பு 143)**

ஒப்பம்/டபிள்யு. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பீ.சி. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
2024 மே 10 ஆந் திகதி

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மருந்துகளின் தேவை, பெறுகை, வழங்கல், விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை

தொகுதி I

(மருந்துகளின் மதிப்பீட்டைத் தயாரித்ததில் இருந்து மருந்துகள் கட்டளையிட்டு மருந்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்குதல், அந்த மருந்துகளை பகிர்ந்தளித்தல் தொடர்பான செயற்பாடுகளை பரீட்சித்தல் தொடர்பாக ஒவ்வொரு பிரிவுகளுக்கும் உரிய அவதானிப்புக்கள்)

01. <u>Meropenem Injection 1g (SR 00102102)</u>

பக்டீரியாவினால் ஏற்படுகின்ற நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற இந்த மருந்தில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்த கட்டளைகளுக்கு உரிய 1,500,000 தடுப்பூசிக் குப்பிகள் வழங்கப்பட்டு அதற்காக ரூபா 1,105,494,000 கொடுப்பனவுக் கோரிக்கை (வரவுத்தாள்) மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. அந்த வழங்கல்களுக்குரிய பெறுகைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மருத்துவ வழங்கல் பிரிவின் இலக்கம் 2022/SPC/E/C/P/00432 என்ற அவசர கட்டளையின் கீழ் 150,000 தடுப்பூசிக் குப்பிகளைக் கொள்வனவு செய்வதற்கு உரிய தடுப்பூசிக் குப்பியொன்று ரூபா 1,395 ஆக விலை சமர்ப்பித்த ஆகக் குறைந்த இரண்டாவது கேள்விதாரரின் கேள்வி தேசிய மருந்துகள் ஒழுங்கு படுத்தல் அதிகார சபையில் பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்காமையின் அடிப்படையில் மற்றும் கையிலுள்ள இருப்பு போதாமையின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டிருந்தது. மூன்றாவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த Yaden International (Pvt) Ltd 04 வார கால எல்லையில் இருப்பை வழங்குமாறும் அந்த வழங்குநருக்கு தடுப்பூசி குப்பியொன்று ரூபா 1,400 இற்கு தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செல்லுபடியான சான்றிதழ் சமர்ப்பிப்பதன் கீழ் கட்டளை கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த வழங்குநரால் பதிவை விடுவிக்கும் சான்றிதழின் அடிப்படையில் மருந்து வழங்க வேண்டிய திகதியில் இருந்து 56 நாட்கள் மற்றும் 238 நாட்கள் தாமதமாகி இருப்பு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அவசர கொள்வனவாக இலக்கம் 2022/SPC/E/C/P/00724 என்ற கட்டளைக்காக 450,000 தடுப்பூசி குப்பிகள் ரூபா 1,895.50 விலையில் பெற்றுக்கொள்வதற்குரிய சுகாதார பிரிவின் அவசர பெறுகைக் குழுவினால் 2022 நவம்பர் 21 ஆம் திகதி வரையில் எந்தவொரு இருப்பும் காணப்படாதிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இலக்கம் 2022/SPC/N/C/P/000443 மற்றும் 2022/SPC/C/E/C/P/ 0043 கட்டளைக்குரிய முதலாவது முறையே 438,590 தடுப்பூக் குப்பிகள் 2022 நவம்பர் 08 மற்றும் 50,000 தடுப்பூக் குப்பிகள் 2022 நவம்பர் 17 ஆந் திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 நவம்பர் 21 ஆந் திகதி வரையில் 2022 நவம்பர் மாதத்தில் கிடைக்கப் பெற்ற தடுப்பூசி குப்பிகள் அலகொன்றுக்கு தடுப்பூசி அலகுகள் 488,590 இற்கு அண்ணளவான அளவு மருத்துவ வழங்கல் பிரிவிலோ அல்லது வைத்தியசாலை முறைமையிலோ காணப்பட்டமை அவதானிக்கப்பட்டமையால் 450,000 தடுப்பூசி குப்பிகளை கொள்வனவு செய்வதற்காக அவசர கொள்வனவின் தேவையொன்று ஏற்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் போதியளவான மருந்து அளவு முறைமையில் அவசர கொள்வனவுகள் மேற்கொண்டதன் காரணமாக சராசரி கட்டளையின் கீழ் தடுப்பூசி குப்பி ஒன்று ரூபா 1,075.60 விலையில் கொள்வனவு செய்யப்பட்டதன் அடிப்படையில் அவசர கொள்வனவின் கீழ் தடுப்பூசி குப்பி ஒன்று ரூபா 1,895.50 விலையில் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக அண்ணளவாக ரூபா 368,955,000 நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த வழங்குநரைத் தெரிவு செய்வதற்கு பிரதான காரணமாக ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் பதிவு விடுவித்தல் சான்றிதழ் பெற்று இரண்டு வாரங்களுக்குள் மருந்துகள் வழங்குவதற்கு இணங்கியிருந்த போதும் Slim Pharmaceuticals (Pvt) Ltd நிறுவனத்தால் மருந்து வழங்க வேண்டிய திகதியிலிருந்து 06 நாட்கள் மற்றும் 41 நாட்கள் தாமத காலத்தில் வழங்கியிருந்தார்.

(இ) மருத்துவ வழங்கல் பிரிவினால் தேவையை சரியாக இனங்கண்டு இருப்பு கட்டளையிடாமையின் காரணமாக சராசரி கட்டளையின் கீழ் தடுப்பூசி குப்பி ஒன்று ரூபா 1,075.60 இன் கீழ் இந்திய கடன் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் ரூபா 901.20 இற்கும், அவசர கொள்வனவுகளின் கீழ் தடுப்பூசி குப்பி ஒன்று ரூபா 1,400 இற்கும் மற்றும் ரூபா 1,895.50 இற்கும் கொள்வனவு செய்யப்பட்ட தடுப்பூசிகள் பல்வேறு

வைத்தியசாலைகளால் 2022 ஆம் ஆண்டில் தடுப்பூசி குப்பியொன்று ரூபா 4,950 முதல் ரூபா 9,450 வரையிலான வீச்சில் ஆகக் கூடிய விலையில் தடுப்பூசி குப்பியொன்று ஆகக் கூடிய விலையில் 14,450 தடுப்பூசிகள் ரூபா 81,619,637 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

02. <u>Liposomal Amphotericin B Injection 50mg (SR No 00107403)</u>

பங்கசு நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற இந்த மருந்தாகும். 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய பெறுகைகள் அரச மருந்தக கூட்டுத்தாபனம், மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் வெளிநாட்டு கடன் உதவியின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த மருந்தின் 42,800 அலகுகள் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் போது அரச மருந்தக கூட்டுத்தாபனத்தில் இருந்து கட்டளையிடப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டில் இலவசமாக 1,345 அலகுகள் கிடைத்திருந்தது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய பெறுகைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அவசர கொள்வனவாக 2022 ஆம் ஆண்டில் கட்டளை இலக்கம் 2022/SPC/E/C/P/00476 இன் கீழ் 2,050 தடுப்பூசி குப்பிகள் கொள்வனவு செய்வதற்கு Ceyoka (Pvt) Ltd நிறுவனத்திற்கு கட்டளை கையளிக்கப்பட்ட போதும் அதில் 1,549 தடுப்பூசி குப்பிகளின் இருப்பு வழங்க வேண்டிய திகதியில் இருந்து ஒரு மாதம் தாமதமாகி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அவசர கொள்வனவான 2022 ஆம் ஆண்டில் கட்டளை இலக்கம் 2022/SPC/E/C/P/00741 இன் கீழ் 6,250 தடுப்பூசி குப்பிகள் கொள்வனவு செய்யும் பெறுகை பதிவிலிருந்து விடுவிக்கும் சான்றிதழ் பெற்று 02 வாரங்களுக்குள் இருப்பை கையளிப்பதற்கு இணங்கியிருந்த ஐந்தாவது ஆகக் குறைந்த கேள்விதாரரான Slim Pharmaceuticals (pvt) Ltd இற்கு தடுப்பூசி குப்பியொன்று ரூபா 37,250 வீதம் கையளிப்பதற்காக பெறுகை கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த வழங்குநர் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு இருப்பு கையளிப்பதற்கு பதவியிலிருந்து விடுவிக்கும் சான்றிதழ் பெற்று மாதத்திற்கு ஒரு மாதத்தை விட அதிக காலம் எடுத்திருந்தது.

(இ) அலகொன்றின் விலை ரூபா 11,505.68 ஆக இரண்டாவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குனரின் இடமிருந்து கிடைத்த கேள்வி மருந்துகளை வழங்குவதற்கு 30 நாட்கள் ஆன காலம் கோரப்பட்டதன் காரணமாக பெறுகை குழுவினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. எனினும், இரண்டாவது ஆகக் குறைந்த கேள்விதாரால் சமர்ப்பிக்கப்பட்ட விலையினை விட 25,744.32 கேள்வி சமர்ப்பித்திருந்த ஐந்தாவது ஆகக் குறைந்த கேள்விதாரரினாலும் மருந்து வழங்கல் பிரிவிற்கு வழங்குவதற்காக இரண்டாவது ஆகக் குறைந்த கேள்வி சமர்பித்த கேள்விதாரால் இணங்கப்பட்டிருந்தது.

(ஈ) அதன் பிரகாரம் இரண்டாவது ஆகக்குறைந்த கேள்விதாரர் கேள்வி கையளிக்காமல் ஐந்தாவது Slim Pharmaceuticals (Pvt) Ltd இற்கு இந்த ரூபா 160,902,000 தொகை மேலதிகமாக செலுத்தியதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. அவ்வாறே கேள்வி கோரும் நிபந்தனையின் பிரகாரம் வழங்குனரால் மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதன் பிரகாரமும் கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

03. <u>Dried, Factor VIII fraction 200-350 IU (SR 00206101)</u>

ஹீமோபீலியா A உள்ள நோயாளர்களின் இரத்தத்தைப் உறைய வைத்து சிகிச்சையளிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற இந்த மருந்திற்காக 2021 இல் வருடாந்த தேவைக் கட்டளை மூலம் 85,000 தடுப்பூசிக் குப்பிகள் மற்றும் 2023 ஆம் ஆண்டின் அவசர கொள்வனவின் கீழ் 13,500 தடுப்பூசி குப்பிகள் என்பன அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின்

மூலம் கொள்வனவு செய்யும் பெறுகைகளுக்கு உரியதாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மருத்துவ வழங்கல் பிரிவின் 2021 ஆம் ஆண்டின் 2020 சனவரி 01 ஆந் திகதிய கட்டளை இலக்கம் 2021/SPC/N/C/P/00015 என்ற வருடாந்த தேவைக் கட்டளை மூலம் 85,000 தடுப்பூசிக் குப்பிகள் கொள்வனவு செய்வதற்குரிய Baxalta GmbH இற்கு அலகொன்று ஐ.அ.டொலர் 61 (ரூபா 11,407) இற்கு கொள்வனவு செய்வதற்கு பெறுகை கையளிக்கப்பட்ட போதிலும் நாணயக் கடிதம் திறப்பதற்கு முடியாமையால் உலக வங்கி உதவியின் மூலம் அந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த கொடுப்பனவுகள் தொடர்பாக 2022 ஏப்ரல் 21 ஆந் திகதி உலக வங்கி கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்த போதும் 1½ மாத தாமத காலத்தின் பின்னர் அதாவது 2022 யூன் 16 ஆந் திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு முதலாவது இருப்பான 24,969 அலகுகள் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறப்பட்ட கட்டளைகளுக்குரிய அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து 03 மாதங்கள் தாமதத்தில் இன்டென்டு விநியோகிக்கப்பட்டிருந்தது.

(இ) மேற்கூறப்பட்ட கட்டளையின் இரண்டாவது இருப்பிற்குரிய 60,031 தடுப்பூசிக் குப்பிகளில் 4,500 தடுப்பூசிக் குப்பிகள் 05 மாதங்களும் அதாவது 2023 யூலை 04 ஆம் திகதியும், 25,500 தடுப்பூசிக் குப்பிகள் 08 மாதங்களும் தாமதமாகி அதாவது 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதியும் வழங்கப்பட்டிருந்தது. மிகுதி 30,031 தடுப்பூசிக் குப்பிகளின் அளவு 2024 மார்ச் 07 ஆம் திகதி வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மேலே காண்பிக்கப்பட்ட பெறுகை குறைபாடுகளின் காரணமாக சராசரி கட்டளையின் கீழ் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தடுப்பூசி குப்பிகளின் கீழ் வழங்குவதற்கு குறித்துரைத்த வழங்கல் கால அட்டவணையின் பிரகாரம் வழங்குவதற்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக அவசர கொள்வனவுக்கு அனுப்புவதற்கு ஏற்பட்டிருந்ததுடன் 2023 மார்ச் 07 ஆந் திகதிய இலக்கம் 2023/SPC/E/C/P/00166 என்ற அவசர கட்டளையின் கீழ் 13,500 தடுப்பூசி குப்பிகள் அலகொன்று ரூபா 24,832.50 இற்கு ABC Pharma Services (Pvt) Ltd கம்பனியில் இருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலே காண்பிக்கப்பட்ட பெறுகை செயற்பாடுகள் தாமதத்தின் காரணமாக சராசரி கட்டளையின் கீழ் கொள்வனவு செய்ய முடியுமாக இருந்த விலையினை விட அவசர கொள்வனவிற்காக பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்ட 2023 மே 24 ஆந் திகதியில் ஐ.அ.டொலரின் பெறுமதி ரூபா 311.23 ஆக இருந்ததுடன் அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் கட்டளையின் பிரகாரம் இந்த மருந்து அலகொன்று அத் தினத்தில் (ஐ.அ.டொலர் 61 x ரூபா 311.23) ரூபா 18,985.03 ஆக இருந்தது. அதன் பிரகாரம் தடுப்பூசி குப்பி ஒன்றுக்காக ரூபா 5,847.47 மேலதிகமாக செலுத்தியதன் காரணமாக ரூபா 78,940,845 தொகை மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

04. <u>Phenytoin Sodium Injection 250mg / 5ml (SR 00303704)</u>

இந்த தடுப்பூசி 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் மருந்து தேவைகளுக்காக 2022 ஆம் ஆண்டிற்காக 08 கட்டளைகள் மற்றும் 2023 ஆம் ஆண்டிற்காக ஒரு கட்டளையாக மருத்துவ வழங்கல் பிரிவின் மூலம் மருந்தக கூட்டுத்தாபனம், மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவுகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கட்டளைகளில் 2022 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட 07 கட்டளைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியத்தில் 2021 திசெம்பர் 02 முதல் 2023 யூன் 15 வரை 05 சந்தர்ப்பங்களின் போது இந்த தடுப்பூசிகள் பற்றாக்குறையாக இருந்தது. இது தொடர்பாக கீழே காண்பிக்கப்படுகின்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இந்த மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான 34,000 மருந்து அலகுகள் 2021 பெப்ரவரி 23 ஆந் திகதிய இலக்கம் 2022/SPC/N/R/P/00003 என்ற சராசரி

கட்டளை 01 வருடம் 11 மாதங்களுக்குப் பின்னர் இரத்துச் செய்யப்பட்டு, 2022 நவம்பர் 30 ஆம் திகதிய சுகாதார அமைச்சு செயலாளரின் கடிதத்தின்படி அரச மருந்தக கூட்டுத்தாபனத்தில் கூட்டுமுயற்சியான Yaden Laboratories (Pvt.) Ltd மூலம் 24000 தடுப்பூசிகளை கொளவனவு செய்வதற்கு தீர்மானிக்கப்படடிருந்தது.

(ஆ) உரிய பிரகாரம் சராசரி கட்டளை அமுல்படுத்தாமையினால் அவசர தேவையின் அடிப்படையில் 2022/SPC/X/R/P/00589 என்ற இந்திய கடன் முன்மொழிவு திட்டத்தின் கீழ் இந்த மருந்துகளில் 25,000 அலகுகள் 2022 நவம்பர் 30 இல் உள்ளவாறு வழங்குவதற்காக கொள்வனவு கட்டளை 2022 செப்டம்பர் 09 ஆம் திகதி மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், ஆகக்குறைந்த கேள்விக்கு தடுப்பூசி அலகொன்று ஐ.அ.டொலர் 4.25 (இலங்கை ரூபாயில் அலகொன்று ரூபா 1,549.32) ampoule பெறுமதியில் கேள்வி கையளிப்பதற்று 2022 ஒக்டோபர் 06 பெறுகை அங்கீகாரம் கிடைத்திருந்தது. வழங்குனரின் NMRA மீண்டும் பதிவு சான்றிதழ் வழங்கவதற்கு தாமதம் அடைந்தமை மற்றும் இந்திய கடன் வசதிகளை பெற்றுக்கொள்வதில் தாமதம் அடிப்படையில் இருப்பு பெறவேண்டிய திகதியான 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் 03 மாதங்கள் தாமதமாகி 2023 மார்ச் 27 ஆம் திகதி களஞ்சியத்திற்கு இந்த தடுப்பூசி இருப்புக்கள் பெறப்பட்டிருந்தன.

(இ) 2022/SPC/N/R/P/00003 என்ற சராசரி கொள்வனவுக் கட்டளையிற்கு பதிலாக 2023/SPM/N/R/P/00044 என்ற கொள்வனவு கட்டளை 2022 நவம்பர் 02 ஆம் திகதி மருத்துவ வழங்கல் பிரிவினால் அரச மருந்தக உற்பத்தி கூட்டுத்தாபனத்திற்கு 24,000 தடுப்பூசி அலகுகள் 2023.01.01 மற்றும் 2023.03.01 திகதியின் போது 12,000 அலகுகள் வீதம் கொள்வனவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அரச மருந்தக உற்பத்தி கூட்டுத்தாபனத்தால் அந்த திகதியின் போது இந்த மருந்துகளை வழங்குவதற்கு தவறியிருந்ததுடன் அதற்கு 07 மாதங்களுக்கு பின்னர் அதாவது 2023 யூலை 07 ஆம் திகதி 24,000 அலகுகள் அலகொன்று ரூபா 4,600 இற்கு Yaden Laboratory நிறுவளத்தின் மூலம் கொள்வனவு செய்து வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) 2022 செப்டெம்பர் 23 ஆம் திகதி இந்திய கடன் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் கிடைத்த கட்டளைகளுக்கு உரிய மதிப்பீடு செய்யப்பட்ட மேற்கூறப்பட்ட மருந்தில் ஒரு ampoule அலகு ஐ.அ.டொலர் 4.25 இற்கு சமமான ரூபா 1542.32 பெறுமதியில் வெளிநாட்டு வழங்குனரான Ciron Drugs Pharmaceutical என்ற நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டு இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் அத்திகதியில் 1 1/2 மாதத்தின் பின்னர் அதாவது 2022 நவம்பர் 02 ஆம் திகதி அரச மருந்தக கூட்டுத்தாபனம் Yaden Laboratory நிறுவனத்தின் மூலம் இந்த மருந்தின் ஒரு ampoule மூலம் அலகொன்று ரூபா 4,600 என்ற விலையில் கொள்வனவு செய்வதற்காக கட்டளை இடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சிறிய கால இடைவீச்சியில் அந்நிய செலாவணி விகிதம் கணிசமான அலவு மாற்றமடையாதிருந்த சந்தர்ப்பத்தில் (2022.09.23 US$ 1 = Rs. 359.18, 2022.11.02 - US$ 1 = Rs. 360.71) மேற்கூறப்பட்டவைகளுக்கு இடையில் இறக்குமதி செய்யப்படுகின்ற அலகொன்றின் பெறுமதி மற்றும் உள்நாட்டு ரீதியில் அரச மருந்தாக்க கூட்டுத்தாபனம் (SPMC) ஊடாக கொள்வனவு செய்யப்படுகின்ற அலகொன்றின் விலைகளுக்கு இடையில் ரூபா 3,058 (4,600-1,542) வேறுபாடு காணப்பட்டது. அதன் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்ட விலையுடன் ஒப்பிடும் போது உயர்ந்த விலையில் அரச மருந்தக கூட்டுத்தாபனம் (SPMC) ஊடாக Yaden Laboratory இலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது இறக்குமதி விலையுடன் ஒப்பிடும்போது 198 சதவீதம் ஆக இருந்தது. அதன்படி சரியான பெறுகை வேலைத்திட்டம் ஒன்று காணப்படாததன் காரணமாக ரூபா 73,392,000 இந்த கொள்வனவுகளுக்காக மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மேலதிக கிரயமொன்றை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது.

05. <u>Thiamine Hydrochloride Injection 100mg/2ml Ampoule (SR 00402702)</u>

இந்த தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்காக 2021 முதல் 2023 வரை 06 கட்டளைகள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் 02 கட்டளைகள் முன்னால் சுகாதார அமைச்சு செயலாளரால் இரத்து செய்யப்பட்டிருந்தது. இந்த இரத்துச் செய்தலால் இது இரத்துச் செய்யப்பட்டதனால் 2021 ஒக்டோபர் 06 முதல் 2022 செப்டெம்பர் 20 வரை ஒரு வருடத்திற்கு அண்மிதத் காலம் மருந்து களஞ்சியத்தில் இந்த தடுப்பூசிகள் பூச்சியமாக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இந்த தடுப்பூசிகள் 2022ஆம் ஆண்டில் தேவைகளுக்காக 2021 பெப்ரவரி 27 ஆம் திகதிய இலக்கம் 2022/SPC/N/R/P/00042 என்ற சராசரிக் கட்டளை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் அது தொலைந்தமையின் அடிப்படையில் ஒரு வருடத்தின் பின்னர் 2022 மார்ச் 01 ஆம் திகதி மீண்டும் கட்டளை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் காணாமல் போன கட்டளை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் மருந்து பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது.

(ஆ) மீண்டும் இந்தக் கட்டளை இலக்கத்திலேயே 2022 மார்ச் 01 ஆம் திகதி கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் தடுப்பூசி 220,000 அலகுகளை கொள்வனவு செய்வதற்காக ஆகக் குறைந்த கேள்வி சமர்ப்பித்த m/s Ciron Drugs and Pharmaceauticals (Pvt) Ltd நிறுவனத்திற்கு அலகொன்று ஐ.அ. டொலர் 0.149 இற்கு (ரூபா 41.72) இற்கு சமமான மொத்த பெறுமதி ஐ.அ. டொலர் 32,780 இற்கு ஒப்பந்தம் 2022 யூலை 05 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்தது.

(இ) எவ்வாறாயினும் முன்னர் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் மூலம் கொள்வனவின் அடிப்படையில் 2022 நவம்பர் 30 ஆம் திகதிய சுகாதார செயலாளரின் கடிதத்தின் மூலம் இந்த சராசரிக் கட்டளை இரத்துச் செய்யப்பட்டு இந்த சராசரிக் கட்டளை கையளித்து 07 மாதங்களுக்குப் பின்னர் 2023 பெப்ருவரி 15 ஆம் திகதி அலகொன்று ரூபா 175 விலையில் அரச மருந்தக உத்பத்திக் கூட்டுத்தாபனத்தின் கூட்டுமுயற்சியான Yaden International மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2022 ஆம் ஆண்டிற்குரிய இலக்கம் 2022/SPC/N/R/P/00042 என்ற கட்டளை மூலம் ரூபா 41.72 விலையில் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கான இயலுமை காணப்படும் போது அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்குரிய கூட்டு முயற்சியான Yaden International நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானித்து 2023 ஆம் ஆண்டின் தேவையான சராசரி கட்டளை இலக்கம் 2023/SPM/N/R/P/00041 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தடுப்பூசி இருப்புக்கள் 2023 சனவரி 02 ஆம் திகதி கோரப்பட்ட போதும் அதில் ஒன்றரை மாதங்களுக்குப் பின்னர் தடுப்பூசிகளில் 149,240 அலகுகள் அலகொன்று ரூபா 175 வீதமும், 2023 செப்டெம்பர் 24 ஆந் திகதி மிகுதி தடுப்பூசிகளின் 50,760 அலகுகள் 09 மாதங்களுக்குப் பின்னர் ரூபா 250 வீதம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2022 ஆம் அண்டிற்காக தேவையான தடுப்பூசிகள் 2023 ஆம் ஆண்டின் போது மருத்து வழங்கல் பிரிவின் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது.

(உ) சராசரி கட்டளை உரிய பிரகாரம் அமுல்படுத்தப்பாடாமையின் அடிப்படையில் 2022 யூன் 28 ஆம் திகதியில் இலக்கம் 2022/SPC/E/R/P/00479 என்ற அவசர கொள்வனவு கட்டளையின் கீழ் தடுப்பூசிகள் 1 அலகு ரூபா 177 வீதம் தடுப்பூசிகள் 33 000 அலகுகள் 2022 செப்டம்பர் 19 ஆம் திகதி பெறுகை மேற்கொண்டு கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகக்குறைந்த கேள்வி சமர்பித்த கேள்விதாரருக்கு தடுப்பூசி வழங்குவதற்காக 06 வார காலம் எடுத்ததன் அடிப்படையில் தேசிய மருந்தக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு சான்றிதழ் இன்றி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு

நிராகரித்த Yaden Laboratories என்ற நிறுவனத்திற்கு 2022 ஆகஸ்ட் 30 ஆம் திகதி அவசர பெறுகைக் குழு தீர்மானத்தின்படி 05 நாட்களுக்குள் 33,000 அலகு Ampoules மருந்துகள் அலகொன்று ரூபா 177 மொத்த பெறுமதியில் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அந்த தடுப்பூசிகள் 2022 செப்டம்பர் 16 ஆம் திகதி களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது.

(ஊ) அவசர பெறுகைகளின் கீழ் Yaden International இனால் 05 நாட்களில் வழங்குவதற்கு உத்தரவாதம் இனங்கப்பட்ட இந்த அவசர பெறுகைகளுக்காக 09 நாட்கள் மேலதிகமாக எடுத்து தடுப்பூசிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் தேசிய மருந்து தரச் சான்றிதழ் ஆய்வுகூடம் (NMQAL) மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவில் முறையே 2023 ஏப்ரல் 06 மற்றும் 2023 ஏப்ரல் 25 ஆம் திகதியில் கடிதம் மூலம் மொத்த தடுப்பூசி தொகுதியும் பயன்பாட்டிலிருந்து அகற்றுமாறு பெறப்பட்டிருந்த போதிலும் 2023 ஏப்ரல் 06 வரையிலும் தரமின்றிய இந்த தடுப்பூசிகளின் மொத்த இருப்பும் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது.

(எ) அவ்வாறே இலக்கம் 2022/SPC/N/R/P/00042 என்ற கட்டளையின் பிரகாரம் தடுப்பூசி அலகொன்று ஐ.அ.டொலர் 0.149 (ரூபா 41.72) விலையில் வழங்குவதற்கு வழங்குனர் இணங்கியிருந்த போது அது இரத்துச் செய்யப்பட்டு இலக்கம் 2022/SPC/N/R/P/000479 என்ற கொள்வனவுக் கட்டளையின் பிரகாரம் ஐ.அ.டொலர் 0.49 இற்கு சமமான ரூபா 177 இற்கு வேறொரு வழங்குனருக்கு அவசர கட்டளை வழங்குதல் மற்றும் இலக்கம் 2022/SPC/N/R/P/00042 என்ற கட்டளை இரத்துச் செய்யப்பட்டு அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் கூட்டு முயற்சியான Yaden International நிறுவனத்தின் மூலம் கொள்வனவு செய்வதற்காக 2022 நவம்பர் 01 ஆந் திகதிய இலக்கம் 2022/SPM/N/R/P/00041 என்ற கொள்வனவுக் கட்டளை மேற்கூறப்பட்ட 02 நிறுவனங்களுக்கு வழங்கியதன் மூலம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு ரூபா 34,527,550 இனங்காணக்கூடிய நட்டமொன்றை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஏ) 2022/MSD/V/R/P/00085 என்ற கட்டளையின் கீழ் அவசர கொள்வனவின் அடிப்படையில் 100,000 அலகுகள் கொள்வனவு செய்வதற்கு இந்திய கடன் முன்மொழிவு திட்டத்தின் கீழ் மிகுதி பணத்தை பயன்படுத்தி அவசர பெறுகைகளை மேற்கொள்வதற்காக விருப்பம் தெரிவிக்கும் அழைப்பின் மூலம் குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குனருக்கு பதிவிலிருந்து விடுவிக்கும் சான்றிதழின் (WOR) அடிப்படையில் அலகொன்று ஐ.அ.டொலர் 0.045 மற்றும் மொத்த பெறுமதியில் ஐ.அ.டொலர் 4,500 பெறுமதியில் கையளிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும், 2022 நவம்பர் 30 இல் முன்னாள் சுகாதார செயளாலரால் அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கூட்டு முயற்சியின் மூலம் மருந்து வழங்கப்படுவதாக அறிவித்து கட்டளை இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(ஐ) 2021 ஒக்டோபர் 06 முதல் 2022 செப்டம்பர் 16 வரை தடுப்பூசிகள் பற்றாக்குறையால் அவற்றை உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தா என்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஒ) மேலும், 2022/SPC/X/R/P/00274 கட்டளையின் கீழ் அவசர தேவையின் அடிப்படையில் இந்திய கடன் முன்மொழிவு திட்டத்தின் கீழ் 400,000 தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்காக 2022 ஏப்ரல் 30 இன் தேவையின் அடிப்படையில் 2022 மார்ச் 24 ஆம் திகதி கட்டளை அரசாங்க மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும், அதற்குரிய மருந்து இருப்பு 2023 பெப்ரவரி 17 மற்றும் 25 என்ற தினங்களில் அதாவது கட்டளையிடப்பட்ட திகதியில் இருந்து 11 மாதத்திற்கு பின்னர் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்தது. அதன்

பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவில் 2022 ஆம் ஆண்டில் தேவையினை வழங்குவதற்கு முடியாதிருந்தது.

06. <u>Fentanyl Citrate Injection 100mcg in 2ml ampoule மருந்து (SR 00000301)</u>

சத்திர சிகிச்சைகளின் நோவினை குறைப்பதற்காக அபாயகர (Narcotic) மருந்தாக பயன்படுத்தப்படுகின்ற மருந்து தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2022 இன் சராசரி வருடாந்த கட்டளை தயாரிக்கப்படாதிருந்ததுடன், இந்திய கடன் உத்தேச திட்டத்தின் கீழ் 720,000 மருந்து அலகுகளுக்காக 2022/SPC/X/R/P/00287 என்ற கட்டளை மருத்துவ வழங்கல் பிரிவினால் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அந்த கட்டளையின் முதலாவது இருப்பான 360,000 அலகுகளின் அளவு வழங்குனரால் 2022 நவம்பர் 28 ஆம் திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், இருப்பு 06 மாத காலத்திற்காக போதுமானதாக இருந்தது.

(ஆ) 2021 ஆம் ஆண்டிற்குரிய மேலதிக கட்டளையாக அலகொன்று ரூபா 52.70 விலையில் 187,500 அலகுகளின் கட்டளை Yichang Humanwell Pharmaceuticals Co Ltd என்ற சீன கம்பனிக்கு 2022 நவம்பர் 16 ஆந் திகதி அனுப்பப்பட்ட போதிலும் அந்த கட்டளைக்குரிய இருப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்கூறப்படட "அ" "ஆ" என்ற அவதானிப்புக்களின் பிரகாரம் இந்த மருந்துகள் 2022 திசெம்பர் முதல் 2023 மே வரை பற்றாக்குறையின்றி இருந்தமை மற்றும் அவசர கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு அனுப்பியதன் தேவை காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் சுகாதார பிரிவின் அவசர பெறுகைக் குழுவினால் 180,000 அலகுகள் கொள்வனவு செய்தல் 2022/SPC/E/R/P/00735 என்ற கட்டளையை அமுல்படுத்தி 2022 திசெம்பர் 09 ஆந் திகதி பொருள் அனுப்பல் கோரிக்கை அலகொன்று ரூபா 162.50 விலையில் மேற்கூறப்பட்ட சீனக் கம்பனிக்கு அனுப்பப்பட்டிருந்தது. அந்த மருந்து இருப்புக்கள் 2023 ஏப்ரல் 04 ஆம் திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகள் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதியான 2023 சனவரி 13 ஆம் திகதியை விஞ்சி 80 நாட்கள் தாமதித்து வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் அண்ணளவாக ரூபா 19,767,000 ஆகும்.

(ஈ) 2023 ஆம் ஆண்டிற்காக 07 மாதங்கள் தாமதித்து சமர்ப்பிக்கப்பட்ட /2023SPC/N/R/P/00037 என்ற கட்டளை மூலம் 300,000 அலகுகளின் தேவையொன்று கோரப்பட்டிருந்ததுடன் அந்த கட்டளை ரூபா 42.12 ஆன ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த 2021 ஆம் ஆண்டின் மேலதிகக் கட்டளை மற்றும் 2022 ஆம் ஆண்டின் அவசர கட்டளை வழங்கப்பட்ட Yichang Humanwell Pharmaceuticals Co Ltd என்ற சீன மருந்து உற்பத்திக் கம்பனிக்கு வழங்குவதற்கு 2023 பெப்ரவரி 09 ஆம் திகதி அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் பிரதேச பெறுகைகள் குழு தீர்மானித்திருந்தது. அவ்வாறு இருக்கும் போது 2023 பெப்ரவரி 22 ஆம் திகதி சுகாதார அமைச்சின் செயலாளரால் இலக்கம் SH/Misc/03/2022 என்ற கடிதம் மூலம் இந்தக் கட்டளைக்கு இரண்டாவது அதிக விலையான ரூபா 184 சமர்ப்பித்த கேள்விதாரரான Yaden Laboratories)pvt(Ltd நிறுவனம் இந்த மருந்தை உள்ளடக்கிய மேலும் 09 மருந்துகள் உள்நாட்டு ரீதியில் உற்பத்தி வழங்கக்கூடியதாக இயலுமையில் காணப்படுகின்றமையினால் மற்றும் அந்த உற்பத்தியில் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுசெய்திருந்தமையால் மேற்கூறப்பட்ட மருந்துகளை உள்ளடக்கிய மேலும் 09 மருந்துகளுக்குரிய தற்போதைய கட்டளையை இரத்துச் செய்யுமாறும் எதிர்காலத்தில் அந்த மருந்துகளுக்காக கூறுவிலை கோருதலை தவிர்க்குமாறும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் இந்த கட்டளை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எனினும் சுகாதார அமைச்சின்

செயலாளரால் மேற்கூறப்பட்ட கடிதம் விநியோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையில் இந்த உள்நாட்டு மருந்து உற்பத்தி தனியார் நிறுவனமான Yaden Laboratories (pvt) Ltd தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையில் பதிவு செய்யாதிருந்ததுடன் Good Manufacturing Practices Inspection (GMP) அறிக்கை மாத்திரம் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையிலிருந்து பெறப்பட்டிருந்தது. இந்த GMP அறிக்கை பெற்றுக்கொள்ளல் இந்த மருந்திற்காக NMRA சான்றிதழ் பெற்றுக்கொள்ளுமாறு தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் கவனத்திற்கொள்ளாமையினால் சுகாதார அமைச்சின் செயலாளரால் இந்த உள்நாட்டு மருந்து உற்பத்தி தனியார் நிறுவனம் இந்த மருந்துகளை உள்ளடக்கிய மேலும் 09 மருந்துகளை உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்து வழங்கக்கூடிய இயலுமை காணப்படுவதாகவும் மற்றும் அந்த உற்பத்தியில் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்துள்ளமையாலும் தமது கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பிழையான விடயங்கள் காண்பிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப் பட்டது.

(உ) இவ்வாறு 2023 ஆம் ஆண்டில் கட்டளை அலகொன்று ரூபா 42.12 விலையில் பெற்றுக் கொள்ளக்கூடிய இயலுமை காணப்படும் போது உள்நாட்டு வழங்குநரிடமிருந்து மருந்துகள் மற்றும் மருத்துவ வழங்கல்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை தீர்மானிக்கின்ற விலைக்குழுவினால் உள்நாட்டு ரீதியில் மருந்து உற்பத்தி செய்யும் தனியார் நிறுவனத்திற்கு இந்த மருந்தின் அலகொன்றிற்காக 418 சதவீத அதிகரித்த விலையுடன் ரூபா 218.83 விலை வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த விலைத் தீர்மானத்திற்கு உரித்தான கிரய பதிவேடு மற்றும் அதில் உள்ளடக்கப்பட்ட கிரய முரண்களை உறுதிப்படுத்தி சுங்க ஆவணங்கள் மற்றும் அடிப்படை மூல ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) அதன் பிரகாரம் 2023 பெப்ருவரி வரையிலும் மருந்து வழங்குவதற்காக தயார் நிலையில் இருக்காத Yaden Laboratories (pvt) Ltd நிறுவனத்திற்கு இந்த மருந்து உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்து வழங்கக்கூடிய இயலுமை உள்ளதாகக் காண்பித்து அது வரையில் அலகொன்று ரூபா 42.12 ஆகக் குறைந்த விலையில் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட /2023SPC/N/R/P/00037 என்ற கட்டளை இரத்துச் செய்யப்பட்டமையால் அரசாங்கத்திற்கு செலவிட வேண்டி ஏற்பட்டிருந்த மேலதிக கிரயம் ரூபா 53,013,000 ஆகும்.

07. <u>Vancomycin Injection 500mg (SR 00103501)</u>

இந்த மருந்தில் 2021 முதல் 2024 ஆம் ஆண்டில் கிடைத்த கட்டளைகளுக்குரிய 398,000 தடுப்பூசிக் குப்பிகள் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 45,849,123 ஆன கொடுப்பனவு கோரிக்கை (வரவுத்தாள்) மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விநியோகிக்கப் பட்டிருந்தது. இந்த வழங்கல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மருத்துவ வழங்கல் பிரிவில் 2022 நவம்பர் 03 ஆந் திகதிய இலக்கம் 2022/SPC/E/C/P/00731 என்ற அவசர கட்டளை மூலம் இரண்டாவது ஆகக் குறைந்த விலையாக தடுப்பூசி குப்பி ஒன்று ரூபா 575 ஆக சமர்ப்பித்த Slim Pharmaceuticals ற்கு தடுப்பூசி குப்பி 48,000 அலகுகளை கொள்வனவு செய்வதற்கு 2022 நவம்பர் 21 ஆந் திகதி அமைச்சரவை அவசர பெறுகை குழு மருத்துவ வழங்கல் பிரிவின் இருப்பு பூச்சியமாக இருந்ததாக குறிப்பிட்டு கட்டளை கையளிக்கப்பட்ட போதிலும் 2022 நவம்பர் 16 ஆந் திகதி நன்கொடையாக 20,000 அலகுகளும், 2021 ஆம் ஆண்டில் சராசரி கட்டளையின் கீழ் 70,000 அலகுகளும் 2022 நவம்பர் 23 ஆந் திகதி கிடைத்திருந்தது. மேலும் 2022 திசெம்பர் 15 ஆந் திகதியில் உள்ளவாறு இந்த மருந்தின் மாதாந்த தேவை 18,977 அலகுகளாக இருந்தமை ஸ்வஸ்ட முறைமையின் தரவுகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. எனினும் இந்த அவசர கட்டளைக்குரிய 2023 சனவரி 03 ஆந் திகதி பொருள்

அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த பொருள் அனுப்பல் கோரிக்கைக்குரிய 47,000 அலகுகள் 30 நாட்கள் மற்றும் 1,000 அலகுகள் 02 மாதங்கள் 05 நாட்கள் தாமதத்துடன் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மேலும் 2021 ஆம் ஆண்டில் சராசரி கட்டளையின் கீழ் ஐ.அ.டொலர் 0.53 (மருந்து இருப்புக்கள் விடுவிப்புச் செய்யப்பட்ட 2022 நவம்பர் 23 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் ரூபா 371.76 ஆக இருந்ததுடன் அதன் பிரகாரம் தடுப்பூசி குப்பி ஒன்று ரூபா 197.03 ஆகும்.) விலையில் கொள்வனவு செய்யப்பட்ட தடுப்பூசிகள் அவசர கொள்வனவின் கீழ் ரூபா 575 விலையில் கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்டதன் மூலம் 48,000 தடுப்பூசி குப்பிகளுக்காக ரூபா 18,142,560 மேலதிக கிரயம் ஒன்று செலவிடப்பட்டிருந்தது.

(இ) மருத்துவ வழங்கல் பிரிவினால் தேவையினை சரியாக இனங்கண்டு இருப்புக்கள் கட்டளை யிடப்படாமையின் காரணமாக சராசரிக் கட்டளையின் கீழ் ரூபா 197.03 விலையிலும், அவசர கொள்வனவின் கீழ் ரூபா 575 விலையிலும் கொள்வனவு செய்யப்பட்ட தடுப்பூசிகள் பல்வேறு வைத்தியசாலைகளினால் தடுப்பூசி ஒன்று ரூபா 1,100 முதல் ரூபா 1,644 உயர்ந்த விலை வீச்சில் 400 தடுப்பூசிக் குப்பிகள் ரூபா 467,200 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

08. <u>Decarbazine injection 200 mg Vial (SR - 01203301)</u>

இணையதளத்தில் காண்பிக்கப்படுகின்ற தகவல்களின் பிரகாரம் Decarbazine பெயருடைய இந்த மருந்துக்குரியதாக எல்கைமென்ட் செயற்பாடாக அறிமுகப்படுத்தப்படுகின்ற மருந்து தொகுதியாகும். அதனால் அதனை மூடிய முறைமையில் புற்றுநோய் மற்றும் மரணத்தை ஏற்படுத்தும் மேலோனோமா (புற்றுநோய் வகையைச் சேர்ந்த) இற்காக சிகிச்சை அளிப்பதற்காக பயன்படுத்தப்படுவதுடன் மருத்துவர்களினால் தீர்மானிக்கப்படுகின்ற வேறு முறையில் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கும் பயன்படுத்த முடியும்.

(அ) 1,500 அலகுகளை கொள்வனவு செய்வதற்கான இலக்கம் 2022/SPC/V/R/P/00690 என்ற கட்டளை விநியோகிக்கப்பட்டதுடன், அந்த கட்டளை இருக்கும் போது அதற்கு பதிலாக இலக்கம் 2022/MSD/V/R/P/00074 என்ற கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த கட்டளைக்குரிய கோவையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், கணக்காய்வு திகதி வரையிலும் மேற்கூறப்பட்ட கட்டளை இரண்டும் ஸ்வஸ்ட முறைமையில் விநியோகிக்கப்பட்ட கட்டளையாக காண்பிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 3,500 அலகுகள் 2022 இன் சராசரி கட்டளை திணைக்கள பெறுகைக் குழு எல்லையில் சர்வதேச போட்டியாளர் முறைமையில் கேள்வி கோருவதற்கு பெறுகைக் குழு தீர்மானித்திருந்தது. கட்டளை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்காக 17 நாட்களும் கேள்வி கோருவதற்காக 04 மாதங்களுக்கு மேற்பட்ட காலமும் எடுத்திருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் தெரிவு செய்தற்கு உரிய பரிந்துரை முறையாகவும் குறித்துரைத்த ரீதியிலும் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறே மதிப்பீட்டு அறிக்கையின் படி உரிய அங்கத்தவரின் பெயர் குறிப்பிடப்படாமல் கையொப்பிமிடப்பட்டிருந்தது. பெறுகைக் குழு அலகொன்றின் விலை ரூபா 1,480 இன் கீழ் செல்லுபடியான பதிவு சான்றிதழ் பெற்றுக் கொள்வதன் கீழ் Esses Pharmacy (Pvt) Ltd நிறுவனத்திற்கு கட்டளை கையளிப்பதற்கு தீர்மானித்திருந்தது. இந்த தீர்மானம் எடுப்பதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் கூட்டத்தில் இருந்து 82 நாள் காலம் எடுத்திருந்தது. வழங்குனரால் அந்நிய செலாவணி மாற்று விகிதாசார மாற்றத்தின் அடிப்படையில் இந்த கட்டளை வழங்க முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. உரிய வழங்குனரிடம் இருந்து கட்டளை உரிய பிரகாரம் கையேற்கப்படாமை தொடர்பாக 05 மாத காலம் எடுக்கும் வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்தமை கோவையை பரிசோதித்த போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே ரூபா 518,000 ஆன செயலாற்றல் காப்புறுதியும் காலாவதியாகியிருந்தமையால் வழங்குனரிடம் இருந்து உரிய கட்டளை

குறித்துரைத்த பிரகாரம் கிடைக்காமைக்காக இழப்பினை மீளழிப்பு செய்து கொள்வதற்கு முடியாதிருந்தமையும் இது தொடர்பாக பெறுகைக் குழு தமது பொறுப்பில் இருந்து நீக்க முடியாதிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) பெறுகைக் குழுவினால் மேலே கூறப்பட்ட கட்டளை இரத்துச் செய்வதற்கும் மீண்டும் கேள்வி கோருவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பதிவு மற்றும் முன்னைய வழங்குனரிடம் இருந்து கேள்வி கோரப்பட்டிருந்தது. ஆரம்ப கட்டளை இரத்துச் செய்வதற்கு 37 நாட்கள் காலமும், கட்டளை இரத்துச் செய்ததன் பின்னர் மீண்டும் கேள்வி கோருவதற்கு 55 நாள் காலமும் எடுத்திருந்தது, அலகொன்றுக்கு ரூபா 1,480 விலையில் வழங்குவதற்கு ஆரம்ப சந்தர்ப்பத்தில் இணங்கிய, பின்னர் மருந்து வழங்க முடியாததாக காண்பித்த கட்டளை கைவிடப்பட்டுள்ள வழங்குநரான The Esses Pharmacy (Pvt) Ltd நிறுவனம் அலகொன்று ரூபா 2,200 தொகையில் மீண்டும் கேள்வி சமர்ப்பித்திருந்தது. இந்த நிறுவனத்தின் செயலாற்றல் பிணைமுறி கையேற்று கறுப்பு பட்டியலில் இடவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இரண்டாவது தடவை கேள்வி கோரும் போது அலகொன்று ஐ.அ.டொலர் 2.65 இற்கு மருந்து வழங்குவதற்கு இணங்கிய புதிய வழங்குநரான United Bio Tech நிறுவனத்திற்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவை புதுப்பிப் பதன் கீழ் தெரிவு செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்த கட்டளை தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் கணக்காய்வு திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. எனினும் ஸ்வஸ்த்த முறைமையின் பிரகாரம் இந்தக் கட்டளை முதலாவது கேள்வி கோரலில் இரத்துச் செய்யப்பட்ட The Esses Pharmacy (Pvt) Ltd நிறுவனத்தின் பெயரில் கிடைக்க வேண்டிய மருந்தாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2022 இன் சராசரி கட்டளை அமுல்படுத்தப்படாத பின்புலத்தில் அவசர கட்டளையாக இலக்கம் 2022/SPC/E/R/P/00744 என்ற கட்டளையின் பிரகாரம் 1,500 தடுப்பூசி அலகுகளை வழங்க வேண்டியிருந்தது. திணைக்கள பெறுகைக் குழு பதிவு செய்த மற்றும் முன்னைய வழங்குனரிடம் இருந்து கேள்வி கோருவதற்கு பெறுகைக் குழு தீர்மானித்திருந்தது. மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் முறையான மற்றும் குறித்துரைத்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், உரிய அங்கத்தவர்களின் பெயர் குறிப்பிடப்படாமல் கையொப்பமிடப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 30 ஆந் திகதி பெறுகைக் குழு இந்த கேள்விகளுக்கு இடையே அலகொன்றின் விலை ஐ.அ.டொலர் 5.00 சமர்ப்பித்தல், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவை நீடிப்பதற்காக விண்ணப்பித்துள்ள United Bio Tech நிறுவனத்திற்கு உரிய பதிவை நீடிக்கும் சான்றிதழ் WOR சான்றிதழ் பெற்றுக் கொள்வதன் கீழ் இந்த கட்டளை கையளிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டியுருந்தது. அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் முகாமையாளரால் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட இந்த மருந்து இருப்பு நிராகரிக்கப்படுவதாகவும், சரியான தரவு அறிக்கை மற்றும் வெப்ப நிலை பிரச்சினைகளின் காரணமாக இருப்பு கையேற்பதற்காக சான்றிதழ் சமர்ப்பிப்பதற்கு தேவையாக இருந்ததாகவும், அந்த விடயங்கள் வழங்குனருக்கு அனுப்பப்படும் இடத்து சான்றுதழுடன் தரவு தெளிவாக்கும் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையும் அந்த ஆவணங்களை கவனத்தில் கொண்டு இந்த கட்டளையை ஏற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த மருந்து இருப்பு 2023 மே 08 ஆந் திகதி கிடைத்திருந்தது. இந்த முகாமையாளருக்கு இவ்வாறான தொழில்நுட்ப விடயம் ஒன்று தொடர்பாக பரிந்துரை வழங்குவதற்கு முறையான பிரகாரம் பரிந்துரை ஒன்றை வழங்குவதற்கு முறையான பிரகாரம் அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்தா என்பது பிரச்சினைக்குரியதாக இருந்ததுடன், இந்த விடயம் தொடர்பாக ஆய்வு கூட அறிக்கையொன்றை பெற வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. மனிதர்களை முறைமையில் புற்றுநோய் மற்றும் மரணத்தை ஏற்படுத்தும் மெலனோமா (புற்றுநோய் வகையை சேர்ந்த) சிகிச்சை அளிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற

இவ்வாறான மருந்து களஞ்சிய வெப்பநிலை தொடர்பாக மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டியிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) 2023 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளை 2022 சனவரி மாதத்தின் போது வழங்க வேண்டிய போதும், 2022 யூன் 01 ஆம் திகதியில் உள்ளவாறு உரிய தயாரிக்கப்பட்ட கட்டளை கட்டுப்பாட்டு பத்திரத்தின் பிரகாரம் 6000 அலகுகள் கட்டளையிட வேண்டியிருந்த போதிலும் இலக்கம் 2023/SPC/N/C/P/00081 என்ற கட்டளையின் கீழ் 3,000 அலகுகள் 11 மாதங்கள் அளவிலான தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கீழ் பதிவு செய்த வழங்குனரிடம் இருந்து கேள்வி கோருவதற்கு பெறுகைக் குழு தீர்மானித்திருந்தது. மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் முறையான மற்றும் குறித்துரைத்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், உரிய அங்கத்தவர்களின் பெயர் குறிப்பிடப்படாமல் கையொப்பமிடப்பட்டிருந்தது. பெறுகைக் குழுவினால் கட்டளைகளுக்கு இடையே ஆகக் குறைந்த கூறுவிலையான ரூபா 1,478.99 சமர்ப்பித்த United Bio Tech நிறுவனத்திற்கு பதிவினை புதுப்பித்துக் கொள்வதன் கீழ் இந்த கட்டளை கையளிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது, கட்டளை விநியோகித்து கேள்வி மதிப்பீட்டிற்காக 120 நாட்களுக்கு அண்மித்த காலம் எடுத்திருந்ததுடன், பெறுகை மதிப்பீட்டு செயற்பாடுகளின் பின்னர் கட்டளை கையளிப்பதற்காக 40 நாட்களுக்கு அண்மித்த காலம் எடுத்திருந்தது. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவினை புதுப்பித்துக் கொள்வதன் கீழ் இந்த கட்டளை கையளிக்கப்பட்ட போதிலும், புதுப்பிக்கப்பட்ட அந்த சான்றிதழ் கோவையில் உள்ளடக்கப்படாதிருந்த போதிலும் 2023 ஒக்டோபர் 11 ஆந் திகதி இந்த மருந்துகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஊ) 2023 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளையில் 3,000 அலகுகள் மாத்திரம் விநியோகிப்பதற்கு தீர்மானித்ததன் காரணமாக மருந்துவ வழங்கல் பிரிவினால் இலக்கம் 2023/SPC/E/R/P/00143 என்ற 1,500 அலகுகளுக்கு கட்டளை மீண்டும் விநியோகிக்கப்பட்டிருந்தது. பெறுகைக் குழுவினால் இந்த கட்டளைக்காக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்த அலகொன்று ரூபா 12,800 திருத்தப்பட்ட விலை சமர்ப்பித்த Yaden International (Pvt) Ltd என்ற வழங்குனர் பதிவு செய்யப்பட்டிருந்தார். 2023 யூன் 30 ஆம் திகதி வழங்க வேண்டிய இந்த மருந்து இருப்புக்கள் 2023 நவம்பர் மாதம் கணக்காய்வு திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஸ்வஸ்ட முறைமையின் பிரகாரம் இந்தக் கட்டளை பெற வேண்டிய கட்டளையாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் இந்த கட்டளைக்கு முன்னர் அண்மித்ததாக மேற்கொள்ளப்பட்ட 2023/SPC/N/C/P/00081 இன் கீழ் அலகொன்றின் விலை ரூபா 1,478 ஆக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் கவனம் செலுத்தியிருக்கவில்லை. 23 நாட்களில் 780 சதவீதத்திற்கு மேற்பட்ட விலை அதிகரிப்பின் கீழ் வழங்குனரைத் தெரிவு செய்தல் மற்றும் பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த விலை எண்ணிக்கையின் கீழ் கட்டளை அமுல்படுத்தப்படுமாயின் ரூபா 16,983,000 நீதி ரீதியான நட்டத்தை அரசாங்கத்திற்கு செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது.

(எ) மேற்கூறப்பட்ட கட்டளைக்கு மேலதிகமாக இலக்கம் 2023/SPC/T/R/P/00146 என்ற 1,000 அலகுகளின் கட்டளை மருத்துவ வழங்கல் பிரிவில் 2023 பெப்ரவரி 02 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. பெறுகைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு நியமிக்கப்படாதிருந்ததுடன், மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தில் பிரிவில் மேலதிக செயலாளரால் நியமிக்கப்பட்ட விலைக் குழுவினால் இந்த விலையில் பெற்றுக் கொள்வதற்காக பிரிவில் மேலதிக செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. விலை குழு நியமிப்பதற்காக மேலதிக செயலாளருக்கு கிடைத்த அதிகார பலம் கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. கூறுவிலை சமர்ப்பிப்பதற்காக 02 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், மிகுதி நடவடிக்கைகளை பூர்த்தி செய்து

பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிப்பதற்காக 61 நாட்கள் எடுத்திருந்தது. அதன் பிரகாரம் இந்த அவசர கேள்வி சமர்ப்பிப்பதற்கு வழங்கப்படுகின்ற கால எல்லை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வழங்குனரான Yaden International (Pvt) Ltd இற்கு சமர்ப்பித்த ரூபா 13,000 அலகொன்றின் விலை ரூபா 7,000 வரை குறைத்து பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட அண்மித்த பெறுகையின் பிரகாரம் அலகொன்றின் விலை ரூபா 1,478 ஆக இருந்ததுடன் ரூபா 7,000 என்ற விலையுடன் ஒப்பிடும் போது 374 சதவீதம் அளவிலான அதிகரிப்பாகும். இந்த இருப்பு 2023 யூலை 11 ஆந் திகதி கிடைத்திருந்ததுடன் இவ்வாறு அதிக விலையில் மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 5,522,000 நிதி ரீதியான நட்டம் ஒன்றை அரசாங்கத்திற்கு செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. இந்த பெறுகை தீர்மானத்திற்காக அமைச்சரவையின் மேவுகை அங்கீகாரம் பெறப்பட்டமை அல்லது பெறுகைகள் குறித்துரைத்ததாக மேற்கொள்ளப்பட்டமை பிரதான உள்ளக கணக்காய்வாளர் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது சான்றுகளோ கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஏ) இலக்கம் 2023/SPC/X/R/P/00191 என்ற 4,500 அலகுகளின் கட்டளை தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் இருந்து பெறப்பட்ட செல்லுபடியான பதிவு சான்றிதழை பெற்றுக் கொள்வதன் கீழ் கட்டளை George Steuart Health (Pvt) Ltd நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், சுகாதார பிரிவு அவசர பெறுகைக் குழுவினாலும் இந்த நிறுவனம் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த நிறுவனத்தால் ரூபா 1,945.39 ஆக சமர்ப்பிக்கப்பட்ட அலகொன்றின் விலை ரூபா 1,945 வரை 39 சதவீதத்தால் குறைப்பதற்கு இணங்கியிருந்ததுடன், செயலாற்றல் பிணை முறியும் பெறப்பட்டிருக்கவில்லை. கூறுவிலை சமர்ப்பிப்பதற்காக 02 நாட்கள் வழங்கியிருந்ததுடன், மிகுதி நடவடிக்கைகள பூர்த்தி செய்து பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிப்பதற்காக 90 நாட்கள் எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த அவசர கேள்வி சமர்ப்பிப்பதற்கு திட்டமிடுவதற்கு வழங்குகின்ற கால எல்லையில் மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. இந்த பெறுகை தீர்மானத்திற்காக அமைச்சரவை மேவுகை அங்கீகாரம் பெறப்பட்டமைக்கோ அல்லது பெறுகைகள் குறித்துரைத்த பிரகாரம் மேற்கொள்ளப்பட்டமைக்கோ பிரதான உள்ளக கணக்காய்வாளர் சான்றுதழை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது சான்றுகளோ கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மருந்தின் ஆயட் காலம் 24 மாதங்கள் என குறிப்பிடப்பட்ட போதிலும், பொருள் அனுப்பல் கோரிக்கையில் அது 12 மாத காலமாக காண்பிக்கப்பட்டமை கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ஐ) மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்காக இந்த மருந்துகளுக்காக தேவையான இருப்பு அலகுகள் 6,000 ஆக எதிர்கூறப்பட்டிருந்த போதிலும் அதில் 3,000 அலகுகளுக்கு சராசரி கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. குறைவாகக் மருந்து கட்டளையிடப்பட்டதன் காரணமாக இவ்வாறு அவசர பெறுகை சந்தர்ப்பங்கள் இரண்டிற்கு அனுப்பவேண்டிய ஏற்பட்ட அதிகரித்த விலையில் கொள்வனவு செய்வதற்கு அனுப்பப்பட்டதன் காரணமாக மேலதிகமாக 5,500 அலகுகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 15,872,500 நிதி ரீதியான நட்டமொன்றை அரசாங்கத்தால் செலவிடப் பட்டிருந்தது.

(ஒ) 2024 ஆம் ஆண்டிற்காக சராசரி கட்டளையின் அளவை தீர்மானிப்பதற்காக கட்டளை கட்டுப்பாட்டு பத்திரமொன்று 2023 நவம்பர் 29 ஆம் திகதி வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்காக கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக தீர்மானத்திற்கு வந்திருக்கவில்லை. இந்த நிலைமையில் 2024 ஆம் ஆண்டின் போது அவசர கொள்வனவிற்காக அனுப்புவதற்கு மேற்கொள்ள வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஓ) 2023 நவம்பர் 21 ஆம் திகதியில் உள்ளவாறு இந்த மருந்தில் 25,020 அலகுகளை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தமை ஸ்வஸ்ட முறைமையில்

காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த அலகுகளின் எண்ணிக்கையை தயாரித்த முறை அந்த முறைமையில் இனங்காண்பதற்கு முடியாதிருந்தது.

09. <u>Fluconazole Capsule 50mg மருந்து (SR 00107101)</u>

பங்கசுத் தொற்றாளர்களுக்கான நுண்ணுயிர் எதிர்ப்பு மற்றும் தேவையின் அடிப்படையில் இந்த மருந்துகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சரியான எதிர்வுகூறல் இன்றி 2021 இல் சராசரி கேள்வி அலகுகளின் அளவு குறைக்கப்பட்டமை, மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் அரச மருந்தக கூட்டுத்தாபனம் என்ற நிறுவனங்களின் செயற்திற இன்மையின் அடிப்படையில் பெறுகை செயற்பாடுகளில் இடம்பெற்ற தாமதத்தின் காரணமாக 2022 இல் சராசரி கேள்வி கட்டளை வழங்குநரால் நிராகரிக்கப்பட்டமையால் ஏற்பட்டிருந்த மருந்து பற்றாக்குறைக்காக இந்திய கடன் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் பதிவிலிருந்து விடுவித்தல் WOR சான்றிதழின் அடிப்படையில் 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 109 ஆம் பிரிவிற்கு முரணாக இந்த மருந்துகள் 2022 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மருந்து அலகொன்றிற்காக ஐ.அ.டொலர் 0.028 அதாவது 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சராசரி கேள்விக்காக கிடைக்கப்பெற்ற விலையினை விட ஐ.அ. டொலர் 0.00452 இனால் அதிகரித்து செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் 979,200 அலகுகளுக்காக ஐ.அ.டொலர் 4,425.9 மேலதிக கிரயம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) இந்த மருந்துகளுக்குரிய 2022 ஆம் ஆண்டின் மேலும் ஒரு கட்டளைக்காக கொள்வனவு செய்யப்பட்ட கட்டளை 2022 நவம்பர் 03 ஆந் திகதி வழங்குநருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஐ.அ. டொலர் 0.0214 அலகொன்றின் விலை 2022 ஆம் ஆண்டில் ஏனைய கட்டளைகளுக்காக சமர்ப்பித்த விலையினை விட குறைந்த விலையாகும். எனினும் உள்நாட்டு மருந்து உற்பத்திக்கு அனுப்புதல் தொடர்பாக சுகாதார அமைச்சு செயலாளரால் 2023 சனவரி 12 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட இலக்கம் SH/MISC/03/Medi.Equip என்ற கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு அந்த கட்டளை இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(இ) இலக்கம் அமப/18/1883/814/056 என்ற 2018 ஒக்டோபர் 17 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மருந்துகள் உள்நாட்டு மருந்து உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்வதாயின் மருந்து தரங்களின் தற்போது உடன்படிக்கை (Buy Back Guarantee) கைச்சாத்திடவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மருந்துகளின் நியமங்களில் உடன்படிக்கை கைச்சாத்திடாமல் 2023 ஆம் ஆண்டின் போது இந்த மருந்துகள் Newgen Lanka Health Care pvt Ltd என்ற மருந்து உற்பத்திசெய்யும் கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதனால் 2023 ஆம் ஆண்டின் போது 03 மாதங்கள் முதல் 06 மாதங்கள் வரையான தாமதத்துடன் மருந்து வழங்குதல் ஊடாக அரசாங்கத்திற்கும் நோயாளர்களுக்கும் ஏற்படுகின்ற நட்டத்தை அறவிடும் முறைமையொன்று காணப்படவில்லை.

(ஈ) இந்த மருந்துகளின் அலகொன்றிற்காக கொள்வனவு விலைக் குழுவினால் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 22.64 விலை வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த விலையில் உள்ளடக்க வேண்டிய கிரய பொருட்கள் என்ன என்பது மற்றும் அந்த கிரயம் முரண்கள் சுங்க ஆவணங்கள் மற்றும் ஆரம்ப ஆவணங்களின் பதிவேடுகளின் மூலம் உறுதிப்படுத்தப் படவில்லை. இவ்வாறு விலைக் கழிவு வழங்கியிருந்த அலகொன்றின்விலை 2022 ஆம் ஆண்டில் உள்நாட்டு வழங்குநர் சமர்ப்பித்திருந்த விலையினை விட 170 சதவீதத்திற்கு அண்ணளவான அதிகரிப்பொன்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மருந்து வழங்கல் பிரிவினால் 475,500 அலுகளுக்காக ரூபா 6,785,385 மேலதிக கிரயம் செலவிடப்பட்டிருந்தது.

10. <u>Trastuzumab Injection 440mg (SR 01205102)</u>

மார்பக மற்றும் இரைப்பை சார்ந்த புற்றுநோய்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற இந்த மருந்தில் 2022 ஆம் ஆண்டில் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்த கட்டளைகளுக்குரிய 10,240 தடுப்பூசிகள் வழங்கப்பட்டு அதற்காக ரூபா 655,983,655 கொடுப்பனவு கோரிக்கை (வரவுத்தாள்) மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மருத்துவ வழங்கல் பிரிவினால் 2021 யூன் 17 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட இலக்கம் 2022/SPC/N/C/P/00034 என்ற கட்டளையின் மூலம் 56,000 அலகுகள் வீதம் மேற்கூறப்பட்ட மருந்தின் 8,400 தடுப்பூசி குப்பிகளை கொள்வனவு செய்வதற்கான பெறுகையின் இரண்டாவது இருப்பு 3,040 தடுப்பூசி குப்பிகள் பெற்றுக்கொள்வதற்காக அங்கீகாரம் பெற்று முதலாவது கட்டளை அங்கீகரிக்கப்பட்ட திகதியில் இருந்து 04 மாதங்கள் 19 நாட்கள் தாமதம் அடைந்திருந்தது. அந்த பெறுகையின் கீழ் மூன்றாவது இருப்பு (4,000 தடுப்பூசி குப்பிகள்) வழங்குதல் குறித்த திகதியான 2023 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு 02 மாதங்கள் தாமதத்துடன் 2023 நவம்பர் 06 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. கட்டளைக்குரிய 2022 மார்ச் 09 ஆந் திகதி திறக்கப்பட்ட ரூபா 101,080,000 ஆன நாணய கடிதம் உடனடியாக இரத்துச் செய்யப்பட வேண்டிய போதிலும் நாணய கடித்தின் காலாவதியான திகதியிலிருந்து 14 மாதங்கள் அளவிலான கால தாமதத்துடன் அதற்கான அறிவித்தல் வங்கிக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மருத்துவ வழங்கல் பிரிவின் இலக்கம் 2022/SPC/E/C/P/00497 கட்டளைக்குரிய என்ற கட்டளை 1,000 தடுப்பூசி குப்பிகளை கொள்வனவு செய்யும் கட்டளைகளுக்குரிய பெறுகைகளுக்காக தொழில் நுட்ப மதிப்பீட்டு குழுவின் மூலம் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செல்லுபடியான பதிவுடன் வழங்குனருக்கு பரிந்துரை வழங்கப்பட்டது. எனினும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செல்லுபடியான சான்றிதழ் இன்றி Advitec International நிறுவனத்துக்கு மேற்கூறப்பட்ட கட்டளை அலகொன்று ரூபா 52,450 வீதமான தொகையில் வழங்குவதற்காக பெறுகை கையளிக்கப்பட்டிருந்தது.

எனினும், Advitec International (Pvt) Ltd நிறுவனத்தால் வழங்குவதற்குரிய பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிப்பதற்கு முன் 500 தடுப்பூசிகள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அது சர்ச்சைக்குரிய நிலைமையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) இந்த 500 தடுப்பூசி குப்பிகளும் மேலே (ஆ) கீழ் காண்பிக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்குரிய மிகுதி 500 தடுப்பீசி குப்பிகளை வழங்கும் போது "ஆகக்குறைந்தது. 24 மாதங்கள் ஆயுட் காலத்துடன் வழங்குதல் வேண்டும்" என்ற வழங்குதல் நிபந்தனை மருத்துவ வழங்கல் பிரிவினால் விதிக்கப்பட்டிருந்தது. எனினும் கட்டளைக்குரிய 1,000 தடுப்பூசி குப்பிகளின் ஆயட் காலம் 05, 06 மாதங்களுக்கு இடையிலான குறைந்த காலமாக இருந்தமை அவதானிக்கப்பட்டமையால் இந்த கட்டளைகள் வழங்கும் வழங்குனர்களினால் வழங்கல் நிபந்தனை மீறப்பட்டுருந்தது.

(ஈ) மேலே (ஆ) இன் காண்பிக்கப்பட்டுள்ள கட்டளை 2000 தடுப்பூசி குப்பிக்ளிக் கட்டனைாக திருத்துதல் மருத்வ வழங்கல் பிரிஹீல் 10/2022 என்ற திகதி இன்றிய கடிதத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆந்த கட்டளைகளின் பிரகாரம் Advitec International நிறுவனத்திற்கு மேலதிகமாக 1,000 தடுப்பூசி குப்பிகளை வழங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட இரண்டாவது கட்டளைக்குரிய 840 தடுப்புசி குப்பிகளின் அளவு வழங்கப்பட்டிருந்ததுடன் தடுப்பூ குப்பிகளின் ஆயுட் காலம் 02 மதாதங்களுக்கும் 03 மாதங்களுக்கும் இடையிலான குறைந்த காலத்தை

கொண்டிருந்தது. இரண்டாவது கட்டளைக்குரிய 160 தடப்பூசி குப்பிகள் 2024 மார்ச் 07 ஆந் திகதி வரையலும் வழங'கப்படாதிருந்ததுடன் வழங்கல்களுக்காக செயலாற்றல் பிணை முறி காலாவதியாகி இருந்தது.

(உ) மருத்துவ வழங்கல் பிரிவின் இலக்கம் 2022/SPC/E/C/P/00742 என்ற கட்டளையின் கிரனாரம் 3,000 தடுப்பூசி குப்பிகள் கொள்வனவு செய்யும் பெறுகைகள் சமர்பபிக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் இன்றிய நிறுவனம் ஒன்றின் கேள்வி ஆன அலகொன்றன் வலை, ரூபா 60,950 ஆன ஆகக் குறைந்த விலை கவனத்தில் கொள்ளாமல் இரண்டாவது ஆகக் கறைந்த விலையான 63,450 கேள்விக்காக அந்த பெறுகை Advitec International (Pvt) Ltd நிறுவனத்திற்கு வழங்குதல் நிறுவனத்தால் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழ் பெற்றுக்கொள்ளுவதன் கீழ் அமைச்சு பெறுகை குழுவினால் அங்கீகரிக்கபப்பட்டுள்ளது.

எனினும் நிறுவனத்தின் பதவியில் இருந்து விடுவிக்கும் சான்றிதழ் விண்ணப்பம் 2023 பெ்ரவரி 23 ஆந் திகதி தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் மூலம் நிராகிகபிக்கப்பட்டிருந்தது. (WOR Committee response "Not recommended by oncologists till the product is register")

அந்த நிராகரித்தலின் காரணமாக 2022/SPC/E/C/P/00742 என்ற கட்டளைக்காக மேலதிகமாக ரூபா 22,350,000 என்ற மேலதிக கிரயம் ஒன்றை செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது.

11. <u>Glyceryl Trinitrate Inj.50mg/10ml மருந்து (SR 00203002)</u>

நோயாளர்களுக்கு இரத்த ஓட்டத்தை எளிதாக்கும் வசதிகள் மற்றும் அவசர சிகிச்சைகளுக்காகவும் வழங்கப்படுகின்ற (Emergency) தடுப்பூசிகளினால் இந்த மருந்துகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கொவிட் 19 தொற்று நோயினால் இந்த மருந்துகளுக்கான கேள்வி எவ்வளவி அளவு வீழ்ச்சியடைந்திருந்தது எனவும் மற்றும் எதிர்காலத்திற்காக எவ்வளவு அளவு தேவை என்பது தொடர்பாகவும் எதிர்வு கூறாமல் 2021 ஆம் ஆண்டில் சராசரி கட்டளையில் மிகுதி அலகு 50,000 தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்ததுடன் அலகொன்று ஐ.அ.டொலர் 4.9 இல் கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது. 2022 ஆம் ஆண்டின் சராசரி கட்டளை இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தற்காலிகமாக கைவிடப்பட்ட 2021 ஆம் ஆண்டு சராசரி கேள்வி மிகுதி அலகு 50,000 பெற்றுக்கொள்ளுமாறு அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்ததன் பின்னர் இந்தத் தீர்மானம் வழங்குநருக்கு அறிவிப்பதற்கு 05 மாதங்களுக்கு அண்மித்த காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

(இ) இந்த தாமதத்தினால் 2022 ஆகஸ்ட் மாதம் 2022 நவம்பர் 25 வரை 04 மாதங்களுக்கு அண்மித்த காலம் இருதய நோயாளர்களுக்கு வழங்குகின்ற அவசர (Emergency) தடுப்பூசியான இந்த மருந்து பற்றாக்குறையாக காணப்பட்டது. அவ்வாறே மேற்கூறப்பட்ட (அ) மற்றும் (ஆ) இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள நிறுவன குறைபாடுகளின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் இந்த மருந்துகளுக்காக அவசர கொள்வனவிற்கு செல்ல வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஈ) இவ்வாறு நிலுவையாகக் காணப்பட்ட காலத்தில் 11,250 அலகுகளுக்காக 2022/MSD/V/R/P/00102 என்ற கட்டளை சுகாதார அவசர பெறுகைக் குழுவினால் WOR சான்றிதழ் அடிப்படையில் மருந்து வழங்குநருக்கு 2022 நவம்பர் 23 ஆந் திகதி ஐ.அ. டொலர் 6.23 உடன் ஒப்பிடும் போது உயர்ந்த அலகு விலை வழங்கப்பட்டதுடன் அந்த மருந்து இருப்புக்கள் 2023 ஏப்ரல் 07 ஆம் திகதி குறித்துரைத்த காலத்தைவிட 04 மாத காலம் தாமதமாகக் கிடைத்திருந்தது.

எனினும் இந்த இருப்புக்கள் வழங்குநருக்கு வழங்கப்பட்ட திகதி இரண்டினதும் பின்னர் மீண்டும் செயற்படுத்தப்பட்ட 2021 ஆம் ஆண்டில் சராசரி கட்டளை அலகுகள் 29,950 அளவு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் நடைமுறையில் அவசர தேவையொன்றல்லாத இந்த கொள்வனவு ஊடாக மருத்துவ வழங்கல் பிரிவினால் 11,250 அலகுகளுக்காக ரூபா 4,946,032 மேலதிக கிரயமொன்று செலவிடப்பட்டிருந்தது.

(உ) 2022 ஆம் ஆண்டின் போது இந்த மருந்துகளுக்காக 30,000 அலகுகளுக்கு 2022/SPC/X/R/P/000264 என்ற மேலும் ஒரு கட்டளை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரால் சகல கேள்வியின் மூலமும் சமர்ப்பிக்கப்பட்ட Centurion Healthcare Private Limited என்ற இந்திய மருந்து வழங்குநர் கேள்வி தாரரால் சமர்ப்பிக்கப்பட்ட NMRA சான்றிதழ் மூலம் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே NMRA சான்றிதழ் குறிப்பிடப்படுகின்ற Mercury Laboratories Limited என்ற இந்திய மருந்து உற்பத்தி கம்பனியின் கேள்வியில் குறிப்பிடப்படுகின்ற Centurion Healthcare Private Limited என்ற இந்திய வழங்குநர்களுக்கு தமது கம்பனி உற்பத்தி விற்பனைக்காக அதிகாரம் கையளிக்கப்பட்டமையும் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை. அதன் பிரகாரம் உறுதிப்படுத்தப்படாத இந்திய வழங்குனரிடமிருந்து இந்த கட்டளைக்குரிய 30,000 அலகுகளின் மருந்து அளவுகள் 2022 திசெம்பர் மற்றும் 2023 சனவரி என்ற மாதங்களில் பெறப்பட்டிருந்தது.

12. <u>Clarithromycin for Infusion 500 mg vial மருந்து (SR 00103002)</u>

பக்டீரியா தொற்றின் போது நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்தாக பயன்படுத்தப்படுகின்ற இந்த மருந்து தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அமுல்ப்படுத்தப்பட்ட சராசரி வருடாந்த கட்டளைக்காக முறையே ரூபா 151.16 மில்லியன் மற்றும் ரூபா 190.44 மில்லியன் விலை சமர்ப்பித்திருந்ததுடன் அந்த கட்டளைகளின் மிகுதி அலகுகள் 159,700 அளவில் 111,070 அளவு குறித்துரைத்த காலத்தை விட தாமதித்து மருத்துவ வழங்கல் பிரிவுக்கு கிடைத்திருந்ததுடன் மிகுதி 48,630 அலகுகள் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறு மருந்து கிடைக்காமை மற்றும் தாமதத்தினால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் பிரதேச கொள்வனவுகளின் கீழ் அலகொன்று ரூபா 1,085.22 வீதம் 9400 அலகுகளும் அலகொன்று ரூபா 924,04 வீதம் 5400 அலகுகளும் ஆக உயர்ந்த விலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது அதன் பிரகாரம் இந்தக் கொள்வனவுகள் ஊடாக அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் 14,800 அலகுகளுக்காக அண்ணளவாக ரூபா 12,953,708 மேலதிக கிரயம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2022 இன் சராசரி வருடாந்த கேள்வி தயாரிக்கப்படாதிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டின் சராசரி வருடாந்த கட்டளைக்குரிய 2020 திசெம்பர் மற்றும் 2021 சனவரி மாதங்களில் கிடைத்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்ப திகதியில் எஞ்சியிருந்த அண்ணளவாக 43,655 அலகுகளின் இருப்பில் 2022 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 5,134,449 அளவான 15,120 அலகுகளின் இருப்பு ஒன்று காலாவதியாகியிருந்தது. அந்த இருப்புக்கள் காலாவதியாகியதன் பின்னர் இந்திய கடன் முன்மொழிவு திட்டத்தின் கீழ் 25,000 அலகுகள் கொள்வனவு செய்யும் கட்டளை WOR சான்றுதழின் அடிப்படையில் 2022 ஒக்டோபர் 18 ஆம் திகதி வழங்குனருக்கு வழங்கப்பட்ட போதும் 2023 நவம்பர் 30 வரை மருந்து இருப்புக்கள் கிடைத்திருக்கவில்லை. அதனால் இந்த மருந்துகள் 2022 செப்டம்பர் மாதம் முதல் 2023 நவம்பர் 30 வரை அண்ணளவாக 14 மாத காலம் பற்றாக்குறையாக காணப்பட்டது.

(இ) இவ்வாறு நிலுவையாக காணப்பட்ட 14 மாத காலத்தில் மாரவிலை தள வைத்தியசாலையில் பிரதேச ரீதியில் கொள்வனவு செய்தலின் கீழ் 02 சந்தர்ப்பங்களின் போது 50 அலகுகள் ரூபா 5,500 வீதம் அதாவது அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் கடந்த மூன்று வருட காலத்தில் கட்டளை இடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட விலையினை விட 413 சதவீதத்தால் அதிகரித்த விலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2023 இன் சராசரி வருடாந்த கட்டளை 10 மாதம் தாமதித்து மருத்துவ வழங்கல் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக வழங்குனரை தெரிவு செய்வதற்காக 07 மாதங்களை விட அதிக காலம் பெறுகை நடவடிக்கைகளுக்காக அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் செலவிடப்பட்டிருந்தது. எனினும், 2023 நவம்பர் 30 ஆம் திகதி வரை இன்டென்டு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கட்டளையொன்று காணப்படுவதற்கு MSMIS முறைமை மூலம் அல்லது சுய முறைமை மூலம் உறுதிப்படுத்தப்படாத 60,000 அலகு இருப்பு மற்றும் பெறுவனவுகள் தொடர்பான ஆய்வு இன்றி 2021 இன் சராசரி வருடாந்த கட்டளையில் கிடைக்க வேண்டிய 70,000 அலகு இருப்புக்கள் என்பன 2024 ஆம் ஆண்டில் எதிர்வு கூறப்பட்ட தேவையில் கழிக்கப்பட்டதன் பின்னர் கட்டளையொன்று தேவையில்லாதிருந்தாக குறிப்பிட்டு 2024 இன் சராசரி வருடாந்த கட்டளை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இவ்வாறு 2023 இன் சராசரி வருடாந்த கட்டளை அமுல்படுத்தப்படாமல் மற்றும் 2024 இன் சராசரி வருடாந்த கட்டளை சமர்ப்பிக்கப்படாமையின் ஊடாக மிகுதி காலப்பகுதியின் போதும் இந்த மருந்துகள் பற்றாக்குறையாக காணப்பட்ட ஆபத்து மற்றும் அவசர பெறுகைகளுக்காக அனுப்பும் ஆபத்து கணக்காய்வின் போது புறந்தள்ள முடியாதிருந்தது.

13. <u>Dopamine Hydrochloride Injection BP 200mg/5ml (SR -00204001)</u>

மாரடைப்பு, அதிர்ச்சி, சிறுநீரகம் செயலிழத்தல் மற்றும் நாள்பட்ட இதய செயலிழப்பின் காரணமாக ஏற்படுகின்ற தாகக்ங்களை சரிசெய்வதற்காக இந்த மருந்து பயன்படுத்தப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் சராசரி கட்டளையின் கீழ் 63,000 அலகுகள் மற்றும் அவசர கொள்வனவுகளின் கீழ் 37,500 அலகுகள் மற்றும் வெளிநாட்டு செயற்திட்ட முன்மொழிவுத் திட்டத்தின் ஊடாக 30,000 அலகுகள் கொள்வனவு செய்யும் பெறுகைகளுக்கு உரியதாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மருத்துவ வழங்கல் பிரிவினால் சராசரிக் கட்டளை 11 மாதங்களுக்கு காத்திருத்தல் காலத்துடன் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதும் கட்டளை இலக்கம் 2023/SPC/N/R/P/00121 இன் கீழ் 2023 சனவரி 15 இல் 33,000 அலகுகள் மற்றும் 2023 ஏப்ரல் 16 இல் 30,000 அலகுகள் ஆக வழங்க வேண்டிய கட்டளை 2022 நவம்பர் 24 ஆம் திகதி கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பியதால் காத்திருத்தல் காலம் 1½ மாதங்களுக்கு வரையறுக்கப்பட்டிருந்தது.

(ஆ) சராசரி கட்டளை சமர்ப்பிக்கும் போது ஏற்படுகின்ற இந்த தாமதத்தின் காரணமாக அவசர கொள்வனவுகளுக்கு அனுப்ப வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 மார்ச் 09 ஆம் திகதி இலக்கம் 2023/SPC/E/R/P/00187 இன் கீழ் அவசர கொள்வனவாக மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்பப்பட்ட கட்டளையின் மூலம் அலகொன்று ரூபா 354.60 வீதம் 37,479 அலகுகள் கொள்வனவு செய்வதற்கு கட்டளை கையளிக்கப்பட்ட Ceyoka (Pvt) Ltd இனால் 21 நாள் தாமத்துடன் மருத்துவ வழங்கல் பிரிவிவிற்கு மருந்து வழங்கப்பட்டிருந்தது. சராசரி கட்டளையின் கீழ் ரூபா 284.91 விலையில் கொள்வளவு செய்யக்கூடியதாக இருந்த தடுப்பூசிகள் அவசர கொள்வனவின் கீழ் ரூபா 354.60 வீதம் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 2,611,911.54 மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது.

(இ) மருத்துவ வழங்கல் பிரிவின் கட்டளை இலக்கம் 2023/ADB/X/R/P/00021 இன் கீழ் வெளிநாட்டு கடன் உதவியின் கீழ் 30,000 அலகுகள் ஐ.அ.அடொலர் 3.0535 (ரூபா 953.72) இற்கு Yaden International (Pvt) Ltd இலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. சராசரி கட்டளையின் கீழ் இந்த மருந்துகள் ரூபா 284.91 விலையில் கொள்வளவு செய்ய வேண்டிய போதிலும் வெளிநாட்டு செயற்திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யும் போது சராசரி கட்டளையின் விலையில் 234 சதவீத விலை அதிகரிப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 20,064,300 மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த வழங்கல் உடன்படிக்கை திகதியில் இருந்து 60 நாட்களுக்குள் வழங்க வேண்டியிருந்த போதிலும் ஒரு மாதம் தாமதித்து மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது.

14. <u>Tenecteplase Inj 40mg (SR 00206901)</u>

இருதய நோய்கள் ஏற்படும் போது அவசர சிகிச்சையளிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற மருந்தில் 2023 ஆம் ஆண்டில் கிடைத்த கட்டளைகளுக்குரிய 6,000 தடுப்பூசிக் குப்பிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 915,854,940 ஆன கொடுப்பனவு கோரிக்கை (வரவுத்தாள்) அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தால் விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த மருந்து பெறுகைகளுக்குரியதாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) காத்திருத்தல் கட்டளைகளுக்குரிய இருப்பு அளவு உத்தேசிக்கப்பட்ட காலத்திற்காக போதியளவாக இருக்குமென்ற அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் வருடாந்த கட்டளை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2022 ஆம் ஆண்டில் இந்திய கடன் வசதியின் கீழ் கிடைத்த கட்டளை 15 மாதங்கள் கடந்திருந்த போதும் அமைச்சரவை நியமித்த நிலையான பெறுகைக் குழு தீர்மானம் வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் போதியளவான பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மருத்துவ வழங்கல் பிரிவின் 2022 சவம்பர் 15 ஆந் திகதிய கட்டளை இலக்கம் 2023/SPC/N/R/P/00071 இன் கீழ் 6,000 தடுப்பூசி குப்பிகள் கொள்வனவு செய்யும் பெறுகைகளுக்குரிய அலகொன்று ரூபா 83,035.01 ஆக ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குனரின் கேள்வி ஆவணங்களின் பிரகாரம் மருந்து களஞ்சியத்தில் இருக்க வேண்டிய வெப்பநிலை $2C^{o}$ – $8C^{o}$ ஆக இருந்த போதும் பெறுகைகளுக்காக பகிரங்கப்படுத்தப்பட்ட கேள்வி ஆவணங்களின் பிரகாரம் களஞ்சியத்தில் இருக்க வேண்டிய வெப்பநிலை $28C^{o}$ – $32C^{o}$ ஆகும். எனினும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் அந்த வழங்குனரை பரிந்துரை செய்திருந்தது. அதன் பிரகாரம் அமைச்சரவை நியமித்த நிலையியல் பெறுகைக் குழு கேள்வி கையளித்திருந்த போதிலும் கேள்தாரரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு முறைப்பாட்டுக் குழுவினால் இந்த கேள்வி இரத்துச் செயய்ப்பட்டிருந்தது. அது தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்கு அறிவிப்பதற்கு 57 நாள் காலம் எடுத்திருந்தது.

(இ) மேற்கூறப்பட்ட பெறுகை செயற்பாடுகளில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக அவசர பெறுகைகளுக்கு அனுப்ப வேண்டி ஏற்பட்டதன் காரணமாக சராசரி பெறுகைகளுக்கு அனுப்புவதன் மூலம் பெறக்கூடியதாக இருந்த சாதகமான நிலைமை கிடைக்காதிருந்ததுடன் 2023 மார்ச் 01 ஆந் திகதிய அவசர கட்டளை மூலம் தடுப்பூசி குப்பியொன்று ரூபா 150,150 வீதம் 1,500 தடுப்பூசி குப்பிகள் மற்றும் 2023 மே 09 ஆந் திகதிய அவசர கட்டளை மூலம் தடுப்பூசி குப்பியொன்று ரூபா 145,645.50 வீதம் 6,000 தடுப்பூசி குப்பிகள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 880,629,75 தொகை செலவிடப்பட்டிருந்தது.

15. <u>Anti Rabies Inactivated (TC) Vaccine (SR 00600204)</u>

நீர் எதிர்ப்பு நோய்க்காகப் பயன்படுத்துகின்ற தடுப்பூசி ஆகும். இந்த மருந்தில் 1,967,500 மாத்திரைகள் 2022 செப்தெம்பர் 28 ஆந் திகதி நன்கொடையாக கிடைத்திருந்தது.

அவ்வாறு இருக்கும் போது கட்டளை இலக்கம் 2022/SPC/E/R/P/00406 இன் கீழ் 500,000 தடுப்பூசிகளை கொள்வனவு செய்யும் பெறுகை அலகொன்று ரூபா 310 வீதம் 250,000 தடுப்பூசி மாத்திரைகள் அவசர பெறுகையாக பெற்றுக்கொள்வதற்கு 2022 ஒக்டோபர் 14 ஆந் திகதி பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்தக் கட்டளையின் பிரகாரம் 500,000 தடுப்பூசி மாத்திரைகள் முதலாவது இருப்பாகவும் 250,000 மாத்திரைகள் ரூபா 372.70 விலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இரண்டாவது சந்தர்ப்பத்தின் போது அந்த வழங்குனரிடம் இருந்து 250,000 தடுப்பூசி மாத்திரைகள் ரூபா 310 வீதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆரம்ப சந்தர்பத்தின் போது ஒரு மாத்திரைக்காக ரூபா 62.70 வீதம் 250,000 மாத்திரைகளுக்காக ரூபா 15,675,000 மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது.

16. <u>Ceftriaxone Injection 500 mg (SR 00101703)</u>

உடம்பில் பல்வேறு பகுதிகளில் பற்றீரியா தொற்றுக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற இந்த மருந்திற்கு 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் கிடைத்த கட்டளைகளுக்கு உரியதாக இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் 27,500 தடுப்பூசிக் குப்பிகளை வழங்கியிருந்ததுடன் அதற்கான பெறுமதி ரூபா 25,662,547 ஆன கொடுப்பனவு கோரிக்கை (வரவுத்தாள்) அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த மருந்து பெறுகைகளுக்குரியதாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அவசர கட்டளையாக கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஒக்டோபர் 18 ஆந் திகதி இலக்கம் 2022/SPC/E/R/P/00703 மற்றும் 27,500 அலகுகள் கட்டளைக்காக பெறுகை நடவடிக்கைகள் சுகாதார அமைச்சு செயலாளரின் தலைமையில் இருக்க வேண்டிய சுகாதாரத் துறையின் அவசர பெறுகைக்குழு (HSEPC) இனால் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் இந்தப் பெறுகைகள் திணைக்களப் பெறுகைக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) கட்டளை இலக்கம் 2023/SPC/N/R/P/00016 இன் கீழ் 440,000 தடுப்பூசிக் குப்பிகளைக் கொள்வனவு செய்யும் பெறுகைகளுக்குரிய 2023 பெப்ரவரி 08 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட பொருள் அனுப்பல் கோரிக்கையின் பிரகாரம் முதலாவது இருப்பாக 150,000 அலகுகள் 2023 மே 31 ஆம் திகதி வழங்க வேண்டியிருந்ததுடன் வழங்குநர் 2023 மே 17 ஆம் திகதி இந்தக் கட்டளைகளுக்கு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவித்திருந்தார். எனினும் மருத்துவ வழங்கல் பிரிவின் இலக்கம் MSD/QA/DRMM-2023 மற்றும் 2023 ஏப்ரல் 04 ஆம் திகதிய சுற்றறிக்கையின் படி இந்த மருந்துகள் அந்த பட்டியலில் இல்லாத கட்டளைகள் தற்காலிக கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக வழங்குரின் நம்பிக்கை செயலிழந்து எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற பெறுகைகளுக்காக கேள்விதாரர் சமர்ப்பித்தலை தவிர்த்திருக்கும் போது வழங்குநர்கள் கேள்வி சமர்ப்பிக்காமையின் அடிப்படையில் போட்டி கூறுவிலைகள் கோருவதற்கு முடியாதிருந்தது.

17. <u>Calcium Polystyrene Sulphonate 15g-17g powder sachet மருந்து (SR 00406202)</u>

சிறுநீரக நோயாளர்களுக்கு வழங்குகின்ற அத்தியவசியமான இந்த மருந்துகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2022 இன் சராசரி வருடாந்த கேள்வி தயாரித்து சமர்ப்பித்தல் மற்றும் பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளல் தாமதமடைந்தமையால் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தல் கிடைக்க வேண்டிய மருந்து அளவுகள் 14 மாதத்திற்கு அதிக காலம் தாமதமடைந்து 2023 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்தது.

(ஆ) இந்த தாமதத்தால் 2022 சனவரி 01 முதல் 2022 யூலை 27 வரையும், 2023 சனவரி 01 முதல் 2023 மார்ச் 08 வரையும் அண்ணளவாக 09 மாத காலம் இந்த மருந்துகள் பற்றாக்குறையாகக் காணப்பட்டது.

(இ) இவ்வாறு நிலுவையாகக் காணப்பட்ட காலப் பகுதியில் உள்நாட்டுக் கொள்வனவின் கீழ் இரண்டு வைத்தியசாலைகளால் ரூபா 348 வீதம் 45 அலகுகளும், ரூபா 412 வீதம் 28 அலகுகள் 2022 இன் சராசரி வருடாந்த கட்டளைக்காக சமர்ப்பித்த ரூபா 307.70 விலையினை விட அதிக விலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) இவ்வாறு பற்றாக்குறையாகக் காணப்பட்டமையால் 2022 ஆம் ஆண்டின் போது உள்ளபடியான நுகர்வு அதன் மதிப்பீடு செய்யப்பட்ட தேவையில் 25 சதவீதம் குறைவாகக் காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் போது இந்த மருந்துகள் சிறுநீரக நோயாளர்களுக்காக போதியளவான பிரகாரம் வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) இந்த மருந்துகளுக்குரிய 2022 ஆம் ஆண்டில் 02 கட்டளைகள் இரத்துச் செய்யப்பட்ட போதிலும் அதன் இயற்கை உள்ளக்க முறைமையில் செல்லுபடியான கட்டளையாகக் காணப்பட்டமையால் 2022 ஆம் ஆண்டில் ஒரு கட்டளைக்கு உரியதாக கிடைத்த மருந்து இருப்பு சுய முறைமையின் கீழ் குறிப்பிடப்படாதிருந்தமையும் 2022 ஆம் ஆண்டில் மேலும ஒரு கட்டளைக்கு உரியதாக கிடைத்த மருந்து இருப்புக்கள் திகதி மாற்றப்பட்டு குறிப்பிடப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டமையால் மருந்துகளுக்குரிய முறைமையின் மூலம் காண்பிக்கப்படுகின்ற தகவல்கள் பிழையாக இருந்தமை உறுதிப்படுதத்ப்பட்டது.

18. <u>Sodium Valproate Syrup 200mg/5ml, 100ml மருந்து (SR 00304004)</u>

வலிப்பு நோயுள்ள சிறு குழந்தைகளுக்காக வழங்குகின்ற அத்தியவசியமான இந்த மருந்து தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2021 ஆம் ஆண்டில் இருந்து 2023 வரை இந்த மருந்துகளை வழங்குவதற்காக இரண்டு வழங்குநர்கள் மாத்திரம் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்து NMRA சான்றிதழ் பெற்றிருந்ததுடன் அதில் ஒரு வழங்குநரிடமிருந்து NMRA சான்றிதழ் 2022 ஆம் ஆண்டில் காலாவதியாகி இருந்தமையால் இந்த மருந்துகளுக்காக போட்டியாளர் விலை சமர்ப்பித்தல் வரையறுக்கப்பட்டிருந்தது.

(ஆ) மருத்துவ வழங்கல் பிரிவினதும் மற்றும் மருந்தக கூட்டுத்தாபனத்தினதும் நலிவான தொடர்பின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் சராசரி கட்டளை பெறுகை நடவடிக்கைகளுக்காக 25 மாதங்களுக்கு அண்மித்த காலம் எடுத்திருந்தமையினால் இந்த மருந்துகள் 2021 ஆகஸ்ட் மாதத்தில் இருந்து 2022 மார்ச் 09 வரையான அண்ணளவாக 07 மாத காலம் மருத்துவ வழங்கல் பிரிவில் பற்றாக்குறையாக காணப்பட்டது.

(இ) இவ்வாறே தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையால் மருந்துகளுக்காக போதியளவான பிரகாரம் வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கு தவறியமை மற்றும் மருந்து பற்றாக்குறையினால் 2022 ஆம் ஆண்டில் 2022/SPC/X/R/P/00294 என்ற கட்டளைக்காக NMRA சான்றிதழ் உள்ள ஒரே ஒரு வழங்குநரிடம் ஒப்பிடும் போது உயர்ந்த விலை சமர்ப்பித்த ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்வியாளருக்கு WOR சான்றிதழின் கட்டளையின் பொருள் அனுப்பல் கோரிக்கை 2023 மார்ச் 10 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது.

19. <u>Calcium 500mg+ Vitamin D3 250IU Tab மருந்து (SR இலக்கம் 00405401)</u>

கல்சியம் மற்றும் விற்றமின் பற்றாக்குறை காணப்படுகின்ற நோயாளர்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற இந்த மருந்துகளுக்காக கேள்வி சமர்ப்பித்த வழங்குனர்களிடமிருந்து NMRA சான்றிதழ் பெற்று ஒரே ஒரு வழங்குநரிடமிருந்து அந்தச் சான்றிதழ் 2021 நவம்பர் 12 ஆந் திகதி காலாவதியாகி இருந்தது. இந்த பதிவினை மீண்டும் புதுப்பிப்பதற்கோ அல்லது மருந்துக்காக புதிய வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கோ அல்லது

வழங்குநர்கள் இல்லையாயின் சந்தையில் காணப்படுகின்ற பல்வேறு மருந்து விபரங்களின் மருந்துகளின் பிரகாரம் பொருத்தமான படி மருத்துவ வழங்கல் பிரிவின் மாதிரிகளைத் திருத்திக் கொள்வதற்கோ அல்லது போன்ற விடயங்களை நிறைவேற்றாமல் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இந்த மருந்துகளில் இந்த மருந்துகளின் பெறுகை செயற்பாடுகளுக்காக தேவையற்ற நீண்ட காலம் எடுத்து அந்த சராசரி வருடாந்த கட்டளை இரத்துச்செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக இந்த மருந்துகள் 2020 திசெம்பர் 16 ஆம் திகதி முதல் கணக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 30 ஆந் திகதி வரை மருத்துவ வழங்கல் பிரிவில் பற்றாக்குறையாகக் காணப்பட்டது.

20. <u>Digoxin injection BP 500 mcg/2ml மருந்து (SR 00200102)</u>

இதய நோய்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற இந்த மருந்துகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2021 ஆம் ஆண்டில் இருந்து 2023 ஆம் ஆண்டு வரை சராசரி வருடாந்த கட்டளை மருத்துவ வழங்கல் பிரிவினால் தயாரித்து சமர்ப்பித்தலில் தாமதம், வருடாந்த கட்டளை அளவு சரியாக எதிர்வு கூறப்படாமல், அரச மருந்தக கூட்டுத்தபானத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற கட்டளைகளுக்காக அமுல்படுத்துவதில் தாமதம் மற்றும் பெறுகை செயற்பாடுகளுக்காக நீண்ட காலம் எடுத்தமையினால் 2022 சனவரி மாதம் முதல் 2023 ஆகஸ்ட் மாதம் வரையாக 20 மாத கால பகுதியில் 15 மாத காலத்திற்காக இந்த மருந்துகள் மருத்துவ வழங்கல் பிரிவில் காணப்படவில்லை. அதனால் 2021 முதல் 2023 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாத இறுதி வரையில் இந்த மருந்துகளில் மதிப்பீடு செய்யப்பட்ட தேவையுடன் ஒப்பிடும் போது விநியோகிக்கப்பட்ட மருந்து அலகுகளின் அளவு 12 சதவீதம் முதல் 38 சதவீதம் வரையிலான குறைந்த பெறுமதியில் காணப்பட்டது.

(ஆ) 2022 மற்றும் 2023 என்ற ஆண்டுகளில் 04 சந்தர்ப்பங்களின் போது அலகொன்று ரூபா 1,296 முதல் ரூபா 9,575 விலை வரையான வீச்சில் மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டதன் பின்புலத்தில் மருந்து நிலுவையாக காணப்பட்ட காலப் பகுதியில் 03 வைத்தியசாலைகளினால் 09 சந்தர்ப்பங்களின் போது அலகொன்று ரூபா 180 வீதம் 95 அலகுகள் பிரதேச கொள்வனவின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டமை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(இ) 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் 04 சந்தர்ப்பங்களின் போது வழங்குனர்கள் சமர்ப்பித்த கூறு விலைகளுக்கு இடையில் அதிகமதிக முரண்பாடுகள் காணப்பட்டதுடன், அந்த முரண்பாடுகள் சமர்ப்பித்த ஆகக் குறைந்த விலையுடன் ஒப்பிடும் போது உயர்ந்த விலையின் வேறுபாடு 706 சதவீதம் ஆகும். அதன் போது NMRA சான்றிதழ் பெற்றிருக்கின்ற வழங்குனர்களினால் உயர்ந்த விலையும் NMRA சான்றிதழ் இன்றிய வழங்குனர்களினால் மிகவும் குறைந்த விலையும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு வழங்குனர்களின் விலைகளுக்கு இடையே காணப்படுகின்ற அதிக முரண்பாடுகள் ஏற்படுவது தொடர்பில் தாக்கமளித்த காரண விடயங்களை இனங்கண்டு அவற்றை குறைப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இனங்காண்பதற்கு சுகாதார அமைச்சு மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் அரச மருந்தக கூட்டுத்தாபனம் தவரமையினால் இந்த மருந்துகளுக்காக அரசாங்கத்திற்கு அதிக கிரயம் ஒன்றை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

21. <u>Protein hydrolysate Injection 100ml (SR No -00402201)</u>

அதிதீவிர சிகிச்சை பிரிவில் இருக்கின்ற நோயாளர்களுக்காக போசனை மேலதிகமாக பயன்படுத்துகின்ற இந்த மருந்துகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2021, 2022 மற்றும் 2023 என்ற ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்டிருந்த சகல கட்டளைகளுக்காகவும் ஒரு வழங்குனர்களுக்கு மாத்திரம் கூறுவிலை சமர்பித்திருந்தார். இவ்வாறு ஒரு வழங்குனர்களுக்கு மாத்திரம் இந்த மருந்தின்

கட்டளைகாக சமர்பிப்பதற்கான காரணம் விசாரணை செய்யப்பட்டு அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பதிலாக அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் தமது விருப்பில் அல்லது கவனமின்மை மற்றும் செயற்திறனின்மையினால் மீண்டும் மீண்டும் கூறுவிலை கூறுதல் கோறி பெறுகை நடவடிக்கைகளுக்காக நீண்டகாலம் எடுத்து சாராசரி வருடாந்த கேள்வி, வருடாந்த கட்டளை அமுல்பட்டிருக்கவில்லை.

(ஆ) அந்த ஒவ்வொரு சந்தர்பத்தின் போதும் கேள்வி சமர்ப்பித்த ஒரேயொரு கேள்தாரரால் சமர்பிக்கப்பட்ட அலகொன்றின் விலை 2021 ஆம் ஆண்டில் சராசரி கட்டளைக்காக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 895 அலகொன்றின் விலையினை விட அண்ணளவாக 85 சதவீதத்தால் விலை அதிகரிப்புடன் விலையொன்றாக இருந்தது.

(இ) இந்த வழங்குனரால் 2022 இல் சாராசரி வருடாந்த கட்டளை அலகொன்று ரூபா 1,516 வீதம் வழங்குவதற்கு 2023 மே 15 ஆம் திகதி இணங்க இணக்கம் காணப்பட்டதுடன் வழங்குவதற்கு இணக்கப்பட்ட மருந்து தொகுதி (Batch No.) இலக்கம் 16RM6293 ஆகும். எனினும் இந்த மருந்துகள் முன்னுரிமை பட்டியலில் அகற்றப்பட்டு 2023 யூலை 05 ஆம் திகதி மேற்கூறப்பட்ட சாதாரன சாராசரி வருடாந்த கட்டளை இரத்து செய்யப்பட்டிருந்தது. எனினும் 2023 யூலை 07 ஆம் திகதி மீண்டும் ஒரு தடவை இந்த மருந்துகள் முன்னுரிமைப் பட்டியலில் உள்ளடக்கி மேற்கூறப்பட்ட மருந்து தொகுதி அலகு அலகொன்று ரூபா 1,662.39 வீதமான விலையில் அதாவது அலகொன்றிற்காக ரூபா 146.39 மேலதிக விலையில் 3000 அலகுகளை கொள்வனவு செய்வதற்கு சுகாதார பிரிவு அவசர பெறுகை குழுவினால் தீர்மானித்திருந்தது.

22. <u>Aciclovir Tab. 200mg (SR-00107901)</u>

2022 ஆம் ஆண்டில் வைத்தியசாலைகளுக்காக வழங்க வேண்டியிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட இந்த மருந்து தேவையில் 69 சதவீதம் மருத்துவ வழங்கல் பிரிவினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2022 நவம்பர் 08 ஆம் திகதி முதல் களஞ்சியத்தில் மருந்துகள் பூச்சியமாக இருந்தது. அந்த மருந்து பற்றாக்குறை 07 மாதங்களுக்கு அண்மித்த காலம் காணப்பட்டமை. கணணி மயப்படுத்தப்பட்ட இருப்பு பேரேட்டு அறிக்கை பரிசோதனை செய்தபோது அவதானிக்கப்பட்டதுடன், இதற்காக பின்வரும் விடயங்கள் காரணமாக இருந்தது.

(அ) 2022 ஆம் ஆண்டில் 840,000 மருந்து மாத்திரைகளை வழங்குவதற்காக அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு 2021 பெப்ரவரி 25 ஆம் திகதி வழங்கப்பட்ட 2022/SPC/N/R/P/00045 என்ற சராசரி கட்டளை அதன் 08 மாதங்களுக்கு பின்னர் மருத்துவ வழங்கல் பிரிவின் பரிந்துரையின் படி பெறுகைகள் குழுவினால் 2021 ஒக்டோபர் 26 ஆம் திகதி கைவிடப்பட்டிந்தமை.

(ஆ) மருத்துவ வழங்கல் பிரிவின் மருந்து பூச்சியமபவதற்கு அண்மித்திருக்கும்போது மருத்துவ வழங்கல் பிரிவு 525,000 மருந்து அலகுகளை வழங்குவதற்கான கட்டளை இலக்கம் 2022/MSD/V/R/P/00077 இன் கீழ் 2022 நவம்பர் 04 ஆம் திகதி அவசர பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வழங்கனரால் எதிர்பார்க்கப்பட்ட திகதியில் மருந்துகளை வழங்குவதற்கு தவறியிருந்தார். கட்டளை வழங்கப்பட்ட திகதியில் 07 மாதங்களின் பின்னர் அதாவது 2023 யூன் 03 ஆம் திகதி மருத்துவ வழங்கல் பிரிவினால் கட்டளை உடனடியாக கைவிடப்பட்டமை.

(இ) 2022 ஆம் ஆண்டின் போது மருந்துகளை வழங்குவதற்காக இந்திய கடன் வசதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 2022/SPC/X/R/P/00267 என்ற பெறுகை ஊடாக கிடைக்க வேண்டிய 1,000,000 மருந்து மாத்திரைகளின் இருப்பு 2022 ஒக்டோபர் 31 இல் கிடைக்க வேண்டியிருந்த போதிலும் ஒரு ஆண்டிற்கு அண்ணளவான காலம் தாமதமாகி 2023 யூலை 18 ஆந் திகதியே கிடைத்திருந்தமை.

23. <u>Gliclazide tab. BP 40 mg (SR 00700301)</u>

அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்தால் 2022/SPM/A/R/P/00069 என்ற கொள்வனவு கட்டளையின் கீழ் வழங்கப்பட்ட இந்த மருந்தின் தொகுதி இலக்கம் 03 இற்குரிய (Batch) 5,947,500 மாத்திரைகளின் தரத் தன்மை கெட்டுப் போனதாக தேசிய ஔடதங்கள் தர பாதுகாப்பு ஆய்வு கூடம் (NMQAL) 2023 யூலை 17 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. வரையிலும் அந்த மருந்துகள் யாவும் மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியத்தில் இருந்து வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த மருந்தின் தரத்தன்மை தொடர்பாக இந்தியாவில் புது டில்லியில் அமைந்துள்ள ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அந்த மருந்துகளுக்குரிய நியமங்களை (Parameter) உடையதாக அறிக்கைகளில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த மருந்தின் தரத்தன்மையை பரிசோதனை செய்தல் தொடர்பாக சர்ச்சைக்குரிய நிலையொன்று காணப்பட்டது.

24. <u>Flucloxicillin BP 500 mg (SR 00100801)</u>

அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்ட Flucloxicillin BP 500 mg மருந்துகளில் 11,731,600 அலகுகள் உரிய நியமத்திற்கு இணங்காதிருந்தாக அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதனை பாவனையில் இருந்து அகற்றுமாறு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த மருந்து தொகுதிகள் 2023 மே 31 ஆம் திகதி மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து அகற்றப்படும் போது அந்த மருந்து அலகுகள் யாவும் மருத்துவ வழங்கல் பிரிவு களஞ்சியத்தில் இருந்து வைத்தியசாலைக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது.

25. <u>Cefuroxime Tablet 500mg (SR 00101403)</u>

ஊடம்பில் பல்வேறு பகுதிகளில் தொற்றுகின்ற பக்ரீரியா பாதிப்புக்கு உட்பட்டவர்களுக்கு வழங்கும் மருந்தாகும். 2023 ஒக்டோபர் 03 இல் உள்ளவாறு 79,966,716 அலகுகள் மருந்து இருப்பு காணப்படுகின்றமை. ஸ்வஸ்ட முறைமையும் தரவின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. அந்த இருப்புக்கள் 2023 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீடு செய்யப்பட்ட தேவையில் 05 மடங்காக இருந்தமையும் எதிர் வரும் 09 வருடங்களும் 05 மாதங்களுக்கும் அளவிலான காலத்திற்கு போதுமானதாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவின் மூலம் மருந்து கட்டளை சமார்ப்பிக்கும் பொழுது சரியாக மதிப்பீட்டை தயாரித்தல் மற்றும் கட்டளை நீண்ட காலம் கட்டனை தொடதர்பாக நடவடிக்கைகள் எடுத்து மற்றும் கட்டளையின் பிரகாரம் வழங்கல் வழங்கப்படாத மருந்துகள் தொடர்பாக போதியளவான பரிசோதனை இன்றி கட்டயை மேற்கொள்ளப்பட்ருந்தமையும் அதன் பிரகாரளும் மருந்து இருப்புக்கள் தேவையற்ற வகையில் சேகரித்து காலாவதியாகும் வகையில் காலதியாவதற்று உட்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

26. <u>Sodium Valproate Tab. 100mg (SR-00304001)</u>

2022 ஆம் ஆண்டின் மே 24 முதல் 2023 சனவரி 11 வரை மருத்துவ வழங்கல் களஞ்சியத்தில் இந்த மருந்துகள் பூச்சியமாக இருந்ததுடன், 2022 ஆம் ஆண்டில் வழங்க வேண்டியிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட மருந்து தேவையில் 83 சதவீதம் மருத்துவ வழங்கல் பிரிவினால் மருந்துகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. மருத்துவ வழங்கல் பிரிவில் இந்த மருந்து பற்றாக்குறை ஏற்படுவதற்கு பின்வரும் விடயங்கள் தாக்கமளித்திருந்தது.

(அ) 2022 ஆம் ஆண்டில் 22,000,000 மருந்து அலகுகளை வழங்குவதற்காக அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு 2021 பெப்ரவரி 27 ஆம் திகதி வழங்கப்பட்ட 2022/SPC/N/R/P/00003 என்ற சராசரி கட்டளை, கட்டளை வழங்கப்பட்ட திகதியில் 06 மாதங்களின் பின்னர் மருத்துவ வழங்கல் பிரிவின் பரிந்துரையின் படி பெறுகைகள் குழுவினால் 2021 செப்டம்பர் 09 ஆம் திகதி கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2022 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டியதாக மேற்கொள்ளப்பட்ட சராசரி கட்டளையும் (2021/SPC/N/R/P/00001) வழங்குவதற்கு எஞ்சியிருந்த மருந்து அலகுகள் 7,625,000 வழங்க வேண்டிய கால அட்டவணை திருத்தப்பட்டு 2022 ஆம் ஆண்டின் யூன், ஆகஸ்ட, ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் கிடைக்குமாறு மருந்து வழங்க வேண்டிய கால அட்டவணை மீண்டும் தயாரிக்கப்பட்டிருந்தது. குறித்த காலத்தில் மருந்துகள் வழங்காதிருந்ததுடன், முற்பெறுகை மருந்து தொகுதி (S-01032) தர தன்மை கெட்டதன் காரணமாக பிரச்சினையான நிலைமை ஏற்பட்டிருந்தது. குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்யப்படாத இந்த கட்டளை 2023 ஆம் ஆண்டில் மருத்துவ வழங்கல் பிரிவினால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(இ) மருத்துவ வழங்கல் பிரிவில் மருந்துகள் 2022 மே இறுதி வரையிலும் பூச்சியமாக இருந்ததன் காரணமாக மாதாந்த தேவையினை பூர்த்தி செய்வதற்காக 1,000,000 மருந்து அலகுகள் அலகொன்று கிரயம் ரூபா 7.00 ஆன வகையில் கொள்வனவு செய்வதற்காக அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு இலக்கம் 2022/SPC/E/R/P/00488 என்ற அவசர கட்டளை வழங்கப்பட்டிருந்தது. இந்த கட்டளைக்குரிய மருந்து வழங்க வேண்டிய திகதியினை விட 04 மாதம் தாமதித்து 2023 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்ததுடன், ஒரு மாத நுகர்விற்காக தேவையான ரூபா 7,000,000 ஆகக் கூடிய கிரயத்தினை செய்து அவசர பெறுகைகள் சிக்கனமற்றதாக இருந்தது.

(ஈ) மேற்கூறப்பட்ட அவசர பெறுகை தாமதமடைந்தமையினால் அரசாங்க அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்திலிருந்து மாத்திரை 3,000,000 மருந்து மாத்திரைகள், அலகொன்றின் கிரயம் ரூபா 5.78 வீதம் கொள்வனவு செய்வதற்காக 2022/SPM/N/R/P/00079 என்ற கட்டளை மருத்துவ வளங்கள் பிரிவினால் 2022 செப்டெம்பர் 21 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. அந்த கட்டளையில் மருந்து வழங்க வேண்டிய திகதியிலுள்ளவாறு 10 நாட்களுக்கு முன்னர் கட்டளை வழங்க வேண்டியிருந்ததுடன் அதன் பிரகாரம் மருந்து உற்பத்தி செய்து வழங்குவதற்காக போதியளவான மற்றும் நியாயமான காலமொன்று உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனம் 2023 சனவரி மேற்கூறப்பட்ட மருந்து இருப்பை வழங்குதலை ஆரம்பித்து 622,100 மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டதன் பின்னர் மேற்கூறப்பட்ட கிரயத்தைச் செய்து மேற்கொள்ளப்பட்ட அவசர பெறுகைகளின் கீழ் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்து கிடைத்திருந்தது.

(உ) 2022 ஆம் ஆண்டுக்காக மேற்கொள்ளப்பட்ட பெறுகைகள் ஊடாக மருந்து அலகொன்று அல்லது மருந்து அலகேனும் கிடைக்கப்பெறாது இருந்ததுடன் அவசரப் பெறுகை ஊடாக மருந்து இறக்குமதி செய்து வழங்குதல் தாமதமடைந்தமையால் பின்னர் அரசாங்க உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து மருந்தினை பெற்றுக்கொள்வதற்காக மருத்துவ வளங்கள் பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்தது.

27. <u>Miconazole oromucosal gel 40 g Tube/Container (SR No. 01001801)</u>

(அ) இந்த மருந்து 2021 ஆம் ஆண்டுன் சராசரி கட்டளையாக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 4,814 370 ஆக இருந்த 2020 பெப்ரவரி 15 ஆம் திகதி இந்தக் கட்டளை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு 2020 பெப்ரவரி 21 ஆம் திகதி கிடைத்திருந்தது. இந்த கட்டளையின் பிரகாரம் 2021 சனவரி 04 இல் உள்ளவாறு 20,000 அலகுகளும், 2021 யூன் 01 இல் உள்ளவாறு 13,000 அலகுகளும் வழங்க வேண்டியிருந்தது. இந்த பெறுகைகளுக்காக கூட்டுத்தாபனத்தால் 2020 மே 03 ம் திகதி சார்வதேச போட்டி முறைமையில் (Global Tender) கேள்வி கோரப்பட்டதுடன் 2020 யூன் 16 கேள்வி கோறல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த பெறுகைகளுக்காக இரண்டு கேள்விதாரர்கள் முன்வந்திருந்ததுடன் 2020 நவம்பர் 06 ஆம் திகதி தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவால் கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2020 ஏப்பரல் 23 ஆம் திகதியில் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரின் கடிதத்தின்படி 2020 மே 21 ஆம் திகதி மருத்தவ வழங்கல்

பிரிவினால் இந்தக் கட்டளையின் அலகுகளின் எண்ணிக்கை 43,750 வரை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் 23,750 அலகுகள் 2021 சனவரி 04 ஆம் திகதியிலும் 20,000 அலகுகள் 2021 யூன் 01 ஆம் திகதியிலும் வழங்க வேண்டியிருந்தது. 2020 திசெம்பர் 16 ஆம் திகதியில் திணைக்கள பெறுகைக்குழு ஆகக் குறைந்த விலையில் சமர்ப்பித்த கேள்விதாரரை தெரிவு செய்திருந்ததுடன் அலகொன்று ஐ.அ.டொலர் 0.795 வீதம் 22,000 அலகுகள் மொத்த பெறுமதி ஐ.அ.டொலர் 17,490 இல் கொள்வனவு செய்வதற்கு பெறுகைக்குழு தீர்மானித்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2021 சனவரி 01 இல் உள்ளவாறு வழங்குனருக்கு கட்டளை கையளிப்பதற்குரிய இணக்கப்பாடு 2021 சனவரி 05 ஆம் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன்போது கப்பலில் ஏற்றுவதற்கு முன்னர் தெரிவு பரிசோதனைகள் கைவிடுவதற்கு வழங்குனர் நிறுவனத்தால் கோரப்பட்டிருந்த போதும் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. மருத்துவ வழங்கல் பிரிவால் 2021 சனவரி 28 ஆம் திகதிய மற்றும் 2021 மார்ச் 02 ஆம் திகதிய இலத்திரனியல் தபாலில் இந்த கட்டளையின் கால அட்டவணை திருத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021 மே 13 ஆம் திகதிய DHS/NV/300/2021 என்ற பொருள் அனுப்பல் கோரிக்கை இன் பிரகாரம் 2021 யூலை 31 ஆம் திகதி வரையில் 22,000 அலகுகள் வழங்க வேண்டி இருந்தது. எனினும் 2021 யூன் 23 ஆம் திகதிய மருத்து வழங்கல் பிரிவின் பணிப்பாளரால் அனுப்பப்பட்ட கடிதத்தின் அந்த கட்டளையின் காலம் மீண்டும் திருத்தப்பட்டிருந்த போதும் வழங்குனர் அதற்கு இனங்காதிருந்ததுடன் மருந்து இருப்பு 2022 மார்ச் 31 ஆம் திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய தேசிய ஒளடதங்கள் தர பாதுகாப்பு ஆய்வுகூடத்தின் அறிக்கை 2023 மார்ச் 22 ஆம் திகதியே கிடைத்திருந்தது. அறிக்கையின் பிரகாரம் பிரித்தானிய மருந்து மாதிரிகளுடன் இனங்காமையின் காரணமாக மருந்துகளை உடனடியாக பாவணையிலிருந்து அகற்றுமாறு மருத்துவ வழங்கல் பிரிவிற்கும், மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) 2023 மார்ச் 22 ஆம் திகதி அறிவித்தல் வழங்குகின்ற சந்தர்ப்பம் வரையிலும் மருத்து வழங்கல் பிரிவிலிருந்து 2022 திசெம்பர் 18 ஆம் திகதி வரை உரிய மருந்து இருப்பில் 17,561 உறைகள் அரசாங்க வைத்தியசாலைகளுக்கும், நிறுவனங்களுக்கும் விநியோகப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் தரம் கெட்டுப்போனதன் அடிப்படையில் இந்த மருந்தில் 8,198 உறைகள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் விநியோகிக்கப்பட்ட மிகுதி பொதிகள் 13,802 நோயாளர்களின் பயன்பாட்டிற்காக விநியோகிக்கப்பட்டிருந்தது. மருந்தின் தரபரிசோதனை தாமதமின்றி மேற்கொள்ளப்படாமை மற்றும் பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொண்டதன் பின்னர் மருந்துகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் நோயாளர்கள் உயிராபத்திற்கு உட்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ii) மேற்கூறப்பட்ட தரத்தன்மையில் குறைவடைந்த இருப்பு தொடர்பாக உடன்படிக்கை நிபந்தனை 3.3 இன் பிரகாரம் மொத்த தரையிறக்கல் கிரயத்துடன் 25 சதவீத நிர்வாகக் கட்டணம் வழங்குனரிடமிருந்து அறவிடுவதற்கு கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் 08 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மேற்கூறப்பட்ட கட்டளையில் கொண்டுவரப்பட்ட 22,000 அலகுகளின் அளவில் தரம் கெட்டுப் போனதன் அடிப்படையில் அகற்றுவதற்கு ஏற்பட்டிருக்கும் போது 2023 ஒக்டோபர் 13 ஆம் திகதியில் திணைக்கள

பெறுகைக் குழுவினால் அந்தக் கட்டளையில் இதுவரை வழங்கப்படாத மிகுதி அலகுகள் 21,750 எண்ணிக்கை அந்த வழங்குனர்களிடமிருந்து கப்பலில் ஏற்றுவதற்கு முன் தெரிவு பரிசோதனை சுயாதீன ஆய்வு கூடம் மூலம் மேற்கொள்ளும் அடிப்படையில் கட்டளை இடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சராசரி கேள்வி குறித்துரைத்த திகதியில் கிடைக்காமையின் காரணமாக மருத்துவ வழங்கல் பிரிவினால் விநியோகிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,304,100 ஆன 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி அவசர கட்டளையின் பிரகாரம் மேற்கூறப்பட்ட மருந்தில் 7,500 உறைகள் மற்றும் 2023 மார்ச் 10 இல் உள்ளவாறு வழங்க வேண்டியிருந்தது. இதற்காக கூறுவிலை கோரப்பட்டமைக்கான தகவல்கள் உரிய கோவைகளில் அவதானிக்கப்படாதிருந்ததுடன், கேள்வி அழைப்பு பத்திரத்தின் பிரகாரம் திகதி 2023 மார்ச் 15 ஆந் திகதி கேள்வி முடிவடைந்த திகதி 2023 மார்ச் 17 ஆம் திகதியாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன், கேள்விக்காக 03 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்காக ஒரு கேள்விதாரர் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்திருந்ததுடன், 2023 மார்ச் 28 ஆம் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் அந்த கேள்விதாரருக்கு பெறுகை கைளிப்பதற்கும் சமர்ப்பிக்கப்பட்ட விலையினை குறைத்துக் கொள்வதற்கும் கலந்துரையாடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. பொதியொன்றின் விலை ரூபா 1,600 முதல் 1,250 வரை குறைப்பதற்கு கேள்விதாரர் இணக்கம் தெரிவித்தமை காரணமாக 2023 ஏப்ரல் 12 ஆம் திகதி பெறுகைக் குழு பெறுகை ஒரே கேள்விதாரருக்கு கையிப்பதற்கு தீர்மானித்திருந்தது. எனினும், அந்த விலை மதிப்பீடு செய்யப்பட்ட அலகொன்றின் கிரயத்துடன் ஒப்பிடும் போது 619 சதவீத அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சராசரி கட்டளையின் போது இந்த உரைகள் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட விலை ரூபா 247.50 ஆனமையால் அவசர கட்டளை மூலம் மருந்துகள் கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்ததனால் சராசரி கட்டளையின் அலகொன்றின் விலையில் 405 சதவீத விலை அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன், அதன் காரணமாக செலவிட வேண்டிய மேலதிக கிரயம் ரூபா 7,518,750 ஆகும்.

(i) 2023 மே 12 ஆம் திகதிய LP/DHS/EP/3736/2023 என்ற பொருள் அனுப்பல் கோரிக்கை இன் பிரகாரம் இந்த இருப்பு 2023 யூன் 08 ஆம் திகதி வழங்க வேண்டியிருந்த போதிலும், அது வரையிலும் வழங்குனர் மருந்து ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) 2024 மார்ச் 12 ஆம் திகதி வரையில் கணனி முறைமையை பரீட்சித்த போது இந்த கட்டளைகளுக்குரிய இருப்பு கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே 2021 ஆம் ஆண்டில் கட்டளைக்குரிய 2022 ஏப்ரல் 01 ஆம் திகதி கிடைத்த 22,000 உறை இருப்புக்கள் 2023 மார்ச் 22 ஆம் திகதி பாவணையில் இருந்து அகற்றுமாறு அறிவிக்கப்பட்டதன் காரணமாக அத்திகதி முதல் கணக்காய்வு திகதி வரையிலும் 2024 மார்ச் 12 வரையில் ஒட்டுமொத்த இயற்கை முறைமையின் பிரகாரம் இந்த மருந்துகள் மருத்துவ வழங்கல் பிரிவிலும் தேசிய மட்டத்திலும் இருப்பு பூச்சியமாக காணப்பட்டது.

28. <u>Timolol Eye Drops 0.5% 5ml vial (SR No.00901702)</u>

2022 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளையிடல் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன், 2022 மார்ச் 25 ஆம் திகதிய இந்த மருந்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 2,958,400 ஆன 80,000 அலகுகள் கட்டளையொன்று மருத்துவ வழங்கல் பிரிவினால் வழங்கப்பட்டிருந்தது. கட்டளையின் பிரகாரம் 40,000 அலகுகள் 2022 ஏப்ரல் 30 ஆம் திகதி மற்றும் 40,000 அலகுகள் 2022 யூன் 30 ஆம் திகதி வரையிலும், இந்திய கடன் வசதியின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கேள்வி கோரலில் 03 நிறுவனங்களில் இருந்து கேள்வி சமர்ப்பிக்கப்பட்டதுடன், ஆகக்

குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு மருந்துகளுக்காக ஒளடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழ் பெற்றுக் கொள்வதன் கீழ் அலகொன்று ஐ.அ.டொலர் 0.162 வீதம் ஐ.அ.டொலர் 12,960 பெறுமதியில் கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. இந்த பெறுகைகளுக்குரிய வழங்கல் கால அட்டவணை மருத்துவ வழங்கல் பிரிவினால் திருத்தப்பட்டிருந்ததுடன், 2022 யூன் 08 ஆம் திகதிய இலத்திரனியல் தபால் மூலம் இது தொடர்பாக வழங்குனர் நிறுவனம் அறிவித்திருந்தது. அதன் பிரகாரம் 40,000 அலகுகள் உடனடியாகவும் மற்றும் மிகுதி 02 மாதங்களுக்குள் நிறுவனத்திற்கு வழங்க வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் வழங்குதல் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. விரைவாக இருப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கில் அவசர பெறுகையான இந்த பெறுகை பெற்றுக் கொள்ளப்பட்ட போதிலும், வழங்குனர் ஒளடதம் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழ் 2022 செப்டம்பர் 26 ஆம் திகதியே விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 செப்டம்பர் 27 ஆம் திகதிய இலக்கம் DHS/ICL/IG/296/22 என்ற பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், 2022 நவம்பர் 30 ஆம் திகதி மற்றும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 40,000 மருந்து அலகுககள் வீதம் வழங்க வேண்டியிருந்தது. எனினும் இந்த இருப்பு ஒரே தடவையில் மருந்துவ வழங்கல் பிரிவின் இருப்பு கோரப்பட்ட திகதியில் இருந்து 06 மாத கால தாமதத்தின் பின்னர் 2023 மே 30 ஆம் திகதியே கிடைத்திருந்தது.

29. <u>Nepafenac Ophthalmic Suspension 0.1% 3ml - 5ml vial (SR No.00903201)</u>

2021 இன் சராசரி கட்டளைக்குரிய மேற்கூறப்பட்ட மருந்தில் 87,500 அலகுகள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், கொரோனா தொற்று நோயின் காரணமாக மருந்துக்கு ஏற்பட்டுள்ள கேள்வி குறைவடைந்தமை கவனத்தில் கொண்டு 30,000 அலகுகள் மாத்திரம் 2022 ஏப்ரல் 08 ஆம் திகதியில் உள்ளவாறு வழங்குவதற்கும், மிகுதி 57,500 அலகுகளை கொண்டுவருவதை கைவிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளை அமுல்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்திய கடன் முன்மொழி திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யும் எதிர்பார்ப்பில் 2022 மார்ச் 25 ஆம் திகதிய மேற்கூறப்பட்ட கட்டளையின் படி ரூபா 45,000,000 மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தில் இந்த மருந்தில் 45,000 குப்பிகள் கோரப்பட்டிருந்தது. இதன் கீழ் 22,500 குப்பிகள் 2022 ஏப்ரல் 30 இல் உள்ளவாறும், 22,500 குப்பிகள் 2022 யூன் 30 ஆம் திகதியில் உள்ளவாறும் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதற்குரிய பத்திரிகை அறிவித்தல் மூலம் மற்றும் பதிவு செய்த இந்திய வழங்குனரிடம் இருந்து கேள்வி கோரப்பட்டிருந்ததுடன், கேள்வி கோரும் போது 04 நாட்கள் காலம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் படி ஒரு கேள்விதாரர் மாத்திரம் கேள்வி சமர்ப்பித்திருந்தார். 2022 ஏப்ரல் 22 ஆம் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கை வழங்கப்பட்டிருந்ததுடன், கேள்வி திறக்கப்பட்ட திகதியில் இருந்து அதற்காக 21 நாள் காலம் எடுத்திருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட பெறுகை குழு 2022 ஏப்ரல் 25 ஆம் திகதி கூடியிருந்ததுடன், அதன் போது ஒரே ஒரு கேள்விதாரருடன் கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கேள்விதாரர் அலகொன்றின் கேள்வி விலை ரூபா 670 முதல் ரூபா 636.50 வரை குறைப்பதற்கு இணங்கியிருந்தமையால் அலகொன்று ஐ.அ.டொலர் 2.1287 வீதம் 45,000 அலகுகளுக்காக ஐ.அ.டொலர் 95,791.50 இற்கு கேள்வி கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இலக்கம் DHS/ICL/AMS/186/2022 என்ற பொருள் அனுப்பல் கோரிக்கை 2022 திசெம்பர் 31 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், 22,500 குப்பிகளில் 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதியிலும், 22,500 குப்பிகள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் வழங்க வேண்டியிருந்தது. எனினும், அதற்குரிய மருந்து குப்பிகள் 07 மாத தாமதத்தின் பின்னர் 2023 மே 30 ஆம் திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கேள்வி கோருவதற்காக 04 நாட்கள் ஆன குறுகிய காலம் வழங்கப்பட்டமையால் கேள்விக்காக போட்டியாளர் விலைகளை பெற்றுக் கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய சராசரி கட்டளை உரிய பிரகாரம் அமுல்படுத்தப்படாமை மற்றும் கேள்வி சமர்ப்பித்த ஒரே ஒரு கேள்விதாரருக்கு கேள்வி கையளிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டதன் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் ஐ.அ.டொலர் 1.6438 அதிகரித்த பெறுமதியில் கேள்வி கையளிப்பதற்கு ஏற்பட்டமையால் கடந்த சராசரி கட்டளை விலையுடன் ஒப்பிடும் போது 338 சதவீத அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) மேற்கூறப்பட்ட கேள்விக்காக ரூபா 670 கேள்வியொன்று சமர்ப்பித்திருந்த போதிலும் ரூபா 636.50 இற்கு விலை குறைப்பதற்கு இணங்கியதன் காரணமாக ஒரே கேள்விதாரருக்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்த போதிலும், கேள்வி பெறுமதியில் செலுத்துவதற்கு ஏற்படுகின்ற உள்ளபடியாக அலகொன்றுக்கு ரூபா 668.59 செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கேள்வி வழங்கியதால் சேமித்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகை சேமிப்பதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

30. <u>Epirubicin HCL Ing 10mg vial (SR No. 01201201)</u>

(அ) இந்த மருந்துக்கு உரிய 2022 ஆம் ஆண்டின் சராசரி கட்டளையின் கீழ் 250 அலகுகளை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், பெறுகைகள் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரின் 2021 செப்டம்பர் 23 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் நிறுத்தப்பட்டிருக்கும் போது இந்திய கடன் வசதியின் கீழ் கொள்வனவு செய்வதற்காக 2022 மார்ச் 25 ஆம் திகதி மருத்துவ வழங்கல் பிரிவினால் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு முறைமை ஊடாக கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 ஒக்டோபர் 01 இல் உள்ளவாறு மருந்து இருப்பை பெற்றுக் கொள்வற்கு தேவை இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன், 2022 மார்ச் 26 ஆம் திகதி பெறுகை அறிவித்தலின் பிரகாரம் 2022 மார்ச் 31 ஆம் திகதியில் கூறுவிலை கோரல் முடிவடைந்திருந்தது. அந்த திகதியில் கூறுவிலை திறக்கும் போது ஒரு வழங்குனர் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்திருந்ததுடன், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சான்றிதழும் வழங்கப்பட்டிருக்கவில்லை. பெறுகை தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கை 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், பெறுகை குழு அத்திகதியில் கூடியிருந்தது. இந்த பெறுகைகளின் போது கூறுவிலை சமர்ப்பிப்பதற்கு 04 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த கூறுவிலை மதிப்பீட்டிற்கு ஒரு மாதத்திற்கு அண்மித்த காலம் எடுத்திருந்தது. அதனால் போட்டியாளர் போட்டி வழங்குனர்களை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி சிறிய பெறுகை குழு வழங்குனர் சமர்ப்பித்த ரூபா 6,700 ஆன கேள்வி விலையினை குறைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், அதன் பிரகாரம் அலகின் விலை ரூபா 6,365 வரை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த மருந்தின் மதிப்பீடு செய்யப்பட்ட அலகின் விலை ரூபா 667.09 ஆக இருந்ததுடன், இந்த வழங்கல் விலை அந்த விலையில் 854 சதவீத விலை அதிகரிப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் பெறுகைக் குழுவின் படி அந்த மருந்தின் அண்ணளவாக கொள்வனவு விலை ரூபா 608 ஆகும். மீண்டும் பெறுகைக் குழு 2022 யூன் 15 ஆம் திகதி அதாவது, ஆரம்ப பெறுகையில் இருந்து 50 நாட்களுக்கு பின்னர் ரூபா 6,365 வீதம் 250 குப்பிகள் கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்திருந்தது. இந்த மருந்து பெறுகைகள் தொடர்பாக பெறுகைக் குழு மந்த கதியில் நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், உரிய வழங்குனருக்கு கேள்வி கையளித்தல் கடிதம் 2022 யூலை 25 ஆம் திகதி அதாவது பெறுகையின் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் கடந்ததன் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், உரிய வழங்குனர் 2022 யூலை 26 ஆம் திகதி அந்த கையளித்தலை கையேற்றிருந்தார். பெறுகைக் குழுவினால் பொருள் அனுப்பல் கோரிக்கை உரிய உற்பத்தியாளருக்கு அனுப்புதல் 2022 செப்டம்பர் 07 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், பெறுகையின் பின்னர் 03 மாதங்களுக்கு அண்மித்த காலம் கடந்தன் பின்னர் இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த மருந்திக்காக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவில் இருந்து விடுவித்தல்

சான்றிதழ் பெற்றிருந்த போதிலும், அதிகார சபையால் இந்த மருந்தின் தரம், பாதுகாப்பு மற்றும் செயற்திறன் (Quality, Safety & Efficiency) தொடர்பாக பொறுப்புக்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கும், பெறுகை குழுவிற்கு கையளித்தன் மூலம் அந்த நிறுவனம் தனது பொறுப்பிலிருந்து விலகியிருந்தது.

(ஆ) மேற்கூறப்பட்ட மருந்தில் 2023 ஆம் ஆண்டில் சராசரி தேவைக்காக 500 குப்பிகளை பெறுவதற்கு 2022 நவம்பர் 16 ஆம் திகதி முறைமை ஊடாக கோரப்பட்டிருந்ததுடன், 2022 நவம்பர் 22 ஆம் திகதி எழுத்து மூலம் கோரப்பட்டிருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவினால் இந்த கோரிக்கை சமர்ப்பிக்கும் போது 300 குப்பிகள் 2023 சனவரி 12 ஆம் திகதியும், 200 குப்பிகள் 2023 ஏப்ரல் 12 ஆம் திகதி வரையிலும் பெற்றுக் கொள்வதற்கு தேவையான இருந்தமை அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த மருந்துகளை பெற்றுக்கொள்வதற்காக 2023 பெப்ரவரி 13 ஆம் திகதி கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன். அதற்காக 11 நாட்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், பெறுகை தீர்மானத்திற்காக 10 வாரங்கள் அளவிலான காலம் எடுத்திருந்தது. 2023 மே 09 ஆம் திகதி பெறுகை குழு 500 தடுப்பூசி குப்பிகளில் ஒரு குப்பியொன்று ரூபா 1,687 வீதம் கிரயம் ரூபா 843,500 தொகையில் கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்திருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட விலையான ரூபா 676 உடன் ஒப்பிடும் போது 150 சதவீத விலை அதிகரிப்பாகும். இந்த பெறுகைக் குழு கூட்டம் 2023 மே 09 ஆம் திகதி வரையில் மருத்துவ வழங்கல் பிரிவில் அது தேசியும் எந்தவொரு இருப்பும் காணப்படாதிருந்தமை குறிப்பிடப்பட்டதுடன், வழங்குனரும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவு விடுத்தல் சான்றிதழ் (WOR) பெற வேண்டியிருந்தது. இந்த பெறுகை கையளித்தல் 2023 யூன் 02 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அது வரையில் பெறுகைக் குழு தீர்மானம் கிடைத்து 03 வாரங்கள் அளவில் எடுத்திருந்தது. இதற்காக 2023 நவம்பர் 15 ஆம் திகதி வரையிலும் பொருள் அனுப்பல் கோரிக்கை ஒன்று விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

பின்னர் மருத்துவ வழங்கல் பிரிவினால் 2023 பெப்ரவரி 02 ஆம் திகதிய கட்டளையின் படி இந்த மருந்தில் 175 தடுப்பூசிகள் 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி வரையிலும் கொள்வனவு செய்வதற்கு தேவையிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த மருந்துகள் அவசர கொள்வனவாக பெறுகை செய்வதற்கு 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி கூறுவிலை கோரல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2023 பெப்ரவரி 17 ஆம் திகதி முடிவடைந்திருந்தது. கூறுவிலை கோருவதற்காக 03 நாட்கள் அளவில் வழங்கப்பட்டிருந்த போதிலும், பெறுகைத் தீர்மானம் 2023 மார்ச் 21 ஆம் திகதி பெறுகைகளுக்காக ஒரு மாத காலம் மேலதிக எடுத்து வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் மேலும் அவதானிக்கப்பட்டன.

(i) இரண்டாவது கூறுவிலை சமர்ப்பித்த வழங்குனருக்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழின் அடிப்படையில் ஒரு தடுப்பூசி ரூபா 3,040 வீதம் 175 குப்பிகள் ரூபா 532,000 விலையில் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த பெறுகை விலை அதன் மதிப்பீடு செய்யப்பட்ட விலையான ரூபா 676 இனை விட 349 சதவீத விலை அதிகரிப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2023 ஏப்ரல் 21 ஆம் திகதி பொருள் அனுப்பல் கோரிக்கையின் படி இந்த மருந்துகள் 2023 மே 28 ஆம் திகதி கிடைக்க வேண்டியிருந்த போதும் அது 2023 ஆகஸ்ட் 04 ஆம் திகதி கிடைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த அவசர பெறுகைகளுக்கு உரியதாக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் வழங்கிய கேள்வி ஆவணங்களுக்கு இணங்க 02 வாரங்களில் மருந்து வழங்குதல் மேற்கொள்ளக் கூடியதாக இருந்தமை அறிவிக்கப்பட்டதுடன், வழங்குனர் தெரிவு செய்யும் போது இது தொடர்பாக

கவனத்தில் கொண்டு பெறுகை கையளிக்கப்பட்ட போதும், இருப்பு வழங்க வேண்டிய திகதியில் இருந்து 02 மாத காலம் தாமதமாகி வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.10 (ஆ) வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தத்தின் செயலாற்றல் வெற்றியழிக்காதவிடத்து அதில் பெறுகை நிறுவனத்தை பாதுகாப்பதற்காக, செயலாற்றல் பிணை முறியை சமர்ப்பிக்குமாறும் மற்றும் கேள்வி திறத்தல் ஆவணத்தின் இரண்டாவது பகுதியில் 6 வது பிரிவின் பிரகாரம் செயலாற்றல் பிணை முறி பெறவேண்டியிருந்த போதும், சுகாதார அமைச்சின் செயலாளரின் SH/PSRP/01/SPC/2021 என்ற 2023 சனவரி 10 ஆம் திகதிய கடிதத்தின் அடிப்படையில் செயலாற்றல் பிணை முறியை பெற்றுக் கொள்வதற்கு பதிலாக வழங்குனருக்கு செலுத்த வேண்டிய பெறுமதியில் 10 சதவீதம் தொகை வழங்கல் பூர்த்தி செய்து 30 நாட்கள் வரை நிறுத்தி வைக்குமாறு அறிவிக்கப்பட்டதன் காரணமாக செயலாற்றல் பிணை முறியொன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2023 யூன் 09 ஆம் திகதி இலக்கம் NMRA/EA/WOR/MED/SPC/03/025/23 என்ற பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழ் கிடைத்திருந்த போதிலும், அந்த சான்றிதழ் விநியோகித்த தேசிய ஒளடதங்கள் அதிகார சபையால் இந்த மருந்தின் தரம், பாதுகாப்பு மற்றும் செயற்திறன் தொடர்பான பொறுப்புக்கள் (Quality, Safety & Efficiency) பெறுகைகளுக்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் பெறுகை குழுவிற்கு கைளிப்பதன் மூலம் அந்த நிறுவனம் பொறுப்பில் இருந்து நீங்கியிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) மேற்கூறப்பட்ட மருந்தின் மருத்துவ வழங்கல் பிரிவின் மூலம் 250 குப்பிகள் அவசர கொள்வனவாக கொள்வனவு செய்வதற்காக 2023 சனவரி 30 ஆம் திகதி கோரிக்கை விடப்பட்டிருந்தது. இதற்காக சுகாதார அவசர பெறுகை குழு 2023 மார்ச் 22 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்ததுடன், 2023 மார்ச் 27 ஆம் கேள்வி கோரப்பட்டு கேள்வி சமர்ப்பிப்பதற்கு 03 நாட்கள் காலம் அளவில் வழங்கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அதில் 03 வாரங்களுக்கு அண்மித்த காலம் கடந்த 2023 ஏப்ரல் 24 ஆம் திகதி கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த பெறுகைகளுக்காக முன்வந்த 06 வழங்குனர்களுக்காக தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் சான்றிதழ் பெறப்படாதிருந்ததுடன், 02 நிறுவனங்களால் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் சான்றிதழ் (NMRA Manufacturing Site Approval) சமர்ப்பிக்கப்பட்டமையும் அதனிடையே ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு கேள்வி மதிப்பீட்டின் திகதியில் இருந்து 20 நாட்களுக்கு பின்னர் அதாவது 2023 மே 12 ஆம் திகதி சுகாதார அமைச்சு அவசர பெறுகை குழுவினால் 250 அலகுகள் ஒரு அலகு ரூபா 2,948 வீதம் கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்திருந்தது. இந்த பெறுகை விலை அதன் மதிப்பீடு செய்யப்பட்ட விலையான ரூபா 676 உடன் ஒப்பிடும் போது 336 சதவீதம் அதிகரித்திருந்தது. 2023 மே 12 ஆம் திகதிய பெறுகை குழுவின் போது இந்த விடயங்களில் இருப்பு காணப்படாதிருந்தமையும் அதன் காரணமாக தாமதம் இன்றி பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தமையும் குறிப்பிடப்பட்ட போதிலும், மேற்கூறப்பட்ட பெறுகை தீர்மானத்தின் படி 2023 யூன் 16 ஆம் திகதி அதாவது பெறுகையில் இருந்து ஒரு மாதத்தை விஞ்சியதன் பின்னா பொருள் அனுப்பல் கோரிக்கை ஒன்று விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த கட்டளைக்குரிய பதிவு விடுவித்தல் சான்றுதழுக்காக 2023 செப்டம்பர் 04 ஆம் திகதி கோரப்பட்ட போதிலும், கிடைக்கப் பெற்ற தகவல்கள் கோவையில் காணப்படவில்லை. எனினும், பொருள் அனுப்பல் கோரிக்கையின் பிரகாரம் 2023 யூலை 30 ஆம் திகதி வரையில் மருந்துகள் கிடைக்க வேண்டிய போதிலும், கணக்காய்வு திகதியான 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதி வரையில் தடுப்பூசி இருப்புக்கள் கிடைத்திருக்கவில்லை.

ஒட்டு மொத்த முறைமையின் பிரகாரம் 2024 மார்ச் 11 ஆம் திகதி வரையிலும் இந்த இருப்புக்கள் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) 2023 மே 25 ஆம் திகதி மருத்துவ வழங்கல் பிரிவினால் மருந்துகளில் 1,500 அலகுகளுக்காக கட்டளையொன்று சமர்ப்பிக்கப்பட்டதுன், இந்திய கடன் வசதியின் கீழ் கொள்வனவு செய்யும் எதிர்பார்ப்பில் 2023 யூன் 15 ஆம் திகதி சுகாதார பிரிவின் அவசர பெறுகைக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. 2023 யூன் 16 ஆம் திகதி கேள்வி கையேற்றல் முடிவடைந்திருந்ததுடன், 2023 யூன் 27 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு நடாத்தப்பட்டிருந்தது. பெறுகைக் குழு 2023 யூன் 28 ஆம் திகதி கூடியிருந்ததுடன், சமர்ப்பித்த 06 வழங்குனர்களுக்கு இடையே தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் சான்றுதழ் உள்ள இரண்டாவது ஆகக் குறைந்த விலையில் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு பெறுகை கையளிப்பதற்கு அவசர பெறுகைக் குழு தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் ஒரு தடுப்பபூசி ரூபா 1,500 வீதம் 1,500 தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட விலையான ரூபா 676 உடன் ஒப்பிடும் போது 122 சதவீத விலை அதிகரிப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த அவசர பெறுகைகளுக்காக இதற்காக பொருள் அனுப்பல் கோரிக்கை பெறுகை தீர்மானம் கிடைத்து 02 மாதங்களின் பின்னர் 2023 செப்டம்பர் 07 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. பொருள் அனுப்பல் கோரிக்கையின் பிரகாரம் இந்த மருந்துகள் 2023 திசெம்பர் 11 ஆம் திகதி வழங்க வேண்டியிருந்த போதிலும், 02 மாத தாமதத்தின் பின்னர் இருப்பு 2024 பெப்ரவரி 19 ஆம் திகதியே கிடைத்திருந்தது. மேற்கூறப்பட்ட விடயங்களின் பிரகாரம் அவசர தேவையொன்றாக காண்பிக்கப்பட்ட போதும், இந்த மருந்துகளை கொள்வனவு செய்யும் செயற்பாட்டில் மந்தகதியான நிலைமை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

31. <u>Natamycin Ophthalmic Suspension 5% in 15 ml Dropper Bottle (SR No.00904901)</u>

(அ) 2022 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளையிடல் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன், 2022 மார்ச் 25 ஆம் திகதிய கட்டளை மூலம் மொத்த கிரயம் ரூபா 6,659,120 ஆன 19,000 மருந்து குப்பிகள் 2022 ஏப்ரல் 30 ஆம் திகதியிலும், 2022 யூன் 30 ஆம் திகதியிலும் உள்ளவாறு 9,500 அலகுகள் வீதம் இந்திய கடன் உத்தேச திட்டத்தின் கீழ் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2022 மார்ச் 26 ஆம் திகதி கேள்வி கோரப்பட்டிருந்ததுடன், 2022 மார்ச் 31 ஆம் திகதி திறக்கப்பட்டிருந்தது. ஒரு கேள்வியாளர் மாத்திரம் கேள்வி சமர்ப்பித்திருந்ததுடன், 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு தீர்மானம் மற்றும் 2022 ஏப்ரல் 27 ஆம் திகதி திணைக்கள சிறு பெறுகை குழுவின் தீர்மானத்தின் படி சமர்ப்பிக்கப்பட்ட அலகொன்றின் கேள்வி விலை மதிப்பீடு செய்யப்பட்ட விலை மற்றும் முன்னர் வழங்கிய விலைகளுக்கு இடையே கணிசமான வேறுபாடுகள் காணப்படுகின்றமையால் வழங்குனருடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(i) இந்த கேள்வி கோரல் அவசர பெறுகையாக செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், கேள்வி கோருவதற்கு 04 நாட்கள் ஆன குறுகிய காலம் வழங்கப்பட்டமையின் காரணமாக இந்த பெறுகை உரிய போட்டி நிலைமைக்கு அனுப்ப முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. வழங்குனர் கேள்வி சமர்ப்பித்த அலகொன்றின் விலை ரூபா 970 முதல் ரூபா 893 வரை குறைப்பதற்கு இணங்கி அந்த 19,000 குப்பிகளின் விலை அலகொன்று ஐ.அ.டொலர் 2.99 வீதம் மொத்த கிரயம் ஐ.அ.டொலர் 56,810 தொகையில் கொள்வனவு செய்வதற்கு 2022 யூன் 15 ஆம் திகதி பெறுகைக் குழு தீர்மானித்திருந்தது. இதன் காரணமாக கடந்த அண்மைய காலத்தில் கொள்வனவு விலைகளை விட அலகொன்றுக்காக 248 சதவீத அதிகரிப்புடன், மதிப்பீடு செய்யப்பட்ட அலகினை விட 154 சதவீதம் அதிகரித்து செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ii) அவசர கொள்வனவாக கேள்வி கோரியிருக்கும் போது மற்றும் கேள்விதாரர் கேள்வி சமர்ப்பிக்கும் போது 14 நாட்களுக்குள் வழங்க வேண்டி இருந்தமை காண்பிக்கப்பட்டிருக்கும் போது 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதி பொருள் அனுப்பல் கோரிக்கை இன் பிரகாரம் 2022 நவம்பர் மற்றும் திசெம்பர் 30 ஆம் திகதிகளின் போது 9,500 அலகுககள் வீதம் வழங்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டதன் காரணமாக இந்த பெறுகைகள் அவசர தேவையொன்றாக இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. எனினும் இந்த மருந்து இருப்பு மேற்கூறப்பட்ட திகதியில் வழங்கப்படாதிருந்ததுடன், 04 மாத அளவிலான கால தாமதத்தின் பின்னர் 2023 ஏப்ரல் 04 ஆம் திகதி மருந்து இருப்புக்கள் ஒரே தடவையில் வழங்கப்பட்டிருந்தது.

(iii) மேற்கூறப்பட்ட பெறுகைகளுக்குரிய கேள்வி ரூபாய் பெறுமதியில் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், ஐ.அ.டொலர் பெறுமதியில் செலுத்துவதற்கு ஏற்பட்டமையால் அலகொன்றுக்கு ரூபா 990.82 வீதம் செலுத்த வேண்டி ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட சேமிப்பை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்ததுடன், கிடைக்கப் பெற்ற விலையினை விட ரூபா 97.82 அதாவது மொத்த பெறுமதி ரூபா 1,858,580 மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2023 இன் சராசரி கட்டளையின் கீழ் இந்த மருந்தில் 10,000 அலகுகளைக் கொள்வனவு செய்வதற்குரிய 2022 நவம்பர் 15 ஆம் திகதிய கட்டளையின் படி 2023 சனவரி 10 இலும், 2023 ஏப்ரல் 03 ஆம் திகதியிலும் 5,000 அலகுகள் வீதம் மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் 3,504,800 ஆன 10,000 மருந்து அலகுகள் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்க பட்டிருந்தது. இது தொடர்பாக 2022 திசெம்பர் 21 ஆம் திகதி கேள்வி கோரி 2023 சனவரி 05 ஆம் திகதி கேள்வி கோரல் முடிவடைந்திருந்தது. அதன் பிரகாரம் இரண்டு கேள்விதாரர்கள் கூறுவிலை சமர்பித்திருந்ததுடன் ஆகக் குறைந்த கூறுவிலை சமர்பித்த கேள்விதாரருக்கு மருந்து குப்பியொன்று ரூபா 750 வீதம் ரூபா 7,500,000 ஆன மெத்த கிரயத்திற்கும் ஆயுட்காலம் 18 மாதங்களுடன் இந்த மருந்து மருத்து வழங்கல் பிரிவு ஏற்றுக் கொள்ளலின் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு 2023 சனவரி 23 ஆம் திகதி திணைக்களப் பெறுகைக்குழு தீர்மானித்திருந்தது. கேள்விதாரரின் அலகொன்றின் விலை மதிப்பீடு செய்யப்பட்ட அலகொன்றின் விலையினை விட 113 சதவீத விலை அதிகரிப்பொன்று விலை அதிகரிக்கப்பட்டது. எனினும் பெறுகை கையளித்தல் 2023 பெப்ரவரி 20 ஆம் திகதிய கடிதம் குயஒ மூலம் அனுப்பப்பட்டிருந்ததுடன் அதன்பிரகாரம் 5,000 அலகுகள் உடனடியாகவும், மிகுதி 5,000 அலகுகள் 02 மாதங்களுக்கு பின்னர் வழங்க வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு உரிய நிறுவனத்தால் அனுப்பப்பட்ட 2023 மார்ச் 01 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் 5,000 அலகுகள் 2023 மே இலும் முதலாவது இருப்பிற்காக கொடுப்பனவு செய்த பின்னர் 60 நாட்களுக்குள் மிகுதி அலகுகளின் அலகை வழங்கவும் அறிவிக்கப்பட்டிருந்தது. 2018 முதல் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளுக்கான ரூபா 437.7 மில்லியன் பற்றுச்சீட்டுக்களை தீர்த்தல் தாமதமடைந்தமை மேற்கூறப்பட்ட வழங்குனரால் மருந்து வழங்குவதற்கு தாமதிக்கப்பட்டதாக கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பம் வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவின் மருந்து பூச்சிய நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் இந்த இருப்புப் பற்றாக்குறை நிலைமை 2022 இன் கட்டளைகளுக்குரியதாக வழங்கப்பட்ட 19,000 அலகான மருந்து இருப்புக்கள் 2023 ஏப்ரல் 04 ஆம் திகதி கிடைக்கும் வரை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டமை. சுய கணனி முறைமையின் பிரகாரம் மேற்கூறப்பட்ட கட்டளையின் பிரகாரம் 2024 மார்ச் 12 ஆம் திகதி வரையிலும் பொருள் அனுப்பல் கோரிக்கை ஒன்று விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

32. <u>Chlorambucil Tabs BP/usp 2mg (SR - 01200201)</u>

(அ) 2022 ஆம் ஆண்டின் வருடாந்த தேவையாக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 10,309,500 ஆன இந்த மருந்தில் 30,000 மாத்திரைகள் இந்திய கடன் உத்தேச திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்கு 2022 மார்ச் 25 ஆம் திகதி கட்டளையொன்று அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்தக் கட்டளையின் கீழ் 2022 ஏப்ரல் 01, ஆகஸ்ட் 31 மற்றும் நவம்பர் 30 இல் உள்ளவாறு 10,000 மாத்திரைகள் வீதம் வழங்க வேண்டியிருந்தது. இந்த பெறுகைகளுக்காக 2022 மார்ச் 26 ஆம் திகதி கேள்வி கோரப்பட்டிருந்தது. பெறுகைகளுக்காக கேள்விதாரர் இருவர் சமர்ப்பித்திருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் 2022 மார்ச் 31 ஆம் திகதி கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2022 ஏப்ரல் 27 ஆம் திகதி திணைக்கள சிறு பெறுகைக்குழுவினால் ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையில் செல்லுபடியான பதிவு இன்றிய ஆகக் குறைந்த விலை சமர்பித்த கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்திய கடன் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் மருந்துகளை வழங்குவதற்கு இணக்கம் பெறப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(i) இந்த மருந்துகளுக்காக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவிலிருந்து விடுவிக்கும் சான்றிதழ் பெற்றிருந்த போதிலும் அதிகார சபையால் இந்த மருந்தின் தரத் தன்மை, பாதுகாப்பு மற்றும் செயற்றிறன் (Quality, Safety & Efficiency) தொடர்பாக பொறுப்புக்கள் பெறுகைக்குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு கையளித்தன் மூலம் அந்த நிறுவனங்களை பொறுப்பிலிருந்து விலகியிருந்தது.

(ii) இந்திய கடன் முன்மொழிவு திட்டத்தின் கீழ் மருந்துகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்து அரச மருந்தக கூட்டுத்தாபனம் 2022 யூன் 02 ஆம் திகதி இலத்திரனியல் செய்தியொன்று அனுப்பியிருந்ததுடன் அதற்காக பெறுகை தீர்மானத்தில் இருந்து 36 நாள் காலம் எடுத்திருந்தது. வழங்குனர் அந்த இணக்கப்பாடு மற்றும் சமர்பித்த விலையில் 5 சதவீதம் குறைப்பதற்கு இணங்கியிருந்த போதும் 2022 யூன் 15 ஆம் திகதிய பெறுகைக்குழு மருந்து மாத்திரை ரூபா 551 அதாவது ஐ.அ.டொலர் 1.84 இற்கு பொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது. இந்தக் கட்டளை கையளிக்கும் கடிதம் 2022 யூலை 25 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் பெறுகை அங்கீகாரத்தில் இருந்து அதற்காக 40 நாள் காலம் எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) பொருள் அனுப்பல் கோரிக்கையின் பிரகாரம் 30,000 மாத்திரைகள் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வழங்க வேண்டியிருந்த போதிலும் 2023 மே 19 ஆம் திகதி மருந்து இருப்புக்கள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2024 மார்ச் 12 ஆம் திகதி வரையிலும் இருப்பு பெறுவனவு தொடர்பாக நிரந்தர கணனி முறைமை தற்காலிக முறைமையினால் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. இந்த கட்டளைக்குரிய மருந்து இருப்புக்கள் உரிய திகதியில் கிடைக்காமையின் காரணமாக அந்த ஆண்டின் அவசரக் கொள்வனவு செய்வதற்கு செல்வதற்கும் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) இந்திய கடன் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் கட்டளையிடப்பட்ட மருந்துகள் குறித்துரைத்த கால அட்டவணையில் கிடைக்காமையில் காரணமாக மருத்துவ வழங்கல் பிரிவினால் விநியோகிக்கப்பட்ட இந்த 2,500 மருந்து அலகுகளின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 859,125 ஆன அவசர கட்டளை 2022 யூன் 28 ஆம் திகதி கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கபப்ட்டிருந்தது. MSMIS கணனி முறைமையின்படி மருத்து வழங்கல் பிரிவின் மருந்து பூச்சிய நிலையில் காணப்பட்டது. பெறுகைகளுக்காக சமர்பித்த வழங்குனர்கள் இருவரும் பதிவு

சான்றுதழ் இன்றி இருந்தமை மற்றும் மாதிரிகள் சமர்பிக்காமையின் காரணமாக மீண்டும் கூறுவிலை கூறுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(i) இந்த மருந்து புற்றுநோய் நோயாளிகளுக்காக வழங்குகின்ற மருந்தாக இருந்தமையால் தற்போது வைத்தியசாலைக்கு சொந்தமாக இருப்பு காணப்படாமையின் காரணமாகவும், கடந்த வழங்குனர் 15 நாட்களுக்குள் மருந்தை வழங்குவதற்கு முடியுமாக இருந்தமை கேள்வி ஆவணத்தில் காண்பிக்கப்பட்டமையால் அந்த வழங்குனருடன் கலந்துரையாடி ரூபா 3,100 மாத்திரைக்கான கேள்வி விலை ரூபா 2,000 வரை குறைத்து கொள்வனவு செய்வதற்கு 2022 ஆகஸ்ட் 16 ஆம் திகதி சுகாதார பிரிவின் அவசர பெறுகைக்குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்தப் பெறுகைக்குழுவின் அவசர பெறுகையின் அலகொன்றின் கிரயம் கடந்த பெறுகையின் அலகொன்றின் கிரயத்துடன் ஒப்பிடும் போது 262 சதவீத மதிப்பீடு செய்யப்பட்ட அலகொன்றின் கிரயத்தின் மதிப்புடன் ஒப்பிடும்போது 482 சதவீத விலை அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) அவசர கொள்வனவுகளாக இருந்த போதும் பெறுகைத் தீர்மானத்திலிருந்து 15 நாள் கால தாமதத்தின் கீழ் 2022 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வழங்குனருக்கு இன்டென்றுவின் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் மருந்தில் 2,500 மாத்திரைகள் 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி வழங்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் இந்த மருந்துகள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு ஒரு மாத கால தாமதத்தின் பின்னர் 2022 நவம்பர் 15 ஆம் திகதி கிடைத்திருந்தது.

(iii) தொழில்நுட்ப மதிப்பீட்டக் குழுவினால் இரண்டு வழங்குனர்களும் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகைக் குழுவினால் கேள்விதாரர் தெரிவு செய்த போதிலும் 15 நாட்களின் போது மருந்து வழங்குவதற்கு முடியுமாக இருந்தமை தொடர்பாக மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்த போதிலும் வழங்குனருக்கு இந்த மருந்துகள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு பெறுகைத் தீர்மான திகதியில் இருந்து 89 நாள் காலம் எடுத்திருந்தது.

(iv) கேள்விதாரர் இருவரும் உற்பத்தியாளர் ஒரே இந்திய கம்பனியாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், தெரிவு செய்யப்படாத ஆகக் குறைந்த கேள்விதாரர் மருந்து வழங்குவதற்கு நாணயக் கடிதம் திறந்த திகதியில் இருந்து 45 நாள் காலத்தில் மருந்து வழங்க முடியும் என அறிவித்தமையின் காரணமாக பெறுகை குழுவினால் நிராகரிக்கப்பட்ட போதிலும், தெரிவு செய்யப்பட்ட வழங்குனரும் 15 நாளில் வழங்குவதற்கு முடியாதிருந்ததுடன், அரச மருந்தக கூட்டுத்தாபனம் பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கும் போது 35 நாள் காலம் வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் 2,500 மாத்திரைகளுக்காக ரூபா 5,000,000 செலவிட வேண்டி ஏற்பட்டிருந்ததுடன், ஆகக் குறைந்த கூறுவிலையாளர் தெரிவு செய்யப்படாமல் அரசாங்கத்திற்கு செலவிட வேண்டி ஏற்பட்டிந்த மேலதிக கிரயம் ரூபா 3,618,025 ஆகும்.

(v) வருடாந்த தேவை கட்டளை திட்டமிடப்பட்ட காலத்தில் கிடைக்காமையை காரணமாக கொண்டு அவசர பெறுகைக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அந்த பெறுகையும் வருடாந்த பெறுகை கையளிக்கப்பட்ட வழங்குனருக்கே கையளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டமையால் பிரதான கட்டளை வேண்டும் என்றே தாமதிக்கப்பட்டு அவசர பெறுகைக்கு அனுப்பப்பட்டிருந்தமை அவதனிக்கப்பட்டது.

(vi) மருந்தின் தரத் தன்மையை பரீட்சிப்பதன் கீழ் 2022 ஆகஸ்ட் 16 ஆம் திகதி பெறுகைக் குழு தீர்மானத்தின் மூலம் கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அரச மருந்த கூட்டுத்தாபனத்திற்குரிய ஆய்வு கூடத்தில் இந்த மருந்தை பரீட்சிக்க முடியாதிருந்தமையால் தேசிய தர பாதுகாப்பு ஆய்வு கூடத்தில் பரீட்சிப்பதற்கு எழுத்து மூலம் கோரிக்கை விடப்பட்டிருந்ததுடன், வழங்குனால் 2023 மார்ச் 20 ஆம் திகதி அதற்காக ரூபா 427,348 தொகையும் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும், இந்த மருந்தின் உயிர் வாழ்கின்ற விஷங்களுடனான மருந்துகள (Cytotoxic) ஆனமையால் பரீட்சிக்க மடியாதிருந்ததாக மேற்கூறப்பட்ட ஆய்வு கூடத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் இந்த நிபந்தனையை அகற்றுவதற்கான முன்மொழிவொன்று 2023 யூன் 26 ஆம் திகதி பெறுகைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த மருந்து இருப்பு 2022 நவம்பர் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்தமையும் தற்போது வைத்தியாசாலைகளில் பயன்படுத்துவதன் காரணமாக தெரிவு பரிசோதனையில் நிபந்தனைகளை இரத்துச் செய்வதற்கு 2023 யூன் 28 ஆம் திகதி சுகாதார பிரிவு அவசர பெறுகைக் குழு தீர்மானித்திருந்தது. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழ் பெறப்பட்ட போதிலும், அதிகார சபையினால் இந்த மருந்தின் தரத் தன்மை, பாதுகாப்பு மற்றும் செயற்திறன் (Quality, Safety & Efficiency) தொடர்பான பொறுப்புக்கள் பெறுகை அமுல்படுத்திய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் பெறுகைக் குழுவிற்கு கையளித்தன் மூலம் அந்த நிறுவனமும் பெறுப்பில் இருந்து நீங்கியமை அவதானிக்கப்பட்டயைமால் இந்த மருந்து எந்தவொரு தரப் பரிசோதனையும் இன்றி பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன், இதன் காரணமாக புற்றுநோயாளர்களுக்கு வழங்கப்படுகின்ற மருந்தான இந்த மருந்து பயன்படுத்தி அந்த நோயாளர்களுக்கு பாதிப்பு இழப்பு அல்லது பாதிப்புக்கள் கணக்காய்வின் போது பரீட்சிக்க முடியாதிருந்தது.

(இ) 2023 இன் வருடாந்த கட்டளை 2023 சனவரி வரையிலும் கிடைக்காமையின் காரணமாக மருந்துவ வழங்கல் பிரிவினால் அவசர கட்டளையாக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,577,375 ஆன மேற்கூறப்பட்ட மருந்துகளில் 7,500 மாத்திரைகள் கொள்வனவு செய்வதற்காக 2023 சனவரி 30 ஆம் திகதி அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு கட்டளை அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 பெப்ரவரி 01 ஆம் திகதி 7,500 மாத்திரைகள் வழங்க வேண்டியிருந்தது. இந்த பெறுகைக் குழுவிற்காக 2023 மார்ச் 27 ஆம் திகதி கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன், 04 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட கட்டளையை சமாப்பித்த திகதியில் இருந்து 55 நாட்கள் காலத்தில் கூறுவிலை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. பெறுகைகளுக்காக 04 கேள்விதாரர்கள் கூறுவிலை சமர்ப்பித்திருந்தனர். எனினும் உரிய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு சுகாதார அமைச்சினால் 2023 ஏப்ரல் 20 ஆம் திகதியே நியமிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2023 மே 12 ஆம் திகதிய சுகாதார பிரிவின் அவசர பெறுகைக் குழுவினால் மூன்றாவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரர் செல்லுபடியான ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுச் சான்றிதழ் இன்றி மற்றும் ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை உற்பத்தி தளத்திற்காக (Manufacturing Site Approval) அங்கீகாரம் பெற்ற கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், அதன் உள்நாட்டு முகவரின் இந்திய உற்பத்தியாளருக்கு 2023 ஆம் ஆண்டின் வருடாந்த கட்டளை கேள்வியும் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வு திகதியான 2023 செப்டம்பர் 26 வரையிலும் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார

சபையின் பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழ் கிடைத்திருந்தமைக்காக தகவல்கள் கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2023 யூன் 22 ஆம் திகதிய பொருள் அனுப்பல் கோரிக்கை பெறுகை குழு தீர்மானத்தில் 39 நாட்களுக்கு பின்னர் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு இணங்க இந்த மருந்தில் 7,500 மாத்திரைகளை 2023 யூலை 24 ஆம் திகதி தொடங்க வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2024 மார்ச் 11 வரையிலும் சுய முறைமையின் பிரகாரம் அந்த மருந்து இருப்புக்கள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஈ) வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் சுகாதார அமைச்சுக்கு அரசாங்க வைத்தியசாலைகளில் புற்றுநோயாளர்களுக்காக புற்று நோய் விடயங்களை கொள்வனவு செய்வதற்காக பணத்தைப் பயன்படுத்தி 5,000 மாத்திரைகள் ரூபா 1,718,250 மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் கொள்வனவு செய்வதற்கான கட்டளை 2023 பெப்ரவரி 02 ஆம் திகதி அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 5,000 மாத்திரைகளின் எண்ணிக்கை 2023 பெப்ரவரி 15 இல் உள்ளவாறு வழங்க வேண்டியிருந்தது. இந்த பெறுகைகளுக்காக 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி கேள்வி கோரப்பட்டிருந்ததுடன், 03 கேள்விதாரர்கள் கூறுவிலையினை சமர்ப்பித்திருந்தனர். 2023 பெப்ரவரி 24 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு கேள்வி மதிப்பீடு செய்து 2023 மார்ச் 09 ஆம் திகதி சுகாதார பிரிவின் அவசர பெறுகைக் குழுவினால் ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரரால் 02 கேள்விகள் சமர்ப்பித்ததன் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டு இரண்டாவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு இன்றிய வெற்றியீட்டிய கேள்விதாரராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். அதற்குரிய பொருள் அனுப்பல் கோரிக்கை 2023 ஏப்ரல் 21 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் 2023 மே 26 ஆம் திகதி 4,980 மாத்திரைகள் வழங்க வேண்டியிருந்தது. எனினும், ஒட்டு மொத்த முறைமையின் பிரகாரம் கணக்காய்வு திகதியான 2024 மார்ச் 11 ஆம் திகதி வரையிலும் இந்த மருந்து இருப்பு கிடைத்திருக்கவில்லை.

33. <u>Epirubicin Hydrochoride Injection 50 mg (SR No. 01201202)</u>

(அ) 2022 சராசரி கட்டளை அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் மருத்துவ வழங்கல் பிரிவினால் 2022 மார்ச் 25 ஆந் திகதி முறைமை ஊடாக அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு இந்த தடுப்பூசிகளில் 1,000 அலகுகள் 2022 திசெம்பர் 01 ஆந் திகதி வரையில் பெற்றுக்கொள்வதற்கு கட்டளை இடப்பட்டிருந்தது. இந்திய கடன் முன்மொழிவு திட்டங்களுக்கு கீழ் கொள்வனவு செய்வதற்கு 2022 மார்ச் 26 ஆந் திகதி பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் கேள்வி கோருவதற்காக 04 மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. கேள்வி திறத்தல் மற்றும் மதிப்பிடல் 2022 மார்ச் 31 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்காக மூன்று கூறு விலை சமர்ப்பித்திருந்ததுடன் உரிய மருந்திற்காக NMRA சான்றிதழுடன் வழங்குனருக்கு ஒரு தடுப்பூசி ஐ.அ.டொலர் 18 வீதம் மொத்த பெறுமதி ஐ.அ.டொலர் 18,000 அதாவது ரூபா 6,498,000 தொகையில் கேள்வி கையளிப்பதற்கு 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய திணைக்கள பிரதிக்குழு தீர்மானித்திருந்தது. அதில் குறிப்பிடப்பட்ட முன்னைய அண்மித்த விலை தடுப்பூசிக்கான விலை ரூபா 1,460 ஆகும். மருந்து அலகு ஒன்றின் கேள்வி விலை 6,498 ஆக இருந்ததுடன் மருந்து அலகு ஒன்றின் மதிப்பிடப்பட்ட விலை ரூபா 1,325 ஆனமையால் இந்தப் பெறுகைகளின் போது மதிப்பீடு செய்யப்பட்ட விலையில் 390 சதவீத அதிகரித்த விலையில் பெறுகை வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மருந்து இருப்பு 2022 நவம்பர் 30 ஆந் திகதி வழங்க வேண்டியிருந்த போதிலும் 2023 மார்ச் 07 ஆந் திகதி மருந்து இருப்புக்கள் கிடைதிருந்தது. இந்த பெறுகைகளுக்குரிய கேள்வி ரூபா பெறுமதியில் சமர்ப்பிக்கப்பட்ட போதும் ஐ.அ.டொலர் பெறுமதியில் கொடுப்பனவு செய்வதற்கு ஏற்படுத்தப்பட்டமையால்

அலகொன்றின் கேள்வி விலை ரூபா 6,498 ஆக இருந்த போதிலும் ரூபா 6,637.86 வீதம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறப்பட்ட மருந்தின் 2023 தேவைக்காக தேவையான சராசரி கட்டளை தொடர்பாக 2022 நவம்பர் 16 ஆந் திகதி முறைமை ஊடாக மருத்துவ வழங்கல் பிரிவினால் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆதற்குிய எழுத்து மூல கோரிக்கை 2022 நவம்பர் 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கட்டளையின் பிரகாரம் 2023 சனவரி 12 மற்றும் ஏப்ரல் 12 ஆந் திகதி வரையில் அந்த மருந்தின் 2,000 தடுப்பூசி குப்பிகள் வீதம் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் 2023 பெப்ரவரி 22 ஆந் திகதி திணைக்கள பெறுகை குழுவினால் பதிவு செய்யப்பட்ட வழங்குனரிடமிருந்து வரையறுக்கப்பட்ட கூறு விலை கோரப்பட்டிருந்தது. திணைக்கள பெறுகை குழு தீர்மானம் 2023 யூன் 15 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் ஒரு தடுப்பூசி ஐ.அ.டொலர் 7.50 வீதம் 4,000 தடுப்பூசிக் குப்பிகளில் மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 30,000 தொகையில் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆதன் பிரகாரம் தடுப்பூசி குப்பி ஒன்றின் கேள்வி விலை ரூபா 2,529.65 ஆக இருந்ததுடன் மதிப்பீடு செய்யப்பட்ட விலை ரூபா 1,446.76 ஆனமையால் இந்த பெறுகைகளின் போது மதிப்பீடு செய்யப்பட்ட விலையில் 74 சதவீதம் அதிகரித்த விலையில் கேள்வி வழங்கப்பட்டிருந்தது. ஸ்வஸ்ட கணனி முறைமையின் பிரகாரம் 2024 மார்ச் 11 ஆந் திகதி வரையிலும் இந்த பெறுகைகளுக்குரிய பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இந்த தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்காக 2023 இல் அமுல்படுத்தப்பட்ட சராசரி பெறுகைகளுக்காக மருந்து கிடைக்காமையின் காரணமாக அவசர பெறுகையாக இந்த தடுப்பூசியில் 2,000 அலகுகளை கொள்வனவு செய்தல் தொடர்பாக மருத்துவ வழங்கல் பிரிவினால் 2023 சனவரி 30 ஆந் திகதி பொருள் அனுப்பல் கோரிக்கை சமர்பிக்கப்பட்டிருந்தது 2023 மார்ச் 27 ஆந் திகதி பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 2023 மார்ச் 30 ஆந் திகதி கேள்வி திறக்கப்பட்டிருந்தது. 06 வழங்குனர்களின் கூறு விலை வழங்குனர்களால் கூறு விலை சமர்பிக்கப்பட்டிருந்தது. அவ் கூறு விலையில் இருந்து 03 வார காலம் கடந்ததன் பின்னர் மதிப்பீட்டு குழுவிற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது. வழங்குனர்களுக்கிடையே மூன்றாவது ஆகக்குறைந்த வழங்குனரிடமிருந்து தடுப்பூசி ஒன்று ரூபா 4,420 வீதம் 2,000 தடுப்பூசிகள் ரூபா 8,840,000 தொகையில் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. தடுப்பூசி குப்பி ஒன்றின் மதிப்பீடு செய்யப்பட்ட விலை ரூபா 1,446.76 ஆனமையால் இந்த பெறுகையில் மதிப்பீடு செய்யப்பட்ட விலையில் 205 சதவீத அதிகரித்த விலையில் கேள்வி வழங்கப்பட்டிருந்தது. பொருள் அனுப்பல் கோரிக்கை பிரகாரம் இந்த தடுப்பூசி 2023 யூலை 26 ஆந் திகதி வரையில் கிடைக்க வேண்டியிருந்த போதிலும் ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் சபையில் விடுவிக்கும் சான்றுகள் 2023 யூலை 13 ஆந் திகதி பெறப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதி வரையிலும் கிடைத்தமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. 2024 மார்ச் 11 ஆந் திகதி வரையிலும் உரிய மருந்து இருப்புக்கள் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) 2023 இல் 02 கட்டளைக்காக மருந்து கிடைக்காத சந்தர்ப்பத்தின் போது அவசர கொள்வனவாக 1,350 தடுப்பூசி குப்பிகளை பெற்றுக்கொள்வதற்காக 2023 பெப்ரவரி 02 ஆந் திகதி முறைமை ஊடக கோரப்பட்டிருந்ததுடன் 2023 பெப்ரவரி 15 ஆந் திகதி பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பித்து 2023 பெப்ரவரி 17 ஆம் திகதி கேள்வி திறக்கப்பட்டிருந்தது. அத் திகதியில் விலை மதிப்பீட்டு குழுவின் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. வழங்குனர்கள் மூவர் மாத்திரம் கேள்வி சமர்ப்பித்திருந்ததுடன் அதனிடையே எந்தவொரு வழங்குனரும் NMRA சான்றிதழ் சமர்பித்திருக்கவில்லை. இரண்டாவது குறைந்த விலை சமர்ப்பித்தல் நிறுவனம் மாத்திரம் Manufacturing Site Approval சமர்பித்திருந்ததுடன் 2023 மார்ச் 05 ஆந் திகதி கூடப்பட்ட அவசர பெறுகை குழு விலை திருத்தம் மற்றும் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல்

அதிகார சபையில் பதில் வேறு விடுவிக்கும் சான்றிதழ் பின்னர் சமர்பிபத்தல் என்ற நிபந்தனையின் அடிப்படையில் 1,350 குப்பிகள் ரூபா 5,098 வீதம் ரூபா 6,882,300 கிரயத்தில் கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. அதில் 06 வார காலங்கள் அளவிலாள காலங்கள் கடந்ததன் பின்னர் 2023 ஏப்ரல் 21 ஆந் திகதி பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த மருந்து அலகு ஒன்றின் மதிப்பீடு செய்யப்பட்ட விலை ரூபா 1,446 ஆனமையால் மதிபீடு செய்யப்பட்ட விலையில் 252 அதிகரித்த விலையில் கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது.

(i) இந்த அவசர பெறுகைகளுக்குரிய அதாவது தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் வழங்கிய கேள்வி ஆவணங்களுக்கு இணங்க 02 வாரங்களுக்குள் மருந்து வழங்க கூடிய இயலுமை காணப்படுவதாக அறிவித்திருந்ததுடன் வழங்குனரை தெரிவு செய்யும் பொது இது தொடர்பாக கவனத்தில் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பொருள் அனுப்பல் கோரிக்கையின் பிரகாரம் 1,350 குப்பிகள் ரூபா 5,098 வீதம் ரூபா 6,882,300 கிரயத்தில் 2023 மே 28 ஆந் திகதி வழங்க வேண்டியிருந்தது. எனினும், மருந்துகள் 2023 ஆகஸ்ட் 14 ஆந் திகதி கிடைத்ததன் காரணமாக இருப்பு வழங்க வேண்டிய திகதியில் இருந்து 10 வாரங்கள் அளவிலான தாமதத்துடன் இருப்பு வழங்கப்பட்டிருந்தது.

(ii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.10(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தத்தின் செயலாற்றல் தோல்வியடையும் போது அதில் பெறுகை நிறுவனத்தை பாதுகாப்பதற்காக, செயலாற்றல் பிணை முறியை சமர்ப்பிக்குமாறும் மற்றும் கேள்வி வழங்கல் ஆவணத்தின் இரண்டாவது பகுதியின் 6 ஆவது பிரிவின் பிரகாரம் செயலாற்றல் பிணை முறி பெற வேண்டியிருந்த போதும் சுகாதார அமைச்சு செயலாளரின் 2023 சனவரி 10 ஆந் திகதிய SH/PSRP/01/SPC/2021 என்ற கடிதத்தின் பரிந்துரையின் அடிப்படையில் செயலாற்றல் காப்புறுதியை பெற்றுக்கொள்வதற்காக வழங்குனருக்கு செலுத்த வேண்டிய பெறுமதியில் 10 சதவீத தொகை வழங்கல் பூர்த்தி செய்த 30 நாள் நிறுத்தி வைக்குமாறு அறிவிக்கப்பட்டதன் காரணமாக செயலாற்றல் காப்புறுதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை.

(உ) இந்த மருந்தில் 6,300 அலகுகளை கொள்வனவு செய்வதற்காக 2023 மே 25 ஆந் திகதி முறைமை ஊடாக கோரப்பட்டிருந்த அவசர கொள்வனவாக 2023 யூன் 14 ஆந் திகதி கூறு விலை கோரப்பட்டிருந்ததுடன் 2023 யூன் 22 ஆந் திகதி தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை வழங்கியிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை அவசர பெறுகை குழு 2023 யூன் 28 ஆந் திகதி பெறுகை தீர்மானத்தின் படி செல்லுபடியான NMRA பெறுமதியான சான்றிதழ்கள் ஒரே ஒரு கேள்விதாரருக்கு குப்பி ஒன்று மூபா 5,100 வீதம் கேள்வியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்திய கடன் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் அவசர கொள்வனவொன்றாக அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் பெறுகை தீர்மானத்தில் 09 வாரங்களுக்கு பின்னர் அதாவது 2023 செப்தெம்பர் 08 ஆந் திகதி பொருள் அனுப்பல் கோரிக்கையின் பிரகாரம் மருந்து இருப்புக்கள் 2023 திசெம்பர் 11 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய போதிலும் கணனி முறைமையின் பிரகாரம் இருப்பு அதற்கு 02 மாதங்கள் தாமதமாகி கிடைத்திருந்தது.

34. <u>Tropicamide 0.8% with phenyl Phrine hyarochooloride 5% eye drops 5ml dropper bottle (SR No. 00901501)</u>

இந்த மருந்தில் 2023 வருடாந்த கட்டளையின் ஒரு பகுதி சனவரி வரையில் கிடைக்காததன் காரணமாக மருத்துவ வழங்கல் பிரிவினால் விநியோகிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,261,175 ஆன 10,500 மருந்து அலகுகள் 2023 பெப்ரவரி 28 ஆந் திகதி அவசர கட்டளை ஒன்றாக அரச கூட்டுத்தாபனத்திற்கு 2023 மார்ச் 01 ஆம் திகதி கிடைத்திருந்தது. இந்தக் கட்டளை 2023 மார்ச் 10 ஆந் திகதி வழங்க வேண்டியிருந்தது. இதற்காக 2023 மார்ச் 15 ஆந் திகதி கேள்வி கோரப்பட்டிருந்ததுடன்

2023 மார்ச் 17 ஆந் திகதியில் கேள்வி கோரல் முடிவடைந்திருந்த எனினும் அதற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு 2023 மார்ச் 27 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தது. கேள்விதாரர்களுக்கிடையில் சமர்ப்பித்த கேள்விதாரர் இருவரும் செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் இல்லாமையினால் ஆகக் குறைந்த மூன்றாவது நபர் சமர்ப்பித்த கேள்விதாரர் வெற்றி பெற்ற கேள்விதாரர்களாக சுகாதார பிரிவு அவசர பெறுகை குழுவினால் 2023 ஏப்ரல் 12 ஆந் திகதி தெரிவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இந்த அவசர பெறுகைகளுக்குரியதாக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் வழங்கிய கேள்வி ஆவணங்களுக்குரிய மருந்து வழங்க வேண்டிய இயலுமை காண்பிக்கபபட்டிருந்ததுடன் வழங்குனர் தெரிவு செய்யும் போது இது தொடர்பான கவனத்தில் கொள்ள வேண்டியமை அவதானிக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட பெறுகைகளுக்குரிய 2023 மே 12 ஆந் திகதியின் பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2023 மே 18 ஆந் திகதி இருப்பு வழங்க வேண்டியிருந்தது. எனினும் இந்த இருப்பு மருத்துவ வழங்களுக்கு 2023 செப்தெம்பர் 20 ஆந் திகதியே கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் இருப்பு வழங்க வேண்டிய திகதியில் இருந்து 125 நாட்கள் தாமதமாகி வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டி கோவையில் 5.4.10(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தத்தின் செயலாற்றல் தோல்வியடையும் போது அதன் பெறுகை நிறுவனத்தை பாதுகாப்பதற்காக செயலாற்றல் காப்புறுதியை சமர்ப்பிக்குமாறும் கேள்வி ஆவணங்களில் இரண்டாவது பகுதியில் 6 ஆவது பிரிவின் பிரகாரம் செயலாற்றல் பிணைமுறி இருந்தமையும் சுகாதார செயலாற்றல் 2023 சனவரி 10 ஆந் திகதிய SH/PSRP/01/SPC/2021 என்ற பரிந்துரையின் அடிப்படையில் செயலாற்றல் காப்புறுதியை பெற்றுக்கொள்வதற்கு பதிலாக வழங்குனருக்கு செலுத்த வேண்டிய பெறுமதியில் 10 சத வீத தொகை வழங்கல் பூர்த்தி செய்து 30 நாட்கள் வரை நிறுத்தி வைக்குமாறு அறிவிக்கப்பட்டதன் காரணமாக செயலாற்றல் காப்புறுதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

(இ) வழங்குனரின் 2022 செப்தெம்பர் 21 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட செல்வுபடியான பதிவு சான்றிதழில் இந்த குப்பி ஒன்றை விற்கப்பட வேண்டிய ஆகக் கூடிய சில்லறை விலை ரூபா 650 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் வழங்கலின் ஒன்றின் போது குப்பி ஒன்று ரூபா 900 வீதம் வழங்கப்பட்டிருந்தது. குப்பி ஒன்று மதிப்பீடு செய்யபபட்ட விலை ரூபா 215.35 மற்றும் முன்னைய வழங்கல் விலை ரூபா 299.42 ஆக இருந்ததுடன் அவசர கொள்வனவின் போது குப்பி ஒன்றின் விலை ரூபா 900 ஆக இருந்தமையால் மதிப்பீடு செய்யப்பட்ட விலையினை விட அவசர விலையினை 318 சதவீதமும், முன்னயை வழங்கல் விலையினை விட 200 சதவீதமும் அதிகரித்திருந்தது.

35. <u>Brinzolamide Eye drops 1% in 5 ml dropper bottle (SR No. 00903001)</u>

2022 ஆம் ஆண்டின் வருடாந்த தேவையாக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 34,260,000 ஆன கட்டளை 2022 மார்ச் 25 ஆந் திகதி அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருந்தது. இந்த கட்டளையின் பிரகாரம் 2022 ஏப்ரல் 30 மற்றும் யூன் 30 இல் உள்ளவாறு 40,000 குப்பிகள் வீதம் வழங்க வேண்டி இருந்தது. இந்த பெறுகைகளுக்காக இந்திய கடன் உத்தேச முறைமையின் கீழ் கொள்வனவு செய்வதற்காக 2022 மார்ச் 26 ஆந் திகதி கேள்வி கோரப்பட்டு 2022 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. பெறுகைகளுக்காக ஒரு வழங்குனரிடம் இருந்து மாத்திரம் கூறு விலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் குழுவினால் ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட ஆகக்கூடிய சில்லறை விலையினை விட கேள்வி விலை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. கூறு விலை திறக்கப்பட்ட திகதியில் இருந்து 22 நாட்களுக்கு பின்னர் கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த பின்னர் 2022 ஏப்ரல் 28 ஆந் திகதி திணைக்கள குழுவினால் ஆகக் குறைந்த விலையுடன் கேள்விதாரருடன் விலையினை குறைப்பதற்கும் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலை ஐ.அ. டொலரில் வழங்குவதற்கு இணக்கம் பெற்றுக்கொள்ளுமாறு காண்பிக்கப்பட்டிருந்தது.

பெறுகை குழுவின் தீர்மானத்தில் 21 நாட்களுக்கு பின்னர் அதாவது 2022 மே 19 ஆந் திகதி மேலதிக செயலாளரால் (பெறுகை) அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் இணக்கப்பாடு தொடர்பாக விசாரணையொன்று செய்து கேள்விதாரர்களுக்கு கடிதம் 30 நாட்கள் தாமதத்தின் பின்னரே அனுப்பபட்டு பின்னர் 2022 மே 27 ஆந் திகதி அனுப்பபட்டிருந்தது. கேள்விதாரரினால் 2023 யூன் 07 ஆந் திகதிய கேள்வி விலையை விடுவித்தல் மற்றும் ஏனைய உள்நாட்டு கட்டணங்கள் (Clearing and Local Component Charges) 5 சதவீதத்தினால் குறைப்பதற்கும், ஐ.அ. டொலர்களில் விலை சமர்ப்பிப்பதற்கும் இணங்கியிருந்தது. 2022 யூன் 13 ஆந் திகதி திணைக்கள பெறுகை குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கேள்விதாரர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அந்த கட்டளைக்குரிய 2022 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய இலக்கம் DHS/ICL/AMS/226/2022 என்ற பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 ஒக்டோபர் 31 ஆந் திகதி மற்றும் திசெம்பர் 31 இல் 40,000 அலகுகள் வீதம் வழங்க வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் முதலாவது மருந்து இருப்பாக 40,000 அலகுகள் 07 மாத கால தாமதத்தின் பின்னர் 2023 மே 30 மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்தது. மிகுதி அலகுகள் 40,000 இருப்பு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்க வேண்டியிருந்த போதிலும் 2024 சனவரி 23 ஆந் திகதியே வழங்கப்பட்டிருந்தது.

36. <u>Bentomethasone sodium phosphate for eye, ear or nosal drop 0.1% in 5ml vial (SR No. 01000601)</u>

இந்த மருந்துகளை கொள்வனவு செய்வதற்குரிய 2023 ஆம் ஆண்டின் வருடாந்த தேவையாக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,431,800 ஆன 35,000 குப்பிகள் 2022 நவம்பர் 15 ஆம் திகதிய கட்டளை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு 2022 நவம்பர் 17 ஆம் திகதி கிடைத்திருந்தது. இதில் குறிப்பிடப்பட்ட கட்டளையில் 2023 சனவரி 10 ஆம் திகதி மற்றும் ஏப்ரல் 03 ஆம் திகதி 17,500 குப்பிகள் வீதம் வழங்க வேண்டியிருந்தது. 2023 சனவரி 19 ஆம் திகதி இந்த பெறுகைகளுக்காக கேள்வி கோரப்பட்டிருந்ததுடன், 03 கேள்விதாரர்கள் விலை சமர்ப்பித்திருந்தனர். தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு 2023 பெப்ரவரி 14 ஆம் திகதி மதிப்பீடு செய்து 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி திணைக்கள பெறுகைக் குழுவினால் பதிவு சான்றிதழுடன் ஆகக் குறைந்த விலையில் சமர்ப்பித்த கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2023 மார்ச் 09 ஆம் திகதி கட்டளை கையளித்தல் கடிதத்தை 2023 மார்ச் 16 ஆம் திகதி கேள்விதாரர் ஏற்றுக் கொண்டிருந்தார். இந்த கட்டளைக்குரிய இலக்கம் LP/DHS/NV/3665/2023 என்ற பொருள் அனுப்பல் கோரிக்கை 2023 மார்ச் 23 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 மே 25 ஆம் திகதி மற்றும் ஆகஸ்ட் 25 ஆம் திகதி 17,500 குப்பிகள் வீதம் வழங்க வேண்டியிருந்தது. எனினும், முதலாவது இருப்பாக 16,927 குப்பிகளும், 2023 யூன் 27 ஆம் திகதி மற்றும் இரண்டாவது இருப்பாக 18,070 குப்பிகளும் 2023 செப்டம்பர் 27 ஆம் திகதியும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்கான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டமைக்கான தகவல்கள் கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதி ஸ்வஸ்ட முறைமை பரீட்சித்த போது மேற்கூறப்பட்ட கட்டளை கிடைக்க வேண்டிய கட்டளை மற்றும் கிடைத்த கட்டளை என 02 பகுதிகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தமையும், மிகுதியாக கிடைக்க வேண்டிய 35,003 குப்பிகளின் இருப்பும் காண்பிக்கப்பட்ட போதும், அவ்வாறு கிடைக்க வேண்டிய இருப்பொன்று காணப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) இந்த கட்டளையில் குப்பியொன்றின் விலை, மதிப்பீடு செய்யப்பட்ட விலையினை விட 202 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் கட்டளையில் குப்பியொன்றின் விலையினை விட 287 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

37. <u>Pralidoxime Chloride Injection 19/20 ml (SR No. 01601001)</u>

இந்த மருந்தின் 2023 ஆம் ஆண்டின் வருடாந்த தேவையான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,791,800 ஆன 2022 நவம்பர் 15 ஆம் திகதிய இந்த கட்டளை 2022 நவம்பர் 24 ஆம் திகதி கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருந்தது. இந்த கட்டளையின்

பிரகாரம் 2023 சனவரி 10 ஆம் திகதி 12,000 குப்பிகள் வழங்க வேண்டியிருந்தது. இந்த பெறுகைகளுக்காக பதிவு செய்த மற்றும் கடந்த கால வழங்குனர்களிடம் இருந்து 2023 பெப்ரவரி 16 ஆம் திகதி கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன், 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி கேள்வி கோரல் முடிவடைந்ததிருந்தது. பெறுகைகளுக்காக ஒரு வழங்குனர் மாத்திரம் சமர்ப்பித்திருந்ததுடன், 2023 மார்ச் 15 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு தீர்மானத்தில் 54 நாட்களுக்குப் பின்னர் அதாவது, 2023 மே 09 ஆம் திகதி திணைக்கள சிறிய பெறுகைக் குழுவினால் கேள்விதாரர் விலை முன்னைய விலையிலும் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட விலையினை விட மிக உயர் பெறுமதியை கொண்டிருந்தமையினால் பதிவு செய்த மற்றும் முன்னைய வழங்குனரிடம் இருந்து பெக்ஸ் மற்றும் இலத்திரனியல் தபால் மூலம் கேள்வி கோருமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. கேள்வி தீர்மானத்தில் 105 நாட்களுக்கு பின்னர் மீண்டும் கேள்வி கோரும் நடவடிக்கைகள் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 செப்டம்பர் 27 ஆம் திகதிய பெக்ஸ் மற்றும் இலத்திரனியல் தபால் மூலம் கேள்வி கோரும் கடிதம் அனுப்பப்பட்டிருந்ததுடன், கேள்வி கோரல் 2023 ஒக்டோபர் 10 ஆம் திகதியில் முடிவடைந்திருந்தது. 2023 ஒக்டோபர் வரையும் 2023 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த தேவையினை பூர்த்தி செய்து கொள்வதற்கு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு முடியாதிருந்தது. உரிய கால அட்டவணையில் கட்டளைகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

38. <u>Morphine Sulphate Injection 15mg/ml Ampoule (SR - 00000807)</u>

மேற்கூறப்பட்ட மருந்தின் தேவையை தீர்மானத்தில், கட்டளையிடல், கொள்வனவு செய்தல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது 2019 ஆம் ஆண்டில் இருந்து 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்காக மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட அலகுகள் 3,339,831 ஆக இருந்ததுடன், அந்த காலப் பகுதிக்குரிய கட்டளையிடல் அலகுகள் 3,083,344 ஆகும். எனினும், 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரியதாக கிடைத்த எண்ணிக்கை அலகுகள் 1,999,988 ஆக இருந்தமை MSMIS தரவு முறைமையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2021 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை 757,050 ஆக இருந்த போதும், வருடாந்த கட்டளை அளவுகளின் எண்ணிக்கை 880,000 ஆகும். அதன் பிரகாரம் மதிப்பீட்டினை விஞ்சி 122,950 அலகுககள் கட்டளையிடப்பட்டிருந்தது.

(ஆ) 2023 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை 698,499 ஆக இருந்ததுடன், வருடாந்த கட்டளை அளவு 1,020,000 அலகுகளாக குறிப்பிட்டு மதிப்பீட்டு எண்ணிக்கையினை விட வருடாந்த கட்டளையின் அளவு 46 சதவீதம் அதாவது, 321,501 அலகுகளால் அதிகரித்து கட்டளையிடப்பட்டிருந்தது, எனினும், இந்த கட்டளை கணக்காய்வு திகதி வரையிவும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2023 ஆம் ஆண்டிற்குரிய 460,000 அலகுகளை கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோரப்பட்டிருந்ததுடன், 2023 ஏப்ரல் 11 ஆம் திகதிய பொருள் அனுப்பல் கோரிக்கையின் பிரகாரம் மற்றும் முறையே 250,000 அலகுகளும், 210,000 அலகுகளும் 2023 யூன் 30 மற்றும் ஒக்டோபர் 31 ஆம் திகதிகளில் வழங்க வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மருத்துவ வழங்கல் பிரிவில் கணனி முறைமையினால் வழங்கப்பட்ட தரவுகளின் படி 2022 ஆம் ஆண்டிற்காக இந்த மருந்துகளில் 100,000 அலகுகளுக்காக சராசரி கட்டளையும் 50,000 அலகுகளுக்காக அவசர கட்டளையும் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட போதிலும், இந்த கட்டளை கணக்காய்வு திகதி வரையிவும் கிடைத்திருக்கவில்லை.

(உ) 2022 ஆம் ஆண்டின் போது வருடாந்த மதிப்பீடு செய்யப்பட்ட அளவின் அலகுகள் 651,971 ஆக இருந்ததுடன், இரண்டு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட கட்டளைகளின் அளவு 150,000 அலகுகளாக இருந்தது. இது மதிப்பீடு செய்யப்பட்ட அளவில் 23 சதவீதம் ஆன ஆகக் குறைந்த சதவீதத்தில் கட்டளையிடல் மதிப்பீடு தயாரிக்கும் நலிவான நிலைமையாக இருந்ததை அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2022 ஆம் ஆண்டிற்காக 2022/SPC/N/R/P/00066 என்ற சராசரி கட்டளை மூலம் 100,000 அலகுகள் கட்டளையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக மருத்துவ வழங்கல் பிரிவில் கணனி முறைமை இந்த கட்டளை காண்பிக்கப்பட்ட போதும், கொவிட் 19 தொற்று நோய் காலத்தில் இந்த கட்டளை அரச மருந்த கூட்டுத்தாபனத்திற்கு (இறக்குமதி பிரிவிற்கு) கிடைக்காதிருந்ததாகவும், எழுத்து மூலம் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவ வழங்கல் பிரிவின் கணனி முறைமை மூலம் பெறப்பட்ட தகவல்கள் தொடர்பாக நம்பிக்கை உறுதிப்படுத்த முடியாதிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(எ) மருத்துவ வழங்கல் பிரிவிற்கு சொந்தமான கணனி முறைமையில் உள்ள இருப்பு தொடர்பான பரிசோதனையின் போது 2022 ஆம் ஆண்டின் போது இந்த மருந்திற்குரிய மருத்தவ வழங்கல் பிரிவிற்கு சொந்தமாக இல்லாதிருந்ததுடன், ஆகக் குறைந்த இருப்பு மட்டத்தை பேணிச் செல்லல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இது அவசர கேள்விற்காக அனுப்புவதற்கு அவகாசம் அளிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) 2021 ஆம் ஆண்டில் இந்த மருந்துகள் சராசரி விலையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், கட்டளையின் பிரகாரம் 880,000 அலகுகளை கொள்வனவு செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த கட்டளை 04 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2021 மே 01 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளுக்காக அலகொன்றின் விலை ரூபா 50.20 ஆக இருந்ததுடன், அந்த கட்டளைக்குரிய 2022.08.17 முதல் 2022.12.09 வரை மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளுக்காக அலகொன்றின் விலை ரூபா 92.44 மற்றும் ரூபா 93.23 வரையான வீச்சில் அதிகரித்திருந்ததுடன் அது 86 சதவீத அளவிலான விலை அதிகரிப்பாகும்.

(ii) இந்த பொருள் அனுப்பல் கோரிக்கைக்குரிய பொருள் வழங்க வேண்டிய திகதி மற்றும் பொருள் கிடைத்த திகதிகளை ஒப்பீடு செய்த போது 03 மாதம் முதல் 17 மாதம் வரையிலான தாமதம் அவதானிக்கப்பட்டது.

(iii) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் வழங்குனரிடம் கையொப்பமிடப்படுகின்ற உடன்படிக்கை கம்பனி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2022 ஆம் ஆண்டில் இந்த மருந்தில் 50,000 அலகுகள் தொடர்ச்சியாக வழங்கும் தேவையின் அடிப்படையில் அவசர கொள்வனவுகளின் கீழ் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததது. இதற்குரிய இலக்கம் 2023/SPC/E/R/P/00442 என்ற கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் சுகாதார பிரிவு அவசர பெறுகைக் குழுவினால் Yaden International தனியார் நிறுவனத்தில் இருந்து மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு கேள்வி கையளிக்கப்படடிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அவசர கொள்வனவின் கீழ் 50,000 அலகுகள் ரூபா 24,500,000 தொகையில் கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு தீர்மானித்த போதும், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு சான்றிதழ் காலாவதியாகியதன் காரணமாக செல்லுபடியான சான்றிதழ் ஒன்று அல்லது பதிவிலிருந்து விடுவிக்க வேண்டிய சான்றிதழ் ஒன்று சமர்ப்பிக்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும், இந்த சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) M/S Kwality Pharmaceuticals Limited நிறுவனத்திற்காக இந்திய அரசாங்கத்தில் இருந்து வழங்கப்பட்ட Certificate of Good Manufacturing Practices சான்றிதழ் 2020.12.27 ஆம் திகதியிலும் Certificateof a Pharmaceutical Product சான்றிதழ் 2020.03.11 ஆம் திகதியிலும் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன், சட்ட ரீதியாக செல்லுபடி தன்மை இன்றி இவ்வாறான நிறுவனத்தில் இருந்து மருந்துகளை கொள்வனவு செய்யும் போது சிக்கலான நிலைமை ஏற்பட்டிருந்ததுடன், கொள்வனவு செய்வதற்குரிய பொறுப்பு ஒத்தரவாதம் அளிக்க வேண்டிய தரப்பினர் கவனத்தில் செலுத்த வேண்டும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) இந்த மருந்திற்குரிய 2½ மாதம் அளவில் போதியளவான இருப்பு காணப்படும் போது அவசர கொள்வனவுகளின் கீழ் கட்டளையிடுவதற்கு நடவடிக்கை எடுத்து மீண்டும் அது இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதன் படி உரிய பிரகாரம் தேவையினை இனங்காணாமல் செயற்படுதல் முகாமைத்துவத்தின் நலிவாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iv) மருத்துவ வழங்கல் பிரிவில் கணனி முறைமையில் கட்டளை பதிவேட்டின் பிரகாரம் 50,000 அலகுகளுக்காக கிரயம் ரூபா 2,792,500 ஆக இருந்த போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரையின் படி ரூபா 24,500,000 தொகையில் இந்த கட்டளை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 21,707,500 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன், அது 777.3 சதவீத அதிகரிப்பாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஒ) இலக்கம் 2023/SPC/N/R/P/00038 என்ற கட்டளைக்குரிய இந்த மருந்தில் 460,000 அலகுகள் சராசரி கொள்வனவுகளின் கீழ் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கணனி முறைமையின் பிரகாரம் கட்டளை கிரயம் ரூபா 25,691,000 ஆக இருந்த போதிலும், அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தால் கட்டளை கையளிக்கப்பட்ட விலை ரூபா 34,832,593 ஆனமையால் ரூபா 9,141,593 இனால் கட்டளை பெறுமதியின் விலையில் முரண்கள் அவதானிக்கப்பட்டது. இது மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தை விட 35.58 சதவீத அதிகரிப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மதிப்பீடு தயாரித்தல் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) 300,000 அலகுகள் புதிதாக வழங்குமாறு அறிவித்து கட்டளை கையளிக்கும் போது வழங்குனரால் 65,000 அலகுகள் விரைவாக வழங்க கூடியதாக இருந்தமையும் அதில் 49,000 அலகுகள் காலாவதியாகும் திகதி 2024 யூன் மாதமாக இருந்தமையும் பெயர் பட்டியலின் மூலம் காண்பிக்கப்பட்டிருந்தது. பொருள் அனுப்பல் கோரிக்கை சராசரி நிபந்தனை இலக்கம் 05 இன்

பிரகாரம் இருப்பு கப்பலில் ஏற்றுகின்ற சந்தர்ப்பத்தின் போது எஞ்சியுள்ள ஆயட்காலம் ஆகக் குறைந்தது 85 சதவீதமாக இருக்க வேண்டிமை குறிப்பிடப்பட்ட போதிலும், இருப்பு பெற்றுக் கொள்ளும் போது இதன் ஆயுட் காலம் மேலும் குறையக் கூடியதாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) இந்த ஒட்டுமொத்த இருப்பும் வழங்கும் போது எதிர்பார்க்கப்பட்ட கால எல்லையினை விட விஞ்சியிருந்தமையும் செயலாற்றல் பினை முறியின் காலத்தில் இருப்பை பெற்றுக் கொள்வதற்கு முன் இரத்துச் செய்யப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.

39. <u>Doxycycline Cap 100 mg (SR – 00102301)</u>

2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையாக காலப் பகுதிக்காக மதிப்பீடு செய்யப்பட்ட அளவு 46,609,657 அலகுகளாக இருந்ததுடன், 2021 ஆம் ஆண்டு தவிர எஞ்சிய ஆண்டுகளின் போது 34,097,600 அலகுகள் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், மருத்துவ வழங்கல் பிரிவிற்கு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரியதாக 22,978,600 அலகுகள் கிடைத்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த கட்டளை அளவு வருடாந்த மதிப்பீட்டு அளவுடன் ஒப்பிடும் போது முறையே 2019, 2020, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது 61, 171, 53 மற்றும் 77 சதவீதம் வரை முரண்கள் ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு தயாரித்தல் சத்தியமான ரீதியில் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2020 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட அளவு 9,991,070 அலகுகளாக இருந்ததுடன், வருடாந்த கட்டளை அளவு 17,097,800 அலகுகள் ஆகும். ஐந்து கட்டளைகள் மருத்துவ வழங்கல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மொத்த மதிப்பீட்டினை விஞ்சி 7,106,730 அலகுகள் கட்டளையிடப்பட்டது. மருத்துவ வழங்கல் பிரிவிற்கு 15,353,600 அலகுகள் கிடைத்திருந்ததுடன், 6,639,500 அலகுகள் விநியோகிக்கப்பட்டு 8,714,100 அலகுகளின் எஞ்சியிருந்தமையும் காணப்பட்டது.

(இ) 2021 ஆம் ஆண்டில் முறையே 33,822 அலகுகளும் மற்றும் 29,187 அலகுகளும் காலாவதியகியமை மற்றும் தரம் கெட்டமையின் அடிப்படையில் அகற்றப்பட்டிருந்தது.

(ஈ) 2022 செப்டம்பர் 26 முதல் 2023 செப்டம்பர் 03 வரை இந்த மருந்துகள் பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், சராசரி கட்டளை அல்லது பிரதேச ரீதியில் கொள்வனவு மேற்கொள்ளப்படாதிருந்த சந்தர்ப்பமொன்று சுகாதார முறைமையில் 2022 இன் வருடாந்த தேவையில் பற்றாக்குறையான 5,869,550 அலகுகள் மற்றும் 2023 ஆம் ஆண்டில் வருடாந்த தேவையான 10,338,322 அலகுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததா என கணக்காய்வில் வெளிப்படுத்தப்படவில்லை.

(உ) 2021 ஆம் ஆண்டிற்காக இலக்கம் 2021/SPC/N/R/P/00061 என்ற கட்டளைக்காக தகைமை பெற்ற கேள்விதாரரை தெரிவு செய்து தற்போது 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும், பொருள் அனுப்பல் கோரிக்கை வழங்குனருக்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கட்டளை 2023/ADB/X/R/P/00013 இன் கீழ் 5,000,000 அலகுகளின் அளவு அலகொன்று ரூபா 8,649 வீதம் கொள்வனவு செய்தற்கு சுகாதார முறைமையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்ட பணிப்பாளரின் இலக்கம் HSEP/AF/PMU/PPC/G.3036/215/2023 மற்றும் 2023 ஏப்ரல் 21 ஆம் திகதிய கட்டளை விநியோகிக்கப்பட்டது. எனினும், அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் விலைகளின் பிரகாரம் ஒப்பீடு செய்யும் போது சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதி மிகவும் உயர்வாக இருந்தமையால் அதனை குறைத்துக் கொள்வதற்காக கேள்விதாரருடன்

இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. அவ்வாறே கட்டளையின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திட்ட 2023 மே 08 ஆந் திகதி முதல் 60 நாட்களுக்குள் பொருட்கள் வழங்க வேண்டியிருந்த போதிலும், 2023 செப்டம்பர் 08 ஆந் திகதியே அதாவது 120 நாட்களின் பின்னரே பொருட்கள் கிடைத்திருந்தது. கொள்வனவு கட்டளையின் பிரகாரம் தாமதிக்கின்ற ஒவ்வொரு வாரத்திற்கும் தாமதக் கட்டணமாக உடன்படிக்கைத் தொகையில் 0.5 சதவீதம் ஆக 08 வாரங்களுக்காக ரூபா 1,729,800 அறவிட வேண்டியிருந்த போதிலும், செயற்திட்டத்தால் அவ்வாறு குறைக்காமல் மொத்த தொகையான ரூபா 43,245,000 வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டத்தின் பிரகாரம் வழங்குனருடன் கையொப்படமிடப்பட்ட உடன்படிக்கை கம்பனி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இலக்கம் 2022/SPC/X/R/P/00267 என்ற கட்டளையின் கீழ் கடன் வசதியின் கீழ் இந்திய கடன் வசதியின் கீழ் 4,000,000 அலகுகளின் அளவு 2,000,000 அலகுகள் வீதம் பெற்றுக் கொள்வதற்காக கட்டளை 2022 ஒக்டோபர் 14 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. பொருள் அனுப்பல் கோரிக்கையின் பிரகாரம் 2022 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் 2 மில்லியன் அலகுகள் வீதம் வழங்க வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்டது. எனினும், அந்த கட்டளை 2023 செப்டம்பர் 18 கணக்காய்வுத் திகதி வரையிலும் கிடைக்கப் பெறாதிருந்ததுடன், இன்டன்டு விநியோகித்து 11 மாதங்கள் கடந்திருந்த போதும், மருந்து கிடைக்கப் பெறாதிருந்தமையும், இன்டன்டுவை இரத்துச் செய்வதற்கோ கால நீடிப்பு மேற்கொள்ளாதிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஐ) ஒரு வருட காலமாக இந்த மருந்து மருத்துவ வழங்கல் வழங்கல் பிரிவுடன் காணப்படாதிருந்ததுடன், இந்த பற்றாக்குறைக்கு மேற்கூறப்பட்ட விடயங்கள் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

40. <u>Co-amoxiclav Tab.625 mg (SR No - 00100902)</u>

மேற்கூறப்பட்ட மருந்து 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் 06 சந்தர்ப்பங்களின் போது முறையே 13,999,000 மாத்திரைகள் மற்றும் 37,100,000 மாத்திரைகள் கட்டளை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்குரிய தேவை, வழங்கல் மற்றும் ஒழுங்கபடுத்தல் தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய கட்டளை சராசரி கட்டளையில் இருந்தும், நன்கொடை மூன்றில் இருந்தும் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவில் உடன்படிக்கை செய்யப்பட்ட (buy back agreement) வழங்குனரிடம் இருந்தும் பெறப்பட்ட 03 கட்டளைகளை உள்ளடக்கியிருந்ததுடன், 2021.03.18 ஆந் திகதிய இலக்கம் 2022/SPC/N/R/P/00058 என்ற சராசரி கட்டளை இரத்துச் செய்யப்பட்டது.

(ஆ) வருடாந்த மதிப்பீடு செய்யப்பட்ட அளவை ஒப்பீடு செய்த போது முறையே 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது முறையே 62, 95, 122 மற்றும் 36 சதவீதம் ஆனமையால் மதிப்பீடு தயாரித்தல் சாத்தியமாக மேற்கொள்ளப்படாதிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) 2021 ஏப்ரல் 01 ஆந் திகதிய இலக்கம் 2021/SPC/N/R/P/00038 என்ற கட்டளை மூலம் 46 மில்லியன் மாத்திரைகளை வழங்குவதற்கான கால வீச்சில் 04 வழங்கப்பட்டிருந்த போதிலும், பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிப்பதற்காக 2020 திசெம்பர் 03 ஆந் திகதிய அமைச்சரவைப் பெறுகைக் குழு அங்கீகாரத்தில் இருந்து 04 மாத காலம் எடுத்திருந்தது. 2021 ஏப்ரல் 01 ஆந் திகதிய பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகித்ததன் பின்னர் மருந்து வழங்குவதற்காக இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. திட்டமிடப்பட்ட பிரகாரம் குறித்துரைத்த திகதியில் மருந்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை

எடுக்காமையின் காரணமாக ரூபா 121,631,833 மேலதிகமாக செலுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீள் கொள்வனவுகளின் உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இந்த மருந்து தொகுதிக்குரிய மருந்துகள் குருநாகல் போதனா வைத்தியசாலை நோயாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த மருந்தின் தரம் தொடர்பாக (Quality) நிச்சயமற்ற நிலைமை காணப்படுகின்றமையால் பயன்பாட்டிற்கு பொருத்தமான தரத்தில் காணப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமையின் அடிப்படையில் இந்த மருந்து தொடர்பாக பாசோதனை செய்து அறிக்கையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தருக்கு இரண்டு சந்தர்ப்பங்களின் போது எழுத்துமூலம் அறிவிக்கப்பட்ட போதிலும் இந்த அறிக்கை திகதி வரையிலும் அந்த பரிசோதனை மேற்கொண்டு கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2023 ஆம் ஆண்டிற்காக அரச மருந்தக கூட்டுத்தாபகத்தின் மூலம் மீள் கொள்வனவு ஊடாக 14,000,000 மாத்திரைகள் சராசரி கட்டளை இட்டிருக்கும் போது, இந்த மருந்தின் கேள்வி குறைவடைந்த சந்தர்ப்பம் ஒன்றில் இலக்கம் 2023/MSD/A/R/P/00064 என்ற மேலதிக கட்டளை மூலம் இந்த மருந்தில் 23,000,000 மாத்திரைகள் கட்டளையிடுவதற்கு நடவடிக்கை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

41. <u>Sodium Nitroprusside Inj. 50mg(SR No – 00202001)</u>

2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை மொத்த மதிப்பீடு 3,668 அலகுகாக இருந்ததுடன், அந்த காலப் பகுதிக்காக 1,789 அலகுகள் கட்டளையிடப்பட்டிருந்தமையும் 2022 ஆம் ஆண்டின் போது 200 அலகுககள் மாத்திரம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்தமையும் MSMIS தரவு முறைமையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மேற்கூறப்பட்ட மருந்தின் 2022 இன் வருடாந்த தேவை 517 மருந்து குப்பிகளாக இருந்ததுடன், 200 மருந்து குப்பிகள் மானியமாகவும், 500 மருந்து குப்பிகள் இந்திய கடன் வசதியின் கீழும் கட்டளையிடும் போது 183 மருந்து குப்பிகள் மேலதிகமாக கட்டளையிடப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2023 ஏப்ரல் 04 ஆம் திகதிய இலக்கம் 01-14/2023 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் அத்தியவசிய மருந்து ஒன்றான இந்த மருந்து தொடர்பாக கணனி தரவு முறைமைகளின் தகவல்களின் படி 2019 ஆம் ஆண்டு முதல் 2022 வரை 06 சந்தர்ப்பங்களின் போது கட்டளையிடப்பட்ட 1,789 மருந்து குப்பிகளுக்கு இடையே 04 சந்தாப்பங்களின் போது கட்டளையிடப்பட்ட 1,089 மருந்து குப்பிகள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருக்கவில்லை. பெறுகை நோக்கங்கள் உரிய பிரகாரம் இனங்காணாமை பெறுகையில் ஈடுபடுகின்ற பிரிவுகளின் உத்தியோகத்தரினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் நிச்சியமற்றதாக இருந்தமை மற்றும் தேவையற்ற தாமதங்களினால் கட்டளை குறித்துரைத்த பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(இ) உரிய பிரகாரம் கட்டளையிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை 32 சந்தர்ப்பங்களின் போது 209 மருந்து குப்பிகள் ரூபா 258,070 செலுத்தி பிரதேச ரீதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) கட்டளை இலக்கம் 2022/SPC/X/R/P/00264 மூலம் இந்திய கடன் வசதியின் கீழ் 500 மருந்து குப்பிகளை கொள்வனவு செய்வதற்காக அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் கேள்வி கோரப்பட்டிருந்தடன், தேசிய ஒளடதங்கள் அதிகார சபையால் விநியோகிக்கப்படுகின்ற பதிவுசெய்தல் சான்றிதழ் (WOR) மற்றும் சுயாதீன தரப்பினரால் இரசாயன அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளல் போன்ற

விடயங்களின் அடிப்படையில் குறைந்த கேள்விதாரருக்கு கட்டளை கையளிப்பதற்கு திணைக்கள பெறுகைக் குழுவினால் 2022 ஏப்ரல் 19 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையின் படி மருந்தில் காணப்பட வேண்டிய Pharmacopoeia Standard மற்றும் மருந்து சேகரித்து வைக்க வேண்டிய களஞ்சிய நிலைமை (Storage Condition) போன்ற அடிப்படை விடயங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் மேற்கூறப்பட்ட கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) வழங்குனரால் உடன்படிக்கையின் பிரகாரம் அதாவது 2022 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் 250 மருந்து குப்பிகள் வீதம் மருந்துகள் வழங்கப்படாமையின் அடிப்படையில் 2022 செப்டம்பர் 19 ஆம் திகதி மேற்கூறப்பட்ட மருந்திற்காக வழங்கப்பட்ட WOR சான்றிதழ் 2023 யூன் 19 ஆம் திகதி காலாவதியாகியிருந்தமையும் அதன் செல்லுபடி காலம் 2023 திசெம்பர் 19 ஆம் திகதி வரையும் நீடிப்பதற்கு ஏற்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) கேள்வி கையளித்தல் 2022 மே 20 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட போதும், 2022 யூன் 10 ஆம் திகதி வழங்குனரால் செயலாற்றல் பிணைமுறியின் பெறுமதியை குறைக்குமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்குனரால் இந்த பெறுகைகளுகக்காக 03 மாத காலம் எடுத்திருந்ததுடன், 2022 ஆகஸ்ட் 16 ஆம் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iv) கட்டளை சமர்ப்பிக்கும் போது 250 மருந்து குப்பிகள் உடனடியகாவும், 125 மருந்து குப்பிகள் முதலாவது இருப்பு கிடைத்து 02 மாதங்களிலும் மிகுதி 125 மருந்து குப்பிகள் இரண்டாவது இருப்பு கிடைத்து 01 மாதத்திலும் வழங்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும், 2022 செப்டம்பர் 27 ஆம் திகதிய இலக்கம் DHS/ICL/IG/307/22 என்ற பொருள் அனுப்பல் கோரிக்கையின் பிரகாரம் 250 மருந்து குப்பிகள் 2022 நவம்பர் 30 ஆம் திகதியும், 250 மருந்து குப்பிகள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியும் வழங்க வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட மருந்து வழங்குதல் தொடர்பாக ஒன்றுக்கொன்று பரஸ்பர கால எல்லையில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் இருப்பு மட்டத்தை பேணிச் செல்லல் சர்ச்சைக்குரியதாக விடயமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(v) பெறுகையின் போது இணங்கப்பட்ட கால எல்லையில் மருந்து வழங்குவதற்கு பதிலாக முதலாவது மருந்து 250 குப்பிகளை வழங்குவதற்காக 281 நாட்களும், இரண்டாவது மருந்து இருப்பினை வழங்குவதற்காக 250 நாட்களுமாக நீண்ட தாமதம் ஏற்பட்டிருந்தமையால் கட்டளை கையளித்ததன் பின்னர் இருப்பு பெற்றுக் கொள்வதற்கான போதியளவான மற்றும் முறையான வேலைத் திட்டமொன்று அரச மருந்தக கூட்டுத்தாபனத்திடம் இருக்க வேண்டியமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(vi) இந்த மருந்துகள் அதிக இரத்த அழுத்த உள்ள நோயாளிகளை போன்று கடுமையான இதய நோயில் உள்ள நோயாளர்களுக்காகவும் பயன்படுத்துகின்ற அத்தியவசிய மருந்தாக இருந்தமையால் பெறுகையில்

ஈடுபட்ட பிரிவுகளின் உத்தியோகத்தர்களினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களின் நிச்சியமற்ற நிலைமை மற்றும் தேவையற்ற தாமதங்களினால் மருந்து இருப்பு தொடர்பாக பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) இலக்கம் 2021/SPC/N/R/P/00048 என்ற சராசரி கட்டளையின் பிரகாரம் WOR சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் அடிப்படையில் ஆகக் குறைந்த கேள்வி சமர்ப்பித்த நிறுவனத்தில் இருந்து 350 மருந்து குப்பிகள் பெற்றுக் கொள்வதற்காக அரச மருந்தக கூட்டுத்தாபனம் திணைக்கள பெறுகைக் குழுவினால் 2020 நவம்பர் 04 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கேள்வி சமர்ப்பித்த சகல நிறுவனங்களும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யாதிருந்த நிறுவனங்கள் ஆனமையால் பெறுகையின் போது அத்தியவசியமான விடயங்கள் பூர்த்தி செய்யப்படாத நிறுவனம் தொடர்பாக நம்பிக்கையினை வைத்துக் கொள்ளல் தொடர்பாக கணக்காய்வின் போது சர்ச்கைக்குரியதாக விடயமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) நியாயமான கேள்விதாரர்களினால் பதிவு சான்றிதழ் பதிவு விடுவிக்கும் சான்றிதழிற்காக விண்ணப்பித்த போதும் மருந்தின் கேள்வி விலை உயர்வடைந்ததன் அடிப்படையில் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையால் WOR சான்றிதழ் விநியோகித்தல் நிராகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சந்தையில் காணப்படுகின்ற போட்டி விலைகள் தொடர்பாக பெறுகைக் குழு சரியான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதா என்பது தொடர்பாகவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

(ஊ) இலக்கம் 2023/BPC/N/R/P/00120 என்ற கட்டளையை அடிப்படையாக கொண்டு அரச மருந்தக கூட்டுத்தாபன பெறுகை உத்தியோகத்தரின் (மருந்து) 2023 பெப்ரவரி 15 ஆம் திகதிய முகாமையாளருக்கு (நிர்வாகம்) முகவரியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் முன்னைய வழங்குனர்கள் எட்டு பேர்களிடம் கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் இரண்டு கேள்விகள் மாத்திரம் கிடைத்திருந்தது. அதில் ஒரு கேள்விதாரர் முன்னைய வழங்குனர் இல்லாதிருந்ததுடன் ஏனைய வழங்குனர்கள் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையில் சான்றிதழ் இல்லாத கேள்விதாரர்கள் ஆகும். அந்த கேள்வியின் விலையை குறைப்பதன் கீழ் கட்டளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் கேள்விதாரர்களால் விலை குறைப்பதற்கு இணங்கியிருக்காதிருந்தமை 2023 செப்தெம்பர் 27 ஆந் திகதிய திணைக்கள பெறகை குழு அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

42. <u>Pethidine Hydrochloride Injection 75mg (00001102)</u>

2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்காக மதிப்பீடு செய்யப்பட்ட அலகுகள் 1,056,630 ஆக இருந்ததுடன், 2019 முதல் 2022 வரையான காலத்தில் அதில் 703,120 அலகுகள் கட்டளையிடப்பட்டிருந்தது. 2019 மற்றும் 2020 என்ற இரண்டு ஆண்டுகளின் போது 379,999 அலகுகள் மாத்திரம் கிடைத்திருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2020 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட 231,719 அலகுகளாக இருந்த போதும், கட்டளையிடலின் அலகுகள் 326,120 ஆனமையால் மதிப்பீட்டினை விஞ்சி 94,401 அலகுகள் கட்டளையிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் முறையே 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது மதிப்பீட்டு அளவு 264,138 அலகுகள் மற்றும் 210,864 அலகுகளாக இருந்ததுடன், கட்டளையின் அளவு முறையே 32,000 அலகுகள் மற்றும் 14,500 அலகுகள் ஆக அந்த ஆண்டுகளின் போது 87 சதவீதம்

மற்றும் 31 சதவீதம் குறைத்து கட்டளை இடலின் மூலம் மதிப்பீடு தயாரித்தல் சரியான பிரகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது 03 சந்தர்ப்பங்களின் போது கட்டளையிடப்பட்ட 177,000 மருந்து அலகுகள் கணக்காய்வு திகதியான 2023 ஒக்டோபர் மாதம் வரையிலும் கிடைக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) இலக்கம் 2022/SPC/N/R/P/00066 என்ற சராசரி கட்டளை மூலம் 2021 மார்ச் 22 இல் 32,000 அலகுகள் கட்டளையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை கணனி தரவு முறைமையில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அவ்வாறான கட்டளையொன்று அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப் பெறாதிருந்தமை 2023 நவம்பர் 16 ஆந் திகதி பிரதி பொது முகாமையாளர் ஒழுத்து மூலம் கணக்காய்விற்கு அறிவித்தமையினால் கணனி முறைமையின் தஷகவல்கள் தொடர்பாக நம்பிக்கையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலக்கம் 2021/SPC/L/R/P/00387 என்ற கட்டளை மூலம் மேற்கூறப்பட்ட மருந்தில் 38,620 அலகுகளை பெற்றுக் கொள்வதற்காக தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்த உற்பத்தியாளர்களின் தேசிய முகவர்களிடம் இருந்து கேள்வி கோரப்பட்டிருந்ததுடன், இதற்காக 02 நிறுவனங்களில் மாத்திரம் கூறுவிலை கிடைத்திருந்ததுடன், ஆகக் குறைந்த கேள்விதாரரான Leader Pharma Agency (Pvt) Ltd நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இந்தியாவின் Verve Human care laboratories நிறுவனத்தில் உள்நாட்டு முகவரான Leader Pharma Agency (Pvt) Ltd நிறுவனத்திற்கு தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு சான்றிதழ் பட்டியல் திகதியான 2020 யூலை 07 ஆம் திகதி அளவில் செல்லுபடியற்றதாகி ஒரு மாதம் கடந்திருந்ததுடன், இதனை நீடித்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டத்தின் பிரகாரம் வழங்குனருடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கை கம்பனி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) இலக்கம் 2021/SPC/N/R/P/00060 என்ற கட்டளையை அடிப்படையாக கொண்டு 230,000 மருந்து அலகுகள் வழங்குவதற்காக கேள்வி கோரும் போது எதிர்கால வழங்குனரான இந்தியாவில் Verve Human Care Laboratories நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், கேள்வி பெறுமதி அ.டொலர் 805,000 ஆகும். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2021 மார்ச் 04 ஆம் திகதிய இலக்கம் DHS/AR/277/21 என்ற பொருள் அனுப்பல் கோரிக்கையின் பிரகாரம் இந்த மருந்தில் 150,000 அலகுகள் 2021 ஏப்ரல் 30 ஆம் திகதியும், 80,000 அலகுகள் 2021 ஆகஸ்ட் 31 ஆம் திகதியும் வழங்க வேண்டியிருந்தது. 2022 யூன் 20 ஆம் திகதி வரையில் மருத்துவ வழங்கல் பிரிவிலும் அரசாங்க வைத்தியசாலையிலும் இருப்பு காணப்படவில்லை. இருப்பு வழங்க வேண்டிய திகதியில் இருந்து 14 மாதங்கள் கடந்திருந்த போதிலும், முதலாவது இருப்பை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) 2021 ஏப்ரல் 28 ஆம் திகதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் விநியோகிக்கப்பட்ட இலக்கம் NMRE/EA/LA/040/21 என்ற Narcotic License இன் முதலாவது பக்கத்தில் Pethidine Injection BP 75 mg/1.5ml glass ampoule (VERPAT – 75) ஆகவும் இரண்டாவது பக்கத்தில் அது Codeine Phosphate BP 226,000g (226 Packs of 1000g) ஆக குறிப்பிடப்பட்டிருந்தமையால் கேள்விதாரருக்கு பொருள் அனுப்பல் கோரிக்கை வழங்குதல் மேலும் தாமதமாகியிருந்ததுடன், மீண்டும் ஒரு மாத காலத்தின் பின்னர் அதாவது 2021 மே 30 ஆம் திகதி Narcotic License விநியோகிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) இந்த மருந்தில் 150,000 அலகுகளை பெற்றுக் கொள்வதற்காக மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் நிதி அமைச்சினால் பெயர் பட்டியல் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், இருப்பினை பெற்றுக் கொள்ளல் தாமதமடைந்ததன் காரணமாக Narcotic License மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது. 2022 யூலை 02 ஆம் திகதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் விநியோகிக்கப்பட்ட இலக்கம் NMRA/MA/IP/057/22 என்ற Narcotic License இன் Pethidine Injection BP 75 mg/1.5mg (VERPAT – 75) ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதும், Pethidine Injection BP 75 mg/1.5ml (VERPAT – 75) ஆக குறிப்பிட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் உத்தியோகத்தர்களின் கவனம் இன்மையின் காரணமாக Narcotic License 02 சந்தர்ப்பங்களின் போது தவறாக விநியோகிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2024 ஆம் ஆண்டிற்குரிய 2023 பெப்ரவரி 24 ஆம் திகதிய இலக்கம் 2024/SPC/N/R/P/00023 என்ற கட்டளை மூலம் Ampoules 180,000 அலகுகள் தேவையாக இருந்ததுடன், அதில் 100,000 அலகுகள் 2024 சனவரி 15 ஆம் திகதியும், 80,000 அலகுகள் 2024 மே 15 ஆம் திகதியும் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை இலக்கம் 01-14/2023 மற்றும் 2023 ஏப்ரல் 04 ஆம் திகதிய சுற்றறிக்கையின் படி முன்னுரிமை பட்டியலில் இந்த மருந்து குறிப்பிடப்படாமையினால் கட்டளை சமர்ப்பித்து கணக்காய்வு திகதி வரையிலும் 07 மாதங்கள் கடந்திருந்த போதிலும், சட்ட ரீதியாக இரத்து செய்வதற்கோ அல்லது கைவிடல் தொடர்பாகவோ தெளிவான தகவல்கள் பெறப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

43. <u>Alteplase 20mg Vial (SR No – 00205701)</u>

2019 முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்காக மதிப்பீடு செய்யப்பட்ட அளவு 5,861 அலகாக இருந்ததுடன், அக்காலத்தில் 3,865 அலகுகள் கட்டளையிடப்பட்டிருந்ததுடன், அதில் 2,590 அலகுகள் கிடைத்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2021 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட அளவு 1,204 அலகுகாக இருந்த போதும், அந்த அளவினை விஞ்சி 1,400 அலகுககள் கட்டளையிடப்பட்டிருந்தது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது மதிப்பீட்டு அளவு முறையே 1,164 அலகுகள் மற்றும் 1,303 அலகுகளாக இருந்ததுடன், கட்டளையின் அளவு முறையே 625 அலகுகள் மற்றும் 450 அலகுகள் ஆகும். மதிப்பீட்டு அளவுடன் ஒப்பிடும் போது வருடாந்த கட்டளை அளவு அந்த ஆண்டுகளின் போது 46 சதவீதம் மற்றும் 65 சதவீதம் குறைத்து மேற்கொண்டதன் மூலம் மதிப்பீடு தயாரித்தல் சரியான திட்ட முறைமையின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2022 ஆம் ஆண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களின் போது சமர்ப்பிக்கப்பட்ட 225 அலகுகள் மற்றும் 450 அலகுகள் கணக்காய்வு திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை.

(இ) 2023 ஆம் ஆண்டின் போது இலக்கம் 2023/SPC/E/C/P/00163 என்ற கட்டளையின் கீழ் 225 அலகுகள் ரூபா 24,571,631 அவசர கொள்வனவாக கட்டளையிடப்பட்ட போதிலும், MSMIS கணனி முறைமை இந்த கட்டளை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மருத்துவ வழங்கல் மீளாய்வு குழுவின் (மருந்துகள்) தீர்மானிக்கும் போது 03 மாதம் தேவையகளுக்காக அவசர கொள்வனவுகள் மேற்கொள்வதற்காக பிரதி பணிப்பாளர் நாயகத்தின் (மருத்துவ வழங்கல்) 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி DDG/MSD/E/02/2023 கடிதம் மூலம் அரச மருந்த கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவசர பெறுகைக் குழுவினால் 225 அலகுகளின் அளவொன்று கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோருவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும், அதற்காக கூறுவிலை சமர்ப்பிக்காமையின் காரணமாக மீண்டும் பெறுகை மேற்கொள்ள வேண்டியதாக அறிவிக்கப்பட்டிருந்தது. கணகக்காய்வுத் திகதி வரையிலும் அதாவது ஒக்டோபர் வரையில் எடுக்கப்பட்ட காலம் காலம் 08 மாதங்களை விஞ்சியிருந்த போதும் மீண்டும் பெறுகைகள் மேற்கொள்ளாமையினால் அவசர தேவைகள் என்ன என்பது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) சராசரி கொள்வனவின் கீழ் 2022 ஆம் ஆண்டின் போது Vial 400 இற்காக இலக்கம் 2022/SPC/N/C/P/00017 என்ற கட்டளைக்கு திணைக்கள பெறுகை குழுவினால் கேள்வி கோருவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக ஒரு கேள்விதாரர் முன்வந்திருந்ததுடன், அந்த கேள்விதாரரை தெரிவு செய்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இந்த மருந்திற்குரிய மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து கிடைத்த வழங்கல் நிபந்தை மற்றும் பொருள் அனுப்பல் கோரிக்கை நிபந்தனையின் பிரகாரம் ‘‘உற்பத்தி திகதியில் இருந்து ஆகக் குறைந்தது 24 மாதம் ஆயுட் காலத்துடன் சமர்ப்பிக்க வேண்டும் என’’ குறிப்பிடப்பட்ட போதிலும், மருந்தின் தேவை மிகுதி உயிர் வாழ்வுக் காலம் 18 மாதங்கள் ஆக இருந்ததுடன் 75 சதவீதத்தை விட குறைவாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ii) ஆயுட்காலம் 75 சதவீதத்தை விட குறைவடைந்ததன் காரணமாக அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் வழங்குனருக்கு ரூபா 2,544,574 (ஐ.அ.டெலார் 7,006.17) மேலதிக கட்டணமொன்றை அறவிடுவதற்காக இலக்கம் D/N – DNS/P/022/2023 என்ற வரவு தாள் விநியோகிக்கப்பட்ட போதும் இந்த தொகை அறவிடப்பட்டதா இல்லையா என்பது தொடர்பாக பரீட்சிப்பதற்குரிய எழுத்து மூல உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டத்தின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட வழங்குனருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை கம்பனி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை

(iv) தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு சான்றிதழின் செல்லுபடி காலம் முடிவடைந்திருந்ததுடன், அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2020 நவம்பர் 27 ஆம் திகதிய இலக்கம் NMRA/SP/CEO/02N/2020 என்ற கடிதம் மூலம் 2021 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் உரிய மருந்து காலாவதியாகும் திகதியான

2022 நவம்பர் 30 வரையிலும் பதிவின் செல்லுபடி காலம் கடந்து 17 மாதங்களை விஞ்சியிருந்த போதிலும், அதனை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2023 ஆம் ஆண்டில் இந்த மருந்து சராசரி விலையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இந்த சராசரி கொள்வனவின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இலக்கம் 2023/SPC/N/C/P/00124 என்ற கட்டளைக்குரிய பெறுகை அறிவித்தலின் படி சமர்ப்பிக்கப்பட்ட ஒரே ஒரு கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரரிடம் இருந்து 450 அலகுகள் ரூபா 49,143,262 தொகையில் கொள்வனவு செய்வதற்காக திணைக்கள பெறுகைக் குழு தீர்மானித்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இந்த மருந்துக்குரிய மருத்துவ வழங்கல் பிரிவில் கணனி மயப்படுத்தப்பட்ட கட்டளை பட்டியலின் பிரகாரம் சனவரி 15 மற்றும் 2023 ஏப்ரல் 16 என்ற கட்டளை மூலம் முறையே 250 அலகுகளும், 200 அலகுகளும் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இந்த வழங்குனர் எதிர்கால வழங்குனராக இருந்தமை மற்றும் கேள்வி சமர்ப்பித்த ஒரே ஒரு வழங்குனர் ஆனமையால் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு இந்த வழங்குனரை தெரிவு செய்திருந்தது. எனினும், திட்டமிடப்பட்ட திகதியில் இருந்து கணகக்காய்வுத் திகதி வரையிலும் 09 மாதங்கள் கடந்திருந்த போதிலும், வழங்குனருக்கு பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகித்து மருந்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவுச் சான்றிதழ் 2022 திசெம்பர் 14 ஆம் திகதி முடிவடைந்திருந்தமை தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் பதிவுச் சான்றிதழ் செல்லுபடி காலத்தை நீடிப்பதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

44. <u>Haloperidol inj' 5 mg/1ml (SR - 00300803)</u>

2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை மொத்த மதிப்பீட்டு தடுப்பூசிகள் 448,349 ஆக இருந்ததுடன் விநியோகிக்கப்பட்ட அளவு 228,873 தடுப்பூசிகளாக காணப்பட்டது. நோயாளர்களினால் பயன்படுத்தப்பட்ட அளவு 228,686 தடுப்பூசிகளாக இருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை மதிப்பீடு செய்தல், விநியோகித்தல் மற்றும் நுகர்வுடன் ஒப்பிடும் போது மதிப்பீடு செய்தல் முறையான குறிகாட்டிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 10,390 அலகுகள் 2022 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் காலாவதியாகியதுடன் 70,000 அலகுகள் 2023 ஒக்டோபர் 31 இல் காலாவதியாவதற்கு இருந்தது.

(இ) இலக்கம் 2023/SPC/N/R/P/00069 என்ற 30,000 அலகுகளுக்கான கட்டளை 2022 நவம்பர் 24 ஆந் திகதி மருத்துவ வழங்கல் பிரிவினால் அனுப்பப்பட்டிருந்தது. இதற்கான இலக்கம் DHS/MM/069/2023 என்ற பொருள் அனுப்பல் கோரிக்கையின் பிரகாரம் 2024 மே 30 ஆம் திகதி வரையில் கட்டளை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவு சமர்ப்பித்த கட்டளைக்குரிய மருந்துகளை பெற்றுக்கொள்வதற்கான சராசரி காலம் 11 மாதங்களாக இருந்த போதிலும் அந்தக் காலத்தையும் விஞ்சி 07 மாதங்கள் எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

45. <u>Heparin Injection 25,000 I.U/ 5 ml (SR No – 00204601)</u>

MSMIS கணனி முறைமையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை மொத்த மதிப்பீடு 1,876,233 அலகுகளாக இருந்ததுடன் அந்த காலப்பகுதிக்குரிய கட்டளை அளவு 2,106,660 அலகுகள் ஆகும். 2023 ஒக்டோபர் 16 ஆந் திகதி வரையில் 1,373,107 அலகுகள் கிடைத்திருந்தமை MSMIS கணனி முறைமையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மேற்கூறப்பட்ட மருந்துகளுக்காக 2022 ஆம் ஆண்டின் வருடாந்தத் தேவை 396,317 குப்பிகள் ஆகும். எனினும் 12 சந்தர்ப்பங்களின் போது மானியமாக, அவசரக் கொள்வனவு, உலக வங்கி உதவி மற்றும் இந்திய கடன் வசதியின் கீழ் முறையே 155,350, 100,000, 200,000 மற்றும் 275,000 மருந்துக் குப்பிகளாக கூட்டுமொத்தமாக 730,350 மருந்துக் குப்பிகள் கட்டளையிடப்பட்டிருந்தது. இது வருடாந்த மதிப்பீடு செய்யப்பட்ட அளவினை விட 84 சதவீதத்திற்கு மேல் அதிகதித்த கட்டளையிடலாக இருந்தமையும் கட்டளை தயாரிக்கும் போதும் முறையான திட்டமுறைமையின் பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) இந்த மருந்துகள் நோயாளர்களை உயிர் ஆபத்திலிருந்து பாதுகாப்பதற்காக மருந்து முன்னுரிமைப் பட்டடியலின் பிரகாரம் அத்தியவசிய மருந்தாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எனினும் பெறுகையின் நோக்கங்கள் உரியவாறு மேற்கொள்ளப்படாமை, பெறுகையில் ஈடுபட்டிருந்த பல்வேறு பிரிவுகளின் உத்தியோகத்தர்களினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களில் நிச்சயமற்ற தன்மை மற்றும் தேவையற்ற தாமதங்கள் ஏற்பட்டமை மருந்து பற்றாக்குறை ஏற்படுவதற்கு காரணமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) Promto கணனி முறைமையின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் 29 சந்தர்ப்பங்களின் போது மேற்கூறப்பட்ட மருந்தில் 7,131 குப்பிகளில் அலகுகளின் அளவு பிரதேச ரீதியில் பல்வேறு வழங்குநர்களிடமிருந்து பல்வேறு விலைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 15,179,957 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த மருந்துக் குப்பியொன்றின் விலை ரூபா 1,500 முதல் ரூபா 4,000 ஆன கணிசமான விலை வீச்சின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இருந்துக் குப்பியொன்றின் சராசரி விலை ரூபா 717.97 ஆக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மருந்து பெறுகை நடவடிக்கைகள் குறித்துரைத்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்படாமையின் அடிப்படையில் கணிசமான தொகையொன்றை மேலதிகமாக செலவிட வேண்டியிருந்தமை கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது கட்டளையிடப்பட்ட மருந்துகளுக்கு இடையே முறையே இலக்கம் 2020/SPC/N/R/P/00055 என்ற மற்றும் இலக்கம் 2021/SPC/N/R/P/00066 என்ற சராசரி கேள்விகளுக்கு உரிய 42,017 மருந்துக் குப்பிகள் மற்றும் 36,444 மருந்துக் குப்பிகள் 2022 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்தது. முறையான கால அட்டவணையின் பிரகாரம் கட்டளையிடப்பட்ட மருந்துகளை வழங்குவதற்கு முடியாமையால் சராசரி கொள்வனவிற்கு புறம்பாக கீழே (உ) இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் அவசர கொள்வனவுகளுக்கும் மற்றும் கடன் வசதிகள் போன்ற ஏனைய மூலங்களுக்கும் தொடர்பு படவேண்டியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) கட்டளை இலக்கம் 2022/SPC/E/R/P/00738 இன் கீழ் 75,000 மருந்துக் குப்பிகள் அவசர தேவையின் அடிப்படையில் வழங்குவதற்காக அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு 2022 நவம்பர் 04 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் சான்றிதழ் மற்றும் இரண்டு வாரங்களுக்குள் மருந்துகளை வழங்கும் இணக்கப்பாட்டின் அடிப்படையில்

வழங்குநர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்தக் கொள்வனவுகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு நியமித்தல் மற்றும் அந்த குழுவின் மூலம் பெறப்பட்ட தீர்மானம் தொடர்பாக எழுத்து மூலச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட மருந்துகளுக்காக கூறுவிலை கோரும் போது அந்த மருந்துக் குப்பிகள் (vials) ஆக வழங்க வேண்டியிருந்தமை கேள்வி கோரல் ஆவணங்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. எனினும் கட்டளை கையளிக்கப்பட்ட நிறுவனத்தால் "Ampoule" ஆக சமர்ப்பிக்கப்பட்டமை அதற்குரிய கோவைகளை பரிசோதனை செய்த போது வெளிப்படுத்தப் பட்டது. அதன் பிரகாரம் கேள்வி கோரல் ஆவணங்களில் Heparin Injection vials அல்லது Ampoule ஆக கருதப்படுமாயின் அந்த கட்டளைக்காக மேலதிக தரப்பினர்கள் பங்குபற்றுவதற்கு இடமளிக்கப்படுகின்றமை கணக்காய்வின் போது புறந்தள்ள முடியாதிருந்தது. அதன் பிரகாரம் தகைமை பெற்ற ஆர்வம் காண்பிக்கின்ற தரப்பினருக்கு பெறுகைகளுக்கு பங்குபற்றுவதற்கான நியாயமான மற்றும் சமமான மற்றும் ஆகக் கூடிய சந்தர்ப்பங்களை வழங்குதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருந்ததா என கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

(iii) கேள்வி கோரும் நிபந்தனையின் பிரகாரம் வழங்குநர் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் காணப்படல் அல்லது குறைந்த கூறுவிலை சமர்ப்பித்ததன் அடிப்படையில் பதிவினை கைவிடுதல் சான்றிதழ் பெற்றுக் கொண்டமை கட்டாயமாக இருக்கவேண்டுமென காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் வழங்குநரின் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவு 2022 பெப்ரவரி 12 ஆந் திகதியில் முடிவடைந்திருந்தது. அதன் பிரகாரம் வழங்குநரின் பதிவை புதுப்பிப்பதற்கோ அல்லது WOR சான்றிதழ் விநியோகிப்பதற்கோ அரச மருந்தக கூட்டுத் தாபனத்தால் 2023 சனவரி 30 ஆம் திகதி தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் பதிவினை புதுப்பிப்பதற்கோ அல்லது WOR விநியோகித்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) மேற்கூறப்பட்ட கட்டளை சமர்ப்பிக்கப்பட்ட 2022 நவம்பர் 02 ஆம் திகதி வரையில் மருத்து வழங்கல் பிரிவிற்கு சொந்தமாக இந்த மருந்தில் ஆகக் கூடிய பற்றாக்குறை காணப்பட்டதுடன் அரச மருந்தக கூட்டுத்தாபனம் விநியோகித்த 2023 பெப்ரவரி 01 ஆம் திகதிய இலக்கம் LP/DHS/EP/HD/3595/2022 என்ற இன்டென்டுவின் பிரகாரம் மருந்து வழங்க வேண்டிய திகதி 2023 சனவரி 15 ஆந் திகதி ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகரம் ஒன்றுக்கொன்று வேறுபாடாக பெறுகை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

(v) அமைச்சரவை தீர்மானப் பத்திர இலக்கம் 22/1523/610/018 என்ற ''இலங்கையில் தொடர்ச்சியாக மருத்துவ வழங்கல் சேவையொன்றை பேணிச் செல்லல்'' என்ற நோக்கில் சுகாதார அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவின் பிரகாரம் மற்றும் தற்போது கணப்படுகின்ற இருப்பு பற்றாக்குறையின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளுக்கு இடையே வழங்குநரைத் தெரிவு செய்து கட்டளைகளை வழங்குவதற்கு சுகாதார முறைமை அவசர பெறுகைக் குழுவால் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த வழங்குநர் குறித்துரைத்த காலத்தின் போது மருந்து வழங்குவதற்கு தவறியிருந்தாரல்.

(ஊ) கட்டளை இலக்கம் 2022/SPC/X/R/P/00284 இன் கீழ் அவசரத்தின் அடிப்படையில் மற்றும் இந்திய கடன் வசதியின் கீழ் மேற்கூறப்பட்ட 275,000 மருந்துக் குப்பிகளை கொள்வனவு செய்வதற்காக மருத்துவ வழங்கல் பிரிவின் தரவு முறைமை மூலம் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த மருந்தில் குப்பியொன்று ஐ.அ.டொலர் 2.65 வீதம் ஐ.அ.டொலர் 728,750 தொகையில் 275,000 குப்பிகளை கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவை பெறுகைக் குழுவால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்த பெறுகைப் பணிகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமித்தல் அல்லது அந்தக் குழுவினால் எடுக்கப்படுகின்ற தீர்மானம் தொடர்பாக எழுத்து மூலச் சான்றிதழ் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) இந்த வழங்குநர் இதற்கு முன்னர் இந்த மருந்தை வழங்கியிருந்ததுடன் மருந்துக் குப்பிகளின் நியமம் தொடர்பாக இதய நோய் தொடர்பாக விஷேட நிபுணத்துவ வைத்தியவர்களினால் ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தமை 2015 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய இலக்கம் MSD/SCU(I)/GMP/38/2015 என்ற கடிதம் மூலம் மருத்துவ வழங்கல் பிரிவின் தலைவரால் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது மேற்கூறப்பட்ட நிறுவனத்திற்கு இந்தக் கட்டளை கையளிக்கப்பட்டிருந்தது.

(iii) இந்த வழங்குநர் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையால் காலம் நீடிக்கப்பட்ட பதிவுச்சான்றிதழ் சமர்ப்பித்த போதிலும் அந்த சான்றிதழும் 2022 பெப்ரவரி 10 ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iv) இந்த மருந்தை இறக்குமதி செய்வதற்காக உள்நாட்டு முகவர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த இறக்குமதி அனுமதிப் பத்திரத்தில் செல்லுபடிக் காலம் 2020 பெப்ரவரி 10 ஆந் திகதி முடிவடைந்திருந்ததுடன் அதன் பதிவினைப புதுப்பித்துக் கொள்ளல் தொடர்பான சான்றிதழ் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை.

(எ) கட்டளை இலக்கம் 2022/SPC/E/R/P/00478 இன் கீழ் 25,000 மருந்துக் குப்பிகள் வழங்குவதற்காக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த அவ்வாறே தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை செல்லுபடியான பதிவுச்சான்றிதழ் உரித்தான நிறுவத்திற்கு கேள்வி கையளிப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் 2022 யூலை 28 ஆம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) இந்தக் கட்டளைக்கான கேள்வி கோரிய நிறுவனத்தால் மாதிரிகள் சமர்ப்பிக்கப்படாமை, கூறுவிலைகளுக்கிடையே கணிசமான வேறுபாடு காணப்பட்டமை, மருந்துகளை வழங்குவதற்காக குறித்துரைத்த காலத்தை விட அதிக காலம் கோரப்பட்டிருந்தமை, இந்திய கடன் உதவியின் கீழ் மருந்து இருப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு நிர்ணயித்தமை போன்ற விடயங்களில் அடிப்படையில் சுகாதாரப் பிரிவு அவசர பெறுகைக் குழுவினால் 2022 ஆகஸ்ட் 02 ஆந் திகதி மேற்கூறப்பட்ட கட்டளை இரத்துச் செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. எனினும் இந்தியக் கடன் உதவியின் அடிப்படையில் 2022 ஏப்ரல் மற்றும் யூலை மாதங்களில் பெற்றுக்கொள்வதற்கு

தீர்மானிக்கப்பட்ட இலக்கம் 2022/SPC/X/R/P/00284 என்ற கட்டளைக்கான மருந்து குப்பிகள் 2023 யூன் 01 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 10 மாதங்கள் அளவிலான நீண்ட காலம் எடுத்து மருந்து வழங்கல் அடிப்படையில் தீர்மானித்தல் பிரயோக ரீதியில் இருந்ததா என கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட கட்டளை சமர்ப்பிக்கப்பட்ட திகதி வரை மருத்துவ வழங்கல் பிரிவிற்குரிய மருந்து குப்பிகள் 3,875 உம், தேசிய மட்டத்தில் மருந்துக் குப்பிகள் 24,203 அளவும் அது 0.7 மாத நுகர்வுக்காக பயன்பாட்டிற்காக மாத்திரம் போதியளவாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. முன்னுரிமைப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட இவ்வாறான மருந்தொன்று குறித்துரைத்த பிரகாரம் பெற்றுக்கொள்வதற்காக முறையான கால அட்டவணையின் தேவை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஏ) கட்டளை இலக்கம் 2023/SPC/N/R/P/00098 இன் கீழ் 150,000 மருந்துக் குப்பிகள் சராசரி கட்டளையின் கீழ் கொள்வனவு செய்வதற்காக அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு 2022 நவம்பர் 17 ஆந் திகதி கட்டளை சமர்ப்பிக்கப்பட்டதுடன் திணைக்கள பெறுகைக் குழுவினால் வழங்குநரைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்பட்டன.

(i) தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அறிக்கை மேற்கூறப்பட்ட கட்டளை சமர்ப்பிக்கப்பட்ட வழங்குநர் இதற்கு முன்னர் இந்த மருந்து வழங்காதிருந்தமையால் இந்த மருந்து தொடர்பாக சுயாதீன இரசாயன ஆய்வுகூட அறிக்கை ஒன்றை பெற்றுக்கொள்ளல் கட்டாயமாக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அறிக்கை பெறுகை நிறுவனத்திற்கு வழங்கப் படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) பெறுகை கால அட்டவணையின் பிரகாரம் கொள்வனவுக் கட்டளை சமர்ப்பித்து இரண்டு வார காலத்திற்குள் செயலாற்றல் பிணைமுறி சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2023 ஒக்டோபர் 15 ஆந் திகதி வரையிலும் இது சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) 2023 செப்டெம்பர் 15 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட இலக்கம் DHS/HD/131/2023 என்ற இன்டென்டு இன் பிரகாரம் மருந்து இருப்பு வழங்க வேண்டிய திகதி 2024 திசெம்பர் 31 ஆம் திகதியாக காண்பிக்கப்பட்ட போதிலும் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் வழங்குநருக்கு விநியோகிக்கப்பட்ட கடிதத்தின்படி 75,000 மருந்து குப்பிகள் உடனயடியாகவும், மிகுதி மருந்துக் குப்பிகள் முதலாவது இருப்பு பெற்றுக்கொள்ளும் போது இரண்டு மாதங்களாக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது மருந்து வழங்க வேண்டிய காலம் மாற்றப்பட்டமை பெறுகை செயற்பாடுகள் தொடர்பில் இடம்பெறுகின்ற பாதகமான தாக்கமாக இருந்தமை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது.

(ஐ) கட்டளை இலக்கம் 2021/SPC/N/R/P/00066 இன் கீழ் 350,000 மருந்து குப்பிகள் சராசரி முறைமையின் கீழ் கொள்வனவு செய்வதற்காக 2020 பெப்ரவரி 26 ஆம் திகதி அரச மருந்தக கூட்டுத் தாபனத்திற்கு கட்டளை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன் போது மருந்து குப்பி மூன்று பொருள் அனுப்பல் கோரிக்கையின் கீழ் இரண்டு நிறுவனங்களிலிருந் இருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை கணக்காய்வு செய்யப்பட்ட கோவையின் பிரகாரம்

வெளிப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பெறுக்கால அட்டவணையின் படி கேள்வி கோருவதற்கு அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் 04 வாரங்களுக்குள் கேள்வி கோர வேண்டியிருந்த போதும் உரிய பெறுகைகளுக்காக பத்திரை அறிவித்தல் 2020 மே 10 ஆந் திகதியே பிரசுரிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வு செய்யப்பட்ட கோவையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் கட்டளை சமர்ப்பிப்பதற்கு எழுத்து மூல உறுதிப்படுத்தல் கிடைத்து 03 மாதங்களுக்கு அண்மித்த காலம் எடுத்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) திணைக்கள பெறுகைக் குழுவினால் 300,000 மருந்து குப்பிகளை கொள்வனவு செய்வதற்கும் மிகுதி 50,000 மருந்துக் குப்பிகளை தேவையின் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 120,000 மருந்து குப்பிகளை கொள்வனவு செய்வதற்கான விநியோகிக்கப்பட்ட இன்டென்டு இன் பிரகாரம் மருந்து குப்பிகள் வழங்க வேண்டிய திகதி 2021 சனவரி 30 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் 40 நாள் ஆன கால தாமதத்தின் பின்னர் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படடது.

(iii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்களை நியமித்தல் தொடர்பான சான்றிதழ் சாட்சிகள் கோவையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தீர்மானத்தின் பரிந்துரை ஒரு இதய நோய் தொடர்பாக விஷேட நிபுணத்துவ வைத்தியரின் பரிந்துரையாக இருந்தமை கணக்காய்வு செய்யப்பட்ட கோவையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது.

(iv) 125,000 மருந்துக் குப்பிகளை கொள்வனவு செய்வதற்காக இலக்கம் DHS/HD/472/2021 என்ற இன்டென்டு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதி மருந்து வழங்க வேண்டியிருந்தது. எனினும் மேற்கூறப்பட்ட கட்டளையில் எஞ்சிய இருப்பான 193,609 மருந்து குப்பிகள் கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் மருந்து இருப்புக்கள் வழங்க வேண்டிய காலம் தொடர்ச்சியாக திருத்தத்தின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் இருப்பு மட்டத்தை பேணிச்செல்வதற்கு முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவானிக்கப்பட்டது.

(ஒ) கட்டளை இலக்கம் 2020/SPC/N/R/P/00055 இன் கீழ் 250,000 மருந்து குப்பிகளை கட்டளையின் கீழ் கொள்வனவு செய்வதற்கான அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு கட்டளை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட கட்டளை மூன்று பொருள் அனுப்பல் கோரிக்கைகளின் மூலம் மூன்று நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு பெறுகைக் குழுவால் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மருந்து வழங்கல் பிரிவினால் 250,000 மருந்து குப்பிகளை வழங்குவதற்காக 2019 மார்ச் 14 ஆந் திகதி அரச மருந்தக கூட்டுத்தாபனத்தில் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. பின்னர் இந்த கட்டளையின் அளவு 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் கூறுவிலை 2023 யூன் 03 ஆந் திகதி கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய பெறுகை பணிகளுக்காக 14 மாதங்கள் ஆன நீண்ட காலம் எடுத்திருந்தது.

(ii) இருதய நோயாளர்களுக்காக இதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட இந்த மருந்து சத்திர சிகிச்சைகளுக்காக பயன்படுத்தப்பட்டதன் பின்னர் இதய நோயாளர்களின் அசாதாரண மற்றும் அதிக இரத்த அழுத்தங்கள் அவதானிக்கப்பட்டிருந்தமை இதய நோய் விஷேட வைத்திய நிபுணர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் கவனம் செலுத்தாமல் 2020/SPC/N/R/P/00055 என்ற கட்டளையின் பிரகாரம் 196,875 குப்பிகளின் அளவு மீண்டும் முன்னர் நிராகரிக்கப்பட்ட வழங்குநரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த மருந்துகளின் பாவனை தொடர்பாக கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) இலக்கம் DMS/M/HD/681/2020 என்ற இன்டென்டு மூலம் இருப்பு உடனடியாக வழங்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் மருந்து வழங்கல் 21 நாட்கள் கால தாமதத்துடன் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காலத்திற்காக தாமதக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) மேற்கூறப்பட்ட கட்டளைக்காக கேள்வி கோரும் போதும் ஒரு கேள்விதாரரால் தமது விருப்பத்தில் விலைகள் சமர்ப்பித்திருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அது தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் NMRA செல்லுபடி பதிவுச்சான்றிதழ் இருந்தமையால் அமைச்சு பெறுகைக்குழு "B"(MPC "B") இனால் இந்த கூறுவிலை மதிப்பீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் செல்லுபடியான பதிவுச்சான்றிதழ் காணப்பட்டதை மாத்திரம் கொண்டு அவ்வாறான தீர்மானத்தை எடுத்தல் தொடர்பாக கணக்காய்வின் போது சர்ச்சசைக்குரிய விடயமாக இருந்ததுடன் அமைச்சின் பெறுகைக் குழுவினால் இந்த நிறுவனத்தில் இருந்து மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(v) இலக்கம் DMS/M/HD/682/2020 என்ற பொருள் அனுப்பல் கோரிக்கை மூலம் Vials 84,375 அலகுகள் வழங்குவதற்காக வழங்குநருக்கு 2021 சனவரி 17 ஆந் திகதி கேள்வி கையளிக்கப்பட்டிருந்ததுடன் Vials 42,188 அலகுகள் 2021 ஏப்ரல் 15 ஆந் திகதிய மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த இருப்பில் எஞ்சிய மருந்துகளில் 42,187 குப்பிகளின் அளவு 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வழங்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த இருப்புக்கள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு 2022 திசம்பர் 14 ஆம் திகதியே வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தாமதமான காலம் மூன்று மாதத்தை விஞ்சி இருந்தது.

(vi) மேற்கூறப்பட்ட நிறுவனத்தால் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் செல்லுபடி பதிவுச்சான்றிதழ் காணப்படுகின்றமை காண்பிக்கப்பட்ட போதிலும் அதன் செல்லுபடிக்காலம் 2022 பெப்ரவரி 12 ஆந் திகதியளவில் முடிவடைந்திருந்தது. அதன் பிரகாரம் 2022 யூன் 29 ஆந் திகதிய இலக்கம் DMS/M/H/717/20 என்ற பொருள் அனுப்பல் கோரிக்கை சமர்ப்பித்திருக்கின்ற சந்தர்ப்பத்தின் போது ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை பதிவுச் சான்றிதழ் தொடர்பாக கவனம் செலுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

46. <u>Zoledronic Acid (SR-00703701)</u>

(அ) இலக்கம் 2022/SPC/N/R/P/00039 என்ற கட்டளையின் பிரகாரம் விலை ரூபா 359.82 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையினால் ஆகக் கூடிய சில்லறை விலை ரூபா 6,900 ஆக பதிவுச் சான்றிதழில்

குறிப்பிடப்பட்டமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலக்கம் 2023/SPC/T/R/P/00148 என்ற கட்டளையின் பிரகாரம் மிகவும் விரைவாக பெற வேண்டிய இந்த மருந்துகள் பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழ் (WOR) பெற்றுக்கொள்வதன் கீழ் தேவையினை விரைவாக மேற்கொள்ள வேண்டியிருந்தமை மற்றும் இருப்புக் காணப்படாமை போன்றவற்றின் காரணமாக மருந்து அலகொன்று ரூபா 1,302 வீதம் 3,400 தடுப்பூசிகளுக்காக பெறுமதி ரூபா 4,426,800 ஆன கட்டளை கையளிக்கப்பட்டிருந்த 2023 ஏப்ரல் 21 இல் இருப்பு காணப்படாமை அதாவது பூச்சியமாக காண்பித்திருந்த போதிலும் ஸ்வஸ்ட முறைமையில் இருப்பு பூச்சியமாக காணப்படவில்லை.

(இ) இலக்கம் 144121 மற்றும் LP/DHS/EP/PUN/3675/23 என்ற பொருள் அனுப்பல் கோரிக்கை மிகவும் அவசர கட்டளை ஆனமையால் வழங்குநருக்கு வழங்கி 14 நாட்களில் மருந்து வழங்க வேண்டியிருந்தமை அறிவிக்கப்பட்ட போதிலும் மருந்து வழங்குவதற்காக 53 நாட்கள் தாமதம் ஏற்பட்டிருந்தது.

47. <u>Yellow Fever Vaccine 0.5ml (SR-00600601)</u>

(அ) 2019 ஆம் ஆண்டு முதல் 2023 வரையான காலப் பகுதியில் மருத்துவ வழங்கல் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட அளவு 43,778 அலகுகள் மற்றும் கிடைத்த உள்ளபடியான அளவு 15,150 அலகுகளின் பிரகாரம் முரண்கள் மிகவும் உயர்பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அது 15 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடையிலான வீச்சில் பரந்திருந்தது. அதன் பிரகாரம் சரியான தரவின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்காமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 10,000 மருந்து அலகுகளைப் பெற்றுக்கொள்வதற்காக 04 கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் ஒரு கட்டளையில் 1500 அலகுகள் மாத்திரம் கிடைத்திருந்ததுடன் மிகுதி மொத்த தேவையும் 2050 அலகுகளின் நன்கொடை மூலம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(இ) மருத்துவ வழங்கல் பிரிவினால் போதியளவான இருப்பு மட்டம் பேணிச்செல்லப்படாமையின் காரணமாக 2022 ஆம் ஆண்டிலும், 2023 ஆம் ஆண்டிலும் தேசிய ஒளடத மருந்து இருப்பு நிலைமை அவ்வப்போது பூச்சிய நிலைக்கு உட்பட்டிருந்தது.

(ஈ) மருத்துவ வழங்கல் பிரிவில் வழங்கல் மற்றும் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் படி ஆகக் குறைந்தது 24 மாத ஆயுட் காலத்துடன் வழங்க வேண்டி இருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும் அதற்கு புறம்பாக 18 மாத ஆயுட்காலத்துடன் ஒரே ஒரு வழங்குநருக்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. இலக்கம் DHS/AMS/460/2022 என்ற இன்டென்டு உரிய உடன்படிக்கைகளின் பிரதிகள் கோவையில் கோவையிடப்பட்டிருக்கவில்லை.

(உ) இலக்கம் 2022/SPC/X/C/P/00283 இன் கீழ் கேள்வி கோரல் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் ஒட்டுமொத்த முறைமையிலும் அது கிடைக்க வேண்டிய கட்டளையாக காண்பிக்கப்பட்டதன் காரணமாக தரவு முறைமை நாளாதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலக்கம் 2023/SPC/N/C/P/00088 என்ற கட்டளைக்குரிய கேள்வி சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மீண்டும் கேள்வி கோருவதற்கு தீர்மானிப்பதற்காக 03 மாதம் 14 நாட்கள் ஆன காலம் எடுத்திருந்தது.

(எ) இலக்கம் 2023/WHO/A/C/P/00006 இன் கீழ் நன்கொடையாக கிடைத்த மருந்துகள் கிடைக்க வேண்டியாக கட்டளையாக ஒட்டுமொத்த முறைமையில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக தரவு முறைமை நாளாதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

48. <u>Omeprazole Sodium InJ. 40mg (SR-00800803)</u>

(அ) 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மருத்துவ வழங்கல் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட அளவு 7,916,993 அலகுகளாக இருந்ததுடன் கிடைத்த உள்ளபடியான அளவு 4,920,994 அலகுகள் ஆகும். அதன் பிரகாரம் முரண்கள் மிகவும் உயர் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அது 11 சதவீதம் முதல் 83 சதவீதத்திற்குஇடையிலான வீச்சில் இருந்தது. அதன் பிரகாரம் சரியான தரவின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்காமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலக்கம் 2022/SPC/N/R/P/00013 என்ற கட்டளை மூலம் 800,000 மருந்து அலகுகளின் தேவையில் 540,000 அலகுகள் கிடைத்திருந்த போதிலும் தாமத காலம் 05 மாதங்களை விஞ்சியிருந்தது.

(இ) இலக்கம் 2022/SPC/Z/R/P/00770 என்ற மேற்கூறப்பட்ட கட்டளையில் மிகுதி இருப்பு ஸ்வஸ்ட தரவு முறைமையின் பிரகாரம் 2023 நவம்பர் 23 கணக்காய்வுத் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) இந்தக் கட்டளைக்காக பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு 02 வருடங்களும் 09 மாதங்களுக்கும் மேற்பட்ட காலம் எடுத்திருந்தது.

(உ) அவசர தேவையாகக் கருதி இலக்கம் 2022/SPC/E/R/P/00732 என்ற ரூபா 8,088,000 பெறுமதியான 300,000 அலகுகளுக்காக கேள்வி கோரும் போது தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுச் சான்றிதழ் இல்லாத கேள்விதாரரால் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு கேள்விதாரருக்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது.

(ஊ) இலக்கம் 2022/SPC/E/R/P/00732 என்ற கட்டளையின் பிரகாரம் கூறுவிலை கோரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் 08 ஆம் பந்தியின் பிரகாரம் மருந்துகளின் ஆயுட்காலம் 24 மாதங்களாக இருக்க வேண்டிய போதிலும் தெரிவு செய்யப்பட்ட வழக்குதாரரின் ஆயுட்காலம் 20 மாதங்களாக இருந்தது.

(எ) இலக்கம் 2022/SPC/E/R/P/00732 என்ற கட்டளையின் பிரகாரம் மருந்துகளை வழங்கும் போது தாமத காலம் 02 வருடங்கள் 09 மாதங்கள் 12 நாட்களுக்கிடையில் இருந்தது. தாமத வழங்கல்களுக்காக 05 சதவீதத் தண்டப்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கட்டளைக்கான பெறுகைக் காலம் 06 மாதங்களை விஞ்சி இருந்தது.

(ஏ) இலக்கம் 2023/SPC/N/R/P/00029 என்ற பெறுமதி ரூபா 36,751,570 ஆன 600,000 மருந்து அலகுகுகள் 2023 நவம்பர் 17 ஆந் திகதி வழங்குவதற்காக கேள்வி கையளிக்கப்பட்ட போதிலும் 2023 திசெம்பர் 14 இல் உள்ளவாறு தரவு முறைமையில் கிடைக்க வேண்டிய கட்டளையாக காணப்பட்டதன் காரணமாக குறித்த காலத்தில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு இருப்பு வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

49. <u>தைரொக்சின் மாத்திரை மைக்ரோகிராம் 25 (SR – 00701103)</u>

(அ) 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மருத்துவ வழங்கல் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட அளவு 45,138,510 அலகுகளாக இருந்ததுடன் கிடைத்த உள்ளபடியான அளவு 12,524,580 அலகுகள்

ஆகும். அதன் பிரகாரம் மதிப்பீட்டு அளவிற்கும் உளளபடியான அளவிற்கும் இடையே முரண்கள் 39 சதவீதம் 100 சதவீதத்திற்கு இடையிலான வீச்சில் இருந்தது. அதனால் சரியான தரவின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்படாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) வைத்தியசாலைகளினால் அனுப்பப்படுகின்ற மிகை மதிப்பீடு எந்தவொரு பரிசோதனையுமின்றி மருத்துவ வழங்கல் பிரிவினால் தமது மதிப்பீடுகளுக்கு எடுக்கப்படுகின்றமையால் மதிப்பீட்டு அலகுகளின் அளவு மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.

(இ) வருடாந்த தேவையினை சரியாக மதிப்பீடு செய்யாமையின் காரணமாக இலக்கம் 2020/SPC/A/R/P/00278 என்ற கட்டளையின் பிரகாரம் 13,000,000 மாத்திரைகளுக்கான கட்டளை கேள்வி தாரருக்கு சமர்ப்பிக்கும் போது போதியளவான இருப்பு காணப்பட்டதன் காரணமாக 5,000,000 மாத்திரைகளின் அளவைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்து.

(ஈ) மருத்துவ வழங்கல் பிரிவில் இருப்பு மட்டம் பூச்சியமாக இருந்தமை தொடர்பாக கவனம் செலுத்தாமையின் காரணமாக பெறுகை நடவடிக்கைகள் குறித்துரைத்த கால அட்டவணையில் மேற்கொள்ளாமையும், கட்டளைகள் இரத்துச் செய்யப்பட்டமையும், கட்டளைகள் கைவிடப்பட்டதன் காரணமாக போதியளவான இருப்பு மட்டத்தை பேணிச் செல்வதற்கு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு முடியாதிருந்தது.

(உ) கட்டளை இலக்கம் 2020/SPC/A/R/P/00278 இற்குரிய இருப்புக்கள் 2021.01.31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய போதிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு இருப்புக்கள் 2021.06.16 ஆந் திகதி மற்றும் 2021.06.29 என்ற திகதிகளில் கிடைத்ததன் காரணமாக தாமதக் காலம் 05 மாதங்களை விஞ்சியிருந்தது.

(ஊ) இந்த கட்டளையின் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு L-68005 தொகுதி இலக்கத்தின் கீழ் கிடைத்த 4,941,500 மருந்து அலகுகளின் தரம் கெட்டமையை அறிவிப்பதற்கு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்ததுடன் அந்த மொத்த அலகும் 55 வைத்தியசாலைகளுக்கு விநியோகிக் கப்பட்டிருந்தது. 19 வைத்தியசாலைகளில் மிகுதியாக இருந்த அலகுகளின் அளவு 45,300 ஆக இருந்ததுடன் 4,896,000 அலகுகள் நோயாளர்களுக்காக விநியோகிக்கப்பட்டிருந்தது.

(எ) மருத்துவ வழங்கல் பிரிவில், வைத்தியசாலைகளின் மருந்து இருப்புக்கள் காணப்படாமையின் காரணமாக 2020/MSD/C/R/P/00046 கட்டளையில் தைரொக்சின் மருந்துகளில் 3,282,600 அலகுகளின் மொத்தப் பெறுமதி ரூபா 13,130,400 தொகையில் ஒரு மில்லியன் உள்ள இருப்புகளில் வழங்குவதற்கு மிகுதி மாதத்தில் வழங்குவதற்கும் கேள்வி கையளிக்கப்பட்ட போதிலும் மருந்து வழங்குதலின் தாமத காலம் 02 மாதங்கள் முதல் 05 மாதங்களுக்கு இடையிலான காலம் எடுத்திருந்தது.

(ஏ) மருந்து வழங்கல் பிரிவிற்கு மற்றும் தேசிய ஒளடதங்கள் தேசிய மருந்து இருப்பு தேவை பூச்சியமாக இருந்தமை திணைக்கள பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட பின்னர் 2023/SPC/C/N/R/P/000084 கட்டளை மூலம் 1,200,000 அலகுகள் மருந்தினை விரைவாக வழங்குவதற்காக கேள்வி கையளிக்கப்பட்ட போதிலும் 2023 திசெம்பர் வரையிலும் இருப்பு கிடைக்காதிருந்தமை தரவு முறைமையில் காண்பிக்கப் பட்டிருந்தது.

50. <u>Hydrocortisone Tab. 10 mg (SR-00701502)</u>

(அ) 2019 ஆம் ஆண்டு முதல் 2023 வரையான காலப்பகுதியில் மருந்து வழங்கல் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட அளவு 8,734,735 அலகுகளாக இருந்ததுடன் கிடைக்கப்பெற்ற உள்ளபடியான அளவு 5,940,320 அலகுகள் ஆகும். அதன் பிரகாரம் முரண்கள் மிகவும் உயர் பெறுமதியை கொண்டிருந்ததுடன் அது

மறை (12) சதவீதம் முதல் 47 சதவீதத்திற்கு இடையிலான வீச்சில் இருந்தது. அதன் பிரகாரம் சரியான தரவின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்படாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலக்கம் 2022/SPC/N/R/P/00039 கட்டளை மூலம் 850,000 அலகுகளைப் பெற்றுக்கொள்வதற்கு பெறுமதி ரூபா 6,791,500 விலையில் கேள்வி திறக்கப்பட்டிருந்தது. கேள்வி திறக்கப்பட்ட திகதியில் இருந்து பெறுகை நடவடிக்கைகளுக்காக 295 நாள் காலம் எடுத்திருந்தது. கேள்வி சமர்ப்பிப்பதற்குரிய கேள்வி கையளித்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு மீண்டும் கேள்வியாளருக்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்ததுடன் மருந்துகளைப் பெற்றுக்கொள்ளும் போது கேள்விதாரரால் 06 மாத தாமத காலம் எடுக்கப்பட்டிருந்தது.

(இ) இலக்கம் DHS/ICL/SA/381/22 என்ற பொருள் அனுப்பல் கோரிக்கை NMRA இல் பதிவுச் சான்றிதழில் வழங்குநருக்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் மருந்து வழங்குதல் குறித்துரைத்த திகதியினை விட 08 மாதங்கள் தாமதமாகியிருந்தது.

(ஈ) இலக்கம் 2022/SPC/V/R/P/00640 என்ற கட்டளை அரச மருந்தக கூட்டுத்தாபனம் இரத்துச் செய்யாமல் மருத்துவ வழங்கல் பிரிவின் கட்டளை இலக்கம் 2022/MSD/V/R/P/00076 இன் கீழ் மீண்டும் அமுல்படுத்தப்படடிருந்தது. எனினும் இந்த இரண்டு கட்டளைகளும் ஸ்வஸ்ட முறைமையில் கிடைக்கவேண்டிய கட்டளையாக காண்பிக்கப்பட்டதன் காரணமாக முறைமை நாளது வரையாக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) 2022 ஆம் ஆண்டின் போது கட்டளையிடப்பட்ட முறையே இலக்கம் 2022/MSD/V/R/P/00076, 2022/SPC/E/R/P/00569 மற்றும் 2023/SPC/N/R/P/00084 இற்குரிய கட்டளைகளில் 1,455,000 அலகுகள் 2023 திசெம்பர் வரை மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருக்கவில்லை.

51. <u>Anti-Rabies Human lg 300 I.U (SR-00602501)</u>

(அ) 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மருத்துவ வழங்கல் (ஆ)பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட அளவு 27,112 அலகுகளாக இருந்ததுடன் கிடைக்கப்பெற்ற உள்ளபடியான அளவு 10,550 அலகுகள் ஆகும். அதன் பிரகாரம் முரண்கள் மிகவும் உயர் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அது மறை (07) சதவீதம் முதல் 77 சதவீதத்திற்கு இடையிலான வீச்சில் பரவி இருந்தது. அதன் பிரகாரம் சரியான தரவின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்படாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) DHS/TN/482/2022 என்ற பொருள் அனுப்பல் கோரிக்கை 2023.08.09 ஆந் திகதி இரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் கட்டளையை இரத்துச் செய்வதற்கு வழங்குநருக்கு அறிவிப்பதற்கு எந்தவொரு தெரிவு செய்யப்பட்ட உரிய கோவையிலும் காணப்படவில்லை. ஒட்டுமொத்த முறைமையில் இந்தக் கட்டளை பெறவேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இலக்கம் LP/DHS/EP/TN/3532/2022 என்ற பொருள் அனுப்பல் கோரிக்கையின் கீழ் 400 தடுப்பூசி குப்பி மருந்துகள் அவசர அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த மருந்து இருப்புக்கள் 2022.09.30 ஆந் திகதி வழங்க வேண்டியிருந்த போதிலும் 2022.12.22 ஆந் திகதி வழங்கப்பட்டமையால் ஏற்பட்ட 84 நாட்கள் தாமத காலத்திற்காக தண்டப்பணம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

52. <u>Salbutamol Respiratory 501 0.5% 15ml vial (SR-00500109)</u>

(அ) 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மருத்துவ வழங்கல் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அளவு 2,177,591 மற்றும் கிடைக்கப்பெற்ற உள்ளபடியான அளவு 713,000 அலகுகளின் பிரகாரம் முரண்கள் மிகவும் உயர் பெறுமதியைக் கொண்டிருந்த துடன் அது 52 சதவீதம் முதல் 102 சதவீதத்திற்கு இடையிலான வீச்சில் காணப்பட்டது. அதன் பிரகாரம் சரியான தரவின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்படாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலக்கம் 2022/MSD/V/R/P/000103 என்ற கட்டளையின் படி 60,000 மருந்து அலகுகளை கொள்வனவு செய்வதற்கு ICL/EOI/PI/124/2022 என்ற கொள்வனவு கட்டளையின் பிரகாரம் 2023 பெப்ரவரி வரையில் மருந்து கிடைக்க வேண்டியிருந்த போதிலும் 2023 திசெம்பர் வரையிலும் இந்த மருந்து இருப்புக்கள் வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) 2023 ஆம் ஆண்டில் வருடாந்த தேவையாக 120,000 மருந்து அலகுகள் 2023/SPC/N/R/P/00098 என்ற கட்டளையின் பிரகாரம் முறையே 2023 சனவரி மற்றும் ஏப்ரலில் 60,000 அலகுகள் வீதம் வழங்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த மருந்து கிடைத்தமைக்கான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

53. <u>Mesna Injection 200 mg in 2 ml (SR - 01210101)</u>

(அ) இந்த மருத்தில் 23,000 அலகுகள் கொள்வனவு செய்வதற்குரிய 2022 இன் சராசரிக் கட்டளை தரவு முறைமை ஊடாக 2021 பெப்ரவரி 27 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்த துடன் அது 2021 மார்ச் 18 ஆந் திகதி கிடைத்திருந்தது. சர்வதேச போட்டியாளர் முறைமையில் கேள்வி கோருவதன் பிரகாரம் ஒரு நிறுவனம் மாத்திரம் கேள்வி சமர்ப்பித்திருந்தது. அந்த கேள்வி ஆவணங்களின் படி தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு 2025 யூன் 21 வரை செல்லுபடியாக இருந்ததாக குறிப்பிடப்பட்ட போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் 2021 யூன் 30 ஆம் திகதி வரை மாத்திரம் செல்லுபடியாகக் காணப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில் அங்கத்தவர்களின் பெயர் பதவி குறிப்பிடப்படாமல் கையொப்பம் இடப்பட்டிருந்தது. முறையான மற்றும் சரியான தரவின் அடிப்படையாகக் கொண்டு மருந்து கட்டளை யிடாமையினால் 2021 பெப்ரவரி 27 ஆந் திகதி கிடைத்த கட்டளையை தற்காலிகமாக கைவிடுவதற்கு மருத்துவ வழங்கல் பிரிவு 07 மாதங்கள் எடுத்திருந்தமையும் அதனை மீண்டும் செயற்படு நிலைக்கு கொண்டுவருவதற்கு மேலும் 07 மாதங்களை விட அதிக எடுத்திருந்தமை அத்திகதியிலிருந்து கட்டளை வழங்குநருக்கு கையளிப்பதற்கு மேலும் 03 மாதங்கள் எடுத்திருந்தமையும் மருந்தினைப் பெற்றுக்கொள்வதற்காக மேலும் 03 மாதங்கள் மற்றும் 06 மாதங்கள் எடுத்திருந்தமையும் அதன் பிரகாரம் இந்த செயற்பாடுகளுக்காக 23 மாதங்கள் எடுத்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறு இந்த மருந்து இருப்பு கிடைத்த பின்னர் அதாவது 2023 ஒக்டோபர் 18 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ஆ) 15,000 அலகுகளை கொள்வனவு செய்வதற்குரிய 2023 ஆம் ஆண்டின் சராசரி கட்டளை 10 மாத தாமதத்தின் பின்னர் 2022 நவம்பர் 16 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கட்டளையின் படி 2023 சனவரி 12 ஆந் திகதி மற்றும் 2023 ஏப்ரல் 12 ஆந் திகதி 7,500 தடுப்பூசி அலகுகள் வீதம் வழங்க வேண்டி இருந்தது. கட்டளை விநியோகித்ததன் பின்னர் கேள்வி கோருவதற்காக 03 மாதங்கள் எடுத்திருந்தது. கேள்வி திறக்கப்பட்டு மதிப்பீடுவதற்காக ஒரு மாதத்திற்கு அண்ணளவான காலம் கடந்திருந்ததுடன் 2023 ஏப்ரல் 18 ஆந் திகதிய கேள்வி மதிப்பீட்டு அறிக்கை உரிய அங்கத்தவரின் பெயர், பதவி குறிப்பிடப்படாமல் கையொப்பமிடப்பட்டிருந்தது. இந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை வழங்கப்பட்டு 03 மாதங்களின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளுக்கிடையே

ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்த நிறுவனம் ஒன்றாக இல்லாதிருந்தமையால் அந்த பதிவுடன் இரண்டாவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு அலகொன்று ரூபா 600 வீதம் இந்தக் கட்டளையை கையளிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

(இ) 2023 ஆகஸ்ட் 14 ஆந் திகதி இந்தக் கட்டளை மேற்கூறப்பட்ட நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 7,500 அலகுகளின் கட்டளையிடல் முதல் 90 நாட்களும் மிகுதி 7,500 இருப்புக்கள் முதலாவது இருப்பில் இருந்து 03 மாதங்கள் கடந்த பின்னரும் வழங்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. வழங்குநரால் காண்பிக்கப்பட்டுள்ள வெப்ப நிலையின் பெறுமதி செல்சியஸ் 25 இற்கும் குறைவாகவும், மருத்துவ வழங்கல் பிரிவின் பிரகாரம் தேவையான வெப்பநிலை 30 செல்சியஸ் ஆனமையால் அதற்கான உறுதிப் படுத்தலொன்றை வழங்குமாறு கோரப்பட்டிருந்தது. 2023 ஆகஸ்ட் 20 ஆந் திகதி இலத்திரனில் தபாலின் பிரகாரம் இந்த விடயங்கள் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் மேற்கூறப்பட்ட களஞ்சிய நிலைமையின் கீழ் பதிவு செய்து இருக்குமாயின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினாலும் பெறுகைக்குழுவினாலும் கையளிக்கப்பட்டிருக்குமாயின் அது மருத்துவ வழங்கல் பிரிவின் பிரகாரம் நியாயமாக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. களஞ்சிய நிலைமை 25 செல்சியஸை விட குறைவாகக் காணப்பட வேண்டியிருந்தமையும் ஆயட்காலம் 24 மாதங்களாக காணப்பட வேண்டியிருந்தமையும் காண்பிக்கப்பட்டிருந்தது. மீண்டும் 2023 ஒக்டோபர் 12 ஆந் திகதி இன்டென்டு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் களஞ்சிய நிலைமை 30 செல்சியஸை விட குறைவாகக் காணப்படவேண்டியிருந்தமையும் ஆயுட்காலம் 21 மாதங்களாக காணப்பட வேண்டியிருந்தமையும் காண்பிக்கப்பட்டிருந்தது. 2023 ஒக்டோபர் 10 ஆந் திகதி 7,500 அலகுகள் கிடைத்திருந்ததுடன் அந்த இருப்புக்கள் குறித்த மாதிரிக்கு புறம்பாக கையேற்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலக்கம் 2023/SPC/X/C/P/00192 என்ற 25,000 அலகுகளைக் கொள்வனவு செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 13,020,750 ஆன கட்டளை 2023 மே 25 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த கட்டளையின் பிரகாரம் முறையே 13,000 தடுப்பூசி அலகுகளும், 12,000 அலகுகளும் வீதம் வழங்க வேண்டியிருந்தது. 03 நிறுவனங்களால் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்தக் கேள்வி ஆவணங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆகக்கூடிய விலை சமர்ப்பித்த ஒரே ஒரு பதிவு செய்த வழங்குநருக்கு விலையினை குறைத்து கட்டளை கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் பெறுகைகள் குழுவினால் இந்த பெறுகளில் அலகொன்றின் விலை ரூபா 550 ஆக மேற்கூறப்பட்ட வழங்குநருக்கு கையளிப்பதற்கு பரிந்துரை செய்யப் பட்டிருந்தது. இந்தப் பெறுகை தீர்மானத்திற்காக அமைச்சரவையின் மேவுகை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது இந்த பெறுகைகள் குறைவாக மேற்கொள்ளப்பட்டமைக்கு பிரதான உள்ளக கணக்காய்வாளரினால் சான்றுப்படுத்தப் பட்டமைக்கு உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. பெறுகை மதிப்பீட்டு நடவடிக்கைகளின் பின்னர் கட்டளை கையளிப்பதற்காக 68 நாட்களுக்கு அண்மித்த காலம் எடுத்திருந்தது. இந்த மருந்துகளுக்குரிய வழங்கல் நிபந்தனைகளின் படி மருந்தின் ஆயுட் காலம் 24 மாதங்களாக இருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும் இன்டென்டுவில் ஆகக் குறைந்த காலமாக 12 மாதங்கள் (சான்றுப்படுத்தலுடன்- with assurance) ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(உ) மஹகரம அபேக்ஷா வைத்தியசாலையினால் 2022 ஆம் ஆண்டிலும் 2023 ஆம் ஆண்டின் ஒக்டோபர் வரையில் 15 சந்தர்ப்பங்களின் போது இந்த மருந்துகளின் 27,600 அலகுகள் மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து கோரப்பட்ட போதிலும் 23,106 அலகுகள் மாத்திரம் கிடைத்திருந்தது.

(ஊ) 2024 ஆம் ஆண்டிற்குரிய மருத்துவ வழங்கல் பிரிவினால் தயாரிக்கப்பட்ட கட்டளை கட்டுப்பாட்டு பத்திரத்தின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்காக 13,129 அலகுகள் மிகை இருப்பொன்று காணப்பட்டதன் காரணமாக 2024 ஆம் ஆண்டிற்காக கட்டளை தயாரிக்கப்பட வில்லை. எனினும் இந்தக் கட்டளை கட்டுப்பாட்டு பத்திரம் தயாரிப்பதற்காக பயன்படுத் தப்பட்ட தரவுகளின் சரியான தன்மை தொடர்பாக பிரச்சினையான நிலையொன்று காணப் படுகின்றமையால் 2024 ஆம் ஆண்டின் போதும் அவசர கொள்வனவுகளுக்காக அனுப்புவதற்காக ஆபத்து காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

54. **<u>Epoetin injection 10,000 IU (SR N0. 00404004)</u>**

(அ) 2021 ஆம் ஆண்டிற்காக வருடாந்த தேவை அலகுகள் 45,987 ஆக இருந்த போதிலும் 50,000 அலகுகள் கிடைக்க வேண்டியிருந்த கட்டளை மற்றும் 39,558 அலகுகள் உள்ள இருப்பு போதியளவிலாக இருந்ததன் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டிற்காக இந்த மருந்து கட்டளையிடப்படவில்லை. எனினும் கிடைக்க வேண்டிய கட்டளை அலகுகளுக்கிடையே 12,500 அலகுகள் மாத்திரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் கிடைக்க வேண்டிய கட்டளைக்காக இருப்பு பெறும் இயலுமை அல்லது அந்த கட்டளைகளின் செயல் முன்னேற்றத்தை கவனத்திற் கொள்ளாமல் நிச்சயமற்ற தரவின் தடிப்படையில் வருடாந்த கட்டளை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இந்த மருந்தில் 2022 இன் வருடாந்த மதிப்பீட்டு அலகுகள் 60,311 ஆக இருந்த போதும் ஆண்டில் 85,000 அலகுகளுக்கான கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. அதில் 36,000 அலகுகள் சராசரி கட்டளையின் கீழும், 24,000 அலகுகள் "அவசரத் தேவை" இன் கீழும் மேலும் 25,000 அலகுகள் இந்திய கடன் வசதியின் கீழும் கட்டளையிடப்பட்டிருந்தது. 2022 இன் சராசரி கட்டளையின் 3,600 அலகுகள் மாத்திரம் கிடைத்திருந்தமையால் அவசர கொள்வனவு மற்றும் ஏனைய கடன் வசதியின் கீழ் கொள்வனவு செய்வதற்கு மருத்துவ பிரிவு நடவடிக்கை எடுத்திருந்தது.

(இ) 2023 ஆம் ஆண்டிற்காக மருத்துவ வழங்கல் பிரிவினால் கட்டளை கட்டுப்பாட்டு பத்திரம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் வைத்தியசாலைகளில் வருடாந்த தேவை மாத்திரம் பெறப் பட்டிருந்தது. எனினும் 2022 நவம்பர் 24 ஆந் திகதி 24,000 அலகுகள் சராசரி கட்டளை யொன்று விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) 12,000 அலகுகளை கொள்வனவு செய்வதற்காக 2022 செப்டெம்பர் 24 ஆந் திகதி இலக்கம் 2022/SPC/V/C/P /00633 என்ற கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2022 நவம்பர் 01 ஆந் திகதி அதற்குப் பதிலாக இலக்கம் 2022/MSD/V/C/P/00091 என்ற கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்தக் கட்டளை இரண்டும் ஸ்வஸ்த்த முறைமையில் விநியோகிக்கப்பட்ட கட்டளையாக கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் காணப்பட்டது.

(உ) 2022 ஆம் ஆண்டிற்காக 2021 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட 36,000 அலகுகள் சராசரி கட்டளைக்குப் பதிலாக 19,200 அலகுகள் மாத்திரம் கிடைத்திருந்ததுடன் மிகுதி 16,800 அலகுகளின் அளவு 2023 கணக்காய்வுத் திகதி வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஊ) கட்டளை வழங்கப்படாமையின் காரணமாகவும், போதியளவாக கையிலுள்ள இருப்புக்கள் காணப்படாமையின் காரணமாகவும் முறையே 2022 செப்டெம்பர் 07, நவம்பர் 01 மற்றும் நவம்பர் 02 ஆந் திகதிகளில் கூட்டுமொத்தமாக 49,000 அலகுகள் அவசர கொள்வனவுகளுக்காக கட்டளை விநியோகிக்கப்படிருந்தது. அதில் 22,000 அலகுகள் மாத்திரம் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந் ததுடன் இந்திய கடன் உதவி திட்டத்தின் கீழ்

கட்டளையிடப்பட்ட 25,000 அலகுகளை உள்ளடக்கி 27,000 அலகுகள் அவசர கோரலின் பிரகாரம் கட்டளையிடப்பட்ட மருந்து இருப்புக்கள் கணக்காய்வுத் திகதியான 2023 ஒக்டோபர் வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருக்கவில்லை.

(எ) அதன் பிரகாரம் சராசரி கட்டளையில் இருப்பு வழங்க வேண்டி இருந்து திகதியில் முறையற்ற மற்றும் குறித்துரைத்த ரீதியில் அல்லாத தரவுகளின் அடிப்படையில் அவ்வப்போது மாற்றப்பட்டமை, தேசிய ஔடதங்கள் அதிகார சபையினால் WOR விநியோகிப்பதில் தாமதம் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவினால் கணப்படுகின்ற இருப்பு மட்டம் தொடர்பான சரியான தகவல்கள் அரச மருந்த கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படாமை போன்ற விடயங்களின் அடிப்படையில் இந்த அவசர கொள்வனவுகளுக்காக கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தமையும் இது தொடர்பாக உரிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் பொறுப்புக்களுக்கு கடப்பாடுடையவர்களாக இருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஏ) ஆகக்குறைந்தது 11 மாதங்களுக்கு ஒரு தடவை வருடாந்த சராசரி கட்டளை வழங்க வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்காக 24,000 அலகுகளுக்கான கட்டளை 2022 நவம்பர் 24 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இந்த மருந்துகள் ஆகக் குறைந்தது 2023 ஏப்ரல் வரையில் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. பெறுகைக் கால அட்டவணையின்படி கட்டளை கிடைத்து 03 வாரங்களுக்குள் கேள்வி கோர வேண்டியிருந்த போதிலும் கட்டளை கிடைத்து 04 மாதங்களின் பின்னர் அதாவது 2023 மார்ச் 13 ஆந் திகதி பதிவு மற்றும் கடந்த முன்னை வழங்குநரின் கூறுவிலை கோருவதற்கு பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் உரிய கேள்வி கோரப்படாதிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையும் இந்த கட்டளை இரத்துச் செய்வத்றகு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 36,000 அலகுகள் 2022 இல் சராசரி கட்டளை 2021 பெப்ரவரி 27 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கட்டளை கிடைத்து 53 நாட்களுக்குப் பின்னர் சர்வதேசப் போட்டியாளர் கேள்வி கோரும் முறைமையின் கீழ் கேள்வி கோருவதற்கு பெறுகைக் குழு பரிந்துரை செய்திருந்தது. இந்த அங்கீகாரத்தல் 24 நாட்களின் பின்னர் கேள்வி கோருவதற்கு உரிய பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் முறையே 2021 செப்டெம்பர் 21 மற்றும் செப்டெம்பர் 23 ஆந் திகதிகளில் இரண்டு பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. கட்டளையில் 70 சதவீதம் அதாவது 25,200 அலகுகள் வழங்குகின்ற வழங்குநருக்கு முன்னர் விநியோகித்த கட்டளையின் பிழையான கடிதமொன்றில் குறிப்பிடப்பட்டதன் அடிப்படையில் 2021 ஒக்டோபர் 11 ஆந் திகதி மீண்டும் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. கேள்வி ஆவணங்களில் சரியான முகவரி குறிப்பிடப்பட்ட போதிலும் இவ்வாறு பிழையான முகவரியில் கொள்வனவுக் கட்டளை விநியோகித்தல் தொடர்பான விடயங்களை விசாரணை செய்தல் அதற்குரிய உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மேற்கூறப்பட்ட கட்டளையில் 70 சதவீதம் வழங்குகின்ற வழங்குநர் ஒருவர் மாத்திரம் 16,800 அலகுகள் மேலும் வழங்க வேண்டியிருந்த போதும் வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் பிணை முறையின் காலம் 2023 பெப்ரவரி 28 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரால் ரூபா 2,948,400 ஆன இந்த செயலாற்றல் பிணைமுறியின் காலம் முடிவடைவதற்கு முன்னர் நீடித்துக்கொள்வதற்கோ அல்லது அதனைக் கையேற்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) இலக்கம் 2022/SPC/N/C/P/00021 என்ற சராசரி கேள்விக்குரிய 25,200 அலகுகள் வழங்குவதற்காக தெரிவு செய்ய்பபட்ட கேள்விதாரர் இன்டென்டுவில் குறிப்பிட்ட திகதியில் மருந்து இருப்பு வழங்கப் படாதிருந்த போதிலும் ரூபா மெறுமதி குறைவடைந்ததன் அடிப்படையில் விலைத் திருத்தமொன்று கோரப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் அலகொன்று ரூபா 1,170 இற்குப் பதிலாக இரண்டு சந்தர்ப்பங்களின் போது முறையே அலகொன்று ரூபா 2,142 மற்றும் ரூபா 2,154 விலை அதிகரிப்பொன்று கோரப்பட்டிருந்தது. பெறுகைக் குழு இந்த 81 சதவீத விலை முரண்களுக்காக கேள்வி சமர்ப்பித்த திகதியில் காணப்பட்ட ஐ.அ டொலர் பெறுமதி மற்றம் விலை திருத்த கோரிக்கை இடப்பட்ட திகதியில் காணப்பட்ட ஐ.அ டொலர் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதுவரையில் வழங்குநர் மருந்து இருப்பு வழங்காதிருந்தமையால் வழங்குநருக்கு செலவிட வேண்டி ஏற்பட்ட உள்ளபடியான செலவினம் அதில் உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் வழங்குநருக்கு செய்வதற்கு ஏற்பட்ட உள்ளபடியான செலவினத்தை உறுதிப்படுத்துமாறு எழுத்து மூல சான்றுகள் பெற்று விலை அதிகரிப்பு வழங்க வேண்டியிருந்த போதிலும் இதன் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விலைத் திருத்தம் அங்கீகாரத்தில் 93 நாட்களுக்குப் பின்னர் அலகொன்று ரூபா 8,400 அலகுகள் அலகொன்று ரூபா 2,000 வீதம் வழங்கப்பட்டிருந்தது.

(ஒள) இலக்கம் 2022/SPC/X/C/P/00575 என்ற 25,000 அலகுகளின் கட்டளை அவசர அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு அனுப்பப்பட்டிருந்தது. ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த ஒரு கேள்விதாரருக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு பரிந்துரை மற்றும் விலை மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு அலகொன்று ஐ.அ.டொலர் 5.75 இன் கீழ் 25,000 அலகுகளை உடனடியாக வழங்குமாறு பெறுகைக் குழு பரிந்துரை செய்திருந்தது. அவசர அடிப்படையில் கேள்வி கோருவதற்கு தீர்மானித்து உடனடியாக வழங்க வேண்டுமென குறிப்பிட்டு கேள்வி கோரப்பட்ட போதிலும் 2023 ஒக்டோபர் 26 ஆந் திகதி வரையிலும் மருந்து இருப்பு வழங்கப்படாமையினால் "அவசரம்" என்ற அடிப்படை என்ன கேள்விதாரரிடமிருந்து கேள்வி கோருவதற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது பிரச்சினையாக இருந்தது. முன்னுரிமை தொகுதிக்குறியில் இல்லாதிருந்தமையால் இந்த கட்டளையை இரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் இந்தி கடன் வசதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தற்போது அமுல்படுத்தப்படுகின்ற கட்டளையொன்றாக இருந்தமையால் இரத்துச் செய்ய முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. கட்டளை விநியோகித்து ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் நாளாது வரையாக கட்டளை அமுல்படுத்தாமையின் அடிப்படையில் இந்த கட்டளைக்குரிய இருப்பு பெறப்படாதிருந்தமையும் கட்டளை இரத்துச் செய்வதற்கு போதியளவானதாகக் காணப்படுகின்றமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(க) இலக்கம் 2022/MSD/V/C/P/0633 என்ற 12,000 அலகுகளின் கொள்வனவுக் கட்டளை 2022 நவம்பர் 04 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. கொள்வனவு கட்டளையின்படி 2022 திசெம்பர் 26 ஆம் திகதி மற்றும் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரின் கேள்வில் வெளியிடப்பட்டிருந்த பிரகாரம் 50 நாட்களுக்குள் இருப்பு வழங்க வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும் இருப்பு வழங்கல் 94 நாட்களுக்குப் பின்னர் 2023 மார்ச் 30 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்து. 2,000 அலகுகள் 2023 ஒக்டோபர் 09 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. கேள்வி ஆவணங்களில் செயலாற்றல் பினைமுறி பெற்றுக்கொள்ளல் தொடர்பான பிரிவொன்று குறிப்பிடப்படாதிருந்ததுடன் 2022 ஒக்டோர் 28 ஆந் திகதி சுகாதார அமைச்சு செயலாளரால் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மருத்துவ வழங்கல் பிரிவு) இற்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் படி செயலாற்றல் பிணைமுறியின் கால எல்லை மற்றும் அளவு, பகிர்ந்தளித்தல் கால அட்டவணையின் பிரகாரம் மற்றும் அவசர தேவைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் பிணையினைப் பெற்றுக் கொள்ளாதிருந்தமை அதில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனினும் பின்னர் அமைச்சு செயலாளரால் அந்த அதிகார எல்லையை மீறி செயலாற்றல் பிணைமுறியைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்து விடுவிக்கப்பட்டிருந்தார்.

55. <u>Imatinib Mesilate Tab/Cap 100 mg (SR - 01204401)</u>

(அ) 2021 ஆம் ஆண்டிற்காக வைத்தியசாலைகளின் வருடாந்த மதிப்பீடு செய்யப்பட்ட அலகுகள் 835,000 ஆக இருந்ததுடன், ஆண்டில் விநியோகிக்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை 1,613,875 ஆகும். அந்த அளவு மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது 93 சதவீத அதிகரிப்பாகும். விநியோகிக்கப்பட்ட கட்டளைகளுக்கு இடையே 1,562,500 அலகுகள் சராசரி கட்டளைக்குரிய மருந்து இருப்புக்கள் 2023 நவம்பர் 15 ஆம் திகதி வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) 2022 ஆம் ஆண்டிற்காக வைத்தியசாலைகளில் வருடாந்த மதிப்பீடு 582,080 அலகுகளாக இருந்தடன், ஆண்டின் விநியோகிக்கப்பட்ட கட்டளைகளின் அளவு 1,325,000 அலகுகள் ஆகும். அந்த அளவு மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது 128 சதவீத அதிகரிப்பாகும். விநியோகிக்கப்பட்ட கட்டளைகளுக்கு இடையே மானியமாக கிடைத்த 30,000 அலகுகள் மாத்திரம் ஆண்டின் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்தது.

(இ) ஸ்வஸ்ட முறைமையில் இலக்கம் 2022/SPC/E/R/P/00610, இலக்கம் 2022/SPC/V/R/P/00690 மற்றும் இலக்கம் 2023/SPC/E/R/P/00143 என்ற கட்டளை மூலம் முறையே 140,000 அலகுகள், 137,500 அலகுகள் மற்றும் 137,500 அலகுகள் வீதம் காட்டப்பட்ட போதிலும், இந்த மருந்து இருப்புக்கள் கிடைக்க வேண்டிய இருப்பாக ஸ்வஸ்ட முறைமையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தயாரிக்கப்பட்ட கட்டளை கட்டுப்பாட்டு பத்திரத்தின் அடிப்படையில் 2022 இன் சராசரி கட்டளை விநியோகிக்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும், ஆண்டில் நன்கொடையாக கிடைத்த 30,000 அலகுகளை உள்ளடக்கிய 1,325,000 அலகுகள் இந்திய கடன் உதவி மற்றும் அவசர கொள்வனவாக கட்டளைகள் விநியோகிக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டிற்காக 2020 சனவரி 08 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட 1,562,500 அலகுகளின் கட்டளை உரிய மருந்து இருப்புக்கள் கிடைக்க வேண்டியதன் அடிப்படையாக கருதி 2022 இற்காக சராசரி கட்டளை விநியோகிக்கப்படாதிருந்த போது பெற்றுக் கொள்ள வேண்டி காணப்பட்ட தொகுதியில் குறிப்பிடப்பட்ட மருந்து இருப்புக்கள் கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் 15 வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருக்கவில்லை.

(உ) இலக்கம் 2022/SPC/X/R/P/00306 என்ற 600,000 அலகுகள் 2022 ஆம் ஆண்டிற்காக அவசர அடிப்படையில் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. 07 கேள்விதாரர்கள் கேள்வி சமர்ப்பித்திருந்ததுடன், அதில் தகைமை உடைய கேள்விதாரர்கள் இருவரிடம் இருந்து ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு பெறுகையினை கையளிப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரை மற்றும் அந்த பரிந்துரையில் இருந்து 167 நாட்களின் பின்னர் 2022 ஒக்டோபர் 06 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த பெறுகை குழு பரிந்துரையின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டிருந்தது, கொள்வனவு கட்டளை விநியோகித்த 14 நாட்களுக்குள் செயலாற்றல் பிணை முறி சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும், 96 நாட்களின் பின்னர் அது சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கொள்வனவு கட்டளையில் குறிப்பிடப்பட்ட மருந்து இருப்புக்கள் வழங்க வேண்டிய திகதியின் பின்னர் 97 நாட்களுக்கு பின்னர் 2023 ஏப்ரல் 07 ஆம் திகதி கட்டளை வழங்கப்பட்டிருந்ததுடன், அது வரையில் மருந்து இருப்பின் எஞ்சியிருந்த சுழற்சி ஆயட்காலம் 18 மாதங்களுக்கும் 19 மாதங்களுக்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. 2022 மார்ச் 26 ஆம் திகதி கட்டளை அவசர அடிப்படையில் விநியோகித்து ஆண்டிற்கு மேற்பட்ட காலத்தினால் மருந்து இருப்புக்கள் வழங்குதல் தாமதிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் அவசர என்ற அடிப்படையில் ''கேள்வி சமர்ப்பிப்பதற்கு 05 நாட்கள் அளவிலான காலம் வழங்குதல்'' என்பதற்கு மாத்திரம் செல்லுபடியாக இருந்ததா என கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ஊ) இலக்கம் 2022/MSD/V/R/P/00074 என்ற 137,500 அலகுகளின் கட்டளை அலகொன்று ஐ.அ.டொலர் 0.0044 இற்கு 137,500 அலகுகள் வழங்குவதற்கு தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுச் சான்றிதழுடன் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். கொள்வனவு கட்டளையின் படி 6,000 அலகுகள் மற்றும் 131,500 அலகுகள் வங்க வேண்டியிருந்தமையும் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தமது கேள்வி ஆவணங்களில் 6,000 அலகுகளை உடனடியாகவும் மற்றும் மிகுதியை 30 நாட்களுக்குள்ளும் இருப்பை வழங்குவதாகவும் குறிப்பிட்ட போதிலும், கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2023 ஒக்டோபர் மாதம் வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு உரிய மருந்து இருப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2022 யூன் 16 ஆம் திகதி நிதி அமைச்சினால் சுகாதார பிரிவின் அவசர பெறுகை செயற்பாடுகளுக்காக (HSEPP) அறிமுகப்படுத்தப்பட்ட ஆலோசனையின் (Guideline) பிரகாரம் இலக்கம் 2022/SPC/E/R/P/00730 என்ற 140,000 அலகுகளை கொள்வனவு செய்வதற்கான கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. காணப்படுகின்ற அவசிய தேவையின் அடிப்படையில் பதிவில் இருந்து விடுவிக்கும் அனுமதிப் பத்திரத்தின் கீழ் (WOR) அலகொன்றுக்காக ரூபா 59.66 ஆகக் குறைந்த விலை காண்பித்த கேள்விதாரருக்கு பெறுகையை கையளிப்பதற்கும், சுகாதார பிரிவின் அவசர பெறுகைக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட போதும் அதற்குரிய அமைச்சரவை மேவுகை அங்கீகார கடிதம் கோவையில் காணப்படவில்லை. 139,980 அலகுகள் வழங்குவதாக காண்பித்திருந்ததுடன், கேள்வி ஆவணங்களில் மருந்து இருப்பு "உடனடியாக" வழங்க வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்ததுடன், WOR விநியோகித்ததன் பின்னர் மருந்து இருப்புக்கள் வழங்கப்படுவதாக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரின் கேள்வி ஆவணங்களில் காண்பிக்கப்பட்டிருந்தது, மேலும், கொள்வனவு கட்டளை விநியோகிக்கப்பட்ட சந்தர்ப்பம் வரையும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு சொந்தமான மருந்து இருப்புக்கள் காணப்படாதிருந்ததுடன், இருப்புக்கள் "உடனடியாக" வழங்குமாறு கட்டளை விநியோகிக்காதிருந்தமையும் கணக்காய்வின் போது பிரச்சினையாக இருந்தது. WOR அனுமதிப் பத்திரத்திற்காக கோரிக்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் 2023 சனவரி 23 ஆம் திகதி தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், 24 நாட்களின் பின்னர் 2023 பெப்ரவரி 16 ஆம் திகதி இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் WOR சான்றிதழ் விநியோகித்தல் தாமதத்தின் அடிப்படையில் கொள்வனவு கட்டளையில் குறிப்பிடப்பட்ட முறையில் 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி மருந்து இருப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், WOR சான்றிதழ் விநியோகித்து 16 நாட்களுக்கு பின்னர் கட்டளை மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) இலக்கம் 2022/SPC/E/R/P/00744 என்ற 140,000 கட்டளை விநியோகித்து 07 நாட்களின் பின்னர் பதிவு மற்றும் வழங்குனரின் வரையறுத்த கூறுவிலையின் கீழ் கேள்வி கோருவதற்கு பெறுகைக் குழு பரிந்துரை வழங்கியிருந்தது. ஆகக் குறைந்த விலை காண்பித்த கேள்விதாரருக்கு கேள்வி கையளிப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு பரிந்துரை வழங்கியிருந்தது. கொள்வனவு கட்டளை விநியோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையில் மருந்துவ வழங்கல் பிரிவிற்கு சொந்தமாக இருப்புக்கள் காணப்படாதிருந்ததுடன், தேசிய இருப்பு நிலைமை முறைமையின் பிரகாரம் மாதம் 0.01 இற்கு வரையறுக்கப்டபட்டிருந்தது. அதன் பிரகாரம் கேள்வி ஆவணங்களின் படி மருந்து இருப்புக்கள் "உடனடியாக" வழங்குமாறு காண்பிப்பதற்கு பதிலாக 2023 மார்ச் 31 ஆம் திகதி வழங்குவதாக குறிப்பிட்டு கொள்வனவு கட்டளைக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ஐ) தயாரிக்கப்பட்ட கட்டளை கட்டுப்பாட்டு பத்திரத்தின் பிரகாரம் இந்த இருப்புக்களுக்காக 2023 ஆம் ஆண்டிற்காக சராசரி கட்டளை விநியோகிக்காமைக்கு மருத்துவ வழங்கல் பிரிவினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 10 மாதங்கள் அளவிலான காலத்திற்கு பின்னர் 275,000 அலகுகள்

சராசரி கட்டளை மற்றும் 137,500 அலகுகள் அவசர கொள்வனவு கட்டளையாக இரண்டு விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட கட்டளைக்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட தகவல்களின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது பிரச்சினையாக இருந்தது.

(ஒ) ஆகக் குறைந்த 11 மாதங்களுக்கு முன்னர் சராசரி கட்டளை விநியோகிக்க வேண்டிய போதிலும், 2023 ஆம் ஆண்டிற்குரிய 275,000 அலகுகள் சராசரி கட்டளை 2022 நவம்பர் 16 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. சராசரி கட்டளையொன்று குறித்துரைத்த திகதியின் போது வழங்கப்படுவதாயின் திறந்த கூறுவிலை கோரலின் கீழ் பெறுகைகளை அமுல்படுத்துவதற்கான இயலுமை காணப்பட்ட போதிலும், காணப்படுகின்ற அவசர நிலைமையில் 07 நாட்களுக்குள் வரையறுத்த கூறுவிலையின் கீழ் கேள்வி கோருவதற்கு பெறுகைக் குழு பரிந்துரை செய்திருந்த போதும், இந்த அங்கீகாரத்தில் 75 நாட்களுக்கு பின்னர் கேள்விதாரருக்கு பதிலளிப்பதற்கு நியாயமான காலம் வழங்கப்படாமல் கேள்வி கோரப்பட்டிருந்தது. 2023 யூலை 07 ஆம் திகதி வரையும் கையிலுள்ள இருப்புக்கள் 09 மாதங்களுக்கு போதியளவாக இருந்தமையால் 2024 மே 15 ஆம் திகதி மருந்து இருப்புக்களை வழங்குவதாக காண்பித்து, கேள்வி கையளித்து 131 நாட்களுக்கு பின்னர் கொள்வனவு கட்டளை 2023 யூலை 17 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. 2022 சனவரி மாதம் தயாரிக்கப்பட்ட கட்டளை கட்டுப்பாட்டு பத்திரத்தின் படி 2023 ஆம் ஆண்டிற்காக கட்டளையொன்று விநியோகிக்கும் தேவையொன்று காணப்படாதிருந்தமை தீர்மானித்திருக்கும் போது மீண்டும் கட்டளை கட்டுப்பாட்டு பத்திரமொன்று தயாரிக்காமல் கட்டளை விநியோகித்தல் கணக்காய்வின் போது பிரச்சினையாக இருந்தது. கணகக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 06 வரையிலும் வழங்குனர் செயலாற்றல் பிணை முறி வழங்காதிருந்ததுடன், வழங்குனருடன் ஒப்பந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்படவில்லை. மேலும் கொள்வனவு கட்டளையில் குறிப்பிடப்பட்ட திகதியில் மருந்து இருப்புக்கள் வழங்குகின்றமைக்கான உறுதிப்படுத்தல் இந்த வழங்குனரிடம் இருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2022 யூன் 16 ஆம் திகதிய PFD/PMD/Health/ HSEPP/01/2022 என்ற நிதி அமைச்சினால் சுகாதார பிரிவின் அவசர பெறுகை செயற்பாடுகளுக்காக (HSEPP) அறிமுகப்படுத்தப்பட்ட ஆலோசனையின் படி (Guideline) இலக்கம் 2023/SPC/E/R/P/00143 என்ற 137,500 அலகுகள் கட்டளையிடப்பட்டிருந்தது. 2022 சனவரி மாதத்தின் போதும் 2023 ஆம் ஆண்டிற்காக கட்டளை விநியோகிப்பதற்கு தேவையில்லாதிருந்தமை தீர்மானிக்கப்பட்ட போதும், 2023 சனவரி மாதத்தின் போது இந்த அவசர கட்டளை விநியோகித்தல் கணக்காய்வின் போது பிரச்சினையாக இருந்தது. கேள்வி சமர்ப்பிப்பதற்கு போதியளவான காலம் வழங்கப்படாதிருந்த போதிலும், கேள்வி கோரல் முடிவடைந்து 25 நாட்கள் அளவிலான காலம் கடந்து 2023 ஏப்ரல் 24 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு தமது பரிந்துரையை சமர்ப்பித்துள்ளது. அதன் பிரகாரம் மருந்து கொள்வனவு செய்தல் "உடனடியாக" என்ற அடிப்படை கேள்விதாரருக்கு கேள்வி சமர்ப்பிப்பதற்கு மாத்திரமா என கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு பரிந்துரையின் படி மருந்துவ வழங்கல் பிரிவிற்கு சொந்தமாக இந்த கையிலுள்ள இருப்புக்கள் 12 மாதங்களுக்கு போதியளவாக இருந்தமை குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அந்த பிரிந்துரை விநியோகித்து 18 நாட்களின் பின்னர் கட்டளை இரத்துச் செய்வதற்கு பெறுகை மதிப்பீட்டு குழு தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு சொந்தமாக போதியளவான இருப்பு காணப்படாதிருந்தமை குறிப்பிட்டு அவசர அடிப்படையில் கட்டளை விநியோகித்தல் போதியளவான இருப்பு உள்ளமை காண்பித்து கட்டளை இரத்துச் செய்தல் கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.. அதன் பிரகாரம் இந்த கட்டளைக்காக செலவிடப்பட்ட காலம் ஊழியம் மற்றும் கிரயம் பயனற்றதாக இருந்தது.

(ஔ) 2024 ஆம் ஆண்டிற்காக சராசரி கேள்வி அளவை தீர்மானிப்பதற்காக கட்டளை கட்டுப்பாட்டு பத்திரம் 2023 நவம்பர் 15 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்காக கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக தீர்மானத்திற்கு வந்திருக்கவில்லை.

(க) 2022 செப்டம்பர் 02 ஆம் திகதி முதல் 2023 மார்ச் 13 ஆம் திகதி வரையாக காலத்தில் மருந்துவ வழங்கல் பிரிவிற்கு சொந்தமாக மருந்து இருப்புக்கள் காணப்படாதிருந்ததுடன், அதன் பிரகாரம் 02 வைத்தியசாலைகளால் இந்த காலப் பகுதியின் போது அலகொன்று ரூபா 500 வீதம் 400 அலகுகளும், அலகொன்று ரூபா 224 வீதம் 270 அலகுகளும் ஆக ரூபா 260,480 தொகையில் 724 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

56. <u>Oxaliplatin injection 50 mg in 10ml vial (SR-01203801)</u>

(அ) ஸ்வஸ்ட கணனி தரவு முறைமையின் பிரகாரம் 2023 ஒக்டோபர் 12 இல் உள்ளவாறு இந்த இருப்பில் சகல அளவுகளினதும் மருந்து இருப்புக்கள் முழுமையாக முடிவடைந்திருந்தது.

(ஆ) 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக முறையே 15,000 அலகுகளும், 2,550 அலகுகளும் மற்றும் 2,750 அலகுகளும் கட்டளையிடப்பட்டிருந்ததுடன், இந்த கட்டளை மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பம் வரையிலும் போதியளவான இருப்புக்கள் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2020 இன் பின்னர் விநியோகிக்கப்பட்ட கட்டளை இரத்துச் செய்தல் இதற்கு காரணமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) 2021 ஆம் ஆண்டிற்காக இந்த மருந்தில் 12,000 அலகுகள் சராசரி கட்டளையொன்று 2020 சனவரி 06 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன், 2020 பெப்ரவரி 02 ஆம் திகதி சர்வதேச போட்டியாளர் கேள்வி கோரும் முறையின் பிரகாரம் கேள்வி கோரி கேள்வி திறத்தல் 2020 ஏப்ரல் 24 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. கேள்வி திறக்கப்பட்டு 07 மாதங்களுக்குப் பின்னர் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குனருக்கு இந்த பெறுகையை கையளப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது, தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு அந்த தீர்மானம் 02 மாதங்களுக்கு பின்னரே அறிவிக்கப்பட்டிருந்தது. 2021 மார்ச் 31 ஆம் திகதி பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கும் போது கட்டளை வழங்குகின்ற சந்தர்ப்பம் குறிப்பிடப்பட்ட வழங்கல் திகதியினை விட ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் தாமதத்துவடன் பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ஈ) தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சமர்ப்பித்த தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை)NMRA(சான்றிதழ் Oxaliplatin for injection USP 50mg in 30ml vial என்ற பெயருடைய வேறொரு SR இலக்கத்திற்காக பெறப்பட்ட சான்றிதழ் ஒன்றாக இருந்ததுடன், அதனை ஏற்றுக் கொள்வதற்குள்ள இயலுமை கணக்காய்வின் போது பிரச்சினையாக இருந்தது. மேலும், இந்த சான்றிதழ் 2023 யூன் 14 ஆம் திகதியில் இரத்துச் செய்யப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(உ) மருத்துவ வழங்கல் பிரிவினால் 2021 செப்டம்பர் 23 ஆம் திகதி நாட்டில் காணப்படுகின்ற கொவிட் தொற்று நோய்களுக்கு இடையே இந்த மருந்துகளுக்காக காணப்பட்ட கேள்வி குறைவடைந்தமையால், இந்த கட்டளை மற்றும் அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட 12,000 அலகுகளுக்காக கட்டளை நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் இந்த கட்டளையில் 3,000 அலகுகள் மீண்டும் கோருமாறு சுகாதார சேவைகள் வழங்கல் பிரிவின் பணிப்பாளரால் 2022 யூலை 21 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட போதிலும், கணக்காய்வு திகதியான 2023 ஒக்டோபர் 12 வரையிலும் அந்த மருந்துகள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஊ) இதற்கு முன்னர் விநியோகிக்கப்பட்ட இரண்டு கட்டளைகள் கைவிடப்பட்டிருக்கும் போது இலக்கம் 2022/SPC/X/R/P/00306 என்ற கட்டளையின் கீழ் 1,800 அலகுகள் கொள்வனவு செய்வதற்காக கட்டளை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகக் குறைந்த விலை சமர்ப்பி'த்த நிறுவனத்திற்கு கேள்வி கையளிப்பதற்கு திணைக்கள பெறுகைக் குழு தீர்மானித்திருந்தது. எனினும், மீண்டும் மூன்று மாதங்களுக்குப் பின்னர் பெறுகைக் குழு தீர்மானத்தின் படி வழங்குனரிடம் இருந்து கையளிக்கப்பட்ட விடயங்களை வழங்கல் தொடர்பாக விளக்கமொன்றை பெற்றுக் கொள்வதற்கு கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு காரணமாக தேவையான செயலாற்றல் பிணை முறி வழங்காமை மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடாமை என்ற விடயங்கள் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் வழங்குனரால் அரச மருந்த கூட்டுத்தாபனத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பி மூலப் பொருள் விலை உயர்வடைந்து சென்றமையால் ஐ.அ.டொலர் 3.5 இற்கு சமர்ப்பிக்கப்பட்ட விலை ஐ.அ.டொலர் 6.875 வரை உயர்வடைந்தமை கோரப்பட்டிருந்தது. பெறுகைக் குழுவினால் வழங்குனர் விலை அதிகரித்ததன் அடிப்படையாக கொண்டு உரிய பெறுகை இரத்துச் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த மருந்துகளுக்காக கேள்வி மதிப்பீட்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட NMRA சான்றிதழ் ஏனைய SR இலக்கத்திற்கு உரிய ஒரு தொகுதியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) 2020/SPC/E/R/P/00744 என்ற 750 அலகுகள் அவசர கொள்வனவுக்கான கட்டளை மருத்துவ வழங்கல் பிரிவினால் அனுப்பப்பட்டிருந்தது. இந்த கட்டளை அவசர கட்டளையாக குறிப்பிடப்பட்டிருக்கும் போது கேள்வி கோருவதற்கு 15 நாட்கள் எடுத்திருந்தது. எனினும், கேள்வி சமர்ப்பிப்பதற்காக 06 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அவசர கொள்வனவாக கருதி கூறுவிலை சமர்ப்பிப்பதற்கு 06 நாட்கள் வழங்கப்பட்டிருக்கும் போது மதிப்பீட்டிற்காக 1½ மாதம் நீண்ட காலம் வீச்சினை வழங்கியதுடன், அவசர தேவையினை காண்பித்து போட்டியாளர் வரையறுக்கப்பட்டிருந்தமை ஏனைய நடவடிக்கைகளின் போது எந்தவொரு அவசரமும் காண்பிக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இந்த கட்டளைக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட இந்த மருந்தின் ஏனைய மாத்திரைகளுக்குரிய NMRA சான்றிதழ் 2020 ஏப்ரல் 21 ஆம் திகதி முடிவடைந்திருந்ததுடன், அதனை மீண்டும் நீடித்து செல்லுபடியான சான்றிதழாக பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கும் சந்தர்ப்பம் வரையில் வழங்கப்பட்டிருந்தது. அந்த சான்றிதழ் ஏனைய SR இலக்கத்திற்குரிய மருந்தாக இருந்தமையும் கேள்வி மதிப்பீட்டின் போது அதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை இந்த மருந்து இருப்புக்கள் 2023 மார்ச் 10 ஆம் திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்ததுடன், அது மாற்றப்பட்ட கட்டளை மற்றும் SR இலக்கத்தின் கீழ் இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) 2023 ஆம் ஆண்டிற்குரிய 1,500 அலகுகள் இலக்கம் 2023/SPC/N/R/P/00081 என்ற கட்டளை 2022 நவம்பர் 16 ஆம் திகதி அனுப்பப்பட்டிருந்தது. கட்டளை கட்டுப்பாட்டு பத்திரத்தின் படி மேற்கூறப்பட்ட காலப் பகுதிக்குரிய அலகுகள் 23,501 மிகையான மருந்து இருப்பொன்று காணப்படும் போது சராசரி கட்டளையாக 1,500 அலகுகளுக்காக கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டு சராசரி கட்டளை 11 மாதங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும், காத்திருத்தல் கட்டளையின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட சராசரி கட்டளை 2023 ஆம் ஆண்டின் ஆரம்பிப்பதற்கு ஒரு மாத அளவிற்கு முன்னரே சமாப்பிக்கப்பட்டிருந்தது, முன்னுரிமை பட்டியலில் உள்ளடக்கப்படாத இந்த மருந்துகளுக்காக திணைக்கள பெறுகைக் குழுவினால் தீர்மானம் எடுத்தல் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் கவனம் இன்மையான செயற்பாடாக இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஐ) 2023 இன் சராசரி கட்டளைக்குரிய பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது காணப்பட்ட 750 அலகுகள் மற்றும் 500 அலகுகள் கொள்வனவு செய்வதற்காக இரண்டு சந்தர்ப்பங்களின் போது கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், முன்னுரிமைப் பட்டியலில் உள்ளடக்காமையின் காரணமாக சுகாதார பிரிவின் அவசர பெறுகைக் குழுவினால் இந்த பெறுகை இரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஒ) சகல கட்டளைகளும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தாமதம் அடைந்ததனால் இந்த மருந்தின் ஒரு அலகு ரூபா 9,000 வீதம் 18 அலகுகள் ரூபா 162,000 தொகையில் பதுளை மாகாண பொது வைத்தியசாலையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை தெரிவு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

57. <u>Ergometrine maleate inj.500mcg/1ml amp (SR - 01300102)</u>

(அ) 2022 ஆம் ஆண்டிற்காக இலக்கம் 2022/SPC/N/R/P/00007 என்ற கொள்வனவு கட்டளை மூலம் 15,000 தடுப்பூசி அலகுகள் 2021 பெப்ரவரி 27 ஆம் திகதி அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு தகவல்கள் முகாமைத்துவ முறைமை ஊடாக சமர்ப்பிக்கப்பட்டதுடன், அந்த கட்டளை 18 நாட்களின் பின்னர் எழுத்து மூலம் அனுப்பப்பட்டிருந்தது. சர்வதேச போட்டியாளர் கேள்வி முறைமையில் மேற்கொள்ள்ப்பட்ட கேள்வி கோரலின் பிரகாரம் 02 கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் மருத்துவ வழங்கல் பிரிவின் கோரிக்கையின் அடிப்படையில் இந்த கட்டளை தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.10 இன் பிரகாரம் கேள்வி செல்லுபடி காலத்தில் கேள்வி கையளித்து பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும், செல்லுபடி காலம் நீடிக்காமல் 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி இந்த கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. அது வரையில் மருந்துக்குரிய ஆசுயு பதிவு சான்றுதழின் செல்லுபடி காலமும் 2022 மே 20 ஆம் திகதி முடிவடைந்திருந்தது. எனினும், 2022 ஒக்டோபர் 17 ஆம் திகதி பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. 2023 ஒக்டோபர் வரை இந்த கட்டளைக்குரிய மருந்துகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலக்கம் 2022/SPC/X/R/P/00284 என்ற 35,000 தடுப்பூசி அலகுகள் கட்டளைக்குரிய விலை கூறுவிலை சமர்ப்பித்த 02 நிறுவனங்களில் ஆகக் குறைந்த கேள்விதாரருக்கு பெறுகை கையளிக்கப்பட்டிருந்தது. மொத்த இருப்பும் 2023 மார்ச் 23 இல் உள்ளவாரு கிடைக்க வேண்டியிருந்தமை காண்பித்து பொருள் அனுப்பல் கோரிக்கை 2022 யூலை 04 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த மருந்தின் மொத்த தடுப்பூசிகளின் அளவு 2023 ஏப்ரல் 12 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. இந்த பெறுகைகளுக்கு உரியதாக செயலாற்றல் பிணை முறி 41 நாட்கள் தாமதத்துடன் வழங்கப்பட்டிருந்தது. வழங்குனருக்கு இந்த ஒப்பந்தம் கையளிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையிலும் மருந்தின் NMRA பதிவு சான்றிதழ் காலாவதியாகியிருந்ததுடன், மீண்டும் பதிவு செய்தலை பெற்றுக் கொள்வதற்காக வழங்குனரால் கோரப்பட்ட போதும், அதன் பிரகாரம் விரைவாக அந்த பதிவினை புதுப்பிப்பதற்கோ அல்லது மறுப்பதற்கோ தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை நடவடிக்கை எடுக்காமல் இந்த இருப்பை விடுவிப்பதற்காக இருப்பு விடுவித்தல் கடிதம் (Shipment clearance letter) விநியோகித்திருந்தது. இந்த கட்டளைக்குரிய மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 17,035,200 ஆக கணிப்பிடப்பட்டிருந்ததுடன், உள்ளபடியான கிரயம் ரூபா 8,845,561 ஆகும். அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் மற்றும் உள்ளபடியான கிரயத்திற்கு இடையே 92 சதவீத முரண்கள் காணப்பட்டது. இந்த கட்டளைக்குரிய வங்கி பிணை முறியின் தாமதத்தின் காரணமாக குளிரூட்டல் அறை கட்டணமாக ரூபா 75,600 மேலதிக கிரயம் ஒன்று செலவிடப்பட்ட போதிலும், அந்த தொகை வழங்குனரிம் இருந்த அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2023 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளை 2022 சனவரி வரையில் விநியோகிக்க வேண்டியிருந்த போதும் 17,500 அலகுகள் 2023 சராசரி கட்டளை 2022 நவம்பர் 17 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. திணைக்கள பெறுகைக் குழு தீர்மானத்தின் படி ஒரே ஒரு கேள்விதாரரான் கம்பனியொன்றுக்கு அலகொன்றின் கிரயம்

ஐ.அ.டொலர் 2.80 விலையில் பெற்றுக் கொள்வதற்காக கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சராசரி கட்டளை அலகுகள் பெற்று கொள்வதற்கு தீர்மானத்திமையால் இந்த கட்டளை வழங்க வேண்டிய திகதி 2025 மார்ச் வரை காலம் தாழ்த்தி பெறுகை செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தது.

(ஈ) இந்த மருந்தில் போதியளவான பிரகாரம் இருப்பு காண்பபட்ட போதும் 04 சந்தர்ப்பங்களின் போது 53 அலகுகள் ரூபா 21,925 இற்கு பிரதேச ரீதியிலும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) மருந்தின் மதிப்பீடு உரியவாறு தயாரிக்கமை, கட்டயிடப்பட வேண்டிய அளவு உரியவாறு எதிர்வு கூறப்படாமை, வைத்தியசாலைகளினால் தேவையற்ற மேலதிக இருப்புக்கள் பேணிச் செல்லப்பட்டமை, மேலதிக இருப்பு அளவு தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை போன்ற விடயங்களின் காரணமாக இந்த மருந்துகள் வைத்தியசாலையில் காலாவதியாகியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், காலாவதியாகிய இருப்பின் கொள்வனவு கிரயம் மாத்திரம் ரூபா 5,238,344 ஆக இருந்தது.

58. <u>Pazopanib tablet 200 mg (SR-01208101)</u>

(அ) இலக்கம் 2021/SPC/O/C/P/00528 என்ற 2021 யூலை 20 ஆம் திகதிய கட்டளையின் கீழ் 18,505 மருந்து அலகுகளை பெற்றுக் கொள்வதற்கான பதிவு எதிர்கால வழங்குனரிடம் இருந்து 2021 ஆகஸ்ட் 25 ஆம் திகதி பக்ஸ் மூலம் கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன், ஒரு நிறுவனத்திடம் இருந்து மாத்திரம் கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த வழங்குனருக்கு 2021 ஒக்டோபர் 25 ஆம் திகதி பொருள் அனுப்பல் கோரிக்கை வழங்கப்பட்டிருந்ததுடன், 2022 ஏப்ரல் 18 ஆம் திகதி வரையில் இந்த கட்டளை வழங்க வேண்டியிருந்தது. 2023 நவம்பர் 02 கணக்காய்வு திகதி வரையிலும் இந்த இருப்பு வழங்கப்படாதிருந்ததுடன், கிடைக்க வேண்டிய இருப்பாக எஸ்வஸ்ட முறையில் காண்பிக்கப்பட்டிருந்தது, இந்த கட்டளைக்குரிய செயலாற்றல் பிணை முறி 2022 யூலை 30 ஆம் திகதி வரையும் செல்லுபடியாக இருந்ததுடன், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவு 2022 யூன் 03 வரை மாத்திரம் செல்லுபடியாக காணப்பட்டது.

(ஆ) 2021 செப்டம்பர் 08 ஆம் திகதிய கட்டளை இலக்கம் 2021/SPC/E/C/P/00653 இன் கீழ் 30,000 மருந்து அலகுகளை (Tabs) பெற்றுக் கொள்வதற்கான கட்டளை தொடர்பாக எஸ்வஸ்ட முறைமையில் காண்பிக்கப்பட்ட போதிலும், MSMIS முறைமையின் பிரகாரம் மற்றும் அரச மருந்த கூட்டுத்தாபனத்தின் தரவு முறைமையின் பிரகாரம் அவ்வாறான கட்டளையொன்று தொடர்பான தகவல்கள் கணக்காய்வில் பெறமுடியாதிருந்தது.

(இ) 2021 செப்டம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 2021/SPC/E/C/P/00680 என்ற கட்டளையின் பிரகாரம் 25,000 மருந்து அலகுகளை பெற்றுக் கொள்வதற்காக பதிவு எதிர்கால வழங்குனரிடம் இருந்து பக்ஸ் மூலம் கூறுவிலை கோருவதற்கு திணைக்கள பெறுகைக் குழுவினால் 2021 ஒக்டோபர் 25 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2022 சனவரி 26 ஆம் திகதி இந்த பெறுகை கையளிக்கப்பட்டிருந்தது. வழங்குனர் 45 வார காலம் ஒன்று கோரிமையால் 2022 ஆகஸ்ட் 18 ஆம் திகதி திணைக்கள பெறுகைக் குழுவினால் இந்த கட்டளை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. ஏனைய விருப்பம் தெரிவித்த கேள்விதாரர்கள் இல்லாமையினால் மீண்டும் கூறுவிலை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், பதிவு மற்றும் எதிர்கால வழங்குனரிடம் இருந்து கூறுவிலை கோரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2022 ஒக்டோபர் 20 ஆம் திகதி WOR சான்றிதழ் பெற்றுக் கொள்வதன் கீழ் கப்பலில் இடுவதற்கு முன்னர் மாதிரிகளுக்காக சுயாதீன ஆய்வுகூட அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வதன் கீழ் பெறுகை கையளிக்கப்பட்டிருந்தது, எனினும், 2023 பெப்ரவரி 16 ஆம் திகதி WOR குழு தீர்மானத்தின் படி றுழுசு சான்றிதழ் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கட்டளை விநியோகித்து

02 வருடங்களுக்கு பின்னர் அதனை கையளிப்பதற்கு முடியாதிருந்தமையால் 2023 நவம்பர் 03 ஆம் திகதி வரையிலும் இந்த மருந்து இருப்பு பெறவேண்டிய இருப்பாக எஸ்வஸ்ட தரவு முறைமையில் காண்பிக்கப்பட்டதன் மூலம் இலங்கையில் புற்றுநோய் சிகிச்சை நிலையங்களுக்கு புற்றுநோய் மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு முன்னுரிமை அளித்தல் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) இந்த மருந்துடைய கட்டளை கிடைக்காமையின் காரணமாக 2021 யூலை 20 முதல் நவம்பர் 29 வரையான காலப் பகுதியில் 94 நாட்கள் மருந்து வழங்கல் பிரிவிற்கு உரியதாக இருப்பு காணப்படாதிருந்தமை MSMIS கணனி முறைமையில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(உ) இலக்கம் 2022/SPC/N/C/P/00081 என்ற 50,000 அலகுகளின் கட்டளை 2021 செப்டம்பர் 17 ஆம் திகதி தரவு முறைமை மூலம் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், 12 நாள் தாமதத்தின் பின்னர் உரிய கட்டளை கூட்டுத்தாபனத்திற்கு எழுத்து மூலம் வழங்கப்பட்டிருந்தது. 2021 செப்டம்பர் 08 ஆம் திகதி வரையில் கையில் இருப்புக்கள் பூச்சியமாக இருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அங்கத்தவர் மதிப்பீட்டு அறிக்கையில் கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும், அவர்களின் பெயர் மற்றும் பதவிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. வழங்குனரால் தமது கேள்வி சமர்ப்பிக்கும் போது பொருள் அனுப்பல் கோரிக்கை மற்றும் நாணயக் கடிதம் கிடைத்த பின்னர் 45 வாரங்கள் மருந்து வழங்க முடியும் என காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த விடயங்களையும் அடிப்படையாக கொண்டு 2022 பெப்ரவரி 02 ஆம் திகதி உரிய வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். வழங்குனரால் 2022 பெப்ரவரி 09 ஆம் திகதி இந்த கட்டளை மேற்கூறப்பட்ட நிபந்தனைகளின் கீழ் கையேற்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஆகஸ்ட் 18 ஆம் திகதி கூடிய பெறுகைக் குழு இந்த கட்டளையை இரத்துச் செய்து மீண்டும் கேள்வி கோருவதற்கு தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் 2022 பெப்ரவரி 15 ஆம் திகதி வழங்குனரால் காண்பிக்கப்பட்ட நிபந்தனைகள் தொடர்பாக தீர்மானம் எடுத்து கட்டளையை இரத்துச் செய்வதற்காக ஒரு வருடத்திற்கு அண்மித்த காலம் கடந்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், வழங்குனரின் தவறினால் கட்டளை இரத்துச் செய்யப்பட்ட போதும் அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கோவையின் பிரகாரம் அவதானிக்கப்படவில்லை.

(ஊ) இந்த 50,000 அலகுகளை பெற்றுக் கொள்வதற்கு 2022 செப்டம்பர் 08 ஆம் திகதி மீண்டும் திணைக்கள பெறுகைக் குழுவின் கீழ் கூறுவிலை கோரப்பட்டிருந்தது. தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையில் பதிவு அனுமதிப் பத்திரத்துடன் வழங்குனர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட அலகொன்றிக்காக ரூபா 1,370 ஆன கேள்வி தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் பதிவில் இருந்து விடுவித்தல் சான்றிதழ் (WOR) பெற்றுக் கொள்வதன் கீழ் மற்றும் முன்னரே கப்பலில் இடும் மாதிரிகளுக்காக சுயாதீன ஆய்வு கூட அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வதன் கீழ் மருந்து அலகொன்று ரூபா 330 ஆன அசாதாரண குறைந்த விலையில் பெற்றுக் கொள்வதற்கு 2022 நவம்பர் 15 ஆம் திகதி கூடிய பெறுகைக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. 2022 நவம்பர் 08 இல் உள்ளவாரு இந்த மருந்தின் இருப்பு நிலைமை பூச்சிய மட்டத்தில் காணப்பட்டது. WOR குழு தீர்மானத்தின் படி மருந்து உற்பத்தியாளர் மற்றும் உள்நாட்டு முகவர் என்ற இருவரும் பதிவு செய்யாதிருந்தமையால் இந்த சான்றுதழுக்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. ஸ்வஸ்ட தரவு முறையின் பிரகாரம் இந்த கட்டளை இலக்கத்தில் 50,000 மருந்து அலகுகள் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்படாத கட்டளைக்காக தரவு முறைமையில் பெற வேண்டிய விடயமாக இவ்வாறான இருப்பு காண்பிப்பதன் மூலம் புற்றுநோயாளர்களுக்கு தொடர்ச்சியாக மருந்து வழங்க முடியாதிருந்தமை கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

(எ) இலக்கம் 2022/SPC/X/C/P/00331 இன் கீழ் 54,000 மருந்து அலகுகள் இந்த கடன் முன்மொழிவு திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்காக 2022 மார்ச் 26 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த இந்த கட்டளைக்குரிய வழங்கல் நிபந்தனைகளை உள்ளடக்கி எழுத்து மூலம் கட்டளை ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அலகொன்றிக்கான ஆகக் குறைந்த விலை ஐ.அ.டொலர் 3.05 அலகு விலை சமர்ப்பிக்கப்பட்ட இந்திய வழங்குனருக்கு பெறுகையை கையளிப்பதற்கு திணைக்கள பெறுகைக் குழு 2022 ஏப்ரல் 21 இல் பரிந்துரை செய்துள்ளது. அந்த தீர்மானத்தை எடுத்து 12 நாட்களுக்கு பின்னர் கட்டளை உரிய நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டது. மருந்துகள் கப்பலில் ஏற்றுவதற்கு முன் சுயாதீன ஆய்வு கூட அறிக்கையொன்று வழங்குனரின் கிரயத்தில் வழங்க வேண்டியிருந்தமையும் WOR சான்றிதழ் சமர்ப்பிப்பதன் கீழ் அந்த கட்டளை கையளிக்கப்பட்டது. பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிப்பதற்கு முன் வழங்குனரால் WOR சான்றிதழ் பெற வேண்டியிருந்த போதிலும், பொருள் அனுப்பல் கோரிக்கை 2022 யூலை 04 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், WOR சான்றிதழ் 2022 செப்டம்பர் 06 ஆம் திகதியே விநியோகிக்கப்பட்டிருந்தது. 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதி இந்த மருந்தின் அடிப்படை DHS அடையாளம் குறிப்பிட்டு கொள்வதற்கு முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஆகஸ்ட் 17 ஆம் திகதி மருத்துவ வழங்கல் பிரிவினால் இந்த முன்மொழிவுக்காகவும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த இருப்பின் ஆரம்ப மருந்து 27,000 அலகுகள் 04 மாதம் அளவிலான தாமதத்துவடன், 10,000 அலகுகள் மூன்றாவலது இருப்பு 1½ மாதம் அளவிலான தாமதத்துடன் மருந்ததுவ வழங்கல் பிரிவிற்கு இருப்பு வழங்கப்பட்டிருந்தது. 2022 யூலை 08 முதல் செப்டம்பர் 01 வரை 23 நாட்களும் 2022 செப்டம்பர் 01 முதல் திசெம்பர் 14 வரை 104 நாட்களும் ஆக இந்த மருந்தின் ஒரு அலகேனும் மருத்துவ வழங்கல் பிரிவில் காணப்படவில்லை.

(ஏ) இலக்கம் 2022/SPC/E/C/P/00748 என்ற 2022 நவம்பர் 09 ஆம் திகதி 22,500 அலகுகள் அவசர கொள்வனவு கட்டளையின் பிரகாரம் பெறுகைகளுக்காக பதிவு செய்த மற்றும் முன்னைய வழங்குனரிடம் இருந்து 07 நாட்களில் கூறுவிலை கோருவதற்கு 2022 நவம்பர் 15 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் 04 நிறுவனங்களில் இருந்து 2022 நவம்பர் 25 ஆம் திகதி பெக்ஸ் மூலம் கூறுவிலை கோரப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 02 ஆம் திகதி கேள்வி திறக்கப்பட்டது. அதற்காக கேள்விதாரரின் முகவராக 08 நிறுவனங்கள் முகவர்களாக சமூகமளித்திருந்தனர். எனினும், 2022 திசெம்பர் 02 ஆம் திகதி கேள்வி திறத்தல் அறிக்கை (Bids Opening Minutes) இன் பிரகாரம் கூறுவிலை அனுப்பிய நிறுவனங்களின் எண்ணிக்கை இரண்டு ஆகும். 2022 திசெம்பர் 02 ஆம் திகதிய மதிப்பீட்டு குழு அறிக்கையின் படி இரண்டு நிறுவனங்களும் மதிப்பீட்டு உட்படுத்தப்பட்ட போதும், இந்த பெறுகைகளுக்காக 03 நிறுவனங்கள் கேள்வி சமர்ப்பித்திருந்தமை 2022 திசெம்பர் 28 ஆம் திகதிய மற்றும் 2023 சனவரி 04 ஆம் திகதிய பெறுகைக் குழு கூட்ட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. அலகொன்றுக்காக ரூபா 1,256.63 ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் NMRA இல் பதிவு பெற்றுக் கொள்ளாமையினாலும் மற்றும் ஏனைய வழங்குனர் NMRA இல் பதிவு பெற்றுள்ளமையாலும் கூறுவிலைகளை குறைத்து கொள்வதன் கீழ் இந்த பெறுகைகளை கையளிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இந்த கம்பனியால் அலகொன்றிக்காக ரூபா 10 விலை குறைப்பதுடன், ரூபா 1,467 வீதம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், உரிய மருந்து இருப்பு 64 நாட்கள் தாமதத்துடன் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவசர கொள்வனவாக 2022 நவம்பர் 09 ஆம் திகதி மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட இந்த பெறுகைகளுக்காக 05 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் செலவிடப்பட்டிருந்தது.

(ஐ) இலக்கம் 2022/SPC/E/C/P/00497 என்ற 9,000 அலகுகள் மாதம் ஒன்றின் தேவையினை பூர்த்தி செய்வதற்கான கட்டளை 2022 யூன் 29 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது, இந்த கட்டளையின் பிரகாரம் 2023 யூலை 15 ஆம் திகதி மருந்து வழங்க வேண்டியிருந்தது. இதன் பிரகாரம் 2023 யூலை 22 ஆம் திகதி வரையில் மேற்கொள்ளப்பட்ட கேள்வி கோரலின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட 03 கேள்விகளில் 2022 ஆகஸ்ட் 05 ஆம் திகதி கூடிய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் அலகொன்றிக்காக ரூபா 1,987.15 ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குனரிடம் இருந்த கொள்வனவு செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது, எனினும், 2022 ஆகஸ்ட் 30 ஆம் திகதி கூடிய பெறுகைக் குழுவினால் பெறுகைகளை விரைவுபடுத்தும் நோக்கில் ரூபா 1,609.30 என்ற விலையில் பிரதான மருந்து கட்டளை கையளித்த கம்பனிக்கு இந்த கட்டளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. கேள்வி அழைப்பு விடப்பட்ட பத்திரிகை அறிவித்தல் அல்லது பதிவு செய்த வழங்குனர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் தொடர்பான விபரங்கள் கோவையில் உள்ளடக்கப்படவில்லை. அவ்வாறே 2023 ஒக்டோபர் 23 கணக்காய்வு திகதி வரையிலும் இந்த மருந்து இருப்பு கிடைத்திருக்கவில்லை.

(ஒ) இலக்கம் 2023/SPC/X/C/P/00195 என்ற 60,000 அலகுகளின் கட்டளை இந்திய கடன் உத்தேச திட்டத்தின் கீழ் மிகுதி பணத்தை பயன்படுத்தி அவசர பெறுகையாக ஒளடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையின் கீழ் மருத்துவ வழங்கல்களை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறையின் நிறுவனம் ஒன்றின் முகவருக்கு சந்தர்ப்பம் வழங்குதல் மற்றும் மூன்று மாதங்களுக்கு போதியளவான மருந்துவ வழங்கல் இருப்பை கொள்வனவு செய்வதற்கு 2022 ஒக்டோபர் 04 ஆம் திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2023 யூன் 15 ஆம் திகதி மற்றும் 2023 செப்டம்பர் 15 ஆம் திகதிகளில் 30,000 மருந்து அலகுகள் வீதம் வழங்க வேண்டியிருந்தது. சுகாதார பிரிவின் அவசர பெறுகைக் குழுவினால் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கீழ் பதிவிற்கு உட்படுத்தப்பட்ட வழங்குனர்களிடம் இருந்து 2023 யூன் 14 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கேள்வி கோரலின் படி 2023 யூன் 16 ஆம் திகதி வரையில் கேள்வி சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. இதன் பிரகாரம் 04 நிறுவனங்களில் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டதுடன், கேள்வி சமர்ப்பிப்பதற்காக போதியளவான காலம் வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஓ) 2023 யூன் 27 ஆம் திகதி கூடிய தொழில்நுட்ப குழுவினால் கேள்வி சமர்ப்பித்த 04 நிறுவனங்களுக்காக NMRA சான்றிதழ் இல்லாதிருந்த போதிலும், NMRA-Manufactured site approval உடன் இரண்டு நிறுவனங்களுக்கு இடையே ஏனைய நிபந்தனைகள் சமமாக இருந்த போதிலும், வழங்கல் கால அட்டவணை தொடர்பாகவும் கவனத்தில் கொண்டு அலகொன்றிகாக ரூபா 1,905 விலை சமர்ப்பித்த நிறுவனம் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அலகொன்றின் விலை ரூபா 1,835.17 இன் கீழ் இந்த வழங்கல்களை பெற்றுக் கொள்வதற்கு நிறுவனம் இணங்கியிருந்தமையால் இந்த வழங்கல் அந்த நிறுவனத்திற்கு வழங்குவதற்கு 2023 யூன் 28 ஆம் திகதி கூடிய பெறுகைக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்ததுடன், இந்த பெறுகை தீர்மானத்திற்காக அமைச்சரவையின் மேவுகை அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. 2023 செப்டம்பர் 07 ஆம் திகதி பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் வழங்குனர் 60,000 மருந்து அலகுகளை 2023 நவம்பர் 07 ஆம் திகதி வரையில் வழங்க வேண்டியிருந்தது, இந்த கட்டளைக்குரிய செயலாற்றல் பிணை முறி மற்றும் உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவையில் உள்ளடங்கியிருக்கவில்லை. WOR சான்றிதழ் கிடைத்த திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் மருந்து வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்தமை மற்றும் தெரிவு செய்யப்பட்ட வழங்குனரின் விலையினை விட ரூபா 34,552,200 குறைத்து மருந்து இருப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக இருக்கும் போது இந்த வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். எனினும், 2023 நவம்பர் 17 ஆம் திகதி வரையிலும் இந்த வழங்குனரால் மருந்து இருப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) இலக்கம் 2023/SPC/E/C/P/00145 என்ற 22,500 அலகுகளை அவசர கொள்வனவு கட்டளை 2023 சனவரி 27 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த அவசர பெறுகை சுகாதார அமைச்சின் அவசர பெறுகைக் குழுவின் மூகூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பெறுகைத் தீர்மானத்திற்காக அமைச்சரவை மேவுகை அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த கட்டளைக்குரிய செயலாற்றல் காப்புறுதியும் கோவையில் உள்ளடக்கப்படவில்லை.

(க) MSMIS முறைமையின் பிரகாரம் பெயர் குறிப்பிட்ட நோயாளர்களுக்காக வழங்கப்படுகின்ற மருந்து தொடர்பான தரவுகள் மற்றும் மாதிரிகளாக வழங்கப்பட்ட மருந்துகள் தொடர்பாக எதிர்கால கடந்த கால தரவுகள் (Historical Data) உள்ளடங்கியிருந்த போதிலும், ஸ்வஸ்ட தரவு முறைமை அந்த தகவல்கள் உள்ளடக்கும் வசதிகள் இது வரை வடிவமைக்கப்படாதிருந்தமையால் அதன் காரணமாக அந்த நோயாளர்களுக்கு வழங்கப்படுகின்ற கடந்த கால மருந்துகள் தொடர்பான தகவல்கள் தேவையான சந்தர்ப்பங்களில் மருந்தாளர்களுக்கு பெற்றுக் கொள்ளும் இயலுமை காணப்படாதிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(கா) கட்டளையிடப்பட்ட மருந்து அளவில் MSMIS முறைமை மற்றும் ஸ்வஸ்ட தரவு முறைமையில் பெறக் கூடியதாக இருந்த மருந்தின் அளவாக காண்பிக்கப்பட்ட போதும், இந்த மருந்து இருப்பு தொடர்ந்தும் பெறக் கூடிய இயலுமை மற்றும் இது வரை கிடைக்காமைக்கான காரணம், உரிய கட்டளைக்குரிய செயல் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் மருந்த பெறக் கூடிய இயலுமை தொடர்பாக கண்டறிந்து உள்ளபடியாக இருப்பு கிடைக்காதிருக்குமாயின் அந்த கட்டளை பொருத்தமான பிரகாரம் இரத்துச் செய்து தரவு முறைமையில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மருந்து கட்டளையிடும் போது மேற்கொள்ளப்படுகின்ற எதிர்வு கூறலில் பிழையான நிலைமைக்கு உட்பட்டிருந்தது. பிழையான தரவுகளை அடிப்படையாக கொண்டு எதிர்வு கூறி மேற்கொள்ளப்பட்ட கட்டளையின் அளவு மற்றும் வழங்கல் கால அட்டவணை தயாரிப்பதன் மூலம் உரிய பெறுவதற்குள்ள கட்டளையாக எதிர்வு கூறப்பட்ட மருந்து இருப்புக்கள் உள்ளபடியாக எதிர்பார்த்த ரீதியில் கிடைக்காமையின் காரணமாக மருந்து பற்றாக்குறை ஏற்பட்டமையும், அந்த மருந்து பற்றாக்குறைக்கு தீர்வாக பிரதேச கொள்வனவை மேற்கொள்வதற்கும், அவசர கொள்வனவின் கீழ் அதிக விலையில் மருந்துகளை கொள்வனவு செய்வதற்கும் ஏற்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(கி) 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மருத்துவ வழங்கல் பிரிவினால் போதியளவான இருப்பு நிலைமையை பேணிச் செல்லாமையின் காரணமாகவும் மற்றும் இந்த மருந்தின் வழங்கல் கால அட்டவணையின் பிரகாரம் வழங்கல் வழங்குவதற்க அரச மருந்தக கூட்டுத்தாபனம் தவறியமையால் வைத்தியசாலை முறைமையில் 06 சந்தர்ப்பங்களின் போது 319 நாள் காலம் இந்த மருந்து கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே இந்த மருந்தின் 50 சதவீதத்திற்கு அண்ணளவான அளவு மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்காக வழங்கப்படுவதுடன், அந்த வைத்தியசாலை 2022 மற்றும் 2023 இன் போது 04 சந்தர்ப்பங்களில் கோரப்பட்ட 36,000 அலகுகளில் 24,700 அலகுகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

59. <u>Capecitabine Tab 500 mg (SR - 01201601)</u>

(அ) 2020 ஆம் ஆண்டிற்காக கட்டளையிடப்பட்ட அலகுகள் 200 மற்றும் 2021 ஆம் ஆண்டின் போது கட்டளையிடப்பட்ட அலகுகளில் 64 சதவீதம் 2023 செப்டம்பர் 30 வரையிலும் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) 2022 இற்குரிய 230,000 அலகுகளை சாதாரண கட்டளை விநியோகித்து கேள்வி மதிப்பீட்டிற்காக 04 மாத காலம் கடந்திருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு

பெறுகை கூட்டத்திற்காக 02 மாத காலத்திற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்ததுடன், கட்டளை கையளிப்பதற்காக 55 நாட்களுக்கு அண்மித்த காலம் எடுத்திருந்தது. பொருள் அனுப்பல் கோரிக்கையின் பிரகாரம் 2023 ஒக்டோபர் 31 வரையில் 230,000 அலகுகள் கிடைக்க வேண்டியிருந்த போதிலும், தரவு முறைமையின் பிரகாரம் 2023 நவம்பர் 28 ஆம் திகதி வரையிலும் இந்த இருப்புக்கள் கிடைத்திருக்கவில்லை.

(இ) இலக்கம் 2022/SPC/E/R/P/00457 என்ற 83,000 அலகுகள் அவசர கட்டளை ஒன்றிக்காக பதிவு செய்த வழங்குனரிடம் இருந்து கேள்வி கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆகக் குறைந்த அலகொன்றின் விலை ரூபா 310 சமர்ப்பித்த நிறுவனத்திற்கு அலகொன்று ரூபா 290 ஆக வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்தமையால் இந்த கட்டளை WOR சான்றிதழ் பெற்றுக் கொள்வதன் கீழ் கையளிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்குரிய மருந்து அளவு குறித்துரைத்த திட்டத்தின் பிரகாரம் கட்டளையிட்டு குறித்துரைத்த திகதிகளில் இருப்பினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் இந்த முறையில் அவசர கட்டளை விநியோகித்ததன் காரணமாக 2022 ஆம் ஆண்டில் சராசரி கட்டளைக்குரிய அலகு விலையான ரூபா 35.98 விலை இதன் போது ரூபா 290 வரை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் மேலதிகமாக செலவிட வேண்டி ஏற்பட்ட கிரயம் ரூபா 21.083 மில்லியன் ஆகும். இது 706 சதவீத அளவிலான விலை அதிகரிப்பு முரணாகும்.

(ஈ) இலக்கம் 2022/SPC/E/R/P/00603 இன் இந்த மருந்துகளில் 160,000 அலகுகள் கட்டளை விநியோகிக்கப்பட்டது. ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு அலகொன்று ரூபா 68.59 வீதம் NMRA சான்றிதழ் அல்லது WOR பெற்றுக் கொள்வதன் கீழ் கையளிப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்ட போதும், இந்த கட்டளை தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கான சான்றுகளோ கோவையில் காணப்படவில்லை. அவ்வாறே சுகாதார பிரிவு அவசர பெறுகைக் குழு வழங்கிய மேற்கூறப்பட்ட தீர்மானத்திற்காக அமைச்சரவையின் மேவுகை அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) இலக்கம் 2022/SPC/E/R/P/00702 என்ற 83,000 அலகுகளுக்காக ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்தில் இருந்து 0.5 சதவீத விலை குறைப்பதற்காக இணங்கியிருந்தமையால் மற்றும் 03 வாரத்திற்குள் மருந்துகளை வழங்குவதற்கு இணங்கியிருந்தமையால் கட்டளை கையளிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. செயலாற்றல் பிணை முறி மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை கோவையில் உள்ளடக்கப்படவில்லை. கட்டளை கையளித்தன் பின்னர் ஒரு மாத காலத்திற்குள் WOR சான்றிதழ் கோருவதற்காக எடுக்கப்பட்டிருந்ததுடன், அதனை பெற்றுக் கொள்வதற்காக 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. WOR சான்றிதழ் விநியோகிக்கப்பட்ட திகதியில் இருந்து 06 மாதம் அளவில் செல்லுபடியாக இருந்தமையால் திசெம்பர் 01 வரையில் இந்த மருந்து இருப்புக்கள் கிடைக்க வேண்டிய போதிலும், 2023 நவம்பர் 30 வரையிலும் மருந்து கிடைக்காமையினால் மீண்டும் WOR சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) இலக்கம் 2022/SPC/E/R/P/00730 என்ற 250,000 அலகுகள் கட்டளைக்காக பதிவு செய்த வழங்குனரிடம் இருந்து கேள்வி கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 05 நிறுவனங்களில் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், பெறுகைக் குழு கூட்டம் இந்த கட்டளைகளுக்கு இடையே தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவுடன் அலகொன்றின் விலை ரூபா 250 சமர்ப்பித்த நிறுவனம் மருந்து வழங்குவதற்காக எடுக்கப்பட்ட காலத்திற்காக இணங்கியிருக்காமையினால் மருந்து அலகொன்றின் விலை ரூபா 102.27 ஆக கேள்வி சமர்ப்பித்த நிறுவனத்திற்கு WOR

சான்றிதழ் பெற்றுக்கொள்வதன் கீழ் கட்டளை வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவலின் படி இந்த நிறுவனத்திற்கு 2023 நவம்பர் 20 ஆம் திகதி வரையிலும், WOR சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவசர கட்டளையாக கையளிக்கப்பட்ட இந்த கட்டளைக்காக 2023 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் மருந்து கிடைத்திருக்கவில்லை.

(எ) 83,000 அலகுகள் மற்றும் 250,000 அலகுகள் அவசர கொள்வனவுகள் விநியோகிக்கப்பட்டிருக்கும் போது மீண்டும் இலக்கம் 2022/SPC/E/R/P/00744 என்ற 250,000 அலகுகள் அவசர கட்டளையொன்று மருத்துவ வழங்கல் பிரிவினால் விநியோகிக்கப்பட்டிருந்தது. திணைக்கள குழு எல்லையில் பதிவு செய்த மற்றும் முன்னைய வழங்குனரிடம் இருந்து கேள்வி கோருவதற்கு பெறுகைக் குழு தீர்மானித்திருந்தத. மதிப்பீட்டு அறிக்கையின் மூலம் முறையான மற்றும் குறித்துரைத்த பரிந்துரைகள் வழங்கப்படாதிருந்ததுடன், குழு அங்கத்துவர்களின் பெயர் பதவி குறிப்பிடப்படாமல் உரிய அறிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது. பெறுகைக் குழு கூடி இந்த பெறுகைகளுக்கு இடையே ஆகக் குறைந்த அலகு விலையான ரூபா 99 சமர்ப்பித்த தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்த நிறுவனத்தில் இருந்து விலையை குறைத்து மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2023 சனவரி 12 ஆம் திகதி பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், 2023 மார்ச் 13 ஆம் திகதி 249,990 அலகுகள் வழங்க வேண்டி இருந்தது. 247,440 அலகுகள் அதாவது 2,550 அலகுகள் குறைத்து 2023 ஏப்ரல் 04 ஆம் திகதி கிடைத்திருந்தது. 2023 மே 29 ஆம் திகதி வழங்குனருக்கு 22 நாட்கள் தாமதம் அடைந்ததன் காரணமாக அறவிட வேண்டிய தண்டப் பணமாக ரூபா 2,449,656 வரவு தாள் அனுப்பப்பட்டிருந்தது. வழங்குனரால் 2023 யூன் 01 ஆம் திகதி முடிவிப்பதற்கான விடயங்களை காண்பித்து கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன், மீண்டும் 2023 ஆகஸ்ட் 04 ஆம் திகதி கடிதம் ஒன்று சமர்ப்பித்து இந்த மிகுதி 2,550 இருப்பை வழங்க முடியாததாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த கொடுப்பனவை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய தகவல்கள் கோவையில் உள்ளடக்கப்படவில்லை.

(ஏ) 2023 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளை 2022 சனவரி மாதம் விநியோகிக்க வேண்டியிருந்த போதும், 10 மாத தாமதத்துடன் 500,000 அலகுகளின் கட்டளை 2022 நவம்பர் 16 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது, தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கீழ் பதிவு செய்த வழங்குனரிடம் இருந்து கேள்வி கோருவதற்கு பெறுகைக் குழு தீர்மானம் எடுத்திருந்ததுடன், மதிப்பீட்டு அறிக்கையின் படி முறையான மற்றும் குறித்துரைத்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கட்டளை விநியோகித்து கேள்வி மதிப்பிடுவதற்காக 04 மாத காலம் எடுத்திருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரையின் பின்னர் பெறுகைக் குழு கூட்டத்திற்காக 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்ததுடன், பெறுகை மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு பின்னர் கட்டளை கையளிப்பதற்காக 55 நாட்களுக்கு அண்மித்த காலம் எடுத்திருந்தது. பொருள் அனுப்பல் கோரிக்கையின் பிரகாரம் 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையில் 250,000 அலகுகள் கிடைக்க வேண்டியிருந்த போதிலும், தரவு முறைமையின் பிரகாரம் 2023 நவம்பர் 28 வரையிலும் அந்த மருந்து இருப்பு கிடைத்திருக்கவில்லை.

(ஐ) இலக்கம் 2023/SPC/X/R/P/00191 என்ற 600,000 அலகுகளின் கட்டளைக்காக கேள்வி திறக்கப்பட்டிருந்ததுடன், 08 நிறுவனங்களால் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கேள்விதாரரால் ரூபா 95.89 விலையாக சமர்ப்பிக்கப்பட்ட அலகொன்றின் விலை 95.79 வரை குறைப்பதற்கு இணங்கியிருந்தது. செயலாற்றல் பிணை முறி கோவையின் பிரகாரம் வழங்கப்படாதிருந்ததுடன், ஸ்வஸ்ட முறைமையின் பிரகாரம் இந்த இருப்பு கிடைக்க வேண்டிய இருப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. கேள்வி சமர்ப்பிப்பதற்காக 02 வரையான காலம் வழங்கப்பட்டிருந்தது. இந்த பெறுகை தீர்மானத்திற்காக அமைச்சரவையின் மேவுகை

அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், அந்த அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. பெறுகை மதிப்பீட்டு நடவடிக்கைகளின் பின்னர் கட்டளை கையளிப்பதற்காக 70 நாட்களுக்கு அண்மித்த காலம் எடுத்திருந்தது. மருந்தின் ஆயட் காலம் 24 மாதங்களாக குறிப்பிடப்பட்ட போதிலும், பொருள் அனுப்பல் கோரிக்கையில் அது 12 மாதங்களாக காண்பிக்கப்பட்டமை கணக்காய்வின் பொது போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ஒ) இலக்கம் 2023/SPC/E/R/P/00204 என்ற 300,000 அலகுகளின் கட்டளைக்காக கேள்வி கோரி 2023 செப்டம்பர் 14 ஆம் திகதி கேள்வி திறக்கப்பட்டிருந்ததுடன், 07 நிறுவனங்களால் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரர் பதிவு செய்த வழங்குனர் அல்லாதிருந்தமையால் மற்றும் இரண்டாவது ஆகக் குறைந்த விலையான ரூபா 108.31 சமர்ப்பித்த பதிவுடன் முன்னைய வழங்குனர் நிறுவனம் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. பெறுகைக் குழு கூட்டு குறிப்புக்களின் பிரகாரம் இந்த மருந்து மேலும் ஒரு மாத காலத்திற்காக மாத்திரம் போதியளவாக காணப்படுகின்றமை காண்பிக்கப்பட்டிருந்ததுடன், பரிந்துரையாக ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்தின் கூறுவிலையை குறைத்துக் கொள்வதற்கும், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவினை உறுதிப்படுத்த வேண்டும் என காண்பிக்கப்பட்டிருந்ததுடன், கோவையில் இந்த குறிப்புக்கள் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. கேள்வி சமர்ப்பிப்பதற்காக 03 நாள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. கேள்வி திறந்து 40 நாட்கள் கடந்திருந்த போதிலும், 2023 திசெம்பர் 04 கணக்காய்வு திகதி வரையிலும் வழங்குனரை தெரிவு செய்து கொள்வதற்கு முடியாமையின் காரணமாக கட்டளை கையளிக்கப்படவில்லை.

(ஓ) 2023 திசெம்பர் 07 இல் உள்ளவாறு மருந்தில் 1,919,416 அலகை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தமை ஸ்வஸ்ட முறைமையின் பிரகாரம் காண்பிக்கப்பட்டிருந்தது, எனினும் இந்த அலகுகளின் எண்ணிக்கை தயாரிக்கப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் இந்த முறைமையில் உள்ளடக்கப்படவில்லை.

(ஔ) 2024 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளை 2023 சனவரி மாதம் விநியோகிக்பட வேண்டிய போதிலும், அந்த கட்டளை 2023 நவம்பர் இறுதி வரையும் விநியோகிக்கப்படவில்லை. இந்த மருந்தின் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் உரிய சராசரி கட்டளை குறித்துரைத்த பிரகாரம் முறையாக எதிர்வு கூறலின் அடிப்படையில் விநியோகிக்கப்படாத சந்தர்ப்பங்கள் சிலவற்றின் போது அவசர கட்டளை விநியோகித்ததன் காரணமாக மிகவும் சிறந்த போட்டியாளர்களிடம் இருந்து குறைந்த விலையில் மருந்துகளை பெற்றுக் கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்ததுடன், 2024 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளை குறித்துரைத்த திகதியில் விநியோகிக்காமையின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டின் போது இந்த மருந்துகள் சராசரி கிரயத்தை விட அதிக கிரயத்தில் அவசர கொள்வனவின் கீழ் கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

60. **<u>Cytarabine Inj 100mg/5ml (SR01201701)</u>**

லியூகேமியா அவை சீர்படுத்துவதற்காக ஏனைய அங்கீகரிக்கப்பட்ட புற்றுநோய் ஒழிப்பு மருந்துகளுடன் ஒன்றிணைந்து தடுப்பூசி பெற்றுக்கொள்கின்ற மருந்தான இந்த மருந்தில் 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை மருத்துவ வழங்கல் பிரிவினால் 29,500 தடுப்பூசி அலகுகளை கொள்வனவு செய்வதற்காக 07 கட்டளைகள் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. அந்த 07 கட்டளைகளுக்கான பெறுகைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் அதில் ஒரு கட்டளையிலிருந்தும் மருந்தைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஒக்டோபர் 19 ஆம் திகதி வரை இருப்பு பூச்சிய நிலையில் அவதானிக்கப்பட்டது. இந்த இருப்புக்கள் பூச்சிய நிலைமை ஏற்படுவதற்கு பெறுகைச் செய்ற்பாடுகளின் போது ஏற்பட்டிருந்த பின்வரும் விடயங்கள் காரணமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) இலக்கம் 2020/SPC/A/R/P/00168 என்ற கட்டளை மற்றும் DHS/RP/408/2020 என்ற பெறுகையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்கு அனுப்பப்பட்ட கேள்வி அறிவித்தல்களுக்கு இடையே 12 வெளிநாட்டு கம்பனிகள் நேரடியாக அனுப்பப்பட்ட 11 பெக்ஸ் மற்றும் இலக்கம் 2023/SPC/N/R/P/00081 என்ற கட்டளையின் கீழ் வழங்குநருக்கு அனுப்பப்பட்ட கேள்வி அறிவித்தல்களுக்கிடையே 11 வெளிநாட்டு கம்பனிகளுக்கு நேரடியாக அனுப்பப்பட்ட பெக்ஸ் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலக்கம் 2021/SPC/N/R/P/00020 என்ற கட்டளை மற்றும் DHS/RP/51/2021 பெறுகையின் கீழ் வழங்குநரால் மாதிரிகள் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் தெரிவு செய்யப்பட்ட வழங்கல் மாதிரி பெறுகைகள் திறக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலக்கம் 2021/SPC/N/R/P/00020 இன் கீழ் தெரிவு செய்யப்பட்ட வழங்குநரால் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பதிவினை புதுப்பிப்பதற்காக பணம் செலுத்தப்பட்டிருந்த போதும் அந்தப் பதிவினைப் புதுப்பிப்பதற்குரிய ஆவணங்கள் 220 நாள் காலம் எடுத்திருந்த போதும் 2023 ஒக்டோபர் 19 ஆந் திகதி வரையிலும் உரிய பதிவினைப் புதுப்பிக்கும் சான்றிதழ் விநியோகிப்பதற்கு தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு முடியாதிருந்தது.

(ஈ) கட்டளை இலக்கம் 2022/SPC/E/R/P/00744 இன் கீழ் 750 தடுப்பூசிக் குப்பிகளைக் கொள்வனவு செய்வதற்கு உரிய தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவினை விடுவிக்கும் சான்றிதழின் அடிப்படையில் தடுப்பூசிக் குப்பியொன்று ரூபா 1,700 சமர்ப்பித்த M/S Tabrane வழங்குநருக்கு கையளிக்கப்பட்ட போதும் வழங்குநரின் மூலப்பொருள் பற்றாக்குறையின் அடிப்படையில் 2023 சனவரி 16 ஆம் திகதி பெறுகைகளிலிருந்து கேட்டு விலகியிருந்தார். அதன் பிரகாரம் மீண்டும் கோரப்பட்ட கேள்விக்கு முன் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவை விடுவிக்கும் சான்றிதழின் அடிப்படையில் சமர்ப்பித்த ஆகக்குறைந்த இரண்டாவது கூறுவிலையான தடுப்பூசி குப்பி ஒன்று ரூபா 670 ஆக சமர்ப்பித்த மேற்கூறப்பட்ட வழங்குநருக்கு கையளிப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது. அந்த வழங்குநர் மேற்கூறப்பட்ட பிரகாரம் கேட்டு விலகியிருக்கும் போது மீண்டும் கேள்வி கோரும் போது அந்த வழங்குனருக்கு மருந்தினைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை காணப்பட்டதா என கண்டறியாமல் பெறுகைக் குழு பொறுப்புக்கள் இன்றி அந்த வழங்குநருக்கு இந்த பெறுகை கையளிப்பதற்கு 2023 மார்ச் 02 ஆந் திகதி அங்கீகரித்திருந்தது. மேலும் வழங்குநர் Cytarabine Inj 100mg/ ml விண்ணப்பித்திருந்ததாகவும் கூட்டுத்தாபனம் Cytarabine Inj 100mg/5ml கோரியிருந்தாகவும் 2023 யூன் 01 ஆம் திகதி வழங்குநர் அறிவித்ததன் அடிப்படையில் ஏற்பட்ட பிரச்சினையான நிலைமையின் அடிப்படையில் உரிய விடயங்கள் தொடர்பாக 2023 யூன் 06 ஆம் திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து மற்றும் அது தொடர்பாக எந்தவொரு தீர்மானத்தையும் எடுப்பதற்கும் 2023 செப்டெம்பர் 03 இல் உள்ளவாறு 89 நாட்கள் கடந்த பின்னர் Cytarabine Inj 100mg/ ml மாத்திரைகள் கொள்வனவு செய்வதற்காக 2023 செப்டெம்டபர் 26 ஆம் திகதி பதிவு விடுவித்தல் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு கோரப்பட்டிருந்தது.

(உ) கட்டளை இலக்கம் 2023/SPC/N/R/P/00081 இன் கீழ் தடுப்பூசிக் குப்பி 1,500 கொள்வனவு செய்யும் கேள்வி அழைப்பிற்கு தடுப்பூசி ஒன்று ரூபா 1,310 ஆக சமர்ப்பித்த வழங்குநருக்கு ஆகக் குறைந்த இரண்டாவது கேள்விக்கு பதிவு விடுவித்தல் சான்றிதழ் (WOR) பெற்றுக் கொள்வதன் கீழ் 2023 மே 23 ஆம் திகதி திணைக்கள சிறு பெறுகைக் குழு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும்

பெறுகைகளுக்காக வழங்குநர் Cytarabine Inj 100mg/ ml ஆக இருந்தமை 2023 யூன் 20 ஆம் திகதி வழங்குநரால் அறிவிக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்ட இரண்டு கட்டளைகளும் கையளிக்கப்பட்ட வழங்குநருக்கு மூலப்பொருள் இல்லாமையின் அடிப்படையில் மற்றும் கூட்டுத்தாபனத்தால் கட்டளையிடப்பட்ட மருந்துகளில் அந்த மாத்திரை காணப்படாதிருந்த மையின் காரணமாகக் கொண்டு மருந்தை வழங்குவதற்கு முடியாதிருந்த பின்புலமாக இருந்த இந்தக் கட்டளை வழங்குநருக்கு கையளிப்பதற்கு பெறுகைக் குழு எடுத்த தீர்மானம் தொடர்பாக கணக்காய்வில் பிரச்சினையுடனான நிலைமை காணப்பட்டது.

(ஊ) கட்டளை இலக்கம் 2023/SPC/X/R/P/00191 இன் கீழ் 1,500 தடுப்பூசிக் குப்பிகளை கொள்வனவு செய்யும் கேள்வி அழைப்பிற்கு குப்பியொன்று ரூபா 1,025 (விலை இணக்கத்தின் பின்னர்) பெறுமதியில் சமர்ப்பித்த ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுச் சான்றிதழுடன் ஆகக் குறைந்த இரண்டாவது கேள்விதாரருக்கு பெறுகை கையளிப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சுகாதார அமைச்சின் அவசர பெறுகைக்குழுவினால் 2023 யூன் 28 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் ஆகக் குறைந்த விலையான அலகொன்று ரூபா 950 ஆக சமர்ப்பித்த கேள்விதாரரின் ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவுச் சான்றிதழ் 2022 மே 20 ஆம் திகதி காலாவதியாகியிருந்த போதும் அதனை மீண்டும் புதுப்பிப்பதற்காக சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக கவனத்திற் கொள்ளாமல் ஆகக் குறைந்த கேள்விதாரர் நிராகரிக்கப்பட்டிருந்தார்.

61. <u>Methylene Blue injection W/V 10 ml Ampoule 500 mg (SR - 01601201)</u>

(அ) இந்த மருந்தில் 750 அலகுகளை கொள்வனவு செய்வதற்காக 2022 ஒக்டோபர் 28 ஆம் திகதி இலக்கம் 2022/SPC/V/R/P/00715 என்ற கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2022 ஆகஸ்ட் 25 ஆம் திகதி இலக்கம் 2022/MSD/E/R/P/00041 என்ற கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த கட்டளை எமது கோவையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், 2023 நவம்பர் 17 ஆம் திகதி வரையிலும் மேற்கூறப்பட்ட கொள்வனவுகள் இரண்டும் ஸ்வஸ்ட முறைமையில் விநியோகித்தல் உரிய பிரகாரம் விநியோகிக்கப்பட்ட கட்டளையாக காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 4,000 அலகுகள் 2022 இன் சராசரி கேள்வி 2021 பெப்ரவரி 02 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 17 ஆம் திகதி கணக்காய்விற்கு ஸ்வஸ்ட முறைமையின் பிரகாரம் இந்த கட்டளையின் கீழ் 4,000 அலகுகள் கிடைக்க வேண்டியிருந்தமை இருப்பாக வெளிப்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்தவர்களிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு பரிந்துரையை கவனத்தில் கொள்ளாமல் பெறுகைக் குழு அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்பட்டதன் காரணமாக 2022 ஆம் ஆண்டில் மருந்துகளை பெற்றுக் கொள்வதற்கு ஏற்படுகின்ற கட்டளைக்காக 2023 ஆம் ஆண்டின் போது மீண்டும் கூறுவிலை கோர வேண்டி ஏற்பட்டிருந்தது.

(இ) இலக்கம் 2022/SPC/E/R/P/00500 என்ற 250 அலகுகளின் கட்டளை 2022 யூன் 30 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. சுகாதார பிரிவின் அவசர பெறுகைக் குழுவின் தீர்மானத்தின் படி 2022 யூலை 15 ஆம் திகதி பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்ட கேள்விதாரரின் பிரகாரம் கேள்வி கோருவதன் பிரகாரம் கேள்வி சமர்ப்பித்தல் முடிவடையும் திகதி 2022 யூலை 22 ஆகும். 2022 ஆகஸ்ட் 16 ஆம் திகதி பெறுகைக் குழு கூடியிருந்ததுடன், ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு அலகொன்று ரூபா 6,100 விலையில் இந்த கட்டளை கையளிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துடன், 2022 செப்டம்பர் 02 ஆம் திகதி பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த பெறுகைக் குழு தீர்மானத்திற்காக அமைச்சரவை

மேவுகை அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான சான்றுதழ் கோவையில் உள்ளடக்கப்படவில்லை. இந்த ஔடதங்களில் 25 அலகுகள் ரூபா 56,000 விலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த மருந்துகள் மதிப்பீடு செய்யப்பட்ட அலகொன்றின் விலை ரூபா 17,000 ஆனமையால் சராசரி கட்டளையின் போது ஏற்றுக் கொள்ளக் கூடிய விலை அலகொன்று ரூபா 6,500 ஆக இருந்தமையால் அவசர கொள்வனவுகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட அலகொன்றின் விலை ரூபா 6,100 ஆனமையால் உள்நாட்டு ரீதியில் பிரச்சினை பிரதேச ரீதியில் அலகொன்று ரூபா 1,600 மற்றும் ரூபா 2,400 ஆனமை கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ஈ) 2022 சனவரி வரையில் விநியோகிக்க வேண்டிய சராசரி கட்டளைக்குரிய கட்டளை கட்டுப்பாட்டு பத்திரம் 2022 யூன் மாதம் தயாரித்து மருந்து கட்டளை விநியோகிக்க வேண்டியதில்லை என தீர்மானிக்கப்பட்டு குறித்துரைத்த திகதியினை விட 11 மாதங்களுக்கு பின்னர் 2022 நவம்பர் 15 ஆம் திகதி 750 அலகுகள் 2023 இன் சராசரி கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. கட்டளை விநியோகிக்கப்பட்டதன் பின்னர் கேள்வி கோருவதற்காக 03 மாதங்களுக்கு அண்மித்த காலம் எடுத்திருந்தது. கேள்வி திறந்து மதிப்பிடல் 2023 மார்ச் 07 மற்றும் 08 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்காக 03 வாரங்களுக்கு அண்மித்த காலம் எடுத்திருந்தது. மதிப்பீட்டு அறிக்கையின் படி உரிய அங்கத்தவரின் பெயர், பதவிகள் குறிப்பிடப்படாமல் கையொப்பமிடப்பட்டிருந்தது. 2023 மார்ச் 23 ஆம் திகதி கூடியிருந்த பெறுகைக் குழுவினால் அலகொன்றுக்காக ரூபா 4,408.18 ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு நிறுவனம் ஒன்றாக இருந்தமையால் அந்த நிறுவனத்தின் முகவரை அழைத்து விலைகளை கலந்துரையாடுவதற்கு விலைகளை குறைப்பதற்கும் அது தொடர்பாக கலந்துரையாடுதல் பொருத்தமாக இருக்கும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 2023 யூன் 01 ஆம் திகதி மீண்டும் பெறுகைக் குழு கூடியிருந்ததுடன், ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் விலை குறைப்பதற்காக இணங்காதிருந்தமையால் அலகொன்றுக்காக ரூபா 6,659.32 தொகை இரண்டாவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்தின் கூறுவிலை குறைத்தல் தொடர்பாக விசாரனை செய்து தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன், கோவையில் இந்த தீர்மானம் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த கட்டளை 2022 நவம்பர் 15 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட போதிலும், ஸ்வஸ்ட முறைமையின் பிரகாரம் இந்த கட்டளை 2022 யூன் 23 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட கட்டளையொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது அவசர கொள்வனவாக இந்த மருந்தில் அலகொன்று ரூபா 6,100 விலையில் கொள்வனவு செய்திருக்கும் போது 2023 இன் சராசரி கட்டளைக்காக சமர்ப்பிக்கப்பட்ட அலகொன்றிற்கான ரூபா 4,408.18 விலையை மேலும் குறைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்ட போதும் அதற்காக இணங்காமையின் காரணமாக இரண்டாவது ஆகக் குறைந்த விலையான ரூபா 6,659.32 சமர்ப்பித்த கேள்விதாரருக்கு அனுப்பி விலையினைக் குறைப்பதற்கு முயற்சி எடுத்தல் அந்த வழங்குனருக்கு இந்த கேள்வி கையளிப்பதற்காக எடுத்த முயற்சியாக இருந்தமையை கணக்காய்வின் போது புறந்தள்ள முடியாதிருந்தது.

(உ) 2023 நவம்பர் 21 இல் உள்ளவாறு இந்த மருந்துக்கு உரிய தேசிய மட்டத்தில் இருப்பில் 254 அலகுகள் இருந்ததுடன், 2024 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளை 2023 சனவரி மாதத்தின் போது வழங்க வேண்டிய போதும் 2023 நவம்பர் 21 ஆம் திகதி வரையிலும் அந்த கட்டளை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு திகதியில் உள்ளவாரு கிடைக்க வேண்டியதாக காண்பிக்கின்ற 25,020 அலகுகளின் மருந்து இருப்பு கிடைக்காமல் குறிப்பாக காணப்படாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டமையால் இந்த நிலைமையில் 2024 ஆம் ஆண்டின் போது அவசர கொள்வனவாக அனுப்ப வேண்டி ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

62. <u>Exemestane Tab. 25mg (SR 01207901)</u>

(அ) 2020 முதல் 2023 மே 31 வரை இந்த மருந்தில் மதிப்பீடு செய்யப்பட்ட அளவு, கட்டளையிடப்பட்ட அளவு, மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்த அளவு பயனப்டுத்தப்பட்ட அளவு தொடர்பாக அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் 2019 முதல் 2023 வரையான காலத்தில் விநியோகிக்கப்பட்ட 06 கட்டளைகளுக்குரிய 248,500 அலகுகள் கிடைக்க வேண்டியிருந்தமை கட்டளையாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், 2023 நவம்பர் 17 ஆம் திகதியில் உள்ளவாறு ஸ்வஸ்ட முறைமையில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய கூட்டுமொத்தமாக 65,500 அலகுகள் 02 கட்டளைகள் மாத்திரம் கிடைக்கக் கூடியதாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஸ்வஸ்ட முறைமை இலக்கம் 2022/SPC/V/R/P/00690 என்ற 15,500 அலகுகளுக்கு கட்டளை விநியோகிக்குமாறு காண்பிக்கப்பட்ட போதும், அந்த கட்டளைக்குரிய மருந்து அளவுகள் ஸ்வஸ்ட முறைமையில் பெறவேண்டியிருந்த கட்டளையாக (Pending Orders) காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2021 ஆம் ஆண்டிற்காக விநியோகிக்கப்பட்ட சராசரி கட்டளைக்குரிய அலகுகள் 122,500 ஆக மருந்து இருப்பு பெற வேண்டிய கணக்கில் 2022 சராசரி கட்டளை விநியோகிக்கப்படாதிருந்ததுடன், 2023 நவம்பர் 15 ஆம் திகதி வரையிலும் அந்த இருப்புக்கள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைக்கப்பெறவில்லை. 2022 ஆம் ஆண்டிற்கான சராசரி கட்டளை விநியோகிக்கப்படாதிருந்த போதும், கூட்டு மொத்தமாக 20,500 அலகுகள் 02 கட்டளைகளில் அவசர அடிப்படையில் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதி அமைச்சினால் சுகாதார பிரிவில் அவசர பெறுகை செயற்பாடுகளுக்காக (HSEPP) அறிமுகப்படுத்தப்பட்ட ஆலோசனைகளுகளின் (Guideline) பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்காக 2022 யூன் 28 ஆம் திகதி இலக்கம் 2022/SPC/E/R/P/00469 என்ற 5,000 அலகுகள் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. இரண்டு கேள்வி தாரர்களால் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 ஆகஸ்ட் 29 ஆந் திகதி சுகாரதாரப் பிரிவின் அவசர பெறுகைக் குழு அங்கதத்வர்களினால் கேள்வி கையளிப்பதற்கு தீர்மானம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த தீர்மானத்திற்குரிய அமைச்சரவை மேவுகை அங்கீகாரம் கோவையில் உள்ளடக்கப்படவில்லை.

(உ) இலக்கம் 2022/MSD/V/R/P/00110 என்ற 15,500 அலகுகள் கட்டளை 2022 நவம்பர் 01 ஆந் திகதி விநியோகிக்ககப்பட்டிருந்தது. கொள்வனவு கட்டளை 2022 நவம்பர் 30 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. கொள்வனவு கட்டளையின் படி 2022 திசெம்பர் 30 ஆந் திகதி மருந்து வழங்க வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் 16 வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு உரிய மருத்துவ இருப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. கேள்வி ஆவணங்களில் செயலாற்றல் பிணை முறியை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக பிரிவு குறிப்பிப்படாது இருந்ததுடன் 2022 நவம்பர் 02 ஆந் திகதி சுகாதார அமைச்சு செயலாளரால் தமது அதிகாரத்தை மீறி செயலாற்றல் பிணை முறியிணை பெறப்படாதிருந்தமைக்கும் மற்றும் உடன்படிக்கை - இருந்தாகவம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த இருப்பு வழங்க பெறப்படாமை இருந்ததாக எந்தவொரு மேவுகை அமைச்சரவைக்கு உரித்தாகி இருக்கவில்லை.

(ஊ) 2021 ஆம் ஆண்டில் சராசரி கேள்விக்குரிய மருந்து இருப்பு கிடைக்க வேண்டிய அடிப்படையில் 2022 ஆம் ஆண்டிற்குரிய சாசரி கட்டளை விநியோக்கிக்காமல் 2022 ஆம் ஆண்டின் போதும் அவசர கொள்வனவுக்காக நடவடிக்கை எடுத்திருக்கும் போது 2021 ஆம் ஆண்டிற்குரிய மருந்து பெற வேண்டியதாக மேலும் கருதி 2023 ஆம் ஆண்டிற்காகவும் சராசரி கட்டளை விநியோகிக்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கபட்டதுடன் 2023 ஆம் ஆண்டிற்காக சராசரி கட்டளை விநியோகிக்கப்பட வேண்டிய திகதிக்கு 11 மாதங்களுக்கு பின்னர் 30,000 அலகுகள் வழங்குவதற்காக 2022 நவம்பர் 23 ஆம் திகதி சராசரி கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது.

(எ) சராசரி கட்டளை குறித்துரைத்த திகதியின் போது வழங்கப்பட்டிருக்குமாயின் திறந்த விலை கோரலின் கீழ் பெறுகைகளை அமுல்படுத்துவதற்கு முடியுமாக இருந்த போதும் காணப்படுகின்ற அவசர நிலைமை 07 நாட்களுக்குள் பதிவு செய்த மற்றும் முன்னைய வழங்குனரிடமிருந்து கூறு விலைகள் கோரலின் கீழ் கேள்வி கோருவதற்கு பெறுகை குழு கட்டளை விநியோகித்து 30 நாட்களின் பின்னர் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த அங்கீகாரத்தில் 56 நாட்களுக்கு பின்னர் பதிவு மற்றும் முன்னைய வழங்குனருக்கு 2023 பெப்ரவரி 16 ஆந் திகதி பெக்ஸ் மூலம் கேள்விதாரருக்கு அறிவித்திருந்ததுடன் கேள்விதாரர்களுக்கு பதில் அளிப்பதற்கு நியாயமான காலம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இலக்கம் 2023/SPC/X/R/P/00191 என்ற 50,000 அலகுகளின் கட்டளை நிதி அமைச்சினால் சுகாதார பிரிவில் அவசர பெறுகை செயற்பாடுகளுக்காக (HSEPP) அறிமுகப்படுத்தப்பட்ட ஆலோசனைகளுகளின் (Guideline) பிரகாரம் இந்திய கடன் முன்மொழிவு திட்டதின் கீழ் 2023 மே 25 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. கட்டளையில் இருந்து 20 நாட்களுக்கு பின்னர் கேள்வி சமர்ப்பிப்பதற்கு அழைப்பு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 02 நாட்கள் கேள்வி காலம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. கேள்விதாரர் இருவரும் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் பெற்றிருக்கவில்லை. அதன் பிரகாரம் மிகுதி கேள்விதாரர்களினால் ஆகக் கூடிய கேள்வி பெறுமதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கேள்வி திறக்கப்பட்ட திகதியில் 11 நாட்களுக்கு பின்னர் 2023 யூன் 27 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை மற்றும் யூன் 28 ஆந் திகதி சுகாதாரப் பிரிவின் அவசர பெறுகை குழு அங்கத்தவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் அந்த கேளிவிதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் பெறுகை தீர்மானத்திற்காக அமைச்சரவை மேவுகை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டமைக்கான சான்றுகள் கோவையில் உள்ளடக்கப்படவில்லை.

(ஐ) கேள்வி கையளித்தல் 71 நாட்களுக்கு பின்னர் 2023 செப்தெம்பர் 07 ஆந் திகதி அலகொன்று ரூபா 1,286.17 வீதம் கொள்வனவு செய்வதற்காக கொள்வனவு கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 50,000 அலகுகள் 2023 நவம்பர் 30 ஆந் திகதி வரையில் வழங்குமாறு காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 2023 யூன் 15 மற்றும் ஆகஸ்ட் 15 ஆம் திகதிகளில் 25,000 அலகுகள் வீதம் மருந்து வழங்குமாறு முறைமை மூலம் கட்டளை வழங்கப்பட்டிருந்ததுடன் கேள்வி ஆவணங்களின் பிரகாரம் ஒரு மாதத்திற்குள் 50,000 வழங்க வேண்டியிருந்தமையும் காண்பிக்கப்பட்டிருந்தது. கட்டளை விநியோகிக்கப்பட்ட சந்தர்ப்பம் வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவுக்குச் சொந்தமான மருந்து இருப்புக்கள் காணப்படாதிருந்த சந்தர்ப்பத்தில் மருந்து இருப்பு "உடனடியாக" வழங்குமாறு கட்டளை விநியோகிக்காதிருந்தமையும் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. 2023 நவம்பர் 17 கணக்காய்வு திகதி வரையிலும் வழங்குனர் செயலாற்றல் பிணைமுறியினை வழங்காதிருந்ததுடன் வழங்குனருடன் ஒப்பந்த உடன்படிக்கை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2024 ஆம் ஆண்டிற்காக சராசரி கட்டளை அளவை தீர்மானிப்பதற்காக கட்டளை கட்டுப்பாட்டு பத்திரம் 2023 நவம்பர் 17 ஆந் திகதி வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்காக கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தா என்பது தொடர்பாக தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமையில் 2024 ஆம் ஆண்டின் போது அவசர கொள்வனவிற்காக அனுப்புவதற்கு ஏற்படுத்த இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

63. <u>Thalidomide Capsule 100mg (SR - 01206401)</u>

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2019 முதல் 2023 வரையான காலத்தில் விநியோகிக்கப்பட்ட 07 கட்டளைகளுக்குரிய கூட்டு மொத்தமாக 447,463 அலகுகள் பெற வேண்டிய கட்டளையாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 2023 நவம்பர் 17 இல் உள்ளவாறு ஸ்வஸ்ட

முறைமையில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய கூட்டு மொத்தமாக 156,500 அலகுகள் 02 கட்டளைகள் மாத்திரம் கிடைக்க வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 21 இல் உள்ளவாறு ஸ்வஸ்ட முறைமை தற்போது காணப்படுகின்ற இருப்புக்கள் தொடர்பான விபரங்களில் (Availability) கிடைக்க வேண்டிய இருப்பாக (Balance Due) 563,500 அலகுகள் காண்பிக்கப்படுவதுடன் அந்த இருப்பு கிடைப்பதற்கு கிடைக்க இருப்பது எந்த வகையான கட்டளைகளுக்கு உரியது என்பது தொடர்பாக குறிப்பாக உரிய தகவல்கள் முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2020 ஆம் ஆண்டிற்காக விநியோகிக்கப்பட்ட 134,463 அலகுகளின் இரண்டு கட்டளைகளுக்குரிய மருந்து இருப்புக்கள் 2023 நவம்பர் 21 ஆந் திகதி வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைக்கப்பெறாது இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் அந்த அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய அல்லது கட்டளை இருப்புக்கள் எதுவும் கிடைக்காது இருக்கின்றமையால் அந்த ஆண்டிற்குரிய விநியோகித்தல் அளவு கட்டளைகளுடன் ஒப்பிடும் போது 13 சதவீதம் மாத்திரம் ஆக இருந்தது.

(இ) 2023 ஆம் ஆண்டிற்காக வைத்திய சாலைகளில் வருடாந்த மதிப்பீடு 175,250 அலகுகளாக இருந்ததுடன் 2023 மே 31 ஆந் திகதியில் உள்ளவாறு விநியோகிக்கப்பட்ட கட்டளைகளின் அலகுகளின் அளலு 241,500 அலகுகள் ஆகும். அத் திகதியில் அந்த அளவு மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது 38 சதவீத அதிகரிப்பாகும்.

(ஈ) ஸ்வஸ்ட முறைமையில் இலக்கம் 2022/SPC/V/R/P/00690 என்ற கட்டளை விநியோகிக்கப்பட்ட கட்டளை ஒன்றாக காண்பிக்கப்பட்ட போதும் அந்த கட்டளைக்குரிய மருந்தின் அளவு ஸ்வஸ்ட முறைமையில் கிடைக்க வேண்டிய கட்டளையாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தயாரிக்கப்பட்ட இணைப்பு கட்டளை கட்டுப்பாட்டு பத்திரத்தின் பிரகாரம் 23,024 அலகுகள் கட்டளை இட வேண்டியிருந்த போதிலும் இந்த மருந்துக்களுக்காக 2022 ஆம் ஆண்டிற்காக சராசரி கட்டளை விநியோகிக்காமைக்கு மருத்துவ வழங்களினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. 2018, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக விநியோகிக்கப்பட்ட கூட்டு மொத்தமாக 412,500 அலகுகள் கட்டளைகளுக்குரிய பெற வேண்டிய இருப்பை அடிப்படையாக கொண்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதி வரையிலும் அதில் 163,463 அலகுகளின் இருப்பு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஊ) இலக்கம் 2022/SPC/X/R/P/00306 என்ற 100,000 அலகுகளுக்கு கட்டளை அவசர தேவையின் அடிப்படை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் ஊடாக அனுப்பப்பட்டிருந்தது. ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்வி தாரர்களுக்கு பெறுகை குழு பரிசோதனை பெறுகை குழு வழங்கியிருந்தது. இந்திய கடன் வசதியின் கீழ் மருந்து இருப்புக்களை வழங்குவதற்காக கடன் இணைப்பு அலகின் அங்கீகாரம் 2022 திசெம்பர் 05 ஆந் திகதி கிடைத்திருந்ததுடன் அங்கீகாரம் கிடைப்பதில் தாமதத்தின் அடிப்படையில் கொன்வனவு கட்டளையில் குறிப்பிடப்படுகின்ற மருந்துக் கட்டளைகள் வழங்கப்பட வேண்டிய திகதியின் பின்னர் 122 நாட்களுக்கு பின்னர் 2023 சனவரி 30 ஆந் திகதி கட்டளை வழங்கப்பட்டிருந்தது. அது வரையில் மருந்து இருப்புக்கள் எஞ்சிய சுழற்சி ஆயுட் காலம் 21 மாதங்களாக இருந்தது. 2022 மார்ச் 26 ஆந் திகதி கட்டளை அவசர அடிப்படையில் விநியோகித்து 310 நாட்கள் அளவிலான காலம் மருந்து இருப்புக்கள் தாமதக்கமாக்கப்பட்டிருந்ததுடன் அவசர தேவை என்ற ‘‘கேள்வி சமர்ப்பிப்பதற்கு 05 நாட்கள் மாத்திரம் வழங்குதல்’’ என்பதற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது.

(எ) இலக்கம் 2022/SPC/E/R/P/00744 என்ற 40,000 அலகுகள் அவசர தேவையின் அடிப்படையில் கட்டளைக்காக fax மூலம் கேள்வி பெறுவதற்கு பெறுகை குழு பரிந்துரை செய்திருந்தது. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவு சான்றிதழ் 2022 மார்ச் 15 ஆந் திகதி முடிவடைந்த அலகொன்று ரூபா 347 ஆவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு விலை இணக்கப்பாட்டின் கீழ் கட்டளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அலகு ஒன்று ரூபா 297 வீதம் கொள்வனவு கட்டளை கேள்வி அங்கீகாரத்தில் 13 நாட்களின் பின்னர் விநியோகிக்கப்பட்டிருந்தது. வழங்குனரால் - முன்னர் 2023 சனவரி 30 இல் மருந்து இருப்புக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் இந்த மருந்தின் ஆகக் குறைந்த ஆயுட் காலம் 24 மாதங்களாக குறிப்பிடப்பட்ட போதிலும் வழங்குனரால் 36 மாத ஆயுள் காலத்துடன் மருந்து இருப்புக்கள் வழங்குவதாக கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் இலங்கைக்கு மருந்து இருப்புக்களை வழங்குகின்ற திகதியில் மருந்தில் எஞ்சிய ஆயுட் காலம் 12 மாத காலத்துடன் வழங்கப்படுவதாக ஒப்பந்த குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 06 மாதம் அளவிலான ஆயுட் காலம் காணப்படுகின்ற மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) அதன் பிரகாரம் கேள்வி நிபந்தனை மற்றும் உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க இணங்காத வகையில் மருந்து இருப்புக்கள் கையேற்கப்பட்டிருந்ததுடன் கேள்வி நிபந்தனைகள் உடன்படிக்கை செய்யும் போது மாற்றத்திற்கும் உட்பட்டிருந்தது. இந்த மருந்துகளுக்காக வழங்குனருக்கு சொந்தமான தேசிய ஔடதங்கள் அதிகார சபையின் பதிவுச் சான்றிதழ் இல்லாதிருந்ததுடன் பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழும் (WOR) காணப்படவில்லை. நிலைமை அவ்வாறு இருக்கும் போது கேள்வி முறைமைகளுக்கு பதிலாக இந்த மருந்துகள் கையேற்கப்பட்டிருந்தது. 2023 மே 04 ஆந் திகதி இந்தக் கட்டளைக்குரிய அலகுகள் கணிப்பீடு நூற்றுக்கு நூறு சதவீதத்தினால் உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அலகொன்று ரூபா 297 வீதம் 40,000 அலகுகள் வழங்குனரிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு சுகாதாரப் பிரிவின் அவசர பெறுகை குழுவினால் 2023 யூன் 13 ஆந் திகதி தீர்மானம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய அமைச்சரவை மேவுகை அங்கீகாரம் பெற்றுகொண்டமைக்கான சான்றுகள் கோவையில் உள்ளடக்கப்படவில்லை. இந்த மருந்துகள் வழங்குவதற்காக மாத்திரம் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் 2023 யூன் 24 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட சான்றிதழின் அடிப்படையில் மருந்து இருப்புக்கள் வழங்கப்பட்டிருந்தது.

(ஐ) இந்த மருந்துகளுக்காக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவு ஒரு வழங்குனரிடமிருந்தான பதிவு 2022 மார்ச் 15 ஆந் திகதியில் முடிவடைந்திருந்ததுடன் தமது பதிவினை புதுப்பிப்பதற்காக 2023 மே 20 ஆந் திகதி விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. மருந்திற்காக பதிவு செய்த வழங்குனர் ஒருவர் இல்லாத நிலையின் கீழ் இந்த விரைவாக கவனத்தில் கொள்ள வேண்டியிருந்தமையால் கணக்காய்வு சந்தர்ப்பமான 2023 திசெம்பர் 01 வரையிலும் ஏழு மாதங்கள் வரையான காலங்கள் கடந்திருந்த போதிலும் தேசிய ஔடதங்கள் அதிகார சபையினால் அதற்கான தீர்மானம் ஒன்று வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2018, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக விநியோகிக்கப்பட்ட கட்டளைகளுக்குரிய 412,500 அலகுகள் மருந்து இருப்பு கிடைக்க வேண்டிய அடிப்படையில் 2022 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளை விநியோகிக்கப்படாமல் 2022 ஆம் ஆண்டின் போது அவசர கொள்வனவாக அமுல்ப்படுத்தப்படும் போது இந்த கட்டளைகளுக்கிடையே 167,523 அலகுகள் பெற வேண்டியதாக மேலும் கருதி 79,534 அலகுகளின் கட்டளையொன்று விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்காகவும் சராசரி கட்டளையொன்று விநியோகிக்காமைக்கு தீர்மானித்தல் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் பொறுப்பிற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஓ) 30,000 அலகுகள் 2023 இன் சராசரி கட்டளை 2022 நவம்பர் 16 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் முறையே 2023 சனவரி 12 மற்றும் ஏப்ரல் 12 ஆந் திகதிகளில் 45,000 அலகுகள் மற்றும் 40,000 அலகுகள் வீதமும் வழங்க வேண்டியிருந்தது. கட்டளை விநியோகித்து 27 நாட்களின் பின்னர் கேள்வி கோருவதற்கு பெறுகை குழு பரிந்துரை செய்திருந்தது. பெறுகை தீர்மானத்தின் 65 நாட்களுக்குப் பின்னர் 2023 பெப்ரவரி 16 ஆந் திகதி பெக்ஸ் மூலம் கேள்வி சமர்ப்பிப்பதற்கு அழைப்பு விடப்பட்டதன் மூலம் இணைய பக்கத்தில் மற்றும் பத்திரிகை அறிவித்தல் மூலம் கேள்வி கோரல் தொடர்பான விபரங்கள் கோவையில் காணப்படவில்லை. 07 நாட்கள் கேள்வி காலத்தில் 05 கேள்விதாரர்கள் கேள்விதாரர் யாவரும் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை செல்லுபடியான பதிவு சான்றிதழ் காணப்படவிலலை.

(ஔ) புற்றுநோய் விசேட வைத்திய நிபுணரின் அலகொண்று ரூபா 90.62 இரண்டாவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரர் பரிந்துரை செய்யப்பட்டிருந்தார் 2023 மார்ச் 24 ஆந் திகதி நடைபெற்ற தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரையின் பிரகாரம் அலகொண்று ரூபா 74.50 ஆகக்குறைந்த கேள்வி சமர்பபித்தல் கேள்விதாரருக்கு தேசிய ஒளடதங்கள் அதிகார சபையின் மருந்து பதிவில் இருந்து தொழில் நுட்ப அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு பரிந்துரை சமர்ப்பித்து இருப்பினும் 25 நாட்களுக்கு பின்னர் மற்றும் 2023 ஏப்ரல் 19 ஆந் திகதி பெறுகை குழு பரிந்துரை வழங்கியிருந்தது. கேள்வி கையளித்தல் 26 நாட்களுக்கு பின்னர் 2023 மே 16 ஆந் திகதி கேள்வி கையளிப்பதற்கு கேள்விதாரருக்கு அறிவிக்கப்பட்டதுடன் 06 நாட்களின் பின்னர் 2023 மே 26 ஆந் திகதி வழங்குனர் கேள்வியை உறுதிப்படுத்தியிருந்தார். எனினும் WOR சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்காக உரிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அவ்வப்போது வழங்குனருக்கு இலத்திரனியல் தபால் ஊடாக அறிவிக்கப்ட்ட போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுததிருக்கவில்லை. இந்த பெறுகைகள் முறையான பிரகாரம் இரத்துச் செய்யப்பட்டிருந்தா, அதற்குரிய பெறுகை தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததா, செயலாற்றல் பிணை முறி பெறப்பட்டிருந்ததா, உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததா போன்ற போன்றவை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவையில் உள்ளடங்கியிருக்கவில்லை.

(க) இலக்கம் 2023/SPC/T/R/P/00146 என்ற 28,500 அலகுகனின் கட்டளை நிதி அமைச்சினால் சுகாதார பிரிவின் அவசர பெறுகை செயற்பாடுகளுக்காக (HSEPP) அறிமுகப்படுத்தப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மூலம் வழங்கப்படுகின்ற நீதியினை பயன்படுத்தி கொள்வனவு செய்வதற்காக விநியோகிக்கப்பட்டிருந்தது. கேள்விதாரர்களுக்கிடையே அலகொன்று ரூபா 79.80 ஆகக்குறைந்த விலையில் வழங்குவதற்கு கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரரின் போதியளவான கையிருப்பொன்று காணப்படாமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல்கள் அதிகார சபையில் மருந்து பதிவில் இருந்து விடுவித்தல் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் அலகொன்று ரூபா 150 இற்கு வழங்குவதற்கு கேள்வி சமர்ப்பிக்க இரண்டாவது கேள்வி சமர்பித்த கேள்விதாரருக்கு மதிப்பீட்டுக்குழு பரிந்துரையின் அடிப்படையில் சுகாதார பிரிவின் அவசர குழு அங்கத்தவர்களினால் கேள்வி கையளிப்பதற்கு தீர்மானம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், இந்த தீர்மானத்திற்குரிய அமைச்சரவை மேவுகை அங்கீகாரம் கோவையில் உள்ளடக்கப்படவில்லை. கொள்வனவு கட்டளை அங்கீகாரத்தில் இருந்து 48 நாட்களுக்குப் பின்னர் 2023 மே 08 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் மருந்து பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழ் (WOR) 2023 மே 19 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் கொள்வனவு கட்டளையில் குறிப்பிடப்பட்ட திகதியில் இருந்து 114 நாட்களுக்குப் பின்னர் வழங்குனரால் 2023 ஒக்டோபர் 05 ஆந் திகதி மருந்து இருப்புக்கள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது.

(கா) நிதி அமைச்சினால் சுகாதாரப் பிரிவின் செயற்பாடுகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த ஆலோசனையின் பிரகாரம் இந்திய கடன் உத்தேச திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதியினை பயன்படுத்தி 2023 மே 25 ஆந் திகதி இலக்கம் 2023/SPC/X/R/P/00191 என்ற 128,000 அலகு கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. அலகொன்று ரூபா 76, ரூபா 164.05, ரூபா 171.5 மற்றும் ரூபா 220 ஆக கேள்வி சமர்பித்த நான்கு கேள்விதாரர்களின் கேள்வி தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செல்லுபடியான பதிவு சான்றிதழ், கையில் உள்ள இருப்புக்கள் மற்றும் வழங்கும் காலம் கேள்வி நிபந்தனைகளுடன் இணங்காமையின் அடிப்படையில் தெரிவிற்கு உட்படுத்தப்படவில்லை.

(கி) அதன் பிரகாரம் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் மருந்து பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழ் பெற்றுக்கொள்வதில் இருந்து அலகொண்று ரூபா 674 அதிகரித்திருந்த கேள்வி சமர்பித்த அதிக விலை சமர்ப்பித்த கேள்விதாரர்ருக்கு கேள்வி திறக்கப்பட்ட திகதியில் இருந்து 11 நாட்களின் பின்னர் 2023 யூன் 27 ஆந் திகதியின் பின்னர் விலை மதிப்பீட்டுக் குழு பரிந்துரையின் அடிப்படையில் சுகாதாரப் பிரிவின் அவசர பெறுகை குழு அங்கத்தவர்களினால் அலகொன்று ரூபா 674 இற்கு வழங்குவதற்கு கேள்வி கையளிப்பதற்கு தீர்மானம் வழங்கப்பட்டிருந்தது. இந்த தீர்மானத்திற்குரிய அமைச்சரவை மேவுகை அங்கீகாரம் கோவையில் உள்ளடக்கப்படவில்லை. சகல கேள்விதாரர்களும் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் செல்லுபடியான பதிவு சான்றிதழ் இல்லாத சந்தர்ப்பம் ஒன்றில் இவ்வாறு அதிகவிலை சமர்ப்பித்த கேள்விதாரர்களுக்கு கேள்வி கையளித்தல் கணக்காய்வின் போது பிரச்சினையான நிலைமையாக இருந்ததுடன் இந்தக் கட்டனைக்கு அண்ணளவாக 2023 பெப்ரவரி 02 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட கட்டளை அலகொன்றுக்கு விநியோகிக்கப்பட்ட கிரயம் ரூபா 150 ஆக காணப்பட்டது. மேலும் ஆகக் குறைந்த விலைசமர்ப்பித்த கேள்வி தாரருடன் ஒப்பிடும் போது அதிக விலை அதிகரிப்பு 786 சதவீதமாக காணப்பட்டது. கோள்வனவு கட்டளை கேள்வி அங்கீகாரத்தில் இருந்து 72 நாட்களுக்கு பின்னர் 2023 செப்தெம்பர் 08 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வு திகதி வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) 2024 ஆம் ஆண்டிற்காக சராசரி கட்டளைக்காக அளவை தீர்மானிப்பதற்காக கட்டளை கட்டுப்பாட்டு பத்திரம் ஒன்று 2023 நவம்பர் 23 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்கான கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக தீர்மானத்திற்கு வர முடியவில்லை. இந்த நிலைமையில் 2024 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்காக அனுப்ப வேண்டி ஏற்பட்டிருந்தமை கணகக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

64. <u>Allopurinol Tab 100mg (SR - 01401001)</u>

(அ) 2020 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட அளவினை விஞ்சி 127 சதவீதம் மருந்து கட்டளை இடப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு கணக்காய்வு திகதி வரைமதிப்பீடு செய்யப்பட்ட அளவு போதுமான இருப்பு கட்டளை இடப்படாது இருந்ததுடன் கட்டளை அளவு குறித்துரைத்த பிரகாரம் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மதிப்பீட்டை விஞ்சி வைத்தியசாலைகளுக்கு கட்டளையிடப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எனினும், விநியோகிக்கப்பட்ட அளவு மதிப்பீட்டு பெறுமதியுடன் ஒப்பிடும் போது 68 சதவீதம் மற்றும் 51 சதவீத பெறுமதியாக இருந்தது.

(இ) அவ்வாறே கட்டளையிடப்பட்ட அளவிற்கே போதியளவான மருந்து இருப்புக்கள் வைத்திய சாலைகளுக்கு விநியோகிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அது சதவீதமாக எடுப்போமாயின் 16 சதவீதம் முதல் 62 சதவீதம் வரையிலான

வீச்சில் காணப்பட்டது. 2023 சனவரி முதல் மே 31 ஆந் திகதி வரைவைத்தியசாலையினால் 37 சந்தர்ப்பத்தின் போது கோரப்பட்ட மருந்துகளின் எண்ணிக்கை 277,650 அளவொன்று வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலக்கம் 2022/SPC/V/R/P/00659 என்ற கட்டளைக்குப் பதிலாக இலக்கம் 2022/MSD/V/R/P/00072 என்ற கட்டளை விநியோகிக்கப்பட்ட போதிலும் ஸ்வஸ்ட முறைமையில் இலக்கம் 2022/SPC/V/R/P/00659 என்ற கட்டளை கணக்காய்வு திகதி வரையிலும் விநியோகிக்கப்பட்ட கட்டளையாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2022 ஆம் ஆண்டிற்கான 4,200,000 அலகுகள் சராசரி கட்டளை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பபட்டிருந்தது. பெறுகை தீர்மானம் கேள்விதாரர்களுக்கு அறிவிப்பதற்காக 28 நாட்கள் எடுத்திருந்தது. அதற்குரிய மிகுதி இருப்புக்கள் ஆன 2,200,000 அலகுகளின் மருந்துகள் 2023 ஒக்டோபர் வரை கிடைத்திருக்கவில்லை.

(ஊ) கட்டளை இலக்கம் 2022/SPC/E/R/P/00627 என்ற கட்டளை 2022 செப்தெம்பர் 16 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரால் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் (பெறுகைகள்) காண்பிக்கப்பட்ட 89 மருந்துக்குரிய கோவைகள் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) கொள்வனவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் சுகாதார அமைச்சின் அவசர பெறுகை குழுவினால் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் (NMRA) பதிவு செய்த வழங்குனரிடமிருந்து கேள்வி கோருவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. தொழில் நுட்ப மதிப்பீட்டு குழுவின் போது NMRA சான்றிதழ் அல்லது WOR பெற்றுக்கொள்வதன் கீழ் ஆகக் குறைந்த கேள்வி சமர்ப்பித்த கம்பனிக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் இந்தக் கட்டளை தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான சான்றுகளோ கோவையில் காணப்படவில்லை. சுகாதார பிரிவு அவசர பெறுகை குழு வழங்கி மேற்கூறப்பட்ட தீர்மானத்திற்காக அமைச்சரவையின் மேவுகை அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(எ) இலக்கம் 2024/SPC/N/R/P/00044 என்ற 1,800,000 அலகுகளை கொள்வனவு செய்தல் சராசரி கட்டளை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பி கட்டளை கட்டுப்பாட்டு பத்திரத்தின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்கான கட்டளை இட வேண்டிய அலகுகளின் அளவு 4,871,610 ஆக இருந்த போதிலும் 3,071,610 அலகுகள் குறைத்து கட்டளை இடப்பட்டிருந்தது.

65. <u>Bicalutamide Tab. 50mg (SR - 01207001)</u>

(அ) 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மதிப்பீடு செய்யப்பட்ட அளவினை விஞ்சி கட்டளையிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டில் அது மதிப்பீடு செய்த பெறுமதியில் 5 சதவீத அதிகரிப்பாக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் அது மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் 56 சதவீத அதிகரிப்பாகும்.

(ஆ) 2023 ஆம் ஆண்டிற்கான வைத்திய சாலைகளில் வருடாந்த மதிப்பீடு செய்யப்பட்ட அலகுகள் 415,300 ஆக இருந்ததுடன் 2023 நவம்பர் வரையில் விநியோகிக்கப்பட்ட மருந்துகளின் அளவு 177,526 அலகுகள் ஆகும். அத் திகதியில் அந்த அளவு மதிப்பீடு செய்யப்பட்ட அளவில் 43 சதவீத அளவாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் ஒக்டோபர் வரையிலும் மருந்து இருப்புக்கள் கிடைத்திருக்கவில்லை.

(இ) இலக்கம் 2022/SPC/V/R/P/00690 என்ற கட்டளைக்கு பதிலாக இலக்கம் 2022/MSD/V/R/P/00074 என்ற கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் ஸ்வஸ்ட முறைமை இலக்கம் 2022/SPC/V/R/P/00690 என்ற கட்டளை மேலும் தொடர்ந்து விநியோகிக்கப்பட்ட கட்டளையாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) 2023 நவம்பர் 21 இல் உள்ளவாறு இந்த மருந்தில் 930,416 அலகுகள் பெற்றுக்கொள்ள இருந்தாக ஸ்வஸ்ட முறைமையில் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த அலகுகள் கணிப்பீடு தயாரிக்கப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் இந்த முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இலக்கம் 2022/MSD/V/R/P/00074 என்ற 82,500 அலகுகளின் கட்டளைக்குரிய முறையே 2,000 அலகுகள் மற்றும் 80,500 அலகுகள் வழங்குமாறு தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு கொள்வனவு கட்டளை விநியோகிக்கப்பட்ட போதிலும், 2023 ஒக்டோபர் 31 ஆந் திகதி வரையிலும் மருந்து இருப்புக்கள் கிடைத்திருக்கவில்லை. உடன்படிக்கையில் கைச்சாத்திடாமலும் செயலாற்றல் பிணை முறியினை பெற்றுக்கொள்ளாமலும் பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிப்பதற்காக சுகாதார செயலாளர் தமது அதிகாரபலத்தை விஞ்சி அங்கீகாரம் வழங்கியிருந்தார்.

(ஊ) 2022 வருடாந்த சராசரி கட்டளை ஆகக் குறைந்த 11 மாதங்களுக்கு முன்னர் வழங்க வேண்டியிருந்த போதிலும் 2022 நவம்பர் 16 ஆந் திகதி 165,000 அலகுகள் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. சராசரி கட்டளை குறித்துரைத்த திகதியில் வழங்கப்படுமாயின் திறந்த கூறு விலை கோரலின் கீழ் பெறுகைகளை அமுல்படுத்தவதற்கு இயலுமாக இருந்த போதிலும் காணப்பட்ட அவசர நிலைமையில் 07 நாட்களுக்குள் பதிவு செய்த மற்றும் கடந்த கால வழங்குனரிடமிருந்து வரையறுத்த கூறு விலையின் கீழ் கேள்வி கோருவதற்கு பெறுகை குழு பரிந்துரை செய்திருந்தது.

(எ) கேள்வி கோருவதற்கு வழங்கப்பட்ட திகதியில் 60 நாட்களுக்குப் பின்னர் கேள்வி கோரப்பட்டிருந்தது. 05 கேள்விதாரர்கள் சமர்பித்த கேள்வி ஆவணங்களுக்கு இடையே ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்வி தாரருக்கு அலகொன்று ரூபா 27.38 (ஐ.அ.டொலர் 0.0757) கேள்வியை கையளிப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தமது பரிந்துரையை 2023 மார்ச் 22 ஆந் திகதி வழங்கியிருந்ததுடன் அதற்காக 2023 ஏப்ரல் 19 ஆந் திகதிய பெறுகைக் குழு பரிந்துரை வழங்கியிருந்தது. கேள்வி கையளிக்கப்பட்டு 83 நாட்களுக்குப் பின்னர் 2023 யூலை 12 ஆந் திகதி கொள்வனவு கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்தக் கட்டளைக்குரிய மருந்துகள் 2023 நவம்பர் 29 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிதி அமைச்சினால் சுகாதாரப் பிரிவின் அவசர பெறுகை செயற்பாடுகளுக்காக (HSEPP) அறிமுகப்படுத்தப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்காக 2023 மே 25 ஆந் திகதி 190,000 அலகுகள் இலக்கம் 2023/SPC/X/R/P/00191 என்ற கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. கட்டளை 20 நாட்களுக்கு பின்னர் வரையறுக்கப்பட்ட கேள்வி கோரலுக்கு பின்னர் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் உள்ள பதிவுச் சான்றிதழுடன் கேள்விதாரர்களில் இருந்து 2023 யூன் 14 ஆந் திகதி கேள்வி சமர்ப்பிப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததுடன் 02 நாட்கள் கேள்விக் காலத்தின் பின்னர் 2023 யூன் 16 ஆந் திகதி முற்பகல் 10 மணிக்கு கேள்வியை மூடுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஐ) கேள்விதாரர் 05 பேர் மாத்திரம் சமர்பித்திருந்ததுடன் இரண்டு கேள்விதாரரின் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் இல்லாதிருந்ததுடன் இரண்டு பேர் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு சான்றிதழ் விண்ணப்பித்திருந்தனர் அதன் பிரகாரம் ஆகக் குறைந்த கேள்வி சமர்ப்பித்த நிறுவனத்தின் விலை அலகொன்றிக்கு ரூபா 22.75 ஆக இருந்ததுடன் அவரின் NMRA சான்றிதழ் 2022 திசெம்பர் 22 செல்லுடியற்றதனால் செல்லுபடியான NMAR உரித்தான அலகொன்றுக்கு ரூபா 46.77 கேள்வி பெறுமதி சமர்ப்பித்த நிறுவனத்திற்கு கேள்வி திறக்கப்பட்ட திகதியில் இருந்து 11 நாட்களின் பின்னர் 2023 யூன் 27 ஆந் திகதி தொழில் நுட்ப

மதிப்பீட்டுக் குழு பரிந்துரையின் படி யூன் 28 ஆந் திகதி சுகாதாரப் பிரிவின் அவசர பெறுகை குழுவின் அங்கத்தவரின் பரிந்துரையின் படி தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் தெரிவு தீர்மானத்திற்காக அமைச்சரவை மேவுகை அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டமைக்கான சான்றுகள் கோவையில் உள்ளடக்கப்படவில்லை.

(ஒ) கேள்வி கையளித்து 75 நாட்களுக்கு பின்னர் 2023 செப்தெம்பர் 11 ஆந் திகதி அலகொன்று ரூபா 43.77 வீதம் கொள்வனவு செய்வதற்காக கொள்வனவு கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 189,990 அலகுகள் 2023 நவம்பர் 08 ஆந் திகதி வரையில் வழங்கப்படுவதாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 2023 ஆகஸ்ட் 15 ஆந் திகதியில் 190,000 அலகுகள் வழங்குமாறு முறைமை மூலம் கட்டளை வழங்கப்பட்டிருந்ததுடன் கேள்வி ஆவணங்களின் படி ஒரு மாதத்திற்குள் 190,000 அலகுகள் வழங்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 27 ஆந் திகதி வரையில் வழங்குனர் செயலாற்றல் பிணை முறி வழங்காது இருந்ததுடன் வழங்குனருடன் ஒப்பந்த உடன்படிக்கையும் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2024 ஆம் ஆண்டிற்குரிய மருந்து தேவையை தீர்மானிப்பதற்குரிய கட்டளை கட்டுப்பாட்டு பத்திரம் 2023 சனவரி 23 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட போதிலும் கட்டளை சமர்ப்பிக்கப்படவில்லை. 2024 ஆம் ஆண்டில் சராசரி வருடாந்த தேவையை வழங்குவதற்கு வருடம் ஆரம்பிப்பதற்கு அண்ணளவாக 11 மாதங்களுக்கு முன்னர் கட்டளை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் 29 ஆந் திகதி வரை 2024 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளையொன்று கட்டளை சமர்ப்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

66. <u>Vincristine Sulphate Inj.1mg/mL Vial (SR - 01202401)</u>

(அ) இலக்கம் 2021/SPC/N/R/P/00095 என்ற கட்டளைக்குரிய 13,250 அலகுகள் மற்றும் இலக்கம் 2022/SPC/N/R/P/00032 என்ற கட்டளைக்குரிய 11,000 அலகுகள் 2023 நவம்பர் கணக்காய்வு திகதி வரையிலும் வழங்கப்படாதிருந்ததுடன் விநியோகிக்கப்பட்ட 06 கட்டளைகளுக்குரிய 55,344 தடுப்பூசி அலகுகள் முழுமையாக வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 22,000 அலகுகள் 2022 இன் சராசரியின் கட்டளை 2021 பெப்ரவரி 27 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. 2023 ஆகஸ்ட் 03 ஆந் திகதி கேள்வி கையளிக்கப்பட்டிருந்ததுடன் 11,000 அலகுகளின் முதலாவது இருப்பு 2022 நவம்பர் 27 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. கேள்வி மதிப்பீட்டின் பின்னர் அதற்குரிய குறித்துரைத்த பரிந்துரையுடன் மதிப்பீட்டு அறிக்கையும் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அங்கத்தவர்களின் பெயர் மற்றும் பதவிகள் இன்றி கையொப்பம் மாத்திரம் இடப்பட்டிருந்தது. இந்த கட்டளைகளுக்குரியதாக பெறப்பட்ட செயலாற்றல் பிணைமுறியின் செல்லுபடி தன்மை 2022 நவம்பர் 16 ஆந் திகதியில் முடிவடைந்திருந்ததுடன் கட்டளையில் அரைவாசி மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) இலக்கம் 2022/MSD/V/R/P/00074 என்ற 5,750 அலகுகளின் கட்டளை 2022 செப்தெம்பர் 26 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவை பத்திர இலக்கம் 22/1523/610/018 கீழ் "இலங்கையில் தொடர்ச்சியாக மருத்துவ வழங்கல் சேவையினை பேணிச் செல்லல்" என்ற நோக்கில் சுகாதார அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட 2022 செப்தெம்பர் 26 ஆந் திகதிய திருத்தத்தின் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவினால் அத்தியவசிய மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்து வழங்குவதற்காக ஆர்வம் காட்டுகின்ற தரப்பினரிடம் (Expression of interest EOI) இருந்து 2022 செப்தெம்பர் 27 ஆந் திகதி Promise.lk என்ற இணைய தளம் மூலம் கேள்வி கோரப்பட்டிருந்தது.

(ஈ) தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் WOR பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் இந்த மருந்துகள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. சுகாதார அமைச்சின் அவசர பெறுகை குழுவின் விலை மதிப்பீட்டு பெறுகை குழுவின் மூலம் அது மதிப்பீடு செய்யப்பட்டு பெறுகை குழுவினால் அங்கீகரிக்கப்படுவதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் விலை மதிப்பீட்டு அறிக்கை மற்றும் பெறுகை குழு அறிக்கை மற்றும் உரிய கோவையில் உள்ளடக்கப்படவில்லை. கொள்வனவு கட்டளையின் படி 2023 சனவரி 05 ஆந் திகதி வரையில் மருந்து வழங்க வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் 15 வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு உரிய மருந்துகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சு செயலாளரால் 2022 நவம்பர் 02 ஆந் திகதி தமது அதிகார எல்லையினை விஞ்சி செயலாற்றல் பிணை முறியை பெற்றுக் கொள்ளல் மற்றும் ஒப்பந்ததாரர்களுடன் உடன்படிக்கையை செய்து கொள்ளல் என்பவற்றில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமையில் இந்த இருப்பை வழங்காமை தொடர்பாக எந்தவொரு மேவுகையும் அமைச்சிற்கு உரித்தாகியிருக்கவில்லை.

(உ) 2023 இன் சராசரி கட்டளையாக 12,000 அலகுகள் 2022 நவம்பர் 16 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. 2023 மார்ச் 20 ஆந் திகதி கேள்வி மதிப்பீடு செய்யப்பட்ட போதும் அதற்குரிய மதிப்பீடு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் இரண்டாவது ஆகக் குறைந்த கேள்விதாரருக்கு மருந்துக்குரிய உற்பத்தி பதிவை புதுப்பிப்பதன் கீழ் அலகொன்று ரூபா 595 வீதம் கேள்வியை கையளிப்பதற்கு 2023 மே 09 ஆந் திகதி நடைபெற்ற திணைக்கள பெறுகை குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கட்டளை கட்டுப்பாட்டு பத்திரத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்குரிய கட்டளையிட வேண்டிய தடுப்பூசி அலகுகள் 8,000 ஆக இருந்த போதும் மேற்கூறப்பட்ட கட்டளை மூலம் 06 மாதங்களின் தேவைக்கு இணையாக 12,000 தடுப்பூசி அலகுகள் கட்டளை இடப்பட்டிருந்ததுடன் அவ்வாறு செய்வதற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட விடயங்கள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்படவில்லை. பெறுகை கால அட்டவணையின் பிரகாரம் பெறுகை கால தீர்மானம் எடுத்து 14 நாட்களில் கேள்வி கையளிக்க வேண்டியிருந்த போதிலும் 52 நாள் தாமதத்துடன் அது மேற்கொள்ளப்பட்டிருந்தது. கேள்வி கையளித்து 14 நாட்களுக்குள் மொத்தக் கிரயத்தில் 10 சதவீதமான நிபந்தனை இன்றிய செயலாற்றல் காப்புறுதி ஒன்று பெறப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் வரையிலும் இந்தக் கட்டளைக்குரிய மருந்துகள் கிடைத்திருக்கவில்லை.

(ஊ) இலக்கம் 2023/SPC/E/R/P/00143 என்ற 5,750 அலகுகளின் கட்டளையொன்று சனவரி 30 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. 2023 ஏப்ரல் 24 ஆந் திகதி நடைபெற்ற தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழவினால் எந்தவொரு கேள்விதாரரும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவினை பெறாது இருந்தமையினாலும், இரண்டாவது ஆகக்குறைந்த கேள்வி தாரர் மருந்து மாதிரிகள் இறக்குமதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் மற்றும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவினை கோரியிருந்தமையினால் இரண்டாவது ஆகக் குறைந்த கேள்விதாருக்கு விலையை குறைப்பதன் கீழ் மற்றும் WOR பெற்றுக்கொள்ளும் அடிப்படையிலும் கேள்வியை கையளிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட வழங்குனருக்கு அலகொன்று ரூபா 1,665 வீதம் 5,750 அலகுகளுக்காக கேள்வி கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் உரிய பொருள் அனுப்பல் கோரிக்கை 2023 யூன் 15 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது.

(எ) மேற்கூறப்பட்ட பெறுகைகளுக்குரிய கையளித்தல் 2023 மே 12 ஆந் திகதி நடைபெற்ற சுகாதார அமைச்சின் பெறுகை குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்ததுடன் அந்த தீர்மானம் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து மேவுகை அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான சான்றுகள் கோவையில்

உள்ளடக்கப்படாதுதிருந்ததுடன் இந்த பெறுகைகள் குறித்துரைத்த பிரகாரம் மேற்கொள்ளப்பட்டமைக்கு பிரதான உள்ளக கணக்காய்வாளரின் உறுதிபடுத்தப்பட்டிருக்கவில்லை. மதிப்பீடு செய்யப்பட்ட விலை மற்றும் கேள்வி மற்றும் கேள்வி கையளிக்கப்பட்ட விலைகளுக்கு இடையே வேறுபாடு 411 சதவீதம் ஆகும்.

(ஏ) கேள்வி கையளித்து 03 நாட்களுக்குள் மொத்தக் கிரயத்தில் 10 சதவீதம் ஆன நிபந்தனையின்றிய செயலாற்றல் காப்புறுதி பெற வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயலாற்றல் காப்புறுதி பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கேள்வி கையளிக்கப்பட்ட உடன் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் பெறுகை நிறுவனத்தால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவசர பெறுகை தேவையின் கீழ் இந்த மருந்துகளை வழங்குவதற்கு தீர்மானித்து விலை சமர்ப்பிப்பதற்கு 03 நாட்களுக்கும் குறைவான காலம் வழங்கப்பட்டிருந்த போதும் உரிய பொருள் அனுப்பல் கோரிக்கை 2023 யூன் 15 ஆந் திகதியே விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக கேள்வி திறக்கப்பட்ட தினத்தில் இருந்து 75 நாள் காலம் எடுத்திருந்தது. 2023 நவம்பர் கணக்காய்வு திகதி வரையிலும் இந்த கட்டளைக்குரிய மருந்துகள் கிடைத்திருக்கவில்லை.

(ஐ) இலக்கம் 2023/SPC/X/R/P/00191 18,000 என்ற 2023 மே 25 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. 2023 யூன் 27 ஆந் திகதி நடைபெற்ற தொழில் நுட்ப மதிப்பீட்டுக்குழுவினால் வழங்குனருக்கு தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் மீண்டும் பதிவு செய்வதற்கோ அல்லது WOR பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் அலகொன்று ரூபா 362 வீதம் 18,000 அலகுகளுக்காக கேள்வி கையளிப்பதற்கு 2023 யூன் 28 ஆந் திகதி நடைபெற்ற சுகாதார அமைச்சின் அவசர பெறுகை குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. உரிய பெறுகை தீர்மானம் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து மேவுகை தீர்மானம் பெற வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கோவையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் இந்தப் பெறுகை குறித்துரைத் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டமைக்கு பிரதான உள்ளக கணக்காய்வாளரால் உறுதிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கூறு விலை சமர்பிப்பதற்காக 03 நாட்களுக்கும் குறைவான காலம் வழங்கி மேற்கொள்ளப்பட்ட கூறு விலை கோருவதற்குரிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு 2023 யூன் 28 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்ட போதிலும் அதற்குரிய பொருள் அனுப்பல் கோரிக்கை 2023 செப்தெம்பர் 06 ஆந் திகதியே விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. 2023 நவம்பர் கணக்காய்வு திகதி வரையிலும் இந்த கட்டளைக்குரிய மருந்துகள் கிடைத்திருக்கவில்லை.

(ஒ) இந்த மருந்துகள் 2024 ஆம் ஆண்டிற்கான சராசரி கட்டளை 2023 சனவரி விநியோகிக்கப்பட வேண்டிய போதும் 2023 நவம்பர் 15 கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவினால் அது விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமையில் 2024 ஆம் ஆண்டின் போதும் இந்த மருந்துகள் அவசர கொள்வனவுகளின் கீழ் மேற்கொள்ள வேண்டியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஓ) ஸ்வஸ்ட தகவல் முறைமையின் பிரகாரம் இந்த மருந்துகளுக்கு வேண்டிய பெற வேண்டிய இருப்பாக ஒரு நிலையத்தில் (Balance Due) 76,750 தடுப்பூசி அலகுகளாகவும் இன்னொரு இடத்தில் (Pending Orders) 23,750 தடுப்பூசி அலகுகளாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. அதனால் ஒரே தகவல் முறைமையில் பல்வேறு இடங்களில் பரீசீலனைக்கு வழங்கப்பட்ட தகவல்கள் பரஸ்பரம் வேறுபாடு இருந்தமையால் முறைமை மூலம் வழங்கப்படுகின்ற நம்பிக்கையில் தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது.

67. <u>Procarbazine capsule 50mg (SR 01203901)</u>

(அ) 3,000 அலகுகள் 2022 இன் சராசரி கட்டளை 2021 பெப்ரவரி 27 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. 05 சந்தர்ப்பங்களின் போது கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் அது ஒரு சந்தர்பத்தில் கேள்வி கையளிக்கப்பட்ட போதும் பின்னர் அது இரத்துச் செய்யப்பட்டிருந்தது. பெறுகை நடவடிக்கைகளின் ஆரம்ப பட்டத்தில் காணப்பட்டமையால் 2024 ஆம் ஆண்டின் போதும் அவசர பெறுகைகளுக்காக அனுப்புவதற்கு ஏற்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வுகளின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலக்கம் 2022/SPC/E/R/P/00744 என்ற 600 அலகுகள் அவசர கட்டளை 2022 நவம்பர் 09 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. அலகொன்றின் விலை அதிகமாக இருந்ததன் காரணமாக இரண்டு சந்தர்ப்பங்களின் போது இந்த பெறுகைகள் இரத்துக் செய்யப்பட்டு மீண்டும் கேள்வி கோருவதற்கு 2023 பெப்ரவரி 16 ஆந் திகதி நடைபெற்ற பெறுகை குழு தீர்மானித்திருந்த போதும் கணக்காய்வு திகதியான 2023 ஒக்டோபர் 31 ஆந் திகதி வரையிலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 1,200 அலகுகள் 2023 சராசரி கட்டளை 2022 நவம்பர் 16 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. அலகொன்றின் விலை அதிகமாக இருந்ததன் காரணமாக இரண்டு சந்தர்ப்பங்களின் போது 2023 இன் சராசரி கட்டளைக்குரிய பெறுகைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் 15 ஆந் திகதி வரையிலும் மீண்டும் கேள்வி கோரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதியத்தை பயன்படுத்தி கொள்வனவு செய்வதற்காக 2023 பெப்ரவரி 02 ஆம் திகதி இலக்கம் 2023/SPC/T/R/P/00146 என்ற 400 அலகுகளின் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் உற்பத்தி கூடத்தின் அங்கீகாரத்துடன் வழங்குனருக்கு WOR பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் கேள்வி கையளிப்பதற்கு 2023 மார்ச் 09 மற்றும் 21 ஆம் திகதிகளில் நடைபெற்ற அவசர பெறுகை குழுவின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இன் அந்த தீர்மானத்திற்காக அமைச்சரவையின் மேவுகை அங்கீகாரம் பெறப்பட்டமைக்கு அல்லது பெறுகை குறித்துரைத்த பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கு பிரதான உள்ளக கணக்காய்வாளரின் சான்றுகள் பெறப்பட்டமைக்கான சான்றுகள் கோவையில் உள்ளடக்கப்படவில்லை.

(உ) கூறு விலை சமர்ப்பிப்பதற்கு 03 நாட்கள் ஆன வரையறுத்த காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிப்பதற்காக 33 நாள் காலம் எடுத்திருந்தது. பின்னர் இந்தப் பெறுகை செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடாமை மற்றும் செல்லுபடியான செயலாற்றல் காப்புறுதி பெறப்படாமையின் காரணமாக இது தொடர்பாக வழங்குனருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதற்கு பெறுகை நிறுவனத்திற்கு முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) இலக்கம் 2023/SPC/X/R/P/00191 என்ற 2,000 அலகுகளின் கட்டளை 2023 மே 25 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. 2023 யூன் 28 ஆந் திகதி நடைபெற்ற சுகாதார அமைச்சின் அவசர பெறுகை குழுவினால் மருந்துகளுக்காக உற்பத்தி கூடத்தில் அங்கீகார உரித்துள்ள வழங்குனர்களுக்கு அலகொன்று ரூபா 3,000 வீதம் WOR பெற்றுக்கொள்வதன் கீழ் கேள்வி கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த பெறுகை தீர்மானம் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து மேவுகை அங்கீகாரம் பெற வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கோவையில் உள்ளடக்கி இருக்கவில்லை. அவ்வாறே இந்த பெறுகைகள் குறித்துரைத்த பிரகாரம் மேற்கொள்ளப்பட்டமைக்கு பிரதான உள்ளக கணக்காய்வாளரினால் உறுதிப்படுத்தப்படவும் இல்லை. கூறு

விலை சமர்ப்பிப்பதற்காக 03 நாட்களுக்கும் குறைவான காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும் பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிப்பதற்காக 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது.

(எ) இந்த மருந்தின் 2024 ஆம் ஆண்டிற்கான சராசரி கட்டளை 2023 சனவரி வரையில் விநியோகிக்க வேண்டிய போதிலும் கணக்காய்வு சந்தர்ப்பமான 2023 நவம்பர் 15 வரையிலும் அது விநியோகிகப்பட்டிருக்கவில்லை.

68. <u>Paclitaxel Inj. 30mg/5mlVial (SR - 01204901)</u>

(அ) இலக்கம் 2022/SPC/E/R/P/00600 என்ற 25,000 அலகுகளை வழங்குவதற்கான மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரினால் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளருக்கு (பெறுகைகள்) 2022 செப்தெம்பர் 16 ஆந் திகதி இந்தக் கட்டளை வழங்கப்பட்டிருந்தது. 2022 ஒக்டோபர் 26 ஆந் திகதி நடைபெற்ற தொழில் நுட்ப மதிப்பீட்டுக்குழு கூட்டத்தின் போது விலை குறைப்பதன் கீழ் மற்றும் உடனடியாக பெறக்கூடிய வகையில் மற்றும் 25,000 அலகுகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இந்தக் கட்டளை தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கான அல்லது இரத்துச் செய்யப்பட்டதற்கான சான்றுகள் கோவையில் காணப்படவில்லை. அவ்வாறே சுகாதாரப் பிரிவின் அவசர பெறுகை குழு எடுத்த இந்த தீர்மானத்திற்காக அமைச்சரவை எடுத்த மேவுகை அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 50,000 அலகுகள் 2023 இன் சராசரி கட்டளை 2022 நவம்பர் 16 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளை பத்து மாதங்கள் அளவிலான தாமதங்கள் வழங்கப்பட்டதன் காரணமாக திறந்த கூறு விலை மேதலின் மூலம் போட்டியாளாராக மருந்துகளை கொள்வனவு செய்வதற்குரிய சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. மொத்தக் கிரயத்தில் 10 சதவீதமான நிபந்தனையின்றி செயலாற்றல் உறுதி பெற வேண்டியிருந்த போதிலும் அது 108 நாட்கள் தாமதம் ஆகி பெறப்பட்டிருந்ததுடன் 2023 யூலை 17 ஆந் திகதி பெறப்பட்டிருந்தது. 2023 யூன் 23 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட பொருள் அனுப்பல் கோரிக்கையின் படி 2023 ஆகஸ்ட் 15 ஆந் திகதி இருப்பு வழங்க வேண்டிய போதிலும் 2023 நவம்பர் 10 வரையிலும் இந்த மருந்துகள் கிடைத்திருக்கவில்லை.

(இ) 2023 இன் வருடாந்த சராசரி கட்டளை குறித்துரைத்த திகதியில் வழங்கப்படாமல் இலக்கம் 2023/SPC/E/R/P/00143 என்ற 25,000 என்ற அலகுகள் அவசர பெறுகைகளின் கீழ் பெற்றுக்கொள்வதற்கான கட்டளை 2023 சனவரி 30 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் ஆகக் குறைந்த விலையினை குறைப்பதன் கீழ் அலகொன்று ரூபா 2,370 வீதம் 25,000 அலகுகளுக்காக ரூபா 59,250,000 கிரயத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்காக கேள்வி கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் 2023 மே 12 ஆந் திகதி நடைபெற்ற சுகாதார அமைச்சின் அவசர பெறுகை குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அந்த தீர்மானம் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து மேவுகை அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான சான்றுகள் கோவையில் உள்ளடக்கப்படவில்லை.

(ஈ) அவசர தேவையின் கீழ் இந்த மருந்துகளை பெற்றுக்கொள்வதற்காக தீர்மானித்து கூறு விலை சமர்ப்பிப்பதற்கு 03 நாட்கள் ஆன வரையறுத்த காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய பொருள் அனுப்பல் கோரிக்கை கேள்வி திறக்கப்பட்டதன் பின்னர் கேள்வி திறக்கப்பட்டு 80 நாட்களுக்குப் பின்னரே விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த மருந்துகளை வழங்குவதற்காக பெற்றுக்கொள்வதற்காக மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஸ்வஸ்ட முறைமையில் மேற்கொள்ளப்பட்ட முறைமையில் இன்ரன்ரூ காண்பிக்கப்படாமையின் காரணமாக 2023 ஆகஸ்ட் 24 ஆந் திகதி புதிய இன்ரன்ரூ விநியோகிக்கப்பட்டதுடன் அந்த இருப்பை பெற்றுக் கொள்ளும் காலமாக 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதியே காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அது

வரையில் இந்த மருந்து கிடைக்கப் பெறாது இருந்ததுடன் செயலாற்றல் காப்புறுதியும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதியத்தை பயன்படுத்தி கொள்வனவு செய்வதற்காக மருத்துவ வழங்கல் பிரிவினால் 2023 பெப்ரவரி 02 ஆந் திகதிய இலக்கம் 2023/SPC/T/R/P/00146 என்ற கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்தப் பெறுகை சுகாதார அமைச்சின் அவசர பெறுகை குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் 2023 பெப்ரவரி 24 ஆந் திகதி நடைபெற்ற விலை குழுவின் பின்னர் கேள்விதாரருக்கு WOR பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் கேள்வி கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் அந்த தீர்மானத்திற்காக அமைச்சரவையின் மேவுகை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கோவையில் உள்ளடங்கப்படவில்லை. மாதிரிகளுக்கு இணங்காமையின் அடிப்படையில் இந்தக் கட்டளையை இரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதனால் இதன் கேள்வி மதிப்பீட்டின் போது மாதிரிகளுக்கு இணங்காத கேள்விகளை நிராகரிப்பதற்கு இருந்த சந்தர்ப்பம் தவறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) கட்டளைகளை இரத்துச் செய்வதற்கு வழங்குனரின் வழுக்களின் அடிப்படையில் செயலாற்றல் காப்புறுதி வழங்கப்படாமையின் காரணமாக உரிய பெறுகைகளை இரத்துச் செய்ய ஏற்பட்டிருந்ததுடன் பெறுகைகளுக்காக செலவிடப்பட்ட கிரயத்தை வழங்குனருடம் இருந்து அறவிடுவதற்குரிய சந்தர்ப்பமும் இழக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கேள்வி கைளித்தவுடன் வழங்குனருடன் ஒப்பந்த உடன்படிக்கையில் கையொப்பம் இடவேண்டிய போதிலும் பெறுகை நிறுவனத்தினால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த மருந்தின் உற்பத்தியாளரால் உள்நாட்டு முகவர் சரியான பிரகாரம் நியமிக்கப்பட்டமையை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) இலக்கம் 2023/SPC/X/R/P/00191 என்ற 75,000 அலகுகள் இந்திய கடன் வசதியின் கீழ் கொள்வனவு செய்வதற்காக 2023 மே 25 ஆந் திகதி கட்டளை ஒன்று விநியோகிக்கப்பட்டிருந்தது. NMRA பதிவு உரித்தான ஒரே ஒரு வழங்குனருக்கு அலகொன்று ரூபா 1,729.41 வீதம் ஆன 75,000 அலகுகளுக்காக ரூபா 129,705,750 ஆன கிரயத்தின் கீழ் இந்த மருந்துகளை பெற்றுக்கொள்வதற்காக கேள்வி கையளிப்பதற்கு 2023 யூன் 28 ஆந் திகதி நடைபெற்ற சுகாதார அமைச்சின் அவசர பெறுகை குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்ததுடன் அந்த தீர்மானத்திற்காக அமைச்சரவையின் மேவுகை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கோவையில் உள்ளடக்கப்படவில்லை.

(ஏ) கூறு விலை சமர்ப்பிப்பதற்காக 03 நாட்களுக்கும் கறைவான காலம் வழங்கி மேற்கொள்ளப்பட்ட கூறு விலை கோரலுக்கு உரிய கொள்வனவு செய்யும் பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிப்பதற்காக மருத்துவ வழங்கல் பிரிவு 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. இந்த மருந்துகளின் பெறுகைகளுக்காக கேள்வி கையளித்து 03 நாட்களுக்குள் மொத்த கிரயத்தில் 10 சதவீதம் ஆன நிபந்தனையின்றிய செயலாற்றல் காப்புறுதி பெற வேண்டிய போதிலும் அவ்வாறு செயலாற்றல் காப்புறுதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஐ) இந்த மருந்து போதியளவான பிரகாரம் இருப்பை பேணிச் செல்லாமையின் காரணமாக குருநாகல் போதன வைத்தியசாலையின் பிரதேச ரீதியில் 500 அலகுகள் அலகொன்று ரூபா 4,960 ஆன அதிக கிரயத்தை செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) இந்த மருந்தின் 2024 ஆம் ஆண்டிற்கான சராசரி கட்டளை 2023 சனவரி மாதம் வரையில் விநியோகிக்க வேண்டிய போதிலும் கணக்காய்வு சந்தர்ப்பமான 2023 நவம்பர் 15 வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவினால் அது

விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு திகதி வரையிலும் கட்டளை கட்டுப்பாட்டு பத்திரம் தயாரிப்பதை அடிப்படையாக கொண்டு பெற வேண்டிய 04 கட்டளைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2024 ஆம் ஆண்டில் சராசரி கட்டளை ஒன்று தயாரிக்காமையின் காரமாக 2024 ஆம் ஆண்டின் போதும் அவசர பெறுகைகளுக்காக அனுப்ப வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

69. <u>Tamoxifen Tab. 20mg (SR இலக்கம் 01206802)</u>

(அ) இலக்கம் 2022/SPC/V/R/P/00690 என்ற கட்டளைக்கு பதிலாக இலக்கம் 2022/MSD/V/R/P/00074 என்ற கட்டளை விநியோகிக்கப்பட்ட போதிலும் ஸ்வஸ்ட முறைமையில் முதலாவது கட்டளை தொடர்ந்தும் விநியோகிக்கப்பட்ட கட்டளையாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2023 நவம்பர் 21 இல் உள்ளவாறு இந்த மருந்தின் 4,953,285 அலகுகள் பெற்றுக்கொள்ளவதற்கு இருந்தாக ஸ்வஸ்ட முறைமையில் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த அலகுகள் கணிப்பீடு தயாரிக்கப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் இந்த முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலக்கம் 2022/MSD/V/R/P/00074 என்ற 450,000 அலகுகளின் கட்டளை ஒன்று விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 05 ஆந் திகதி 150,000 அலகுகளும், 2023 பெப்ரவரி 06 ஆம் திகதி 300,000 அலகுகளும் வழங்குமாறு தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு கொள்வனவு கட்டளை சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் 2023 நவம்பர் 21 ஆந் திகதி வரையிலும் மருந்து இருப்புக்கள் கிடைத்திருக்கவில்லை. 2022 நவம்பர் 02 ஆம் திகதி சுகாதார அமைச்சு செயலாளரால் தமது அதிகார பலத்தை மீறி செயலாற்றல் பிணைமுறி பெற்றுக்கொள்ளல் மற்றும் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை செய்த தேவையற்றது என் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த மிகுதி இருப்புக்கள் வழங்காமை தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் அமைச்சிற்கு உரித்தாகி இருக்கவில்லை. இது தொடர்பாக அரசாங்கத்துக்கு ஏதாவது நட்டம் ஏற்படுமாயின் இந்த தீர்மானத்தை அங்கீகரித்த மற்றும் பரிந்துரை செய்த நபர்களின் தனி நபர்கள் தனிப்பட்ட ரீதியில் பொறுப்பாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலக்கம் 2023/SPC/E/R/P/00143 என்ற 450,000 அலகுகளின் கட்டளை 2023 சனவரி 30 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2023 ஏப்ரல் 24 ஆந் திகதி நடைபெற்ற தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவினை பெற்றுக்கொண்டிருந்த ஆகக் குறைந்த கேள்விதாரருக்கு கேள்வி கையளிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. உரிய பொருள் அனுப்பல் கோரிக்கை 2023 யூலை 12 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் மேற்கூறப்பட்ட பெறுகைகளுக்குரிய கேள்வி கையளிப்பதற்கு சுகாதார அமைச்சின் அவசர பெறுகை குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த தீர்மானம் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து மேவுகை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அலகொன்றின் மதிப்பீடு செய்யப்பட்ட விலை ரூபா 4.73 ஆக இருந்ததுடன் ஆகக் குறைந்த கேள்வி சமர்ப்பித்திருந்த விலை ரூபா 10.48 ஆகும். பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட விலை மற்றும் கேள்வி கையளித்த விலைகளுக்கிடையே வேறுபாடு 121 சதவீதம் ஆகும். இந்த மருந்துகளை பெறுகை செய்வதற்காக செயலாற்றல் காப்புறுதி பெறப்படாது இருந்ததுடன் வழங்குனருடன் ஒப்பந்த உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அவசர தேவையின் கீழ் இந்த மருந்துகளை பெற்றுக்கொள்வதனை தீர்மானித்து கூறு விலை சமர்ப்பிப்பதற்கு 03 நாட்கள் ஆன வரையறுத்த காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய பொருள் அனுப்பல் கோரிக்கை கேள்வி திறக்கப்பட்ட திகதியில் இருந்து 103 நாள் காலத்தின் பின்னரே விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2023 சராசரி கட்டளையான 900,000 அலகுகள் 10 மாதங்கள் அளவிலான தாமதத்துடன் 2022 நவம்பர் 16 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் விநியோகிக்கப்பட்ட திகதியில் கட்டளை கட்டுப்பாட்டு பத்திரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2023 ஏப்ரல் 19 ஆந் திகதி கேள்வி ஆவணங்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி இரண்டு நிறுவனங்களுக்கு செல்லுபடியான NMRA சான்றிதழ் சமர்ப்பித்து ஏனைய நியதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாக மாத்திரம் குறிப்பிட்டு உரிய அங்கத்தவரின் பெயர், பதவி குறிப்பிடப்படாமை கையொப்பம் இடப்பட்டிருந்தது. தொழில்நுட்ப குழு மதிப்பீட்டில் இரண்டு மாத காலம் தாமதத்துடன் பெறுகை குழுவினால் விலை கலந்துரையாடலுக்கு அழைப்புவிடப்பட்டிருந்தது. பெறுகை குழு தீர்மானத்திற்கு அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் தொழில் நுட்ப பிரிவிற்கு 2023 செப்தெம்பர் 25 ஆந் திகதி ஆக இருந்ததுடன் அத் திகதியின் பின்னர் கோவை நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நிதி அமைச்சினால் சுகாதார பிரிவின் அவசர பெறுகை செயற்பாடுகளுக்காக (HSEPP) அறிமுகப்படுத்தப்பட்ட ஆலோசனையின் (Guideline) பிரகாரம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதியினை பயன்படுத்தி கொள்வனவு செய்வதற்காக 2023 பெப்ரவரி 02 ஆந் திகதி 300,000 அலகுகள் 2023/SPC/T/R/P/00146 என்ற கட்டகளை விநியோகிக்கப்பட்டிருந்தது. கேள்வி சமர்ப்பிப்பதற்கு 02 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. ஐந்தாவது சமர்ப்பித்த கேள்விதாரரின் NMRA சான்றிதழ் 2020 ஆம் ஆண்டில் செல்லுபடியற்றதாகியிருந்தது.

(ஏ) தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் மருந்து பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் கேள்வி திறக்கப்படும் திகதியில் இருந்து 07 நாட்களின் பின்னர் மற்றும் விலை மதிப்பீட்டு குழு பரிந்துரை 47 நாட்களின் பின்னர் கேள்வி கையளிப்பதற்கு தீர்மானம் வழங்கப்பட்டிருந்தது. இந்த தீர்மானத்திற்குரிய அமைச்சரவை மேவுகை அங்கீகாரம் கோவையில் உள்ளடக்கப்படவில்லை. அலகொன்று ரூபா 222.19 ஆன கொள்வனவு கட்டளை கேள்வி அங்கிகாரததில் இருந்து 20 நாட்களின் பின்னர் 2023 மே 02 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. விலை மதிப்பீட்டு குழு பரிந்துரை வழங்குகின்ற சந்தர்ப்பம் வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவின் இருப்பு மட்டம் 06 மாதங்களுக்கு மாத்திரம் போதியளவாக இருந்தது. இதில் அலகொன்றின் மதிப்பீடு செய்யப்பட்ட விலை ரூபா 4.73 ஆக இருந்ததுடன் தகமை பெற்ற கேள்விதாரால் சமர்பிக்கப்பட்டிருந்த விலை 222.19 ஆகும். அதன் பிரகாரம் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட விலைக்கும் கேள்வி கையளிக்கப்பட்ட விலைகளுக்கிடையே வேறுபாடு 4597.46 சதவீதம் ஆக இருந்தது.

(ஐ) 2023 மே 25 ஆந் திகதி இலக்கம் 2023/SPC/X/R/P/00191 என்ற 1,300,000 அலகுகள் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் சுகாதாரப் பிரிவின் அவசர பெறுகை குழு அங்கத்தவர்களினால் கேள்வி கையளிப்பதற்கு தீர்மானம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த தீர்மானத்திற்குரிய அமைச்சரவை மேவுகை அங்கீகாரம் கோவையில் உள்ளடக்கப்படவில்லை.

(ஒ) ஆகக் குறைந்த பெறுமதி சமர்பித்த கேள்விதாராரின் கேள்வி பெறுமதி ரூபா 11.22 ஆக இருந்ததுடன் விலை கலந்துரையாடலின் பின்னர் அலகொன்றின் பெறுமதி 11 வீதம் ஆன கொள்வனவு கட்டளை கேள்வி அங்கீகாரத்தில் இருந்து 77 நாட்களுக்கு பின்னர் 2023 செப்தெம்பர் 13 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 நவம்பர் 13 ஆந் திகதி வழங்குமாறு குறிப்பிட்டு கொள்வனவு கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் 24 வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்து இருப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2024 ஆம் ஆண்டிற்குரிய மருந்து தேவையை தீர்மானிப்பதற்குரிய கட்டளை கட்டுப்பாட்டு பத்திரம் 2023 சனவரி 23 ஆந் திகதி தயாரித்திருந்த போதிலும் எதிர்வு கூறப்பட்ட 2,600,000 என்ற அலகுகளின் கட்டளை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2024 ஆம் ஆண்டில் சராசரி வருடாந்த தேவையை வழங்குவதற்கு வருடம் ஆரம்பிப்பதற்கு அண்ணளவாக 11 மாதங்களுக்கு முன்னர் கட்டளை ஒன்று சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் 30 ஆந் திகதி வரை 2024 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளையொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமையில் 2024 ஆம் ஆண்டின் போது அவசர கொள்வனவிற்காக அனுப்ப வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

70. <u>Anastrozole Tab 1 mg (SR - 01206701)</u>

(அ) 1,000,000 அலகுகள் 2022 சராசரி கட்டளை 2021 பெப்ரவரி 27 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டதுடன் இந்த கட்டளை கூட்டுத்தாபனத்திற்கு 2021 மார்ச் 17 ஆந் திகதி கிடைத்திருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் பின்னர் முதலாவது பெறுகை குழு கூட்டத்திற்காக 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலமும், இரண்டாவது பெறுகை குழு கூட்டத்திற்காக மேலும் 02 மத காலமும் எடுத்திருந்ததுடன் கட்டளை கையளிப்பதற்காக 02 மாதங்களுக்கு அண்மித்த காலமும் எடுத்திருந்தது. கட்டளை விநியோகித்ததன் பின்னர் பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிப்பதற்கு 05 மாதம் எடுத்திருந்தது. மேற்கூறப்பட்ட தாமதத்தின் காரணமாக அந்நிய செலவாணி விகிதம் 54 சதவீதம் ஆன பெறுமதி வரை உயர்வடைந்து சென்றிருந்தது. ஒட்டு மொத்தமாக எடுப்போம் ஆயின் கட்டளை விநியோகிக்கப்பட்ட திகதியில் இருந்து பொருள் பெற்றுக்கொள்வதற்காக ஒரு வருடத்திற்கு அண்மித்த காலம் கடந்திருந்தது. அவ்வாறே விலை முரண்களை கணிப்பிடும் போது விலை வழங்குனருக்கு உள்ளபடியாக செலவிடுவதற்கு ஏற்பட்ட கிரயத்திற்குரிய நாணய கடிதத்திற்காக கொடுப்பனவு தகவல்கள் மற்றும் சுங்க ஆவணங்களின் மூலம் உறுதிபடுத்தப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) இலக்கம் 2022/SPC/X/R/P/00306 என்ற 2,000,000 அலகுகளின் கட்டளை 2022 மார்ச் 25 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. அலகொன்றிக்காக ஆகக் குறை விலையாக ஐ.அ.டொலர் 0.0234 விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு கேள்வியை கையளிப்பதற்கு திணைக்கள பெறுகைக் குழு 2022 ஏப்ரல் 27 ஆந் திகதி தீர்மானித்திருந்தது. பெறுகை தீர்மானம் எடுத்து 02 மாதங்களுக்கு பின்னர் பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் மருந்து இருப்புக்கள் 2023 ஏப்ரல் 21 ஆந் திகதியே கிடைத்திருந்தது. இந்த கொடுக்கல் வாங்கல்களுக்குரிய நிபந்தனைகள் வழங்குனரால் மீறப்பட்டிருந்தமையால் உரிய (ஐ.அ.டொலர் 46.50) செயலாற்றல் பிணைமுறியை அறவிடுமாறு உரிய வங்கியிடம் கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தாமதக் கட்டணம் அரசாங்கத்திற்கு அறவிடப்பட்டிருந்தா எனவும் ஏனைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாகவும் எழுத்து மூல சான்றுகள் கோவையில் உள்ளடக்கப்படவில்லை.

(இ) இலக்கம் 2023/SPC/X/R/P/00191 என்ற 1,200,000 அலகுகள் 2023 மே 25 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. சுகாதார சுகாதாரப் பிரிவின் அவசர பெறுகைக் குழு வரையறையில் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கீழ் பதிவு செய்த வழங்குனருடன் இருந்து கேள்வி கோருவதற்கு பெறுகை குழு தீர்மானித்திருந்தது. செயலாற்றல் பிணை முறி கோவையின் பிரகாரம் வழங்கப்படாது இருந்ததுடன் 2023 நவம்பர் 22 இல் உள்ளவாறு ஸ்வஸ்ட முறைமையின் பிரகாரம் இந்த இருப்பு பெற வேண்டிய இருப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கேள்வி சமர்ப்பிப்பதற்காக 03 நாட்களுக்கும் குறைவான காலம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த பெறுகை தீர்மானத்திற்காக அமைச்சரவை மேவுகை அங்கீகாரம் பெற வேண்டி இருந்த போதிலும் அந்த அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. பெறுகை மதிபீட்டு செயற்பாடுகளின் பின்னர் கட்டளை கையளிப்பதற்காக 70 நாட்களின் பின்னர் அண்மித்த காலம் கடந்து இருந்தது. மருந்துகளின் ஆயுட் காலம் 24 என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பொருள் அனுப்பல் கோரிக்கையில் ஆகக் குறைந்த ஆயுட் காலம் 12 மாதங்களாக காண்பிக்கப்பட்டமை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(உ) 2023 ஆம் ஆண்டிற்குரிய 1,000,000 அலகுகள் சராசரி கட்டளை 10 மாதங்கள் அளவில் தாமதத்துடன் 2022 நவம்பர் 16 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. 2023 மார்ச் 22 கேள்வி ஆவணங்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டு விடயங்களில் குறிப்பிடப்பட்டிருந்த மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் முறையான மற்றும் குறித்துரைத்த பரிந்துரையின் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் உரிய அங்கத்தவர்களின் பெயர் மற்றும் பதவிகள் குறிப்பிடப்படாமல் கையொப்பம் இடப்பட்டிருந்தது.

(ஊ) 2023 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கட்டளைக கட்டுப்பாட்டு பத்திரம் கணக்காய்வினால் கோரப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 08 கணக்காய்வு திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2022 நவம்பர் 16 ஆந் திகதிய கட்டளைக்காக கேள்வி கோருவதற்குரிய 2023 பெப்ரவரி 27 வரை 03 மாத காலம் கடந்திருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் நடவடிக்கைகளுக்கு ஒரு மாதம் எடுத்திருந்தது. பெறுகை குழு கூட்டம் மேலும் ஒரு மாத காலம் எடுத்திருந்ததுடன் கட்டளை கையளிப்பதற்காக மேலும் ஒரு மாதம் காலம் எடுத்திருந்தது. இரண்டாவது பொருள் அனுப்பல் கோரிக்கையின் பிரகாரம் மொத்த இருப்பும் 2023 ஒக்டோபர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய போதிலும் தரவு முறைமையின் பிரகாரம் 2023 திசெம்பர் 04 ஆந் திகதி வரையிலும் இந்த இருப்புக்கள் கிடைத்திருக்கவில்லை.

(எ) 2024 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளை 2023 நவம்பர் இறுதி வரையும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மருந்தின் கடந்த இரண்டு வருடங்களுக்குரிய சராசரி கட்டளை குறித்துரைத்த பிரகாரம் முறையான எதிர்வு கூறலின் அடிப்படையில் விநியோகிக்கப்படாமையால் சில சந்தர்ப்பங்களின் போது அவசர கட்டளை விநியோகிக்கத்தன் காரணமாக மிகவும் போட்டியாளரிடம் இருந்து குறைந்த விலை மருந்துகளை கொள்வனவு செய்வதற்குரிய சந்தர்ப்பம் விளக்கப்பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டிற்குரிய சராசரி கட்டளை குறித்துரைத்த திகதியில் விநியோகிக்கப்படாமையின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டின் போது இந்த மருந்துகள் அவசர கொள்வனவின் கீழ் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) 2023 நவம்பர் 21 இல் உள்ளவாறு இந்த மருந்துகளில் 1,919,418 அலகுகள் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தமை ஸ்வஸ்ட முறைமையின் பிரகாரம் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த அலகு கணிப்பீடு தயாரிக்கப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் இந்த முறைமையில் உள்ளடக்கப்படவில்லை.

71. <u>Hydroxyurea (Hydroxycarbamide) Capsule 500mg (SR - 01203501)</u>

(அ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2019, 2020 முதல் 2023 வரை விநியோகிக்கப்பட்ட 09 கட்டளைகளுக்குரிய கூட்டுமொத்தமான 2,557,139 அலகுகள் ஆன மருந்துகள் 2023 திசெம்பர் 07 கணக்காய்வு திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை. எனினும், அத் திகதியில் ஸ்வஸ்ட முறைமையில் 792,000 அலகுகள் மாத்திரம் பெறவேண்டிய இருப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஸ்வஸ்ட தகவல் முறைமையின் பிரகாரம் இந்த மருந்திற்குரிய தற்போது காணப்படுகின்ற இருப்ப தொடர்பான விபரங்களில் கிடைக்கவேண்டிய இருப்பாக 2,285,000 அலகுகள் காண்பிக்கப்பட்டிருந்தது. அதனால் விநியோகிக்கப்பட்ட

கட்டளை மற்றும் பெற வேண்டிய இருப்பு தொடர்பாக ஒரே தகவல் முறைமையில் பல்வேறு இடங்களில் பரீசீலனைக்கு வழங்கப்பட்ட தகவல்களில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்பட்டமையால் முறைமையின் மூலம் வழங்கப்படுகின்ற தகவல்களின் நம்பக தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ஆ) கட்டளை இலக்கம் /2021SPC/N/R/P/ 00020மூலம் 1,500,000 அலகுகள் கட்டளை இடப்பட்டிருந்ததுடன் அதில் 118,600 அலகுகள் 2021 பெப்ரவரி 02 ஆம் திகதியும், 631,400 அலகுகள் 2021 பெப்ரவரி 25 ஆந் திகதியும் கூட்டுமொத்தமாக 750,000 அலகுகள் மாத்திரம் கிடைத்திருந்தது. இதில் தொகுதி இலக்கம் JD 20051 இற்குரிய மொத்த கிரயம் 15,071,056 ஆன 144,914 அலகுகளின் தரம் கெட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்குனரிடம் இருந்து ரூபா 93,750,000 அறவிட வேண்டிய போதிலும் அந்த தொகை 2023 திசெம்பர் 14 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2021 பெப்ரவரி 27 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட இலக்கம் 2022/SPC/N/R/P/00047 என்ற 200,000 அலகுகள் கட்டளை கைவிடப்பட்டு இலக்கம் 2022/SPC/X/R/P/00306 என்ற 300,000 கட்டளை 2022 மார்ச் 25 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்திய தொடர்புடன் உடைய மருந்துகளை வழங்குவதற்கு கருத்து தெரிவிக்கின்ற இந்திய வழங்குனர்கள் / உற்பத்தியாளர்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு மருந்தக கூட்டுத்தாபனத்தின் இணைய தளம் மற்றும் 2022 மார்ச் 26 ஆந் திகதிய பத்திரிகை அறிவித்தல் கேள்வி சமர்ப்பிப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டதுடன் 05 நாட்கள் கேள்வி காலம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. கேள்வி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட போதிலும் உரிய மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மூன்று கேள்விதாரர்களிலும் ஒருவர் கேள்வி ஆவணங்களில் கையொப்பம் இட்டிருக்கவில்லை.

(ஈ) அவசர தேவையின் கீழ் இந்த மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்து கூறுவிலை சமர்ப்பிப்பதற்கு 05 நாட்கள் ஆன வரையறுத்த காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிப்பதற்காக 197 நாட் காலம் எடுத்திருந்தது. எனினும் 2023 திசெம்பர் 07 ஆந் திகதி வரையில் இந்த மருந்து இருப்புக்கள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருக்கவில்லை.

(உ) 400,000 அலகுகள் 2023 சராசரி கட்டளை 2022 நவம்பர் 16 ஆந் திகதி விநியோகிக்கப் பட்டிருந்தது. 2023 ஏப்ரல் 25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் கேள்வி மதிப்பீடு மேற் கொள்ளப்பட்ட போதும் அதற்குரிய மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கட்டளை கட்டுப்பாட்டுப் பத்திரத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் மருந்து கட்டளையிடும் தேவையொன்று காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த மருந்துக்குரிய கட்டளை விநியோகிக்கப்படுமிடத்து அலகொன்றின் மதிப்பீடு செய்யப்பட்ட விலை ரூபா 104 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் தெரிவு வழங்குநரின் விலை ரூபா 34.60 ஆகும் அதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட விலை மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட விலைக்கிடையே வேறுபாடு 67 சதவீதம் ஆகும். இந்த கட்டளைக்குரிய பெறுகைக்கால அட்டவணையின் படி 2023 யூன் 18 ஆந் திகதி வரையில் மருந்தை கொள்வனவு செய்வதற்குரிய இன்டென்டு விநியோகிக்க வேண்டிய இருந்த போதிலும் 2023 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அது விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலக்கம் 2023/SPC/E/R/P/00143 என்ற 200,000 அலகுகளின் கட்டளை 2023 சனவரி 30 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. 2023 ஏப்ரல் 24 ஆந் திகதி நடைபெற்ற தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் ஆகக் குறைந்த கேள்விதாரர் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்த

வழங்குநராக இல்லாதிருந்தமையால் இரண்டாவது ஆகக்குறைந்த கேள்விதாரருக்கு கேள்வியை கையளிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. பெறுகைகளுக்குரிய கேள்வி கையளித்தல் 2023 மே 12 ஆம் திகதி நடைபெற்ற சுகாதார அமைச்சின் அவசர பெறுகை குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டி ருந்ததுடன் அந்தத் தீர்மானம் அமைச்சரவைக்கு சமர்த்து மேவுகை அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான சான்றுகள் கோவையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் இந்த பெறுகைள் குறித்துரைத்த பிரகாரம் மேற்கொள்ளப்பட்டமைக்கு பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் உறுதிப்படுத்தலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(எ) இந்த மருந்துக்குரிய கட்டளை விநியோகிக்கின்ற போது அலகொன்றின் மதிப்பீடு செய்யப்பட்ட விலை ரூபா 104 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் தெரிவு செய்யப்பட்ட வழங்குநரின் விலை ரூபா 43.20 ஆகும். அதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட விலைக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட விலைக்கும் இடையே வேறுபாடு 58 சதவீதம் ஆகும். செயலாற்றல் காப்புறுதி பெறப்படாதிருந்ததுடன் வழங்குநருடன் ஒப்பந்த உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை. அவசர தேவையின் கீழ் இந்த மருந்துகளை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானித்து கூறுவிலை சமர்ப்பிப்பதற்கு 03 நாட்கள் ஆன வரையறுத்த காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய இன்டென்டு விநியோகிப்பதற்கு கேள்வி திறக்கப்பட்ட திகதியில் இருந்து 74 நாட்கள் காலம் எடுத்திருந்தது.

(ஏ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி கொள்வனவு செய்வதற்காக 2023 பெப்ரவரி 02 ஆந் திகதிய இலக்கம் 2023/SPC/T/R/P/00146 என்ற கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்து. 2023 பெப்ரவரி 24 ஆம் திகதி நடைபெற்ற விலை மதிப்பீட்டுக் குழுவின் பின்னர் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் உற்பத்திக் கூட அங்கீகாரம் உரித்தான மூன்றாவது கேள்விதாரருக்கு WOR பெற்றுக் கொள்ளும் அடிப்படையில் அலகொன்று ரூபா 76 வீதம் 135,000 அலகளுக்காக கேள்வி கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அந்தத் தீர்மானத்திற்காக அமைச்சரவையின் மேவுகை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கோ அல்லது பெறுகைகளை குறித்துரைத்த பிரகாரம் மேற்கொண்டமைக்கு பிரதான உள்ளகக் கணகக் கணக்காய்வுச் சான்றிதழோ பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கோவையில் உள்ளடக்கப்படவில்லை. உடன்படிக்கைக்குரிய நிபந்தனைகளில் செயலாற்றல் காப்புறுதிக்குரிய நிபந்தனை நீக்கப் பட்டிருந்தது. கூறுவிலை சமர்ப்பிப்பதற்கு 03 நாட்கள் ஆன வரையறுத்த காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும் இரண்டாவது பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிப்பதற்கு கேள்வி திறக்கப்பட்ட திகதியில் இருந்து 220 நாள் காலம் எடுத்திருந்தது.

(ஐ) இலக்கம் /2023SPC/X/R/P/00191 என்ற 657,000 அலகுக் கட்டளை 2023 மே 25 ஆந் திகதி விநியோகிக் கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் ஆகக் குறைந்த கேள்வி கையளிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட பெறுகைகளுக்குரிய பெறுகைத்தீர்மானம் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து மேவுகை அங்கீகாரம் பெற வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கோவையில் உள்ளடக்கப் படாதிருந்ததுடன் இந்த பெறுகைகள் குறித்துரைத்த பிரகாரம் மேற்கொள்ளப்பட்டமைக்கு பிரதான உள்ளகக் கணக்காய்வாளரால் உறுதிப்படுத்தலும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கூறுவிலை சமர்ப்பிப்பதற்காக 03 நாட்களுக்கும் குறைவான காலம் வழங்கப்பட்டிருந்த போதும் கூறுவிலை கோருவதற்கு உரிய மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு 2023 யூன் 28 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்ட போதும் அதற்குரிய பொருள் அனுப்பல் கோரிக்கை 2023 செப்டெம்பர் 15 ஆம் திகதியே விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுக்கப்பட்டிருந்தது.

(ஓ) போதியளவான பிரகாரம் இந்த மருந்தின் இருப்பு காணப்பட்ட போதும் 06 வைத்தியசாலைகளால் பிரதேச ரீதியில் 3,428 அலகுகள் ரூபா 469,970 கிரயத்தில் செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அமைச்சு பெறுகைகளின் போது 2023 யூன் 28 ஆந் திகதி கட்டளை இலக்கம் /2023SPC/X/R/P/00191 மூலம் ஒரு அலகின் விலை ரூபா 36.80 வீதம் வழங்குவதற்கு இணங்கியிருந்த போதிலும் பிரதேச ரீதியில் கொள்வனவு செய்யும் போது அதன் விலையுடன் 63 சதவீதம் முதல் 647 சதவீதம் வரை அதிகரித்த விலையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஔ) இந்த மருந்தில் 2024 ஆம் ஆண்டிற்கான சராசரி கட்டளை 2023 சனவரி மாதம் வரையிலும் விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும் 2023 நவம்பர் 15 ஆம் திகதி வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவினால் அது விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமை 2024 ஆம் ஆண்டின் போது இந்த மருந்துகள் அவசர கொள்வனவுகளின் கீழ் கொள்வனவு செய்ய வேண்டியேற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

72. <u>Propofol Inj.50 ml Amp/Vial (SR - 01500302)</u>

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2019, 2020, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக விநியோகிக்கப்பட்ட 08 கட்டளைகளுக்குரிய கூட்டுமொத்தமாக 249,800 அலகுகள் கிடைக்க வேண்டிய கட்டளையாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 2023 நவம்பர் 27 ஆந் திகதியில் ஸ்வஸ்ட முறைமையில் 2022 ஆம் ஆண்டிற்குரிய அலகுகள் 25,000 ஒரு கட்டளை மாத்திரம் கிடைக்க வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 21 இல் உள்ளவாறு ஸ்வஸ்த்த முறைமையில் தற்போது காணப்படுகின்ற இருப்புக்கள் தொடர்பான விபரங்களில் கிடைக்க வேண்டிய இருப்பாக 783,420 அலகுகள் காண்பிக்கப்பட்ட போதும் அந்த அளவு தயாரிக்கப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் அந்த முறைமையில் உள்ளடக்கப்படவில்லை.

(ஆ) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக விநியோகிக்கப்பட்ட 03 கட்டளைகளுக்குரிய கூட்டுமொத்தமாக 290,737 அலகுகள் கிடைக்க வேண்டியதன் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டிற்காக சராசரி கட்டளை விநியோகிக்கப்படாத போதிலும் அந்த ஆண்டுகளுக்குரிய கூட்டுமொத்தமக 157,737 அலகுகள் 2023 திசம்பர் 01 ஆம் திகதி வரையிலும் மருந்து வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) இலக்கம் 2022/SPC/X/R/P/00330 என்ற 50,000 அலகுகள் அவசர தேவையின் அடிப்படையில், இந்திய கடன் வசதியின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு 2022 மார்ச் 26 ஆந் திகதி கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையில் பதவியிலிருந்து விடுவிக்கும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு பெறுகைக்குழு பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. பரிந்துரை வழங்கி 117 நாட்கள் கடந்த போதிலும் வழங்கல்களை உறுதிப்படுத்தாமையின் அடிப்படையில் அடுத்த வழங்குநருக்கு கேள்வி கையளிக்குமாறு பெறுகைக் குழு பரிந்துரை செய்திருந்தது. அந்த வழங்குநரும் 132 நாட்கள் கடந்திருந்த போதிலும் வழங்களை உறுதிப்படுத்தாமை யின் அடிப்படையில் வழங்குநர்களின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கு முடியாமையினால் கேள்வியை இரத்துச் செய்வதற்கும் பதிவு செய்த மற்றும் கடந்த வழங்குநர்களிடமிருந்து கேள்வி கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் நிபந்தனைகளை மீறிய இந்த வழங்குநர்களிடமிருந்து ரூபா 245,000 பெறுமதியான கேள்வி பிணைமுறியை அறவிடுவதற்கும், கேள்விகாரரை கறுப்புப் பட்டியல் இடுவதற்கும் பெறுகைக் குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2022 ஆம் ஆண்டிற்காக 2022 நவம்பர் 30 ஆந் திகதிய இலக்கம் 2022 /SPC/E/R /P/00768 என்ற 25,000 அலகுகளைப் பெற்றுக்கொள்ளும் கட்டளை

விநியோகிக்கப்பட்டிருந்தது. மூன்றாவது ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கையளிப்பதற்கு கேள்வி திறக்கப்பட்ட திகதியல் இருந்து 32 நாட்களுக்குப் பின்னர் 2023 சனவரி 20 ஆந் திகதி சுகாதாரப் பிரிவின் அவசர பெறுகைக் குழு தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் அத் திகதியில் அவசர பெறுகைக்குழு அங்கத்தவர்களினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதும் அதற்குரிய அமைச்சரவை மேவுகை அங்கீகாரம் கோவையில் காணப்படவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரர் ஐந்து பேரும் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் (Certificate of NMAR) காணப்படாதிருந்த பின்புலத்தில் வழங்கப்பட்ட "மாதிரிகள்" இன் அடிப்படையில் கேள்வி தீர்மானித்தல் தொடர்பாக கணக்காய்வின் போது பிரச்சினையான நிலைமையாக இருந்ததுடன் மாதிரிகளை சமர்ப்பிப் பதற்காக கேள்விதாரர்களுக்கு அறிவிக்கப்பட்ட ஊடாகம் (கடிதம்/இலத்திரனியல் தபால் போன்றவை மூலம்) மாதிரிகள் சமர்ப்பித்த கேள்விதாரர் தொட்பான தகவல்கள் என்பவற்றை கோவையில் உள்ளடக்காதிருந்தமையும் பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ii) கேள்வி அங்கீகாரத்துடன் 06 நாட்களுக்குப் பின்னர் 2023 சனவரி 26 ஆந் திகதி அலவொன்று ரூபா 1,290 வீதம் 25,000 அலகுகளை வழங்குமாறு கொள்வனவுக் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் கொள்வனவுக் கட்டளை விநியோகித்து 14 நாட்களுக்குள் செயலாற்றல் பிணைமுறி சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 68 நாட்களின் பின்னர் வழங்குநர் 2023 ஏப்ரல் 04 ஆம் திகதி செயலாற்றல் பிணைமுறியைச் சமர்ப்பித்திருந்தது. வழங்குநர் அந்த பிணைமுறியை சமர்ப்பிப்பதற்கு முன்னர் WOR அனுமதிப் பத்திரம் வழங்குதலை கருத்திற்கொள்ளுமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரால் 2023 பெப்ரவரி 02 ஆம் திகதி தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் WOR என்ற குழுவினால் 14 நாட்கள் அளவிலான குறுகிய காலத்தின் பின்னர் 2023 பெப்ரவரி 16 ஆந் திகதி இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) 2023 மார்ச் மாதம் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் 2025 பெப்ரவரி மாதம் காலாவ தியாகின்ற 04 தொகுதிகளின் கீழ் (23CPF01, 23CPF02, 23CPF03, 23CPF04) மருந்து இருப்புக்களில் 23,158 அலகுகள் 2023 ஏப்ரல் 07 ஆம் திகதி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்ததுடன் அதில் 22 நாட்களுக்குப் பின்னர் கடுமையான பாதகனமான பின்விளைவின் காரணமாக 23CPF03 என்ற தொகுதியை இடைநிறுத்துமாறு (Withhold) தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரால் 2023 ஏப்ரல் 29 ஆந் திகதி கடிதத்தினால் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரால் அந்த மருந்து பாவனையிலிருந்து நீக்கப் பட்டிருந்தது. இந்த சுற்றறிக்கை விநியோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையிலும் அந்த தொகுதிக்குரிய 6,755 அலகுகள் சகல வைத்தியசாலைகள் / பிரதேச சுகாதார பணிப்பாளர் அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது.

(iv) இதில் 08 நாட்களுக்குப் பின்னர் மேலும் இரண்டு தொகுதிகளின் மருந்து இருப்பை கைவிடுவதற்கு தேவையாக இருந்ததாக இலத்திரனியல் தபால் ஊடாக 2023 மே 10 ஆந் திகதி தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல்

அதிகார சபையால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விடுவிக்கும் அடிப்படையில் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரால் ஆரம்ப தொகுதி இலக்கம் 02 இற்குரிய 23CPF01 மற்றும் 23CPF02 மருந்து இருப்புக்களை கைவிடுமாறு கட்டளையிடப்பட்டிருந்தது. இந்த சுற்றறிக்கைகளில் 05 நாட்களுக்கு பின்னர் மீண்டும் ஒரு தடவை மருத்துவ வழங்கல் பிரிவில் பணிப்பாளரால் முழுமையான மருந்தை கைவிடுமாறு 2023 மே 15 ஆந் திகதி கட்டளையிடப்பட்டது. அந்த சுற்றறிக்கை விநியோ கிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையிலும் இந்த தொகுதிகளுக்குரிய 16,403 அலகுகளின் சகல மருந்துகளும் வைத்தியசாலை / பிரதேச சுகாதார பணிப்பாளர் அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வைத்தியசாலைகளால் நோயாளர்களுக்கு மருந்துகள் விநியோகிக்கப்பட்டிருந்தமையால் கைவிடப்பட்ட இருப்பின் அளவு 1,660 அலகுகள் மாத்திர மாக இருந்தது.

(v) அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பரிசோதனை செய்யப்பட்ட இந்த மருந்தில் 23CPF03 என்ற தொகுதி தரங்கெட்டு இருந்தமை தேசிய ஔடதங்கள் தேசிய மருந்து தரச்சான்றிதழ் ஆய்வு கூடத்தின் பணிப்பாளர் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பணிப்பாளருக்கு 2023 மே 29 ஆந் திகதி கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த திகதியின் பின்னர் அந்த அறிக்கை மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளருக்கு மே 30 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த மருத்துவ தொகுதியை பாவனையிலிருந்து அகற்றுமாறும், அந்த தொகுதி சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் இல்லாதிருந்தமை உறுதிப்படுத்துமாறும் அந்தக் கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரால் இலக்கம் MSD/Q/P/2023/31 என்ற சுற்றறிக்கையில் மேற்கூறப்பட்ட மருந்து தொகுதியை அகற்றுமாறு (Withdraw) 2023 மே 31 ஆந் திகதி கட்டளையிடப்பட்டிருந்தது. எனினும் இந்த சுற்றறிக்கை விநியோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையில் விநியோகிக்கப்பட்டிருந்த 6,755 அலகுகளில் எஞ்சியிருந்த 4,230 அலகுகளின் இருப்பை மாத்திரம் அகற்ற முடியுமாக இருந்தது.

(vi) இலக்கம் 23CPF03, 23CPF01 மற்றும் 23CPF02 என்ற தொகுதியின் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையால் கடுமையான பாதிப்பின் காரணமாக கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த மையும் அதன் பிரகாரம் உரிய விளக்கமளித்தல் 28 நாட்களுக்குள் வழங்குமாறு அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் வழங்குநருக்கு 2023 மே 12 ஆந் திகதி இலத்திரனியல் தபால் ஊடாக அறிவிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் உற்பத்தியாளருடன் கலந்துரையாடி உரிய விளக்கமளித்தல் வழங்குமாறு 2023 மே 30 ஆந் திகதி வழங்குநரால் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பணிப்பாளருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் உரிய மருந்து இருப்புக்கள் (தொகுதி 04) சுயமாக அகற்றுமாறு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பணிப்பாளரால் 2023 யூன் 24 ஆந் திகதி மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளருக்கு இலக்கம் NMAR/P41/VR06/2023 என்ற கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

(vii) மருத்துவ வழங்கல் பிரிவின் இந்த நிலைமை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கும், அதன் மூலம் வழங்குநருக்கும் இலத்திரனியல் தபால் ஊடாக அறிவிக்கப்பட்டதுடன் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பணிப்பாளரின் கட்டளையில் 23 நாட்களுக்குப் பின்னர் மேற்கூறப்பட்ட மருந்து தொகுதிகள் சுயமாக அகற்றுமாறு 2023 யூன் 16 ஆந் திகதி தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின்

பணிப்பாளருக்கு வழங்குநரால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதில் 111 நாட்களுக்குப் பின்னர் தரம் கெட்டிருந்த மருந்துகளை வழங்குவதற்குப் பதிலாக 23,158 அலகுகளுக்குரிய கிரயம் மற்றும் 25 சதவீத மேலதிக நிர்வாக செலவினங்களின் கூட்டுமொத்தம் ரூபா 37,342,275 தொகையை செலுத்துமாறு வழங்குநருக்கு 2023 ஒக்டோபர் 05 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்ததுடன் உரிய கொடுப்பனவுகள் தொடர்பாக எழுத்து மூல ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2023 ஆம் ஆண்டின் சராசரி கட்டளை விநியோகிப்பதற்குரிய இருப்பு கட்டளை கட்டுப்பாட்டு பத்திரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 2023 ஆம் ஆண்டிற்கான சராசரி கட்டளை விநியோகிக்க வேண்டிய திகதிக்கு 11 மாதங்களுக்குப் பின்னர் 50,000 அலகுகள் வழங்குவதற்காக இலக்கம் 2023/SPC/N/R/P/00112 என்ற சராசரி கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. சராசரி கட்டளையொன்று குறித்துரைத்த திகதியின் போது வழங்கப்பட்டிருக்குமாயின் திறந்த கூறுவிலை கோரலின் கீழ் பெறுகைகள் அமுல்படுத்துவதற்கு இயலுமை காணப்பட்ட போதும் காணப்படுகின்ற அவசர நிலைமை 07 நாட்களுக்குள் பதிவு செய்த மற்றும் கடந்த கால வழங்குநர்களிடமிருந்தும் மற்றும் ஏனைய மூலங்களிலோ அல்லது வரையறுக்கப்பட்ட கூறுவிலையின் கீழ் கேள்வி கோருவதற்கு கட்டளை விநியோகித்த 21 நாட்களின் பின்னர் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) கேள்வி கோருவதற்காக 44 நாட்கள் அளவிலான காலம் எடுத்திருந்தது. மூன்றாவது ஆகக் குறைந்த கேள்வி சமர்ப்பித்த பதிவுச் சான்றிதழுடன் உள்ள ஒரு வழங்குநர் தொடர்பாக மாத்திரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தமது பரிந்துரையை 2023 மார்ச் 09 ஆந் திகதி சமர்ப்பித்திருந்தது. அதன் பிரகாரம் அலகொன்று ஐ.அ.டொலர் 4 (ரூபா 1,448.56) இற்கு கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரருடன் விலைக் கலந்துரையாடலின் பின்னர் கேள்வி கையளிப்பதற்கு 2023 மார்ச் 09 ஆந் திகதி பெறுகைக்குழு பரிந்துரை செய்திருந்த போதிலும் மேலதிக செயலாளரால் (அபிவிருத்தி) அந்த பரிந்துரை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) எனினும் மேலும் விலை குறைக்க முடியாதிருந்ததாக இலத்திரனியல் தபால் ஊடாக 2023 மார்ச் 15 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அந்த கேள்விதாரர் முன்னரே கப்பல் இடுவதற்குரிய மாதிரிகளை பரீட்சிப்பதன் கீழ் அலகொன்று ஐ.அ. டொலர் 4 (ரூபா 1,448.56) இற்கு கேள்வி கையளிப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தமது பரிந்துரை சமர்ப்பித்த 07 நாட்களின் பின்னர் பெறுகைக் குழுவானல் 2023 மார்ச் 15 ஆம் திகதி பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், ஆரம்ப பெறுகை தீர்மானம் தங்களால் அங்கீகரிக்கப்படாதிருந்தமையால், மேலதிக செயலாளர் (பெறுகைகள்) இந்த பரிந்துரையும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் பெறுகைக் குழு பரிந்துரையில் 54 நாட்களுக்கு பின்னர் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் தலைவரால் முன்னாள் இருந்த சுகாதார அமைச்சின் செயலாளருக்கு இந்த நிலைமை கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டதுடன், சுகாதார அமைச்சு செயலாளரால் மேற்கூறப்பட்ட பெறுகைக் குழு பரிந்துரைகளுக்கு மே 12 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) சுகாதார அமைச்சின் செயலாளரின் அங்கீராத்தின் 26 நாட்களுக்கு பின்னர் கேள்வி கையளித்த வழங்குனருக்கு 2023 யூன் 07 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அதில் 12 நாட்களுக்கு பின்னர் வழங்குனரால் முன்னரே கப்பலில் இடுவதற்குரிய மாதிரிகளை பரீட்சிக்க முடியாதிருந்ததாகவும், கொள்வனவு கட்டளை மருந்து இருப்புக்களின் ஆயட் காலம் 20 மாதங்களுக்கு விநியோகிக்குமாறு அறிவித்து 2023 யூன் 07 ஆம் திகதி கேள்வி கையளித்தல் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னரே கப்பலில் இடுவதற்குரிய மாதிரிகளை பரீட்சித்தல் என்ற நிபந்தனையை நீக்குவதற்கும் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளருக்கு வழங்கப்படுகின்ற திருப்திகரமான செயலாற்றல் அறிக்கையின் பின்னர் கொடுப்பனவு

செய்யுமாறு பெறுகைக் குழு பரிந்துரையில் மீண்டும் ஒரு தடவை மாற்றப்பட்டு 2023 யூலை 17 ஆம் திகதி பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மேலதிக செயலாளரால் (பெறுகைகள்) யூலை 18 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீள் அங்கீகாரத்திலிருந்து 03 நாட்களுக்கு பின்னர் 2023 யூலை 21 ஆம் திகதி ஐ.அ.டொலர் 4 வீதம் ஆன 50,000 அலகுகளுக்கு கொள்வனவு கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், உரிய நாணயக் கடிதம் 2023 ஆகஸ்ட் 10 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. நாணயக் கடிதம் விநியோகித்து 113 நாட்களுக்கு பின்னர் 2023 திசெம்பர் 01 ஆம் திகதி மருந்து இருப்புக்கள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு உரியதாக இருப்புக்கள் காணப்படாத சந்தர்ப்பம் ஒன்றில் இந்த சராசரி கட்டளை அமுல்படுத்துவதற்காக ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது.

(ஒ) இலக்கம் 2023/MSD/E/R/P/00047 என்ற 25,000 அலகுகளின் கட்டளை 2023 சனவரி 25 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட போதிலும், இந்த கட்டளை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், ஸ்வஸ்ட முறைமையில் இந்த கட்டளையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2023 சனவரி 25 ஆம் திகதி இலக்கம் 2023/SPC/E/R/P/00142 என்ற 25,000 அலகுகளின் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. வழங்குனர் சகலரும் தேசிய ஒளடதங்கள் அதிகார சபையில் செல்லுபடியான சான்றிதழ் காணப்படவில்லை. அதன் பிரகாரம் பதிவு சான்றிதழ் இன்றியமையின் காரணமாக மருந்து இருப்புக்களின் மாதிரிகளை பரீட்சித்து பார்ப்பதற்கு மதிப்பீட்டாளர்களால் தீர்மானிக்கப்பட்டு அது தொடர்பாக கேள்விதாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த மற்றும் நான்கவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரர் இருவரினால் மாத்திரம் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) நான்காவது ஆகக் குறைந்த விலை இல்லையாயின் ரூபா 3,910 அதிக விலை சமர்ப்பித்த மேற்கொள்ளப்பட்ட விலை கலந்துரையாடலின் பிரகாரம் ரூபா 2,900 தொகையில் மருந்து இருப்புக்களை வழங்குவதற்கு கேள்விதாரர் இணங்கியிருந்தார். அதன் பிரகாரம் கேள்வி முடிவடைந்த திகதியில் 24 நாட்களுக்கு பின்னர் 2023 பெப்ரவரி 24 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் இந்த கேள்விதாரர் இருவரும் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. எனினும், காணப்படுகின்ற அவசர நிலைமையின் அடிப்படையில் இருப்புக்களை பெற்றுக் கொள்ளும் காலத்தின் அடிப்படையாகக் கொண்டு WOR சான்றிதழின் கீழ் நான்காவது ஆகக் குறைந்த விலை இல்லையாயின் ரூபா 2,900 அதிக விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு பரிந்துரையில் 25 நாட்களுக்கு பின்னர் 2023 மார்ச் 21 ஆம் திகதி சுகாதார பிரிவின் அவசர பெறுகைக் குழு அங்கத்தவரினால் கேள்வி கையளிப்பதற்கு தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது. எனினும், தீர்மானத்திற்குரிய அமைச்சரவை மேவுகை அங்கீகாரம் கடிதம் கோவையில் உள்ளடக்கப்படவில்லை.

(க) கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரர்கள் நான்கு பேரும் தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுச் சான்றிதழ் இன்றிய பின்புலத்தில் வழங்கப்பட்ட "மாதிரிகள்" அடிப்படையில் கேள்வி தீர்மானத்தில் தொடர்பாக கணக்காய்வின் போது பிரச்சினையாக இருந்ததுன், மாதிரிகளை சமர்ப்பிப்பதற்காக அறிவிக்கப்பட்ட ஊடகம் (கடிதம், இலத்திரனியல் தபால் போன்றவை மூலம்) மற்றும் மாதிரிகள் சமர்ப்பித்த கேள்விதாரர் தொடர்பான தகவல்கள் கோவையில் உள்ளடக்கப்படாதிருந்தமையும் பிரச்சினையாக இருந்தது. இந்த கேள்வி மிகுதி கேள்விதாரர்கள் மூவரும் சமர்ப்பித்த கூறுவிலைகள் முறையே ரூபா 983 (ஐ.அ.டொலர் 2.65), ரூபா 1,465 (ஐ.அ.டொலர் 3.95) மற்றும் ரூபா 1,470 ஆக இருந்ததுடன், ஆகக் குறைந்த கேள்வியில் இருந்து 195 சதவீத விலை அதிகரிப்பிற்கு கேள்வி கையளித்தமையும் பிரச்சினைக்குரியதாக இருந்தது.

அலகொன்று ரூபா 2,900 வீதம் ஆன 25,000 அலகுகள் கொள்வனவு செய்வதற்காக கொள்வனவு கட்டளை கேள்வி அங்கீகாரத்தின் 31 நாட்களுக்கு பின்னர் 2023 ஏப்ரல் 21 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது.

(கா) தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபை விடுவித்தல் அனுமதிப் பத்திரம் 2023 மே 07 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், கொள்வனவு கட்டளையில் குறிப்பிடப்பட்ட திகதியில் இருந்து 133 நாட்களுக்கு பின்னர் வழங்குனரால் 2023 ஒக்டோபர் 02 ஆம் திகதி 24 மாத ஆயுட் காலம் காணப்படுகின்ற 17,000 அலகளின் மருந்து இருப்பு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது. 2023 ஒக்டோபர் 02 ஆம் திகதி கணக்காய்விற்கு கோவைகள் கையளிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையிலும் வழங்குனர் செயலாற்றல் பிணை முறி வழங்காதிருந்ததுடன், வழங்குனருடன் ஒப்பந்த உடன்படிக்கையும் ஏற்படுத்தப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் வழங்குனரால் வழங்க வேண்டிய மிகுதி 8,000 அலகு மருந்து இருப்புக்கள் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் அமைச்சுக்கு உரித்தற்று இருந்தது.

(கி) 2023 ஆம் ஆண்டிற்காக 2023 பெப்ரவரி 06 ஆம் திகதி இலக்கம் 2023/SPC/E/R/P/00149 என்ற 16,000 அலகுகளின் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. கேள்விதாரர்கள் இருவர் மாத்திரம் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் செல்லுபடியான பதிவு சான்றிதழ் காணப்பட்டது. கேள்வி முடிவடைந்த திகதியில் இருந்தும் 14 நாட்களுக்கு பின்னர் 2023 ஏப்ரல் 24 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் கேள்வி சான்றிதழுடன் கேள்விதாரர்கள் இருவருக்கிடையே அலகொன்று ரூபா 2,153 ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த ஒரு கேள்விதாரரால் இருப்பு வழங்க வேண்டிய காலம் தேவைக்கு இணங்காமையின் அடிப்படையில் பொருத்தமற்றதாக இருந்ததால், அலகொன்று ரூபா 2,200 விலை சமர்ப்பித்த கேள்விதாரருடன் கலந்துரையாடிய பின்னர் கேள்வி கையளிப்பதற்கு பொருத்தமானது என பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

(கீ) அதன் பிரகாரம் கேள்விதாரருடன் மேற்கொள்ளப்பட்ட விலை கலந்துரையாடலின் பிரகாரம் ரூபா 2,100 இற்கு மருந்து இருப்புக்களை வழங்குவதற்கு கேள்விதாரர் இணங்கியிருந்ததுடன், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரையில் இருந்து 18 நாட்களுக்கு பின்னர் 2023 மே 12 ஆம் திகதி சுகாதார பிரிவின் அவசர பெறுகைக் குழுவினால் கேள்வி கையளிப்பதற்கு தீர்மானம் வழங்கப்பட்டது. எனினும், இந்த தீர்மானத்திற்குரிய அமைச்சரவை மேவுகை அங்கீகாரம் கோவையில் உள்ளடக்கப்படவில்லை.

(கு) 50,000 அலகுகள் 2024 இன் சராசரி கட்டளை 2023 மார்ச் 27 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. கட்டளை விநியோகித்து 86 நாட்களின் பின்னர் சர்வதேச கேள்வி கோரலின் கீழ் கேள்வி கோருவதற்கு 2022 யூன் 22 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், சகல கேள்விதாரருக்கும் சொந்தமாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவுச் சான்றிதழ் காணப்பட்டது. 2023 ஒக்டோபர் 20 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு கூடியிருந்ததுடன், 2023 நவம்பர் 16 ஆம் திகதி கணக்காய்விற்கு கோவைகள் சமர்ப்பிக்கப்படும் வரையில் முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(கூ) 2022 ஆம் ஆண்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்து இருப்புக்கள் கிடைக்காமையின் அடிப்படையில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக 34 வைத்தியசாலைகளினால் 11,185 அலகுகள் பல்வேறு விலைகளின் கீழ் ரூபா 14,194,606 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

73. <u>Dexamethasone Injection 8mg / 2ml (SR. 00701602)</u>

அத்தியவசிய (Essential) மருந்தான இந்த மருந்து தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) Order Control Form – 2022 இன் களஞ்சியத்தில் வைத்தியசாலையில் எஞ்சிய இருப்பு மற்றும் முன்னைய கட்டளைகளில் பெறுவதற்கு இருந்த இருப்பாக மொத்த இருப்பு 2,909,913 (Amp) ஆக இனங்காணப்பட்டமையால் 2022 ஆம் அண்டில் சராசரிக் கட்டளை சமர்ப்பிக்கப்படபவில்லை. எனினும் முன்னைய கட்டளைகளில் கிடைப்பதற்கு உள்ள இருப்பில் உள்ளடக்கப்பட்ட 2021/SPC/N/R/P/00093 கட்டளைக்குரிய மருந்து அலகுகள் 650,000 கணக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 15 ஆம் திகதி வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருக்காமை இந்த இருப்பு பூச்சயமாவதற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது.

(ஆ) மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்கு காத்திருத்தல் காலம் சராசரியாக 11 மாதம் அளவிலாக இருந்தமையால் 2023 ஆம் ஆண்டில் சராசரிக் கட்டளை (2023/SPC/N/R/P/00084) 2022 பெப்ரவரி மாதம் வரையில் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் மருத்துவ வழங்கல் பிரிவினால் 2023 ஆம் ஆண்டில் சராசரி கட்டளை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு 09 மாத தாமதத்துடன் 2022.11.22 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டின் சராசரி கட்டளை பெறுகை செயற்பாடுகளுக்காக 07 மாதம் அளவிலான காலம் இலங்கை அரச மருந்தக கூட்டுத்தானத்தால் எடுக்கப்பட்டிருந்ததுடன் கட்டளைக்குரிய மருந்துகள் 300,000 (Amp) 2023 ஒக்டோபர் 15 ஆந் திகதியும், மிகுதி 300,000 (Amp) மருந்துகள் 2023 திசம்பர் 15 ஆந் திகதியும் வழங்க வேண்டியிருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 15 ஆந் திகதி வரையிலும் அதில் ஆரம்ப இருப்பேனும் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) மருத்துவ வழங்கல் பிரிவினால் 2020 பெப்ரவரி 20 ஆந் திகதி மருந்து அலகுகள் 1,100,000 (Amp) வழங்கு வதற்கான 2021 ஆம் ஆண்டில் சராசரி கட்டளை (2021/SPC/N/R/P/00093) சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மருத்துவ வழங்கல் பணிப்பாளரால் 2020 ஏப்ரல் 23 ஆந் திகதி அந்த கட்டளை அலகுகள் 1,750,000 வரை திருத்தப்பட்டிருந்தது. எனினும் ஒரே தடவையில் பெறுகை நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு இயலுமை காணப்படும் போது அவ்வாறு இல்லாமல் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் இரண்டு சந்தர்ப்பங்களின் போது பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையால் 02 வருடங்களுக்கு மேற்பட்ட கால தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் மருந்துகளின் விலை அதிகரிப்பு மற்றும் அந்நியச் செலாவணி விகிதம் அதிகரித்ததன் அடிப்படையில் ரூபா 6,939,453 (14470560 – (650×0.062×186.8761) அதிகரித்த செலவினமொன்றை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

(உ) 2022 நவம்பர் 01 ஆம் திகதிய 2022/MSD/V/R/P/00076 கட்டளை மூலம் இந்தய கடன் உதவி திட்டத்தின் ஊடாக உதவியினைப் பயன்படுத்தி 03 மாதங்களுக்காக தேவையான மருந்து அலகுகள் 250,000 பெற்றுக்கொள்வதற்காக EOI (Expressions Of Interest) அடிப்படையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்கு 2022 நவம்பர் 04 ஆந் திகதி கட்டளை சமர்ப்பிக்கப்பட்ட போதும் அந்த வழங்குனர் மருந்து இருப்பை வழங்குவதற்கு தவறியமையினால் 2023 யூன் 28 ஆந் திகதி நடைபெற்ற சுகாதார பிரிவு அவசர பெறுகைக் கூட்டத்தின் போது (HSEPC) இந்த மருந்து கட்டளை வேறு வழங்குநருக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 ஆகஸ்ட் 03 ஆந் திகதி மருந்து 40,800 (Amp) உம், 2023 செப்டெம்பர் 14 ஆந் திகதி 209,200 (Amp) உம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்தது. இது தொடர்பான பிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முதலாவது தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்கு 2023 யூன் 28 ஆந் திகதி வரையிலும் இந்த மருந்து இருப்புக்களை வழங்குவதற்கு தவறியமையால் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தாமதமடைந்திருந்தது. எனினும் EOI அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட வழங்குநரால் மருந்து கொள்வனவு செய்யும் போது செயலாற்றல் பிணைமுறியைப் (Performance bond) பெற்றுக்கொள்ளாமை மற்றும் வழங்குநரிடம் எழுத்து மூலம் உடன்படிக்கையில் கைச்சாத்திடாமையினால் ஏற்பட்ட தாமதம் தொடர்பாக வழங்குநர் பொறுப்புக்கு கடப்பாடாக இல்லாதிருந்தமையினால் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பத்கு முடியாதிருந்தது.

(ii) இரண்டாவது தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்கு மருந்து அலகுகள் 250,000 (Amp) இனை உடைய கட்டளை 2023 யூலை 25 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் மருந்து இருப்பு கிடைக்க வேண்டிய திகதி 2022 யூலை 26 ஆந் திகதி ஆக இருந்த போதும் மருந்து இருப்புக்கள் 2023 ஆகஸ்ட் 03 ஆந் திகதி 40,800 (Amp) அலகுகளும், 2023.09.14 ஆந் திகதி 209,200 அலகுகளும் ஆக கிடைத்திருந்தது. கொள்வனவுக் கட்டளை நிபந்தனையின் பிரகாரம் அறவிட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 758,737 ஆக இருந்த போதும் மருத்துவ வழங்க பிரிவில் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்ட சுகாதார செயலாளரின் இலக்கம் SH/misc/03/2022 மற்றும் 2023 மார்ச் 01 ஆம் திகதிய கடிதம் மூலம் EOI கட்டளை தாமதமடைந்து விநியோகிப்பதற்காக வழங்குநருக்கு விதிக்கப்பட்ட தண்டப்பணக் கட்டணத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்தமையின் காரணமாக மேற்கூறப்பட்ட தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) 2022 நவம்பர் 04 ஆந் திகதி முதலாவது வழங்குளர் வழங்குவதற்கு தவறியிருந்த போதிலும் அந்தக் கட்டளை இரத்துச் செய்யப்படாதிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2023 நவம்பர் 24 ஆந் திகதி வரையிலும் ஸ்வஸ்த்த கணனி முறைமையின் அந்த கட்டளை செயலுள்ள கட்டளையாகவும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஊ) இலக்கம் 2023/SPC/E/R/P/00156 என்ற கட்டளை மருந்தின் மூன்று மாதங்களுக்குத் தேவையான பிரகாரம் மூன்று மாதங்களுக்கு சமமான பிரகாரம் மருந்து அலகுகள் 300,000 (Amp) அவசர பெறுகை நடைமுறைகளின் கீழ் கொள்வனவு செய்வதற்காக 2023 பெப்ரவரி 28 ஆந் திகதி அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் இருப்பு கிடைக்க வேண்டிய திகதி 2023 மார்ச் 10 ஆந் திகதி ஆகும். கூறுவிலை கோரல் 2023 மார்ச் 15 ஆந் திகதி மேற் கொள்ளப்பட்டு கூறுவிலை திறத்தல் 2023 மார்ச் 17 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட போதிலும் 2023 ஏப்ரல் 12 ஆந் திகதி சுகாதாரப் பிரிவின் அவசரப் பெறுகைக்குழு எடுத்த தீர்மானம் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு அறிவிப்பதற்கு 2023 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையான காலம் எடுத்திருந்தது. அதன் பிரகாரம் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் 2023 மே 08 ஆந் திகதி கொள்வனவுக் கட்டளை (Purchase Order) தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2023 ஏப்ரல் 11 ஆம் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 04 ஆந் திகதி 04 மாதங்களுக்கு அண்மித்த காலம் மருத்துவ வழங்க பிரிவில் இந்த மருந்துகள் பூச்சியமாகக் காணப்பட்டமை கணனி முறைமையின் (Pronto மற்றும் Swastha) பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(ii) இருப்பு வழங்க வேண்டிய திகதி 2023 மார்ச் 10 ஆந் திகதியாக இருந்த போதிலும் கட்டளைக்கான பெறுகை செயற்பாடுகளுக்காக சுகாதார பிரிவின்

அவசர பெறுகைக் குழுவினால் 2023 மார்ச் 15 ஆம் திகதி முதல் 2023 மே 08 வரை 52 நாட் காலம் எடுத்திருந்தது.

(iii) கொள்வனவுக் கட்டளையின் பிரகாரம் மருந்து இருப்பு கிடைக்க வேண்டிய திகதி 2023 மே 28 ஆந் திகதியாக இருந்த போதிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு இருப்புக்கள் 80 நாள் தாமதத்தின் பின்னரே அதாவது 2023 ஆகஸ்ட் 17 ஆந் திகதியே கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 04 மாதங்களுக்கு அண்மித்த காலம் மருந்து பூச்சியமாக இருப்பதற்கு இந்த தாமதம் நேரடியாக தாக்கமளித்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

